# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
**சென்னை - 600 097**


## இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு ( முதலாம் ஆண்டு)

## 2016-2017

## தாள் 2: தற்கால இந்தியாவும் கல்வியும்


**அலகு -1** **சமூக வேற்றுமைகளை புரிந்து கொள்ளுதல்**
முனைவர்.சா.மணி, பேராசிரியர் & துறைத்தலைவர்

**அலகு -2** **தனிநபர், வேறுபட்ட சமூகங்களின் கல்வித் தேவைகள்**
திருமதி.சி.ஏ.ஜெயந்தி, உதவிப் பேராசிரியர்

**அலகு -3** **கல்விக்கான இந்திய அரசியலமைப்பின் விதிகள்**
முனைவர்.க.இராஜசேகரன், இணைப் பேராசிரியர்

**அலகு -4** **கல்வியில் சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல் மற்றும் ஒடுக்கப்படுதல்**
திரு.பி.சுப்பிரமணியன், உதவிப் பேராசிரியர்

**அலகு -5** **கல்விக்கான கொள்கை வரைவுகள்: இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்**
முனைவர். து.பொ.சரவணன், உதவிப் பேராசிரியர்

**அலகு -6** **கல்விக்கான கொள்கை வரைவுகள்: இந்தியா சுதந்திரம் பெற்றபின்**
முனைவர்.க.இராஜசேகரன், இணைப் பேராசிரியர்

அலகு **-7** **கல்வித் திட்டமிடுதலும் நிதியும்**
திரு.பி.சுப்பிரமணியன், உதவிப் பேராசிரியர்

**அலகு- 8** **கல்விக்கான மொழி கொள்கை**
முனைவர். து.பொ.சரவணன், உதவிப் பேராசிரியர்

**அலகு -9** **மதிய உணவுத்திட்டம் ஒரு சமூகமயமாக்கும் செயல்முறை**
திருமதி. த.மு.ஞானசௌந்தரி, உதவிப் பேராசிரியர்

**அலகு -10** **கல்வியில் வளர்ந்து வரும் போக்குகள்**
திருமதி. த.மு.ஞானசௌந்தரி, உதவிப் பேராசிரியர்



**கல்வித்திட்டமிடல் மற்றும் நிர்வாகத்துறை**

**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்**
**சென்னை- 600 097**

## அலகு-1 சமூக வேற்றுமைகளை புரிந்து கொள்ளுதல்

**நோக்கங்கள்:**

இவ்வலகின் முடிவில் கற்போர்:

1. சமூக வேற்றுமைகள் என்ற கருத்தை விளக்குவர்.
2. சமூக வேற்றுமைகளின் பல்வேறு நிலைகளை விவரிப்பர்.
3. சமூக வேற்றுமைகள் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வர்.
4. சமூக வேற்றுமைகளை புரிந்துக்கொள்ள கல்வியின் தேவையை அறிந்துகொள்வர்.

**அறிமுகம்**

இந்திய நாடு பல்வேறு புவி-அரசியல் நிலைகளை கொண்ட மிகப் பெரிய தேசமாகும். இது நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் இனத்தவரிடையே காணப்படும் சமூக பரிணாமத்தில் வேற்றுமைகளை கொண்டு வந்துள்ளது. புவி-அரசியல் வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு, வெளிநாட்டவருடனான இடைவினை, வாணிபம் மற்றும் மதபோதக செயல்பாடுகளால் அயல் நாட்டின் தாக்கம் இந்தியாவிற்கு வந்தது. இவ்வனைத்தும் இந்திய சமுதாயத்தில் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் சமூக வேற்றுமை ஒன்றாகும்.

இந்திய தேசம் சமூக வேற்றுமைகளை கொண்ட ஒரு நாடாகும். சமுதாயத்தில் அனைத்து பிரிவினரிடையே நல்லிணக்கம் நிலவ இந்திய அரசியலமைப்பு கூட்டாச்சி அரசியல் அமைப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வமைப்பு நாட்டின் ஜனநாயகமும் சமூக ஒற்றுமையும் நிலவ மிகவும் உதவி புரிகிறது.

மூன்று வகையான சமூக வேறுபாடுகளுக்கு சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. அவை முறையே பாலினம், மதம் மற்றும் சாதிகள். அரசியலமைப்பில் சில அடிப்படை உரிமைகள் இவற்றினை மட்டுமே நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**சமூக வேற்றுமை : பொருள்**

சமூக வேற்றுமை என்பது நமது சமுதாயத்தில் நம்முடனும் நம்மை சுற்றியுள்ள பலதரப்பட்ட காரணிகளான இனம், கலாச்சாரம், மதம், வயது மற்றும் இயலாமைகளை உடையது. வேற்றுமை என்பது இனம், சமூக பொருளாதார, புவியியல், தொழில் பின்னனியில் உள்ள வேறுபாடுகளாகும்.

அரசியல் நம்பிக்கை, மத நம்பிக்கை, உடற்திறன்கள், வயது, சமூக-பொருளாதார நிலை, பாலினம், வாழ்விடம் மற்றும் இனம் போன்ற அனைத்து பரிமாணங்களை உள்ளடக்கியதே சமூக வேற்றுமையாகும். முதலாவதாக, ஒவ்வொரு மனிதரும் தனித்துவம் பெற்றவர். இரண்டாவதாக, ஒவ்வொருவரும் அவர்தம் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகவும் சார்ந்துள்ளதாகவும் உள்ளது. மூன்றாவதாக, சமூகமும் கலாச்சாரமும் வேகமான மாற்றத்திற்குட்பட்டதாகும்.

**சமூக வேறுபாட்டின் நிலைகள்:**

1. தனிநபர் வேறுபாடு
2. பிராந்திய வேறுபாடு

3. மொழி வேறுபாடு
4. மத வேறுபாடு
5. சாதி வேறுபாடு
6. பழங்குடியினர் வேறுபாடு

**1. தனிநபர் வேறுபாடு**

நமது நம்பிக்கைகளிலும், நடைமுறைகளிலும் கலாச்சார குழுக்கள் ஒரே விதமானது அல்ல. ஒவ்வொரு தனிநபரும் தான் வெற்றியடைய தனிப்பட்ட திறன்கள், மனப்பான்மைகள், அறிவுத்திறன் போன்றவை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.

**2. பிராந்திய வேறுபாடு**

பிராந்திய என்ற வார்த்தை ஏதோ ஒரு கூறினை சார்ந்த குறிப்பிட்ட பகுதியை குறிக்கும், அக்குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்த மக்களின் உணர்வுகள் பிராந்தியவாதம் எனப்படும். பிராந்தியவாதம் என்ற சொல் இரு சித்தாந்தங்களை உடையது. நேர்மறையான உணர்வில் அது மக்கள் தம் வாழ்விடம், கலாச்சாரம்,மொழிமேல் கொண்ட பரிவினை குறிக்கிறது.

எதிர்மறையான உணர்வில், ஒரு பகுதிமேல் அதாவது தேசம் அல்லது மாநிலத்தின்மேல் மக்கள் தாம் கொண்ட அதிகப்படியான இணக்கத்தை குறிக்கிறது. நேர்மறையான உணர்வில் பிராந்தியவாதமானது மக்களின் சகோதரத்துவம் என்ற உணர்வினை மேம்படுத்த ஊக்குவிக்கிறது. எதிர்மறையான உணர்வில் நம் தேச ஒற்றுமைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது.

**பிராந்திய வேறுபாட்டிற்கான காரணங்கள்:**

**(அ) புவியியல் காரணங்கள்**

பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மக்களின் உணவு பழக்கங்கள், மொழி, கலாச்சாரம், உடை, வாழ்க்கை சூழலுக்கு இடையே நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இவை மாநிலங்களுக்கிடையே மற்றும் மாநிலத்தினுள் உள்ள வேறுபாடுகளை பிரதிபலிக்கிறது.

**(ஆ) வரலாற்று காரணங்கள்**

நாம் என்ற உணர்வு ஒரு சில வரலாற்று காரணங்களால் சிதைந்து விட்டது. நமது தேசத்தில் உள்ள பல மாநிலங்கள் கடந்த காலத்தில் ஒன்றுடன் ஒன்று தீவிர மோதல்களை கொண்டது. இம்மோதல்கள் அவற்றினிடையே கசப்பு உணர்வை உருவாக்கி, அதனால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் திறந்த மனதுடன் சந்திக்க முடிவதில்லை.

**(இ) அரசியல் காரணங்கள்**

பல பகுதிகளில் மக்கள் சிலர் பிராந்திய அரசு அமைய வேண்டும் என்று கோருகின்றனர். இவ்வகையான சிந்தனை தம் பகுதிமேல் ஆர்வத்துடன் ஆள வேண்டும் என்ற குறிக்கோளை ஏற்படுத்துகிறது.

**(ஈ) உளவியல் காரணங்கள்**

பெரும்பாலான மக்கள் தம் பகுதியின் முன்னேற்றம், அடைவு அதிகப்படியாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இக்கருத்தை பொறுத்தவரை மறுக்க கூடியது தான் என்றாலும் அப்பகுதி மக்கள் தம்பகுதிமேல் கொண்ட ஆர்வம் மற்றும் அப்பகுதி குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைய வேண்டும் என்ற உணர்வே பிராந்தியவாதத்தை குறிக்கிறது.

**(உ) சமூக காரணங்கள்**

இந்தியா போன்ற நாடுகளில் திருமணமானது அதே பிராந்திய பின்னனியில் உள்ள நபர்களை மணப்பதற்கே முன்னுரிமை அளிக்கின்றனர். ஆகையால் ஒரு பகுதியை சார்ந்த மக்கள் மற்றொரு பகுதியை சார்ந்தவர்களை திருமணம் செய்து கொள்வதை தவிர்க்கின்றனர்.

**(ஊ) பொருளாதார காரணங்கள்**

வளங்களின் குறைபாடு, வேலையின்மை போன்ற பொருளாதார பிரச்சினைகளால் மக்கள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நிலையான பொருளாதாரத்தை நோக்கி செல்கின்றனர்.

**பிராந்தியவாதத்தினை நீக்குவதில் கல்வியின் பங்கு**

கீழ்கண்ட கல்வித் திட்டங்கள் மக்களிடையே பிராந்தியவாத உணர்வினை குறைப்பதற்கு பயனுள்ளதாக அமைகிறது.

1. பயணங்கள் மற்றும் தகவல் தொடர்புக்கு ஊக்குவித்தல்.
2. தேச வரலாற்றை பரவச்செய்தல்.
3. வரலாற்று இலக்கியங்களை கற்பித்தல்.
4. ஆங்கிலம், இந்தி மற்றும் பிராந்திய மொழி மட்டுமல்லாது இதர மொழிகளையும் பழக்கமாக்குதல்.

**3.மொழி வேறுபாடு:**

இந்தியா சுதந்திரம் அடைந்த போது இந்தியுடன் ஆங்கிலமும் அலுவலக மொழியாக 15 வருட காலங்களுக்கு தொடர வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலம் இன்றளவும் அலுவலகங்களில் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதற்கு காரணம் தென்னிந்திய மக்கள் இந்தியை கட்டாய பாடமாகவும், தேசிய மொழியாகவும், அலுவலக மொழியாகவும் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதே ஆகும்.

**மொழிவாதத்திற்கான காரணம்**

நாட்டில் மொழிவாதம் தோன்ற பல காரணங்கள் உள்ளன. அவற்றின் பிரதான காரணங்களாகக் கருதப்படுவன:

**(அ) உளவியல் காரணங்கள்**

குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் பிராந்திய மொழியுடன் அதாவது தங்கள் தாய்மொழியுடன் இணைக்கப்படுகின்றனர். ஆகையால் அவர்கள் பிற இந்திய மொழிகளை கற்க முன்வருவதில்லை.

**(ஆ) வரலாற்று காரணங்கள்**

இந்திய தேசத்தின் மீது பல்வேறு அந்நிய நாடுகள் படையெடுத்து உதாரணமாக, பிரெஞ்சு மக்கள் நமது நாட்டில் பாண்டிசேரியிலும், போர்த்துகீசிய மக்கள் கோவாவிலும் கோலாட்சியுள்ளனர். பாரசீக மொழியானது முகலாயர்களால் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர் ஆங்கில மொழியை நாடு முழுவதும் பரப்பினர். அதனால் ஆங்கில மொழி அனைத்து மொழிகளுக்கும் துணையாக உள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் மக்கள் அவரவர் பிராந்திய மொழியை தங்கள் மாநிலத்தில் ஊக்குவிப்பர். இதுவே மொழிவாதம் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது.

**(இ) புவியியல் காரணங்கள்**

ஒவ்வொரு மொழிக்கும் தனக்கே உரிதான இலக்கியம் உள்ளது. அனைத்து புவியியல் நிலைகளான சமவெளி, மலைகள், உள்ளூர் கலாச்சாரம் போன்றவற்றின் தாக்கம் இவ்விலக்கியத்தில் காணப்படுகிறது. இவை அம்மொழியினை பேசும் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக உள்ளது. எனவே,ஒவ்வொரு தனி நபரும் பிற மொழியை தன்மீது கட்டாயபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

**(ஈ) பொருளாதார காரணங்கள்**

மொழிவாதம் ஏற்படுவதற்கு சில பொருளாதார காரணங்கள் உள்ளது. சில மொழிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. ஆனால் அதன் பலன்கள் பிற மொழிகள் பேசுபவர்களால் இழக்கப்படுகிறது.

**(உ) அரசியல் காரணங்கள்**

மொழிவாதமானது அரசியல் ஆர்வம், அரசியல் குழுக்கள் மேலும் பல்வேறு அரசியல்வாதிகளால் ஈர்க்கப்படுகிறது. தேர்தல் போது ஒரு சில மதவாத கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மொழிப் பிரச்சினையை மக்களிடையே தூண்டுகின்றனர்.

**(ஊ) சமூக காரணங்கள்**

மொழிவாதம் ஒரு சில சமூக காரணங்களால் ஊக்குவிக்கப்படுகிறது. சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மொழிகள் மட்டுமே பிறரால் மதிக்கப்படுகிறது. மாறாக முரண்பாடான முன் கருத்துக்களை வழங்குகின்ற மொழிகள் மறுக்கப்பட்டு மதவாதம் ஏற்பட காரணமாக உள்ளது.

**4.மத வேறுபாடு**

இந்தியா ஒரு மதச்சார்ப்பற்ற நாடாகும். உலகின் அனைத்து மதங்களும் நம் இந்திய நாட்டில் உள்ளன. இருப்பினும் நாட்டின் மதநல்லிணக்கமின்மை மற்றும் ஒற்றுமையின்மைக்கு முக்கிய காரணமாக மத வேறுபாடு திகழ்கிறது. சில நேரங்களில் மக்கள் தேச ஒற்றுமையை மறந்து தமது சொந்த மதத்தின் மீது அதிக விசுவாசத்தை காட்டுகின்றனர்.

நம் நாட்டில் இன்றளவும் இந்து மதம், புத்த மதம், கிருத்துவ மதம், சீக்கிய மதம், ஜைன மதம் போன்ற மதப்பிரிவினரிடையே சாதி உணர்வும் மேலோங்கி காணப்படுகிறது.

**5.சாதி வேறுபாடு**

இந்தியா பல சாதிகள் கொண்ட நாடாகும். 3,000-க்கும் மேற்பட்ட சாதிகள் நமது இந்திய தேசத்தில் உள்ளது. இவை பல்வேறு பகுதிகளில் பல வழிகளில் மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையான சாதி அமைப்பு இந்து மதத்தில் மட்டுமே பின்பற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவை இஸ்லாமியம், கிருத்துவம், சீக்கியம் போன்ற இதர சமுதாயத்தினரிடையேயும் காணப்படுகிறது. இஸ்லாம் பிரிவினையை மதத்தினரிடையே ேக், சையத், பதன், முஹல் என்ற கேள்விப்படுகிறோம். அதுமட்டுமல்லாது, தோபி (துணி வெளுப்பவர்), டர்ஜி (துணி தைப்பவர்) போன்றோர் உள்ளனர். சீக்கிய மதத்தினரிடையே ஜாட் சீக்கியம், மஹஜாபி சீக்கியம் போன்ற பிரிவுகள் உள்ளன. இவ்வாறாக எந்தளவிற்கு சாதி வேறுபாடு நமது தேசத்தில் உள்ளது என்பதை கற்பனை

செய்ய முடிகிறது. இது மட்டுமல்லாது பழங்குடியினர், கிராம, நகர மற்றும் திருமண முறைகளிலும் நமது தேச வேறுபாடு வெளிப்படுகிறது.

**6.பழங்குடியின வேறுபாடு**

பழங்குடியினரின் கலாச்சாரம் நாட்டின் வேற்றுமைகளை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஷவேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்திய மக்களிடையே காணப்படுகின்ற ஓர் கண்கவர் அம்சமாகும். கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து கலாச்சாரமும், நாகரீகமும் இந்திய பழங்குடியினரின் பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களில் பரவியுள்ளது.

ஒவ்வொரு பழங்குடியினரும் தனித்துவமான சமூகம், பல்வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் அல்லது அவ்விடத்தில் அசல் குடியுரிமை பெற்றவர்களாவர். பழங்குடியினர் இன்றளவும் பல்வேறு பகுதிகளில் வசித்து வருகின்றனர், குறிப்பாக, வடகிழக்கு பகுதியின் பல மாநிலங்களிலும் கிட்டதிட்ட நாட்டின் அனைத்து மூலை முடுக்குகளிலும்பழங்குடியினர் உள்ளனர்.

**சமூக வேறுபாட்டினை புரிந்து கொள்வதற்கான கல்வி**

இன்றைய ஆசிரியர்கள் தரமான கல்வியை மாணவர்களுக்கு கற்பிக்க மட்டுமே தயாராகாமல் சாதி, இனம், சமயம் போன்றவற்றை பொருட்படுத்தாமல் மாணவர்களின் தேவையை ஒட்டியே இருத்தல் வேண்டும். கற்பிக்கும் முறை, கல்வி உளவியல், எண்ணங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை ஆசிரியர்கள் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

திறமையான ஆசிரியர் தான் கற்பிக்கும் ஒவ்வொரு மாணவரின் அறிவுத்திறன், சமூக கலாச்சார பண்பியல்புகளை கணக்கில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தத்தம் கற்றல் பாணியை கொண்டவர். ஆசிரியர்கள் அனைத்து வகையான குழந்தைகளுக்கும் சிறந்த வழியில் கற்பிக்க கடமைப்பட்டுள்ளனர். காட்சி, தசை இயக்கம், செவிப்புலன் போன்ற எந்த கற்றல் பாணியை மாணவர்கள் கொண்டுள்ளனரோ ஆசிரியர் அவர்களுக்கு ஏற்றார் போன்று திட்டமிட்டு எதிர்பார்த்த கற்றல் விளைவினை கொண்டு வரவேண்டும்.

நாம் வெற்றிகரமான ஆசிரியராக வேண்டுமெனில் ஒவ்வொரு படிநிலையும் பின்நோக்கி சென்று நமக்குள்ளே பார்க்க வேண்டும். மாணவர்களின் கற்றல் பாணி, நம்பிக்கைகள், திறன்கள் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகளை ஆசிரியர் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ற கலைத்திட்டத்தினை உருவாக்குதல் வேண்டும். கற்பிப்பவர் மாணவர்களின் கலாச்சார பிண்ணனி மற்றும் அனுபவங்களை புரிந்து கொண்டு அவற்றை கல்வி செயல் முறையின் அனைத்து அம்சங்களிலும் பிரதிபலிக்க வேண்டும். ஆசிரியர் ஒரு சிறந்த கற்றல் சூழலை மாணவர்களிடையே உருவாக்க வேண்டும்.

**முடிவுரை**

வேற்றுமை என்ற பரந்த கூற்றானது புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் எளிதான ஒன்றில்லை. ஏனெனில் அவை சமுதாயத்தில் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் நேர்மறை மற்றும் எதிர்மறையான விளைவுகளை அளிக்கிறது. மக்கள் அவற்றை நன்கு ஆழ்ந்து புரிந்து கொண்டு, அவை முடிவில் எவ்வித முடிவை கொண்டு வரும் என்று பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். கல்வி நிலையில் பள்ளிகள் அல்லது பல்கலைக்கழகங்களில் காணப்படும் வேறுபாடானது மாணவர்களின் கற்றல் செயல்முறை, சக

மாணவர்களுடன் ஓர் பரந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது. பள்ளிக்கு அப்பால் பரந்து விரிந்த சமுதாயத்தில் அவர்கள் வாழ தயார்செய்ய வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. இந்திய சமுதாயத்தின் காணப்படும் சமூக வேறுபாட்டின் பல்வேறு நிலைகளை விவரிக்க.
2. பிராந்திய வேறுபாட்டிற்கான காரணங்களையும், அவை எவ்வகையில் நமது தேசத்தை பாதிக்கின்றன என்பதையும் விவாதிக்க.
3. இந்தியாவில் காணப்படும் சமூக வேறுபாடுகளை களைவதற்கு கல்வியின் தேவையை விளக்குக.

## அலகு-2: தனிநபர், வேறுபட்ட சமூகங்களின் கல்வித் தேவைகள்

**நோக்கங்கள்:**

இவ்வலகின் முடிவில் கற்போர்:

1. தனிநபர், வேறுபட்ட சமூகங்களின் கல்வித் தேவைகளை அடையாளம் காண்பர்.
2. இந்தியாவில் அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் தேவையை விவரிப்பர்.
3. SSA, RMSA, RUSA வின் நோக்கங்களைப் பட்டியலிடுவர்.
4. அனைவருக்கும் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி கிடைக்கச்செய்வதில் உள்ள சவால்களை ஆராய்வர்.
5. ஒருங்கிணைந்த கல்வியை, உள்ளடங்கிய கல்வியிலிருந்து வேறுபடுத்துவர்.

**அறிமுகம்**

ஜனநாயக வெற்றிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடிப்படை தேவையாக கல்வி அமைகிறது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி (Universalisation of Elementary Education) என்ற இலக்கை அடைய பல கல்வி குழுக்கள் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் நிறைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது நமது தேசிய குறிக்கோளாக ஏற்கப்பட்டுள்ளது. இக்குறிக்கோளை அடைய நடுவண், மாநில அரசுகள் மிகுந்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளன.

**இந்தியாவில் அனைவருக்கும் தொடக்க கல்வி**

இந்திய அரசியலமைப்பின் சாசனப்பிரிவு 45-ன் படி ‘‘அரசு(நடுவண், மாநில அரசுகள்) பதினான்கு வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியினை இச்சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்ட பத்து ஆண்டு காலத்திற்குள் வழங்க வேண்டும்’’ என உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்ற அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்கவேண்டும்.

**அனைவருக்கும் தொடக்க கல்வி பின்வரும் ஐந்து அம்சங்களை கொண்டது**

1. அனைவருக்கும் கல்விப்பயில வாய்ப்பு கிடைக்க செய்தல்.
2. அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்.
3. பள்ளியில் சேர்ந்த அனைவரையும் இருத்தி வைத்தல்.
4. கல்வியில் அனைவரையும் பங்கு பெற செய்தல்.
5. அனைவரையும் கற்றல் அடைவு பெற செய்தல்.

**1. அனைவருக்கும் கல்விப்பயில வாய்ப்பு கிடைக்க செய்தல்**

6 முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் போதுமான பள்ளி வசதிகள் அளிக்கப்பட வேண்டும். தொடக்கப்பள்ளியானது குழந்தைகள் வசிக்கும் இடத்திலிருந்து 1 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குள் அமைய வேண்டும். எனவே, நாடெங்கும் தொடக்கப் பள்ளிகள் நிறைய திறக்க வேண்டும்.

## 2. அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்

அவ்வாறு தொடங்கப்பட்ட பள்ளியில் மாணவர் சேர்க்கை எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை முடிவு செய்தல். அரசாங்கம் 6-14 வயதிலான குழந்தைகளை அப்பள்ளியில் சேர்க்க முடிவெடுத்துள்ளது. நாடு முழுதும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் போதுமான நடவடிக்கை எடுத்தல் அவசியம். புதிய கல்விக் கொள்கையின் (1986),'2015-க்குள் அனைவருக்கும் தொடக்கக்கல்வி' என்ற இலக்கை அடைதலுக்கு இச்செயல் பயனளிக்கும்.

## 3. பள்ளியில் சேர்ந்த அனைவரையும் இருத்தி வைத்தல்

மாணவர் சேர்க்கை ஒன்று மட்டுமே கொண்டு அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்ட இயலாது. அவ்வாறு சேர்ந்த மாணவர்களை பள்ளியில் தொடர்ச்சியாக கல்வி கற்க செய்தல் அவசியமாகும். பள்ளிப்படிப்பு முடியும் வரை அவர்கள் ஏதேனும் காரணத்தால் பள்ளியிலிருந்து விலகாது இருத்தல் வேண்டும். ஒருவேளை இடையில் அவர்கள் பள்ளிப்படிப்பை தொடராவிடின், அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற இலக்கை எட்ட இயலாமல் போய்விடும்.

## 4. அனைவரையும் பங்கு பெற செய்தல்

அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் சமுதாயத்தின் பங்களிப்பானது இன்றியமையாதது ஆகும். அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற திட்டத்தினை செயல்முறைப் படுத்துவதில் தனக்கு தேவையானவற்றை அடையாளம் கொள்வதில் சமுதாயம் பெரும் பொறுப்பு வகிக்கிறது. தொடக்கக்கல்விக்கு சம்மந்தப்பட்ட நிர்வாகத்தினர், உள்ளூர் சமுதாயத்தில் அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி வழங்க வேண்டும்.

## 5. அனைவரையும் கற்றல் அடைவு பெற செய்தல்

கற்பவரின் கற்றல் அடைவை ஒட்டியே அனைவருக்கும் தொடக்க கல்வி என்ற இலக்கின் வெற்றி அமையும். 'குறைந்த பட்ச கற்றல் அடைவை' அடிப்படையாக கொண்டு கல்வி அடைவு நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்த பட்ச கற்றல் அடைவை மதிப்பீடு செய்ய தொடர்ச்சி மற்றும் முழுமையான மதிப்பீடு (Continuous and Comprehensive Evaluation) வலியுறுத்தப்படுகிறது. 2015-க்குள் "அனைவருக்கும் கல்வி" மூலம் அனைவரும் தொடக்க கல்வியினை அடைய உதவி புரியும்.

## அனைவருக்கும் தொடக்கக் கல்விக்கான திட்டங்கள்

### (அ) சர்வ சிக்ஷ அபியான் (SSA)

சர்வ சிக்ஷ அபியான் அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற குறிக்கோளை அடைய 2000-2001 –ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டது. சர்வ சிக்ஷ அபியான் என்றால் "அனைவருக்கும் கல்வி" என்பது பொருள்.

நாடு முழுவதும் பின்பற்றும் கல்வி முறையை மாற்றி கல்வித்தரத்தினை உயர்த்துவதே இதன் குறிக்கோளாகும். குழந்தைகள் தங்கள் அறிவையும், திறனையும் மேம்படுத்தவும் கல்வியில் சமவாய்ப்பினை வழங்கவும் எடுக்கப்பட்ட முயற்சியாகும்.

பஞ்சாயத்து, பள்ளி மேளாண்மை குழுக்கள், கிராமப்புற மற்றும் நகரப்புற தாழ்த்தப்பட்டோருக்கான குழுக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள், பழங்குடி மக்கள் ஆலோசனை சபை, மற்றும் பிற தொடக்கப்பள்ளி நிர்வாகம் சார்ந்த உள்ளூர் அமைப்புகள் வெற்றிகரமாக இதில் பங்களிக்க முடிகிறது. இதன் முக்கிய நோக்கமாவது “2010-க்குள் 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பயனுள்ள கல்வி அளிப்பதேயாகும்.”

### SSA-வின் சிறப்பம்சங்கள்

1. அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் தெளிவான கண்ணோட்டம்.
2. நாடு முழுவதிற்கும் தரமான அடிப்படைக் கல்வியினை வழங்க பொறுப்பேற்றல்.
3. அடிப்படை கல்வி மூலம் சமூக நீதியை மேம்படுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது.
4. இது மத்திய, மாநில, உள்ளூர் அரசாங்கத்தின் ஓர் கூட்டு முயற்சியாகும்.
5. மாநில அரசானது தொடக்கக் கல்வி வழங்குவதில் அவர்தம் தொலைநோக்கு பார்வை மேம்படுத்த வாய்ப்பளிக்கிறது.

### SSA-வின் நோக்கங்கள்

1. 6-14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தொடக்கக் கல்வி வழங்குதல்.
2. குழந்தைகள் தத்தம் திறமைகளை பொருட்சார்ந்தும் தெய்வீகத்தன்மை சார்ந்தும் இயற்கை சூழலுக்கு ஏற்றவாறு முன்னேற்றம் அடைய வழிவகை செய்தல்.
3. குழந்தைகளுக்கு விழும கல்விசார் கற்றலுக்கு வாய்ப்பளித்தல்.
4. ஆரம்பகால குழந்தை பருவ கவனிப்பிற்கான முக்கியத்துவத்தினை உணர செய்தல்.

### SSA-வின் குறிக்கோள்கள்

1. 2003-க்குள் அனைத்துக் குழந்தைகளும் பள்ளி, கல்வி உத்தரவாத மையம், மாற்றுப்பள்ளி ‘மீண்டும் பள்ளிக்கு’ முகாம் அமைத்தல்.
2. அனைத்து குழந்தைகளும் 2007 ஆம் ஆண்டுக்குள் 5 ஆண்டுகள் ஆரம்பப் பள்ளியை முடிக்க வைத்தல்.
3. அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியை 2010 ஆம் ஆண்டுக்குள் முடிக்க வைத்தல்.
4. தொடக்கக் கல்வி நிலையில் 2007-ஆம் ஆண்டிற்குள்ளும், இடைநிலைக்கல்வியை 2010-க்குள்ளும் சமூகம், பாலினத்திற்கு இடையே உள்ள இடைவெளியை இணைத்தல்.
5. 2010-ஆண்டிற்குள் அனைவரையும் பள்ளியில் இருத்திவைத்தல்.

### அனைவரும் தொடக்கக்கல்வியினை அடைவதிலுள்ள சவால்கள்

அரசாங்கத்திடம் தொடக்கக்கல்வியை வெற்றிகரமாக்க பல்வேறு அணுகுமுறைகள் இருந்த போதிலும், இந்தியாவில் அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற நிலையை உருவாக்குவதில் நிறைய தடைகள் உள்ளன. அவற்றினைப் பற்றி கீழே காணலாம்.

**(அ) அரசாங்கத்தின் கொள்கை**

இந்திய அரசியலமைப்பின்படி 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வி வழங்க வேண்டும் என்கிறது. ஆனால் இதுவரை குறித்த இலக்கை அடைய இயலவில்லை. இதற்கு முழுமுதற் காரணம் இந்திய அரசுத்திட்டங்கள் கருத்தியல்வாத அடிப்படையிலானது.

ஆதாரக் கல்வியானது தேசியக் கல்வியின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை குறிக்கோளாக கொண்டு தொடக்கப் பள்ளிகள் அடிப்படை பள்ளிகளாக உருவெடுக்கிறது. நமது தேசம் அதிக மக்கள் தொகையை கொண்டது. அதிகப்படியான தொடக்கப் பள்ளியை கொண்டு வருவதற்கு அதிக பொருட்செலவு செய்ய இயலாத நிலையில் உள்ளது.

**(ஆ) கல்வி நிர்வாகம்**

பெரும்பாலான மாநிலங்களில் அனைவருக்கும் தொடக்க கல்வி என்ற பொறுப்பானது வட்டாரம், முனிசிபாலிட்டி மற்றும் கல்வி மாவட்ட பொறுப்பாளர்களிடம் உள்ளது. தொடக்க கல்வி விரிவடைதலின் முன்னேற்றமானது திறன் குன்றிய பள்ளி நிறுவனங்களால் குறைந்து கொண்டே செல்கிறது. எனவே, இந்திய அரசாங்கமானது தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் சேர்வதையும் இருத்தி வைத்தலையும் கண்காணித்தல் வேண்டும்.

**(இ) பணப்பற்றாக்குறை**

தொடக்கப்பள்ளி நிலையில் பணச்செலவு ஒரு பெரிய பிரச்சினையாகவே உள்ளது. குறிப்பாக தொடக்கக் கல்வி வழங்கக்கூடிய உள்ளாட்சி பொறுப்பேற்றுள்ள உள்ளூர் நிறுவனங்களின் வருமானம் கட்டாய கல்வி வழங்கி செலவை ஈடுகொடுக்க இயலவில்லை.

**(ஈ) பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறை**

தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கட்டாயமாக அளிக்க போதுமான பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இன்றைய சூழலில், பெரும்பாலான இளம் ஆசிரியர்கள் கிராமப்புறங்களில் பணிபுரிய விரும்புவதில்லை. இருப்பினும், கிராமப்புறங்களில்தான் அதிகப்படியான தொடக்கப்பள்ளிகள் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் தொடக்கப்பள்ளியில் ஆசிரியர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்குவதேயாகும்.

**(உ) பள்ளி கட்டிடங்கள்**

மூன்றாவது, நான்காவது அனைத்திந்திய கல்வி கணக்கெடுப்புக்களின்படி இலட்சக்கணக்கான கிராமங்களில் பள்ளிகள் இல்லாமல் உள்ளது தெரியவந்துள்ளது. அதன்படி ஏறக்குறைய 4 லட்சம் பள்ளிகளற்ற கிராமங்கள் இந்தியாவில் உள்ளதாக அறிகிறோம்.

**(ஊ) பொருந்தா கலைத்திட்டம்**

தொடக்கப் பள்ளிகளின் கலைத்திட்டமானது உள்ளூர் தேவைகளுக்கு மிகவும் பொருந்துவதாக இல்லை. கலைத்திட்டமானது குழந்தைகளுக்கு கல்வி தொடர்ச்சியாக கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினை தூண்ட வேண்டும். உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்யும்

வகையில் கைவேலைப்பாடு அளிக்கும் கல்வியை தொடக்கப்பள்ளி வழங்க வேண்டும். மேலும், அத்தகைய கைவினைக் கல்வி திட்டமானது மிகுந்த பொருட்செலவில் இருத்தல் கூடாது.

**(எ) தேக்கமும் கழிவும்**

அர்ப்பணிப்பு குன்றிய ஆசிரியர்கள், பெற்றோர்களின் பொருளாதார நிலை, கல்வி சூழலின்மை அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் பெரிய தடைக்கற்கலாகத் திகழ்கிறது. எனவே, தேக்கத்தையும்,கழிவையும் தொடக்கக்கல்வியில் குறைக்க நடைமுறை கல்வி அமைப்பினையும் கலைத்திட்டத்தினையும் மறுசீரமைப்பு செய்தல் வேண்டும். அதுமட்டுமல்லாது போதிய எண்ணிக்கையில் பள்ளிக் கட்டிடங்கள், முறையான கற்பித்தல் முறைகள், பெற்றோர்களுக்கு கல்வி போன்றவை அளிக்க வேண்டும். ஏனெனில் இவை தான் தொடக்கக் கல்வி நிலையில் தேக்கத்தையும் கழிவையும் குறைக்க இயலும்.

**(ஏ) சமூக தீங்குகள்**

சமூக தீங்குகளான மூடநம்பிக்கை, எழுத்தறிவின்மை, குழந்தை திருமணம், தீண்டாமை, பர்தா அமைப்பு போன்றவை கட்டாய தொடக்கக் கல்விக்கு தடையாக அமைந்துள்ளது. ஒரு சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே ‘குழந்தை திருமணம் தடை சட்டத்திற்கு’ எதிராக திருமணம் செய்து விடுகின்றனர். இது பள்ளிச் செல்லும் குழந்தைகளின் கல்வியை பெரிதும் பாதிக்கிறது. அறியாமையும், எழுத்தறிவின்மையும் இத்தகைய சமூக தீங்குகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது.

**ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA)**

ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA) இந்திய அரசால் 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டமாகும். இது இடைநிலைக் கல்வியை மேம்படுத்தவும் தரத்தை முன்னேற்றவும் கொண்டுவரப்பட்டது.

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியான் செயல்படுத்த ஓர் கட்டமைப்பினை கொண்டு வந்தது. இக்கட்டமைப்பானது அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்க ஓர் தெளிந்த வழிகாட்டுதலை வழங்குகிறது. இது அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்க மத்திய மாநில அரசுகளை ஒருசேர கொண்டு வரப்பட்ட ஓர் திட்டமாகும்.

இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வியானது இந்தியாவிலுள்ள குழந்தைகளுக்கு அரசியலமைப்பு உரிமையாக உள்ளது. அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்குவது அத்தியாவசமாக உள்ளது. இது வளர்ந்து வரும் பல நாடுகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

RMSA-வின் தொலைநோக்கு பார்வையானது 14-18 வயதுள்ள குழந்தைகளுக்கு சிறந்த தரமான கல்வியை வழங்குவதாகும்.

RMSA திட்டங்களை செயல்படுத்த தமிழகத்தில் வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக மேம்படுத்த கண்காணிக்கிறது.

இடைநிலைக்கல்வியை உயர்த்த உள்கட்டமைப்பு, ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றை செய்கிறது. இது மட்டுமல்லாது மாதிரி பள்ளிகள் மற்றும் கல்வியில் பின்தங்கிய பகுதிகளில் மாணவியர்களுக்கான விடுதி வசதி ஏற்பாடும் செய்து தந்துள்ளது.

**RMSA-வின் குறிக்கோள்கள்**

1. செயல்படுத்திய 5 வருடத்திற்குள்ளாக 2005-06ல் IX- X ஆம் வகுப்பின் சேர்க்கை விகிதம் 52.26%-திலிருந்து 75%-ஆக அடைவு பெறுதல்.
2. இடைநிலை அளவில் கல்வி தரத்தினை உயர்த்த அனைத்து இடைநிலைப் பள்ளிகளும் குறிப்பிட்ட விதிகளின்படி அமையச் செய்தல்.
3. இடைநிலைப் பள்ளி நிலையில் சேர்க்கை விகிதம் 90% மற்றும் உயர்நிலைப் பள்ளி சேர்க்கை விகிதம் 75% ஆக உயர்த்துதல்.
4. அனைவருக்கும் இடைநிலைக்கல்வி 2017-க்குள் வழங்குதல். (அதாவது 12வது 5 ஆண்டு திட்டத்தின் முடிவில்).
5. இடைநிலைப் பள்ளியின் அமைவிடமானது வீட்டிலிருந்து 5 கி.மீ. தூரமும், மேல்நிலைப் பள்ளிகள் 7-10 கி.மீ. தூரத்திலும் இருக்கச் செய்தல்.
6. பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மயினருக்கு இடைநிலைக்கல்வி வழங்குதல்.
7. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்துதல்.
8. இடைநிலைப் பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.

**அனைவரும் இடைநிலைக் கல்வியினை அடைவதிலுள்ள சவால்கள்**

நகர்புறங்களில் மாணவியர் சேர்க்கை அதிகமாக இருந்த போதிலும் பழங்குடி இனத்தவர் மற்றும் கிராமப்புறங்களில் மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

**பள்ளிச் சேர்க்கை நடக்காததற்கான காரணங்கள்**

1. பெண் கல்வியின் முக்கியத்துவம், அதன் பயன்கள் பற்றிய விழிப்புணர்வின்மை.
2. பெற்றோர் எழுத்தறிவின்மை, ஏழ்மை காரணமாக அவர்களிடமிருந்து இருந்து போதுமான ஊக்கமின்மை.
3. குழந்தை திருமணம்.
4. பெண் குழந்தைகளுக்கு வீட்டிலும்,பள்ளிக்குள்ளும்,பள்ளிக்கு வெளியேயும் நடக்கும் வன்கொடுமை.
5. சில குழந்தைகள் எப்பொழுதும் வீட்டின் நினைவால் வாடுவர்.
6. பழங்குடி மக்களுக்கு போதுமான பேருந்து வசதியும், பேருந்து கட்டணமும் செலுத்த இயலாமை.
7. கிராமப்புறங்களில் வாழும் பெற்றோர் தம் பெண் குழந்தைகளுக்கு 18 வயதிற்கு முன்பாகவே திருமணம் முடித்து வைத்தல்.
8. குடும்ப வறுமை காரணமாக குழந்தைகள் வேலைக்கு செல்லும் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.
9. குழந்தை கல்வித் தொடர ஆசிரியர்களிடம் போதுமான ஆயத்தமின்மை.
10. குழந்தைகளின் முன்னேற்றத்தில் பெற்றோரின் அதிக ஈடுபாடின்மை. அதாவது, குழந்தைகளின் பள்ளி செயல்பாடுகள், வீட்டுப்பாடங்கள், வழிகாட்டுதல், ஆதரவு வழங்குதல் போன்றவற்றில் சுணக்கம் காட்டுவது.

**அனைவருக்கும் உயர்கல்வி இயக்கம் (RUSA)**

இச்செயல் திட்டமானது ஜுன் திங்கள் 8-வது நாள் 2013-ஆம் ஆண்டு இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் மூலம், மாநில அரசு, யூனியன் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**RUSA-வின் கூறுகள்**

புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்குதல், தன்னாட்சி கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். மற்றொரு முயற்சியாக, ஏற்கனவே இயங்கி கொண்டிருக்கும் கல்லூரிகளை மாதிரி கல்லூரிகளாக மாற்றுவது. திறன் மேம்படுத்த வேண்டி தொழிற்கல்வியானது உயர்கல்வி இயக்கத்துடன் (RUSA) சேர்க்கப்பட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, மறுசீரமைப்பு, கட்டிடத் திறன், மறுமலர்ச்சியை RUSA ஆதரிக்கிறது.

**RUSA-வின் நோக்கங்கள்**

1. மொத்தப் பதிவு விகிதமாக 12-வது திட்டத்தின் முடிவில், 25.2% இலக்கு மற்றும் 13-வது திட்டத்தின் முடிவில் 32% இலக்கினையும் அடைதல்.
2. மாநில நிறுவனங்களின் ஒட்டுமொத்த தரத்தினை மேம்படுத்த குறிப்பிட்ட நெறிமுறைகள் மற்றும் தரநிலைகள் வழங்கி கட்டாய தர உத்தரவாதமாக்கல்.
3. மாநில உயர்கல்வி முறையில் சீர்திருத்தங்களை கொணர மாநில அளவிலான நிறுவனங்களின் அமைப்பினை திட்டமிடுதல், கண்காணித்தல், மாநிலப் பல்கலைக்கழகங்களின் தன்னாட்சி மற்றும் நிறுவனங்களின் ஆளுமையை மேம்படுத்துதல்.
4. இணைத்தல், கல்வி செயல்பாடு, தேர்வு அமைப்பில் சீர்த்திருத்தங்களை உறுதி செய்தல்.
5. அனைத்து உயர்கல்வி நிறுவனங்களில் போதுமான தரமான ஆசிரியர்கள் உள்ளனரா என உறுதி செய்தல் மற்றும் வேலை வாய்ப்பானது அனைத்து நிலைகளில் திறனை வளர்க்கிறதா என உறுதி செய்தல்.
6. உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி, புதுமைகளை தன்னகத்தே இருக்க அர்ப்பணிப்பு கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.
7. சேர்க்கை இலக்குகளை அடைவதற்காக புதிய நிறுவனங்களை தொடங்குதல். மேலும் ஏற்கனவே நிறுவப்பட்ட நிறுவனங்களில் கூடுதல் திறனை உருவாக்குதல்.
8. கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் சிறந்த கல்வி நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் உயர் கல்விக்கான பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை சரி செய்தல்.
9. மாற்றுத் திறனாளிகள், சிறுபான்மையினர், பெண்கள், கல்வியாலும் சமூகத்தாலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர்க்கு, பழங்குடியினருக்கு உயர்கல்வி வாய்ப்பு வழங்குவதன் மூலம் உயர்கல்வியில் சமவாய்ப்பினை மேம்படுத்துதல்.
10. மாநில பல்கலைக்கழகங்களில் தன்னாட்சியை மேம்படுத்துதல்.

**RUSA-வின் சிறப்பம்சங்கள்**

1. பல கல்லூரிகளை ஒன்றாக சேர்த்தும், நிறுவப்பட்ட தன்னாட்சி கல்லூரிகளை மேம்படுத்தியும் புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறது.

2. புதிய மாதிரி பட்டப்படிப்பு கல்லூரிகள், புதிய தொழிற் கல்லூரிகளில் உருவாக்கி கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகத்திற்கும் உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குகிறது.
3. கல்வி நிர்வாகிகளின் தலைமைப்பண்பு மேம்பாடு, ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல், ஆசிரியர் மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய பகுதியாகும்.
4. தொழிற்கல்வியை உயர் கல்வித் துறையுடன் இணைக்க தனித்தனி பிரிவினை RUSA அமைத்துள்ளது.
5. சீர்த்திருத்தம், மறுசீரமைப்பு, நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்கு ஆதரவு அளிக்கிறது.
6. அரசாங்கத்தின் திறன் மேம்பாட்டினை, போதுமான தலையீடுகள் மூலம் ஒருங்கிணைக்கிறது.
7. தரம், ஆராய்ச்சி மற்றும் புதுமைளானது போன்றவற்றை மாநிலம் மற்றும் நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டி சூழலை ஏற்படுத்துகிறது.
8. கல்வி, தேர்வுசீர்திருத்தம், ஆளுமை போன்றவற்றை உறுதிப்படுத்துதல் மூலம் பள்ளிக்கல்வி மற்றும் உயர்க்கல்விக்கு இடையே இணைப்பினை ஏற்படுத்துகிறது.

### RUSA-வின் நிதி அமைப்பு

1. மைய நிதியளிப்பு நெறிமுறை, விளைவு சார்ந்ததாக இருக்கும்.
2. மனிதவள மேம்பாட்டுத்துறையானது மாநில அரசு மூலம் நிதி உதவியினை பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் வழங்கும்.
3. மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதியானது மாநில உயர் கல்வித் திட்டங்களின் SHEP (State Higher Education Plan) உயர் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.
4. ஒவ்வொரு நிறுவனமும் இத்திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து கூறுகளுக்கும் நிறுவன முன்னேற்ற திட்டத்தினை IDP (Institutional Development Plan) தயார் செய்ய வேண்டும்.
5. மாநில அளவில் உயர் அடுக்குகளை மாநில உயர்கல்வி திட்டத்தோடு (SHEP) சேர்த்த பின் நிறுவன மேம்பாட்டு மாநில அளவோடு ஒருங்கிணைக்கப்படும்.
6. மாநில உயர்க் கல்வி சபைகள் திட்டமிடுதல் மற்றும் மதிப்பீட்டினை மேற்கொள்கிறது.

### RUSA அடைவில் உள்ள சவால்கள்

#### (அ) பாலின வேறுபாடு

தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு மிக சமீபத்தில் நடத்திய மதிப்பீட்டின் மூலம், உயர்கல்வியின் சேர்க்கை ஆண்களுக்கு 22.8 சதவீதமாகவும் பெண்களுக்கு 15.8 சதவீதமாகவும் காட்டுகிறது. கல்வி மற்றும் மருத்துவம் தவிர்த்து அனைத்து துறைகளிலும் பெண்களை காட்டிலும் ஆண்களே அதிக அளவில் சேர்க்கையடைந்துள்ளனர்.

#### (ஆ) போதுமான உள்கட்டமைப்பு வசதியின்மை

அதிகப்படியான நிறுவனங்கள் அடிப்படை உள்கட்டமைப்பு வசதியினை போதியளவு மேம்படுத்திக்கொள்வதில்லை.

#### (இ) குறைந்த தொழிற்துறை பயிற்சி

நிறுவனங்களுக்கும் தொழிற்கூடங்களுக்கும் இடையே நல்லுறவு மிகவும் அவசியம். தொழிற்துறைகளை கலைத்திட்டமிடலில் ஈடுபடுத்துதல், தகவல் தொகுப்புப் பணியில் ஈடுபடுத்தாமை.

**(ஈ) ஆசிரியர் பற்றாக்குறை**

நிறுவன வளர்ச்சிக்கும், மாணவர் சேர்க்கையின் அளவிற்கும் ஏற்றார் போன்று ஆசிரியர், மாணவர் விகிதத்தில் ஓர் சமநிலையின்மை காணப்படுகிறது.

**(உ) குறைந்த அளவு ஆராய்ச்சி**

ஒட்டுமொத்த சேர்க்கையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான அளவே சேர்க்கைகள் ஆராய்ச்சி படிப்பு மாணவர்களின் சேர்க்கையுள்ளது.

**(ஊ) பல்கலைக்கழகங்களில் அதிகப்படியான கல்லூரிகளின் இணைப்பு**

புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து கல்லூரிகளும் மாநில பல்கலைக்கழகங்களோடு இணைவு பெற்று பல்கலைக்கழகங்களுக்கு இணைவு அமைப்பில் அதிகப்படியான சுமையை அளிக்கிறது. ஆகவே, பல்கலைக்கழகங்களில் கல்வி, ஆய்வின் தரம் குறைகிறது.

**ஒருங்கிணைந்த கல்வி**

ஒருங்கிணைந்த கல்வியானது இயல்பான பள்ளி அமைப்புடன் சிறப்பு தேவையுடைய குழந்தைக்கான கல்வியையும் குறிக்கிறது. ஒருங்கிணைந்த கல்வியானது மாணவர்களை ஒரு முழு மனிதனாக கருதும் முறைகளிலே கவனம் செலுத்துகிறது. இதன் முக்கிய நோக்கம் எப்படியாவது ஒரு நல்ல வேலையை தேடிக்கொள்வதற்காகவோ அல்லது பெரும் பணம் ஈட்டச்செய்வதற்காகவோ அல்ல மாறாக முழு மனிதனை உருவாக்குவதாகும்.

ஒவ்வொரு மனிதனின் மனம், உடல், உணர்வு போன்றவை ஒரே சமயத்தில் ஒருங்கிணைந்து காணப்படுகிறது. ஒருங்கிணைந்த கல்வி என்பது தேசியக் கல்விக் கொள்கை (1986)-யின் வெளிப்பாடாகும். இது அனைவருக்கும் சமவாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல் வெற்றியையும் தருவதாகும். இந்த ஒருங்கிணைத்தலானது இயலாமையுடைய குழந்தைகளுக்கும் சாதாரண குழந்தைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்கச் செய்யும் செயல் முறையை குறிக்கும்.

**ஒருங்கிணைந்த கல்வியின் சிறப்பம்சங்கள்**

1. இயலாமையுடைய குழந்தைகள் மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்தி பார்த்து கொள்வதற்கு மாறானது.
2. இயலாமையுடைய குழந்தைகளிடையே காணப்படும் தாழ்வு மனப்பான்மையை நீக்குவதற்கு உதவுகிறது.
3. ஒப்பார் குழவின் உதவியுடன் இயலாமையுடைய மாணவர்கள் இணைந்து கற்க உதவியாக உள்ளது.
4. சாதாரண குழந்தைகளுடன் இயலாமையுடைய குழந்தைகள் பள்ளி வாழ்க்கையை கொண்டாட வாய்ப்பளிக்கிறது.
5. சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்கிறது.
6. இது சாதாரண குழந்தைகளின் மத்தியில் இயலாமையுடைய குழந்தைகளின் பாசம், அன்பு, மரியாதையை உள்ளீட்டு கொள்கிறது.
7. இயலாமையுடைய மாணவர்கள் தம் சக மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்க ஊக்கமூட்டுதல்.

**இயலாமையுடைய குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி**

இந்திய அரசாங்கமானது இயலாமையுடைய குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வியை கொண்டு வந்துள்ளது. இத்தகைய குழந்தைகள் வாழ்வில் தைரியமும் தன்னம்பிக்கையும் பெற்று சமுதாயத்தோடு இயைந்து வாழ்வதே இத்திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோளாகும். கல்வி வாய்ப்பினை இயலாமையுடைய குழந்தைகளுக்கு வழங்குவதற்காக மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட ஓர் திட்டமாகும்.

ஒருங்கிணைந்த கல்வியானது இந்திய அரசாங்கத்தின் நலத்திட்ட அமைச்சகத்தால் 1974-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஓர் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு புத்தகங்கள், எழுது பொருட்கள், பள்ளிச் சீருடைகள், போக்குவரத்து, சிறப்பு சாதனங்கள் மற்றும் கருவிகளை வழங்க நிதியுதவி அளித்து வருகிறது. பள்ளிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த நமது மாநில அரசு 50 விழுக்காடு பண உதவியை அளித்து வருகிறது. ஆனால் பயிற்சி பெற்ற ஆசிரியர், இயலாமையுடைய குழந்தைகள் மற்றும் அவர்களுக்கான கல்வித் தேவையை புரிந்து கொள்ளும் விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவில்லை.

**உள்ளடங்கிய கல்வி**

ஒருங்கிணைந்த கல்வியை விட இது பரந்த மற்றும் விரிவான கருத்துக்களை உள்ளடக்கியது. உள்ளடங்கிய கல்வியில், சிறப்பு திட்டங்களான உள்கட்டமைப்பு, சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறைகள், சிறப்பு கலைத்திட்டங்கள் போன்றன இடம்பெற்றிருக்கின்றன. சிறப்பு தேவை கொண்ட சில குழந்தைகள் அதே வகுப்பறையிலோ அல்லது வேறு வகுப்பிலோ அமர வைக்கலாம். உதாரணமாக, காது கேளாத குழந்தைகளுக்கு ஒலிக்கருவி அளித்து காது கேட்க வைப்பது. கண்பார்வையற்ற குழந்தைகளுக்கு பிரெய்லி முறை அமைந்த புத்தகங்கள் வழங்குவது.

**உள்ளடங்கிய கல்வியின் அடிப்படைக் கொள்கைகள்**

1. உள்ளூர் பள்ளிகளானது சமுதாயங்கள் மற்றும் கலைத் திட்டத்திலிருந்து விலகி இருப்பதை தவிர்த்து, இயலாமையுடைய மாணவர்களின் பங்களிப்பை உயர்த்துதல்.
2. பள்ளியிலுள்ள கலாச்சாரம், கொள்கைகளை மறுசீரமைத்து அவை பலதரப்பட்ட மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்தல்.
3. மாணவர்களிடையே காணப்படும் வேற்றுமைகளை இயல்பாக கருதி அவற்றை ஏற்றுக் கொள்ளுதல்.
4. மாணவர்களிடையே காணப்படும் பலதரப்பட்ட தேவையை பூர்த்தி செய்தல்.
5. கற்றல் உத்திகள், பொருத்தமான கலைத்திட்டம் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை அளித்தல்.

**உள்ளடங்கிய கல்வியின் பயன்கள்**

1. இக்கல்வி முறையானது, கற்றலை எளிதாக்கவும், வரவேற்கதக்கதாகவும், சமுதாயத்தில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் பயனளிக்க கூடியதாகவும் உள்ளது.
2. எவ்வகையான கற்போரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நெகிழ்வுத்தன்மை கொண்டதாக இக்கல்வி அமைப்பு உள்ளது.
3. ஏதோ ஒரு காரணத்தால் பள்ளியை விட்டு விலகிய மாணவர்கள் இயல்பான மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பினை பெறுகின்றனர்.
4. இயலாமையுடைய குழந்தைகளும் கற்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.
5. தங்களது தன்னம்பிக்கையையும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், சவால்களை எதிர்கொள்ளவும் சகமாணவர்களின் உதவியுடன் கற்கின்றனர்.

**உள்ளடங்கிய கல்வியை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்கள்**

ஒவ்வொரு தனிநபரின் பண்பியல்புகளானது, பள்ளிச் செயல்பாடுகளுக்கும் கலைத்திட்டத்திற்கும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும். மாணவர்களின் தேவைக்கு ஏற்ப பரிசோதிக்கப்பட்ட கற்பித்தல் முறைகள், நுணுக்கங்கள் மற்றும் கற்பித்தல் துணைக்

கருவிகள் இல்லை. ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் சவால் மிக்க மாணவர்களை ஆர்வத்துடன் பங்களிக்க செய்தல் வேண்டும். இயலாமையுடைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்களின் உதவி சரிவர கிடைக்காமல் போகலாம். அவர்களின் தேவைக்கு போதுமான வசதிகள் மற்றும் கற்பித்தல் கருவிகள் இல்லாத காரணத்தால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களின் இயலாமையினால் தாழ்வு மனப்பான்மையும் ஏற்படுகிறது.

| **வ.எண்** | **ஒருங்கிணைந்த கல்வி** | **உள்ளடங்கிய கல்வி** |
|---|---|---|
| 1 | இயலாமையுடைய மாணவர்களை ஒருங்கிணைப்பதில் சொந்த வரம்புகளை கொண்டது. | இயலாமையுடைய மாணவர்களை ஒருங்கிணைப்பதில் சொந்த வரம்புகள் எதுவும் இல்லை. இதன் முக்கிய நோக்கம் கல்வியிலிருந்து விலகிய அனைவரையும் சேர்த்துக்கொள்ளுதல். |
| 2 | செலவு அதிகம் இல்லை | ஆசிரியர்களை நியமிப்பது, கலைத்திட்டம், உள்கட்டமைப்பு போன்றவற்றிற்கு மிகுந்த செலவு ஏற்படுகிறது. |
| 3 | இயலாமையுடைய மாணவர்களும் அனைத்து மாணவர்களும் பின்பற்றகூடிய கலைத்திட்டத்தை அதே பள்ளி நேரத்தில் பயிலலாம். | இயலாமையுடைய மாணவர்களுக்கான சிறப்பு கலைத்திட்டத்தை வடிவமைக்கவேண்டும். |
| 4 | இயலாமையுடைய அல்லது மீத்திறன்மிக்க மாணவர்கள் இயல்பான வகுப்பறையில் அமர்கின்றனர் | தேவைக்கு ஏற்ப சிறப்பு வகுப்பறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| 5 | முறையானத் திட்டமிடல் தேவைப்படுவதில்லை | முறையானத் திட்டமிடல் தேவைப்படுகிறது. |

**டெல்லார் குழு அறிக்கை**

**(அ) அமைதியான வாழ்க்கைக்கான கல்வி**

கல்வியானது,''அறியாமை, போர், ஏழ்மை போன்றவற்றை குறைத்து ஓர் ஆழ்ந்த நல்லிணக்கத்தை மனித மேம்பாட்டிற்கு அளிப்பதே ஆகும்''

டெல்லார் கூற்றுப்படி ''கல்வி என்பது அறிவுத்திறனை மேம்படுத்தும் ஓர் தொடர்ச்சியான செயல்பாடாகும். அது மட்டுமல்லாது தனிநபர், குழுக்கள் மற்றும் தேசத்திற்கிடையே ஒரு நல்லுறவினை ஏற்படுத்துகிறது.''

இக்குழுவானது 21-ஆம் நூற்றாண்டின் ஒரு சில மையப் பிரச்சினைகளை அடையாளங்கண்டது. அவை யாவன:

1. உள்ளூர் மற்றும் உலகளாவிய மக்களிடையே உள்ள இறுக்கமான சூழல்.

2. கலாச்சாரம் ஒருபுறம் உலகளாவிய நிலையில் இருக்க, இம்மேம்பாடானது மற்றொரு புறம் பகுதியாக இருப்பது, தனிநபர்க்கும் உலகளாவிய மக்களுக்கும் இடையே ஓர் இறுக்கத்தை ஏற்படுத்துகிறது.
3. இந்திய மக்களிடையே காணப்படும் மற்றொரு இறுக்கமான சூழல் பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் உட்பட்டதாகும்.
4. நல்ல தரமான வாய்ப்பு பெற்று நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற பதற்றம் தோன்றுகிறது.
5. அதிகப்படியான அறிவுப் பெருக்கத்திற்கும் மனிதர்கள் அவற்றை தன்வயப்படுத்தி கொள்வதற்கும் இடையே உள்ள பதற்ற நிலை.
6. கல்வியானது தனிநபர், குடும்பங்கள், பள்ளிகள், சமுதாயங்கள் மற்றும் குழுக்களிடையே உள்ள மோதல்களை தடுத்து அமைதியான சூழலை ஏற்படுத்துவதாகும்.

**டெல்லார் குழு அறிக்கை-கல்வியின் நான்கு தூண்கள்**

வாழ்நாள் முழுவதும் கற்றல் என்பது குழந்தை பருவம் முதல் முதிர் பருவம் வரை உள்ள மனிதர்களின் அனைத்து நிலைகளிலும் அறிவு, திறன்கள் போன்றவற்றை உள்ளடங்கிய ஓர் தத்துவமாகும். அது மட்டுமல்லாது கற்றல் என்பது அறிவுசார் செயல்பாடு மட்டுமின்றி அவை தனிநபரின் வாழ்க்கையில், அதாவது சமுதாயத்தில் அவர்களின் பங்கு, பணிபுரியும் இடத்தில் அவர்களுடைய செயல்திறன், சுய மேம்பாடு போன்ற அனைத்திற்கும் வழிவகுக்கும்.

வாழ்நாள் முழுவதும் கல்விக்காக ஓர் கருத்தமைவு கட்டமைப்பு UNESCO-வின் கல்விக்கான பன்னாட்டுக் குழுவால், 21-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய குழுவின் முன்னாள் தலைவர் டெல்லார் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை (1996),“கற்றல்: நம்முள் உள்ள புதையல்.”(Learning: The Treasure Within) எனப்படும்.

இவ்வறிக்கையானது, வாழ்நாள் முழுவதும் கல்வி என்பதை கீழ்கண்ட நான்கு தூண்களை அடிப்படையாக கொண்டது.

1. தெரிந்துகொள்ள கற்றல்
2. செய்வதற்கு கற்றல்
3. ஒன்றாக வாழ்வதற்கு கற்றல்
4. எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு கற்றல்

**தெரிந்து கொள்ள கற்றல்**

கல்வியானது நாம் இவ்வுலகத்தில் வாழத் தேவையான அறிவு மற்றும் திறன் மேம்பாட்டினை உள்ளடக்கியது. இத்திறன்களாவன எழுத்தறிவு, எண்கள் மற்றும் சிந்தனை ஆகும். பரந்த பொதுஅறிவினை போதுமான அளவு கற்று, பின் அதனை ஒவ்வொரு சிறிய அளவிளான பாடத்தில் ஆழ்ந்து படித்தல். அதாவது நம் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**செய்வதற்கு கற்றல்**

தொழில் வெற்றிக்கு தேவையான கணினி பயிற்சி, நிர்வாகப் பயிற்சி, தொழிற் பயிற்சி போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ளுதல். தொழில் திறனிற்கு மட்டுமல்லாமல் பல்வேறு சூழலில் நாம் திறனுடன் திகழ வாழ்நாள் முழுதும் கல்வி தேவைப்படுகிறது.

**ஒன்றாக வாழ கற்றல்**

இது சமூகத்திறன்கள் மற்றும் மதிப்பு போன்றவற்றை உள்ளடக்கியது. பிறரை பற்றி புரிந்து கொண்டு வாழும் திறனையும் மனப் போராட்டத்தினையும் சமாளிக்க கற்றுக் கொள்ளுதல், கூட்டாக சேர்ந்து செயல் திட்டங்களை கையாளவும் கற்றுக் கொள்கின்றனர்.

**எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு கற்றல்**

இது தனிநபர் மேம்பாட்டினை வளர்க்கும் செயல்பாடுகளை உள்ளடக்கிய ஆக்கத்திறன் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகை செய்கிறது.

**முடிவுரை**

அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பது அனைத்து மக்களின் மேம்பாட்டுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. குறிப்பிடத்தக்க குடிமக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்வதால், 6-14 வயதுக்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வெற்றி பெறாததற்கு காரணமாக அமைகிறது. அவ்வப்போது எழும் பிரச்சினைகளிலிருந்து மீண்டு, பொருத்தமான உத்திகளை அளிப்பதன் மூலம் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்ட முடியும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. அனைவருக்கும் தொடக்கக்கல்வியின் தேவையை விளக்குக.
2. SSA-வின் நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் சிறப்பம்சங்களை விவாதிக்க.
3. RUSA-வின் நிதி அமைப்பையும், சிறப்பம்சங்களையும் விவரிக்க.
4. இந்தியாவில் ஒருங்கிணைந்த கல்வியின் தேவையை ஆய்வு செய்க.
5. டெல்லார் குழு அறிக்கையின்படி அமைதியான வாழ்க்கைக்கான கல்வியின் நான்கு தூண்களை விளக்குக.

## அலகு -3 கல்விக்கான இந்திய அரசியலமைப்பின் விதிகள்

### நோக்கங்கள்

இவ்வலகின் முடிவில் கற்போர்

1. இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்வர்.
2. இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகளையும், கடமைகளையும் அறிந்து கொள்வர்.
3. கல்வி சார்ந்த அரசியலமைப்பின் நெறிமுறைகளையும், வழிகாட்டுதல்களையும் அறிந்து கொள்வர்.
4. கல்வி உரிமைச் சட்டத்தின் சிறப்பம்சங்களை ஆய்வர்.

**முன்னுரை**

1947 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 - ஆம் நாள் இந்தியா, ஆங்கிலேய அரசின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. இந்திய அரசியல் அமைப்புச்சட்டத் தொகுப்பை உருவாக்கிட அப்போது செயல்பட்ட இடைக்கால அரசின் சட்ட அமைச்சர் டாக்டர் B.R. அம்பேத்கார் தலைமையில், பல்வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்கியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அரசியல் நிர்ணய சபை நிறுவப்பட்டது. இச்சபையால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சாசனம் (Constitution of India) நீண்ட விவாதங்களுக்குப்பிறகு 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய அரசியல் சாசனம் நம் நாட்டு மக்களின் நம்பிக்கையையும் விழைவுகளையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

**அ). இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை (Preamble of the Constitution of India)**

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் முகப்புரையானது பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது அதில் திருத்தம் 42 ன் மூலம் 1976 ஆம் ஆண்டு சமத்துவ சமுதாயம், மதச்சார்பின்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு போன்றவைகள் இணைக்கப்பட்டுள்ளன.

‘‘இந்தியாவின் குடிமக்களாகிய நாங்கள் இதன் மூலம் கண்ணியத்துடன் வலியுறுத்தி இந்தியாவின் இறையாண்மையை சமூக சமத்துவத்துடன் கூடிய மத சார்பற்ற ஜனநாயக குடியரசாக உருவாக்க உறுதி பூணுவதோடு, இந்திய குடிமக்கள் அனைவருக்கும் பாதுகாப்பான, சமூகநீதி , பொருளாதார நீதி மற்றும் அரசியல் சார்ந்த நீதியுடனும் சிந்தனை செய்தலில் வெளிப்படுத்துதலில் நம்பிக்கையில் மற்றும் மதவழிபாடுகளில் சுதந்திரத்துடனும், எல்லோருக்கும் சம அந்தஸ்து மற்றும் சமவாய்ப்புடனும் மற்றும் தனிமனித கண்ணியத்துடன் கூடிய சகோதரத்துவத்துடன் இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைபாட்டையும் பாதுகாப்போம் என்றும் உறுதியுடன் தீர்மானிக்கிறோம். இந்திய மக்களாகிய நாம் நீதி, சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமதர்ம சமயசார்பற்ற ஒருமைப்பாடுடைய குடியாட்சியை நிறுவுகிறோம்’’. இதில் உள்ள நான்கு முக்கிய அடிப்படைகளும் கீழ்க்கண்டவாறு விரித்துரைக்கப்பட்டுள்ளன.

### (i) நீதி ( Justice )

சமூக, பொருளாதார, அரசியல் தொடர்பானவை. சமூகம் பல்வேறு பிரிவு மக்களையும் குழுக்களையும் கொண்டது. தனிநபர் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதோடு, சமூகத்தேவைகளும் முன்னேற்றமும் கருத்தில் கொள்ள பட வேண்டும் என்பது உறுதி செய்யப்படுதலைப் குறிப்பதே நீதி, அவை மூவகைப்படும், அவையாவன.

### (1) சமூகநீதி (Social Justice )

சாதி, மதம், இனம், பால் அடிப்படையாக வேறுபடுத்துவதை அரசியலமைப்புத் தடை செய்கிறது ஆனால், சமூகம் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள குடிமக்களின் முன்னேற்றத்திற்காக, அரசு வழிவகை செய்ய வேண்டும்.

### (2) பொருளாதார நீதி (Economic Justice)

அரசியலமைப்பில் தோற்றுவாயில் உறுதியளிக்கப்பட்டுள்ள, நியாயமான பொருளியல் முறைமையை உருவாக்குவதே நெறிசெய்கோட்பாடுகள், குறிக்கோளாகக் கொண்டுள்ளன. பொருளாதார நீதி என்றால் ஒவ்வொருவரின் கண்ணீரைத்துடைப்பதே என்று நீதிபதி கிருஷ்ண ஐயர் அவர்கள் கூறியுள்ளார்.

### (3) அரசியல் நீதி (Political Justice )

சமூகத்தில் ஒவ்வொருவரும் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடவும், தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கும், சட்டசபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் ஈடுபடவும் அனைவருக்குமான சமத்துவத்தை அரசியல் சார்ந்த நீதி அளிக்கிறது. இதுபோல் சமூகத்தில் நலிவுற்ற மற்றும் பழங்குடியினருக்கு சிறப்பு சலுகைகள் வழங்கும் வகையில் சில சட்டசபை மற்றும் பாராளுமன்ற தொகுதிகள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் நலிவுற்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களின் குரல் அரசியல் அரங்கத்தில் ஒலிக்கிறது.

### (ii) சுதந்திரம் ( Freedom )

சிந்தனை, பேச்சு, எழுத்து, நம்பிக்கை, மற்றும் வழிபாடு தொடர்பானவை. சுதந்திரத்தைப் பற்றித் தோற்றுவாய் குறிப்பிடுகின்றது. சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, எப்பொருள் பற்றியும் பேச எழுதுவதற்கான உரிமையே ஆகும் . சிந்தனை கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் எனப்படுகிறது. தன்னிறைவிற்கும், குடியரசு ஆட்சி திறம்பட நடைபெற இத்தகைய உரிமை மிகவும் அவசியமாகும். ஒரு மனிதருக்கு மதத்திலும்,

மனசாட்சிப்படி நடக்கவும் சுதந்திரம் தேவை. அரசு எல்லா மதங்களுக்கும் சமமான சுதந்திரத்தைக்கொடுக்கின்றது.

**(iii) சகோதரத்துவம் (Fraternity )**

இது, தனிமனிதனது கண்ணியத்தையும் (Dignity) நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உறுதி செய்வதாகும். தாய், தந்தை, மனைவியைத் தவிர அனைவரையும் உடன் பிறப்புக்களாகக் கருதும் மனப்பான்மையை தோற்றுவித்து, வேற்றுமைகளில் ஒற்றுமையைக் காணுதல் (Unity in Diversity) என்றும் உயரிய பண்பினை மாணவர்களிடம் வளர்த்தல் வேண்டும் இதன் மூலமே சமுதாயப்பிணக்குகள் இன்றி, அனைவரும் இணக்கமாக செயல்பட்டு ஜனநாயகத்திற்கு வலுசேர்க்க முடியும். தனிமனிதனின் கண்ணியத்தையும் (Dignity) நாட்டின் ஒற்றமையையும் ஒருமைப்பாட்டையும் உறுதி செய்வது தொடர்பானவை.

**(iv) சமத்துவம் ( Equality )**

சமூக அந்தஸ்து மற்றும் வாய்ப்புகள் அவற்றை மேம்படுத்துவது தொடர்பானவை. ‘‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’’ என்பதே சமத்துவமாகும். சமமானவர்களிடம் உள்ள சமத்துவத்தையே இது குறிக்கிறது. அரசர்களுக்கும், பாமர மக்களுக்கும் இடையே சமத்துவம் இருக்க முடியாது. இவர்களுக்கிடையே வேறுபாடு காண்பது அரசியலமைப்பை மீறுவது ஆகாது. இதனால்தான் குடியாட்சியானது பெண்கள், குழந்தைகள், பிற்பட்டவர் ஆகியோருக்குச் சிறப்பு சலுகைகள் அளிக்கிறது.

**(v) மதச்சார்பின்மை (Secularism )**

இந்தியாவிலுள்ள அனைவரும் தங்களது மதங்களை அவரவர் வழிபாட்டுக்கு இடையூறு இன்றி பின்பற்றலாம். எல்லா மதங்களும் சம மரியாதையுடன் நடத்தப்படுகிறது. மேலும் ஒருவரது மதத்தை அனைவரும் மதிக்க வேண்டும்.

வழிபாட்டுக் கூடங்களை எங்கும் அமைத்துக் கொண்டு வழிபடலாம். அரசு ஒருவரின் மதநம்பிக்கையில் தலையிடாது.

**ஆ) இந்திய அரசியல் சாசனம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் : (Fundamental Rights of Indian Citizens)**

இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள ஏழு அடிப்படை உரிமைகளாவன.

1. சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை (Right to Equality)

2. சுதந்திரத்துடன் இருக்கும் உரிமை (Right to freedom of speech and expression )

3. சமய பின்பற்றலுக்கான உரிமை. (Right to Freedom of Religion )

4. சுரண்டப்படுதலுக்கு எதிரான உரிமை (Right against Exploitation )

5. கல்வி பெறும் உரிமை (Right to Education)

6. பண்பாடு மற்றும் கல்விசார் உரிமைகள் ( Cultural and Educational Rights )

7. அரசியலமைப்பு ரீதியாக நிவாரணம் பெறும் உரிமை.( Right to constitutional Remedies)

இந்திய அரசியிலமைப்புச் சட்டம் நமது குடிமக்கள் ஒவ்வொருவருக்கம் அடிப்படை உரிமைகளை கொடுத்துள்ளது. இவைகளை பின்வருமாறு விவரிக்கலாம்.

**அடிப்படை உரிமைகள் (Fundamental Rights )**

அடிப்படை உரிமைகள் என்பது இந்தியத் திருநாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் அவனது வாழ்க்கையின் மேன்மையைப்போற்றும் வகையில், தனிப்பட்ட ஒவ்வொரு குடிமகனின் நலம், பொதுநலன்கள் கருதி இந்த அடிப்படை உரிமைகளை நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவைகளை பின்வருமாறு ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்.

**சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை. (Right to Equality )**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். எனவே சட்டரீதியாக அனைவரும் சமமாக பாதுகாக்கப்படவேண்டும். நமது அரசியலமைப்பு அனைத்து குடிமக்களின் சமத்துவ உரிமைக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

1. சமயம், சாதி, பால், இனம், நிறம் அடிப்படையில் எவரையும் வேறுபடுத்தக்கூடாது.
2. பொதுப்பணி, வேலைவாய்ப்பு நியமனங்களில் சமவாய்ப்பு அளித்தல்.
3. தீண்டாமை ஒழிப்பு மூலம் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்களின் நலனை பாதுக்காத்தல்.

**சுந்ததிரத்துடன் இருக்கும் உரிமை**

## (Right to Freedom of Speech and Expression)

ஒவ்வொருவருக்கும் நாட்டின் பொதுநலனுக்கு உட்பட்டு பின்வருமாறு அவர்களது சுதந்திரம் சார்ந்த அடிப்படை உரிமை வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 19-ல் சுதந்திர உரிமைக்கான உத்திரவாதம், அக்குடிமக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கிறது.

(1) பேச்சு சுதந்திரம்

(2) கருத்து சுதந்திரம்.

(3) அமைதியாக ஒன்று கூடி செயல்பட சுதந்திரம்.

(4) கட்சிகள், கழகங்கள், சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம்.

(5) தனக்கு பிடித்த சட்டத்திற்குட்பட்ட தொழிலை செய்ய சுதந்திரம்.

(6) கட்டுப்பாடுகளின்றி நாட்டின் எந்த பகுதிக்கு செல்லவும் அங்கு வசிக்கவும் சுதந்திரம்.

## (3) சமயபின்பற்றலுக்கான உரிமை (Right to Freedom of Religion )

நமது அரசியலமைப்பு, இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமய சுதந்திரத்தினை அளிக்கிறது. எல்லா சமயங்களும் ஒரே மாதிரியாக கருதப்பட வேண்டும். இந்தியா சமய சார்பற்ற நாடு என்பதால் அரசு என்பது மனிதரிடையே உள்ள உறவே தவிர மனிதனுக்கும் கடவுளுக்கும் அல்ல என்பதனை வலியுறுத்துகிறது.

அனைத்து சமய அமைப்புகளும் தங்களது விவகாரங்களை நிர்வகித்துக் கொள்ள சுதந்திரம் வழங்கப்படுள்ளது. பிரிவு 25-ல் மதத்தைப் பின்பற்றி, அதனை பரப்புவதற்கான சுதந்திரம் உண்டு என்று உத்திரவாதம் அளிக்கிறது.

மேலும், மதச் சார்பான நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும், தருமப்பணிகளை மேற்கொள்ளவும் உறுதியளிக்கிறது.

சமயத்தின் பராமரிப்பிற்கும், வரி செலுத்துவதற்கும் பிரிவு 27 உரிமையை வழங்குகிறது. அரசியலமைப்பு பிரிவு 28 கல்வி நிறுவனங்களில் எந்த விதமான சமயப் போதனைகளையோ அல்லது வழிபாட்டையோ மதநிறுவனங்களைத் தவிர அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் பின்பற்றக் கூடாது.

## 4) சுரண்டப்படுதலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation )

ஒவ்வொருவரும் பிறரால் சுரண்டப்படாமல் இருப்பதற்காக பின்வரும் உரிமைகள் இருக்கின்றன.

(1) ஏழை அல்லது பொருளாதார சுதந்திரம் இல்லாமல் இருப்பவர்களது உழைப்பு சுரண்டுவதற்கு எதிரான உரிமை.

(2) ஆண் மற்றும் பெண்களுக்கு சம ஊதிய உரிமை.

(3) பிறரது பொருளை கவருவதற்கு எதிரான உரிமை.

(4) கொத்தடிமை ஒழிப்பு

(5) 14 வயதிக்கு கீழ் உள்ள குழந்தைகளை, குழந்தை தொழிலாளர்களாக தொழிற்சாலை, சுரங்கத்தொழில், பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுத்துவதை தடை செய்ய பிரிவு 24 வழி செய்கிறது.

### 5) கல்வி பெறும் உரிமை (Right to Education )

கல்விபெறும் உரிமை, அண்மைக்காலத்தில் அடிப்படை உரிமைகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி 6 வயது முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளும் கல்விபெறுதல் அடிப்படை உரிமையாக்கப்பட்டுள்ளது.

### 6) பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights)

இந்தியா பன்மொழிகள், எழுத்துக்கள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட நாடு ஆகவே, அரசியலமைப்பு பிரிவு 29- ன் படி சிறுபான்மையினர் தங்களது மொழி எழுத்து பண்பாடு, கல்வியை பாதுக்காக உரிமை பெற்றுள்ளனர்.

அரசியலமைப்பின் பிரிவு 30-ன் படி சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும், நிர்வகிக்கவும் உரிமை வழங்குகிறது.

### 7) அரசியலமைப்பு ரீதியாக நிவாரணம் பெறும் உரிமை. (Right to Constitutional Remedies)

நமது அரசியலமைப்பு உரிமைகள் மீறப்படும்போது நேரடியாக மக்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்து பாதுகாப்பினைப் பெற உதவுகிறது.

மேற்கண்டவாறு அடிப்படை உரிமைகளைப் பற்றி விவரிக்கலாம்.

### (இ ) அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)

1976 ஆம் ஆண்டின் நாற்பத்து இரண்டாம் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் வாயிலாக இந்திய அரசியலமைப்பில் புதிதாகப் பகுதி IV A சேர்க்கப்பட்டது. இதன் கீழ் பிரிவு 51A இந்திய குடிமக்களுக்குரிய பத்து அடிப்படைக் கடமைகளை (Fundamental Duties) எடுத்துரைக்கிறது. இவை ஸ்வரன் சிங் குழு அளித்த பரிந்துரைகளின் பேரில் சேர்க்கப்பட்டன.

### இந்திய அரசியல் சாசனம் விதித்துள்ள குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties of Indian Citizens)

அரசியல் சாசன சட்டத்தின்படி, ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் அடிப்படைக் கடமைகளாக கீழ்க்கண்டவை விதிக்கப்பட்டுள்ளன.

1. இந்திய அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு நடத்தல், அதன் கொள்கைகள், சட்டதிட்டங்கள், தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை மதித்தல்.
2. இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர் சிந்தனைகளைப் போற்றி அவற்றை பின்பற்றுதல்.
3. நாட்டின், இறையாண்மையையும், தேசஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாத்தல்.
4. நாட்டினைப் பாதுகாத்திட தேசியப் பணிக்கு அழைக்கப்படும்போது, அதனை ஏற்று மனமுவந்து பணியாற்றுதல்.
5. மதம், மொழி, வட்டார வேறுபாடுகளின்றி இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் இடையே சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் மேம்படுத்துதல்.
6. பெண்களின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் பழக்கங்களை கைவிடல்.

7. பல்வேறு பண்பாடுகள் இணைந்த வளம் மிக்க நமது பாரம்பரியத்தை மதித்துப் பாதுகாத்தல்.
8. காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை பாதுகாத்து மேம்படுத்துதல்.
9. அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், ஆராய்ந்தறியும் வேட்கை, மறுமலர்ச்சியில் ஆர்வம் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளல்.
10. பொதுசொத்துக்களைப் பாதுகாத்தல், வன்முறையை விட்டொழித்தலில் உறுதியாக இருத்தல்.
11. அனைத்துத் துறைகளிலும் தனிநபராகவும், பிறருடன் கூட்டாகவும் செயல்பட்டு தனிச்சிறப்புமிக்க நிலையை எய்திட முயற்சி மேற்கொள்ளுதல்.
12. குழந்தைகளின் பெற்றோர், பாதுகாவலர் தத்தம் குழந்தைகளுக்கு 6 முதல் 14 வயது வரை முறையான கல்வி பெற தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல்.

## (ஈ) அரசின் கொள்கையை வழிநடத்தும் நெறிமுறைகளும் கல்வியும் (Directive Principles of State Policy and Education)

இந்திய அரசியலமைப்பில் பிரிவு 4 இல் மத்திய அரசும், மாநில அரசுகளும் நம் நாட்டில் நேர்மையான சமுதாயத்தை நிறுவுவதற்கு, பின்பற்ற வேண்டிய சில வழிகாட்டு நெறிமுறைகள் இடம் பெற்றுள்ளன.

இந்திய அரசானது சட்டம் இயற்றும் போது இவ்வழிகாட்டு நெறிமுறைகளை மனதில் கொண்டே சட்டம் இயற்ற வேண்டும். அந்த நெறிமுறைகள் சட்டப்பிரிவு 37 இல் குறிப்பிட்டுள்ளபடி, இந்திய அரசு ‘‘குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி’’ வழிவகை செய்துள்ளது.

45 ஆவது சட்டப்பிரிவில் அரசியல் சாசனம் 14 வயதுக்குப்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாய தொடக்கக் கல்வி வழங்கிட வலியுறுத்தியுள்ளது.

அதைத்தொடர்ந்து மத்திய, மாநில அரசுகளும் பலவிதமான கல்விக் கொள்கைகள் மூலம் பல முயற்சிகளை எடுத்துவருகின்றன.

**1. அரசியலமைப்பு அளிப்புகள்**

அரசியலமைப்பு தோற்றுவாயில் பொதிந்துள்ள கடமைகளை நிறைவேற்ற அரசியலமைப்பு பிரிவுகள் தொடர்பான கூறுகள் அளிக்கப்பட்டுள்ளன. பின்வரும் பகுதிகளில் இந்திய அரசியலமைப்பு அளிப்புகள் பற்றி விவாதிக்கப்படுகிறது.

**i) வேலை உரிமை**

பிரிவு 41-ன் படி நாட்டின் பொருளாதாரத்திறன் எல்லைகளுக்கு உட்பட்டு வேலை உரிமையையும் கல்வி உரிமையையும் வேலை இல்லாதவர், மூத்தவர், நோயுற்றவர் முடியாதவர் ஆகியோருக்கு அரசின் பொது உதவியும் திறம்பட அளிக்க வேண்டும்.

பிரிவு 42-ன் மனிதாபிமான சூழலில் வேலை செய்வது, பேறுகால விடுப்பு போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 43-ன் படி எல்லாத்தொழிலாளர்களுக்கும் உழைப்பிற்கான கூலி, வேலைக்குரிய சூழ்நிலை, நல்ல வாழ்க்கைதர உத்தரவாதம், ஓய்வை நுகர்தல், சமூகப் பண்பாட்டு வாய்ப்புகளை நுகர்தல் ஆகியவற்றை பொருத்தமான சட்டங்கள் இயற்றியோ பொருளாதார அமைப்புகள் கொண்டோ வழங்கவேண்டும்.

**ii) சமத்துவ உரிமை**

இந்திய அரசிலமைப்புப் பிரிவுகள் 14 முதல் 18 வரை சமத்துவதிற்கான உரிமைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய குடிமக்களுக்குத் சமூக அரசியல் சமத்துவத்தை இந்த உரிமை அளிக்கிறது.

**iii) இலவச கட்டாயக்கல்வி**

நாட்டின் கொள்கையில் நெறிசெய் கோட்பாட்டின் கீழ் பிரிவு 45ன் கூற்று பின்வருமாறு.

இந்திய அரசியலைப்பு தொடங்கியதிலிருந்து பத்து ஆண்டுக்குள் எல்லா குழந்தைகளுக்கும் 14 வயது முடியும் வரை இலவசக் கட்டாயக் கல்வியை அளிக்க முயற்சி செய்ய வேண்டும்.

**iv) சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிர்வகிக்கும் உரிமை.**

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 29 மற்றும் பிரிவு 30 சிறுபான்மையினருக்கு, அவர்கள் மதம் அல்லது மொழியின் அடிப்படையில் தாம் விரும்பும் கல்வி கூடத்தை நிறுவி நிர்வகிக்கும் கல்வி உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கிறது.

**பிரிவு 29-ன் கூற்று:**

இந்திய எல்லைக்குள் அல்லது ஏதாவது ஒரு பகுதிக்குள் வாழும் குடிமக்கள், அவர்களுக்கென உருவாக்கப்பட்ட மொழி, வரிவடிவம், பண்பாடு இருந்தால் அவற்றைத் தொடரும் உரிமை அவர்களுக்கு உண்டு.

**v) நலிந்த பிரிவினருக்கு உதவி.**

நலிந்த பிரிவினரின் கல்வித் தேவைகளைப் பிரிவு 15, 17, 46 காக்கின்றன. அதாவது சமூகம், கல்வியில் பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடி இன மக்களின் தேவைகள் காக்கப்படுகின்றன.

**vi) பெண்கல்வி**

பிரிவு 15(1) பாலின அடிப்படையில் எந்தவொரு குடிமகனையோ, குடிமகளையோ பார்த்து வேறுபடுத்தக்கூடாது என்கிறது.

**2. அரசியலமைப்பும் கல்வியும் :**

அரசியலமைப்பின் அளிப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளைச் சாரும். சிலவற்றில் இவை தனித்தனியாகவும் சிலவற்றில் இவை இணைந்தும் செயல்படுகின்றன.

**i) மையப்பட்டியல் உள்ளவை:**

பதிவு 62,63,64,65.

**ii) மாநிலப்பட்டியல்:**

66 பொருள்களில் இரண்டு கல்வி சார்ந்தவை. இவை இரண்டும் மாநிலத்திற்கு மிக அதிக அளவில் சுதந்திரம் அளிக்கின்றன.

**iii) இணைந்தப் பட்டியல் :**

47 பொருள்களில் பின்வரும் ஆறு பதிவுகள் நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ கல்வியுடன் தொடர்புடையவை.

பதிவு: 20 பொருளாதார மற்றும் சமூக திட்டமிடல்.

பதிவு: 25 வாழ்க்கை தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி.

பதிவு: 26 சட்டம், இயந்திரவியல் மற்றும் தொழில்கள்.

பதிவு: 27 அறகட்டளை நிறுவனங்கள்.

பதிவு: 39 செய்தித்தாள், நூலகங்கள், அச்சகங்கள்.

பதிவு: 40 தொல்பொருள் இடங்கள்.

**iv) மத்திய அரசின் பங்கு:**

கல்வி சம்மந்தமான மத்திய அரசின் பங்கு பின்வருமாறு:

1) திட்டமிடுதல்
2) ஒழுங்கமைப்பு
3) நெறிவுறுத்தல்
4) கட்டுப்பாடு
5) கல்வி வாய்ப்புகளில் சமத்துவம்
6) முன்னோடி செயல்திட்டங்கள்
7) அனைத்தையும் ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்தல்.
8) மத்திய ஆட்சிப் பகுதிகளிலும் மத்திய நிர்வாகப் பகுதிகளிலும் கல்வி நிர்வாகம்.

**v) மாநில அரசின் செயல்பாடுகள்:**

1) நிதி
2) சட்டமியற்றல்
3) மேற்பார்வையும், ஆய்வும்
4) ஆசிரியர்களைப் புதிதாகத் தேர்ந்தெடுத்தல்.
5) கலைத்திட்டம் வகுத்தளித்தல்.
6) உருவாக்கப்பட்ட கலைத்திட்டத்தை ஒட்டிய பாடபுத்தகங்களை மாநிலம் முழுவதற்கும் உருவாக்கி பயன்படுத்த உத்தரவிடுகிறது. பாடநூல்களை தயாரிப்பதும் அவற்றை வழங்குவதும் மாநில அரசின் முக்கிய பொறுப்பாகும்.
7) உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கல்வி பொறுப்பை மாற்றிய போதும் மாநில அரசு இது பற்றிய பல பொறுப்புகளைத் தானே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

8) ஒற்றுமையும் ஒருங்கமைப்பும் ஏற்படுத்த ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையில் ஒருங்கிணைப்பு முழுமையாகச் செயல்பட வேண்டும்.

9) பணியாளர்களுக்குப் பயிற்சி மேற்பார்வை, ஆராய்ச்சி முன்னோடிச் செயல்திட்டங்கள் மூலம் தலைமைப் பொறுப்பேற்க வேண்டும்.

10) ஏழ்மையான மிக பின் தங்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளித்து கல்வி வாய்ப்புக்களை சமப்படுத்த வேண்டும்.

**அரசியலமைப்பு கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள சவால்கள்**

**(Challenges to fulfil the Constitutional obligations)**

ஒரே மாதிரி நீதி அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பாகுபாடு இன்றி நீதி கிடைக்க தவறும் பட்சத்தில் மனித உரிமை ஆணையம் மூலம் முறையிட்டு நீதி கிடைக்கச் செய்தல்.

அனைவரையும் ஒரே மாதிரியாக சமமாக மதிக்க வேண்டும். சமத்துவம் இருந்தால் தான் சுதந்திரம் ஏற்படும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் அனைவரையும் சமமாக மதிக்கும் எண்ணம் குறைவாகவே உள்ளது.

சாதி, மத, இனமொழி அடிப்படையில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் சமுதாயத்தில் நிகழ்கின்றன. இதை நிறைவேற்றுவது இன்றளவும் சவாலாகவே உள்ளது.

இந்திய நாட்டில் உள்ளவர்கள் எந்த மாநிலத்திலும் சகல உரிமைகளுடன் வாழும் சுதந்திரம் உண்டு என அரசியலமைப்புக் கூறுகிறது. ஆனால் பல்வேறு வடிவங்களில் மாநிலங்களுக்குகிடையே வாழ்பவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது.

**அரசியல் சாசனத்தில் கண்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் எதிர்படும் சவால்கள்**

**i) சுதந்திரம்**

அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவு 14, குடிமக்களின் சுதந்திர உரிமைகளை சட்ட பூர்வமாக்கியுள்ளது அவையாவன:

1) பேச்சுரிமை, கருத்துகளை வெளியிடும் உரிமை.

2) ஆயுதங்களின்றி அமைதியாக ஒன்று கூடும் உரிமை.

3) சுரங்கங்களையும், தொழிற்சாலைகளையும் அமைத்துக் கொள்ளும் உரிமை.

4) இந்தியாவில் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் செல்லும் உரிமை.

5) இந்தியாவில் எப்பகுதியில் வேண்டுமானாலும் தங்கவோ குடியேறி வசித்திடவோ, சொத்துக்கள் வாங்கவோ உள்ள உரிமை.

6) எந்த உயர்தொழில், சிறுவணிகம், வாணிபம் ஆகியவற்றையும் மேற்க்கொள்ளும் உரிமை.

### ii) நீதி

நீதி மன்றங்கள் அணுகி தமது குறைகளைப் போக்கிக் கொள்வது ஏழை எளிய மக்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது. நீதி கிடைப்பதிலும் பெருத்த கால தாமதம் ஏற்படுகிறது. இத்தகைய நிலைக்கு முக்கிய காரணம், மக்கள் தொகைக்கு ஏற்ப, போதுமான நீதிமன்றங்களை ஏற்படுத்திட, அரசின் பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை. தவிர நீதிமன்றங்களில் பணியிடமாற்றிடும் நீதிபதிகளின் எண்ணிக்கையும் தற்போது குறைவாகவே உள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதிகளின் பதவிகள் உடனடியாக நிரப்பப்படாததால் 50%க்கும் அதிகமான நீதிபதி பதவியிடங்கள் காலியாக உள்ளன. இதன் காரணமாக நீதிமன்றங்களில் பல்லாயிரம் வழக்குகள் பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன. செல்வாக்குடையோர் தொடுக்கும் வழக்குகளே முதன்மை பெறுகின்றன. தாமதமாக கிடைக்கும் நீதி, நீதிமறுக்கப்பட்டதாக கொள்ளப்பட வேண்டும்.

### iii) சமத்துவம்:

சட்டத்தின் முன் எல்லோரும் சமம். இனம், சாதி, மதம், மொழி, பாலினம் போன்ற எக்காரணங்களாலும் பாகுபாடு காட்டக்கூடாது என்பது சட்டப்பிரிவு 14. எனினும் பாலினம்

சார்ந்த வேறுபாடுகளை களைய முடியவில்லை. பெண் சிசுக்கொலை பெருமளவு தடுக்கப்பட்டுள்ள போதிலும் வன்கொடுமைச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும் பெண்கள் பலாக்காரம் செய்யப்படுதலும், கௌரவக்கொலைகள் நிகழ்த்தப்படுவதும் குறைந்தபாடில்லை. வேலைவாய்ப்பு, ஊதியம், பதவி உயர்வு போன்றவற்றிலும் ஆண்-பெண் பாகுபாடு இன்றும் நீடிக்கிறது.

வழிபாட்டுத்தலங்களிலும், திருமணம், மனமுறிவு, போன்ற சமூக மரபுகளிலும் அரசு பெரிய மாற்றங்களை கொண்டு வருவதற்கு பழமை விரும்பிகளும், சமயத் தலைவர்களும் தடைக்கற்களாக உள்ளனர். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தபட்ட போதும் சமூகத்தில் தீண்டாமை ஒழியவில்லை. தீண்டாமை பல்வேறு வடிவங்களில் வெளிபட்ட வண்ணம் உள்ளது.

### iv) சகோதரத்துவம்:

மதத்தால், மொழியால் சாதிகளால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் இந்திய சமுதாயம் பிளவுபட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் சக்திகள் வலுபெற்றுள்ளன. குறுகிய நோக்கமும் சுயநலமற்ற தலைவர்கள் குறைந்துபோனதால் மக்களை பிரிவினைச் சக்திகளிடமிருந்து மீட்க முடியவில்லை. சிறிய வன்முறைச் செயல்கள் கூட சாதி, மத, மொழிச்சாயம் பூசப்பட்டு கலகங்களாக மாறுகின்றன. நாமனைவரும் இந்தியா, இந்தியா வாழ்ந்தால் தான் நாம் வாழ முடியும். இந்தியா வீழ்ந்தால் நாம் அழிவோம் என்கிற தெளிவு மக்களிடம் குறைவாக இருப்பதால், சகோதர உணர்வு வளர்வது பாதிக்கப்படுகிறது.

### கல்வி பெறும் உரிமைச்சட்டம் (2009)

இந்திய அரசியலமைப்புச்சட்டம் 21 (ஏ) ன் கீழ் இயற்றப்பட்ட சட்டம். கல்வி பெறும் உரிமைச் சட்டமாகும். 2009, ஆகஸ்டு 4-ம் நாள் இந்திய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 2010, ஏப்ரல் 1 அன்று கல்வி பெறும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் கல்வி பெறும் உரிமைச் சட்டம் இயற்றியுள்ள 135

நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இணைந்துள்ளது. கல்வி பெறும் உரிமைச் சட்டப்படி 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை உள்ளது என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கல்வி பெறும் உரிமைச்சட்டத்தின் முக்கிய கூறுகள்:**

1) கல்வி பெறும் உரிமை சட்டத்தின் படி கல்வியானது அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும்.
2) 6 வயது முதல் 14 வயதுள்ள குழந்தைகள் இலவச கட்டாயக் கல்வி பெறும் உரிமை உள்ளது.
3) கட்டாயக்கல்வி பெறும் உரிமை என்பது 6 முதல் 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், தக்கவைத்தல் ஆகியவை கட்டாயமாகும்.
4) இலவசக்கல்வி என்பது அரசு தொடக்கக் கல்வியை இலவசாக வழங்குதல்.
5) கட்டாயக் கல்வி பெறும் உரிமை சட்டத்தில், மத்திய மாநில அரசுகளின் பொறுப்புகள், கிராமக் கல்விக் குழு, பெற்றோரின் கடமையை வலியுறுத்துகிறது.
6) இது மாணவ ஆசிரியர் விகிதங்கள், கட்டிடங்கள், பள்ளி, வேலை நாட்கள் போன்றவற்றின் விதிமுறைகளை குறிப்பிடுகிறது.
7) கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் படி ஆசிரியர்கள், தேவையான பயிற்சிகள் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
8) பள்ளி மாணவர்க்கான நுழைவுத் தேர்வுகள், ஆசிரியர்க்கான தனியார் வகுப்புக்கள், அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் போன்றவற்றை தடை செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றது.
9) மதிப்புக்களை உள்ளடக்கிய கலைத்திட்டம் குழந்தையின் அறிவுத்திறனை மேம்படுத்துவதாக அமைய வேண்டும் எனக் கூறுகிறது.

**முடிவுரை:**

**இவ்வலகினில் இந்திய அரசியல் சாசன சட்டத் தொகுப்பின் அமைப்பு இந்திய அரசியல் சாசன** முகப்புரையில் **காணப்படும் மதிப்புகள், இந்திய அரசியல் சாசனம் மூத்த குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள், இந்திய அரசியல் சாசனத்தில் விதித்துள்ள குடிமக்களின் அடிப்படைக் கடமைகள், அரசியல் சாசனத்தில் கண்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் சவால்கள், கல்வி பெறும் உரிமைச் சட்டம் ஆகியவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன.**

**விவதாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள்:**

1) **கல்வி பெறும் உரிமைச் சட்டத்தை விளக்குக.**

2) இந்திய அரசியல் சாசனம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை கடமைகளை ஆய்க.

3) கல்வியில் அரசின் கொள்கையை வழிநடத்தும் நெறிமுறைகளை விவாதிக்க.

## அலகு - 4 கல்வியில் சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல் மற்றும் ஒடுக்கப்படுதல்

**நோக்கங்கள்:**

இவ்வலகின் முடிவில் கற்போர் :

1. சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல், ஒடுக்கப்படுதல் போன்ற கருத்துக்களை விவரிப்பர்.
2. சமூகத்திலுள்ள பல வகையான சமவாய்ப்பின்மைகளை விளக்குவர்.
3. சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல், ஒடுக்கப்படுதல் போன்றவை ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வர்.
4. சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வர்.
5. ஒடுக்கப்பட்ட குழுவினரை கல்வியில் சேர்த்து வைக்கும் வழிமுறைகளை விவாதிப்பர்.

**முன்னுரை**

கல்வி கற்பதில் சம உரிமை அனைவருக்கும் உண்டு. கல்வியில் சமவாய்ப்புகள் என்பது சாதி, சமய, இன, மொழி, பாலினம் போன்ற வேற்றுமைகளால் பாதிக்கப்படாமல் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற கல்வி பெறுதல் ஆகும்.

**சமூக சமவாய்ப்பின்மையின் வகைகள்**

**1. பாலின சமவாய்ப்பின்மை**

பாலின வேறுபாடு குறிப்பாக பெண்களின் சமூக நிலை, கல்வியாளர்களுக்கு இடையே மட்டுமல்ல, அரசு நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் போன்ற உலக அமைப்புகளால் விவாதிக்கப்படும் ஓர் முக்கிய பிரச்சினையாக உள்ளது. பிறப்பின்போது ஆண், பெண் ஆகிய இருபாலரும் சமஉரிமை பெற்றிருந்தாலும் பெண்ணாகப் பிறந்தவளுக்குப் பல்வேறு துன்பங்கள் ஒவ்வொரு நிலையிலும் ஏற்படுகின்றன. கல்வி உரிமை ஆண்களுக்கு வழங்கப்படுவது போல் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. சொத்தில் பெண்ணுக்கு உரிமை மறுக்கப்பட்டது. மேலும் பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் ஊதியம் குறைவாக வழங்கப்பட்டு வந்தது. இவை அனைத்தும் பாலின சமவாய்ப்பின்மையை காட்டுகிறது.

**2. இன மற்றும் மரபு சமவாய்ப்பின்மை**

இனம் என்பதற்கு எந்த உயிரியல் தொடர்பும் இல்லாத போதிலும், அது சமூக நிலையை கட்டுபடுத்தும் காரணியாக உள்ளது. இந்த சமவாய்ப்பின்மை ஊதியம் வழங்கும் முறையில் வெளிப்படுத்தப்படுகிறது. இது போன்ற இன வேறுபாடு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு கிடைக்கும் வாய்ப்புகளை குறைத்துவிடுகிறது. இதனால் எண்ணிக்கை

குறைவாக உள்ள சமூகத்தினர் பாகுபடுத்தப்பட்ட செயல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

3. **சாதி சமவாய்ப்பின்மை**

சாதி சமவாய்ப்பின்மை பரம்பரையின் அடிப்படையில் அமைந்த பாகுபாடு நிறைந்த அமைப்பு ஆகும். இந்த சாதி ஒருவரின் வாழ்க்கை நிலை, தொழில் வாய்ப்புகள் இவற்றை தீர்மானிக்கின்றது. தொழில் அடிப்படையில் அமைந்த சாதிப்பிரிவுகள் நாளடைவில் பிறப்பின் அடிப்படையில் மாறத் தொடங்கியது. இந்த சாதி அமைப்பினால் ஒரு இனத்திற்குள் நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்ற வேற்றுமை எழுகிறது.

**சமூக சமவாய்ப்பின்மையை நீக்க உதவும் கல்வி**

இன்றைய அறிவு நிறைந்த உலகளாவிய சமுதாயத்தில் கல்வி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. அது ஒரு நாடு தன் பொருளாதார உற்பத்தியை முன்னேற்றவும் சமூக சமத்துவ நிலையை மேம்படுத்தவும் உதவுகிறது. திறன்மிக்க தலைவர்களை உருவாக்குவதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. மதிப்பு நிறைந்த பொருள்களை உருவாக்கத் தேவையான ஆராய்ச்சி, திறன், அறிவு இவற்றை ஏற்படுத்த கல்வி பயன்படுகிறது.

1. வியாபாரம், தொழில்கள் இவற்றிற்கு தேவையான தொழிற்பயிற்சி அளித்தல்.
2. பகுதிகளின் தேவைக்கேற்ற அறிவு மற்றும் திறன் கொண்ட பணியாளர்களை அமர்த்துதல்
3. உலகளவில் போட்டி போடக்கூடிய ஆராய்ச்சி அறிவு உடையவரை உருவாக்குதல்.
4. கல்விக்கான உரிமை உலகளாவியது. அதில், எந்த ஒரு ஒடுக்கப்படுதலோ பாரபட்சமோ இருத்தல் கூடாது. அனைவரும் கல்வி பெற, வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் சமமான வாய்ப்பை உறுதியாக அளிப்பதில் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**ஒடுக்கப்பட்ட சமுதாயம்**

சமூக, பொருளாதார மற்றும் பிற காரணங்களால் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வரும் மக்கள் ஒடுக்கப்பட்ட மக்களாக கருதப்படுகின்றனர்.

**ஒடுக்கப்படுதலுக்கான காரணங்கள்**

1. **உலகமயமாதல்**: உலகமயமாதல் வெளிப்படைத் தன்மையை அதிகரித்து சமத்துவத்தை பாதித்து வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது உள்ளோருக்கும் இல்லாதோருக்கும் இடையே உள்ள இடைவெளியை அதிகரித்து ஒடுக்கப்படுதலை மேலும் அதிகரித்துள்ளது.

2. **இடப்பெயர்சி:** அரசின் வளர்ச்சிப்பணிகள் மற்றும் வளர்ந்துவரும் வளர்ச்சி திட்டங்கள் உயர்ந்த அளவில் ஏழை, பழங்குடி மற்றும் வலுவற்றோரை இடம் விட்டு இடம் மாறிச் செல்ல வைத்துள்ளது. இது ஒடுக்கப்பட்டவர்களை மேலும் ஒடுக்கப்பட்டவர்களாக மாற்றுகிறது.
3. **பேரழிவுகள்**: இயற்கை மற்றும் எதிர்பாராத பேரழிவுகள் உலகெங்கும் நிகழக்கூடிய வளர்ச்சிக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

**ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சலுகைகள்**

1. விடுதிகளில் தங்கிப் பயில வசதிகள் வழங்குதல்.
2. பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்பு மற்றும் நிலமற்றவர்களுக்கு அரசு நிலம் வழங்குதல்.
3. அரசுப் பணிகளில் குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு வழங்குதல்.
4. கல்வியில் சம வாய்ப்பு வழங்குதல்.

**தாழ்த்தப்பட்டோருக்கான கல்வி**

இந்தியாவில் கிராம, நகர்ப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்டோர் அனைவருக்கும் கட்டாயமாகப் பதினான்கு வயது வரை கல்வி அளிக்கப்படும். துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலிருந்தே உதவித் தொகை அளிக்கப்படும். அதுமட்டுமல்லாது அவர்கள் பள்ளியிலிருந்து விடுபடாதவாறும் கண்காணித்துக் கொள்ளப்படும். எல்லோருக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை அடைந்திடத் தேவையான நிதியை அளித்துப் பல்வேறு செயல் திட்டங்களை அரசு அளித்து வருகிறது. இதன் காரணமாக எழுந்ததுதான் பொதுப் பள்ளிமுறை அமைப்பு (Common School System). இதன் அடிப்படையில்தான் 10+2+3 என்ற கல்விமுறை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அளிக்கப்பட்டது.

**பழங்குடியினருக்கான கல்வி**

பல நூற்றாண்டுகளாகத் தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ளாது வாழ்ந்து வரும் பழங்குடியினர் சில சிறப்பு இயல்புகளைப் பெற்றுள்ளனர். பல குடும்பங்கள் ஒன்றிணைந்து குழுவாக வாழ்தல், பொதுவான பெயர், ஓரிடத்தில் வாழ்தல், தங்கள் திருமணம் மற்றும் தொழில் போன்றவற்றில் குறிப்பிட்ட கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழ்தல் போன்ற பல சிறப்புகள் பழங்குடியினரிடம் காணப்படுகின்றன.

1. இவர்கள் வாழும் பகுதிகளில் தொடக்கப்பள்ளி ஏற்படுத்த முன்னுரிமை, கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவை செய்தல் வேண்டும்.

2. குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உருவாக்கப்படும் கலைத்திட்டமும், கற்பித்தல் நூல்களும், தொடக்கத்தில் அவர்தம் மொழியிலேயே அமைந்திடல் வேண்டும். பிறகே வட்டார மொழிக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட வேண்டும்.
3. அவர்களது சிறப்புத் தேவைகளையும், வாழ்க்கை முறைகளையும் கருத்தில் கொண்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் உருவாக்குதல் வேண்டும்.

**முடிவுரை**

பெரும்பாலான குழந்தைகள் இன்றும் கல்வியிலிருந்து ஒடுக்கப்பட்டுள்ளார்கள். எனவே அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார வாழ்வில் பங்குகொள்ள முடியவில்லை. தற்போதுள்ள கல்வித் திட்டங்கள் ஒடுக்கிவைக்கப்பட்ட நிலையில் உள்ள குழந்தைகளின் தேவைகளை தீர்ப்பதில் தோல்வி அடைந்துள்ளது. சமமின்மையின் அடிப்படை காரணங்களை அறிந்து, சம வாய்ப்புகளை நல்கும் முழுமையான கல்வித் திட்டங்களை அளித்தல் வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. கல்வியில் சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல், ஒடுக்கப்படுதல் போன்ற கருத்துக்களை விளக்குக.
2. கல்வியில் சமவாய்ப்பின்மை, வேற்றுமைப்படுத்துதல், ஒடுக்கப்படுதல் இவைகளின் காரணிகளை ஆராய்க.

**அலகு- 5**

## கல்விக்கான கொள்கை வரைவுகள்: இந்தியாசுதந்திரம் பெறுவதற்கு முன்

### நோக்கங்கள்

**இவ்வலகின் முடிவில் கற்போர்**

1. **வேத காலத்தின் கல்வி முறையை விளக்குவர்.**
2. **பிரிட்டிஷ் ஆட்சியின் கல்வி வளர்ச்சியைப் புரிந்து கொள்வர்.**
3. **கிறிஸ்தவ சமய போதக குழுக்களின் கல்வி பங்களிப்பு பற்றி விவாதிப்பர்.**
4. **ஹண்டர் குழுவின் முக்கிய பரிந்துரைகளை பட்டியலிடுவர்.**
5. **ஆபோட் - வுட் (Abott-wood) அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளை பட்டியலிடுவர்.**

**முன்னுரை**

**இந்திய நாட்டில், கல்வி என்பது இந்திய சமயங்கள், இந்திய கணிதம், இந்திய தர்க்கம் சார்ந்ததாக பண்டைய இந்து பௌத்த கல்வி நிறுவனங்கள் தக்சசீலம், நாலந்தா போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தது. இடைக்கால இந்தியாவில், இஸ்லாமிய கல்வி தத்துவம் பெற்றதாக இருந்தது. பிற்காலத்தில் ஐரோப்பியர்களின் வருகைக்குப்பின்பு மேற்கத்திய கல்வி புழக்கத்திற்கு வந்தது. 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிபாடுகள் இன்றைய இந்திய குடியரசின் கல்விக்கு வித்திட்டதாக உள்ளது.**

**1. வேதகாலத்தின் போது கல்வி**

**பண்டைய இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறை வேத முறை என அறியப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேதங்களை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய கல்வி முறை அமைகிறது எனலாம், அதனால்தான் வேதக் கல்வியின் பெயர் வழங்கப்பட்டது. இந்திய வாழ்க்கையில் வேதங்கள் மிக முக்கியமான இடத்தை ஆக்கிரமித்திருந்தன. ரிக்வேதம், சாமவேதம், யஜுர்வேதம், அதர்வனவேதம் ஆகிய நான்கு எண்ணிக்கையிலான வேதங்களில் இந்திய கலாச்சாரம் அமைந்துள்ளது. சில அறிஞர்கள் வேத கால கல்வியை ரிக் வேத பிராமணிய காலம், உபநிஷத காலம்,**

சூத்ரா காலம், ஸ்மிருதி காலம் என பிரித்தனர், ஆனால் இந்த காலங்களில் வேதங்களின் ஆதிக்கம் காரணமாக, கல்வியின் குறிக்கோள்களிலும், கொள்கைகளிலும் எந்த மாற்றமும் இல்லை. வேத காலத்தின் கல்வி முறை உலகின் வேறு எந்த நாட்டிலும் பண்டைய கல்வி முறையிலும் காணப்படாத தனிச்சிறப்பு மற்றும் குணங்களைக் கொண்டுள்ளது.

### கல்வி நோக்கங்கள்

பண்டைய இந்தியாவில் கல்விக்கான இறுதி நோக்கம், இந்த உலகில் வாழ்வதற்கு அல்லது அதற்கு அப்பால் வாழ்வதற்கான அறிவைப் பற்றியதல்ல, ஆனால் தற்போதைய மற்றும் எதிர்கால வாழ்க்கையின் சங்கதிகளிலிருந்து ஆத்மாவை விடுவிப்பதற்காக தன்னையே முழுமையாக்குவது.

### பாடத்திட்டம்

வேதகாலங்களில் ஆய்வு புராணங்களில் வரும் கதாபாத்திரங்களின் கதைகள், சொற்பொழிவுகள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தன. மாணவர்கள் அளவீட்டைப் பற்றிய அறிவைப் பெற வேண்டிய அவசியம் இருந்தது. கணிதவியல் பற்றிய அறிவு மூலம் எண்கணிதம் கூடுதலாக வழங்கப்பட்டது. ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் ஆகிய வேதங்கள் பற்றிய அறிவை மாணவர்கள் பெற்றனர். பாடத்திட்டமானது ஆன்மீக மற்றும் பொருள்சார் அறிவு, வேதங்கள், வேதம் இலக்கணம், கணிதம், கடவுளின் அறிவு, முழுமையான அறிவு, பேய்கள், வானவியல், தர்க்கம், தத்துவம், நெறிமுறைகள், நடத்தை போன்றவையை உள்ளடக்கியது. இவ்வகையான பாடத்திட்டம் பிராமண இலக்கியங்களை உருவாக்க முழுக்காரணமாக அமைந்தது.

### கற்பித்தல் முறைகள்

மாணவர் மைய கற்பித்தல் அணுகுமுறையை பின்பற்றினர். ஆசிரியரால் விளக்கமளித்து மாணவரால் எழுதப்பட்ட படிப்பு, பொதுவாக பின்பற்றப்பட்டது. விவாதமும் கலந்துரையாடலும் தவிர, தேவைப்படின் கதைகள் சொல்லப்படுகிறது. எந்த வகுப்பறை போதனையும் இல்லை. இருப்பினும், கண்காணிப்பு முறை அதிகமாக இருந்தது மூத்த மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு கற்பிக்க நியமிக்கப்பட்டனர். கல்விக்கான முழுமையான தொடர்பைத் தருவதற்கு பயணங்கள் தேவைப்பட்டது.

### ஆசிரியரின் பங்கு

குரு என்பது இரண்டு வார்த்தைகளைக் கொண்டு உருவானது 'கு' என்ற வார்த்தை “இருள்” என்றும் 'ரு' என்ற வார்த்தை கட்டுப்படுத்துவது என்றும் பொருள். இருள் அல்லது அறியாமையை தவிர்ப்பது என்று இதற்கு பொருள். வேதங்களில் 'ஆச்சார்யா' என்ற சொல் குருவை குறிக்கும். குரு, என்பவர் அறிவின் மிகப்பெரிய பொக்கிஷமாக கருதப்பட்டார்.

கல்வி செயல்முறையில், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இரு கூறுகளாவர். ஒரு ஆசிரியர் தனது மாணவர்களுக்கு உடல், பொருள்சார் மற்றும் ஆன்மீக அறிவை வழங்குகிறார். கல்வி செயல்முறை ஆசிரியர் மையமுறையாக இருந்தது. குரு தனது

மாணவர்களின் ஆர்வத்தையும், தேவைகளையும் பூர்த்தி செய்வார். குரு அவரது மாணவர்களின் ஆன்மீக தந்தை ஆவார். தந்தை தனது மகனை கவனித்துக்கொள்வதைப் போல குருக்களும் அதே முறையில் தங்கள் மாணவர்களை கவனித்துக்கொள்வார்.

சுதந்திரம் மற்றும் ஒழுக்கம்

கல்வி சுதந்திரம் காரணமாக, மாணவர்கள் சிந்தனை மற்றும் தியானத்தில் இருந்தனர்

1. அவர் தனது குருவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். 2. அவன் குருவினால் தண்டிக்கப்படலாம். 3. அவன் குருவினால் விரும்பப்படவேண்டும். 4. அவர் தனது குருவால் போதிக்கப்பட வேண்டும். 5. அவர் சமமாக நடத்தப்பட வேண்டும். 6. அவர் அர்ப்பணிக்கப்பட்ட ஞானத்தை பெற தகுதியுடையவர்.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நடத்தைக்கான விதிமுறைகள் இருந்தன. மாணவர்களுக்கு கடுமையான ஒழுக்க முறைகள், ஆசிரியரிடத்தில் சில கடமைகள் இருந்தன. அவரது பயிற்சி காலம் முடியும் வரை வேறு எவருடனும் வாழக் கூடாது.

2. புத்தமதம் மற்றும் கல்வி

பௌத்த மதத்தை நிறுவியவரான புத்தர் எந்தப் புத்தகத்தையும் எழுதவில்லை. அவருடைய சீடர்கள் அவருடைய மரணத்திற்குப் பின் 100 ஆண்டுகள் கழித்து அவருடைய பிரசங்கத்தை சேகரித்தனர்.

கல்வி நோக்கங்கள்

கல்விக்கான முக்கிய குறிக்கோள், 'இரட்சிப்பு' அடைய வேண்டும் என்பதாகும். புத்தர் 'அஷ்டாங்க மார்க்கம்' என்ற எட்டு மடங்கு பாதையை வடிவமைத்தார். (i) சிறந்த நெறி, (ii) சிறந்த நடவடிக்கை, (iii) சிறந்த பேச்சு, (iv) சிறந்த தொழில், (v) சிறந்த உடற்பயிற்சி, (vi) சிறந்த நினைவாற்றல் (vii) சிறந்த கவனத்திறன் (viii) சிறந்த அறிவுத்திறன்.

பாடத்திட்டம்

புத்தமத கல்வி, இரண்டு நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது: i) ஆரம்ப கல்வி ii) உயர் கல்வி.

ஆரம்ப கல்வியில் வாசிப்பு, எழுத்து மற்றும் கணிதம் கற்பிப்பதை குறிக்கோளாக கொண்டது. உயர் நிலை மாணவர்கள் பல்வேறு பாடங்களை படித்தனர். பௌத்தர்கள் இந்தியாவின் சர்வதேச நிலைமையை உயர்த்தினர். கொரியா, திபெத், ஜாவா மற்றும் பிற தொலைதூர நாடுகளை அவர்கள் கவர்ந்தனர். பௌத்த மடாலயங்களில், சொல்லறிதல், ஓவியம், அச்சிடுதல், சிற்பம், மருத்துவ அறிவு, தர்க்கம் ஆன்மீக கல்வி விளையாட்டு, வில்வித்தை, புவியியல், எண் கணிதம் மற்றும் சமய விவாதங்கள் சேர்க்கப்பட்டது.

கற்பித்தல் முறைகள்

வேத காலத்தின்போது வாய்மொழி முறைகள் பயன்படுத்தப்பட்டது. அனைத்து பாடங்களையும் 'பாலி' மொழியில் கற்பித்தனர். வினா-விடை முறை, விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் முறையான கல்வியைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டன. நேரடி வழிமுறையில், சூத்திர வடிவிலான கற்பித்தல் ஆசிரியர்களுக்கு பேருதவியாக அமைந்தது.

ஆசிரியரின் பங்கு

பௌத்த காலத்தில், ஆசிரியர் 'ஆச்சார்யா' என அழைக்கப்பட்டார். அவர் பக்தியானவர், சமய மற்றும் ஆன்மீகமானவர். ஆசிரியர் பிக்சுக்களுக்கு போதிய அறிவு, ஆன்மீக உதவி, வழிநடத்தல் போன்றவை போதனை மூலமாக வழங்கினார். புத்தரின் எட்டு மடங்கு பாதையை ஆசிரியர் பின்பற்றினார். புத்த மதத்தில், ஆசிரியர்கள் மூன்று தனிப்பிரிவுகளாக இருந்தனர் (i) ஆச்சார்யர்கள் (ii) உபாத்யர்கள் (iii) சிறப்பு ஆசிரியர்கள். இக் காலகட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவுவதில் முக்கிய பங்கு வகித்தனர்.

சுதந்திரம் மற்றும் ஒழுக்கம்

பௌத்தக் கல்வியில், புத்தரின் எட்டு மடிப்பு பாதையைப் பின்பற்றி மாணவர்கள் சிறந்த வாழ்க்கை வாழ எதிர்பார்க்கப்பட்டனர். எந்த தண்டனையும் இல்லை.

3. ஜெய்னிசம் மற்றும் கல்வி

உணர்வு என்பது ஆன்மாவின் சாரம்சமாக இருந்தது. ஜைனா அமைப்பின் படி அறிவு இரண்டு வகைகளாகும்: பிராமணா, நியா. பிராமணா மீண்டும் இரண்டு வகையானது, மறைமுக மற்றும் நேரடி அறிவு. நேரடி அறிவு உணர்வுத்திறன் மூலம் கற்றுத்தரப்பட்டது. நடைமுறை அறிவு மனம் மற்றும் உணர்வுகள் மூலம் பெறப்பட்டன.

கல்வி நோக்கங்கள்:

ஜெயின் அமைப்பானது சுதந்திரத்தினை கல்வியின் இறுதி நோக்கமாக பரிந்துரைத்தது. இந்த முறையின் படி, விடுதலை என்பது இரண்டு வகைகளாகும், அதாவது ஜீவன் முக்தி மற்றும் திராவிய முக்தி. கல்வியானது மாணவர்கள் ஜீவன் முக்தி அடைய உதவி புரிகிறது. அது திராவிய முக்திக்கு வழிவகை செய்யும் சமூக, பொருளாதார, தார்மீக மற்றும் ஆன்மீக நோக்கங்களை வலியுறுத்துகிறது.

பாடத்திட்டம்

ஜெய்ன முறை பாடத்திட்டமானது மாணவர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளை கொண்ட பாடங்களை உள்ளடக்கியது. பாடத்திட்டம் செயல்பாடு மைய அணுகுமுறை கொண்டதாகும். உண்மை கல்வி ஆன்மாவை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது. பல்வேறு நோக்கங்கள், கூட்டுறவு நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு கலாச்சார நடவடிக்கைகள் மூலம் இந்த இலக்கை அடைய முடியும். இதைத் தவிர, பாடத்திட்டமானது தொழிற் கல்விக்கும் வித்திட்டது. ஜைனா பாடத்திட்டத்தில் சமூக அறிவியல், இயற்கை

அறிவியல், தார்மீக கல்வி, தொழிற்கல்வி, பல்வேறு கூட்டு பயிற்சி நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

கற்பித்தல் வழிமுறைகள்

தொழிற் கல்வி மாணவர்களுக்கு நடைமுறை அறிவு, வேலை அனுபவத்தை வழங்குகிறது. மாணவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான பொருளை ஈட்டுவதற்கு வழிவகுத்தது. இவ்வாறு, இந்த முறை சமூகமயமான நுட்பங்கள், சோதனைகள், செய்து கற்றல், ஒருங்கிணைப்பு, முதலியவற்றை வலியுறுத்தியது.

ஆசிரியரின் பங்கு

உயர்ந்த குணங்கள் ஆசிரியர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு ஆசிரியருக்கு தனது தொழிலை வெற்றிகரமாக வைத்திருக்க வேண்டிய சில குறிப்பிட்ட குணங்களை கல்வியில் நவீன புத்தகங்கள் விவரித்தன. அவர் தனது பாடங்களை நன்றாக அறிந்திருக்க வேண்டும், திறம்பட கற்றுத்தர வேண்டும். மேலும் அவருடைய மாணவர்களுக்கு உண்மையான அன்பை அளிக்க வேண்டும். அவர் தனது மாணவர்களை நேசிக்க வேண்டும், அவர்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். அன்பு இல்லாமல் ஓர் ஆசிரியர் தன் மாணவர்களுக்கு மிகச் சிறந்தவராக இருக்க முடியாது. அன்பு, பாசம், மரியாதை இருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் மாணவர்களின் உண்மையான தேவையை அறிந்து அவற்றை நிறைவேற்ற முடியும்.

சுதந்திரம் மற்றும் ஒழுக்கம்

இலட்சியவாத தத்துவத்தைப் போலவே, மாணவர்களுக்கான கடுமையான ஒழுக்கத்தையும் வலியுறுத்தியது. ஒழுக்கமின்றி உண்மையான கல்வியை புகட்ட இயலாது. உண்மையான கல்வியை பெற கோபம், ஆடம்பரம், சோம்பல், நோய் போன்றவை தடையாக உள்ளது. ஜைன தத்துவம், மாணவர்களுக்கு உண்மையான கல்வியைப் பெறுவதற்கான சிறந்த குணங்களை வலியுறுத்தியது.

i) அவர் எல்லா நேரங்களிலும் சிரிக்கக்கூடாது, விடாமுயற்சியுடன் அறிவைப் பெற முயற்சி செய்ய வேண்டும். (ii) அவர் உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். (iii) அவர் நற்பண்புகளை கொண்டவராக இருக்க வேண்டும். (iv) அநாகரீக சொற்களை பயன்படுத்த கூடாது (v) அவர் தனது நடவடிக்கைகளில் நியாயமானவராக இருக்க வேண்டும், (vi) அவர் மனச்சோர்வு அடையக்கூடாது (vii) அவர் சத்தியத்தின் தீவிரமான சீடராக இருக்க வேண்டும்.

4. முகலாய காலத்தில் கல்வி

முஸ்லீம் கல்வி முறையானது மதத்திற்கு முக்கியத்துவம் அளித்தது. இடைக்காலம் முஸ்லீம்களின் வருகையால் தொடங்குகிறது. எனவே, இந்த காலகட்டம் 'முகம்மதியன் காலம்' என்றும் அழைக்கப்படுகிறது. மஹ்மூத் கஸானி, முகம்மது கவுரி, குத்புதின்-ஐபக், இல்துமிஷ், ரஸியா மற்றும் பல்பான், ஷாஜாதா முகம்மது, கில்ஜி கிங்ஸ், துக்ளக் அரசர்கள் ஆரம்பகால முஸ்லீம் மதத்தில் புகழ்பெற்ற அரசர்களாக இருந்தனர்.

முஸ்லீம் கல்வி முகலாய காலத்தில் அதிக ஊக்கம் மற்றும் கவனத்தை பெற்றது. அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான், தாரா ஷிகோ, அரூஜீப், பஹதுர் ஷா ஆகியோர் பிரபல முகலாய மன்னர்களாக இருந்தனர்.

**கல்வி நோக்கங்கள்**

இஸ்லாமிய கல்வியின் இறுதி நோக்கம் முக்திபெறுவதாகும். இஸ்லாமிய பிரச்சாரத்தின் முக்கிய நோக்கங்கள்: (i) இஸ்லாமை பரப்புதல், (ii) பண்பு அறநெறி மேம்பாடு (iii) அறிவு பரவுதல், (iv) இஸ்லாமிய அரசின் விரிவாக்கம், (v) அரசியல் மேம்பாடு.

**பாடத்திட்டம்**

தொடக்கநிலை கல்வியில் பாடத்திட்டமானது 3'R' கொண்டிருந்தது. அதாவது, - எழுத்து, எண்கணிதம், படித்தல். உருது படிப்பு முக்கிய பாடங்களில் ஒன்றாக உருவானது. சமய வழிமுறைகளும் தொடக்க நிலையில் கொடுக்கப்பட்டன. இரண்டாம் நிலை மட்டத்தில், இலக்கணம், இயற்கை அறிவியல், வரலாறு, வானவியல், இராணுவ கல்வி போன்றவை மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டன.

**வழிமுறைகளின் முறைகள்**

இடைக்காலத்தில், வாய்வழி முறை, கண்காணிப்பு முறை, விரிவுரை முறை, படித்தல் மற்றும் எழுதுதல், சுய ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை, தூண்டல் முறை, சோதனை முறை போன்றவை கற்பிக்கும் வழிமுறைகளாக பயன்படுத்தப்பட்டது.

**ஆசிரியரின் பங்கு**

இடைக்காலத்தின்போது ஆசிரியர் மிகுந்த மரியாதைக்கு உட்பட்டிருந்தார். ஆசிரியருக்கும் போதனைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆசிரியர்களின் கட்டளைகளை மாணவர்கள் பின்பற்றி வந்தனர். மாணவர்கள் மதத்தில் சிறந்த அறிவைப் பெற்றனர்.

**5. கல்விக்கான கிறிஸ்தவ சமயத்தின் பங்களிப்புகள்**

கிரிஸ்துவ சமயத்தினர் இந்தியாவின் கல்வி நிறுவனத்துடன் இணைந்தனர். அவர்கள் செரம்போரில் தங்கள் மையத்தை அமைத்தனர். அவர்கள் செரம்போரிலிருந்து தங்கள் கல்வி நடவடிக்கைகளை இயக்கியுள்ளனர். 1725 ஆம் ஆண்டில், ஐரோப்பிய கிறிஸ்துவ மதத்தினர் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பதினேழு பள்ளிகள், கிறிஸ்தவர்களுக்கு நான்கு மிஷனரி பள்ளிகள் நிறுவினர். 1804 ஆம் ஆண்டில், லண்டன் மிஷனரி சிலோன், தென் இந்தியா, பெங்களூரில் ஆங்கில பாடசாலைகள் நிறுவியது. மிஷனரிகள் இந்தியாவில் கல்விக்காக மதிப்புமிக்க சேவையை அளித்தனர். 1818 ஆம் ஆண்டில் முதல் மிஷனரி கல்லூரி செரம்போரில் நிறுவப்பட்டது, 1820 ல் கல்கத்தாவில் பிஷப் கல்லூரி நிறுவப்பட்டது.

**6. கல்விக்கான கிழக்கு இந்தியா கம்பெனி பங்களிப்பு**

1698 ஆம் ஆண்டினல் கிழக்கு இந்தியா கம்பெனி சார்ட்டர் நிறுவனம், செட் மேரி அறக்கட்டளை பள்ளிகளுக்கு 1715 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் துவங்கப்பட்ட நிறுவனங்களை பராமரிப்பதற்காக நிறுவனத்தை இயக்கியது. கிழக்கு இந்தியா நிறுவனத்தின் அதிகாரிகளும் கல்வி பரவலுக்கு முக்கிய பங்கைக் கொண்டிருந்தனர். 1781 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் கவர்னர்-ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ், அரேபிய மொழி மூலம் முஸ்லீம்களின் மகன்கள் படிப்பதற்காக 'கல்கத்தா மதராசாவை நிறுவினார். வாரன் ஹேஸ்டிங்ஸ் உதவியுடன் சர் வில்லியம் ஜோன்ஸ், வங்காள ராயல் ஆசியாடிக் சொசைட்டி கல்கத்தாவில் நிறுவப்பட்டது. 1816 ஆம் ஆண்டில், இந்து கல்லூரி நிறுவப்பட்டது மற்றும் 1817 ஆம் ஆண்டில் புகழ்பெற்ற பிரசிடென்சி கல்லூரி உருவாக்கப்பட்டது.

**சார்ட்டர் சட்டம் (1813)**

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் 1813 ஆம் ஆண்டில் சாசனம் இயற்றப்பட்டது, இதன் மூலம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை அங்கீகரித்தது. இது 1823 ஆம் ஆண்டில், ஒரு லட்சம் ரூபாயிலிருந்து, கொல்கத்தா பள்ளி புத்தக சங்கம் மற்றும் கல்கத்தா பள்ளி சங்கத்திற்கான மானியங்கள் வழங்கப்பட்டது. 1824 ஆம் ஆண்டில் இரண்டு சமஸ்கிருத கல்லூரிகளும் நிறுவப்பட்டன, 1824 இல் கல்கத்தாவில் ஒன்றும் 1825-ல் டெல்லியிலும் ஆரம்பிக்கப்பட்டது. 1835-க்கு முன்பு மூன்று வகையான பள்ளிகள் இருந்தன. அவை: (i) வெர்னாகுலர் பள்ளிகள் (ii) கிறிஸ்டியன் மிஷனரி பள்ளிகள் மற்றும் (iii) கிழக்கு இந்திய கம்பெனி பள்ளிகள். சமஸ்கிருதம், அராபிக் மொழி வாயிலாக கற்பித்தலுக்கு பதிலாக ஆங்கில மொழி வாயிலாக கர்பித்தலையே மக்கள் விரும்பினர்.

**இந்திய கல்வி கமிஷன் (1882)**

கல்வி முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய 1882- ல் W.W. ஹண்டர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. இக்குழு அதன் அறிக்கையை 1883 இல் சமர்ப்பித்தது. அதன் முதன்மை பரிந்துரைகள் பின்வருமாறு:

A) தொடக்க கல்விக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அரசு, தொடக்க கல்வித் திட்டத்தை மாவட்ட மற்றும் மாநகராட்சி வாரியங்களுக்கு ஒப்படைக்க வேண்டும். அவற்றின் செலவில் மூன்றில் ஒரு பங்கை அரசாங்கம் ஏற்க வேண்டும்.

B) இரண்டு வகையான உயர்நிலைப் பள்ளிகள் நிறுவப்பட வேண்டும் பல்கலைக்கழகத்தின் நுழைவு பரீட்சைக்கு வழிவகுக்கும் இலக்கிய கல்வியையும், தொழிற்கல்வியும் வழங்க வேண்டும்.

**ஹார்டாக் குழு (1929)**

1929-ல், ஹார்டாக் குழு அறிக்கை அளித்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் கல்வி வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்ய இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இது இரண்டாம் நிலை மற்றும் பல்கலைக்கழக கல்வி விட வெகுஜன கல்விக்கு மிகுந்த கவனம் செலுத்தியது. நாட்டில் குறைவான எழுத்தறிவு வளர்ச்சியையும், தொடக்கநிலை கல்வியில்

காணப்படும் 'தேக்கம்' மற்றும் 'கழிவு' என்ற பிரச்சினையை எடுத்து காட்டியது. பள்ளி படிப்பை நிறைவு செய்வதற்கு முன்பாக மாணவர்கள் தங்கள் பள்ளிகளை விட்டு வெளியேறுவதால் பணம் மற்றும் முயற்சிகள் பெருமளவில் வீணாகிவிட்டதாக கருதினர். தொடக்க கல்வி முன்னேற்றத்திற்கு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகளை அது பரிந்துரைத்தது.

I. பள்ளிகளின் பெருக்கத்திற்கு ஏற்ப கொள்கையை ஏற்றுக்கொள்ளல்.

II. நான்கு ஆண்டுகாலம் தொடக்க கல்வி.

III. தரம், பயிற்சி, ஊதியம், ஆசிரியர்களின் சேவை நிலை ஆகியவற்றில் முன்னேற்றம்.

IV. குழந்தைகள் வாழும் மற்றும் படிக்கும் கிராமங்களின் நிலைமைகளுக்கு ஏற்ப பாடசாலையின் பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் வழிமுறைகள் அமைய வேண்டும்.

V. அரசாங்க ஆய்வு பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

எனவே மாணவர்களின் பெரும்பாலான தேவைகளை பூர்த்தி செய்யும் நடுத்தரப் பள்ளிகளை அறிமுகப்படுத்தப்படுவதற்கு இக்குழு பரிந்துரைத்தது. மேலும், தொழில் மற்றும் வர்த்தக தொழில்களுக்கு பரிந்துரைத்தது. தவிர, பல்கலைக்கழக கல்வி, பெண்கள் கல்வி, சிறுபான்மையினர் கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் முன்னேற்றம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இக்குழு பரிந்துரைத்தது.

**கல்வி வார்தா அமைப்பு (1937)**

கல்வி வார்தா திட்டம் எம்.கே. காந்தி அவர்களால் 1937 இல் கொண்டு வரப்பட்டது டாக்டர் ஜாகீர் ஹுசைனின் தலைமையில், ஒரு தற்காலிக மற்றும் விரிவான பாடத்திட்டம் கட்டமைக்கப்பட்டது. அதன் முக்கிய அம்சங்களான:

I. ஏழு ஆண்டுகளுக்கு அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்கப்பட வேண்டும்.

II. போதனை மொழி தாய் மொழியாக இருக்க வேண்டும் கல்வி என்பது ஓரளவிற்கு தன்னை ஆதரிக்க வேண்டும்.

III. ஒரு நல்ல குடிமகனின் கடமைகளையும் பொறுப்பையும் குழந்தை அறிய உதவ வேண்டும்.

IV. கல்வியைப் புரிந்து கொள்ளவும், வாழ்க்கையின் பிரச்சினைகளை தீர்க்கவும் குழந்தைக்கு கல்வி உதவி செய்ய வேண்டும்.

V. கல்வி கொள்கை அடிப்படையானது "கற்கும் போது சம்பாதித்தல் சம்பாதிக்கும் போது கற்பது".

**ஆபோட் - வுட் (Abott-wood) அறிக்கை (1936-37)**

இந்தியாவில் போதுமான மற்றும் சரியான தொழிற்பயிற்சி கல்வியின்மை நிலவுவதாக பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கையை எழுப்பினர். ஆகையால், 1936-37இல் இந்திய அரசு இரண்டு பிரிட்டிஷ் வல்லுநர்களை அழைத்து தொழில்சார் கல்விக்கான திட்டத்தை வடிவமைக்க வலியுறுத்தியது. இந்த இரண்டு வல்லுநர்கள் A. Abott மற்றும் S.H. WOOD. பஞ்சாப், தில்லி மற்றும் உத்திரபிரதேசத்திற்கு இந்த இரு நபர்களும் பயணித்து நான்கு மாதங்களுக்குள் தொழிற்துறை கல்வியைப் பற்றி ஒரு அறிக்கையை தயாரித்தனர். இந்த அறிக்கை விரிவான அல்லது வெற்றிகரமாக இல்லை. இந்த அறிக்கையின் அடிப்படையில், 1944 ஆம் ஆண்டின் சார்ஜன்ட் அறிக்கை வெளியானது.

1. தொழிற்கல்வி பல்வேறு தொழிற்பாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட வேண்டும். எந்த தொழிற்துறை பகுதியும் குறைவாக மதிப்பிடக்கூடாது.

2. தொழிற்துறை கல்வி இலக்கிய மற்றும் விஞ்ஞான கல்வியுடன் சமமாக கருதப்பட்டு அதன் தரநிலை உயர்த்தப்பட வேண்டும்.

3. பொது மற்றும் தொழிற்கல்விக்கு தனித்தனி பள்ளிகளை நிறுவ வேண்டும்.

4. சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள திறமையான தொழிலாளர்களுக்கு சரியான தொழிற்பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

5. ஒவ்வொரு மாகாணத்திலும் தொழிற்கல்வி மற்றும் பல்வேறு பிற தொழில்களுக்குமிடையே ஆரோக்கியமான உறவை மேம்படுத்துவதற்கான ஒரு தொழில்சார் கல்வி ஆலோசகர்களின் சபை நிறுவப்பட வேண்டும்.

6. தொழில் கல்விக்கான இரண்டு வகையான பள்ளிகள் இருக்க வேண்டும். முதலாவது இளநிலை தொழிற்கல்வி பள்ளி மற்றும் இரண்டாவது மேல்நிலை தொழிற்கல்வி பள்ளியாக இருத்தல் வேண்டும். VIII-ம் வகுப்புக்குப் பின் உயர்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி மூன்று ஆண்டுகளுக்கு வழங்க வேண்டும். XI-ம் வகுப்புக்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் தொழில்சார் கல்வியாண்டுகள் இருக்க வேண்டும்.

7. தொழில்சார் பயிற்சியின் போது சான்றிதழை வழங்குவது மட்டுமின்றி தொழில்சார் பயிற்சியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தரத்தை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

8. முடிந்தவரை, தொழிற்கல்வி மையங்கள் அருகே தொழிற்கல்வி பள்ளி நிறுவப்பட வேண்டும்.

9. பல்வேறு இடங்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பகுதி நேர வகுப்புகள் திறக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் வாரத்திற்கு 2-1 / 2 நாட்களுக்கு தொழில்சார் பள்ளிகளில் பயிற்சியளிக்கப்பட வேண்டும், இந்த 2-1 / 2 நாட்களுக்கு முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும். பகுதி நேரப் பள்ளிகளில், பகல் நேரத்தில் பயிற்சி அளிக்க வேண்டும்.

10. பெரிய நகரங்களிலும், பெரிய தொழிற்பயிற்சி மையங்களிலும் அரசு நிறுவனங்களை திறக்க வேண்டும்.

**முடிவுரை**

இந்திய கல்வி முறை ஒவ்வொரு இந்திய குடிமகனின் ஆரம்ப காலங்களிலிருந்து பல உயர்வையும் தாழ்வையையும் கடந்து வந்துள்ளது. மிகப் பெரிய மாற்றங்களும் அபிவிருத்தியும், முக்கியமாக சுதந்திரத்திற்கு முந்தைய அல்லது பிரிட்டிஷ் சகாப்தத்தில் நிகழ்ந்தன. அவற்றில் சில தற்போது கல்வித் துறையில் தொடர்கின்றன.

**விவாதத்திற்கும் சிந்திப்பதற்குமான வினாக்கள்:**

1. வேத கல்வியின் முக்கிய அம்சங்களை விவரிக்க.

2. பௌத்த கல்வியின் கல்வி நோக்கங்களை விளக்குக.

3. இந்தியாவில் கிறிஸ்தவ மிஷனரிகளின் கல்வி பங்களிப்புகளை ஆராய்க.

4. அடிப்படை கல்வியின் முக்கிய அம்சங்களை விவரிக்க.

5. தொழிற்கல்வி பற்றிய ஆபோட் - வுட் (Abott-wood) அறிக்கையின் முக்கியத்துவத்தை விளக்குக.

## அலகு -6 கல்விக்கான கொள்கை வரைவுகள் : இந்தியா சுதந்திரம் பெற்றபின்

**நோக்கங்கள்**

**இவ்வலகின் முடிவில் கற்போர்**

1. கோத்தாரி கமிஷனின் முக்கிய அம்சங்களை விளக்குவர்.
2. தேசிய கல்விக் கொள்கை (1986)-ன் பரிந்துரைகளை அறிந்து கொள்வர்.
3. தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு (2005)-ன் முக்கிய அம்சங்களை தெரிந்துகொள்வர்
4. தேசிய அறிவுசார் ஆணையத்தின் அம்சங்களை விமர்சிப்பர்.

**முன்னுரை**

இந்த அலகில் கோத்தாரிக் கல்விக்குழுவின் முக்கிய பரிந்துரைகள் (1964-66) ஈஸ்வர்பாய் படேல் கமிட்டி (1977), மால்கம் ஆதிசேஷையா கமிட்டி (1978), புதியகல்வி கொள்கை (1986), செயல்திட்டம் (1992) சச்சார் கமிட்டி (2005), தேசியக் கலைத்திட்ட வரைவு (2005) ஆகியவற்றின் முக்கிய அம்சங்களைப் பற்றி விரிவாகக் காண்பதோடு கற்பித்தல் அணுகுமுறைகளையும் பல்வேறு கல்விக்குழுவின் முக்கிய பரிந்துரைகளையும். விரிவாக காணலாம்.

**கோத்தாரி கமிஷன் (1964-1966)**

- D.S கோத்தாரி ஜீலை 6, 1906-ல் ராஜஸ்தானில் உள்ள உதயப்பூரில் (Udaipur) பிறந்தார்
- 1928-ல் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் முதுகலை பட்டம் பெற்றார்.
- முனைவர் பட்டத்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் எர்னஸ்ட் ரூதர்போர்டு மேற்பார்வையின் கீழ் முடித்தார்.
    - 1934-1961 வரை டெல்லி பல்கலைக் கழகத்தில் இயற்பியல் துறையில் பேராசிரியர் & துறை தலைவர் போன்ற பல்வேறு பதவிகளை வகித்தார்

- 1948-1961 வரை பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிவியல் ஆலோசகராக பதவி வகித்தார்.

**சாதனைகள் & விருதுகள்**

- 1963ல் இந்திய அறிவியல் காங்கிரசின் தலைவராக பதவி வகித்தார்.
- 1973 இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் தலைவரானார்
- 1962ல் பத்மபூசன் விருதும், 1973 பத்மவிபூசன் விருதும் வழங்கப்பட்டது.
- 2011ல் D.S கோத்தாரியை கௌரவிக்கும் விதத்தில் தபால் துறை அவரது அஞ்சல் தலையை வெளியிட்டது.

**கோத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகள்**

இந்தியக் கல்வியின் அனைத்து நிலை மற்றும் அனைத்து வகையான தொடர்பான பிரச்சினைகளை குறிப்பாக மேனிலைப் பள்ளிக் கல்வி தொடர்பானவைகளை நன்கு ஆராய்ந்து தெளிவுபடுத்தியது கோத்தாரிக் கல்விக் குழுவாகும்.

**கல்வி அமைப்பு**

1. தொடக்கப் பள்ளிக்கு முன் உள்ள கல்வி நிலை முன் தொடக்கக் கல்வி நிலை ஆகும். இது கட்டாயமில்லை. ஆனால், இதற்கான வாய்ப்புக்களையும் நிதி உதவியையும் அரசு அளிக்கும். இது சுமார் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கலாம்.
2. 5 வயது முடிந்தபின் முறைப்பட்ட கல்வி தொடங்கும் நிலை தொடக்கக் கல்வி நிலை ஆகும். இது 7 முதல் 8 ஆண்டுகள் நீடிக்கலாம். இது இரு பிரிவுகளைக் கொண்டிருக்கும். கீழ்த்தொடக்க நிலை 4-5 ஆண்டுகள் (1முதல் 4-5 வகுப்புகள் உயர் தொடக்க நிலை 2-3 ஆண்டுகள் (5-6 வகுப்பு, முதல் 7-8 வகுப்பு வரை) உடனடியாக கீழ்த் தொடக்க நிலைக் கல்வி இலவசமாக்கப்பட வேண்டும். உயர் தொடக்க நிலைக் கல்வியும் குறிப்பிட்ட காலத்துக்குள் இலவசமாக்கப்பட வேண்டும்.
3. பள்ளிக் கல்வியின் அடுத்த இரு ஆண்டுகள் (16 வயது முதல் 18 வயது வரை) மேனிலைக் கல்வி நிலை எனப்படும். இது உயர் கல்விக்கும், உயர் தொழிற்கல்விக்கும் மாணவர்களை ஆயத்தப்படுத்தும் நிலையாக அமையும்.

4. மேனிலைக் கல்வியில் உயர் கல்விக்கு இட்டுச் செல்லும் பிரிவு என்றும், தொழிற்பிரிவு என்றும் இருபிரிவுகளை ஏற்படுத்தி, ஒவ்வொன்றிக்கும் 50% இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இதன் விளைவாக முதலியார் கல்விக் குழுவின் பரிந்துரையினடிப்படையில் கல்லூரிகளில் செயற்பட்டு வந்த ஓராண்டு புதுமுக வகுப்பு, மேல்நிலைப் பள்ளியின் 11-ஆம் வகுப்புடன் இணைக்கப்பட்டது. மேல்நிலைக் கல்வி +2 வகுப்புகளாக மாற்றம் பெற்றுள்ளது.

5. உயர்கல்வி (Higher Education) [18 வயது முதல் 21 வயது வரை 3 ஆண்டு பட்டப்படிப்பு அல்லது தொழில் படிப்பு ஆகும்.

6. 21 வயது முதல் 23 வயது வரை இரண்டாமாண்டு முதுநிலைப் பட்டப்படிப்பு அமைக்கப்பட்டது.

நாடு முழுவதும் 10+2+3 என்ற ஒரே விதமான கல்வியமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோத்தாரிக் கல்விக் குழு பரிந்துரைத்தது.

**10+2+3 கல்வியின் தன்மைகள்**

1. **பத்தாண்டுப் பொதுக் கல்வி**: அனைத்து மாணவர்களும் முதலில் பெறுகின்ற பத்தாண்டுக் கல்வி பொதுவானதாக இருத்தல் வேண்டும் (இதில் முதல் 5 ஆண்டுகள் தொடக்கக் கல்வியில் அடங்கும்) இங்கு மாணவர்கள் அறிவியல், கணக்கு, மொழி, சமூக அறிவியல், விளையாட்டு போன்ற பாடங்களைப் பயிலுவர்.

2. **ஈராண்டு மேனிலைக் கல்வி:**

இருவகையான கல்வித் திட்டம் உள்ளது.

1. கல்வி சார்ந்தது
2. தொழில் சார்ந்தது

மேனிலைக் கல்வியில் பொதுக் கல்விப் பாடம் எடுத்தப் பயின்றவர்கள் கல்லூரியில் சேர்ந்து பயிலலாம்.

**நாட்டிற்கான பொதுக் கல்வி அமைப்பின் அவசியம்**

நாட்டு மக்களை ஒன்றுபடுத்தும் வலுமிக்க சக்தியாகக் கல்வி செயல்பட வேண்டுமாயின் நம் நாட்டிலுள்ள கல்வி முறை பொதுவான ஓர் அமைப்பினைக் கொண்டிருத்தல் அவசியம்.

- நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற மனப்பான்மை உருவாக்கிட, நாட்டிற்கான பொதுக்கல்வி அமைப்புத் தேவை.

- கல்வி கற்பதில் சமத்துவத்தை நிலைநாட்டிட அனைவருக்கும் ஒரே மாதிரியான அடிப்படைக் கற்றல் திறன்களை வளர்த்தல் அவசியம். இதற்கு பொதுக் கல்வியமைப்பு மிகவும் தேவை.

- நாட்டின் பல்வேறு பகுதியினரின் கல்வித்தரம் ஒரே சீராக அமைவதற்கும், மாணவர் ஒரு பகுதியலிருந்து எளிதாகப் பிறபகுதிகளுக்குச் சென்று கல்வி கற்கவும் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பு இருத்தல் அவசியம். எனவே தான் கோத்தாரிக் கல்விக் குழு 10+2+3 என்று பொதுக் கல்வி அமைப்பை பரிந்துரை செய்தது.

**தேசியக் குறிக்கோள்களும், அவற்றை கல்வியின் மூலம் அடையும் வழி முறைகளும்**

இக்குறிக்கோள்களை அடைவதற்கு கல்வியை கீழ்கண்டவாறு மாற்றியமைக்க கோத்தாரிக் கல்விக் குழு பரிந்துரைத்தது.

1. கல்வியை உற்பத்தியுடன் இணைத்தல் இதற்கான வழிமுறைகள்

✓ கல்வியின் அனைத்து நிலைகளிலும், விஞ்ஞானத்திற்க்கு கல்விக்குழு முக்கியத்துவம் அளித்தல்.

✓ தொழில் அனுபவம் அனைத்து நிலைகளிலும் கல்வியின் அங்கமாக, தொழிற்பயிற்சியும், வேலை அனுபவங்களும் வலியுறுத்தப்பட வேண்டும்.

✓ இடைநிலைக் கல்வியை தொழிற்சார்புடையதாக ஆக்குதல்.

✓ உயர்கல்வி நிலையில் வேளாண்கல்வி, தொழிற்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

2. சமூக, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வலுப்பெறச் செய்வதற்கான வழிமுறைகளாவன:

- தேசிய பொதுக்கல்வி அமைப்புமுறையை ஏற்படுத்தல் .

- நாடெங்கும் தரமான பொதுப்பள்ளிகளை ஏற்படுத்துதல்.

- சமூகப் பணிகள் சமுதாய வளர்ச்சிக்கான பணிகள், நாட்டுநலப்பணிகள் ஆகியவற்றில் தங்களது திறனுக்கு ஏற்ப பங்குபெற மாணவர்களுக்கு பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி நிலைகளில் வாய்ப்புகளை அமைத்துத் தருவது அவசியம்.

- தேசிய மொழிக் கொள்கையை உருவாக்கி செயற்படுத்தல்.

- நாட்டுப்பற்றையும், தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்த்திடும் செயல்முறைகளுக்கு கல்வியில், போதிய முக்கியத்துவம் அளித்தல்.

**3. நவீனமாக்குதலைப் துரிதப்படுத்துதல்**

- நவீன சமுதாயத்தில் அறிவு மிக வேகமாகப் பரவுவதோடு, சமூக மாற்றங்களும் வேகமாக ஏற்படுகின்றன. இதைத் தோற்றுவிக்கும் வகையில் கல்வியும் மாற்றியமைக்கப்பட வேண்டும். கல்வி என்பது மாணவர்களுக்கு செய்திகளையும் தகவல்களையும் அளிப்பதை முதன்மைச் செயல்முறையாகக் கொண்டிராமல் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டி எதையும் ஆராய்ந்து பார்க்கும் மனப்பான்மையையும், செய்திறன்களையும் உருவாக்கிடுவதாகவும், அமைதல் வேண்டும்.

- அறிவார்ந்த சமூகமாக மாற்றவதே நவீனமயமாக்குதலுக்கு அடித்தளமிடுவது ஆகும்.

4. சமூக, ஆன்மீக மற்றும் அறநெறி மதிப்புகளைப் பேணுவதன் மூலம் மாணவர்களிடம் ஒழுக்க நெறிகளை வளர்ச்சியடையச் செய்தல்

    ✓ பாட அட்டவணையில் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பாடவேலைகள் இதற்கென ஒதுக்கப்படுவது, கற்பித்தலுடனும் இணைக்கப்படுவது இன்றியமையாதது.

**வகுப்பறைச் செயல் முறைகளில் சீர்திருத்தம்**

✓ கல்வி ஏற்பாட்டினை சீர்திருத்தும் முயற்சியுடன் கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் பழக்கம் பள்ளிகளிடையே பரவ வேண்டும்.

✓ உற்சாகமுள்ள தலைமையாசிரியர்கள், பாடப்புலமை பெற்ற ஆசிரியர்கள், கற்பித்தல் துணைக்கருவிகள் ஆகியன யாவும் கற்பித்தல் முறையின் சீர்திருத்தத்திற்கு

இன்றியமையாதனவாகும். ஆசிரியருக்குப் பணியிடைப் பயிற்சியளித்தலும் புதிய முறைகள் பள்ளிகளில் பயனுள்ள வகையில் செயற்பட உதவுவதாகும்.

- ✓ வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல் ஆகியன கல்வியில், இன்றியமையாப் பகுதிகளாகும்.
- ✓ இலக்கணப் பயிற்சி, ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
- ✓ புதிய மதிப்பீட்டு முறைகள் உதவி கொண்டு எழுத்துத் தேர்வின் நம்பகத்தன்மை உயர்த்தப்பட வேண்டும். மாணாக்கரது ஆளுமை வளர்ச்சியின் பிற கூறுகளை மதிப்பிடுதலும் தேவைப்படுவதாகும்.

**ஈஸ்வர்பாய் படேல் கல்விக்குழு - 1977**

ஈஸ்வர்பாய் படேல் குஜராத் பல்கலைகழகத்தின் துணைவேந்தராக இருந்தார். இவரது தலைமையின் கீழ் 1975-76ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரித்த 9 மற்றும் 10ஆம் வகுப்பு பாடப்புத்தங்களை மீளாய்வு செய்து வேலை அனுபவத்தை பாடத்துடன் இணைப்பதற்காக 1977ஆம் ஆண்டு இக்கல்விக் குழு அமைக்கப்பட்டது.

**ஈஸ்வரபாய் படேல் கல்விக்குழுவின் பரிந்துரைகளில் சமூகத்திற்கு பயன்படும் ஆக்கமுள்ள செயல்பணி – விளக்கம்**

இக்குழுவானது பள்ளிக்கல்வியின் கலைத்திட்டத்துடன் சமூகத்திற்கு பயன்படும் ஆக்கமுள்ள செயல்பணியை எவ்வாறு ஒருங்கிணைந்த பகுதியாக இணைப்பது என்று பரிந்துரை செய்தது. மேலும் இவ்வகையான செயற்பணிகள் மற்ற பாடங்களில் மேற்கொள்ளப்படும் அடைவுத்திறனை மதிப்பீடு செய்வது போல் மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது. பின்வருமாறு இந்தப் பரிந்துரைகளைப் பட்டியலிடலாம். இப்பரிந்துரைகளோடு சமூகத்திற்கு பயன்படும் ஆக்கமுள்ள செயல்பணி என்றால் என்ன என்பதையும் இக்குழு பின்வருமாறு வரையறுத்துள்ளது. சமூகத்திற்கு பயன்படும் ஆக்கமுள்ள செயற்பணி என்பது பயனுடையதும் பொருளுடையதுமாகிய உடலுழைப்புடன் கூடிய பணி அல்லது வேலை என்று கூறலாம். இது மாணவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக அமைந்து ஒரு சமூக சேவையாக இருந்து பொருள் உற்பத்தியை செய்கிறது என்று வரையறை செய்யப்படுகிறது.

மேற்கண்ட வரையறையின்படி மாணவர்களுக்கு ஒரு பணி அல்லது வேலையை இயந்திரத்தனமாக செய்யாமல் அதன் நுட்பங்களை புரிந்து கொண்டு அதை கல்வியின் நோக்கத்தோடு இணைத்து அறிவு பூர்வமாக அந்தப் பணியைச் செய்தலை புரிய வைத்தல், இதன் நோக்கமாகும் என்று கூறலாம்.

**பரிந்துரைகளின் நோக்கங்களின் விளக்கம்**

1. உடலுழைப்புடன் சமூகத்திற்கான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களை மாணவர்களுக்கு தெரியவைத்து உடலுழைப்பின் மேன்மையை மதிக்கும் மனப்பான்மையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
2. சமுதாய சேவை செய்யும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.
3. சமுதாய முன்னேற்றத்திற்காக தன்னால் இயன்ற பணியினை செய்து பயன்மிக்க சமுதாய உறுப்பினராக இருப்பதை வளர்த்தல் வேண்டும்.
4. சமுதாயத்துடன் கூட்டுறவுடன் இணைந்து செயல்பட்டு உடலுழைப்பின் மேன்மை, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை, கருணை மற்றும் பிறருக்கு உதவும் மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்.
5. சமுதாயத்தின் பல்வேறு தொழில்களின் தொழில்நுட்பங்களை மாணவர்களுக்கு அறியச் செய்தல் வேண்டும்.
6. தொழில் திறமையை மேம்படுத்துவதோடு மாணவர்கள் பயிலும் போதே செய்யும் தொழிலின் வாயிலாக பொருளீட்டும் திறனை வளர்க்க வேண்டும்.
7. பிரச்சினைக்குத் தீர்வு காணும் திறன் மற்றும் ஆக்கசிந்தனையுடன் கூடிய படைப்பாற்றல் திறனை மேம்படுத்துதல் வேண்டும்.

**சமூகத்திற்குப் பயன்மிக்க ஆக்க செயற்பணிகளை தெரிவு செய்வது பற்றிய விளக்கம்**

சமூகத்திற்கு பயன்மிக்க ஆக்க செயற்பணிகளை பின்வருவனவற்றை கவனத்தில் கொண்டு தெரிவு செய்ய வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கிறது.

1. இச்செயற்பணியானது மாணவர்களது உடல், மனவளர்ச்சி, மேம்பாட்டுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

2. கற்பவரின் ஒட்டுமொத்த ஆளுமையை மேம்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

3. பிரச்சினைக்கு தீர்வு காணும் திறனை வளர்த்து ஆக்கசிந்தனையைத் தூண்டும் வகையிலும் இச்செயற்பணி அமைய வேண்டும்.

4. மாணவர்களுக்கு உடலுழைப்பின் மாண்பினை உணர்த்துவதாக இருக்க வேண்டும்.

5. மாணவர்களை உளவியல் அடிப்படையில் ஊக்குவித்து அவர்களது தன்னம்பிக்கையை வளர்க்கும் முறையில் அமைக்க வேண்டும்.

6. ஒரு தொழில் பற்றிய நுட்பங்களையும் அதை மேற்கொள்வதற்கான செய்திறன்களையும் மேம்பாடு அடையச் செய்வதாக இருக்க வேண்டும்.

7. வகுப்பறையில் சிறு சிறு குழுவாக இணைந்து செயல்பட்டுக் கற்பதற்கு உதவ வேண்டும்.

8. ஒரு தொழிலைத் தெரிவு செய்து அதை தன்னிச்சையாகப் செயல்படுத்தும் திறனை பெற உதவ வேண்டும்.

**சமூகத்திற்குப் பயன்மிக்க செயற்பணிகளை கற்பிக்கும் முறைகள் பற்றிய பரிந்துரைகள்**

1. மாணவர்களுக்கு முதலில் எந்த தொழிலை கற்கலாம் என்கின்ற விளக்கங்களைத் தெரிவிக்க வேண்டும்.

2. வகுப்பறையில் தெரிவு செய்யப்பட்ட தொழிலை எவ்வாறு செய்து ஒரு பொருளை உருவாக்கலாம் என்று செய்து காட்டுதல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்பட்ட தொழிலுக்குரிய கருவிகள் மற்றும் பொருட்களைப் பயன்படுத்தி எவ்வாறு வேலையைச் செய்யலாம் என்று விளக்கி மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

4. மாணவர்கள் ஒவ்வொருவரும் அந்தத் தொழிலுக்குரிய வேலையை செய்ய பயிற்சி அளிக்க வேண்டும்.

5. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு தெரிவு செய்யப்பட்ட தொழிலில் மாணவர்களின் கற்றல் அடைவுகளை அவர்களது செய்திறன் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தினை கொண்டு மதிப்பிடுதல் வேண்டும்.

**மாணவர்களுக்கு பள்ளிகளில் கற்பிக்கக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கான பரிந்துரைகள்**

இக்குழுவானது பின்வரும் கைத்தொழில்களை வகுப்பறையிலும் பள்ளியிலும் சமூகப்பயன்மிக்க ஆக்க செயற்பணிக்கு தெரிவு செய்துள்ளது.

1. தையல் வேலை.
2. களிமண்ணால் பொம்மைகளைச் செய்தல்.
3. சாக்பீஸ் (Chalk Piece) தயாரித்தல்
4. பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கொண்டு விளையாட்டுப் பொம்மைகளைச் செ ய்தல்
5. காய்கறி தோட்டம் அமைத்தல்
6. தேனீ வளர்த்தல்
7. மூலிகைத் தோட்டம் அமைத்தல்
8. கோழி வளர்த்தல்
9. மாடு வளர்த்து பால் உற்பத்தி செய்தல்
10. காளான் வளர்த்தல்
11. மிட்டாய் தயாரித்தல்
12. கயிறு திரித்தல்
13. பட்டுப்பூச்சி வளர்த்தல்
14. பாய் நெய்தல்
15. நெசவு நெய்தல்
16. துணியில் பூ வேலைப்பாடு செய்தல்

17. அலுவலக உறைகள் தயாரித்தல்

18. பின்னல் வேலை மற்றும் கூடை முடைதல்.

19. தச்சுவேலை

20. மெழுகுவர்த்தி செய்தல்

21. சோப்புத் தயாரித்தல்

22. இங்க் தயாரித்தல்

23. மிதியடி தயாரித்தல்

24. பிளாஸ்டிக் பூக்கள் தயாரித்தல்

மேற்கண்ட கைத்தொழிலைக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இக்குழு பரிந்துரைத்தது.

**மால்கம் ஆதிசேஷையா கமிட்டியின் அறிக்கை**

**மால்கம் ஆதிசேஷையா கமிட்டியின் தோற்றமும் அதன் நோக்கங்களும்**

கோத்தாரிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து நாடு முழுவதும் 10+2+3 என்னும் கல்வி அமைப்பு 1975-76 முதல் அமல்படுத்தப்பட்டது. கோத்தாரிக் கல்விக் குழுவின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று, இடைநிலைக் கல்வியை தொழிற்சார்புடையதாக்குதல் ஆகும். இதற்கென தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இடைநிலைக் கல்விக்கான கலைத்திட்டம், பாடநூல்கள் போன்றவற்றைத் தயாரித்து அளித்தது. இவற்றைப் பயன்படுத்தி நடைபெற்ற உயர்நிலைப் பள்ளிகளின் செயல்பாடு குறித்து மீள்நோக்கு செய்திட 1977ல் ஈஸ்வ்பாய் படேல் தலைமையிலான குழுவை இந்திய அரசு அமைத்தது. இதன் பரிந்துரைகளில் முதன்மையானது பள்ளிக் கல்வியை தொழில் சார்புடையதாக்கிட சமூகத்திற்கு பயன்படும் ஆக்கபூர்வமான பணிகள் என்னும் கருத்தை பள்ளிக் கல்வியில் புகுத்திட வழிவகை செய்வதாகும்.

இதனைத் தொடர்ந்து மேனிலைக் கல்வியை தொழில் சார்புடையதாக்கிடும் நோக்கத்தோடு மேனிலைைக் கல்வி இயங்கும் விதத்தை மீள் ஆய்வு செய்து பரிந்தரைகள் அளித்திட 1978இல் இந்திய அரசு அந்நாளைய சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் மால்கம் எஸ்.ஆதிசேஷையா தலைமையில் மேனிலைக் கல்விக்கான தேசிய மீள்நோக்குக்

கமிட்டியை அமைத்தது. இக்கமிட்டி, 28-2-1978ல் தனது அறிக்கையை செய்திடக் கற்றல் என்று தலைப்பிட்டு இந்திய அரசிடம் சமர்ப்பித்தது.

**மால்கம் ஆதிசேஷையா கமிட்டியின் பரிந்துரைகள்**

மேனிலைக் கல்வியை தொழிற்சார்புடையதாக்கிடுவது தொடர்பாக மால்கம் ஆதிசேஷையா கமிட்டி அளித்த முக்கிய பரிந்துரைகளானவன:

1. கற்றல் என்பதை சமூகப் பயனுள்ள உற்பத்தி பணி மூலமாகவோ அல்லது தொழில் மூலமோ நிகழும் வகையில் அமைத்திடல் வேண்டும்.

2. மேனிலைப் பள்ளிக் கல்வி, பொதுவான கல்வி சார்ந்த பிரிவு, தொழில்சார்ந்த பிரிவு என்னும் இரு பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும். இரு பிரிவுகளுக்கும் வேலை அனுபவம் உட்கூறாக இருக்க வேண்டும். இப்பிரிவுகளுக்கும் வேலையனுபவம் கட்டாயமாகத் தரப்பட வேண்டும்.

3. தொழில்சார் பாடப்பிரிவுகள் விவசாயம் மற்றும் கிராமப்புற தொழில்களோடு தொடர்பு உடையதாகவோ, மேலாண்மை, வணிகம், உடல்நலம், மருத்துவத் துணைத் தொழில்கள் ஆகியவற்றோடு தொடர்புடையதாகவோ இருத்தல் வேண்டும். தொழிற்பள்ளிகள் பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகள் ஆகிவற்றில் இருந்து வெளிவரும் மாணவர்களிடையே பெருமளவில் வேலையின்மை காணப்படுவதால், பொறியியல் சார்ந்த தொழிற்படிப்புகள் மேனிலைப் பள்ளிகளின் தொழிற்பிரிவில் இடம் பெறலாகாது.

4. பொதுப்பிரிவு மற்றும் தொழில்சார் பிரிவில், குறிப்பிட்ட பாடங்களை கட்டாயம் இடம் பெறச் செய்ய வேண்டும் என வற்புறுத்தாமல், மாணவர்கள் வசிக்கும் பகுதிகளில் கிடைக்கக்கூடிய வசதிகள், அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பள்ளியும் தனக்கு பொருத்தமாகத் திகழக்கூடிய பாடங்களைத் தெரிவு செய்து பொதுப்பிரிவு மற்றும் தொழிற்சார் பிரிவுகளில் வழங்கிடலாம். அதாவது தொழில் பாடங்கள் மற்றும் வேலையனுபவம் குறித்த கலைத்திட்டத்தை முறையாக செயற்படுத்திட, அதனை வட்டாரத் தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் அமைத்திட வேண்டும்.

5. கல்வி சார்ந்த பொதுப்பிரிவில் பயில்வோர் வேலை அனுபவம் பெறுவதற்காக மேற்கொள்ளும் சமூகத்திற்கு பயன்படும் ஆக்கபூர்வமான பணிகள் என்பதற்கான

முறையான கலைத்திட்டம் மற்றும் மதிப்பிடும் முறைகள் தெளிவு பட வெளியிடப்பட வேண்டும்.

இதுபோன்றே தொழில் பிரிவில் பயில்வோர் கற்க வேண்டிய பொது அடிப்படைப் படிப்புகள் தொடர்பான கலைத்திட்டம் மற்றும் மதிப்பிடும் முறைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

6. பொதுப்பாடப் பிரிவு மற்றும் தொழிற்சார் பாடப்பிரிவுகளில் அளிக்கப்படும் பாடங்கள், மாணவர்கள் தம் விருப்பப்படி தெரிவு செய்திட வாய்ப்பளிக்கும் வகையில் தொடர்புடைய பாடத் தொகுதிகளாக அமைந்திடல் வேண்டும்.

    a. கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல்

    b. தாவரவியல், விலங்கியல், வேதியியல், மரபணுவியல்

    c. வணிகவியல், கணக்குப் பதிவியல், பொருளாதாரம், கணினி அறிவியல்

7. தொழிற்சார் பாடங்களுக்கு பாட நூல்களை உடனடியாகத் தயாரித்து வழங்கினால்தான், அப்பாடங்களை ஆசிரியர்கள் கற்பிக்க இயலும்.

8. 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கு பருவத்தேர்வு முறையும் தர மதிப்பீட்டு எண் வழங்கும் முறையும் அதாவது கிரெடிட் முறையும் படிப்படியாக நடைமுறைப்படுத்திட வேண்டும்.

9. தொழிற்சார் பாடங்களை கற்பிப்பதற்கு, அத்தொழிலில் ஈடுபட்டு அனுபவம் கொண்டவர்களையே நியமிக்க வேண்டும். தேவைப்பட்டால் பகுதிநேர ஆசிரியர்களையும் நியமிக்கலாம். மேனிலை பள்ளி வகுப்புகளில் தொழிற்சார் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முதுநிலைப் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும் என வற்புறுத்தத் தேவையில்லை.

10. தொழிற்சார் பாடங்களை கற்பிப்பதற்கு தேவையான ஆசிரியர்கள் உருவாக்கிட பணிமுன் மற்றும் பணியிடை ஆசிரியர் பயிற்சி திட்டங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

11. ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் தொழில்கள் குறித்த தகவல்களை சேகரித்து ஆய்வு மேற்கொள்ளுதல், கிராமப்புறங்களில் தொழில்சார் கல்வியை அளித்திடுவதற்கு ஏற்ற பள்ளிகளைத்தேர்வு செய்தல், முதலீட்டினை சிக்கனப்படுத்தும்

வகையில் இரு ஷிப்ட் முறையை அமல்படுத்துதல் உதவித் தொகையுடன் கூடிய பணிப்பயிற்சி அரசு மற்றும் பொதுத் துறை நிறுவன வேலைகளுக்கான பணிநியமனத்தில் தொழிற்சார் படிப்புகளைப் பயின்றோருக்கு சிறப்பு ஒதுக்கிடு அளித்திடும் கொள்கை, தேசிய மற்றும் மாநில தொழிற்சார் கல்விக்கான நிறுவனங்களை ஏற்படுத்துதல் மொழிப்பாடங்கள் மற்றம் பொது அடிப்படை பாடங்களை கற்பிப்பதற்கு 15% நேரமும், தெரிவு செய்யப்படும் விருப்பப்பாடங்களை கற்பிப்பதற்கு 70% நேரமும், பிற கல்விச் செயல்களுக்கு 15% நேரமும் பள்ளிக்கால அட்டவணையில் ஒதுக்கிட வேண்டும் என்பது போன்ற பிற பரிந்துரைகளையும் மால்கம் ஆதிசேஷையா குழு அளித்தது.

**தேசியக் கல்விக்கொள்கை**

இந்தத் தேசியக் கல்விக் கொள்கையானது 1986 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தேசியக்கல்வி கொள்கையின் முக்கிய நோக்கம்**

1. நாடெங்கிலும் ஒரே தேசிய கல்வி அமைப்பை உருவாக்குதல்.
2. கல்வியில் சமத்துவத்தை உருவாக்குதல்.
3. மத்திய மற்றும் மாநில அரசுகள் கல்வியில் இணைந்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்.
4. அனைவருக்கும் தொடக்கக்கல்வியை அளித்தல்.
5. வயது வந்தோர் கல்வியை மேம்படுத்த உதவுதல்.
6. கல்வியில் தொழிற்பிரிவுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
7. முன்னோடி பள்ளிகளை உருவாக்குதல்.
8. பட்டப்படிப்புக்கும் வேலைக்கும் உள்ள இணைப்பை சரி செய்தல் .
9. ஆசிரியர் நிலையை மேம்படுத்துதல்.
10. கல்வி மேலாண்மையை மேம்படுத்துதல்.
11. இந்திய கல்விப்பணியை புதிதாக உருவாக்குதல்

12. கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான வளங்களை திரட்டுதல்.

13. சமுதாயம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்கினை கல்வி மேம்பாட்டுக்கு நாடுதல்.

**தேசியக்கல்வி கொள்கையின் முக்கிய இலக்குகள்**

மிக முக்கியமாக மூன்று இலக்குகளை இக்கொள்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவைகளாவன,

1. தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை மற்றும் மேம்பாட்டுணர்வை வளர்த்தல்.
2. சுதந்திரம், சமத்துவம் மற்றும் சுயசார்பு ஆகியவைகளை மேம்படுத்துதல்.
3. இளைஞர்களிடம் பரந்த மனப்பான்மையை ஏற்படுத்துல்.

**நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வி அமைப்பை உருவாக்குதல்**

தேசியக்கல்விக் கொள்கை நம் நாடு முழுவதும் ஒரே வகையான கல்வி பயிலும் அமைப்பை உருவாக்குவதுடன், அந்தந்த மாநிலங்களின் நிலைமை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்வுறும் தன்மையுள்ள கல்வி அமைப்பை பின்வருமாறு உருவாக்கத் திட்டமிட்டது.

1. கல்வி அளிப்பதில் ஒரு குறிப்பிட்ட நிலை வரை சாதி, மதம், வாழிடம், இனம் மற்றும் பாலினம் சாராத அனைவருக்குமான ஒரே மாதிரியான கல்வி அமைப்பை உருவாக்கி மாணவர்களது வெற்றி வாய்ப்புக்கான அடித்தளம் அமைத்தல்.
2. கோத்தாரி கமிஷனின் பரிந்துரைபடி நாடு முழுவதும் பத்தாண்டு தொடக்கநிலை மற்றும் இடைநிலைக்கல்வி, மேனிலைக்கல்வி இரண்டு ஆண்டுகள் மற்றும் பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகளைக் கொண்ட 10+2+3 முறையை உருவாக்குதல்.
3. கல்விக்கூடங்களில் தேசிய அடிப்படை கலைத்திட்டத்தை உருவாக்கி அமல்படுத்தல்.
4. ஒவ்வொரு வகுப்புக்கு மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் கற்பதற்கான குறைந்தபட்ச கற்றல் இலக்குகளை உருவாக்கி நிர்ணயம் செய்தல்.
5. கல்வி அமைப்பின் அனைத்து நிலைகளிலும் வேலை அனுபவத்தை கல்வியின் கலைத்திட்டத்துடன் இணைத்துக் கற்பித்தல்.

6. அறிவியலை கட்டாயப்பாடமாக இடைநிலை (10 ஆண்டுகள்) கல்வி வரை கற்பித்தல்.

**கல்வி அமைப்பின் அனைத்து நிலைகளிலும் கல்விக்கான மறுசீரமைப்பை ஏற்படுத்துதல்**

அனைத்து நிலைகளிலும் கல்விக்கான மறுசீரமைப்பை ஏற்படுத்துதலை பின்வருமாறு இக்கொள்கை பட்டியலிடுகிறது.

**1. தொடக்கல்வியில் சீரமைப்பு**

1. அனைவருக்கும் கல்வி அளிக்கும் நோக்கத்தில் 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இடைநிற்றல் இல்லாமல் கல்வி அளித்தல்.
2. கரும்பலகை திட்டம் என்னும் திட்டத்தின் மூலம் தொடக்கப்பள்ளிகளின் இருக்கை வசதிகள், கற்பித்தல் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், கட்டிடங்கள் போன்ற இன்னபிற அடிப்படைக் கட்டமைப்பை ஏற்படுத்துதல்.
3. இந்தியாவின் கிராமப்புறங்களின் குழந்தைகள் தங்களது பெற்றோர்களுக்கு விவசாயத்தில் உதவி புரிவதால் பள்ளி நேரங்களை இதற்குத் தக்கவாறு அமைத்தும் விடுமுறை நாட்களையும் மாறுதல் செய்தல்.
4. பள்ளிக்கற்க வரும் முதல் தலைமுறை மாணவர்களுக்கு அவர்களது சுய கற்றல் வேகத்தில் கற்பித்தலை தனியாள் வேற்றுமைக்கு ஏற்ப அமைத்தல்.
5. துவக்கக்கல்வியின் ஆண்டுதேர்வுகளை புறவயத்தன்மை (Objectives Type) உடையதாக்கி வகுப்பிலுள்ள தேக்கத்தை நீக்குதல்.
6. துவக்ககல்வியை தொடர இயலாதவர்கள் குழந்தைத் தொழிலாளிகள் போன்றோர்களுக்கு முறைசாராக்கல்வியை அமைத்தல்.
7. முறைசாராக் கல்வியில் கற்கும் குழந்தைகளை அவர்கள் விரும்பினால் பள்ளிக்குச் சென்று கற்க வைத்தல். 1995க்குள் 15 முதல் 35க்கு வயதுக்குட்பட்ட அனைவருக்கும் முறைசாராக்கல்வி மூலம் முழு எழுத்தறிவை கொடுத்தல்.

**2. இடைநிலைக்கல்வியில் சீரமைப்பு**

1. அனைவருக்கும் கல்வி கற்பிக்கும் இலக்கினைக் கொண்டுள்ளதால் கல்வியின் தரத்தை மேம்படுத்துவற்காக நவோதயா என்னும் முன்னோடிப் பள்ளிகளை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் நாடு முழுவதும் அமைத்தல்.
2. இடைநிலைக்கல்வியை தொழில்சார்ந்த கல்வியாக்குதல்.

**3. தொழில்நுட்பக்கல்வியில் சீரமைப்பு**

அனைத்திந்திய தொழில்நுட்ப நிறுவனத்தை அமைத்து அதன் மூலம் நாட்டிலுள்ள திறமைமிக்க மாணவர்கள் தொழில் கல்வி பயில ஏதுவாக நாட்டின் எப்பகுதிக்கும் சென்று கல்வி கற்க தொழில்நுட்பக் கல்வியை மாறுதல் செய்தல், ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரிக்கு தரச்சான்றிதழை வழங்கி நிதி உதவியையும் மற்றும் மேலாண்மையையும் செய்தல்.

**4. உயர்கல்வியில் சீரமைப்பு**

1. பல்கலைக்கழகங்களில் இணைந்து உறுப்புக் கல்லூரியாக இருக்கும் கல்லூரிகளின் தரத்திற்கு ஏற்ப சிலவற்றிற்கு தன்னாட்சி வழங்கும் முறையை ஏற்படுத்துதல்.
2. பல்கலைகழகத்திலுள்ள தரமுள்ள சில துறைகளுக்கு தன்னாட்சி வழங்க ஏற்பாடு செய்தல்.
3. மாணவர்கள் தாங்கள் விரும்பும் மொழித்திறன்களை அடைய அவர்கள் விரும்பும் பாடங்களை இணைத்து கற்க உதவுதல்.
4. பட்டப்படிப்பினை குறிப்பிட்ட வேலைக்கு என்பதை தவிர்த்தல்.
5. மாணவர்கள் தொழில்நுட்பக்கல்வி, உயர்கல்வி பயிலும் போது வட்டாரம் விட்டு வட்டாரம் இடம்பெறும் முறையை அறிமுகப்படுத்தி திறமைமிக்க மாணவர்களுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பை அளித்தல்.
6. கணினியின் இணையதளம் வாயிலாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பக்கல்வி ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான அனைத்து உயர்கல்வி நிறுவனங்களையும் இணைத்து அந்நிறுவனங்களின் ஆராய்ச்சிகளை பகிர்ந்து கொள்ள உதவுதல்.
7. குறிப்பிட்ட சில பணிகளுக்கு சிறந்த நபர்களை தேர்வு செய்வதற்காக தேசிய தேர்வுப்பணி என்னும் அமைப்பை உருவாக்கி தகுந்த நபர்களை தேர்வு செய்தல்.

## 5. ஆசிரியர் கல்வியில் சீரமைப்பு

1. ஆசிரியர் பணியில் பயிற்சி பெறுவதற்காக அதில் திறன், நாட்டம் மற்றும் ஆர்வம் உள்ளவர்களை நுழைவுத்தேர்வு மூலம் சேர்த்தல்.

2. நாடு முழுவதும் ஆசிரியர் கல்வியை சீரமைத்து தரத்தினை மேம்படுத்துவதற்காக தேசிய ஆசிரியர் கல்வி கழகம் என்ற அமைப்பை உருவாக்குதல்.

3. நாடெங்கிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் என்கின்ற அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பயிற்சி மற்றும் பணியிடை பயிற்சியை அளித்தல்.

4. ஆசிரியர்பணிக்கு தேர்வு செய்ய ஆசிரியர் தேர்வு வாரியங்களை உருவாக்குதல்.

5. ஆசிரியரின் சம்பள விகிதத்தை பணிப்பளுவுக்கு ஏற்ப நாடு முழுவதும் சீராக அமைத்து பணித்தொடர்பான குறைதீர்க்கும் அமைப்பையும் ஏற்படுத்துதல்.

6. ஆசிரியர்கள் தங்களது பணியில் பொறுப்பை ஏற்கும் நிலையை உருவாக்கி கற்பித்தல் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு ஊக்கம் அளித்தல்.

## 6. கல்வியில் பொதுவானவைகளை சீரமைத்தல்

1. விழுமக்கல்வியை மேம்படுத்தி சமூக நன்னெறிகளை அமைக்க கலைத்திட்டத்தில் விழுமக்கல்வியை இணைத்தல்.
2. மும்மொழி திட்டத்தை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பின்பற்றுதல்.
3. வேலை அனுபவத்தை பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியில் இணைத்தல்.
4. அறிவியல் கல்வியை மேம்படுத்த கற்பித்தலில் ஆய்வு முறையை உருவாக்குதல்.
5. உடற்கல்வி, யோகா மற்றும் விளையாட்டுகளை பள்ளிகளில் மேம்படுத்துதல்.
6. கற்றல் அடைவுகளை மதிப்பிடுதலில் சீர்திருத்தம் செய்வதற்காக பருவத்தேர்வு, தொடர்ச்சியான அகமதிப்பீடு முறை, வினா - வங்கிகள் மற்றும் கிரெடிட் முறை போன்றவைகளை அறிமுகப்படுத்துதல்.

7. உயர்கல்வியை மேலாண்மை செய்வதற்காக இந்திய உயர்கல்வி பணி என்னும் அமைப்பின் மூலம் மேலாண்மை பதவிக்கு தகுதியானவர்களை தேர்வு செய்தல்.

**தேசிய அடிப்படையிலான கலைத்திட்டம் பற்றிய பரிந்துரைகள்**

தேசியக்கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலம் நாடு முழுவதற்கும் பொதுவான கலைத்திட்டம் அமைப்பதற்கு இக்கல்வி கொள்கை வலியுறுத்துகிறது. இந்தக் கலைத்திட்டத்தின்படி மாணவர்களது திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணர உதவும் துணை அமைப்பினை பாடத்திட்டத்தில் உருவாக்குதல், தரம்மிக்க கல்வியை அளித்தல், நாட்டு ஒருமைப்பாடு மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்கும் வசதி கொண்ட பின்வரும் கலைத்திட்டத்தை பரிந்துரைக்கிறது.

1. நமது நாட்டு மரபினையும், பாரம்பரியத்தையும், பண்பாட்டினையும் மேன்மைபடுத்தும் பாடங்களை கலைத்திட்டத்தில் இணைக்க வேண்டும்.

2. பாட செயல்பாடுகள் மற்றும் இணைச்செயல்பாடுகளில் நன்னெறி, நல்லொழுக்கம் மற்றும் மனிதாபிமான பண்புகளை இணைக்க வேண்டும்.

3. இயற்கைச் சூழல்கள், வளங்கள் மற்றும் அவைகளை சிக்கனமாகப் பயன்படுத்துதல் குறித்து நடவடிக்கை எடுக்க இயலும் செயல்பாடுகளை பாடத்துடன் இணைக்க வேண்டும்.

4. சமூக சமத்துவமின்மை மற்றும் மக்கள் தொகை பிரச்சினைகளை மாணவர்களை உணர வைக்கும் கலைத்திட்டம் வேண்டும்.

5. நாட்டுப்பற்றுடன் நம் நாட்டின் அரசியல் சாசனத்தில் பற்றுதலுடனும் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளில் புரிதலுடனும் இருக்கும் மாணவர்களை உருவாக்கும் வகையில் கலைத்திட்டத்தை அமைக்க வேண்டும்.

6. 1 முதல் 3 வகுப்பு வரை தாய்மொழி, கணிதம், சூழ்நிலையியல் பாடத்துடன் தொழில் அனுபவத்தைக் கொடுக்கும் சமூக பயன்மிக்க ஆக்க வேலை மற்றும் கலையுணர்வுடன் செயல்பட உதவும் கலைத்திட்டத்தை அமைத்தல் வேண்டும்.

7. 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் தாய்மொழி, ஆங்கிலம் அல்லது ஹிந்தி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் மற்றும் பணி அனுபவம் அல்லது சமூகபயன் மிக்க வேலையுடன் கலையுணர்வுச் செயல்பாடுகள் மற்றும் உடல்நலக் கல்வியுடனும் உடற்பயிற்சியைக் கொண்ட கலைத்திட்டத்தை வடிவமைத்தல் வேண்டும்.

8. இடைநிலைக்கல்வியில் மூன்று மொழிகள் அல்லது தாய்மொழி, ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல், தற்கால இந்தியா அல்லது வேலை அனுபவம், கலையுணர்வு செயல்பாடுகள், உடல் நலம் மற்றும் உடற்பயிற்சி போன்றவைகளைக் கொண்ட கலைத்திட்டத்தை வடிவமைத்தல் வேண்டும்.

**தேசியக் கல்விக்கொள்கையினால் தொடங்கப்பட்ட திட்டங்கள்**

இக்கொள்கையால் i) சர்வ சிக்ஷா அபியான், ii) கரும்பலகைத்திட்டம், iii) தேசியத் தேர்வுப்பணி, மற்றும் நவோதயாப்பள்ளி போன்றவைகள் உருவாக்கப்பட்டன.

**தேசியத் தேர்வுப்பணி**

தேசிய அளவில் நாடு முழுவதும் கல்விநிலையைப் பொறுத்து தேர்வுகளை நடத்தி வெவ்வேறு பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்தலை சில நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கும் இத்திட்டத்தின் மூலம் விரிவுரையாளர்களை தேர்வு செய்ய, ஆராய்ச்சிப்படிப்பில் சேர விரும்புபவருக்கும் மற்றும் ஆடை அமைத்தல், உணவு பதப்படுத்துதல், ஓவியம் வரைதல் சிற்பம் வடித்தல் போன்ற திறன்களையும் கண்டறிய இந்தத் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவோருக்கு பல்வேறு பணிகளில் அமர்வதற்கு உரிய தகுதிச் சான்றிதழை வழங்குதலுக்கு இந்நிறுவனங்கள் உதவுமாறு அனுமதி அளிக்க இக்கொள்கை உதவியது. மேலும், நாடு முழுவதும் பொறியியற் படிப்புக்கும் மருத்துவப்படிப்புக்கும் நுழைவுத் தேர்வை பொதுவாக நடத்துவது என்றும் இக்கொள்கையின் மூலம் முடிவு எட்டப்பட்டது.

**நவோதயாப்பள்ளிகள்**

**நோக்கங்கள்**

1. பள்ளிக்கல்வியில் முன்னோடியாக விளங்கி தரத்தை மேம்படுத்தும் பள்ளிகளாக இருத்தல்.
2. தரமான கல்வியை குறைந்த செலவில் சமூக, சாதி, சமய மற்றும் பொருளாதார வேறுபாடின்றி அளித்தல்.
3. திறமை இருந்தும் ஏழ்மையின் காரணமாக பயில இயலாத மாணவர்களது நிலையை நீக்குதல்.
4. நவீன கருவிகளையும் கற்றல் உத்திகளையும் பயன்படுத்தி கற்கும் மாணவர்களது உள்ளார்ந்த திறனை வளர்த்தல்.

5. புதிய முறை கற்றல் - கற்பித்தல் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்.
6. கலைத்திட்டத்தினை வடிவமைத்தலிலும் கற்பித்தல் முறைகளிலும் புதுமைகளை புகுத்த ஆசிரியருக்கு சுதந்திரம் கொடுத்தல்.
7. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள சமத்துவம், சமநீதி மற்றும் சகோதரத்துவம் ஆகிய பண்புகளை வளர்த்தல்.
8. உலகத்தரத்துடன் கூடிய முன்னோடிப்பள்ளியை அமைத்தல்.
9. அருகிலுள்ள பள்ளிகளுடன் தனது வளத்தை பகிர்ந்து கொள்ளுதல்.
10. பள்ளிக்கல்வி அமைப்பில் கற்றல் பணிக்கு பொறுப்பு ஏற்றல்.

**சிறப்பம்சங்கள்**

1. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் மேற்பார்வையில் மைய கல்வி வாரியத்தின் பாடத்திட்டம் பின்பற்றப்படுகிறது.
2. இது இருபாலரும் சேர்ந்து பயிலும் உறைவிடப்பள்ளி.
3. 6ஆம் வகுப்பு முதல் 12 வரை இலவசமாக கல்வி, உடை, உணவு வழங்கப்படுகிறது.
4. இங்கு மாணவர்களை சேர்ப்பதற்கு நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது.
5. SC/ST பிரிவினருக்கு இடஒதுக்கீடு உண்டு.
6. ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
7. தேசிய அடிப்படையான பொது கலைத்திட்டம் பின்பற்றப்படுகிறது.
8. 8 வகுப்பு வரை தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்படுகிறது.
9. இதில் பணிபுரியும் ஆசிரியர்கள் தேசிய அளவில் தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்படுகின்றனர்.
10. ஒவ்வொரு பள்ளியிலும் 20% மாணவர்கள் பிறமாநிலத்தவர்கள்.
11. இது 30 ஏக்கர் அளவில் அமைந்துள்ள பள்ளி.

12. தரம் மிகுந்த கற்பித்தல் கருவிகளுடன் அமைந்துள்ள முழு கட்டமைப்புடன் கூடிய பள்ளி.

**தேசியக்கல்விக் கொள்கையின் நிறை-குறைகள்**

**நிறைகள்**

1. தேசியக்கல்வி அமைப்பு உருவாகி எல்லோருக்கும் பொதுவான 10+2+3 திட்டம் உருவானது.
2. SSA மற்றும் கரும்பலகைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.
3. நவோதயாப்பள்ளிகள் அமைக்கப்பட்டன.
4. இடைநிலை மேனிலைக்கல்வியில் தொழிற்பிரிவு உருவானது.
5. வேலையோடு படிப்பை பிணைப்பதை தவிர்க்க வலியுறுத்தியது.
6. ஒவ்வொரு பணியிலும் செயல்திறன் மற்றும் பொறுப்பேற்றல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.
7. பல்கலைகழகங்கள் மற்றும் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் தரத்துடன் அமைந்தன.
8. இந்தியக் கல்வி பணி என்னும் கல்வித்துறை உயரதிகாரிகளை உருவாக்க வலியுறுத்தப்பட்டது.
9. பொது நுழைவுத்தேர்வு மற்றும் பணியாளர்தேர்வு போன்றவைகளை அமைத்தது
10. கல்விக்கான நிதியுதவியைப் பற்றி பரிந்துரை செய்தது.

**குறைகள்**

1. அண்மைப்பள்ளித் திட்டத்தை அமல்படுத்தி வளங்கள் பகிர்தல் செயல்படவில்லை.
2. மேல்தட்டு மக்களுக்கான பொதுப்பள்ளிகளைப் பற்றிய கருத்து ஏதும் இல்லை.
3. பல்வேறு கல்வி அமைப்புகளை ஏற்படுத்துவதால் குழப்பத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.
4. தேவைப்படும் நிதி ஆதாரங்களைப் பற்றிய கருத்து இல்லை.
5. காந்திஜியின் ஆதாரக்கல்வியை புறக்கணித்துவிட்டது.

6. பள்ளியின் வேலை நேரத்தை ஆதரிக்கவில்லை.

**செயலாக்கதிட்டம் -1992**

தேசியக்கல்வி கொள்கை 1986 செவ்வனே நடைமுறைப்படுத்தப்பட்டு 1992ல் செயலாக்கத்திட்டம் 1992ல் மத்திய அரசினால் வெளியிடப்பட்டது. இதன் நோக்கம் சாதி, இனம், மதம் வேறுபாடுகளை களைந்து அனைவருக்கும் சமமான தரமுள்ள கல்வி வாய்ப்புகளை வழங்கிடுதல் ஆகும்.

**செயலாக்க திட்டத்தின் குறிக்கோள்கள்**

1. ஆரம்ப கல்வி நிலை

   - அனைவரும் கல்வி பெறும் உரிமை
   - 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி அளித்தல்
   - கல்வி தரத்தை மேம்படுத்த முயற்சிகளை எடுத்தல்

2. இடைநிலைக் கல்வி

   - தொழில் சார்புடையாக்குதல்
   - கணினி அறிவையும் திறன்களையும் அறிமுகப்படுத்தல் மற்றும் வளர்த்தல்
   - கல்வி தரத்தை மேம்படுத்துதல்.

3. உயர்கல்வி

   - நாட்டை எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தும் சமூக பொருளாதார, பண்பாட்டு, ஒழுக்க மற்றும் ஆன்மீகச் சிக்கல்களை ஆழ்ந்து சிந்திக்க வாய்ப்பளித்தல், இதை தேசிய கல்வி கொள்கை (1986) வலியுறுத்தியுள்ளது.

4. பொதுவானவை

   - கல்வி வாய்ப்புகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்
   - கல்வியளிக்க எடுக்கும் நடவடிக்கைகளில் முன்னுரிமை பெற வேண்டியவை
     - ✓ இலவச கட்டாயக் கல்வி

- ✓ சிறப்புக் குழந்கைளுக்குக் கல்வி வசதிகள்
- ✓ எழுத்தறிவின்மையை அறவே ஒழித்தல்
- ✓ தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் கல்வி
- ✓ பெண்கல்வி
- ✓ சிறுபான்மையினர் கல்வியில் சிறப்பு கவனம் செலுத்துல்.

- ➢ முறைசாராக் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக் கழகங்கள், தொலைநிலைக்கல்வி, கிராமிய பல்கலைக்கழகங்கள், மழலையர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற தேசிய கல்விக் கொள்கைகள் சிறப்பிடம் பெறல் வேண்டும்.

**செயலாக்கத் திட்ட அறிக்கையின் சிறப்பான செயல்திட்டங்களாவன**

1. மழலையர் கல்விக்கான முன் தொடக்கப்பள்ளிகள், பால்வாடி, அங்கன்வாடி போன்ற காப்பகங்கள், குழந்தை பாதுகாப்பு மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்துதல்.
2. தொடக்கப் பள்ளிகளனைத்தும் அடிப்படை வசதிகளும், கற்பித்தல் துணைக் கருவிகளும் பெற கரும்பலகைத்திட்டம் தொடங்கப்படல்.
3. தொடக்க வகுப்புகளில் சமூகப் பயனுள்ள உற்பத்திச் செயல்கள் கல்வியோடு இணைக்கப்படல் வேண்டும்.
4. குறைந்தபட்ச கல்வி அளவுகள் குறிப்பிடப்பட்டு, அனைத்து மாணாக்கரும் அதை அடையச் செய்தல்.
5. மாணாக்கர் தேர்ச்சியைக் குறிப்பிட, மதிப்பெண் முறையை விட தரமுறை மேலானது.
6. நவோதயாப் பள்ளிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்குதல் இவை அனைத்து வசதிகளும் உடையவையாகவும், இலவசக் கல்வி உணவு, உறைவிடம் தருவதாகவும், மீத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஏற்றதாகவும் இருத்தல்.
7. மும்மொழித் திட்டம் பின்பற்றப்படுதலும், இந்தியை இணைப்பு மொழியாக வளர்த்தலும் வலியுறுத்தப்பட வேண்டும்.

8. விளையாட்டுகள், பண்பாட்டு வளர்ச்சி, இளைஞர் நலம் போன்றவற்றிற்கு அதிக கவனம் தேவை.

9. சிறப்பாக நடைபெறும் கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள என்கிற தகுதி வழங்கப்படல்.

10. திறந்தநிலைப் பல்கலைகழகங்களும் தொலைநிலைக் கல்வியும் புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

11. கிராமச் சூழ்நிலைகளுக்கேற்ற உயர் கல்வியை காந்தீய கோட்பாடுகளினடிப்படையில் வடிவமைத்துத் தருவது கிராமிய பல்கலைக் கழகங்களின் பொறுப்பாகும்.

12. பணி சார்ந்த படிப்புகள் பொதுக்கல்வியில் இடம் பெறல் வேண்டும்.

13. ஆராய்ச்சியும், வளர்ச்சியும் பல்கலைக் கழகத்தின் இரு கண்களாகும்.

14. பாடப்பிரிவுகளுக்குப் புதுவடிவம் தருதல்.

15. கல்வியின் பொருளாதார, சமூக மற்றும் பாலின வேறுபாடுகளைக் குறைக்க உதவுதல்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் கல்வி நிலையங்கள், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனங்களாகவும், இடைநிலைக் கல்வி ஆசிரியர் நிறுவனங்களாகவும் தர உயர்வு பெற்று முன்னோடி நிறுவனங்களாகத் திகழவேண்டும்.

17. தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைசார் கல்வி, மனிதவள மேம்பாட்டுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்.

**சச்சார் கமிட்டி – 2005**

இந்தியாவில் சிறுபான்மை சமூகத்தின் முஸ்லீம் சமூகத்தினரின் கல்வி நிலை, சமூக நிலை மற்றும் பொருளாதார நிலைகளை ஆராய்வதற்காக நீதியரசர் ராஜீந்தர் சச்சார் தலைமையின் கீழ் இக்குழு 2005 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு தனது பரிந்துரைகளை பின்வருமாறு அரசுக்கு அளித்தது.

**சச்சார் கமிட்டியின் முக்கிய பரிந்துரைகள்**

1. முஸ்லீம் சமூகத்தினரின் குறைகளை கேட்டறியவும் இவர்களுக்கு சம வாய்ப்புகளை மற்ற சமூகத்தினருடன் கொடுப்பதற்காக சமவாய்ப்பு கமிஷனை நியமிக்க வேண்டும்.

2. பொதுவான அமைப்புகளில் முஸ்லீம் சிறுபான்மையினரின் பங்கேற்பை அதிகப்படுத்த அரசு நியமனம் செய்யும் முறையை பின்பற்ற வேண்டும்.

3. முஸ்லீம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தனித்தொகுதியாக அமைக்க வேண்டும்.

4. தற்சமயம் நடைமுறையிலுள்ள இடஒதுக்கீட்டில் முஸ்லீம்களுக்கு அதிக வேலைவாய்ப்பினை பெற வகை செய்தல் வேண்டும்.

5. முஸ்லீம் கல்வி நிறுவனமான மதரசாவில் கொடுக்கப்படும் கல்வியை மேல்நிலைக்கல்வி அமைப்போடு இணைக்க வகைசெய்ய வேண்டும்.

6. மதரசாக்கள் வழங்கும் பட்டங்களை கொண்டு இராணுவத்தில் சேர்க்கவும் இந்திய ஆட்சிப்பணிகளுக்கு உரிய தேர்வுகளில் பங்கேற்கவும் அங்கீகரிக்க வேண்டும்.

7. சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் 50% சிறுபான்மையினருக்கும், சிறுபான்மையினர் அல்லாத நிலையில் 15% சிறுபான்மையினருக்கு பின்வருமாறு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

   - ✓ சிறுபான்மையினர் அல்லாதோர் நடத்தும் நிறுவனத்தில் ஒதுக்கப்படும் இடங்கள் 15% ல் 10% முஸ்லீம்களுக்கும் மீதியுள்ளதை 5% பிற சிறுபான்மையினருக்கும் ஒதுக்க வேண்டும்.

   - ✓ முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்டும் 10%ல் தகுதியான முஸ்லீம் மாணவர்கள் இல்லை எனில், பிற சிறுபான்மையினருக்கு அதை அளிக்கவேண்டும்.

   - ✓ பொதுத் தகுதி அடிப்படையில் திறனுடனும் அதிக மதிப்பெண்ணுடனும் சேர்க்கப்படும் முஸ்லீம் மாணவர்களது எண்ணிக்கையை இந்த இட ஒதுக்கீட்டில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

8. கல்வி நிறுவனங்களில் சேருவதற்கான சலுகைகளை தாழ்த்தப்பட்டோர் பெறுவது போல் முஸ்லீமை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கும் அளிக்க வேண்டும்.

9. முஸ்லீம் சமூகத்தினரது கல்வியை உயர்த்துவதற்கு பின்வருமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ✓ அலிகார்க் முஸ்லீம் பல்கலைக்கழகம் மற்றும் ஜாமியா மில்லியா பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் அனைத்து கல்வியையும் முஸ்லீம்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ✓ முஸ்லீம்களால் நிர்வகிக்கப்படும் அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் தரத்தினை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் அரசு நிதி உதவி செய்ய வேண்டும்.
- ✓ தற்சமயம் சமயக்கல்வியைத் தரும் மதரசாக்களை மேம்டுத்தி நவீன பொதுக்கல்வியை வழங்கச் செய்ய வேண்டும்.
- ✓ மவுலானா ஆஸாத் நிதி நிறுவனத்தால் வழங்கப்படும் நிதியை முஸ்லீம் இனத்தவரின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பகிர்ந்தளிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு சச்சார் கமிட்டி தனது பரிந்துரைகளை அளித்தது.

**தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு (2005) சிறப்பு அம்சங்கள்**

தேசிய கலைத்திட்ட வடிவமைப்புகள் 1975,1988,2000 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் NCERT – டெல்லி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டன. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு பின்வரும் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

1. தேசிய கலைத்திட்டத்தின் வடிவமைப்பின் கண்ணோட்டம்,
2. கற்றலும் அறிவும்,
3. கலைத்திட்ட பகுதிகள், பள்ளிக்கல்வி நிலைகள் மற்றும் மதிப்பீடு
4. பள்ளி மற்றும் வகுப்பறை சூழல்.
5. மேற்கொள்ளப்பட வேண்டிய முறையான சீர்திருத்தங்கள்

**தேசிய அறிவாண்மை ஆணையத்தின் தோற்றம்**

தேசிய அறிவாண்மை ஆணையம் என்பது இந்திய சிந்தனையாளர் சேமிப்பகம் எனக் கருதப்படலாம். மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசால் ஜூன் 2005-ல் உருவாக்கப்பட்டது. சாம் பிட்ரோடா தலைமையிலான எட்டு உறுப்பினர் குழு இவ்வாணையத்தில் பொறுப்பேற்றனர்.

இந்தியாவை அறிவுசார் பொருளாதாரத்தில் போட்டி இடுவதற்கேற்ற வகையில் மாற்றிடத் தேவைப்படும் கொள்கைகளை குறிப்பாக கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பாக பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கும் பணியை இவ்வமைப்பு ஏற்றுக்கொண்டது.

கல்வித்துறை மற்றும் ஆய்வுக்கூடங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள், அறிவுசார் உடைமை பற்றிய சட்டம் வகுத்தல் ஆகியவற்றோடு அரசே தனது செயல்பாடுகளில் அதி நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையை மேம்படுத்திக் கொள்ள உதவுவது குறித்தும் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட இந்த ஆணையம் பணிக்கப்பட்டது.

**தேசிய அறிவாண்மை ஆணையம் அளித்த பரிந்துரைகள்**

டிசம்பர் 2006-இல் இவ்வாணையம் அளித்த அறிக்கையில், அதன் பரிந்துரைகள் 5 தலைப்புகளில் இடம் பெற்றன.

**கல்வி பெறும் உரிமை அனைவருக்கும் கிடைத்தல்**

**கல்வி பெறும் உரிமை:** 86வது அரசியல் திருத்தச்சட்டம் கல்வி பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்கியுள்ளது. எனினும் இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும். அதை நிறைவேற்ற போதிய நிதி உதவியை மத்திய அரசு வழங்கவேண்டும். ஒவ்வொரு மட்டத்திற்கும் குறைந்தபட்ச கல்வித்தரங்கள் நிர்ணயிக்கப்படல் அவசியமானதாகும்.

**மொழி**: ஆங்கிலம் கற்றலும், அதைத் திறம்படி பயன்படுத்துதலும் உயர் கல்வி பெறுதலை நிர்ணயிக்கும் மிக முக்கியமான காரணி ஆகும். எனவே, தாய்மொழியோடு கூட ஆங்கிலத்தையும் முதல் வகுப்பிலிருந்தே கற்பிக்கத் தொடங்கலாம். ஆங்கிலம் கற்பித்தலை மேம்படுத்திட கிடைத்திடும் அனைத்து ஊடகங்களையும் வழக்கமான கற்பித்தல் முறைகளுக்கு வலுவூட்டும் உறுதுணையாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மொழிபெயர்ப்பு:** பல மொழிகள் பேசப்படும் நம் நாட்டில் அனைத்து மொழிப்பிரிவு மக்களிடமும் அறிவினை கொண்டு சேர்ப்பதில் மொழி பெயர்ப்பு சிறப்பிடம் பெறுகிறது. இதற்கென தேசிய மொழி பெயர்ப்பு பரப்பு இயக்கம் தொடங்கப்படல் வேண்டும். மொழிப் பெயர்ப்பாளர்களுக்கு முறையான பயிற்சியும், தேவைப்படும் வசதிகளும் கருவிகளும் வழங்கப்பட வேண்டும்.

**நூலகங்கள்:** நூலக மற்றும் தகவல் தொடர்பு சேவைகளை சீரமைத்து மேம்படுத்திட தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் நூலகங்களைப் பற்றிய விவரங்களை விரிவான சுற்றாய்வு மூலம் சேகரித்தல், அதிக அளவு சமுதாயப் பங்கேற்பை உறுதி செய்தல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்களை பல்வகை நூலகப் பணிகளுக்குப் பயன்படுத்தல் போன்ற மேம்பாடு நடவடிக்கைகளை செயற்படுத்தி தொடர்ந்த கண்காணிக்க தேசிய நூலக ஆணையம் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

**தேசிய அறிவு வலைப்பின்னல்:** வெற்றிகரமான ஆய்விற்கு உயிரோட்டமுள்ள கலந்துரையாடல்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் மூலகங்களை பகிர்ந்து கொள்ளல், அனைத்து அறிவு நிலையங்களையும் இணைத்தல் ஆகியவை தேவைபடுகின்றன. இதற்குத் தேவை மின்னியல் எண் வடிவிலமைந்த அகன்ற வழி வலைத்தடம் ஆகும். இது கிகாபிட்திறன் உடையதாக இருக்க வேண்டும்.

**தகவல் தளங்கள்**: தேசிய அளவிலான வலை தளங்கள் பின்வரும் முக்கிய துறைகளுக்காக உருவாக்கப்படல் வேண்டும்.

நீர்வளம், ஆற்றல், சுற்றுச்சூழல், ஆசிரியர்கள், வேளாண்மை, உயிரியல் பல்வகைமை, உடல்நலம், வேலைவாய்ப்புகள், குடிமக்களது உரிமைகள் போன்றவை இதில் அடங்கும். ஒவ்வொரு தகவல் தளமும் குறிப்பிட்ட துறை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பெற்று, தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் வகையில், அதனை நிர்வகிக்க அத்துறையைச் சார்ந்த வல்லுநர்கள், துறைத்தகவல்களைப் பெற்று பயனடையும் அனைத்து பிரிவினரின் பிரதிநிதிகள் ஆகியோரைக கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். அசிம்பிரேம்ஜி (விப்ரோ) ஆசிரியர்களுக்கான தகவல்தளத்தைத் தொடங்க ஆதரவளித்துள்ளார். தேசிய அறிவாண்மை ஆணையம் மேலும் பல தளங்களைத் தொடங்க ஊக்குவித்துள்ளது. இதன் காரணமாக நீர்வளத்திற்கான தகவல்தளத்தை உருவாக்கிட அர்க்யம் அறக்கட்டளையும், ஆற்றலுக்கான தகவல்தளத்திற்கு ஆற்றல் ஆய்வுக்கழகமும், சுற்றுசூழல் தகவல் தளத்திற்கு அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான ஆய்வு மையமும், உயரியப் பல்வகைக்கான தகவல் தளத்திற்கு அசோகா அறக்கட்டளையும் பொறுப்பேற்க முன்வந்துள்ளன.

**உடல்நலக் தகவல் வலைப்பின்னல்**: உடல்நலம் பேணும் மையங்கள் அனைத்தும் இணையதள வலைப்பின்னல் மூலம் தொடர்பு படுத்தப்படல் வேண்டும். எல்லா அரசு மற்றும் தனியார் உடல் நலம் பேணும் நிலையங்களும் மின்னியல் முறையில் இணைக்கப்படுதல்,

மருத்துவப் பதிவுகள், தகவல்கள், புள்ளிவிவரங்கள், தீர்வுகள் பற்றி விரைந்து தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள உதவும்.

**கருத்தாக்கங்கள்**

கல்வி முறைமை அறிவுசார் கருத்தாக்கங்களை ஒழுங்கமைத்துக் கொள்ளவும், பரப்பவும் உதவுகிறது. தனி நபரது வளர்ச்சிக்கும், நாட்டின் சமூக பொருளாதாரம் மேம்படுத்திட கல்வியே திறவுகோலாகும். எனவே தேசிய அறிவாணையம் பள்ளிக்கல்வி, உயர்கல்வி, தொழிற்கல்வி, தொழில்நட்பக் கல்வி என கல்வியின் அனைத்து அம்சங்களுக்கும் புத்துணர்ச்சி ஊட்டுவதில் கவனம் செலுத்துகிறது.

- **பள்ளிக்கல்வி:** தரமான பள்ளிக்கல்வியை அனைவருக்கும் கிட்டச் செய்தல் என்பதை நனவாக்க, தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியில் பேரளவு விரிவாக்கம் செய்ய வேண்டும். பள்ளிக் கல்வித்துறையில் அதிகாரப்பரவல், பள்ளி நிர்வாகத்தில் தன்னாட்சி, நிதி வழங்கலில் நெகிழ்ச்சித்தன்மை போன்றவை நீண்ட கால மாற்றங்களைத் தரவனவாகும். தரத்தையும், செயல் பொறுப்பையும் மேம்படுத்திட, அடிப்படை வசதிகளைப் பெருக்குதல், பள்ளித்தணிக்கையின் திறனை மேம்படுத்துதல், வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், பெற்றோர், மாணாக்கர், நிர்வாகம் ஆகிய அனைத்துக் கூறுகளும் சேர்ந்து செயல்படல் போன்றவை அவசிய மற்றும் அவசரத் தேவையாகும். வசதி உள்ள இடங்களில் தகவல் தொடர்பு, தொழில்நுட்ப அறிவு, அனைத்து ஆசிரியர்கள், மாணாக்கர், அலுவலகப் பணியாளர் ஆகியோருக்கு கிட்டச்செய்ய வேண்டும். தேசிய அறிவாண்மை ஆணையம், கலைத்திட்டத்தில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்தல். குருட்டு மனப்பாட முறையிலிருந்து கருத்துகளைப் புரிந்து கொள்ளும் வகையில் தேர்வுகளை மாற்றி அமைத்தல், ஆசிரியர்களது திறன், மேம்பாடு ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளது.

- **தொழில்சார் கல்வியும் பயிற்சியும்:** பொதுக்கல்விப் பிரிவுடனேயே தொழில்சார் கல்வியும் இணைக்கபடுதல் கல்வி முறையை நெகிழ்ச்சி உடையதாகவும், மேம்படுத்துவதாகவும் இருக்கும். அரசும் தனியாரும் ஒத்துழைக்கும் படிமம் இதற்கு உறுதுணையாக இருக்கும். தற்சமயம் தொழிலாளர்களில் 7% அளவினரே கட்டமைப்புக் கொண்ட தொழிற்பிரிவுகளில் பணியாற்றுகின்றனர். எனவே அமைப்பு சாராதா மற்றும் வழக்கமான தொழில்முறை சாராதா தொழிலாளருக்கு பயிற்சி தருதல் உற்பத்தித் திறனை அதிகரிக்கும். இத்தகையோருக்கான படிப்புகள் மற்றும் பயிற்சி தரும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தவும், பயிற்சிச் சான்றிதழ் தரவும் வலுவான முறைமை

தேவைப்படுகிறது. இது முறைசாரா தொழிலாளர்களும் உயர்கல்வி பெற்றிடும் வாய்ப்பை உருவாக்க வழிவகுப்பதாக இருக்கும்.

- **உயர்கல்வி:** இந்நிலையில் கவனம் பெற வேண்டியவை: 1. விரிவுபடுத்துதல், 2. மேன்மை, 3. அனைவரையும் ஏற்றல்.

2015க்குள் இந்தியாவில் 1,500 பல்கலைக்கழகங்களை ஏற்படுத்த வேண்டும். சுதந்திரமான உயர் கல்விக்கான ஒழுங்குமுறை அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

உயர்கல்வியின் தரத்தை உயர்த்த தற்போதுள்ள பல்கலைக்கழகங்களில் கலைத்திட்டத்தை அடிக்கடி மாற்றுதல், ஒவ்வொரு பாட உட்பிரிவிற்கும் தர மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்துதல், அக மதிப்பீட்டு முறையை மேம்படுத்துதல், ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், கல்வி நிறுவனங்களின் நிர்வாக செயல்பாடுகளை சீர்திருத்துதல் போன்ற நடவடிக்கைகள் தேவை.

தரமான பட்ட முன்படிப்புக் கல்வியைத் தர, பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளால் முடியவில்லை. இரண்டாண்டு துணை பட்டப்படிப்புகளை வழங்கும் சமுதாயக் கல்லூரிகளின் முன்மாதிரிகளை அரசு ஏற்படுத்த வேண்டும். இவை பொதுக்கல்வி, தொழில் சார்புடைய கல்வி ஆகிய இரண்டையும் தரலாம்.

சமூக பொருளாதாரக் காரணிகள் காரணமாக தகுதியுடைய எந்த மாணக்கனுக்கும், உயர் கல்வி கிடைக்காமல் போகக்கூடாது.

**கணிதம் அறிவியல் பிரிவில் திறன்மிகு மாணாக்கர் சேர்க்கை**: அறிவியல் மற்றும் ஆய்வுக்கு புத்துயிர் ஊட்ட திறன்மிகு மாணக்காரை கணித அறிவியல் பாடப்பிரிவுகள் ஈர்க்க வேண்டும். கட்டமைப்பு, ஆசிரியர் தரம், அறிவியல் முறைகளின் பரப்பு ஆகியவை மேம்படுத்தப்படல் வேண்டும். அனைத்து நிலை ஆசிரியர் பயிற்சிகளும் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும்.

**உயர்தொழில் கல்வி**: மருத்துவம், சட்டம், மேலாண்மை, பொறியியல் உட்பட எல்லா உயர் தொழில் கல்விப்பிரிவுகளும், பரிந்துரைக்கப்பட்டுள்ளன சுதந்திரமான உயர் கல்விக்கான ஒழுங்குமுறை ஆட்சி அமைப்பின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும். இத்துடன் நம்பகத்தகுந்த தர வரிசை அளித்திட, பல்வேறு தர சான்றளிக்கும் அமைப்புகளும் இயங்கிட வேண்டும். இவை தவிர, நிறுவனங்களுக்கு அதிக அளவு தன்னாட்சி அளித்தல், தற்சமயம், நடைமுறையிலுள்ள தேர்வு முறையைச் சீர்திருத்தம் செய்தல், கலைத்திட்ட மேம்பாடு மற்றும்

ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் ஆகியவையும் தொழில் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் வழிமுறைகளாகும்.

**தரமான முனைவர் படிப்புகள்**: பி.எச்டி என்னும் ஆய்வு நிறைஞர் பட்டம் உயர்தரமுடையதாக்கப்படல் வேண்டும். பல்வேறு கல்விப் பிரிவுகளுக்கிடையே இடைவினை அதிகரிக்க வேண்டும். கல்வியின் எல்லா நிலைகளுக்கும் ஆராய்ச்சிக்கும் பெருமளவு முதலீடு தேவைப்படும். ஆராய்ச்சிக்கேற்ற இயல்புச் சூழல் ஏற்பட தேசிய ஆராய்ச்சிப் பணி இயக்கம் துவக்கப்படல் வேண்டும்.

**திறந்த நிலை, தொலைநிலைக் கல்விகள் மற்றும் திறந்தநிலை கல்வி மூலகங்கள்:** உயர் கல்வியில் ஐந்தில் ஒரு பங்கு மாணாக்கர் திறந்த நிலை, மற்றும் தொலைநிலைக் கல்வியில் பயில்கிறார்கள். தொலைநிலைக் கல்வியில், தேசிய தகவல் தொடர்பு தொழில் நுட்ப கட்டமைப்பை ஏற்படுத்துதல், வலைப்பின்னல்கள் வழியே சுலபமான தகவல்களை இலவசமாக பெற வாய்ப்பு ஏற்படுத்ததல், பணி மைய சேவையை பயன்படுத்துதல் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். தரமான பாடப்பொருள்களைத் தயாரித்தலும், அனைவருக்கும் பயன்படும் உலகளாவிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பருவ இதழ்கள் ஆகியவற்றை நூலகங்களில் இடம் பெறச் செய்தலும் வேண்டும்.

**படைப்பு**

புதிய அறிவை உருவாக்கலும் ஏற்கனவே உள்ள மூலகங்களைப் பாதுகாத்தலும், உலகளாவிய அறிவுசார் பொருளாதாரத்தில் போட்டியிட எந்தவொரு நாட்டிற்கும் இன்றியமையாததாகினறன.

**அறிவுசார் சொத்துரிமைகள்**: உலகத்திற்கே அறிவுத்தலைமை ஏற்க இந்தியா தயாராக வேண்டும். உலகத்தரம் வாய்ந்த அறிவுசார் சொத்துரிமை அமைப்பு தேவை. இத்துறையில் பயிற்சிதர பள்ளிகளும்,தனி அலுவலகங்களும் தேவை. இந்திய மரபுவழியான அறிவுச்செல்வங்களைப் பாதுகாப்பதுடன் புதிய தொழில்நுட்பப் பகுதிகளில் முக்கிய அறிவுச் சொத்துரிமைகளையும் அடையாளம் காண வேண்டும். (புதிய கண்டுபிடிப்புகளுக்கும், படைப்புகளுக்கும் காப்புரிமை பெறுவதால் ஏராளமான வருவாய் கிட்டும்).

**பொது நிதி உதவி மூலம் பெறப்பட்ட ஆய்வுகள்**: பல்கலைக்கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் தங்களது ஆராய்ச்சி முடிவுகள் மூலம் பெரும் தொகை ஈட்ட உதவிடும் வகையில், காப்புரிமை பெறுவதற்கான சட்ட அமைப்பு உருவாக வேண்டும். கண்டுபிடித்தவர்களுக்கும், வருவாயில் ஒரு பகுதி கிடைக்க வேண்டும். தேசிய அறிவியல் மற்றும் சமூக அறிவியல் அறநிறுவனம் ஏற்படத்தப்பட வேண்டும்.

**புதுமை காணல்:** கலைத்திட்டத்தில் புதுமை காணும் திறனை வளர்க்க வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இவ்வாய்ப்புகள் உருவாக்கபடின் தொழில் நிறுவனங்கள், அரசு, கல்வி அமைப்பு ஆகியவை சீரிய முறையில் இணைந்து செயல்பட முடியும்.

**தொழில் முனைப்பு:** புதிய தொழில்களைத் தொடங்கி, இயக்கும் ஆற்றலும், துணிவும் வளர்க்கப்பட ஒற்றைச் சாளர முறையின் மூலம் அனுமதியும் வசதிகளையும் பெறச் செய்திட வேண்டும். அனுமதி நடைமுறைகள் எளிமையாக்கப்படல் வேண்டும். தொழில் முனைப்பு பற்றி பள்ளி, கல்லூரிகளில் அறிமுகப்படுத்த வேண்டும்.

**பயன்படுத்தல்**

அறிவுத்திறன், சமூகத்தை மேம்படுத்தப் பயன்பட வேண்டும்.

**மரபுவழி வந்த மருத்துவமுறைகள்**: அகில இந்திய மருத்துவக் கல்வி நிறுவனம், இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம் போன்றவற்றின் தரத்தை உடைய கல்வி நிறுவனங்கள் மூலம், சான்றுகள் அடிப்படையில் மரபுவழி மருத்துவ முறைகளின் செயல்திறனை மதிப்பிடும் கலைத்திட்ட வடிவமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

**வேளாண்மை:** வேளாண்மை ஆராய்ச்சி நவீனப்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

**வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்**: கிராம மக்கள் தரம்வாய்ந்த வாழ்வினை நடத்த உதவ வேண்டும். கிராம வேலை வாய்ப்புத் திட்டங்கள், புதிய தொழிற்கருவிகளை வடிவமைத்தல், தொழிலாளரது மதிப்பை உயர்த்துதல், தொழிலாளர்களது உற்பத்தித்திறனை அதிகரித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

**பணிகள்**

அரசு நேர்முகத் தொடர்பு அதிகரிக்கப்பட, மக்களனைவருக்கும் அறிவுசார் தொண்டுகள் எளிதாக கிட்டச் செய்ய வேண்டும். இதற்கு அரசு செயல்பாடுகளில் மின்னியல் ஆட்சியை செயல்படுத்த வேண்டும்.

**மின்னியல் ஆட்சிமை**: இது கணினி மயமாக்குதலை மட்டும் குறிக்காது. நாட்டின் குடிமக்களை மையமாகக் கொண்டு அரசின் அனைத்து சேவைகளையும் திறமையாகவும், விரைவாகவும், எளிமையான செயல்கள் வாயிலாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் அளித்திடும் வகையில் அரசின் செயல்பாடுகளை உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றியமைத்தலைக் குறிக்கிறது. தொடக்கத்தில் மக்கள் அதிகம் பயன்படுத்தும் 10 அரசு சேவைத் துறைகளை

தேர்ந்தெடுத்து மின்னியல் ஆட்சிமையை புகுத்திடலாம். பின்பு படிப்படியாக ஏனைய துறைகளுக்கும் விஸ்தரிக்கலாம்.

தேசிய அறிவாண்மைக் கழகத்தின் பரிந்துரைகள் செயல்வடிவம் பெறத் தொடங்கியுள்ளன. மக்களின் நல்வாழ்வில் ஈடுபாடு கொண்ட டாக்டர் அப்துல்கலாம் அவர்களது கனவான அறிவார்ந்த சமுதாயத்தை நோக்கி இந்தியா பயணிக்கத் தொடங்கிவிட்டது.

**முடிவுரை**

இவ்வலகில் சுதந்திர இந்தியாவில் கல்வியை சீரமைத்து மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கோத்தாரி தயாரிப்பில் அமைந்த கல்விக்குழு 10+2 கலைத்திட்டத்தை மீள் ஆய்வு செய்திட ஈஸ்வர்பாய் பட்டேல் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பள்ளி கல்வியை தொழிற்சார்புடையதாக்கிடுவதற்கான பரிந்துரைகளை அளிக்க அமைக்கப்பட்ட மால்கம் ஆதிசேஷையா தலைமையிலான குழு தேசிய கல்விக்கொள்கை (1986) தேசிய கல்விகொள்கைக்கான செயல்திட்டம் (1992) தேசியகலைத்திட்ட அமைப்பு (2005) சச்சார் கமிட்டி தேசிய அறிவாண்மை ஆணையம் ஆகியவற்றின் பங்கு பயிலும் பரிந்துரைகளும் விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

## விவதாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள்:

1. கோத்தாரிக் குழுவின் அறிக்கையை விரிவாக விளக்குக.
2. தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு (2005) பற்றி விரிவாக விவரி.
3. தேசிய அறிவுசார் ஆணையத்தின் பரிந்துரையை விவரி.
4. சச்சார் கமிட்டியின் பரிந்துரைகளை விவரி.
5. தேசிய கல்விக்கொள்கையை பற்றி விவரித்து எழுதுக.

&&&&&&

# அலகு - 7 கல்வித் திட்டமிடுதலும் நிதியும்

**நோக்கங்கள்:**

இவ்வலகின் முடிவில் கற்போர் :

1. ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அறிவை பெறுவர்.
2. கல்விக் கொள்கை உருவாக்குதல் மற்றும் நிதி ஒதுக்கீடு போன்ற கருத்துக்களை புரிந்து கொள்வர்.
3. நிதி ஒதுக்கீடு செய்வதில் உள்ள பலமுறைகளை கண்டுகொள்வர்.

**முன்னுரை**

ஒரு நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சியில் கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பல துறைகளில் உயரிய பண்புகள் உள்ள பணியாளர்களை தேவையான அளவில் கிடைக்குமாறு செய்ய இயலும் வகையில் தகுந்த கல்வி அமைப்பினை தயார் செய்ய வேண்டும். திட்டத்தின் பொதுவான குறிக்கோள்களை அடைவதிலும் கல்விக்கு முக்கிய பங்கு உள்ளது. அதுவே பணியாளர்களின் தரத்தையும் சமுதாயத்தின் சமநிலையையும் தீர்மானிக்கின்றது. ஜனநாயக அமைப்பில் கல்வியின் பங்கு மிக முக்கியமானது. நாட்டின் வாழ்வாதாரங்களில் பொது மக்கள் பங்கேற்றால் மட்டுமே அது சிறப்பாக செயல்படமுடியும். கலைகள், இலக்கியங்கள், மற்ற படைப்பு செயல்கள் இவற்றை கூர்ந்து நோக்கி பாராட்டும் திறனை வளர்க்க வேண்டும்.

**கல்வித் திட்டமிடுதல்**

கல்வித் திட்டமிடுதல் என்பது குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைய தேவையான செயல்களைப்பற்றி முடிவெடுக்கும் வழிமுறையாகும்.

கல்வித் திட்டமிடுதல் என்பது முன் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை குறைவாக உள்ள வளங்களை சிறப்பாக பயன்படுத்தி அவற்றை அடைவதற்கான எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழிமுறையாகும்.

கல்வித் திட்டமிடுதல் என்பது தெளிவான குறிக்கோள்களை தேர்ந்தெடுக்கும் அறிவுப் பூர்வமான செயல் மற்றும் அவற்றை அடைவதற்கான சிறப்பான வழிமுறைகளை தேர்ந்தெடுத்தல், இவற்றைத் தொடர்ந்து நடைமுறை செயல்களை பின்பற்றுதல் ஆகும்.

**கல்வித் திட்டமிடுதலின் அவசியம்**

ஒரு நல்ல கல்வித்திட்டம் நிர்வாக இயந்திரத்தை (அமைப்பை) சீர்திருத்தவும் கல்வி ஸ்தாபனங்களின் வசதிகளை முன்னேற்றம் செய்யவும், ஆசிரியர்களின் திறமையை அதிகரிக்கவும், பொது மக்களை கல்வி வளர்ச்சியில் ஈடுபடுத்தவும் தேவைப்படுகிறது. கல்வியை விரிவு படுத்தவும், நல்ல தரத்தை அடையவும் ஒருங்கிணைந்த முயற்சிகள் செய்யப்பட வேண்டும். கிராமத்திலுள்ள ஏழை மக்களிடையேயும் மற்றும் பெண்களிடையேயும் கல்வியைப் பரப்ப சிறப்பான கவனம் கொடுக்கப்பட வேண்டும்.

1. மக்கள்தொகை விரைவாக அதிகரித்ததற்கான தாக்கம், தொழிலாளர்களின் தேவை, சூழ்நிலை, குறைந்துவரும் தேசிய வளங்கள், ஒழுங்கற்ற முறையில் ஏற்படும் அறிவியல் வளர்ச்சி, தனி நபருக்கும் நாட்டிற்கும் உதவியாக இருந்த முன்னேற்றங்களை விரைவாகவும், குறைந்த வகையிலும் முன்னேற்ற வேண்டிய அவசியம் ஆகியவைகளால் கல்வித்திட்டமிடல் தேவையாகிறது.
2. கல்வித்துறையில் பயன்டுத்தப்படும் வளங்கள் குறைவாக உள்ளதால், குறிக்கோள்களை குறிப்பிட்ட காலத்தில் அடைய தேவைப்படும் செயல்களை முன்னதாக தீர்மானிக்க வேண்டியுள்ளது.
3. தகுந்த பொதுமான திட்டங்கள், அலுவலர்களின் செயல்களை ஒருங்கிணைத்து அதிகபட்ச திறன் பயன்படுத்துதல் மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு உதவுகின்றன.
4. திட்டமிடல் நிர்வாக முடிவுகளுக்கு அவசியமாகிறது.
5. திட்டமிடல் ஒரு நாடு குறிக்கோள்கள் பற்றிய தகுந்த தேர்வுகளை செய்ய உதவுகிறது.

**கல்வித் திட்டமிடுதலின் முக்கியத்துவம்**

1. ஒரு கல்வி நிறுவனத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிறைந்த வெற்றியாக ஆக்குதல்.
2. செயல்களை செய்வதில் ‘‘முயற்சி மற்றும் பிழை’’ முறையை தவிர்த்து பிரச்சினைகளைத் தீர்க்க கல்வித் திட்டமிடல் ஒரு சிறந்த முறையாகும்.
3. கிடைக்கும் வளங்களை சிறப்பாக பயன்படுத்த கல்வித் திட்டமிடல் அவசியம் ஆகிறது.
4. வீணாகுவதையும், தோல்வியையும் கட்டுப்படுத்தி, கல்வி முறையின் நிர்வாகத்தை திறமையானதாகவும், எளிதானதாகவும் செய்கிறது.
5. முறையான கல்வித் திட்டமிடல் மூலம் ஒரு தனிநபரின் வாழ்க்கைமுறை, அறிவு, திறன், கலாச்சாரம் இவற்றை பாதுகாத்து வளர்க்க உதவுகிறது.
6. ஒருவருடைய கல்விப்பயணம் குறிக்கோள் உள்ளதாகவும், பயனுள்ளதாகவும் அமைய கல்வித் திட்டமிடல் மிக அவசியமாகிறது.
7. கல்வியின் குறிக்கோள்களை அதிக அளவில் அடைய சிறந்த வழிமுறைகளை அமைக்கிறது.
8. கல்வி நிகழ்ச்சியின் குறிக்கோள்களை அடைவதற்கான முடிவுகளை எடுக்க உதவுகிறது.
9. சமூகவியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் போன்ற பல பிரிவைச்சார்ந்த திறனாளிகளின் நோக்கங்களுக்கு சமமான முக்கியத்துவம் அளிக்கிறது.

**கல்வியின் நிதியுதவி**

நிதியுதவி என்பது வியாபார செயல்கள், விலைக்கு வாங்குதல், முதல் செய்யுதல் ஆகியவற்றிற்காக முதலை வழங்குதல் என வரையறை செய்யப்படுகிறது. நிதி

நிறுவனங்களும் வங்கிகளும் நிதியுதவி தொழிலை செய்கின்றன. அவை வியாபாரம் செய்வோர், நுகர்வோர், முதலீடு செய்வோர் ஆகியோர் தம் குறிக்கோள்களை அடைய உதவும் வகையில் தேவையான மூலதனத்தை அளிக்கின்றன. ஒரு நாடு கல்விக்காக அளிக்கும் மூலதனம், இந்த ஒவ்வொரு மூலத்திலிருந்து வரும் பொருளுதவியின் மொத்த அளவாகும்.

**கல்விக்கான பொருளுதவியின் முக்கிய கொள்கைகள்**

1. கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி கல்வி செலவு திட்டத்தால் தீர்மானிக்கப்படுகிறது. கல்வித் துறைக்குள் பல பகுதிகளின் முக்கியத்துவம் தீர்மானிக்கப்பட வேண்டும்.
2. நாட்டில் உள்ள பொருளாதாரம், மனித வளம் இவற்றிற்கு ஏற்றபடி கல்வி முன்னேற்றம் செய்யப்பட வேண்டும்.
3. எதிர்பார்க்கும் மனிதவள தேவைகளுக்கு ஏற்ப, பொருளாதார மாற்றங்களை கவனமாக ஆய்வு செய்து, முக்கியமான கல்வி வகைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதன் மூலம் நிறை நிதி பலன்கள் கிடைப்பதுடன், மனித மற்றும் பொருட்கள் சார்ந்த வளங்களை வீணாக்குதல் தவிர்க்கப்படும்.
4. சமுகத்தின் இளைஞர்கள், முதிர்ச்சி பெறாதவர்கள் ஆகியோர் முன்னேற கல்வியை குறைந்த செலவில் அளிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.
5. தனி நபரின் வளர்ச்சிக்காக சமமான வாய்ப்புகளை கொடுக்க கல்விக்கு முறையாக பொருளுதவி வழங்க வேண்டும்.
6. இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்.
7. உடல் திறனை வளர்க்கும் செயல்கள், நூலகங்களில் படிக்கும் அறைகள், மதிய உணவுத்திட்டம் ஆகியவற்றிற்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
8. நாட்டிற்கு பல்வேறு துறைகளில் தேவைப்படும் திறன் படைத்த நபர்களின் நிதி ஒதுக்கீடு தீர்மானிக்கப்பட வேண்டும்.
9. உயர்ந்த தரம், விற்பனைத்திறன் கொண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் நம் பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டும்.
10. குடிசைத்தொழில்கள் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இது கல்விக்கு ஆகும் செலவில் சிலவற்றை திரும்ப பெற உதவும்.
11. உபகரணங்களின் செலவை குறைக்க புதிய பொருட்களை உண்டாக்க வேண்டும். இது போல் செய்ய ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்க வேண்டும்.
12. பள்ளிக்கட்டிடம் அமைப்பதில் மிகுந்த நிதி செலவிடப்பட வேண்டும். அது மிக துரிதமாக செயல்படுத்தப்பட வேண்டும். இது கல்வியின் மதிப்பை உயர்த்தும்.

**ஐந்தாண்டுத் திட்டங்கள்: கல்விக்கொள்கைகளை உருவாக்குதல், நிதி ஒதுக்கீடு**

**முதல் ஐந்தாண்டுத் திட்டம்**

தற்போது நிலவும் சூழ்நிலையை ஆராய்வு செய்ததில் கீழ்கண்ட அம்சங்கள் குறிப்பாக கவனிக்கப்பட வேண்டும்.

1. மக்கள் தொகையின் அளவைக்கருதும்போது, கொடுக்கப்பட்டுள்ள கல்வி வசதிகள் போதுமானவை அல்ல. அவை 6-11 வயது குழந்தைகளில் 40 சதவிகிதம் பேருக்கும், 11-17 வயதினருக்கு 10 சதவிகிதமும், 17-23 வயதினருக்கு 0.9 சதவிகிதமும் அளிக்கப்படுகிறது. இலவசக் கட்டாயக்கல்வி எல்லா குழந்தைகளுக்கும் 14 வயது வரை 10 ஆண்டுகளுக்குள் தரப்பட வேண்டும். மேலும் அதிகமான மாணவர்கள் தொடக்கப்பள்ளியை முடித்து வருவதால் உயர் நிலைப்பள்ளிகளில் வசதியை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உருவாக்குகிறது. நம் மக்களில் 17.2 சதவிகிதத்தினர் மட்டும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்பது சமூகத்தின் கல்வியில் நம்முன் இருக்கும் மிகப்பெரிய பணியைக் காட்டுகிறது. இதை போல் தொழிற்கல்விக்கான வசதிகள் அதிக அளவு விரிவுபடுத்த வேண்டும்.
2. நல்ல முறையான பங்கீட்டு அமைப்பின்படி பார்த்தால் செலவின் மிகுந்த பங்கு தொடக்க நிலைக்கே ஒதுக்கப்பட வேண்டும்.
3. கல்வியில் வெவ்வெறு நிலைகளில் வெவ்வெறு வழிகளில் ஏற்படும் வீணடிப்பு மற்றொரு விரும்பத்தகாத அம்சம் ஆகும். தொடக்க கல்வியில் ஏராளமான மாணவர்கள் எழுதப்படிக்க கற்றுக் கொள்ளும் முன் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். அதேபோல் ஒரே வகுப்பில் மாணவர்கள் பல ஆண்டுகள் இருப்பதும் ஒரு பிரச்சினை ஆகும். கற்பித்தலின் தாழ்வான தரம், மற்றும் தவறான கற்பிக்கும் முறை, திட்டமிடப்படாமல் வளரும் கல்வி நிறுவனங்கள் ஆகியவை மற்றொரு பிரச்சினை ஆகும்.
4. ஆசிரியர்களில் மிகுந்த சதவிகிதத்தினர் பயிற்சி இல்லாதவர்களாக உள்ளனர். கல்வியில் மறுசீரமைப்பதற்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தக்கவைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.
5. கல்வி உதவித்தொகை அளிப்பதன் அளவை அதிகரிக்க வேண்டும். உயர் கல்வி பெற தகுதியுள்ள எவரும் அதிலிருந்து விலக்கப்பட கூடாது என்பது மாநிலத்தின் கொள்கையாக இருக்க வேண்டும். மாநிலத்தின் குறைந்த பொருளாதார வளங்கள் இதற்கு தடையாக இருக்கும் என்பதால், மாணவர்கள் தம் கல்விச் செலவுகளை சமாளிக்க பகுதிநேர பணிவாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்.
6. ஒரு நாட்டின் கலாச்சார, அரசியல் தனித்தன்மையை வளர்ப்பதற்கு கல்வி அமைப்பு உதவ வேண்டும்.
7. நம் கல்வி நிறுவனங்களிலும், சமூக கல்வி நிகழ்ச்சிகளிலும், திட்டமிட்ட வளர்ச்சியின் பொருள் பற்றியும், ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் கற்பிக்க வேண்டும்.

**மொத்ததில் இன்றைய சூழ்நிலையின் முக்கிய தேவைகள்**

1. கல்வித்திட்டத்தை மாற்றி அமைத்தல் மற்றும் அதன் வெவ்வேறு நிலைகளை ஒருங்கிணைத்தல்.
2. அடிப்படை சமூகக்கல்வி, மாற்றியமைக்கப்பட்ட இடைநிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆகிய அம்சங்களை கொண்டு வருதல்.
3. தற்போதுள்ள இடைநிலைக்கல்வி, பல்கலைக்கழக படிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் மற்றும் கிராமப்பகுதிகளின் தேவைகேற்ற உயர் கல்வி முறையை அமைத்தல்.
4. பெண்களின் கல்விக்கான வசதிகளை, குறிப்பாக கிராமப்பகுதிகளில் விரிவுபடுத்துதல்.
5. பின் தங்கிய மாநிலங்களுக்கு பொருளாதாரம் அளிப்பதில் முன்னுரிமை அளித்தல்.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அடிப்படைக்கல்விக்கு முக்கியத்துவம், தொடக்க கல்வியை விரிவு படுத்தல், இடைநிலைக்கல்வியை பலதரப்பட்டதாக செய்தல், கல்லூரி, பல்கலைக்கழக கல்வியின் தரத்தை முன்னேற்றல், தொழிற்கல்விக்கான வசதிகளை அதிகரித்தல், கல்வி, கலாச்சார திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு வழி செய்கிறது. மத்திய அரசாலும், மாநில அரசாலும் கல்வியின் பல பிரிவுகளுக்கு, முதல் மற்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் நிதியை பிரித்தளித்த விவரங்கள் கீழ்வருமாறு.

| **வ.எண்** | **கல்வியின் வகை** | **முதல் ஐந்தாண்டுத் திட்டம் (தொகை கோடியில்)** | **இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (தொகை கோடியில்)** |
|---|---|---|---|
| 1. | தொடக்க கல்வி | 93 | 89 |
| 2. | இடைநிலைக்கல்வி | 22 | 51 |
| 3. | பல்கலைக்கழக கல்வி | 15 | 57 |
| 4. | தொழிற்கல்வி | 23 | 48 |
| 5. | சமூக கல்வி | 5 | 5 |
| 6. | நிர்வாகம் மற்றும் இதர வளங்கள் | 11 | 57 |
| | **மொத்தம்** | **169** | **307** |

மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளை தவிர இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய வளர்ச்சி மற்றும் சமுதாய திட்டங்களுக்கு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் பொது கல்விக்கு 12 கோடியும், சமூக கல்விக்காக 10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்**

விரைவான பொருளாதார முன்னேற்றம், தொழில் நுட்ப முன்னேற்றம் அடையவும் சுதந்திரம், சமூகநீதி, சமவாய்ப்புகள் ஆகிய பண்புகளின் அடிப்படையில் அமைந்த சமூக அமைப்பை உருவாக்கவும் உதவ ஒரு முக்கிய அம்சம் கல்வியாகும். கல்வித்திட்டங்கள், குடிமக்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், மக்களின் சக்தியை தூண்டவும், ஒவ்வொரு நாட்டின் இயற்கை மற்றும் மனிதவளம் இவற்றை வளர்க்கவும் கல்வி அவசியமாகிறது. கடந்த ஆண்டுகளின் முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சியை தூண்டுவதாக இருந்த போதிலும், முன்னேற்றம் தொடர்ந்து நடைபெற கல்வியில் உள்ள குறைகள் நீக்கப்பட வேண்டும்.

கல்வி துறையில் மூன்றாவது திட்டத்தில் 6-11 வயதுள்ள எல்லா குழந்தைகளுக்கும் கல்வியளிக்க தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், இடைநிலைக்கல்வி மற்றும் பல்கலைக்கழகங்களில் அறிவியல் கற்பித்தலை நீட்டித்தல் மற்றும் முன்னேற்றம் செய்தல், தொழிற்கல்வியை வளர்த்தல், ஒவ்வொரு பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க தேவையான வசதிகளை அதிகரித்தல், கல்வி உதவித்தொகை போன்ற வசதிகளை அதிகரித்தல் ஆகியவை முக்கியமாக அமைக்கப்படுகின்றன. தற்போதுள்ள மாணவர்கள், மாணவிகளுக்கிடையே நிலவும் கல்வி முன்னேற்ற ஏற்றத்தாழ்வுகளை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழக கல்வியை மூன்றாண்டு பட்டப்படிப்பாக மாற்றி அமைத்தல் நிறைவேற்றப்படும். கல்வியின் எல்லா நிலைகளிலும் அடிப்படைத்திறன், தேசிய ஒருமைப்பாட்டு வளர்ச்சி, ஆகியவை முக்கியமாக கருதப்பட வேண்டும்.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்**

கடந்த எட்டு ஆண்டுகளில், கல்வியின் எல்லா நிலைகளிலும் வளர்ச்சி ஏற்ப்பட்டுள்ளது. 1-5ம் வகுப்புகளில் சேருவோரின் எண்ணிக்கை 1960 – 61ல் 35 மில்லியனிலிருந்து 1968-69ல் 55.5 மில்லியனுக்கும், 6-8 வகுப்புகளில் 6.7 மில்லியனிலிருந்து 12.3 மில்லியனுக்கும் பல்கலைக்கழக கல்வியில் 0.74 மில்லியனிலிருந்து 1.69 மில்லியனுக்கும் உயர்ந்துள்ளது. 1964–66 கல்விக்குழுவின் பரிந்துரைகள் தேசிய கல்விக் கொள்கையின் அடித்தளமாக அமைந்து, திட்ட செயல்களை உருவாக்க வழிமுறையை அளிக்கிறது. மத்திய மாநில அரசுகள் பாடத்திட்டத்தை உயர்த்தவும், பாடப்புத்தகங்கள், கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும் சில முயற்சிகளை எடுத்துள்ளன. கல்வி, தொழில் பற்றிய வழிகாட்டுதலை அளிக்கவும், அறிவியல் துறை, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சி இவற்றிற்கு தேவையான வசதிகளை வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்வி உதவித்தொகை, இலவச படிப்பு ஆகியவை வெகுவாக அதிகரிக்கப்பட்டு, குறிப்பாக பின் தங்கிய வகுப்பினருக்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் ஊதிய நிலைகள், பணி சூழல்கள் ஆகியவற்றில் முன்னேற்றம் செய்யப்பட்டள்ளது.

**ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்**

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு மற்றும் சக்தி இவற்றில் ஓரளவு சுய தேவையை பூர்த்தி செய்ய திட்டமிட்ட செயல் முறைகள் அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை உருவாகியது. நாட்டினுள்ளும், உலக அளவிலும் ஏற்பட்டுள்ள பணவீக்கத்தை கட்டுப்படுத்த முதலிடம் கொடுக்க வேண்டி மற்ற எல்லா குறிக்கோள்களையும் ஒதுக்கி வைக்க வேண்டிய நிலை உருவானது. 1974 - 75க்கு இடைப்பட்டபகுதியில் நாம் பணவீக்கத்திற்கான திட்டத்தை உருவாக்கலாம். இதன் விளைவாக மத்திய மாநில அரசுகள் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பணவீக்க கட்டுப்பாட்டில் நம் வெற்றி உலக கவனத்தை ஈர்த்தது. உணவுப்பொருள்கள் உற்பத்தி எப்போதும் இல்லாத அளவில் 118 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் எல்லா பகுதியினருக்கும் நன்மை ஏற்ப்பட்டுள்ளது. நிலக்கரி உற்பத்தி, உர உற்பத்தி நிறுவனங்களின் செயல்களிலும் வெகுவான முன்னேற்றம் ஏற்பட்டது. பொருளாதாரத்தின் சில பகுதிகளில் தேவைக்கு அதிகமான உற்பத்தி ஏற்பட்டது.

**ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்**

மக்களின் வாழ்க்கை நிலை, நடத்தை இவற்றை முன்னேற்றவும், தனி நபர்களின் புத்தி கூர்மை, சமுதாய உணர்ச்சிகளின் வளர்ச்சி இவற்றிக்கு உதவவும், அவர்களின் அன்றாட அடிப்படை தேவைகளை எதிர்நோக்கும்படி செய்யவும் கல்வியே ஒரு சிறந்த சாதனம் ஆகும். **மனிதவள மேம்பாட்டுத்திட்டங்கள் நான்கு அம்ச குறிக்கோள்களை பெற்றுள்ளன**

1. தனிநபர்களை பொறுப்புள்ள குடிமக்களாக இருக்க தயார் செய்தல்.
2. அவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல், தம் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வளர்ச்சி முறைகள் இவைகள் பற்றிய உணர்வை ஏற்படுத்துதல்.
3. ஒரு நல்ல நாட்டை உருவாக்கத் தேவையான நன்னடத்தை, சமூக கலாச்சார பண்புகள் பற்றிய உணர்வை ஏற்படுத்துதல்.
4. தேசிய வளர்ச்சிக்கு தேவையான பயனுள்ள திட்டங்களுக்கு உதவ தேவையான திறன்கள், பண்புகள் அறிவு வழங்குதல் ஆகியவை அடைவதற்காக கல்வித்திட்டம் குறிப்பிட்ட குறிக்கோள்களை நோக்கி செயல்பட வேண்டும். அவற்றில் கீழ்கண்டவை அடங்கும்.
    i. சமூக நல்லின முன்னேற்றத்திற்கான செயல்களில் அனைவரையும் பங்கு பெறச்செய்தல்.
    ii. மக்களின் உடல், சிந்தனை, கலாச்சார வளர்சிக்கான வாழ்நாள் முழுவதும் தொடரும் கல்வியை அளிக்கவும் சமூக மாற்றங்களை எதிர்கொள்ள தேவையான திறன்களை உண்டாக்கவும் முயற்சி எடுத்தல்.
    iii. சமுதாயத்தின் பொருளாதாரம், சமூக குறிக்கோள்களை கருத்தில் கொண்டு கல்வி, வேலைவாய்ப்பு, முன்னேற்றம் இவற்றிற்கிடையே ஒரு பயனுள்ள தொடர்பை ஏற்படுத்துதல்.

iv. மதசார்பின்மை, ஜனநாயகம், உழைப்பு ஆகியவற்றின் மீது நம்பிக்கை ஏற்படுத்துதல்.

v. தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கேற்றலை வளர்த்தல்.

vi. கலாச்சாரம், கல்வி, தேசிய ஒருமைப்பாடு இவற்றை தாண்டி கலை, இசை, கவிதை, நடனம், நாடகம், நாட்டுப்புறக்கலை இவற்றின் வளர்ச்சிக்கு உதவுதல்.

**ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்**

எந்த முனனேற்ற திட்ட அமைப்புகளிலும் மனிதவள மேம்பாடு முக்கிய அங்கமாக கருதப்பட வேண்டும். 1968-ல் தேசிய கல்விக் கொள்கையின் மீது எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இந்திய விடுதலைப் போராட்ட தலைவர்கள் கல்வியின் அடிப்படை பங்கை உணர்த்தினர்.

i. கல்வி வாய்ப்புகளை தொடந்து முயலுதல்.

ii. எல்லா நிலைகளிலும் கல்வியின் தரத்தை உயர்த்த தீவிரமாக தொடர்ந்து முயற்சித்தல்.

iii. கல்வி தொழில் நுட்ப வளர்ச்சிக்கு முக்கியத்துவம்.

**எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்**

மேலான சமூக பொருளாதார வாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் பொருத்தமான பயனுள்ள சூழ்நிலையை உருவாக்குகிறது. நம்நாடு இதுவரை அனைவருக்கும் தொடக்கநிலை கல்வி, எழுத்தறிவில்லாமையை ஒழித்தல், முதியோர் கல்வியில்லாமையை ஒழித்தல் ஆகிய குறிக்கோள்களை அடையாத போதிலும் 1991ம் ஆண்டின் கணக்கெடுப்பு 52 சதவிகிதம் கற்றோரின் அளவையும், பெண்கல்வி விகிதம் அதிகமாக உள்ளதையும் காட்டுகிறது. இது மிகவும் ஊக்குவிப்பதாக உள்ளது. எட்டாவது திட்ட காலத்தால் நாடு தன் நீண்டகால கல்விக் குறிக்கோள்களை அடைவதிலும் உயர்ந்த விகித பொருளாதார வளர்ச்சி முயற்சிகளுக்கு உதவும் வகையிலும் செயல்பட தயாராக உள்ளது.

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்**

மனித வளர்ச்சியில் கல்வியே மிக முக்கிய மூலதனம் ஆகும். மக்களின் வாழ்க்கை தரத்துடன் தொடர்புள்ள ஆரோக்கியம், சுகாதாரம், உற்பத்தி ஆகியவற்றின் முன்னேற்றத்தை கல்வி வெகுவாக தீர்மானிக்கின்றது.

பிரதம மந்திரியின் சிறப்பு நடவடிக்கை திட்டம், சமூக வசதிகளை விரிவுபடுத்துல், முன்னேற்றம் செய்தலின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. நாட்டின் சட்டத்தில் கூறியபடி 5ம் வகுப்பு வரை இலவச கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துதல், நம் குறிக்கோள்கள் பற்றி இறுதிநிலை வரை எல்லோருக்கும் சமமான வாய்ப்பு வழங்குதல், தொடக்க கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை எல்லா நிலைகளிலும் கல்வியின் தரத்தை உயர்த்துதல்.

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனிக்கப்படும் பிரச்சினைகள்**

a) ஆசிரியர் பயிற்சி, பணிமுன் பயிற்சி, பணியிடைப் பயிற்சி ஆகியவற்றில் தொடக்க நிலையிலேயே கற்பிக்கும் முறைகளை உயர்த்த நினைத்தல்.
b) ECE மையங்களை பார்த்து கொள்ள அப்பகுதி பெண்கள், குழந்தைகளை ஒன்று திரட்டி சேர்த்தல்.
c) NCERT, SCERT இவற்றில் உள்ள ECE குழுக்களை வலுப்படுத்துதல்.

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது உயர் கல்வியில் 18 - 23 வயதுள்ள மாணவர்களின் சேர்க்கையை திட்ட முடிவிற்குள் 6 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்துதல். மாநிலத்திற்கு உகந்த வழிமுறைகளை பின்பற்றுதல், உயர்கல்வி முறையை எளிதாக்குதல் ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டுள்ளன. தொலைதூரக்கல்வி முறை மற்றும் திறந்தநிலை பல்கலைக்கழகங்கள் இவற்றை நிர்வகிப்பதில் தனியாரின் பங்கீட்டை அதிகரித்தல், இந்திய சேவையை உலகமயமாக்குவதில் உள்ள பிரச்சினைகளை சமாளித்தல், கல்வி அறிவு பெற்றோரின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

**பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்**

சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. விரைவான முன்னேற்றம், எல்லா துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்த ஒரு முழுமையான வழிமுறையை அளிக்கிறது. பாதியில் பள்ளி படிப்பை நிறுத்துபவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்தில் தேசிய அளவிலான கல்வி உதவித்தொகை அமல்படுத்தப்பட்டது.

**பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்**

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், இதற்குமுன் இல்லாத அளவு கல்வியை விரிவுபடுத்தல், விரைவான உள்ளார்ந்த தொடர் வளர்ச்சி, கல்விக்கு அளிக்கப்படும் தரத்தை வெகுவாக முன்னேற்றம் செய்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**கல்வியில் நிதி நிலை அமைப்பு**

மத்திய அரசு கல்விக்காக செலவழிக்கும் தொகையினை மூன்று விதமாகப் பிரிக்கலாம். 1. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் 2. திட்டக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த அளிக்கும் திட்ட மானியம் 3. மத்திய அரசு நேரடியாகத் தாங்கள் நிர்வகிக்கும் கல்வி நிறுவனங்களின் செலவுகள் ஆகியவை ஆகும். மாநிலங்கள் தங்களது வருவாயில் நான்கில் ஒரு பங்கினை கல்வி வளர்ச்சிக்காக செலவழிக்கின்றன. இது கல்வியின் முக்கியத்துவத்தினைப் பறைசாற்றுவதாக உள்ளது.

**அரசு தரும் மானியங்கள்**

i. பள்ளிப் பராமரிப்பு மானியம்.

ii. புத்தகங்களுக்கான மானியம்.

iii. கற்பித்தல் துணைக்கருவிகள் வாங்க மானியம்.

iv. பள்ளிக் கை வேலைக்கான பொருட்கள் வாங்க மானியம்.

v. பள்ளிக்கான மனை, கட்டிடம், கிணறு, விளையாட்டுத்திடல் ஆகியவற்றுக்கு மானியம்.

**மாணவர்களின் கல்விக் கடன் உதவிகள்**

கல்விக்குழு (1964-66) கல்வி உதவித் தொகை சலுகையைத் தீவிரமாக்க சில பரிந்துரைகளை வெளியிட்டது. அவைகளாவன:

1. கல்வி உதவித் தொகையை எல்லா நிலைகளிலும் தொடர்ந்து அளித்திட வேண்டும்.
2. எல்லா வகுப்பினருக்கும் சமவாய்ப்பு என்ற அடிப்படையில் உதவித் தொகையை அளிப்பதில் சில நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
3. மீத்திறனுள்ள மாணாக்கர்களுக்கு உகந்த வகையில் சில தரமுள்ள கல்வி நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும்.

நம் நாட்டில் கல்வி உதவித் தொகை இன அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள பின்தங்கிய, பழங்குடி மக்களுக்குச் சில சலுகைகளும் உதவித் தொகைகளும் தரப்படுகின்றன. இது சமுதாய ஏற்றத்தாழ்வைக் குறைக்கும் நோக்கம் உடையது.

**இதர உதவிகள்**

தனியார் ஏற்படுத்தும் அறக்கொடைகளும், அயல் நாட்டு உதவிகளும் இந்தியக் கல்வி மேம்பாட்டிற்குத் துணை நிற்கின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் நமது கல்விக்குப் பண உதவி செய்த வண்ணம் இருக்கின்றன. மேலும் ஐக்கிய நாட்டு சபையின் பல அங்கங்கள் மானியங்களையும், நன்கொடையும் தருகின்றன.

**முடிவுரை**

கடந்த காலத்தில் கல்வித்திட்டமிடல் அதன் அடிப்படை கருத்துகளிலும், நிறைவேற்றும் முறைகளிலும் பலநிலைகளை கடந்து வந்துள்ளது. கல்வித் திட்டமிடல் ஒரு கல்வி நிறுவனம் அல்லது அமைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தேவையான செயல்திட்டம், அல்லது நடைமுறை திட்டம் இவற்றை தயாரிக்க மிக அவசியமானது.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. கல்விக்கொள்கை உருவாக்குவதலிலும், பண ஒதுக்கீடு செய்வதிலும், பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களின் பங்களிப்பை விளக்குக.
2. கல்விக்கு உதவும் பல விதமான பொருளாதார அமைப்புகளை விளக்குக.

# அலகு- 8 - கல்விக்கான மொழி கொள்கை

**நோக்கங்கள்:**

**இவ்வலகின் முடிவில் கற்போர்**

1. **சுதந்திரத்திற்கு முன்னும், பின்னுமான மொழிக் கொள்கையை புரிந்து கொள்வர்.**

2. **இந்திய அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள மொழிக் கொள்கையை அடையாளம் காண்பர்.**

3. **கற்பித்தலில் மொழி பற்றி பெரும் சிந்தனையாளர்களின் கருத்தினை ஒப்பிட்டு பார்ப்பர்.**

**அறிமுகம்**

இந்திய தேசத்தில் நூற்றுகணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 1,635 தாய் மொழிகளும், 122 மொழிகளும் இருந்தன. மொழியியல் வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் பன்மொழியின் சிக்கலான பிரச்சினைகளை களைதல் வேண்டும். மாநில அளவிலும் மத்திய அளவிலும்  கொள்கை வகுப்பாளர்கள் திட்டமிடுதலில் உள்ள குறைபாட்டில் ஆங்கில மொழியானது கல்வியில் விரும்பத்தக்க மொழியாக உருவானது.

1835 ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ம் நாள், இந்திய தேசத்தில் ஆங்கில மொழியை ஊக்குவிப்பதற்காக மெக்காலே அவர்களால் இந்திய மொழிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது இம்மொழிக்கொள்கை அறிக்கையில் இரத்தம், நிறம் இவற்றில் இந்தியனாகவும், ரசனை, கருத்து மதிப்புகள் அறிவாற்றலில் ஆங்கிலேயனாகவும் இந்தியர்கள் இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். சுதந்திர போராட்ட காலத்தின் போது காந்தியடிகள் ஆங்கில மொழியினை கடுமையாக எதிர்த்து அதனை தேசத்திலிருந்து வெளியேற்ற விரும்பினார். ஆனால் அவரின் முயற்சி வெற்றியடையவில்லை.

**கல்வியில் மொழியின் பங்கு**

**வேதகாலத்தில் இந்திய கல்வி முறை**

பண்டைய இந்தியர்களின் கல்வி பங்களிப்பானது மிகவும் போற்றுதலுக்குரியது. அக்கல்வி கலாச்சாரம், பொருளாதாரம், தத்துவம், அறிவியல், சமூக செயல்பாடுகளின் வெளிப்பாடாகக் காணப்பட்டது.

பண்டைய காலத்தில் கற்பித்தல் ஒரு புனிதமான கடமையாக கருதப்பட்டது வேத இலக்கியம் இந்திய மக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய பகுதியை பிரதிப்பலிக்கிறது. ஆசிரியர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் தேவையான உதவிகளை தாராளமாக செய்ய வேண்டும் என்பது பொதுமக்கள் மற்றும் அரசால் உருவாக்கப்பட்ட ஓர் கொள்கையாக இருந்தது. நிலத்தை பரிசாக கொடுப்பதை காட்டிலும் கல்வி அளிப்பதே தானத்தில் சிறந்த தானமாக கருதப்பட்டது.

1. **ஆசிரியர்களின் நிலை**

அரசர்களால் மதிக்கும் அளவிற்கு ஆசிரியர்கள் மிகவும் கௌரவமானவர்களாக கருதப்பட்டனர். நாரதர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் போன்ற பெரிய ஆசிரியர்களை வரவேற்பதற்கு சிம்மாசனங்களில் இருந்து அரசர்கள் எழுந்து நிற்பர்.

2. **பெற்றோராக ஆசிரியர்கள்**

ஆசிரியர் மாணவர்களின் பெற்றோராகவும், மாணவர்கள் ஆசிரியர்களின் குடும்ப உறுப்பினர்களாகவே பொறுப்பேற்று நடந்துகொண்டனர். ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றாக வாழ்ந்து தங்களை ஒருவருக்கொருவர் அடையாளம் கண்டு கொண்டனர்.

3. **கல்வியின் உடனடி நோக்கம்**

பலதரப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதாக இருந்தது.

4. **கலைத்திட்டம்**

கலைத்திட்டமானது தொழிலை சார்ந்ததாகவே இருக்க வேண்டும். அதாவது, பிராமணர்களுக்கு வேதங்களும் வேதாகமங்களும் சத்திரியர்களுக்கு போர் பயிற்சியும், வைஸ்யர்களுக்கு விவசாயம், வாணிபம், கலை, கைவினை போன்ற தொழிலை கற்று தருவதாக கலைத்திட்டம் அமைந்தது.

5. **கற்பித்தல் முறை**

கற்பித்தல் முறையானது ஆசிரியர்கள் போதிப்பவர்களாகவும், மாணவர்கள் திரும்ப கூறுபவராகவும், ஆசிரியர்கள் பாட விளக்கம் அளிப்பதும், மாணவர்கள் வினாக்கள் எழுப்புவதும், பிறகு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலைந்துரையடுவதாகவே அமைந்திருந்தது.

6. **கற்பித்தல் வழிமுறை**

சமஸ்கிருதம் போதனை மொழியாக இருந்தது.

7. **பெண் குழந்தைகளுக்கான கல்வி**

முந்தய வேதகாலத்தில் பெண்கள் உபநயன சடங்கு மூலம் வேதங்களையும் பிற பாடங்களையும் மாணவர்களுடன் அதாவது சகோதரர்களுடன் படித்தனர்.

8. **கல்வியின் இறுதி நோக்கம்**

இவ்வுலக கல்வியின் இறுதி நோக்கம் வாழ்க்கைக்கு பின் மோட்சம் பெறுவதற்காக அல்ல. மாறாக, அறியாமை என்ற இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருவதேயாகும்.

9. **பெண் கல்வி**

வேதகாலமானது பெண்களை மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரியவர்களாகவே கருதியது. அவர்கள் உயர் கல்வி கற்பதற்கு தகுதி உடையவர்களாக கருதப்பட்டனர். குறிப்பாக வேதங்கள், நிர்வாகம் போன்ற பிற முக்கிய பணிகளை ஆண்களுக்கு நிகராக செய்யும் வகையில் பயிர்ச்சியளிக்கபட்டது. ஆண்பிள்ளைகள் அவனுக்குரிய பள்ளியில் கல்வியும், பெண்குழந்தைகள் பெண் ஆசிரியர்கள் கொண்டு கற்பிக்கும் பள்ளியிலும் கல்வி கற்றனர்.

10. ஆசிரியர்கள் ஆன்மீக மற்றும் அறிவுசார் வழிகாட்டி

வேதகாலத்தில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகித்தனர். மாணவர்களுக்கு பாடம் புகட்டுவது மட்டுமல்லாமல் நண்பராகவும், ஒழுக்கம் கற்பிப்பவராகவும், பண்பியல்புகளை கற்று தருபவராகவும், ஆன்மிக குருவாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தனர். எதை தெரிந்து கொள்ள வேண்டும், எதை தவிர்க்க வேண்டும் என்ற தெளிந்த அறிவினை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் புகட்டினர். எவ்வாறு தூங்குவது, உணவு உண்பது, நண்பர்களை தெரிவு செய்வது போன்றவற்றையும் மாணவர்களுக்கு கற்பித்தனர்.

11. கற்பித்தல் செயல்முறை

கற்பித்தல் மூன்று படிநிலைகளை கொண்டது

1. சிரவண

2. மனன

3. நிதியாதாசன

1. சிரவண என்பது ஆசிரியர்கள் கூறிய வார்த்தைகளை கூர்ந்து கவனிப்பது.

2. மனன என்பது கற்றுகொள்ளப்பட்ட பாடத்தினை மனதில் இருத்தி மீண்டும் வெளிக்கொணர்வது.

3. நிதியாதாசன என்பது உயரிய நிலையை அடைவதாகும்.

புத்த சமய காலத்தில் கல்வி

புத்த மத காலத்தில் மடாலயங்கள் கல்வி மையங்களாக இருந்தன. தவிர, கல்வி அளிக்க வேறு எந்த அமைப்பும் இல்லை. புத்த மதத்தினர் மட்டுமே சமயம் சார்ந்த கல்வியை பெற முடிந்தது.

புத்தமத கல்வியானது கௌதம புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவில் சமூக வளர்ச்சிக்கும், தனிநபரின் வளர்ச்சிக்கும் ஓர் உத்வேகத்தை இக்கல்வி அளித்தது.

கல்வியின் நோக்கங்கள்

புத்தமத கல்வியின் முக்கிய நோக்கம் குழந்தையின் ஆளுமை, ஒட்டுமொத்த வளர்ச்சி, உடல், மனம், ஒழுக்கம், அறிவு, மதிப்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.புத்தமத காலத்தில் மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. மதக்கொள்கைகள் கல்வி மூலம் வழங்கப்பட்டது. இக்கல்வி முறையானது பொது அறிவு, நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான கல்வி வழங்கி அவர்கள் தத்தம் வாழ்க்கை பயணத்தில் ஈடுபடும்போது பொருள் ஈட்ட பேருதவியாக அமைந்தது.

பபஜா சடங்கு

'பபஜா' என்றால் வெளியே செல்வது என்று பொருள். இச்சடங்கின்கின்படி மடாலயங்களில் மாணவர்கள் சேர்ந்தபின் குடும்ப உறவுகளை நிராகரிக்க வேண்டும். பபஜா சடங்கில் அக்குழந்தை தலை முழுவதும் மொட்டையடித்து மஞ்சள் நிற ஆடையை அணிந்திருக்க வேண்டும்.

ஆசிரியர் பொறுப்பு

ஆசிரியர்களும், மாணவர்களும் மடாயலங்களுக்கு பொறுப்பாளர்களாக இருந்தனர். ஆனால் மாணவர்களின் கல்வி, உடைகள், உணவு, இருப்பிடம் போன்றவற்றிற்கு ஆசிரியரே பொறுப்பாக திகழ்ந்தார். மாணவர்கள் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் ஆசிரியர்களே பொறுப்பேற்றனர். ஆசிரியர் மாணவர்களுக்கு பாசத்தை அளிப்பவராகவும், கல்வியறிவு அளிப்பவராகவும் திகழ்ந்தனர்.

மாணவர்களின் அன்றாட செயல்பாடு

மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு முழுமனதுடனும், பக்தியுடனும் சேவை புரிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. காலையில் எழுந்தவுடன் ஆசிரியர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தருவார்கள். சமைப்பது, உடைகளை துவைத்தல், பாத்திரங்களை சுத்தம் செய்தும் வந்தனர். தான் தானமாக பெற்ற அனைத்தையும் தம் ஆசிரியர் முன்பு வைப்பார்கள்.

கலைத்திட்டம்

கலைத்திட்டமானது ஆன்மீக ரீதியாக அமைந்தது. ஏனெனில் கல்விக்கான முதன்மை நோக்கம் இறையாண்மையை அடைவதேயாகும். ஆகையால் மதச்சார்பான புத்தகங்களை படிப்பது மிக முக்கியமாகும். இவ்வகையான கலைத்திட்டம் துறவிகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது. இது ஒருபுறமிருக்க நூற்பு, நெசவு, ஆடைகளை அச்சிடுதல், தையல், வரைதல், கணக்கியல் போன்றவை புத்தமத கல்வியின் பிற பாடங்களாகும்.

மாணவர்களின் வெளியேற்றம்

புத்த மடாலயத்தின் ஆசிரியர்கள் மாணவர்களின் ஒழுக்கக்கேடுகள், கீழ்படியாமை போன்றவற்றை அடையாளங்கண்டால் எந்நேரத்திலும் அம்மாணவனை வெளியேற்றலாம். மடாலயத்தின் புனிதத்தன்மை, ஆசிரியர்களை மதியாமை போன்ற பிற முக்கிய காரணங்களால் மட்டுமே மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். ஆசிரியரின் உயிரிழப்பு அல்லது அவ்வாசிரியர் மதம் மாறினால் அல்லது அம்மடாலயத்தை விட்டு

வேறு இடத்திற்கு சென்றால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மடாலயத்தை விட்டு வெளியேற்றப்படுவர். இது அம்மாணவர்களின் கல்விக்கு இடையூறாக அமைந்திருந்தது.

### கற்பித்தல் முறை

புத்தமத கல்வி தூய்மையை நோக்கமாக கொண்டது. வேதகால கல்வியை போல உளவியல் மேம்பாட்டினை விட ஒழுக்கம், பண்பியல்புகளுக்கு பயிற்சியளித்தது. வாய்மொழிக் கல்வி, கலந்துரையாடல், பயணம், சுற்றுப்பயணம், மாநாடுகள், தியானம் போன்றவையே கற்பித்தல் வழிமுறைகளாக திகழ்ந்தது. பாலி மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டது.

### பெண்கல்வி

பௌத்தமத காலத்தில் பெண்கல்வி மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அனைத்துவித தீமைகளுக்கும் பெண்களே காரணம் என்று கருதினார்கள். ஆகையால் அவர்களை மடாலயங்களில் அனுமதிக்க மறுத்தனர். சில காலங்களுக்கு பிறகே பெண்கள் மடாலயத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

### தொழிற்கல்வி

பௌத்த மதக் கல்விமுறையில் தொழிற்கல்வி புறக்கணிக்கப்படவில்லை. துறவிகளுக்கு நூல் நூற்பது, நெசவு, தையல் கலை போன்றவை கற்றுத்தரப்பட்டது. தாம் உடுத்தும் உடைகளை அவர்களே தயார் செய்து கொள்வர். அது மட்டுமல்லாது கட்டடக்கலையும் கற்றுத் தரப்பட்டது. அவர்களால் புதிதாக கட்டவும், பழையனவற்றை பழுதுபார்க்கவும் முடிந்தது.

### ஆசிரியரின் பங்கு

புத்த பிக்சுக்கள் (துறவிகள்) ஆசிரியர்களாக இருந்தனர் போதகர் மாணவர்களுக்கான ஒழுக்கம், அறிவு, ஆன்மிக வழிகாட்டல் போன்றவை அளிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே பரஸ்பர மரியாதை இருந்தது. அவர்களின் உறவுமுறை தந்தையும் மகனும் போல திகழ்ந்தது. ஆசிரியர் ஆன்மிக தந்தையாக கருதப்பட்டார். புத்த சமய காலத்தில், கல்வி திட்டத்தில் ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும் ஆச்சார்யர்கள், உபநயர்கள் என்று இருவகையான ஆசிரியர்கள் இருந்தனர். சூத்திரர்களின் இலக்கியத்தின்படி ஆச்சார்யர்கள் தங்கள் இல்லத்தில் குறைந்த பட்சம் பன்னிரெண்டு ஆண்டு காலம் அவரோடு வாழலாம். இந்த அறிவுறுத்தலின்படி எவ்வித கட்டணத்தையும் மாணவர்களிடமிருந்து ஆசிரியர்கள் பெறுவதில்லை.

### புத்தமத கல்வியில் மாணவர்கள்

பிராமணர்களை போன்றே புத்தமதத்தினரும் தமது ஆசிரியர்களுக்கு பணிவிடை செய்வதை கடமையாக கருதுகின்றனர். மாணவர்கள் அதிகாலையில் எழுந்து ஆசிரியருக்கு பல் துலக்கும் பொடி, வாய் கொப்பளிப்பதற்கு நீர், அவர் அமருவதர்க்கான

இருக்கை, துலக்கப்பட்ட ஜாடியில் அரிசி பால், பாத்திரம் துலப்பது, வசிக்கும் இடத்தை தூய்மையாக வைத்துகொள்வது போன்ற கடமைகளை தினசரி செய்வர். ஆசிரியர்களுக்கு துணையாக செல்ல வேண்டுமெனில் அவரோடு இணைந்து நடந்து செல்ல கூடாது, அதே போல் மிகுந்த தூரத்திலும் நடக்க கூடாது. அவர் பேசும் போது தவறுகள் இழைத்தால் கூட குறிக்கிட கூடாது. ஆசிரியர் மாணவர்களை வெளியேற்றம் செய்ய இயலும், அதற்கு சில விதிமுறைகள் உள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மொழிக் கொள்கைகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம் டிசம்பர்-9, 1946-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அரசியலமைப்பு சட்டத்தில் மொழி பிரச்சினை பற்றிய கடுமையான விவாதங்கள் ஏற்பட்டது. அரசியலமைப்பு எந்த மொழியில் எழுதப்படவேண்டும், சட்டமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய மொழி என்னவென்று அரசியலமைப்பு கட்டமைப்பாளர்களின் கேள்வியாக அமைந்தது. ஒரு பக்கம் 'இந்தி' பேசும் உறுப்பினர்கள் இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என வாதிட்டனர்.

அரசியலமைப்பை உருவாக்கும்போது, இந்திய தலைவர்கள் மொழி முன்னேற்றம் அடையவும், நீடித்திருக்கும் வகையிலும் மொழிக்கொள்கையை உருவாக்கினர். அரசியலமைப்பின் பாகம் 3-ல் அடக்கியிருக்கும் மொழிக் கொள்கையானது, மொழி உரிமையை அடிப்படை உரிமையாக வரையறுத்தது.

பன்மொழி சமூகத்தை எழுத்தறிவு உள்ளதாக உருவாக்க "மதம் அல்லது மொழி அடிப்படையில் அனைத்து சிறுபான்மையினரும் தங்கள் விருப்பப்படி கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும், நிர்வகிப்பதற்கும் உரிமை உண்டு" இக்கொள்கையும், இதை சார்ந்த ஆவணமும் பள்ளிகளில் மும்மொழி கொள்கையை ஊக்குவித்தது. அதாவது மாணவர்கள் தம் தாய்மொழி, இந்தி மற்றும் ஆங்கிலம் கற்பதாகும். 1950- ல் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. காந்திஜி அவர்கள் இந்துஸ்தானியை இந்தியாவின் அலுவலக மொழியாக்க வலியுறுத்தினார். அதன்பின் வந்த ஆட்சியாளர்களால் இந்துஸ்தானி ஏற்கப்பட்டது. 1952- ஆம் ஆண்டில் 15 முக்கிய மொழிகள் அங்கீகரிக்கப்பட்டு எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

1950- ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கிலம், இந்தி மொழி அலுவலக ஆட்சி மொழியாக பதினைந்து ஆண்டுகாலம் பயன்படுத்த வேண்டும் என்று (343 (2) & (343 (3)) சரத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் இந்தி மொழி அதிகாரபூர்வ மொழியாக மாறியது. இந்திமொழிக்கு பதிலாக ஆங்கில மொழியை மாற்றமுடியாது என்ற நிலை ஏற்பட்டது. மக்கள் இந்தி மொழியானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் பின்பற்றக்கூடிய மொழியாக திகழ்கிறது, ஆகையால் ஆங்கில மொழியே ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதை அறிந்தனர்.

போதனை மொழிப்பற்றி தாகூரின் கருத்து

ரவீந்திர நாத் தாகூர் அவர்கள் கலைத்திட்டமானது இயற்கைசூழலை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்றார். மாணவர்கள் கல்வியை தன்னை சுற்றியுள்ள இயற்கையிடமே கற்றுகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அதுமட்டுமல்லாது

தாய்மொழி வாயிலாக கல்வி கற்க வேண்டும் என்றும் அவ்வாறு கற்பதன் மூலமே குழந்தைகளுக்கு கற்கும் பாடம் எளிமையாக இருக்கும் என்றார். தாய்மொழியானது பிறமொழி மற்றும் பாடம் கற்றுக்கொள்ள ஓர் ஊடகமாக திகழவேண்டும் என்றார். யோகா, விளையாட்டு போன்றவற்றை கல்வியோடு இணைந்து வழங்க வேண்டும் என்றார்.

போதனை மொழிப்பற்றி மகாத்மா காந்தியின் கருத்து

மகாத்மா காந்தி அவர்கள் “தாய்மொழி” மூலமாகத்தான் கற்க வேண்டும் என்ற கருத்தை மக்களிடையே மிகவும் வலியுறுத்தினார். குறிப்பாக தொடக்கப்பள்ளி மாணவர்கள் இதில் மிகுந்த பயனடைவர் என்றார். அந்நிய மொழி மூலம் கல்வி கற்றல் என்பது மாணவர்களுக்கு ஒருவித மனஅழுத்தத்தை உண்டாக்கும் என்றார். அன்னிய மொழியில் படிக்கும்போது தன் சொந்த கருத்தினையும் எண்ணத்தையும் முழுமையாக வெளிபடுத்த இயலாது என்றார். மேலும் அன்னிய மொழியை நம் தேசமாணவர்கள் கற்று நமது நாட்டிலே அன்னியனாக உலவ விடுவது சரியல்ல என்றும் நினைத்தார்.

போதனை மொழிப்பற்றி சுவாமி விவேகானந்தரின் கருத்து

சுவாமி விவேகானந்தர் அவர்கள் பிற சிந்தனையாளர்கள் நினைத்தது போன்றே குழந்தைகள் தாய் மொழியில் கற்க வேண்டும் என கருதினார். ஆனால், நம் தேசத்தை இணைக்க பொதுவான மொழி தேவை என்றார். நமது பாரம்பரியத்தை பேணி காக்க சமஸ்கிருதம் இன்றியமையாதது என்றார். இது மனிதனுள் இருக்கும் ஆற்றல் திறன் போன்றவற்றை வெளிக்கொணரும் என நம்பினார்.

முடிவுரை

பன்மொழித் திறனை மேம்படுத்தவும், செயல்படுத்தவும் இந்தியாவில் மொழிக்கொள்கைகள் உருவாக்கப்பட்டது. மொழிக்கொள்கைகளை நடைமுறை படுத்துவதில் நிறைய சிக்கல்கள் உள்ளன. மொழிக்கொள்கைகள் பன்மொழித் திறனிற்கு ஆதரவு தெரிவித்த போதிலும் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு விதிமுறைகள் ஏதுமில்லை. ஓர் மொழிக்கொள்கை தோல்வி அடைவதற்கான காரணம் அரசாங்கம் மட்டுமல்ல சமுதாயத்தில் உள்ள அனைவரும் மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்துவதில் சமபொறுப்பு வகிக்கின்றனர்.

விவாதத்திற்கும் சிந்திப்பதற்குமான வினாக்கள்

1. கல்வியில் மொழியின் முக்கியத்துவத்தை விளக்குக.

2. இந்திய அரசியலமைப்பில் கொடுக்கப்பட்ட மொழி கொள்கைப் பற்றி விவாதிக்கவும்.

3. வேத காலத்திலும் பௌத்த காலத்திலும் பின்பற்றப்பட்ட கற்பித்தல் மற்றும் மொழிக் கொள்கையினை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

4. போதனை மொழிப்பற்றி பெரும்சிந்தனையாளர்களின் கருத்தினை விளக்குக.

## அலகு – 9 மதிய உணவுத்திட்டம் ஒரு சமூகமாயமாக்கும் செயல்முறை

**நோக்கங்கள்**

இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர் :

1. மதிய உணவு திட்டத்தின் பொருள், கருத்து பற்றிய அறிவைப் பெற முடியும்.
2. மதிய உணவு திட்டத்தின் நன்மைகளை அறிந்து கொள்ள முடியும்.
3. தமிழ் நாட்டில் உள்ள மதிய உணவு திட்டத்தின் செயல்முறையை பற்றி பகுப்பாய்வு செய்ய முடியும்.

**முன்னுரை:**

மதிய உணவுத்திட்டம் என்ற கருத்து இந்தியாவிற்கு புதிதல்ல, ஒடுக்கப்பட்ட குழந்தைகளுக்காக 1925–ல், சுதந்திரத்திற்கு முன்பே சென்னை மாநகராட்சி நிர்வாகத்தால் தொடங்கப்பட்டது. இதே போன்று மற்ற மாநிலங்களிலும் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே, தமிழகம் தான் முதன் முதலில் மதிய உணவு திட்டத்தை ஆரம்பப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் குஜராத்தில் 1984 –ல் அறிமுகப்படுத்தப் பட்டது. நாளடைவில் இத்திட்டம் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப் பட்டது. பின்னர், இத்திட்டம் தேசிய திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்காக, ஆகஸ்டு 15, 1995-ல் மதிய உணவு வழங்கும் பொருட்டு, இந்திய அரசு, ஆரம்ப கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டத்தை தொடங்கி வைத்தது. 2002-ல் உச்சநீதி மன்றம், மதிய உணவுகளை அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆரம்ப பள்ளிகளுக்கு அரசே வழங்க வழிவகுத்தது. இத் திட்டம் செப்டம்பர் 2004, 2006–ல் திருத்தி அமைக்கப்பட்டது.

**மதிய உணவுத் திட்டத்தின் நோக்கங்கள்:**

1. உள்ளுர் குழுக்கள், அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்வி உத்திரவாத திட்டங்கள், சர்வ சிக்ஷ அபியான் ஆதரவின் கீழ் உள்ள மதராச குழுக்கள் இவை அனைத்தும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துகின்றன.

2. ஏழை எளிய குழந்தைகளும், ஒதுக்கப்பட்ட குழந்தைளும், பள்ளிக்கு அனுதினம் செல்ல அவர்களின் வகுப்பறை செயல்பாட்டில் கவனம் செலுத்த ஊக்கப்படுத்துபடுகின்றன.
3. கோடை விடுமுறையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள ஆரம்ப பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கப்படுகின்றன.
4. மதிய உணவு திட்டம், மாநில அரசின் முயற்சியால் தொடங்கப்பட்டது. இந்தியாவில், தமிழகம் மதிய உணவு திட்டத்தை அறிமுகப் படுத்தியதில் முன்னோடியாக திகழ்கிறது. தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த, திரு. காமராஜர், அவர்கள் சென்னையில் இத்திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார். பின்னர், இத்திட்டம் தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. ஊட்டசத்து குறைபாட்டால், பாதிக்கப்பட்ட 68 லட்சம் குழந்தைகளுக்காக 1982, ஜீலை 1 – ல், அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர், திரு. M.G. ராமச்சந்திரன் அவர்கள் மேம்படுத்தப்பட்ட மதிய உணவு திட்டத்தை சத்துணவு திட்டமாக மாற்றினார்.

**மதிய உணவு திட்டத்தின் நன்மைகள்:**

1. பசி மற்றும் ஊட்டசத்து குறைவின் உடனடி தாக்கத்தால், மதிய உணவு திட்டம், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதை ஊக்குவிக்கிறது.
2. பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை, குறிப்பாக பெண் குழந்தைகளின் சேர்க்கையை மதிய உணவு திட்டம் அதிகரிக்கச் செய்கிறது, என ஆய்வுகள் கூறுகின்றன.
3. வகுப்பறை பசியை, மதிய உணவு வழங்கும் திட்டம் முடிவுக்கு கொண்டு வந்தது.
4. சமூகமயமாக்கல், சாதி, ஒடுக்கப்பட்ட சமூக வர்க்கம் இவற்றில் மதிய உணவு திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது, பொதுவாக, இத்திட்டத்தில் உணவு வகைகள், பகிரப்படுவதால் சாதிய பாராபட்சமும், வர்க்க ஏற்றத்தாழ்வுகளும் குறிப்பாக அகற்றப் பட்டது.
5. பள்ளியிலிருந்து குழந்தைகளின் இடை நிற்றல் விகிதம் சரிந்தது.

**பள்ளிக் கல்வியில் MDMS(Midday Meal Scheme)ன் தாக்கங்கள்:**

தமிழகம், மதிய உணவுதிட்டத்தை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் நீட்டித்து, வழங்கியது. அதற்கு முன்பாக, இத்திட்டம் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழகம் தனது பங்களிப்பை மதிய உணவுதிட்டத்திற்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. தமிழகம் மதிய உணவுத்திட்ட அமைப்பாளர்களுக்கு ஊதியமாக ரூ7000, சமையலாளரருக்கும், உதவியாளருக்கும் ரூ5000 வழங்குகிறது. இந்தியாவில் தமிழகம் மட்டும்தான் NMO (Non Meal Organisers) மதிய உணவு அமைப்பாளர்களை பணியமர்த்தியுள்ளது. தமிழக மக்கள் தற்போதைய மதிய உணவு திட்டத்தின் உணவு பட்டியலை விரிவாக்கம் செய்ய கோருகின்றனர், “முட்டை, உருளை கிழங்கு” அல்லாது கம்பு போன்ற தானிய வகைகளையும், பயிர்வகைகளையும் இத்திட்டத்தில் சேர்க்க கோருகின்றனர்.

**மதிய உணவு திட்டம் (MDMS) ஒரு சமூகமயமாக்கல் செயல்முறை:**

பள்ளிகளில் மதிய உணவை வழங்குவதற்காக, தமிழகத்தில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், மதிய உணவு திட்டத்தை மேற்பார்வையிட பஞ்சாயத்து அளவிலான லஞ்சஒழிப்பு குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் வாரத்திற்கு மூன்று முறை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் சோதனை செய்து வருகின்றது. உள்ளூர் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

**தமிழ்நாட்டில் மதிய உணவு திட்டத்தின் (MDMS) தாக்கம்:**

மதிய உணவு திட்டத்தை செயல்படுத்துவதில், உண்மையில், தமிழகம் மற்ற மாநிலங்களின் எளிய செயல்பாடுகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்கிறது. மேலும் தமிழகம், சிறப்பான சமையலறை உள்கட்டமைப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாது, 92 சதவீதத்திற்கும் மேலாக, சேர்க்கை உள்ள பள்ளிகளுக்கு சமையல் எரிவாயு வசதியை வழங்கியுள்ளது. குறைகளை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு பள்ளிகளிலும், BDO

அலுவலகங்களிலும், மாவட்ட மாநில அலுவலகங்களிலும், புகார் பெட்டிகளை பொருத்தியுள்ளது. மதிய உணவு திட்டத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிகளையும் தமிழ்நாடு அரசு சேர்ந்துள்ளது. ஆரம்ப, இடைநிலை பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே மதிய உணவுதிட்டத்தின் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், மதிய உணவுதிட்டத்திற்கு தமிழகம் கூடுதல் நிதி வழங்குகிறது. இத்திட்டத்தில் தமிழகம் மாணவர்களின் சேர்க்கையை 80 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இதற்காக, மாநில நிதிக் கருவூலம், ஏறக்குறைய ஆண்டிற்கு 1,500 கோடி ரூபாயை உயர்த்தியுள்ளது.

**முடிவுரை:**

இந்திய குழந்தைகளின் நலன்களில், மதிய உணவுத்திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது என்பது தெளிவாகிறது. எனினும், இந்த மதிய உணவுத்திட்டம் முழுஆற்றலோடு செயல்படவும், பூர்த்தி செய்யப்பட வேண்டிய உடனடி தேவைகளை நிவர்த்தி செய்யவும் மேம்படுத்த வேண்டும்.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான கேள்விகள்:**

1. கிராமப்புற பகுதிகளில் மதிய உணவு திட்டத்தின் தாக்கதை ஆய்வு செய்க.
2. கல்வியில் மதிய உணவு திட்டத்தின் நன்மைகளை ஆய்வு செய்க.
3. குழந்தைகளை சமூகமயமாக்குதலில் மதிய உணவுதிட்டம் ஒரு பயனுள்ள கருவி – விவாதிக்க.

## அலகு – 10 கல்வியியலில் வளர்ந்து வரும் போக்குகள்

**நோக்கங்கள்:**

இப் பாடம் முடிவுறும் தருவாயில், மாணவர்கள்:

4. உலகமயமாதல், தனியார்மயமாதல் மற்றும் தாரளமயமாதலின் தாக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.
5. வாழ்நாள் கற்றலை பற்றி புரிந்து கொள்ள முடியும்.
6. இணைய வழி கல்வியை பற்றி அறிந்து கொள்ள முடியும்.

**முன்னுரை:**

உலகமயமாதல் என்பது தொகுதி, தரம், அறிவின் பரவல் மூலம் பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான தொடர்பை உயர்த்தி நேர்மறையான செயல்பாடுகளை பெற்றதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்க படுகிறது.

**கல்வியில் உலகமயமாதலின் கருத்து:**

உலகமயமாதல் என்பது தகவல், கருத்து, தொழில்நுட்பம், பொருட்கள், சேவைகள், நிதி, கடைசியாக மக்கள், இவற்றிற்கான உலக பொருளாதாரத்தில் நாடு கடந்த இலவச ஓட்டத்தின் தொடர்பும், மனித வாழ்வின் அதிக பகுதிகளை முக்கியமாக கல்வியை பாதிப்பதே உலகமயமாதலின் செயல்முறை ஆகும். இது என்னவென்றால் கல்வி அமைப்பை பல்வேறு பொருளாதாரத்தில் ஒரே கூரையின் கீழ் கொண்டு வர ஒரே சீரான கற்பித்தல் பாடத்திட்டமுறைகளையும், வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய தேவைப்படும் அறிவின் அமைப்பையும் மேம்படுத்த வேண்டும். மேற்கத்திய நிறுவனங்களில் நுழைய 20-ஆம் நூற்றாண்டில், அதிக வளரும் நாடுகள் கல்வி வளர்ச்சியால் வளர்ச்சியை கண்டுள்ளன.

**கல்வியில் உலகமயமாதலின் தாக்கம்**

மக்களின் திறன்களை வளர்க்க, உலகமயமாதலின் மூலம் கல்வி அறிவை மேற்கத்திய நாடுகளிடமிருந்து பெற வளர்ந்து வரும் நாடுகள் மாற்றத்தை விரும்புகின்றன.

பல்வேறு வேலைகளுக்கு தேவையான திறன்களை தொழிற்சாலைகளிலும், பெறுநிறுவன உலகங்களிலும், உயர்கல்விகளுக்கு இடையேயான உறவிலும், மாற்றம் கொண்டு வரப்பட்டன. உலகமயமாதலின் செயல்முறை என்பது உலக வர்த்தகம், தொடர்பு, கல்வி செயல்பாடு, பொருளாதார உறவு இவை அனைத்திலும், 20-ஆம் நூற்றாண்டுக்கு பிறகு, மனித தலைமையை உருவாக்குவதில் கல்வி ஒரு முக்கிய முதலீடாக இருந்து, தொழில்நுட்ப புதுமைகளிலும், பொருளாதார வளர்ச்சியிலும் குறிப்பிடதக்க மாற்றம் கொண்டுவர உந்து சக்தியாக இருந்தது. இது, சமூகத்தில் கல்வியின் அந்தஸ்தை பரப்புவதன் மூலம் மக்களுக்கு பன்முகத்தன்மை வளர்ச்சியை உறுதி செய்கிறது. சமூகம் தொழில்மயமான பின் உலகில், மேம்பட்ட தேசங்கள், தங்களது தேசத்தின் வரவை விவசாயத்திலிருந்தோ அல்லது தொழிற்சாலைகளிலிருந்தோ பெறாமல் சேவை துறை மூலம் பெற்றன. இதுவரை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், திறன்களையும், பயிற்சிகளையும், அளிக்க கல்வித்துறை அதிகமாக முயன்று வருகிறது.

கல்விதுறை லாபகரமான வேலைவாய்ப்பை உருவாக்கி, பெரிய அளவில் வளர்ச்சியுற்றது. முன்னனி வளங்களின் ஒதுக்கீட்டிற்கு இடையேயான வட்டகூறு முன்னுரிமையில் மாற்றங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான கருத்து வேறுபாடு எழுந்தது, இந்த தவறான கோட்பாட்டால் உயர் கல்வியில் ஆட்குறைப்பு எழுந்தது. இந்த அமைப்பை ஒரு வணிக நிறுவனமாக உறுவாக்குவது ஆபத்து என்பதை உணராமலேயே தனியார்மயமாக்கலுக்காக வாதிட்டது.

**தாரளமயம்**

தாராளமயமாதல், வாழ்க்கை சார்ந்த ஆராய்ச்சியை எளிதாக்க நிதியை அளித்து எதிர்கால இந்திய ஆசிரியர், மாணவர்களின் சாத்தியமான விருப்பத்தை உருவாக்கும். இது கல்வி நிறுவனங்களுக்கிடையே போட்டி, பற்றாக்குறை இருப்பின் அதை பூர்த்தி செய்து கல்விக்கான அதிகப்படியான மதிப்பை வசூலிக்காமல் இருப்பதை உறுதி செய்யும். கல்வி வழங்கலை அதிகரித்தால் அது தானாகவே கல்விக்கான செலவாக மாறிவிடும்.

**தாராளமயமாதலின் கருத்து:**

இந்தியாவில் உள்ள கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் தளர்த்துவதை குறிப்பதே தாரளமயமாகும். வழக்கமாக சமூக மற்றும் பொருளாதார கொள்கைகளில் முன்னிருந்த அரசு கட்டுபாடுகளை தளர்த்துவதே இச் சீர்திருத்தமாகும். வழக்கமாக இச்செயல் பொருளாதார தாராளமயமாதலை பயன்படுத்துவதை குறிக்கும், என்றாலும் இந்தியா கல்வி அமைப்பில் தாரளமயமாய் இல்லாமல் பொருளாதாரத்தில் தாரளமயமாய் உள்ளது. இதற்கு நிறைய காரணங்கள் உண்டு, அதில் ஒன்று தேசிய கல்வி தொழில் என்பது போட்டிமனப்பான்மையோடு இருப்பதும், அரசு தனது கட்டுப்பாட்டை விட்டுக் கொடுத்ததும் ஆகும். இந்தியா தனது உயர்கல்வி அமைப்பில் தன்னாட்சி இல்லாததாலும், இணைப்பு சுமையாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இது நெகிழ்வுதன்மை இல்லாமல் அதிக கடினத்துடனும் வகுக்கப்படுகிறது. உயர்கல்வியின் உண்மையான பலவீனம் அதன் அமைப்பிலே உள்ளது, எனவே சுயபரிசோதனையும், பிரதிபலிப்பும் தேவைப்படுகிறது. மேலும், குறுக்கு வழி, எளிதாக செல்லும் பொது தொகுப்பாய் உள்ளது. நமது கல்விநிலை கொள்கை தரமான கல்வியை நோக்காமல், அதிக விரிவாக்கும் நோக்கம் கொண்டவையாக மட்டுமே உள்ளது.

**கல்வியில் தாரளமயமாதலின் தாக்கம்**

**நேர்மறையான தாக்கம்**

இந்திய பொருளாதாரம் அதிகமாக சேவை தொழிலில் உயர்வை பெற்றுள்ளது. இதனோடு கல்வி துறையும் நமது பொருளாதாரத்துக்கு பெரிய தூண்களாக உள்ளது. நூற்றுக்கும், ஆயிரத்திற்கும் அதிகமான நமது இந்திய மாணவர்கள், வெளிநாட்டில் ஒரு வருடத்திற்கு ஏறக்குறைய ஒரு பில்லியன் அளவு மதிப்புள்ள பணத்தை செலவிடுகின்றனர். இது நமது நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிநாடு சென்று படிக்க இங்கிருந்து வெளியேறுவதை உறுதி செய்கிறது. பெறுநிறுவனங்களை அனுமதிப்பது சிறந்த தொழில் சார்ந்த, குறிப்பிட்ட திறன் கொண்ட பட்டதாரிகளின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும். இது சமுதாயத்தை தொழில்மயமாதளிலிருந்து தகவல் சார்ந்த சமூகமாக மாறுவதை குறிக்கிறது.

தாரளமயமாதல் மாணவர்களுக்கு வீட்டிலிருந்தே படிப்பதோடு உலகளாவிய மதிப்போடு பட்டத்தை பெரும் நன்மைகளை ஏற்படுத்துகிறது. தேசத்தின் நஷ்டமான மூலை வடிகாலையும் தடுக்கிறது.

**எதிர்மறையான தாக்கம்:**

வளர்ந்து வரும் நாடுகளில் மாணவர்களும், உள்ளூர்நிறுவனங்களும், முறைப்படுத்தபடாமல் இருக்கின்றன. வளர்ந்துவரும் நாடுகளில் தகவல் இல்லாத, சந்தேகத்திற்குரிய நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள குறைந்த தரமுடைய கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுடன் கூட்டு உருவாக்கி கொள்கின்றனர். வாய்ப்பு எழும்போதெல்லாம் தங்கள் பைகளை திணித்துக்கொள்ள அபாயமான போலி நிறுவனங்கள் பார்க்கின்றன. இந்தியாவில் ஊழல் பெருத்துள்ளது. இது போன்ற கொள்கைகளின் வெளிப்பாடு என்பது லஞ்சம், பொய்யான படங்கள், ஒரு சார்புடையாரை குறித்தல் போன்றவற்றை தவிர்ப்பது கற்பனையே. இது வெளிச்சத்திற்கு வரும்போது எதிர்பாராத விளைவுகள் உண்டாகும். வரையறுக்கப்பட்ட மூலதனமுள்ள உள்ளூர் நிறுவனங்கள் வேலையற்றோருக்கு வாழ்வை தரமுடியாது. புகழ்பெற்ற நிறுவனங்களே தங்களது தேசிய சான்றிதழ்களை உலக அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களோடு ஒப்பிடும் போது மதிப்பு குறைந்து போட்டிகளை மேற்கொள்ள இயலாமல் போய்விடுகிறார்கள்.

**தனியார்மயமாதல்**

இது வரையிலும், தனியார்மயமாதலின் தாக்கம் அனைத்து துறைகளிலும், குறிப்பாக பொருளாதாரத்தில் ஊடுருவி வருகின்றது. இது கல்வி துறையின் எல்லையையும் பாதிப்படைய செய்கிறது. வளங்களின் போதாமையால் கல்வி அமைப்பு விரிவையும், ஜனநாயகத்தின் மீதான மக்களின் அவாவையும் சந்திப்பது மிகவும் கடினமான ஒன்று. எனவே கல்வியை தனியார் துறையில் இணைத்தால் கல்விக்கான நிதி சுமையை தனியார் துறை, மாநிலத்தோடு சேர்ந்து பங்கெடுத்துக்கொள்ளும் என உணர்கின்றனர்.

**கல்வியில் தனியார்மயமாதலின் கருத்து:**

உலகம் முழுவதும் தனியார்மயமாதலின் வேகம் கடுமையாக உள்ளது. பொருளாதாரத்தில் அதிக பகுதிகள், குறிப்பாக உள்கட்டமைப்புள்ள பகுதிகளில்

பொதுத்துறையின் உரிமையை உடைப்பதே இதன் நோக்கமாகும். பகிரங்கமாக தனியார் நிறுவனங்கள் பொது துறையை சொந்தமாக்கி கொள்வதிலேயே தனியார்னயமாதலின் சாராம்சம் அமைந்துள்ளது. பல்வேறு துறைகளை கூட்டு முயற்சியில் தனியாருக்கு சொந்தமாக்குவதில் இது ஒட்டு மொத்த தனியார்மயமாதலாய் உள்ளது. இந்த கருத்து குறுகிய எண்ணங்களை பயன்படுத்தினாலும், சிறிதளவு தனியரருக்கு சொந்தமாவதிலேயே இது பரந்த எண்ணம் கொண்டுள்ளது. தனியார்மயம் என்பது பொது நிறுவனங்களை கட்டுபடுத்தி தனியார் மேலாண்மையை அறிமுகப்படுத்துகிறது.

**கல்வியில் தனியார்மயமாதலின் கூறுகள்:**

**கல்வியில் தனியார்மயமாதலின் முக்கிய கூறுகள் வருமாறு**

கல்வி நிறுவனங்கள் மற்றும் திறன்களை தனியார் துறையில் நிறுவுதல், அதாவது பள்ளிகள், கல்லூரிகள், பல்நுட்பங்கள், ஆராய்ச்சி கூடங்கள், விவசாயத்தின் தொழில் முறை கல்லூரிகள், பொறியியல், மருத்துவம், மேலாண்மை நிறுவன அதிகாரம், இவை அனைத்தும் தனியாளிடம் முழுத் தொகையை அறிமுகப்படுத்துவதால் மாணியங்கள் திரும்ப பெறப்படுகின்றன. ஒரு மேலாண்மைக்கு உரிமை அளிப்பதோ, ஒரு படிப்பை ஆரம்பிப்பதோ அல்லது நிறுத்துவதோ வர்த்தகத்தின் பொறுப்பில் உள்ளது. கல்வி நிறுவனங்களின் வெளியீட்டை பயன்படுத்துவோரின் சம்மதத்தோடு கல்விக்கான நிதி வழங்கப்படுகிறது.

**கல்வி அமைப்பில் தனியார்மயமாதலின் தாக்கம்**

உயர்நிலை, மேனிலை, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பொது துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது இந்த நிலையில் மாநில வளங்களின் போதாமையால் கல்வி அமைப்பு விரிவடைய மக்களின் மீதான ஜனநாயக அவாவை சந்திப்பது மிகவும் கடுமையாக உள்ளது, ஏனென்றால் கல்வி துறையில் உள்ள நிதி பற்றாக்குறை மற்ற துறைகளில் உள்ள வாய்ப்புகளின் பற்றாக்குறையோடு போட்டி போடுகிறது. எனவே, கல்வியை தனியார்துறையில் இணைத்தால் கல்விக்கான நிதி சுமையை மாநிலத்தோடு தனியார் துறையும் பங்கெடுத்துக்கொள்ளும் என்பதை உணர வேண்டும்.

இரண்டாவதாக, உலகம் முழுவதிலும் அறிவின் எல்லைகள் விரைவான வேகத்தில் விரிவடைகிறது, பொருளாதார வளர்ச்சியில்லாதவர்கள் அறிவின் பெருக்கத்தை வேகத்தோடு

வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய அறிவின் பெருக்கம் இரண்டு வகையில் பிரிக்கப்படுகிறது ஒன்று, பொருளாதார அளவில் வசதி படைத்தவர்கள், வேகமாய் நகர்ந்து அறிவை திறம்பட பயன்படுத்தி கொள்கின்றனர், மற்றொன்று பொருளாதார வசதி இல்லாமல், நிதானமாய் நகர்வோரால் இது முடிவதில்லை என்பதை உலக வங்கி வலியுறுத்துகிறது. எனவே, வளர்ச்சியின் செயல்முறைகளில் கல்வி அல்லது அறிவின் தொழில் ஒரு முக்கிய காரணியாக இருக்கிறது.

இப்படி இருப்பதால், கல்வியை ஒரு சமூகசேவையாக இனி பார்க்க முடியாது, இது பொருளாதார உள்ளீட்டின் அவசியமாக கருதப்படுகறது. கல்வியில் முதலீடு செய்வது என்பது மனிதவள மேம்பாட்டுக்கு பங்களிக்கும் காரணியாக உள்ளது. எனவே, மனிதவள மேம்பாட்டின் சார்பாக இந்த முயற்சிகள், அறிவின் தொழிலில் தனியார் துறைகளை, பெரிய பயனாளிகளாக்க எதிர்பார்க்கின்றன.

**வாழ்நாள் முழுவதும் கற்றலின் காரணிகள்:**

வாழ்நாள் கற்றல் (பேச்சு வழக்கில்) என்பது நடந்துகொண்டிருக்கிற, தன்னார்வ, சுயஉந்துதல், சுயதொழில்துறையின் அறிவின் நோக்கமாய் உள்ளது. இது சமூக உள்ளடக்கம், நல்ல குடிமகனின் சுய வளர்ச்சியை மட்டும் அதிகரிக்காமல் சுய நிலைத்தன்மை, போட்டி மனப்பான்மை, வேலை வாய்ப்பையும் அதிகரிக்கிறது. பரவலாக இந்த வார்த்தையின் விளக்கம் பல்வேறு சூழல்களில் அடிக்கடி தெளிவில்லாமல் பயன்படுத்தப் படுகிறது, வாழ்நாள் கற்றல் என்பது சுயஇயக்க கற்றலின் அனுகுமுறையை பயன்படுத்தி விளக்கபடுவது ஆகும்.

**வாழ்நாள் கற்றலின் தேவையும் முக்கியத்துவமும்:**

- ❖ வீட்டுக் கல்வி கற்பதற்காக கற்றல் அல்லது முறைசாரா கற்றல் வடிவங்களை வளர்க்க இது ஈடுபடுகிறது.
- ❖ வால்டார்ப் கல்வி, தனக்கான கற்றலை நேசிக்க குழந்தைகளுக்கு கற்பிக்கின்றது.
- ❖ வயது வந்தோர் கல்வி என்பது முறையான தகுதியை கையகப்படுத்துதல் அல்லது வாழ்க்கையின் பிற்காலத்திய ஓய்வுக்கான திறன்கள் ஆகும்.

- ❖ தொடர்கல்வி அடிக்கடி நீடிப்பை விளக்கும் அல்லது உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் கடனில்லா பாடங்களை அளிக்கும்.
- ❖ அறிவின் சேவை என்பது தொழில் சார்ந்த வளர்ச்சியையும், வேலையில் பயிற்ச்சியையும், உள்ளடக்கியதாகும்.
- ❖ சுய கற்றலின் சூழல்கள் இணைய விண்ணப்பம் அடங்கிய கருவிகளை பயன்படுத்துகிறது.

**இணையவழி கல்வியின் கருத்து**

அதிகமாக, கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் சுதந்திரமான தனியாள் கற்றலுக்கு தேவையான இணையவழிக் கல்வி கிடைக்கிறது. இந்தியாவில் கல்வித்துறை என்பது வெகுவாக வகுப்பறைகளோடு பிணைக்கப்படுவதில்லை. புதிய தொடக்கமான உயர் இணையம், கைப்பேசி ஊடுருவல், இணையவழி கற்றலுக்கான இடம். இவை அனைத்தும் இந்தியாவில் இணையவழி கற்றல், பள்ளிகளில் சமநிலை ,கல்லூரி சார்ந்த பாடங்கள் அதனோடு மத்திய நிலை தொழில்முறை பாடங்களின் மேல் கவனம் செலுத்துகிறது.

**இணையவழி கல்வியின் தேவையும், முக்கியத்துவமும்:**

இணையவழிக் கற்றல் என்பது மாணவர்களுக்கு சரியான பாடங்களிலும், உள்ளடக்கங்களிலும், கவனம் செலுத்த உதவும் நோக்கமாய் இருக்க வேண்டும். மாறாக பல்வேறு ஊடகங்களில் கடல் போல கிடக்கும் பாடப்பொருள்களில் கண்மூடித்தனமாய் நீந்துவதாக உள்ளது. இதனோடு, வசதி சார்ந்த பயிற்சியையும் இணையவழிக் கற்றல் நோக்குகிறது. ஏனென்றால், இணைய வழித்திறன்களில் மாணவர்கள் பாடங்களை எந்நேரமும், எவ்விடத்திலும் அணுகிக் கொள்ளும்படி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் எதிர்கால கல்வி இணையவழி பாடத்தையே சார்ந்திருக்கபோகிறது. பல நிறுவனங்களில் இணைய வழிப்பாடம் இலவசமாகவும் அளிக்கப்படுகிறது.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான கேள்விகள்:**

1. கல்வி உலகமயமாதலின் தாக்கங்கள் – விவாதிக்க.

2. கல்வியில் தனியார்மயமாதல் என்றால் என்ன? கல்வியில் தனியார்மயமாதலின் தேவையை விரிவாக எடுத்துரைக்க.
3. கல்வியில் தனியார்மயமாதலின் விளைவு – ஆய்க.
4. வாழ்நாள் கற்றலின் தேவையை தருக.
5. இணையவழிக்கற்றலின் போக்குகளை ஆய்வு செய்க.

**&&&&&&&&&&**

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
**சென்னை - 600 097**

**இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு ( முதலாம் ஆண்டு) 2016-2017**

**பாடம் 3: கற்றலும், கற்பித்தலும்**
(Course 3: Learning and Teaching)

அலகு -1 - **கற்றல் இயல்புகள்**

முனைவர்.பா.கணேசன், பேராசிரியர் & துறைத்தலைவர்

அலகு -2 - **கற்பிக்கும் தன்மை**

திரு.ப. ஜெகநாதன், உதவிப் பேராசிரியர்

அலகு -3 - **நடத்தையியல் கற்றல் கோட்பாடுகள்**

அலகு -4 - **அறிவுசார், மனிதநேய கற்றல் கோட்பாடுகள்**

முனைவர்.ஆ. மகாலிங்கம், உதவிப் பேராசிரியர்

அலகு -5 - **அறிவுக்கட்டமைப்பை உருவாக்கும் கோட்பாடு**

அலகு -6 - **கற்போர் மையக் கற்பித்தல்**

முனைவர் பி.சி. நாக சுப்பிரமணி, இணைப் பேராசிரியர்

அலகு -7 - **பலதரப்பட்ட வகுப்பறைகளில் கற்பித்தல்**

அலகு -8 - **பள்ளியிலும் பள்ளிக்கு வெளியேயும் கற்றல்**

திரு.லூா ஜார்ஜ்டீபன், உதவிப் பேராசிரியர்

அலகு -9 - **ஆசிரியர் - மாணவ உறவு**

அலகு -10 - **கற்பித்தலும் ஆசிரியர் பணியும்**

முனைவர். ம. முத்தமிழ்ச் செல்வன், உதவிப் பேராசிரியர்

***கல்வி முறைமையியல் துறை***

***தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்***
***சென்னை- 600 097***

## அலகு - 1 கற்றல் இயல்புகள்

**நோக்கங்கள்**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1. கற்றல், கற்றலின் அடிப்படைக் கொள்கைகள், தன்மைகளை புரிந்து கொள்வார்.
2. செயல்முறை கற்றல், அவற்றின் உட்குறிப்புகளின் கொள்கைகள் உத்திகளை அறிந்துகொள்ளவார்.
3. பொருளுணர்ந்து கற்றலையும் பொருளுணரா கற்றலின் வேறுபாட்டினை அறிந்து கொள்வார்.
4. சுயக்கற்றலின் வரையறை, நன்மைகளை பகுத்தறிவார்.

**அறிமுகம்**

கற்கால மனிதனாக தோன்றி நவீன கால மனிதனாக மாறிய மனிதன் ஒவ்வொறு நிலையிலும் கற்றதின் விளைவுதான் மாற்றங்கள் ஏற்படக் காரணமானது. கற்றல், அறிவு அல்லது நம் வாழ்க்கையை வளமாக்கும் திறன்களை பெற்றுள்ளது. கற்றல் என்பது ஒரு நடத்தை மாற்றச்செயலாகும். கற்றலின் கூறுகள் உற்சாகமூட்டக்கூடியாதாகவும் சுவாரஸ்யமானதாகவும் இருக்கும். கற்றல் என்பது பொருளுணர்ந்து கற்றல், பொருளுணராக் கற்றல், செயலில் கற்றல், சுயகற்றல்களைக் கொண்டுள்ளது.

**கற்றல் பொருள்**

1. படிப்பு, கற்றல் என்பது அனுபவம் அல்லது கற்பித்தல் மூலம் பெற்ற அறிவினையும், திறன்களை கொண்டுள்ளது.
2. புதிய படிப்பு அல்லது அறிவை மேம்படுத்துத்தலையும் படிப்பதன் மூலம் புத்துயிரையும் உண்டாக்குகிறது.
3. அறிவார்ந்த பயன்பாட்டின் எந்தத்துறைகளிலும் திட்டமிடப்பட்ட படிப்பால் பெறப்பட்ட அறிவு
4. நடைமுறைபயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலம் நடத்தையை மாற்றியமைத்தல்
5. சுயக்கற்றலை அளவிட முடியாது, ஆனால் அதன் முடிவுகளை அறியலாம்
6. கற்றல் ஒரு தனிப்பட்ட தழுவலின் முக்கியத்துவமாகும்.
7. படிப்பு, பயிற்ச்சியை கற்பித்தல் மூலம் அறிவைப் பெறுவதற்கான ஒரு செயல்பாடு
8. அறிவு மற்றும் திறன்கள், கற்றலில் இருந்து பெற்றது.

**கற்றல் வரையறை**

1) கற்றல் நம் வாழ்க்கையை வளப்படுத்தும் அனைத்து திறமைகளையும், திறன்களையும், பெற்றிருக்கிறது. இது ஒரு புத்தகம் அல்லது ஒரு ஆசிரியரால் கற்பிக்கப்பட வேண்டியதில்லை, மாறாக நம்முடைய சொந்த ஆய்வு மூலம் அதைப் பெறலாம் பகிர்வு மூலமாகவோ,அல்லது

அறிவுரைகளாலோ,''ஆசிரியராக'' இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை – **ஆன்ஜெலா சிங்கிள்**

2) காலப்போக்கில் ஒரு நபர் நடத்தை அல்லது மனப்போக்கில் கற்றல் என்பது ஒப்பீட்டளவில் நிரந்தர மாற்றமாகும் - **சின்ஸ்டிங் சின் சாங்**
3) பல்வேறு தூண்டுதல்களுக்கு புதிய பதில்களை பெறுவது – **ஏரிக் பிளாக்பர்ன்**
4) கற்றல் அனுபவங்கள், நம்மைச்சுற்றியுள்ள உலகின் வளர்ச்சியையும் புதிய புரிதலையும் கொண்டுள்ளது – **கிரிஸ்டி மெக்ரத்**
5) கற்றல் ஒரு நடத்தை மாற்றமாகும் - **பரிகாப்பு பன்ஜ்போர்ன்**
6) கற்றல் என்பது ஒரு செயல் இது நிலையானது அல்ல ஒரு நபர் புதிய தகவல்கலை பெறுவதை நிறுத்துவதில்லை இது அவர்களுடைய மனதில் சுறு சுறுப்பையும் கவனத்தையும் கொண்டிருக்கிறது ஆனால் அவர்களைச்சுற்றியுள்ள உலகம் முழூவதும் உணர்ச்சி முனைப்புடையதாக உள்ளது – **வெரோனிகா அயக்கோபாஸ்**
7) நமக்கு வழங்கப்பட்ட தகவல்களை பெறுவதற்கும், பயன்படுத்துவதற்கும் நம் வாழ்நாள் முழூவதும் கற்றல் தேவைப்படுகிறது. ஆசை இருக்கும் வரை கற்றுக்கொள்ளும் திறன் முடிவில்லாதது, கற்றல் மட்டுமே வெற்றிகரமாக பயன்படுத்தப்படுத்தி மற்றும் புரரிந்து கொள்ளப்படுகிறது – **தாமஸ் கோரல்ஸ்**
8) நடத்தை மேம்பாட்டினையும் வெளிப்புற ஒருங்கிணைப்பையும் ஒருங்கிணைத்து அறிவதே கற்றல் ஆகும் - **அபிசாபெர்ட்**
9) சிந்தனை அல்லது பிற உணர்ச்சிகளில் தூண்டுதல் காரணமாக ஏற்படும் ஒரு மாற்றம் - **ஸ்கொட்மில்லர்**
10) அனுபவத்திலிருந்து வரும் அனுபவத்தின் ஒப்பீட்டளவில் கற்றல் என்பது நிரந்தரமான மாற்றமாகும் - **ஸ்டீபன் பீ கௌன்**

## 2. கற்றலின் கூறுகள்

### 1. நேர்காணல்

ஒருவெருக்கொருவர் கருத்துக்களையும் நுண்ணறிவுத்திறனையும் பகிர்ந்து கொள்வதற்காக நேர்காணலை கற்றல் மேற்க்கொள்கிறது.

### தனிப்பட்ட பொறுப்பு

கற்றல் குழுவில் சார்ந்திருத்தலை தடுக்க மாணவர்கள் தாங்களே தனியாக பொறுப்பேற்றுக்கொள்வது.

### 2. கூட்டுத்திறன்கள்

தலைமைக் கூட்டணி மற்றும் மோதல் தீர்மானம் போன்ற பயனுள்ள குழு செயல்பாட்டுக்கு தேவையான திறமைகளை உள்ளடக்கியது.

3. **குழு செயலாக்கம்**

குழுவானது எவ்வாறு கல்வி சார்ந்த பொருட்கள் அல்லது செயல்திறன்களிலிருந்து ஒதுங்கிச் செயல்படுகிறது என்பதை குறிக்கிறது.

4. **நேர்மறையான ஒற்றுமை:**

நேர்மறையாக ஒருவொருக்கொருவர் சார்ந்திருத்தல் குழுவின் உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வுடன் நாம் ஒன்றாக மூழ்கவேண்டும் அல்லது நீந்த வேண்டும்

5. **திறன்**

மாணவர்களின் இயல்பான திறனை எந்தவொரு நோக்கத்திற்காகவும் வெற்றிகரமான வாய்ப்பை ஆனையிடும் தங்கள் சொந்த பயன்பாட்டையும், பயன்பாட்டிற்கான தகவலையும் புரிந்துகொள்ளும் திறனை தீர்மானிக்கிறது.

6. **தகுதி**

இது மாணவர்களின் உள்ளார்ந்த திறமை அல்லது பரிசினை குறிக்கிறது. சில திறன்களைக் கற்றக்கொள்வதற்கான இயலபான திறனை இது குறிக்கிறது.

7. **ஆர்வம்**

ஒரு வழுவான முறையீடு அல்லது ஈர்ப்பு காரணமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் கற்றவர்கள் வேறுபடுகிறார்கள். அதிக பெருளுடைய மேலும் எளிமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கொடுக்கப்பட்ட பாடங்களை கற்போர் தங்களின் உணர்ச்சிகளின் வெளிப்பாட்டினை வெளிப்படுத்துவார்கள்.

8. **குடும்பம் மற்றும் கலாச்சார பின்னணி**

பல்வேறு சமூக பொருளாதார பின்னணியில் இருந்து வரும் மாணவர்கள் வளர்ந்து வரும் நடைமுறைகளின் வேறுபாடு காரணமாக ஒரு பரவலான நடத்தையை வெளிப்படுத்துகிறார்கள்.

9. **மனப்பான்மை**

மனப்பான்மை என்பது ஒரு தனிப்பட்ட முன்னோக்கு மற்றும் மனநிலைகளை குறிக்கிறது. சில நேர்மறை அணுகுமுறை ஆர்வத்தையும் பொறுப்பு, படைப்பாற்றல் மற்றும் நிலைத்தன்மைகளையும் பெற்றிருக்கிறது.

10. **கற்றுக்கொள்பவர் அல்லது மாணவர்களின் ஈடுபாடு:**

கற்றலுக்காக மாணவர்களை தயார்படுத்தவிட்டால் அல்லது கற்றுக்கொள்ள இயலாவிட்டால் கற்றல் என்பது நடக்காது. கற்றல் என்பது ஒரு முக்கியமான

தனிப்பட்ட அனுபவம். இந்த அனுபவத்தை ஒரு குழைந்தைக்கு நேரடியாக நாம் கொடுக்க முடியாது.

11. **அனுபவம்**

சூழ்நிலை கற்றல் ஏற்படுத்தும் அனுபவங்களை வழங்குகிறது. இந்த சூழ்நிலைகள் பள்ளி பாடங்களை அல்லது சூழ்நிலையை வடிவமைத்து வழங்கியுள்ளதோடு ஆசிரியர் அவைகளை மாணவர்களுக்கும் கற்றக்கொள்ள ஏற்பாடு செய்கிறார்.

12. **ஆசிரியர் ஒரு துருப்புச்சீட்டு**

கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் ஒரு முக்கிய நபராக உள்ளார். அவர் குழந்தைகளுக்கு கற்றல் அனுபவங்களையும் ஒழுங்குபடத்துதலையும் குழந்தை போன்ற அனுபவங்களை எதிர்வினை மூலம் கற்றுக்கொள்ளவும் தயார் செய்கின்றார், குழந்தைகளை உருவாக்க முடியாது ஆனால் அவர்களின் அனுபவங்களை ஒருங்கினைத்து ஒழுங்கமைக்கலாம். எடுத்துக்காட்டாக வசதிகளை ஏற்பாடு செய்தல், பொருட்கள் மற்றும் கருவிகளை வழங்குதல், சமூக உறவுகளை நிர்வகித்தல், குழந்தைகளுக்கு பணக்கார, பயன்மிக்க வாழ்க்கையை வழங்கும் சமுதாய உறவுகளை ஒழுங்குபடுத்துதல்.

13. **காலநிலை**

பள்ளியில் கற்றுக்கொள்வதற்கான காலநிலை அல்லது சுற்றுச்சூழல் ஒரு முக்கியமான அம்சமாகும். இவற்றை துாண்டுதலால் அல்லது கற்றறிந்து கற்றுக்கொள்ளலாம்.

## 3.கற்றலின் அடிப்படை கோட்பாடுகள்

1. **கற்றல் என்பது அனுபவம் கூடிய கற்றலின் அடிப்படைச் கோட்பாடுகள் வளர்ச்சி**

உண்மையில் கற்றல் என்பது வளர்ச்சியின் வடிவம். இது தவிர்க்க முடியாத இயற்கையாகும். வளர்ச்சியின் காரணிகளை கற்பதற்கு இது இயக்கத்தையும், அழுத்தத்தை அளிக்கும். தினசரி செய்கைகளால் குழந்தை மனதளவிலும் உடலளவிலும் வளர்கிறது. குறிப்பிடத்தக்க கரிம கற்றலை உயர்ந்த கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர். **பெஸ்டலாசி** (Pestalozzi) மரத்தின் மூலகமாகவும், **புரோபெல்** (Froebel) தோட்டத்தின் மூலமாகவும், **மேரிட்டா ஜான்** (Marietta John) தேவதாரு கிளை மூலமாகவும் உணர்த்துகின்றனர். எனவே கற்றல் என்பது அனுபவம் மூலமாக வளர்வது.

2. **கற்றல் என்பது ஒரு பொருத்தப்பாடு**

சூழலுக்கு ஏற்றவாறு நம்மை சரிசெய்வதற்கு கற்றல் என்பது ஓர் அடிப்படை முயற்சியாகும். புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு ஒரு தனியாள் தன்னை போதுமான அளவு சரிசெய்வதற்கு கற்றல் உதவுகிறது. **கேட்ஸ்** (Gates),

மற்றவர்களின் கூற்றுகளின்படி "கற்றல் என்பது நடத்தையில் ஒரு முற்போக்கான மாற்றத்தை உருவாக்கும் வகையில் சூழலுக்கு ஏற்ற வெற்றிகரமான முன்னிலையும், ஒரு தனியாளின் பயனுள்ள மாற்றத்திற்கான அடுதடுத்த முயற்சிகள்". கற்றலின் நோக்கத்தில் திட்டவட்டமான **பொருத்தப்பாடு** மட்டுமே பள்ளி கற்றலில் இடம்பெறும்.

**3. கற்றல் என்பது ஒரு அமைப்பின் அனுபவம்**

கற்றல் என்பது புதிய அனுபவத்தின் கூடுதலாகவும் இல்லாமல் பழைய அனுபவத்தின் முழுமையாகவும் இல்லாமல், பழைய மற்றும் புதிய அனுபவங்களின் தொகுப்பாய் நல்ல அனுபவத்தின் புதிய முறைகளை ஏற்படுத்துவதாகும். இறுதியில் நிறைவுபெறும் செயலாகவும் இந்த அமைப்பின் அனுபவம் அதிகமான தேவையில்லாத பழக்கங்களை தவிர்க்கும். சரியான முறையில் உண்மைகள் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு பிறகு அதற்கான கற்றலும் இடம் பெறும்.

**4.கற்றல் என்பது தேவை**

உண்மை கற்றல் அனைத்தும் ஒரு தேவையின் நோக்கமாகும். எப்பொழுது ஒரு மாணவன் தனது கற்றலை பயனள்ளதாக எண்ணுகிறானோ அப்பெழுதே அது பூர்த்தியாகிறது. பாடத்துடன் தொடர்பில்லாத பொருள் மறக்கும், தொடர்புடைய பொருள் மறக்காது.

**5.கற்றல் என்பது நுண்ணறிவு**

அர்த்தமில்லாதவற்றை திரும்ப, திரும்ப செய்தல் நிரந்தர கற்றலை உருவாக்காது. உள்ளார்ந்த பார்வையை பெறும்போதும் அதன் செயல்முறைகளை புரிந்துகொள்ளும்போதும் கற்றல் இடம்பெறுகிறது. புரிந்துகொள்ளுதல் மற்றும் நுண்ணறிவே கற்றலில் நீடித்த விளைவை தரும்.

**6. கற்றல் என்பது ஒரு செயல்**

ஒருவரின் அடிப்படை பொதுவான தேவைகளை சந்திக்கும் இயற்கையின் வெளிப்பாடே கற்றலாகும். சரியான கற்றல் அனைத்துமே சுயகற்றலாகும். எனவே கற்றல் செயல்முறையில் ஒருவர் ஆற்றலுடன் பங்கேற்கவேண்டும். பங்களிப்பு செய்வது மட்டுமே பயனுள்ள கற்றலாகும். கற்றலில் அனைத்து முற்போக்கான முறைகளும் டால்டன் (Dalton) திட்டம், திட்ட முறை, மாண்டிசோரி முறை, கிண்டர்கார்டன் இவை அனைத்துமே அடிப்படை கல்வியில் கற்றலின் பண்புகளை அழுத்தத்துடன் வெளிப்படுத்துகின்றன.

**7. கற்றல் என்பது தனியாள், சமூகம் சார்ந்தது**

கற்றல் என்பது தனியாள் செயல்பாட்டைவிட அதிகமானது. இது சமூக செயல்பாடும் கூட. குழந்தைகளிடம் பெரிய செல்வாக்கு மற்றும் அவர்களது

ஒழுக்கத்தில் சமூக அமைப்புகளான குடும்பம், ஜாதி, கூட்டம், பாடம், இனம் போன்ற நிறுவனங்கள் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. நினைவில்லாததை விட நினைவோடு ஒரு குழுவின் மனது, தனியாளின் மனதை பாதிக்கிறது.

**8. கற்றல் என்பது ஒரு எதிர்பார்க்கமுடியாத செயல்**

மனிதனின் கற்றல் என்பது ஒரு மனித செயலாகும். இதை மனித இனத்தின் மீது திணிக்க முடியாது. பொதுவாக, அதிகமான மக்கள் சாதாரண எதிர்பார்ப்புகளுடன் வாழ்கின்றனர். ஆனால் ஒரு குழந்தையால் இயலாதபோது ஆசிரியர் அக்குழந்தை கற்க தாயராகும் வரை காத்திருந்து அவர்களின் தேவைகளை பூர்த்திசெய்கின்றனர். இது கற்றலின் பண்புகளை செயல்படுத்துவதாகும்.

**9.கற்றல் என்பது சுற்றுபுறச் சூழலின் விளைபொருள்**

கற்றல் வெற்றிடமாய் இல்லாமல் சுற்றுச்சூழலுடன் சேர்ந்து இடம் பெற்றுள்ளது. கற்பித்தலின் சாத்தியங்களில் சுற்றுச்சூழல் ஆரோக்கியமானதாகவும், வளமுள்ளதாகவும் இருக்கும். இது கற்றலை ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு மாற்றுவதாகும்.

**10.உண்மை கற்றல் கற்போரின் நடத்தையை மாற்றும்**

உண்மை கற்றல் கற்போரின் ஒழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு அனுபவமும் கற்போரின் மனதையும், கற்போரின் ஒழுக்கத்தையும் மாற்றுகிறது. சுருக்கமாக கூறினால் இது கற்றலின் இலக்காகும்.

**11.கற்றல் என்பது முழுமையானது**

மனித உயிரினங்கள் முழுமையாக செயல்படுகின்றன. முழுமை என்பது பிளவில் இருந்து வரும் தனித்துவம். இது வாழ்வின் முக்கிய மத்திய கோட்பாடாகும்.

**12.நுண்ணறிவால் தொடர்ந்து கற்றல்**

சில நேரங்களில் நுண்ணறிவு என்பது ‘‘புரிதலின் பிரதிபலிப்பு’’ இது ஒரு சூழல்களில் அர்த்தமில்லாத உண்மைகளில், திடீரென அர்த்தம் கொள்ளுதலில், பிரச்சனையின் தீர்வில், அல்லது ஒரு இலக்கின் வழியில் இருந்து வெளிப்படும். நுண்ணறிவை பெறும் திறன் என்பது ஆர்வம், முன்னறிவு, நுண்ணறிவையும் சாரந்ததாகும். ஒரு மந்தமான குழந்தையின் பிரச்சனையில் ஆசிரியர்கள் அக்குழந்தை சூழ்நிலையை புரிந்துகொள்ளவும் அர்த்தத்தை கிரகிக்கவும் எப்போதும் உதவுவதைவிட, அதிகமாக உதவவேண்டும்.

#### 4. கற்றலும் அதன் தாக்கங்களும்

மாணவர்களின் பல்வேறுபட்ட கற்றல் பாணிகளை ஹென்ஸின் பட்டியலிடுகின்றர். கேட்போருக்கும் கற்றவர்களுக்கும் இடையே நேர்காணல், விவாதம், குழு விவாதத்தின் பங்கு, வாய்வழி அறிக்கைகள் மற்றும் எழுதப்பட்ட பொருள் நிறைந்த உரையாடல்கள் இவைகள் அனைத்தும் **கேட்டல்வழி கற்போருக்கும்**. **பார்த்து கற்போருக்கு** கணினி வரைபடங்கள், வரைபடங்கள், விளக்கப்படங்கள், கார்டூண்கள், சுவரொட்டிகள் போன்ற அதிகமான படங்கள் பரிந்துரைக்கப்படுகிறது. **புலன் உறுப்புகளால் கற்போருக்கு** படித்த செயல்பாடுகளாக படம்வரைதல், பலகை விளையாட்டுக்கள் மற்றும் மாதிரிகள் ஆகியவற்றை கொண்டுள்ளன. **உழைப்பின் மூலம் கற்போருக்கான** பரிந்துரைகள் முழு உடலையும் உள்ளடக்கிய விளையாட்டுக்கள், இயங்குகின்ற இயக்க நடவடிக்கைகள், பரிசோதனையை உருவாக்குதல், மாதிரிகளை உருவாக்குதல். **உலகளாவிய கற்போர்** குழு வாசிப்பு, பதிவுபுத்தகங்கள், கதை எழுதுதல், கணனி நிரல்கள். பகுப்பாய்ந்து கற்போர் தொடர்ச்சியான வழிமுறைகளில் வழங்கப்பட்ட தகவல்கள், ஆசிரியர் இயக்கிய தெளிவான இலக்குகள் மற்றும் தேவைகளாகும்.

#### 4. பொருள் உணராமல் கற்பதும் எதிராக பொருள் உணர்ந்து கற்பதும்:

#### 1. பொருள் உணராமல் கற்றல், பொருள் உணர்ந்து கற்றல்

பொருளுணர்ந்து கற்றலிருந்து பொருளுணராக் கற்ப்பது வேறுபடும், பொதுவாக தகவல்களை பெற்றபின்பே இது தொடங்கும். இது கற்றோர் பரிந்துரைக்கப்பட்ட நடத்தை முறையை பின்பற்றுகிறது.

பொருள் உணராமல் கற்க்கும் முறையில், மாணவர்களுக்கு அளித்த தகவல்கள் சரியா என்பதை பற்றி கவலை கொள்ளாமல், என்ன கற்றோர்களோ அதையே திரும்ப சொல்கின்றனர். மற்றொரு விதத்தில் பார்த்தால் மாணவனின் அர்த்தமுள்ள கற்றல் முறையில் கற்போர் முறையான தகவல்களை பெற்று ஒவ்வொரு படியிலும் ஆய்வு பெற்ற முயையுடன் கேள்வி கேட்டு புரிந்துகொள்வர். தங்கள் சொந்த காரணத்திற்காக பெற்ற தகவல்கள் முழுவதுமாக திருப்தி அடைந்தபின்னே அத்தகவல்களை உள்வாங்குவர். எனவே, உணராமல் கற்க்கும் முறை வெளியீடுக்கு உள்ளீடு அதிக சமமாய் உள்ளது. எப்போதும் அர்த்தமுடன் கற்போர் புதிதாக சிலவற்றில் பங்களிப்பர். எடுத்துகாட்டாக உணராமல் கற்போர் ஒரு கட்டுரையை முறையாக உட்கிரகித்து கொடுத்த தகவல்களை சொந்த நடையில் உருவாக்குவர்.

அடிப்படையில் பொருள் உணராது கற்றல் என்பது சார்ந்து கற்றல் ஆகும். கற்பவர் தங்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கற்பிப்பதையே கற்றுகொள்வர். அந்த மாணவன் ஆசிரியரிடமிருந்து கற்றதை தவிர வேறு எதையும் அவரால் சொல்ல இயலாது. அவருடைய எண்ணம் முழுவதுமாக சார்ந்தது போன்று இருக்கும், மாறாக பொருள் உணர்ந்து கற்பவர் தன் சுய காலில் நிற்க்கும் அளவிற்க்கு அவரே கற்பார். எனவே பொருளுணர்ந்து கற்போருக்கு கற்றலின்போது சில பிரச்சனைகள் இருந்தாலும் இறுதியில் பயனுள்ள பெரிய அந்தத்தை பெறுவர் சார்ந்து படறுகின்ற செடிகளை எப்போதும் நல்ல பழங்களை தராது மாறாக, பொருளுணர்ந்து கற்போர், நல்ல கனி பொடுக்கும் தாவரமானது மண்ணில ஆழ்ந்த வேறுடையதாயிருந்து யாருடைய ஆதரவுமின்றி தனித்து நிலைத்து இருப்பது போல பொருளுணர்ந்து கற்போர் இருப்பர்.

பொருளுணர்ந்து கற்ப்பது என்பது ஏற்கனவே கூறப்பட்ட பதிலை சார்ந்தே இருக்கும், ஆனால் பொருளுணர்ந்து கற்பது ஒருவரின் பிரச்சனையை கவனாக திறனாய்ந்து, பிரச்சனைக்கான சரியான தீர்வை காண்பது. பொருள் உணராமல் கற்ப்பவர் கிளிப்பிள்ளையை போல் கற்றுகொண்டதையே திரும்ப திரும்ப கூறுவர், ஆனால், பொருளுணர்ந்து கற்ப்பவர் எந்த ஒரு பிரச்சனையையும் திறந்த மனதுடன் திறனுடன் ஆராய்ந்து ஒவ்வொரு முறையும் சில புதிய தீர்வை கொண்டுவருவர். பொருளுணராமல் கற்ப்பவர் கற்றதையே அப்படியே திரும்ப கூறுபவர் ஆனால் பொருளுணர்ந்து கற்பவர் புதுமையை தருபவர்.

பொதுவாக பொருளுணராமல் கற்பவர், எந்த செயலிலும் அமைதியாக பங்கேற்பவர் ஆனால் பொருளுணர்ந்து கற்பவர், செயல்பாட்டுடன் ஆர்வமாக செயல்படுபவர். பொருளுணராமல் கற்பது ஒரு முறையை அப்படியே பின்பற்றுவர், மாறாக பொருளுணர்ந்து கற்பவர், அதில் ஏதேனும் புதியவற்றை சேர்த்து புதிய முறையை சிறப்பாக மாற்றுவர்.

**பொருளுணர்ந்து கற்றல் பொருளுணராக்கற்றலின் வேறுபாடு**

| **பொருள்ளுணர்ந்து கற்றல்** | **பொருளுணராமல் கற்றல்** |
|---|---|
| முழுமையாக | துண்டுதுண்டாக கொஞ்சம், சொஞ்சமாக |
| சக்திவாய்ந்த | நிலையாக |
| உண்மையான | திரும்ப திரும்ப |
| பங்கேற்பு | பங்கேற்பு இல்லாத |
| தனியாக கற்பதை விரும்புவார் | சார்ந்துஇயங்குபவர் |
| வெளியீடு>உள்ளீடு | வெளியீடு<அல்லது=உள்ளீடு |

**மனனம் செய்து கற்றல்:**

அடிப்படையில் பொருள்தெரியத பாடமாய் கற்றல் என்பது ஒருவரைச்சார்ந்து கற்றல் எனப்படும் கற்போர் ஆசிரியர்களோ பெற்றோர்களோ எதைக் கற்பிக்கின்றனரோ அதையே மாணவர்கள் எந்தமாற்றமுமின்றி பின்பற்றுவர் அவர்களுடைய மனது முழுவதும் சார்ந்தே வருகிறது. அவர்கள் தங்கள் ஆசிரியரிடமிருந்து கற்றதை தாண்டி வேறு எதையும் அவர்களால் வெளிக்கொணர முடியவில்லை. ஒரு அர்த்தமுள்ள கற்போர் தங்களது சொந்த காலில் நிற்க கற்கவேண்டும். எனவே அர்த்தமுள்ள கற்போருக்கு ஆரம்பத்தில் பிரச்சனைகள் இருந்தாலும் இறுதியில் சிறந்த வளர்ச்சி காண்பர். ஒட்டுண்ணிச் செடிகள் பழங்களை எப்போதும் தருவதில்லை என்பதை கவனிப்பதும் ஓர் ஆர்வமுடையதாகும்.

மண்ணின் ஆழத்தில் மூழ்கிய வேர்களுடைய செடிகளே நல்ல கனியைத் தரும் மற்றும் அப்படிப்பட்ட செடிகள் தங்களது வாழ்வாதாரத்திற்கு வேறு எந்த ஆதரவையும் நாடாது. சார்ந்த மனப்பாடமானது கற்ற பதில்களை அப்படியே செய்வது ஆனால் அர்த்தமுள்ள கற்றலானது எந்தச் சூழலிலும் சிக்கலான பிரச்சனைக்கு சரியான பொருத்தமான தீர்வை தருகிறது. சார்ந்து பாடம் செய்பவர்கள் சொன்னதை சொல்லும்

கிளி போன்றவர்கள் அர்த்தம் தெரிந்து கற்பவர்கள் எந்த ஒரு பிரச்சனையையும் வெளிப்படையாக தீர ஆராய்ந்து ஒரு புதுமையான தீர்வை தருவார்கள்.

**6. செயல்வழி கற்றலின் வரையறை:**

- செயல்வழி கற்றல் என்பது செயல்களை மாணவர்கள் ஈடுபாடுடன் செய்வது மற்றும் செய்கின்ற செயலை சிந்திப்பது (Bonwell & Eiser, 1991, P.2)
- Felder & Breat (2009) செயல்வழி கற்றலின் வரையறையானது ''வகுப்பில் வந்த பாட சம்பந்தமாக கவனிப்பது, பார்பது மற்றும் குறிப்பு எடுப்பது ஆகும்.''

**செயல்வழிக் கற்றலின் பொருள்:**

செயல்வழி கற்றல் என்பது பொதுவாக, மாணவர்களுக்கு வழிகாட்டல் முறை மூலம், கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட வைக்கிறது. சுருங்கச் சொன்னால், இந்த செயல்வழி கற்றலானது, மாணவர்கள் பொருள்பட கற்கக்கூடிய செயலையும், சிந்தனை செய்யவும் பயன்படுகிறது.

கற்பனை சுழல்களில் இயலாதோரின் நிஜ வாழ்வில் சிந்திக்கும் பயன்களையும் அவர்களுக்கான சவால்களையும் செயல்வழிக்கற்றல் இணைக்கிறது. இது வாய்ப்புகளின் முழு நன்மைகளையும் கற்றலில் எடுத்துகொண்டு பின் வருமாறு வழங்குகிறது.

- ✓ தன்னிச்சையான விளையாட்டு
- ✓ திட்டமிட்ட, தேவையுடைய விளையாட்டு
- ✓ விசாரணையும், தேடலும்
- ✓ நிகழ்வுகளும், வாழ்க்கை அனுபவங்கள்
- ✓ கவனமாக கற்றல் மற்றும் கற்பித்தல்.

**செயல்கற்றலின் கொள்கைகள்**

கல்வி உளவியலார்களும், ஆசிரியர்களும் கற்றலின் பல கொள்கைகளை அடையாளம் கண்டுள்ளனர், மேலும் கற்றல் செயல்முறைகளுக்கு பொதுவாக பொருந்தும் வகையில் இவற்றை கற்றல்சட்டங்கள் என குறிப்பிடுகின்றோம். இக்கொள்கைகளை கண்டுபிடித்து சோதித்து நடைமுறை சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. **கற்கும் கற்பிப்பாளரின் செயல்திறன் அமைப்பு**

   நன்கு அறிந்திருக்கும் கோட்பாடு, மாணவர்கள் ஏற்கனவே அறிந்த செயலுடன் புதிய தகவல்களை இணைக்கும் உண்மையை உள்ளடக்கியது. இங்கே புதிய மற்றும் பழையதகவல்கள் மனதில் இருத்திவைக்கப்பட்டுள்து. பழைய தகவல்கள் தவறானது என்றால் புதிய தகவல்களை கற்கும்போது சமரசம் செய்துகொள்வதும், தவறான அல்லது முழுமையற்ற மாதிரிகள் சரிசெய்யப்பட்ட கருத்தியல் மாற்றத்தின் ஒரு செயல்முறையாக கற்க முடியும்.

2. **தனிநபர் தனியாக கற்பதைவிட மற்றவர்களுடன் சேர்ந்து அதிகமாக கற்க விரும்புகின்றனர்.**

   பெரும்பாலான ஆசிரியர்கள் சுதந்திரமாக கற்போராகவும் மற்றும் இக்கொள்கையை ஏற்க சிறிதளவு போராடுகின்றனர். எனவே பல்வேறு ''ஒழுங்குகளின் அடிப்படையில் மாணவர்கள் ஒன்றாக சேர்ந்து கற்க்க உதவுகிறது.

3. **அர்த்தமுள்ள கற்பித்தல் விளக்கங்களை வெளிப்படுத்துவதன் மூலம் ஒருவரின் சுயகற்றல் (அ) சக ஆசிரியர்களுக்கு உதவுகிறது.**

மொழிகளைப் பேச பயிற்சி எடுத்தால், மாணவர்கள் அம்மொழிகளின் ஒழுங்குகளை பேச கற்றுக்கொள்வர். ஒரு பதிலை தெளிவாக உச்சரிப்பதும் உண்மை, யோசனை கற்றலின் புரிதலின் நிலைகள் இவையனைத்திலும் கொள்கைகள் ஒரு பகுதிகளாக ஈடுபட்டுள்ளன.

4. **நோக்கம் :** மாணவர்களின் எண்ணங்களையும் கவலையைப் பற்றிய பணி தொடர்பான நோக்கங்களாக உள்ளன.

5. **பிரதிபலிப்பு :** மாணவன் எதைத் கற்றானோ அதன் பொருள் மீது மாணவர்களின் பிரதிபளிப்பு.

6. **பேச்சுவார்த்தை:** மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையேயான இலக்குகள் மற்றும் முறைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளாகும்.

7. **திறனாய்வு :** பாடப்பொருளை கற்றுக்கொள்ள மாணவர்கள் பயன்படுத்தும் பல்வேறு வழிகளும், முறைகளும் ஆகும் வழிகளையும், முறைகளையும் பாராட்டுகிறார்கள்.

8. **சிக்கலான சூழல்:** மாணவர்கள் நிஜ வாழ்க்கையில் உள்ள சிக்கல்களைக் கொண்டு கற்றல் பணிகளை ஒப்பீடுவதோடு பிரதிபலிப்பு பகுப்பாய்வு செய்கின்றனர்.

9. **இயக்கப்படும் சூழ்நிலை:** கற்றல் பணியை தொடங்குவதற்காக நிலைமைகளின் தேவையை கருத்தில் கொள்ளப்படுகிறது.

10. **ஈடுபாடு :** கற்றலுக்கான வழிகாட்டுதல் என்பது உண்மையான வாழ்வின் பணிகளை பிரதிபலிப்பதற்கான செயல்கள்.

11. **நல்ல பயிற்சியானது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையே தொடர்பகளை ஊக்குவிக்கிறது.**

மாணவர்களின் ஊக்கத்திற்கும், ஈடுபாட்டிற்கும் முக்கிய காரணம், அடிக்கடி மாணவர் ஆசிரியர் வகுப்பிற்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்பு கொள்வதாகும். ஆசிரியர்களின் அக்கறையானது மாணவர்களுக்கு கடினமான நேரத்தில் உதவுவதோடு, தொடர்ந்து பணியாற்றவும் உதவுகிறது.

12. **நல்ல பயிற்சி மாணவர்களுக்கிடையே ஒப்படைப்பு மற்றும் ஒத்துழைப்பை உருவாக்குகிறது.**

ஒரு தனியாள் பந்தயத்தைவிட குழு முயற்சியே கற்றலை மேம்படுத்தும். நல்ல கற்றல், நல்ல சேவை கூட்டு முயற்சிகள் மற்றும் சமூகம் போன்றது, போட்டியில்லாதது, தனித்தன்மை வாய்ந்தது. மற்றவர்களுடன் சேர்ந்து சேவை செய்வது கற்றலின் ஈடுபாட்டை அதிகரிக்கும்.

13. **நல்ல பயிற்சியானது கற்றலில் தொழில் நுட்பங்களை பயன்படுத்துகிறது.**

கற்றல் என்பது கற்போரின் விளையாட்டு அல்ல. வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டு மாணவர்கள் அதிகம் கற்றுக்கொண்டும், முன்னேற்பாடுகளில் தயார் செய்த ஒப்படைப்புகளை மனப்பாடம் செய்து, அந்த பதில்களை வெளிப்படுத்துவதாகும்.

என்ன கற்றார்களோ, அதைப்பற்றி பேசவும், பிரதிபலிப்புடன் எழுதவும், பழைய அனுபவங்களை தொடர்புபடுத்தவும், அன்றாட வாழ்வில் அதை உபயோகிப்பதும் கற்றலாகும். தங்களை ஒரு பகுதியாக கற்றுக்கொள்ள வேண்டும். தொழில்நுட்பங்களின் வரம்பானது செயல்வழிக் கற்றலை ஊக்குவிப்பது மகத்தான செயலாகும். மூன்று பிரிவுகளின்கீழ் அளித்தும் விழும்: செயல்வழி கற்றலின் ஆதாரங்களும், கருவிகளும், தாமதமான நேரத்தின் பரிமாற்றம், மற்றும் நிஜநேரத்தின் உரையாடல். இவையனைத்தும் இன்றைய காலகட்டத்தில் உலக உற்பத்திக்கு ஆதாரமாக இருக்கின்றது. எனவே, மென்பொருள் மற்ற தேவைகளுக்காக வளர்ந்தது. ஆனால் தற்பொழுது அது வழிகாட்டுதலுக்காக பயன்படுகிறது.

14. **நல்ல பயிற்சியானது உடனடி கருத்தை தரும்.**

நமக்கு தெரிந்ததைத் தெரிந்துகொள்வதும், தெரியாததும் என்பது நம்முடைய கற்றலின் மையமாக உள்ளது. இருக்கும் அறிவு மற்றும் திறனை மாணவர்கள் மதிப்பிடுவதில் மாணவர்களின் உதவி தேவை.

பின்னர், வகுப்புகளில் மாணவர்கள் தங்கள் செயல்திறனின் கருத்தினை பெறவும், அவற்றை அடிக்கடிக் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் தேவை. பல்வேறு நிலைகளில் கல்லூரிகளில், முடிவில் மாணவர்கள் என்ன கற்றார்களோ அதை பிரதிபலிப்பதற்கான வாய்ப்புகள் தேவை, தற்போது வரை தெரிந்து கொள்வதற்கான தேவை. மாணவர்கள் தாங்களே மதிப்பீடு செய்ய தெரிந்து கொள்ளுதல், தொழில்நுட்பங்கள் எந்த வழிகளில் கருத்துக்களை உருவாக்குகிறது.

15. **பணிக்கான நேரத்தை வலியுறுத்துகிறது.**

நேரமும், ஆற்றலும் கற்றலை சமப்படுத்துகிறத. கற்றலின் பயனானது மாணவனுடைய சிக்கலையும், ஒரே தொழிலையும் தேர்ந்தெடுக்க பயன்படுகிறது. நேரத்தின் உண்மையான அளவை ஒதுக்கிடுவது என்பது மாணவர்களுக்கு பயனள்ள கற்றளையும், ஆசிரியர்களுக்கு பயனள்ள கற்பித்தலையும் தருகிறது.

16. **நல்ல பயிற்சி உயர்ந்த எதிர்ப்பார்பின் தொடர்பாகும்**

புதிய தொழிற்நுட்பங்கள் வெளிப்படையாகவும், திறமையாகவும் உயர்ந்த எதிர்பார்ப்புகளை தொடர்புபடுத்தும். குறிப்பிடத்தக்க உண்மை வாழ்வின் பிரச்சனைகள், முரண்பட்ட கண்ணோட்டங்கள், அல்லது முரண்பாடான தகவல்கள் கற்றலின் சவால்களை மாணவர்களிடம் இயக்க தகவல் மட்டுமே இல்லாமல், அவர்களது அறிவாற்றல் திறன்களை பகுத்தல் தொகுத்தல் அவற்றை பயன்படுத்தி மதிப்பீடு செய்ய வேண்டும்.

17. **பல்வேறு திறன்கள் மற்றும் கற்றலின் வழிகளை நல்ல பயிற்சி மதிக்கும்.**

கற்றலுக்கு அதிகமான வழிகள் வழிகாட்டு. பல்வேறு மாணவர்கள் பல்வேறு திறன்களையும், நடையுடைபாவணங்களுடன் கல்லூரிக்கு வருகின்றனர்.

நுண்ணறிவுடைய மாணவர்கள் ஆய்வகங்களிலும், ஓவிய அறைகளிலும் தங்களுடைய நேரங்களை பயன்படுத்துகின்றனர் கோட்பாட்டின் அனுபவத்தை விட செய்முறை பயிற்சி அனுபவங்களே நம்பிக்கையை தரும். மாணவர்கள் தாங்கள் செய்யும் வேலைகளில் அவர்களின் திறன்களும் கற்றலும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் தேவைப்படுகிறது. பின்பு அவர்கள் புதிய வழிகளில் கற்க தள்ளப்படுகின்றனர். அதனால் இந்த புதிய கற்றல் சுலபமாக வராது.

## 6. செயல்திறன் கற்றலின் தொழில்நுட்பங்கள்

1. **மாணவர்கள் இடையே நினைவுகளை பகிர்தல்**: ஒத்த வயதுடைய மாணவர்கள் தங்களிடையே வினாக்களை கேட்கிறார்கள் பிறகு தங்கள் எண்ணங்களை சக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். பின்பு அவற்றிற்கான பதில்களை சிந்திக்கின்றனர்.
2. **கதாபாத்திரமாக செயல்படுதல்**
   ஒவ்வொரு மாணவனும் ஒரு தனி காதாபாத்திரமாகவே மாறி நடித்து பாடப் பொருள்களை எளிதாக கற்றுக்கொள்ளுதல்.

3. **வரம்பு எல்லையை கண்டுபிடித்தல்**
   கற்றலுடன் இணைந்து செயல்படுகின்ற ஒரு குழு விவாத முறையாகும்

4. **ஒத்தவயதுடையவர்களின் மீள் பார்வை:**
   தன்னுடன் பயிலும் மாணவர்கள் எழுதிய பாடப்பொருளை மீள்பார்வை செய்து கருத்துக்கூறல்.

**5.கலந்துரையாடல்:**

ஒரு வெற்றிகரமான விவாதம் சரியான கேள்விகள் உருவாவதால் அமைகிறது. உயர்சிந்தனை உருவாக்கக்கூடிய வினாக்களை கேட்பதற்கு விவாதத்தில் வழிவகை செய்ய வேண்டும்.

6.**உண்மையான தகவல்களை பயன்படுத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காணல்.**

மாணவர்கள் உண்மையான பலவகையான தகவல்களை பயன்படுத்தி எந்தவொரு பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பார்கள்

**7.விளையாட்டு வழிக் கற்றல்:**

மாணவர்களுக்கிடையே போட்டி, பயிற்சி மூலம் கற்றலை வளர்த்தல். அல்லது கணிணிவழித் தூண்டுதல் மூலமாகவும் கற்றல் செயல்பாடுகளை அதிகப்படுத்தலாம்.

## 6. செயல்வழிக்கற்றலும் அதன் தாக்கமும்

செயல் வழிக்கற்றல் நுட்பத்தின் நோக்கமானது மாணவர்கள் எளிமையாக கற்க உதவுகிறது. இந்த கற்றலானது வழக்கமான வகுப்பறையின் செயல்பாடுகளுக்கு பாதிப்பு இன்றி இருக்கும். மேலும் செயல்வழிக் கற்றல் பயிற்சி மூலம் மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறன்களையும் மற்றும் பாடப்பொருள் பற்றிய அறிவையும் ஆசிரியர் பின்னூட்டமாக பெறுகிறார்.

### 1. ஒரு நிமிட காகிதம்

பாடப்பொருளை கற்றுக் கொள்வதிலும், பொருளை புரிந்துகொள்வதிலும், மாணவர்களின் முன்னேற்றத்தை சரிபார்க்கவும் இது மிக முக்கிய பயனுள்ள

தொழில்நுட்பமாகும். மாணவர்களை ஒரு வெறும் காகிதத்தை எடுக்க சொல்ல வேண்டும், கேள்வியை கேட்கவேண்டும் பிறகு ஒரு நிமிடம் பதிலுக்கு நேரம் தரவேண்டும். எடுத்துக்காட்டாக சில மாதிரி கேள்விகளான ''அறிவியல் உண்மை என்றால் என்ன?'' ''ஒரு வேதியியல் எதிர்வினை என்றால் என்ன?'' மற்றும் பல. மற்றொரு நல்ல பயனான ஒரு நிமிட காகித கேள்வி என்பது இன்றைய வகுப்பின் பொருளில் முக்கிய புள்ளி எது? இது உங்கள் மாணவர்கள் செயல்வழி பொருளில் காணப்பட்டார்கள் என்பதைச் சொல்லிவிடும்.

**2. உணர்ச்சிகரமான பதில்**

இதுவும் மேலே காணப்பட்டதை போன்றே, ஆனால் இங்கு மாணவர்களிடம் பாடப்பொருளை பற்றிய எதிர்வினையை கேட்க வேண்டும். இதுபோன்ற அணுகுமுறை பாடப்பகுதியில் அளவான சரியான கேள்விகளை கேட்க வழிவகுக்கும்.எனவே நீதிநெறி பாடங்களை பயன்படுத்துவதற்கு இது ஆரம்ப நிலையில் உதவும், குறிப்பாக கோட்பாடு சார்ந்தவைகளின் முன்னோடியாகவும் இருக்கும்.

**3. தினசரி நாளேடு**

இது மூன்று தொழில்நுட்பங்களின் கலவையாகும், மற்றும் பாடபொருளைப் பற்றிய ஆழ்ந்த விவாதம் மற்றும் எதிர்வினையை அனுமதிக்கும். ஓர் ஆசிரியர் வகுப்பு வேலையில் மாணவர்கள் நாளேடு உள்ளீடுகள் அல்லது வீட்டுபாடமாகவும் அளித்தல் வேண்டும். இந்த அணுகுமுறையின் தீமை என்னவென்றால் ஒரு நிமிட காகிதத்தில் உடனடி பின்னூட்டம் கிடைக்காது. ஆசிரியர் கடினான கேள்விகளை கேட்கவேண்டும் அவை, ''தீர்மானம் என்பது சரியா'' அல்லது மனிதனின் சுதந்திர ஆசையா? உங்களது விடையை விவரிக்க. பாடப்பொருள் சார்ந்த தலைப்புகளை ஊடகத்திலும் மற்றும் அறிவியல் சார்ந்த அறிக்கைகளை விவாதிப்பதும் மாணவர்கள் கண்டறியவேண்டிய ஒன்றாகும். அவையாவன உலக வெப்பமயமாதல், ஓசோன் அடுக்கு மற்றும் பல

**4. வினாடி வினாவை படித்தல்**

மாணவர்கள் கொடுக்கப்பட்டபொருளை வினாடி வினாவாக படிக்கவைப்பது ஒரு வழி என்பது தெளிவாகிறது. செயல்வழிக் கற்றலையே வகுப்பில் மாணவர்கள் மேற்கொள்கின்றனர். மாணவர்களின் படிக்கும்திறனை இந்த வினாடிவினாவை படிப்பதன் மூலம் அளவிடலாம், மேலும் இவ்வகையான கேள்விகள் பல்வேறு வினாடி வினாக்களை ஏற்படுத்தும் மாணவர்களுக்கு படிக்கும் வேலையை தரும்போது அவர்களுக்கு தேவையான அறிவுரையையும் வழங்க வேண்டும்.

**5. விளக்கங்களின் இடைநிறுத்தம்**

கவனித்தலின் செயல் ஒரு சாதாரண தொழில் நுட்பமாகும். கற்பித்தலின் போது குறிப்பாக ஆரம்பிக்கும்போது முக்கியமானதை அல்லது பொருளை விளக்குவதை நிறுத்தி, அதில் சிந்திக்க விட்டு பிறகு யாருக்காவது சந்தேகம் உள்ளதா என கேட்கவேண்டும். மாணவர்கள் குறிப்பு எடுக்கும்போது, கேள்விக்கு பதில் கூறும்போதே வகுப்பறையை சுற்றிவருதல் வேண்டும். வகுப்பறையில் அனைவர் முன்னிலையிலும் கேள்விகேட்க தயங்குபவன் இப்படிப்பட்ட விளக்கங்களின் இடைநிறுத்தத்தில் கேட்பான்.

### 6. கேள்விகளும் பதில்களும்

மாணவர்களுடைய ஈடுபாடு மற்றும் புரிதலை கேள்வி கேட்கும் தொழல்நுட்பம் அதிகரிக்கும், மாணவர்களிடம் கேள்வி கேட்டு புரிதலை உடனடியாக சோதிக்கவும் இது உதவுகிறது. எனவே கொடுக்கப்பட்டுள்ள சில தொழில்நுட்பங்களை வெளிப்படையானதாகும், இதனடிப்படையில் கோட்பாடுகளை திரும்ப திரும்ப எடுத்துக்கொள்ளவேண்டும்.

### 7. சாக்ரடிக் முறை

வரலாற்றில் பிரபலான இப்பெயரை எடுத்துக்கொண்டு, இத்தொழில்நுட்பத்தை வழிகாட்டுபவர் ஈடுபாட்டுடன் ‘‘சோதித்து’’ பாடவேளையில் மாணவர்களிடம் கேள்விகேட்பதன் மூலம் சோதிக்கலாம். பொதுவாக வழிகாட்டுபவர் ஒரு குறிப்பிட்ட மாணவனை தேர்ந்தெடுத்து, அவரிடம் வினாவை கேட்டு, பதிலுக்கு எதிர்பார்த்து, ஒருவேளை அந்த மாணவன் எதிர்பார்த்த பதிலை கூறவில்லையெனில் வழிநடத்துபவர் மற்றொரு மாணவரிடம் அக்கேள்வியை, பதில் வரும் வரை கேட்பார்.

### 8. மற்றொரு மாணவனின் பதிலுக்கு மாணவனின் சுருக்கம்

செயல்வழி கவனித்தலை வளர்க்க, உங்கள் கேள்விக்கு ஒரு மாணவன் தானாகவே முன்வந்து பதில் கூறுகையில் மற்றொரு மாணவனை முதல் கூறிய மாணவனின் பதிலுக்கு சுருக்கம் அளிக்க சொல்ல வேண்டும். நிறைய மாணவர்கள் தங்கள் உடன் மாணவர்கள் சொல்வதை சிறிதளவு கேட்டு வழிகாட்டுபவர் அதை திருத்தவோ திரும்ப சொல்ல சொல்லும் வரை காத்திருப்பர். கற்றல் என்பது ஒரு பங்கீடு, இது அனைத்து மாணவர்களின் யோசனைகளை வளர்தது அவர்களின் செயல் பங்காற்றலை வளர்க்கும். இதுவே மாணவர்களின் சுருக்கம் அல்லது திரும்ப திரும்ப ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதாகும்.உடன் பயிலும் மாணவர்களின் கருத்தை திரும்பத்திரும்ப கேட்பதால் மற்ற மாணவர்கள் ஒருவருக்கொருவர் கவனத்துடன் கவனிப்பார்கள்.

### 9. மீன் கிண்ணம்

பாடப்பொருள் சம்பந்தமாக மாணவர்களிடம் ஒரு கேள்வியை எழுத வைத்து அத்துடன் குறியீட்டு அட்டைகளையும் சேர்த்து தரப்படவேண்டும். முதலில் பாடப்பொருளில் மாணவர்கள் முழுமையாக புரிந்துகொள்ளாத சில கேள்விகளுக்கான விளக்கங்களை கேட்டு வழிநடத்தவேண்டும் அல்லது செய்துகாட்டும் பொருளுக்கு ஏற்றவாறு படப்பொருளை பயன்படுத்தும்படியான கேள்விகளை கேட்க அனுமதிக்கவேண்டும். வகுப்பு முடிவுறும் தருவாயில் மாணவர்களின் கேள்விகளை மீன் கிண்ணத்தில் போட வேண்டும். வழிநடத்துபவர் கிண்ணத்தில் உள்ள பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கவேண்டும் அல்லது வகுப்பில் உள்ள மாணவர்களை பதில் கூற சொல்ல வேண்டும். இத்தொழில்நுட்பத்தை மற்றவர்களுடன் இணைந்து செயல்படுத்தவேண்டும்.

### 10. விரல் குறிகள் / ஜாடைகள்

மாணவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு, தங்கள் பதிலை ஜாடையில் அறிவுறுத்தி தேவைப்படும் சரியான விரல்களை மற்றவர் முன் உடனடியாக உயர்த்துவர். எடுத்துக்காட்டாக, வழிகாட்டுபவர் ‘‘ஆம்’’ ஒரு விரலையும் ‘‘இல்லை’’

என்பது இரு விரலையும் அசைக்கச் சொல்லி பின் கேள்வி கேட்க வேண்டும். அனைத்து கரிம கலைகளிலும் கார்பன் உள்ளதா? அல்லது வழிநடத்துபவர் பல்வகை கேள்விகளை தயாரித்து மாணவர்கள் விரல் ஜாடையில் பதிலளிக்க சொல்ல வேண்டும். அதிக மாணவர்களுடைய வகுப்புகளில் அட்டை பலகையில் குறியுடன் எண்களை எழுதிவைத்து பயன்படுத்தவேண்டும். இந்த முறையானது இலக்கிய ரீதியாக மாணவர்களின் அறிவை ஒரு பார்வையில் கண்டடைய உதவுகிறது.

**11. மின் அட்டை**

விரல் ஜாடை அணுகுமுறையின் வேறுபாடு , இம்முறை மாணவர்களை சோதிக்கும் வழிகாட்டுபவர் நடத்தும் மின் அட்டையின் பதில் புரிதலால் ஏற்படுகிறது. இயற்பியல், வேதியியல் அல்லது உயிரியியல் பாடங்களில் காட்சி தூண்டல்களாகவும் அல்லது குறிப்பாக ஒழுங்கு முறைகளில் இதை பயன்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு வேதியியல் கரிமத்தை வழிகாட்டுபவர் வரைந்து ஒளிபரப்பவேண்டும். $H_2O$ கலவை எதிர்செயலாற்றுமாறு இவை அனைத்தும் விரல் சாடையில் இணையும்.

**12. .பங்கு / இணை**

குழுவாக வேலை செயயும் மாணவர்கள் தங்களுக்கான வாய்ப்பை தங்கள் கண்ணோட்டத்தில் சொல்லவும் மற்றவரிடம் கேட்கவும் விவாதிக்கும் திறனை பெறவும் குழுவாக வேலை செய்யும் நிர்வாகத்தை நோக்கி செல்லும் இணையாக உள்ள குழு மாணவர்களை குழு வேலையில் அனுமதித்தலாகும். மேலும், இணை என்பது கிட்டதட்ட மாணவர்களுக்கு இயலாததாகும் எனவே ஒவ்வொரு மாணவனும் இதில் பங்கேற்பதை தவிர்க்கின்றனர்.

**13. விவாதம்**

மாணவர்கள் இணையாகவும், சுழற்சி முறையிலும் கேள்வி கேட்கப்படவேண்டும். இது மற்ற தொழில் நுட்பத்தோடு சுலபமாக இணையும் அவை ‘‘கேள்வி மற்றும் பதில்’’ அல்லது திறனாய்வு காண்கிற ஊக்கப்படுத்துபவர். எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டதற்கு மாணவர்கள் பதில் கூறுவர் அவை தார்மீக உரிமையை உண்மையான தார்மீக உரிமையாக சமூகம் எடுத்துக்கொள்ளும். இதனுடன் உண்மையா அல்லது பொய்யா விவாதத்தின் போது சொல்லப்பட்டவை வேறுபடுகிறது மற்றும் விடைகளுக்கான குறைவான கேள்விகளே கேட்கப்படுகின்றன. அறிவியல் வகுப்பு மாணவர்கள் வகுப்பில் விவரித்த பாடத்தை சோதனை செய்து விவரிக்க சொல்ல வேண்டும். பொதுவாக வெளிப்படையான கோணத்தில் மாணவர்கள் சிறப்பாக வேலை செய்யும்போது அவை எதற்கு இந்த விடையை தேர்ந்தெடுத்து செய்திர் எனக் கேட்பர்.

**14. சக மாணவனுடைய வேலையை மதிப்பீடு செய்தல்**

மாணவர்கள் தங்களுடைய வீட்டு பாடங்களை முடிக்க சொல்ல வேண்டும். சமர்பிக்கும் நாளில் ஒன்றை வழிகாட்டுபவருக்கும் மற்றொன்றை சக மாணவர்களிடமும் ஒப்படைக்கவேண்டும். மாணவர்கள் தங்கள் சக மாணவர்களிடம் முழுமையாக வேலை செய்து வேலை சார்ந்த கருத்துகளை, தரமாக்கப்பட்டு அல்லது விவாதங்களில் யோசித்து இலக்கணத்தில் உள்ள பிழைகளின்

பிரச்சனைகளை சரிசெய்தும். இது மாணவர்கள் எழுதுவதை குறிப்பாக பயனுள்ளதாக்கும்.

## 7. சுயகற்றல் (Self - Learning)

### வரையறை (Definition)

1). ஆசிரியர் மற்றும் வகுப்பறை கற்றல் இல்லாமல் மாணவர்கள் வீட்டில் தனியாகவே பாடத்தை கற்பது

2) ஆசிரியரின் துணையின்றி மாணவர்கள் தானாகவே கற்றுக் கொள்வது

3). சுயமான கற்றல் என்பது ஒரு பாடம் அல்லது பாடங்களைப் பற்றி முறையாக கற்றல் இல்லாமல் தானாகவே கற்பதாகும்.

4) சுயகற்றல் என்பது ஒரு நபர் பாடத்தை சிறிதும் ஆசிரியரின் துணையின்றி கற்பதாகும்.

### சுயகற்றலின் முக்கியத்துவம் (Importance of Self - Learning)

சுயகற்றலின் முக்கியத்துவமானது

அ). எப்படி கற்றுக் கொள்வது என்பதை புரிந்து கொள்ளச் செய்கிறது.

ஆ) கற்றலானது எந்தவித வெளிப்புற கருவிகளின்றி நடப்பதாகும்.

இ). எதிர்காலத்திற்கு தயார் செய்தல்.

ஒரு சுயக்கற்றலில் ஈடுபடும் ஒருவனுடைய நோக்கமானது எல்லாவற்றையும் சிறிதளவாவது தெரிந்து கொள்வது அல்லது அவன் ஒரு பாடத்தில் புலமை பெற கடினமாக உழைப்பதாகும். எவ்வாறாக இருந்தாலும் சுயக்கற்றலானது கற்போருடைய கட்டுப்பாட்டில் நடைபெறவேண்டும். சரியான பாதையில் முயற்சிசெய்து திட்டமிடப்பட்ட சுயகற்றலானது அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும்.

### சுயகற்றலின் நன்மைகள் (Benefits of Self - Learning)

1. மாணவர்களை சுயமாக சிந்திப்பவர்களாக உருவாக்குகிறது.
2. மாணவர்கள் தங்களுடைய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள தெரிந்து கொள்கிறார்கள்.
3. சுயகற்றலின் மூலம் மாணவர்கள் சுதந்திரமாக தடைகளின்றி கற்கிறார்கள்.
4. நம்பகத்தன்மையை பெறுகிறார்கள்.
5. உள்ளார்ந்த மதிப்புகள், நல்உணர்வுகளை வளர்க்க சுயகற்றல் உதவுகிறது.
6. சுயகற்றால் மாணவர்கள் நல்ல தன்னம்பிக்கையுடன் பிரச்சனைகளுக்கு தீர்வுகண்டு தேர்வை நன்றாக எழுதுவதற்கு உதவுகின்றது.
7. பெற்றோர்களின் மூலம் மாணவர்கள் தெரிந்து கொள்வதை விட சுயகற்றலின் மூலம் அதிகமாக மனதில் பதியவைக்கு முடிகிறது.

8. தங்களின் கல்வியில் இடைவெளியிருந்தால் அதைப்பற்றி கலவைப்பட தேவையில்லலை. ஏனென்றால் அவர்கள் எதையாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் தாங்களாகவே கற்றுக்கொள்ளலாம்.

9. ஆசிரியர்கள் கற்பிக்கும் வரை காத்திருக்காமல், அவர்களாகவே தைரியத்துடன் மூழ்கி கற்றுக்கொள்வர்.

10. ஊக்கம் மற்றும் திட்டமிடுதலுக்கான தேவை வரும்போது மாணவர்கள் தங்கள் தங்களை கல்லூரி வகுப்பிற்கு தயார் செல்வதாகும்.

11. வேலை நெறிமுறைகளை வளர்ததுக் கொள்ள வாய்ப்பளிக்கிறது.

12. மாணவர்களை தங்கள் பாடங்களில் ஆழமாக கற்க அனுமதிக்கவும் அவற்றை புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

13. கற்போரை குறைந்த அளவே கற்க ஊக்குவிக்கிறது

14. சுயகற்றலானது குடும்பத்தை நிறுவனமாக கருதாமல் குடும்பத்தை குடும்பமாகவே இயங்க அனுமதிக்கிறது.

15. ஒருவனுடைய ஆற்றலை அடையாமல் போவதற்கான அனைத்து அனுமதிகளையும் முடியறிக்கிறது.

16. ஒரு மாணவான் கற்காவிட்டால் அது மற்றவர்களின் பிழையாகாது. கற்பிப்பதைவிட சுயகற்றலே அதிக மகிழ்ச்சியை கொடுக்கிறது.

17. சுயகற்றல் என்பது ஆசிரியரின் கையேடு மற்றும் பாடபுத்தகத்தை விட தாமாகவே மிக உயரிய நூல்களை படிப்பதாகும்.

18. தகவல்களின் ஆதாரங்களை ஒருவன் சுயகற்றல் மூலம் பயிற்சி பெற்றால் தவறான புத்தகங்களின் வாய்ப்புகளை பெறலாம்.

19. அதகப்படியான தகவல்கள் விரல்நுனியில் கிடைப்பதால், இப்போது சுயகற்றல் என்பது எதிர்கால அலைகளாக இருக்கிறது.

20. மழலைகள் மற்றும் குழந்தைகள் தங்கள் தாயிடம் அதிக கவனத்தை பெறுவதே சுயகற்றலாகும்.ஏனென்றால் அவர் ஓய்வில்லாத ஆசிரியர். கிடையாது.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. கற்றலின் பொருள், வரையறையை தருக
2. கற்றலின் கூறுகளை விவரி
3. கற்றலின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை?
4. பொருளுணர்ந்து கற்றல் மற்றும் பொருளுணராக் கற்றலை பற்றி விவரி
5. செயல்வழிக்கற்றலை எவ்வாறு செயல்படுத்துவாய்?
6. சுயக்கற்றலைப்பற்றி ஒரு கட்டுரை வரைக

# அலகு -2 கற்பித்தலின் தன்மை

**நோக்கங்கள்:**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1.கற்பித்தலின் தன்மை மற்றும் கற்பித்தலின் பண்புகளை புரிந்துகொள்வார்

2.சிந்தனையாளர்கள் தத்துவஞானிகளின் கற்பித்தலைப் பற்றிய கருத்துக்களை ஆய்வுசெய்வார்.

3.சிந்திக்கும் ஆற்றல் படைத்த ஆசிரியரின் பண்புகளை பற்றி விவாதிப்பார்.

**முன்னுரை:**

''கல்வி என்பது மனிதரிடம் முன்பே உள்ள முழுமையை வெளிப்படுத்துதல்'' என சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.கற்பித்தல் என்பது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நிகழும் ஒரு கருத்து பரிமாற்றம் ஆகும். அது தொடர்ந்து நிகழும் செயலாகும். இங்கு நாம் கற்பித்தலின் அம்சங்களையும் கற்பித்தலைப் பற்றிய சிந்தனையாளர்கள், தத்துவஞானிகளின் கருத்துக்கள் மற்றும் ஆசிரியரின் குறிக்கோள்களை பற்றி இங்கு நாம் காண்போம்.

**கற்பித்தல்:வரையறை**

**கேஜின்** கருத்துப்படி கற்பித்தல் என்பது வேறுஒரு நபரின் நடத்தைத் திறனில் மாற்றத்தை ஏற்படுத்துவதை குறிக்கோளாக கொண்ட இரு நபர்களுக்கிடையே நிகழும் தாக்கம் ஆகும்.

**எட்மண்ட் அமிடான்** கூற்றுப்படி கற்பித்தல் என்பது ஒரு ஊடாடும் செயல்முறையாகும் குறிப்பாக வகுப்பறையில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிகழும் பேச்சு என்றும் மேலும் சில குறிப்பிட தக்க செயல்பாடுகளில் கற்பித்தல் ஏற்படுகிறது.

**''ப்ரூ பேசர்** கூற்றுப்படி கற்பித்தல் என்பது சூழ்நிலையை கட்டுப்படுத்தி மாற்றி அமைத்தலுடன் அதை வெற்றிக் கொள்ளல் எனக் கருதுகிறார்''.

**''ஸ்கின்னர்** கற்பித்தல் என்பது வலுப்படுத்துவதற்கான நிகழ்வுகளை ஏற்படுத்துதலாகும்

**''ரேயான்** கற்பித்தல் என்பது மற்றவரின் கற்றலுக்கு வழிகாட்டுதல் தொடர்பான செயல்பாடுகலாகும்''.

''**ஆபட்மெமோஹன்** கற்பித்தல் என்பது மற்றவர்கள் கற்க உதவுதல்''.

**கற்பித்தல்: பொருள்**

1.ஒரு ஆசிரியரின் தொழில் அல்லது பணி

2.கற்பித்தல் என்பது கற்பிக்கப்படும் ஒன்று.

3.ஒரு நபரால்,மதத்தால் கற்பிக்கப்பட்ட நம்பிக்கைகளின் கருத்துகளாகும்.

4.கற்பிக்கும் ஒரு நபரின் செயல் அல்லது தொழிலாகும்.

5.கற்பித்தல் என்பது மாணவரின் தேடுதல் நிலையை எளிதாக முன்னேற்றம் செய்யும் முறை மேலும் அது எந்த சூழ்நிலையையும் எளிதில் வெற்றிக் கொள்ள உதவுவது.

6.கற்பித்தல் என்பது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நிகழும் கருத்து பரிமாற்றம்.அவரவர் தம் நன்மைக்காக அதில் பங்கு கொள்கின்றனர்.இருவரும் தாம் அடைய வேண்டிய குறிக்கோள்கள்,வழிமுறைகளை இவற்றைப் பெற்றுள்ளனர்.

7.மற்றவர்களுக்கு கல்வி அளிக்க உதவும் எல்லா செயல்களும் கற்பித்தலில் அடங்கும். கல்வியை அளிக்கும் நபர் ஆசிரியர் என அழைக்கப்படுகிறார். சிறந்த அறிவை மாணவர்களுக்கு அளிக்க ஆசிரியர் மாறுபட்ட முறைகளை பயன்படுத்துகிறார்.மாணவர்களை புரிந்து கொள்ளச் செய்ய சிறப்பாக முயல்கிறார். மாணவர்கள் பாடங்கள் கற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதே அவர் கடமையாகும்.

8.கற்பித்தல் என்பது மாணவர்களின் தேவைகள்,அனுபவங்கள் உணர்ச்சிகள் இவற்றை கவனிக்கும் முறை மேலும் குறிப்பிட்ட முறையில் தலையிட்டு குறிப்பிட்ட வற்றை கற்க செய்தல்.

**கற்பித்தலின் பண்புகள்**

1.கற்பித்தலின் முக்கிய அம்சம் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி அளித்தல்

2.கற்பித்தல் என்பது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நிகழும் தொடர்பு ஆகும்.

3.கற்பித்தல் மாணவர்களுக்கு, அறிவை சிறப்பான முறையில் அளிக்கும் ஒரு கலை ஆகும்.

4.பல்வேறு பாடங்களில் பல்வேறு தலைப்புகளில் உள்ள உண்மைகளை கற்பிக்கும் ஓர் அறிவியலே கற்பித்தல் ஆகும்.

5.கற்பித்தல் தொடர்ந்து நிகழும் செயல்ஆகும்.

6.தாம் கற்பிக்கும் பாடப் பொருளைப் பற்றி ஆசிரியருக்கு முழு நம்பிக்கை இருக்கும்போது அவர் சிறப்பாக கற்பிக்க முடியும்.

7.கற்பித்தல் மாணவர்களை மேலும் மேலும் சிந்திக்க ஊக்குவிக்கிறது.

8.கற்பித்தல் முறையாகவும் எளிதாகவும் நடைபெறுகிறது.

9.கற்பித்தல் என்பது மாணவர்களுக்கு செய்திகளைத் தெரியப்படுத்துதல், மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் முறையில் ஆசிரியர் கருத்துகளைக் கற்பிக்கிறார்.

10.சமுதாயத்திலும் அதன் சுற்றுச்சூழலிலும் தன்னைச் சரிசெய்து கொள்ள மாணவர்களுக்கு உதவும் ஒரு உபகரணமே கற்பித்தல் ஆகும்.

11.கற்பிக்கும் பாடப்பொருளை தூண்டக்கூடியதாகவும், கவரக்கூடியதாகவும் செய்யும் திறனாகும்.

12.மாணவர்களின் புரிந்துகொள்ளும் நிலைக்கேற்ப அவர்களை ஈடுபடச் செய்தல்

13.பாடப்பொருளை தெளிவாக விளக்கும் திறன்

14.எதை புரிந்து கொள்ள வேண்டும்,எந்த அளவிற்கு, ஏன் என்பதை தெளிவுப்படுத்த முடிவு செய்தல்

15.மாணவர்கள் மீது அக்கறை, மதிப்பினை காண்பித்தல்

16.சுதந்திரத்தை ஊக்குவிக்க முடிவு செய்தல்.

17.புதிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்கள்,புதிய முறைகள் இவற்றைப் பயன்படுத்தும் திறன்

18.மாணவர்கள் தீவிரமாகவும், பொறுப்பாகவும், ஒத்துழைப்புடனும் கற்க உகந்த கற்பிக்கும் முறைகள், கற்றல் செயல்கள் ஆகியவற்றை பயன்படுத்துதல்.

19.நம்பகமான மதிப்பீட்டு முறைகளை பயன்படுத்துதல்

20.பாடப்பகுதியை முடிக்க வேண்டும் என்பதையே எண்ணாமல் முக்கியமான கருத்துக்களையும் மாணவர்கள் அவற்றை மாணவர்கள் தவறாக புரிந்துகொள்ளுதலில் இவற்றின் கவனம் செலுத்துதல்

21.மாணவர்களின் செயல்பாடுகள் பற்றி உயர்ந்த ரக மதிப்பீடு அளித்தல்.

22.மாணவர்களிடமிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும், தம் கற்பித்தல் விளைவுகளைப் பற்றி அறிந்து அதை எப்படி மேம்படுத்தலாம் என்பதை பற்றிய ஆவல்.

**சிந்தனையாளர்கள், தத்துவஞானிகளின் கூற்றுகள்**

1.ஒரு எண்ணத்தை ஏற்றுக்கொள்ளாமல் கருத்தில் கொள்ளுதல் ஒரு கற்றவரின் பண்பு ஆகும்.

2.குழந்தைகளுக்கு கல்வி அளிப்பவர்களை பெற்றோர்கள் உயர்வாக மதிக்க வேண்டும். ஏனெனில் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு உயிர் மட்டும் கொடுத்தார்கள் ஆனால் நன்கு வாழும் கலையை கல்வி அளிப்பவர்கள் கொடுக்கின்றனர்.

3.உயிரோடு இருப்பவர் எந்த அளவுக்கு மாறுபடுகின்றனறோ அதே அளவுக்கு கற்றவர் கல்லாதவரிடமிருந்து மாறுபடுகின்றனர்.

**-அரிஸ்டாடில்**

4.பயிர்களை சாகுபடி செய்வதன் மூலமும் மக்களின் கல்வியின் மூலமும் உருவாக்கப்படுகின்றனர்.நாம் வலிமையற்றவராக பிறக்கிறோம் நமக்கு வலிமை தேவை நாம் எவ்வித பாதுகாப்பில்லாமலும் அறிவு வளர்ச்சி இல்லாதவர்களாகவும் பிறக்கிறோம்.நமக்கு உதவி மற்றும் சிந்திக்கும் திறன் தேவைப்படுகிறது.பிறப்பால் நமக்கு இல்லாததாயினும் நாம் வளரும் போது தேவையான எல்லாவற்றையும் கல்வி நமக்கு அளிக்கிறது.

5.சமுதாயம் பண்புகளை கெடுப்பதால் குழந்தையை இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ள செய்ய வேண்டும்.

6.வெளிப்படையான கற்றலோ கட்டுப்பாடுகளோ, நீதி போதனையோ இருக்கக்கூடாது.-

**- ஜீன் ஜாக்குவாஸ் ரூசோ**

7.உள்ளத்தில் பாய்ந்து செல்லுமாறு செய்யவேண்டிய முதல் கருத்து, அவன் தன்னை அறிந்து கொள்ள கற்றுக்கொள்ளுதல்,எப்படி வாழவேண்டும் என்பதை தெரிந்து கொள்ளுதல் ஆகியவையாகும்.

**- டி.மொன்டெய்ன்**

8.மற்றவர்களின் கற்றலிலிருந்து தெரிந்துகொள்வதை விட தாமாகவே கற்றுக் கொள்ளல் சிறந்ததாகும்.

**-யூரிபிடெஸ்**

9.குழந்தையின் சிறப்பான புத்தி கூர்மைக்கும், வலுவற்ற வளர்ந்தோரின் பண்புகளுக்குமிடையே எவ்வளவு விரும்பத்தகாத அளவு ஒப்பிடுதல் உள்ளது.

**-சிக்மண்ட் பிராய்டு**

10.உலகில் நீ பார்க்க விரும்பும் மாற்றங்கள் முதலில் உம்மிடம் நிகழ வேண்டும்.

11.அடிப்படை கல்வியில் குழந்தை பாடப்பொருளை கற்பதுடன் ஒரு திறனையும் கற்க வேண்டும். இவ்வாறு பள்ளி சுய தேவை பூர்த்தி உள்ள ஒருவரை உருவாக்குகிறது.

**-மோகன்தாஸ் காந்தி**

12.கல்வி என்பது மனிதனிடமுள்ள முழுமையை வெளிப்படுத்துதல் ஆகும்.

13.நல்ல நடத்தையை உருவாக்கவும், மனவலிமையை அதிகரிக்கவும், புத்தி கூர்மையை விரிவுபடுத்தவும், ஒருவர் சுயமாக வாழ்வதற்கு உதவக்கூடிய கல்வி நமக்குத் தேவை.

14. நாம் கற்றுக்கொள்ளவும் அனைவருக்கும் அவர்களுடைய இயற்கையை கற்றுக்கொடுக்கவும், உறங்கிக்கொண்டிருக்கும் ஆன்மாவை தட்டி எழுப்பவும், சுய நினைவுடன் செயல்படுவதற்கும் கல்வி மிகவும் அவசியம்.

15. சக்தி, செழுமை, நல்லொழுக்கம், தூய்மை எல்லாம் வரும். தூங்குகிற ஆத்மா சுய நிறைவான நடவடிக்கைக்கு தூண்டுகோளாக இருக்கும்போது சிறந்தது எல்லாம் வரும்.

16.கல்வி என்பது தெய்வீக பரிபூரணத்தின் வெளிப்பாடாகும்.

**-சுவாமி விவேகானந்தர்.**

17. கல்வி ஒருவரை தன்மீது நம்பிக்கை உள்ளவராகவும் சுயநலமற்றவராகவும் ஆக்குகிறது.

**– ரிக் வேதம்**

18.மனிதரின் கல்வி என்பது இயற்கையிலிருந்து ஒருவர் பெறும் பயிற்சி

- பானினி

19.நம் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு காண உதவும் அகன்ற பாதை கல்வியாகும்.

20.கல்வி என்பது வகுப்பறை நிகழ்வுகள் மட்டுமின்றி இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

**- இரவிந்திரநாத் தாகூர்**

21. கல்வி என்பது ஒருவர் இறைவனுக்காகவும், நாட்டுக்காகவும், தனக்காகவும், மற்றவருக்காகவும் வாழ உதவும் சாதனங்களை அளித்தலாகும். இதுவே ஒவ்வொரு தேசிய பள்ளி குறிக்கோளாக இருக்கவேண்டும்.

**- ஸ்ரீ அரவிந்தர்**

22.சகிப்புத்தன்மை என்பது முடிவுற்ற மனம், முடிவில்லாத மனம் என்று வரையறுக்கின்ற மனோபாவத்தைக் கொடுக்கிறது.

23. மதமில்லாத மனிதன் கடிவாளம் இல்லாத குதிரைக்கு ஒப்பானவன் என சொல்லப்படுகிறது.

24. நாம் பெற்றிருக்கும் மனித வாழ்க்கை என்பது ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதவும் அடிப்படை சாதனமாகும்.

25. ஒரு இலக்கிய வல்லுனர் எல்லோரையும் போல் இருக்கிறார். ஆனால் ஒருவரும் அவரைப்போல் இல்லை.

26. கலாச்சாரங்களுக்கிடையே நாம் அமைக்கும் பாலங்களாக விளங்குபவை புத்தகங்களாகும்.

27. அன்பு வெறுப்பை விட வலுவானது என்ற உண்மையை உணராத, எல்லா உலக அமைப்புகளும் பயனற்றவைகளாக ஆகும்.

- டாக்டர் இராதாகிருணன்

28. கல்வி பற்றிய முழுமையான கருத்து மனித உள்ளத்தை மாற்றமடையச் செய்யும்.மதநம்பிக்கையும் அறிவியல் மனப்பான்மையையும் நம் நினைவின் பகுதிகளாக அமையவேண்டும்.

- ஜே.கே.கிருஷ்ணமூர்த்தி

29. ஆசிரியர் அனுபவம் மூலம் கற்றலை வளர்த்தார். அவர் செயல்திட்ட முறைகளை முன்வைத்தார். இதில் ஆசிரியர் ஊக்குவிப்பவராக செயல்படுகிறார். ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்புபடுத்தவேண்டும்.

- ஜான்டூயி

30. மூன்றிலிந்து ஏழு வயதிற்குட்பட்ட இளம்குழந்தைகளின் கல்வியை உற்று நோக்குங்கள். தனித்தன்மையை வளர்ப்பதன் மூலம் தானே கற்றலை அவர் நம்புகிறார். புலன் அனுபவங்களே அறிவை பெற உதவும் நுழைவாயில்கள் என்று வலியுறுத்திக் கூறுகிறார்கள் தொட்டு உணர்தலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

- மரியா மாண்டிசோரி

31. வளர்ச்சி பற்றிய விதிகளுக்கு இணங்க, குழந்தைகளுக்கு கற்பிக்கப்படவேண்டும்.

32. வேற்றுமையிலும் ஒற்றுமையை உணரச் செய்ய கல்வி உதவவேண்டும்.

33. பங்கேற்பதன் மூலம் சுய பங்களிப்பை உருவாக்கவேண்டும்.

34. விளையாட்டிற்கான கோட்பாடு மற்றும் நடைமுறையை கல்வி மூலம் மேம்படுத்துதல். அவர் விளையாட்டை வேலையுடன் இணைத்தார்.

**- புரோபெல்**

1. ஆசிரியர் கற்பித்தலுக்கான காரணங்களை புரிந்துகொள்ளுதல்.
2. ஆசிரியரிடமும், உம் மாணவரிடமும் நன்னடத்தையை உருவாக்குதல்.
3. பொறுமை, விடாமுயற்சி இவற்றை இணைத்தல்.
4. செயல்படக்கூடிய பாடத்திட்டத்தை அமைத்தல்.
5. கற்பிக்கும் திறன்களையும் மதிப்பிடும் திறன்களையும் முழுமையாக்குதல்.
6. பள்ளி கலாச்சாரத்தை நேர்மறையாக இணைத்தல்.
7. குழந்தைகளின் செயல்கள் நடத்தைகள் ஆகியவற்றை ஆய்வு செய்து. குழந்தைகளின் விளையாட்டை ஆர்வத்துடன் கவனித்தல்.
8. குழந்தைகளின் பேச்சுகள்,செயல்கள் இவற்றை குறித்து வைப்பதாகும்.
9. குறிப்புகளையும் புகைப்படங்களையும் கவனித்து அதன் முக்கியத்துவததை கண்டறிதல்.
10. குடும்பத்தினருடனும் சக பணியாளர்களுடனும் குழந்தைகள் கற்றல் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுதல்.
11. குடும்பத்தினர் மற்றும் சக ஊழியர்களின், குழந்தைகளின் கற்றல் பற்றி மிக ஆர்வத்துடன் பகிர்ந்துகொள்ளுதல்.
12. சம ஊழியர்களுக்கும், பிள்ளைகளின் குடும்பதினருக்கும், அவர்களின் கருத்துக்களை கேடடல்.
13. மேலும் கற்றுக்கொள்ள தொழில் சம்மந்தப்பட்ட இலக்கியங்களைப் படித்தல்.
14. புகைப்படங்களை காட்டி தம்மைப் பற்றிய கதைகளை கூறி குழந்தைகளின் கருத்துகளை கேட்டல்.
15. புதிய விளையாட்டுகள், கற்றல் வாய்ப்புகள் இவற்றை ஊக்குவிக்க ஏற்ற சூழ்நிலையையும் பொருட்களையும் மாற்றி அமைத்தல்.
16. தன்னையே அறிதல்.
17. உனது உள்ளத்தையும் மனதையும் தொடக்கூடிய விவரங்களை கண்டறிதல்.
18. குழந்தையின் கண்ணோட்டத்தை தேடுதல்.
19. உடல் மற்றும் சமூக உணர்ச்சி சூழலை ஆராய்தல்.
20. பல்வேறுவிதமான நோக்கங்களை ஆய்வு செய்தல்.
21. அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான, வாய்ப்புகளையும் நிகழ்வுகளையும் ஆராய்தல்.
22. ஆய்வு மனப்பான்மை கொண்ட ஆசிரியர் தாம் பாடம் நடத்திய போது எது சிறந்த விளைவுகளையும் ஏற்படுத்தியது எது பயன்படவில்லை என்பதை

ஆய்வு செய்கிறார்.ஒரு பாடம் நன்றாக நடத்தப்படாத போது அப்பாடத்தை அதே முறையில் திரும்ப கற்பிப்பது இல்லை. இது எல்லோருக்கும் நிகழுக்கூடிய ஒன்று. மேலும் அவர் அதிலிருந்து கற்றுக்கொள்கிறார்.

23. சிந்திக்கும் ஆசிரியர் தன் வகுப்புகளில் இயற்கையாக உள்ள மாற்றங்களை கண்டுகொள்கிறார்.(ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர் குழுக்கள் அவருக்கு இருக்கும்போது) எல்லா வகுப்புகளையும் ஒரே மாதிரியாக கருதி ஒரே பாடத்தை நடத்துவதில்லை
24. ஆசிரியர் வகுப்பில் திட்டமிட்ட காலத்தை எடுத்துக்கொண்டு தன் பாடத்தின் திறனை தீர்மானித்து அதை மேலும் முன்னேற்ற தகுந்த நடவடிக்கைகளை எடுக்கிறார்.
25. ஆசிரியர் தன்னுடைய மாணவர்களுடைய வலிமையை அறிகிறார்.கற்றலை மேம்படுத்த அவர்களின் வலிமைகள் ஆர்வம் காட்டக்கூடிய பகுதிகள் ஆகியவற்றை கருத்தில் கொள்கிறார்.
26. ஆசிரியர் தன் குறைகளை அறிந்து திட்டமிட்ட செயல்கள் மூலம் அவற்றை மேம்படுத்த முயலுகிறார்.
27. ஆசிரியர் மற்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்,நிர்வாகிகள் ஆகியோரின் கருத்துகளை தெரிந்துகொள்கிறார். பயனுள்ள குறை கூறுதலை அவர் ஏற்றுக்கொள்கிறார்.
28. தான் மட்டும் தனியாக சிறப்பிக்க முடியாது என்பதை அறிகிறார். கற்பித்தல் ஒரு சிக்கலான செயல் என்பதால் மற்றவரின் உதவியை ஏற்றுக்கொள்கிறார்.
29. மற்றவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் அவர்கள் அதிலிருந்து பயன்பெறுவார் என்பதையும் உணர்ந்து தம் அனுபவங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

**ஓர் ஆசிரியராக எனது குறிக்கோள்கள்:**

**1.கற்பித்தல்**

ஓர் உயர்ந்த ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிப்பதை விரும்பவேண்டும் மேலும் தாம் சிறந்த கல்வியாளராக இருக்கவேண்டும் என்பதே பல ஆசிரியர்களின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. மாணவர்களுக்கு விவரங்களை தெரிவிப்பது மிக திருப்திகரமான செயலாகும். அவர்களுடன் சேர்ந்து செயல்பட்டு அவர் கருத்துகளை புரிந்துகொள்ளுதல் மட்டுமின்றி அவற்றின் நடைமுறை பயன்களை தெரிந்துகொள்கின்றனர் என்பதை உறுதி செய்வது பயனுள்ள செயலாகும். கற்பிக்க பல முறைகளைப் பயன்படுத்தலாம் உமது கற்பித்தல் முறை உரிய

தனித்தன்மை வாய்ந்தது என்ற போதிலும், மாணவர்களை ஈடுபடுத்தி ஆர்த்தை தூண்டி கற்க வைத்தல் மிக முக்கியமானது. பலர் அந்த பாடத்தின் மீது தமக்குள்ள ஆழ்ந்த ஆர்வத்தால் கற்பிக்கின்றனர்.உமக்கு ஒரு குறப்பிட்ட தலைப்பில் ஆர்வம் இருந்தால் அதை மற்றவர்களுடன் பகிர்நது கொள்ள விரும்புவர். அந்த ஆர்வம் அப்பாடத்தில் சிறந்து செயல்பட உதவும்.மற்றவர்கள் கல்வி அமைப்பில் எதிர்கொள்ளும் சில பிரச்சனைகளை கருத்தில் கொண்டும் அவற்றிற்கு தீர்வு காணவும் கற்பிக்கலாம் எப்படி இருப்பினும் ஆசிரியர் கற்பித்தலை தவிர வேறு எதையும் செய்ய இயலாது. எனவே அநேக ஆசிரியர்கள் இதை தம் குறிக்கோளாக வைத்துக்கொள்கின்றனர். வாழ்க்கை முழுவதும் பயன்படக்கூடிய பாடங்களை நடத்த வேண்டும்.

**ஆர்வத்தை தூண்டுதல்**

ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்வில் எல்லா பகுதிகளிலும் ஊக்குவிக்க முயல்கின்றனர். பல ஆசிரியர்களின் முக்கிய குறிக்கோள் தான் ஒரு முன்மாதிரியாக இருத்தல் ஆகும். முன்மாதிரி என்பவர் மாணவர்களை சிறந்தவர்களாக ஆக்க முயலும்படி ஊக்குவித்து அவர்களை அனுபவம்மூலமும் ஆர்வத்தின் மூலமும் அவர்களின் முழுத்திறனை பயன்படுத்தி சிறந்தவர்களாக ஆக்க உதவுவதுதான்.ஆசிரியர்கள் ஆர்வமற்ற மாணவனை கற்றலில் முழுமையாக ஈடுபட தூண்டலாம். அவர்களை ஊக்குவித்து பங்குபெறச் செய்யலாம்.ஒரு உயர்ந்த ஆசிரியர் மாணவர்களை படிக்கச் செய்யலாம்,மொழியின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தலாம் அறிவியலை அல்லது கணிதத்தை கேளிக்கையானதாக செய்யலாம், சரித்திரத்தை சுவையான கதைகளாக ஆக்கலாம்.

**கற்றல்**

கற்பித்தல் என்ற தொழிலில் ஒவ்வொரு நாளும் சில புதியவற்றை கற்றுக்கொள்ளல் நிகழ்கிறது. பல கல்வியாளர்கள் இதையே தம் தொழிலிலிருந்து தாம்பெறும் முக்கிய நலனாக காட்டுகின்றனர்.தொழில் நிலைப்பற்றி பார்க்கும்போது ஆசிரியராக பெறும் கல்வி இதற்கு முன் அறிந்திராத பல செய்திகளை கண்முன் காட்டுகிறது. கற்பித்தல் மூலம் ஆசிரியர்கள் தம்மைப் பற்றி வெகுவாக தெரிந்துகொள்கின்றனர்.

**மாற்றம்:**

பேராவல்மிக்க ஆசிரியர்கள் மாற்றங்களை ஏற்படுத்தி இந்த தொழிலில் நுழைகின்றனர். சிறந்த ஆசிரியர்களின் தேவையை நிறைவுப்படுத்த இவர்களே பொருத்தமான மாணவர்கள்.அனைவருக்கும் கிடைக்கும் கல்வியின் தரத்தை முன்னேற்றுவதை இவர்கள் தம் குறிக்கோளாக கொண்டுள்ளனர்.

**விவாதத்திற்க்கும் சிந்தனைக்குமான வினாக்கள்:**

1. கற்பித்தல் என்பதன் பொருளையும், வரையறையும் தருக
2. நல்ல கற்பித்தலின் அம்சங்களை பட்டியலிடுக.
3. கற்பித்தல் பற்றிய உயர்ந்த சிந்தனையாளர்கள், தத்துவஞானிகளின் இவர்களின் கருத்துகளை கூறுக.
4. ஆசிரியரின் பண்புகளை விளக்குக.
5. ‘‘ஆசிரியராக உனது குறிக்கோள்கள்’’ விவரிக்க.

## அலகு– 3 நடத்தையியல் கற்றல் கோட்பாடுகள்

**நோக்கங்கள்:**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

i) நடத்தையியலில் கற்றலின் பொருளை புரிந்து கொள்வார்

ii) கற்றல் கோட்பாடுகளை கற்றலின் மூலமாக விளக்குவார்

iii) கற்றலின் வலுவையும், வரம்புகளையும் மதிப்பீடு செய்வார்

**முன்னுரை**

கற்றல் என்பது நம்முடைய நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றம் அல்லது ஏதேனும் ஒரு திறனை நம் வாழ்வில் மேம்படுத்துதலை குறிக்கும். கற்றல் ஒரு தொடர்ச்சியான மாற்றத்தை நடத்தையில் உருவாக்கும். அறிவைப் பெறுவதன் மூலமாகவோ, கற்றலின் வழியோ, அனுபவத்தின் வழியிலோ ஒருவருக்கு நடத்தையில் மாற்றம் ஏற்படும். நாம் மேற்கொள்ளும் பல்வேறு பயிற்சிகள், அனுபவங்கள், உற்றுநோக்கல், நடத்தை மாற்றத்தை கற்றல் மாற்றம் என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்

**கேட்** என்ற உளவியல் அறிஞர் ‘‘கற்றல் என்பது அனுபவத்தின் வழியே நடத்தையில் ஏற்படும் மாற்றம் என வரையறுக்கிறார்.

**ஹென்றி, ஸ்மித்** போன்றோர் கற்றல் என்பது ஒரு புதிய நடத்தையை பலப்படுத்துதல் அல்லது பழைய நடத்தையை பலவீனம் அடையச் செய்வதே கற்றல் செயல்கள் எனக் கூறினர். மேலும் கற்றல் அனுபவத்தின் வழியே நிகழும் செயல் என கூறினர்.

மேலும் கற்றலின் தன்மை, கோட்பாடுகள் அதன் செயல்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி காண்போம்.

**நடத்தையியல்:-**

விலங்குகள் மற்றும் மனித உயிரினங்களின் உடலியக்க, அறிவியலிக்க செயல்களில் ஏற்படும் நிகழ்வுகளை உற்று நோக்குவதையே கற்றல் கோட்பாடுகள் என விவரிக்கின்றனர். நடத்தையியல் கோட்பாட்டாளார்கள் கற்றல் என்பது ஒரு புது நடத்தையை கையகப்படுத்துவதேயாகும் என்கின்றனர்.

மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் கற்றல் செயலாகும். நம் எண்ணங்கள், குறிக்கோள், இலட்சியங்கள் இவையனைத்தும் செயல்வடிவம் பெற்று செயல்பட உந்து கோலாக இருப்பது கற்றலே ஆகும். எல்லா மனிதர்களும், உயிரினங்களும் கற்றல்

செயலில் ஈடுபடுகின்றனர். தன்னுடைய சொந்த முயற்சி வழியோ, அனுபவத்தின் வழியோ முயன்றுபெறுவதே கற்றல். கற்றல் அனைவரிடத்திலும் ஒரே நிலையில் ஏற்படுவதில்லை. நுண்ணறிவு, சூழ்நிலை, ஆளுமைத்திறன், மனநிலை, ஈடுபாடு, ஆர்வம் ஆகியவற்றைப் பொறுத்து கற்றல் செயல் ஒவ்வொரு மனிதரிடமும் வேறுபட்டு காணப்படும். ஆர்வமுடையவன் கற்றலின் விளைவாக நடத்தையில் மாற்றம் விரைவாக நிகழும். ஆர்வமும், ஊக்கமும் குறைந்தவன் கற்றலில் ஈடுபாடு குறைவாகவே இருக்கும். கற்றல் கோட்பாடுகள் மனிதன், உயிரினங்கள் எவ்வாறு கற்றல் செயலில் ஈடுபடுகின்றனர், கற்றலின் விளைவாக நடத்தையில் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை தெளிவாக பல்வேறு சோதனைகள், காரணிகளை கொண்டு விளக்குகின்றன.

**பாவ்லாவின் ஆக்க நிலையுறுத்த கற்றல் கோட்பாடு:-**

**இவான் பாவ்லாவ்** என்ற இரஷ்யா நாட்டு அறிஞர் பல பரிசோதனைகளை செய்து பெற்ற உண்மைகளின் வழியே உருவாக்கிய கற்றல் கோட்பாடுதான் ஆக்க நிலையுறுத்த கற்றல் கோட்பாடு ஆகும். பாவ்லாவ் தன்னுடைய சோதனைக்கு நாயை எடுத்துக்கொண்டார். நாயினுடைய நடத்தைகளான உணவு உண்ணுதல், உண்பதற்கு முன்பு நடத்தையில் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை கவனித்தார். உணவு கொண்டுவரும்போது நாயிடம் ஏற்படும் உடலியல் நடத்தை மாற்றத்தை உற்றுநோக்கினார்.

**பாவ்லாவ் சோதனை:-**

இச்சோதனையில் பாவ்லாவ் நாயை பசியோடு பல நாட்கள் வைத்திருந்தார். பின்பு அதனை சோதனை மேடையில் கட்டினார். நாயின் செயல்பாடுகள் பார்பவர் நாயின் கண்ணில் படாமல் கண்ணாடி வழியே அதன் நடத்தையை கவனித்தனர். உணவு வழங்குவதற்கான அணைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மணி ஓசை எழுப்பி உணவு வழங்கப்பட்டது. உணவைக் கண்டவுடன் நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கவில்லை. மணி ஓசை வந்த திசையை பார்த்து குரைத்தும், ஒலி எழுப்பும் செயலில் ஈடுபட்டது. உணவு வாயில் பட்டவுடன் உமிழ்நீர் சுரந்தது. பின்னர் இதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு முறை உணவு வழங்கும் போதும் மணி ஓசை எழுப்பப்பட்டது. நாய் மணி ஓசை அடித்தவுடன் எழுந்து நிற்பதும், வாயில் உமிழ்நீர் சுரக்கவும் செய்தது. ஒவ்வொரு முறையும் உமிழ்நீர் அளவும், நேரமும் கணக்கீடு செய்யப்பட்டது. பலமுறை இந்த செயல்கள் தொடர்ந்து செய்யப்பட்டது. பின்னர் உணவு வழங்காமல் மணி ஓசை மட்டும் எழுப்பப்பட்டது. மணி ஓசையை கேட்டவுடன் நாயின் வாயில் உமிழ்நீர் சுரந்தது. உமிழ்நீர் அளவும் குறிக்கபட்டது. இந்த சோதனை மூலம் பாவ்லாவ் ஒரு தூண்டலுக்கு ஏற்ற துலங்கல் நிகழ்வு ஆக்கநிலையுறுத்த செயலில் நிகழும் என கண்டறிந்தார்.




**ஆக்கநிலையுறுத்தக் கோட்பாட்டின் விதிகள்:-**

பாவ்லாவ் ஆக்கநிலையுறுத்த சோதனையில் இருந்து பல்வேறு விதிகளை கண்டுபிடித்தார்.

**உருவாதல்:-**

தொடர்ச்சியாக தூண்டல் - துலங்கலுக்கான உந்துதலின் செயல்பாடுகளை கொடுக்கும்போதுதான் தூண்டலுக்கான துலங்கல் வெளிப்படும்.

**அழிந்துபோதல்:**

தூண்டலுக்கேற்ற துலங்கலை வெளிப்படுத்திய பிறகு தொடர்ந்து வழங்கும் இயற்கையான தூண்டலை வழங்காமல் இருந்தால், துலங்கல் மெல்ல மெல்ல வலுவிழந்து கடைசியில் மறைந்து போகும். இத்தகைய மறைவு நிரந்தரமாக மறையாது. சிறிது கால இடைவெளியில் ஒலி மீண்டும் எழுப்பியவுடன் நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கும். அழியும் ஆக்கநிலையுறுத்தம் மீண்டும் உயிர்பெறுதலை "மீண்டும் கொணர்தல்" என்று அழைக்கிறோம்.

**பொதுமைப்படுத்துதல்:**

தூண்டலுக்கான துலங்கலை அதனோடு ஒத்த பண்புடைய மற்ற தூண்டல்களை கொண்டு பெறுவதை பொதுமைப்படுத்துதல் என்பர். அழைப்பு மணி ஓசைக்கு பதிலாக ஒரு பாடல் ஓசையை தூண்டலாக வழங்குதல்.

**வேறுபடுத்துதல்:**

ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கு ஒரேவகையான துலங்களும், வேறுபட்ட தூண்டலுக்கு வெவ்வேறான துலங்கலை பெறுவதுமே ஆகும். வெவ்வேறான இரண்டு ஓசைகளுக்கு இடையே குறைந்த வேறுபாடு இருந்தால், நாய் எந்த ஓசைக்கு துலங்கலை வெளிப்படுத்துவது எனத் தெரியாமல் குழம்பும். இதன் விளைவாக உமிழ்நீரை சுரக்காமல் குரைக்கும்.

இவ்வாறு இவான் பாவ்லாவ் நாயை கொண்டு செய்த ஆக்கநிலையுறுத்த கற்றல் சோதனை மூலம் பல்வேறு கற்றல் கோட்பாடுகளையும், விதிகளையும் கற்றல் செயல்முறைக் கோட்பாடுகளாக காட்டியுள்ளார்.

**கல்வியில் ஆக்கநிலையுத்த கற்றலின் தாக்கங்கள்:-**

i. நடைமுறை வாழ்வில் அன்பு, பயம், வெறுப்பு போன்ற செயல்கள் ஒரு வகையான ஆக்கநிலையுத்த செயல்பாட்டின் வெளிப்பாடே ஆகும்.
ii. பல்வேறு கற்றல்கள் ஆக்கநிலையுறுத்த தூண்டலைச் சார்ந்தவை, எனவே கற்றல் மொழிக் கற்பித்தலுக்கு ஏதுவாகிறது.
iii. கற்றல் செயலில் கற்பவர், கற்பிப்பவர், பள்ளி, பாடம், இவற்றிற்கிடையே சாதகமான மனபாங்கினை உருவாக்க ஆக்கநிலையுத்த கற்றல் பயன்படும்.
iv. நற்பண்புகள், தன்சுத்தம், மூத்தோரை மதித்தல், நேரம் தவறாமை, சுகாதாரம், நல்ல எண்ணங்கள் இவ்வகை கற்பித்தலின் மூலம் ஏற்படுத்த முடியும்.
v. கற்பவரிடையே அச்சத்தை போக்கவும், தீய பழக்கவழக்கங்களை களையவும் கற்றல் பயன்படும்.

**தார்ண்டைக்கின் முயன்றுதவறிக் கற்றல் கோட்பாடு:-**

கற்றல் செயலில் பல முறை முயன்று, பல தவறுகளை புரிந்து, பின்னர் முயற்சியின் காரணமாக தவறின் எண்ணிக்கையை குறைத்து, முடிவில் தவறின்றி சரியாக கற்றல் செயலில் ஈடுபடுத்துவதையே இம்முறை விளக்குகிறது. இவ்வாறு முயன்று தவறிக் கற்றல் முறையில் கற்றலுக்காக எடுத்துக் கொள்ளும் நேரமும், தவறுகளின் எண்ணிக்கையும் படிப்படியாக குறைந்து இறுதியில் சரியான கற்றல் நிகழும்.

**சிக்கல் அறை சோதனை:-**

தார்ண்டைக் ஒரு பசியுள்ள பூனையை மூன்று பக்கம் மரச்சட்டமும், ஒரு பக்கம் கம்பியுடன் கொண்ட கதவாலும் அமையப்பெற்ற ஒரு பெட்டியின் உள்ளே விட்டார்.

வெளியே பூனையின் கண்பார்வையின் அருகே கருவாட்டுத்துண்டுகள் வைக்கப்பட்டன. பூனை பசியால் உந்தப்பட்டு அங்கும், இங்கும் ஓடிக்கொண்டு சத்தமிட்டு குதித்தது. கால்களின் நகங்களால் கம்பியை பிராண்டியது. சட்டங்களை பிராண்டுதல், கம்பியை பற்களால் கடித்தல் போன்ற பல செயல்களுக்கும் பின்னர் கம்பியை திறந்து கருவாட்டுத்துண்டை எடுத்தது. இதன் பின்னர் இச்செயல்முறை பலமுறை நிகழ்த்தப்பட்டது. ஒவ்வொரு முறையும் முயற்சியின் நேரமும், தவறான துலங்களின் எண்ணிக்கையும் குறைந்து இறுதியில் சரியான முயற்சியை தவறின்றி பூனை செய்தது.



இச்சோதனை அடிப்படையில் தார்ண்டைக் மூன்று கற்றல் விதிகளை முன்மொழிந்தார்.

**தாண்டைக்கின் கற்றல் விதிகள்:-**

**ஆயத்த விதி:**

தூண்டல் துலங்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தும் போது, தூண்டல் துலங்கள் இணைப்பு வலுப்பெறும். தூண்டல் துலங்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்த தயாரில்லாத போது அவ்வித இணைப்பை ஏற்படுத்த முற்படுவது இணைப்பின் பலத்தை வலுவிழக்கச் செய்யும். எனவே ஆயத்த நிலையை அறிதல் கற்றலில் மிகவும் அவசியம் என்பதை இவ்விதி அறிவுறுத்துகின்றது.

**பயிற்சி விதி:-**

தூண்டல் - துலங்களுக்கு இடையேயான இணைப்பு திரும்ப திரும்ப பலமுறை முயற்சி செய்வதன் மூலம் இணைப்பின் வலு அதிகரிக்கும். பயிற்சியானது கற்றலில் தேர்ச்சிக்கு ஏதுவாக அமையும். உடனுக்குடன் பயிற்சி செய்தல் கற்றலில் அடிக்கடி நிகழ்வதால் இதனை “அண்மை விதி” எனவும் அழைப்பர்.

**(எ.கா)** கற்றதை திரும்பததிரும்ப பயிற்சி செய்வதும், நினைவு கூர்தலும் அவசியம். நற்பண்புகள் வளர்ப்பதும், தீயசெயல்களை குறைப்பதும் மெல்லக் குறைந்து காணப்படும்.

**விளைவு விதி(அல்லது) பயன் விதி:-**

தூண்டல் துலங்கள் இணைப்பை ஏற்படுத்தி, தொடர்ந்து கற்றல் செயலில் ஈடுபட்டவர்க்கு பரிசுப் பொருட்கள், பாராட்டுச் சான்றுகள் அளிப்பதன் மூலம் இணைப்பு வலுப்பெற்று இச்செயல் தொடர்ந்து நிகழும். மாறாக தண்டனை கிடைத்தால் கற்றல் வலுவிழக்கும். எனவே ஆசிரியர் வகுப்பறையில் பரிசுகள், பாராட்டுகளை பாரபட்சமின்றி வழங்கி தண்டனை தருவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு ஆசிரியர் செயல்பட்டால் மாணவர்கள் தங்களை முன்னேற்றும் செயலில் ஈடுபடுத்திக் கொள்வர். மாறாக தண்டனை பெற்றால் கற்றலில் தொய்வு ஏற்படும்.

**ஸ்கின்னரின் செயல்பாடு ஆக்கநிலையுத்தம்:-**

ஸ்கின்னர் ஒரு அமெரிக்க உளவியல் அறிஞர் ஆவார். இவர் எந்த ஒரு தூண்டலும் ஒரே மாதிரியான துலங்களை ஏற்படுத்துவதில்லை, மாறாக வெவ்வேறு துலங்களை வெளிப்படுத்துகின்றன என்று கூறினார். ஒரே ஓசையை கேட்டவுடன் பல உயிர்களை வெவ்வேறான துலங்களை வெளிக்காட்டுகிறது. ஓசையை கேட்டால் மனிதன் கண்ணை சிமிட்டுகிறான், காதுகளை பொத்திக்கொள்கிறான், எலி நாக்கால் முகத்தை நக்குகிறது, நாய் குரைக்கிறது, பறவைகள் தரையையோ, மரத்தையோ கொத்தும். இவை ஒரே தூண்டலுக்கு வெவ்வேறான துலங்கள்கள் வெளிப்படுவதை உணர்த்தும். ஒருவர் ஒரு துலங்களை வெளிப்படுத்துவதன் மூலமாக பாராட்டையோ, பரிசையோ பெற்றால், துலங்கள் பரிசைப் பெறுவதற்கான கருவியாக அமைவதால் இக்கற்றல் கோட்பாட்டை கருவிசார் (கற்றல் கோட்பாடு) ஆக்க நிலையுறுத்தம் என்றும் அழைக்கலாம்.

**ஸ்கின்னரின் பரிசோதனை:-**

ஸ்கின்னர் ஒரு பசிகொண்ட எலியை தன் சோதனைக்கு எடுத்துக் கொண்டார். ஒரு சிறிய பெட்டியில் பசி கொண்ட எலி விடப்பட்டது. ஒரு கம்பியை அமுக்கினால் பெட்டியின் மேல் இருந்து ஒருதுவாரம் திறக்கப்பட்டு உணவுத் துண்டுகள் பெட்டியின் கீழே விழுமாறு பெட்டி அமைக்கப்பட்டது. பசியால் எலி அங்கும் இங்கும் ஓடியது. எதேச்சையாக கம்பியை அமுக்கியவுடன் உணவுத்துண்டு கீழே விழுந்தது. உணவினை ருசித்த எலி மீண்டும் மீண்டும் கம்பியை அமுக்கி உணவுத் துண்டைப் பெற்று உண்டது. கம்பியை அமுக்குவது போன்றவை மட்டுமின்றி சிக்கலான நடவடிக்கைகளையும் ஸ்கின்னர் சோதனையிட்டார். இசைக்கேற்ப எலியை நடனம் ஆடச் செய்தார். பின்னர் அந்த தூண்டல் நிறுத்தப்படும் போது துலங்களானது வலுவிழந்து மறந்து போகும் என்பதை விளக்கினார்.




**கல்வியில் செயல்படு ஆக்கநிலையுத்த கோட்பாட்டின் தாக்கம்:-**

கற்றல் செயலில் கற்பவரின் திறமை மற்றும் சூழ்நிலைக்கேற்ப தூண்டல் பொருளை மாற்றியமைத்தல் திட்டமிட்டுக் கற்றல், கணிப்பொறி வழிக் கற்றல், கற்பித்தல் கருவிகளை, கற்றலில் தூண்டல் கருவியாக பயன்படுத்த காரணமாக அமைந்தது செயல்படு ஆக்க நிலையுத்த கோட்பாடேயாகும்.

ஆசிரியர் கற்பித்தலில் திறம்பட செயல்பட, குறிப்பிட்ட கற்பித்தல் நோக்கத்தை அடையவும், தேர்ச்சிக்கான கற்றலை ஏற்படுத்தவும் நடத்தை மாற்ற உத்திகளை கையாள வேண்டும் என அறிவுத்தியது செயல்படு ஆக்க நிலையுறுத்த கோட்பாடு ஆகும்.

**சமுகக் கற்றல்:-**

சமுதாயத்தின் செயல்பாடுகள் சட்டதிட்டங்கள், அறநெறிகள், கடமைகள் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை கண்டறிந்து அதற்கேற்றவாறு கற்றல் செயலில் ஈடுபட்டு கற்றதை கடைபிடிப்பதே சமூக கற்றல் ஆகும். சமுதாயத்தின் முக்கியத் தேவைகள், அங்கீகரிக்கப்பட்ட செயல்கள் ஆகியவற்றை உற்றுநோக்கி கற்றல் அமைய வேண்டும். கற்றல் நிகழ்விற்கு பிறகு தன்னை சமூகத்தின் ஒரு அங்கமாக அடையாளப்படுத்த வேண்டும். சமூகக்கற்றலில் உற்றுநோக்கலும், பின்பற்றிக் கற்றலும் முக்கியப்பங்காற்றும்.

பண்டூராவின் கூற்றுப்படி நாம் எதையும் கண்ணால் பார்க்காமல் சமூகத்தில் எதையும் பின்பற்றவோ பெறவோ முடியாது. நம்முடைய சுய உற்றுநோக்கல் மற்றும் அனுபவத்தின் வழியே சமூகக் கற்றல் அமைய வேண்டும்.

சமூகக் கற்றல், சமுதாய மக்களை பார்த்து, பின்பற்றி பெறுவதாகும். சிறுகுழந்தை தன்னைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளையும், நடத்தைகளையும் கூர்மையாக

கவனிக்கும். கற்போரைச் சுற்றி பெரும்பாலும் நண்பர்கள், பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், உற்றார் உறவினர்கள், ஆசிரியர்கள் உள்ள சூழ்நிலையில் தான் கற்கிறார்கள். உற்றுநோக்கிக் கற்றலின் சக்தியானது நாம் ஆய்வகத்தில் சோதனையின் மூலம் கற்பதைவிட நம் வாழ்வில் சிறந்த கற்றலைத் தரவல்லது. மேலும் ஒரு குழந்தை தான் கற்கும் கதைகள், கேட்கும் நிகழ்வுகள், பார்க்கும் சூழ்நிலைகள் மூலமாக சமூக கற்றலில் நடத்தை மாற்றம் நிகழும். பாடபுத்தகம் மூலம் படித்துப்பார்த்து கற்பதைவிட தானே உற்றுநோக்கி சுயமாக கற்பதன் மூலம் சமூக கற்றல் வளர்ச்சியடையும்.

கற்றலில் வேகமும், செயல்பாடும் குறைவதற்கு கற்பவரும், கற்பிப்பவரும் மட்டுமே காரணம் இல்லை. கற்றலில் சோர்வும், தொய்வும் ஏற்படுவதற்கு மரபும், சூழ்நிலையும் முக்கியக் காரணமாக அமைகின்றன. சிலர் மரபு வழியே கற்கும் திறனில் பின்தங்கியுள்ள குடும்பத்தைச் சேர்ந்து இருப்பர். குழந்தை பிறப்பதற்குமுன் உள்ள வளர்ச்சி நிலையில் ஏற்படும் குறைபாடுகள், குழந்தை சில குறைபாடுகளுடன் பிறப்பதும் கற்கும் திறன் குறைபாட்டிற்கு காரணமாக அமையும். உணவுக் குறைபாடு, சூழ்நிலையில் ஏற்படும் தவறான உந்துதல்களும் கற்றல் செயலில் பின்னடைவை ஏற்படுத்தும்.

**முடிவுரை:-**

கற்றல் மூலம் நடத்தையில் பல்வேற மாற்றங்கள் நிகழும்.பல்வேறு உளவியல் செயல்பாடுகள் மூலம் கற்பவரின் நடத்தையில் வெவ்வேறான மாறுதல்கள் தோன்றும். சரியான தூண்டல்கள் ஏற்படுத்தும்போதும் துலங்களும் முறையாக கிடைக்கப்பெறும். இன்றைய நவீன அறிவியல் உலகில் மாணவர்களை பல்வேறு திறன்களை வளர்க்கும் வகையில் கற்பிக்கும் தூண்டலானது இடம்பெற வேண்டும். மேலும் அறிவுத்திறனை வளர்க்கும் செயல்கள் மட்டும் ஏற்படுத்தாமல் உடலியக்க திறனை அதிகரிக்க விளையாட்டு மற்றும் போட்டிகள் கற்றலில் ஆர்வத்தை தூண்டும் வண்ணம் வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட பல்வேறு சோதனைகள் மூலம் பயிற்சியும் முயற்சியும் மட்டுமே தூண்டல் துலங்களுக்கான முக்கிய இணைப்புக் கருவியாக செயல்பட்டு மாணவர்களின் கற்றலில் நடத்தை மாற்றத்தை நிகழ்த்தும் என்பதை உணர்கிறோம்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. தார்ண்டைக்கின் கற்றல் கோட்பாடுகளை விவரிக்கவும்.
2. பாவ்லாவின் ஆக்க நிலையுறுத்த செயல்பாட்டு சோதனையை விவரிக்கவும்.
3. தார்ண்டைக் கற்றல் விதிகளை குறிப்பிடுக.
4. ஸ்கின்னரின் செயல்படு ஆக்கநிலையுறுத்த சோதனையை விவரிக்கவும்.
5. சமூகக் கற்றல் பற்றி கட்டுரை வரைக.

## அலகு– 4 அறிவுசார் மற்றும் மனிதநேய கற்றல் கோட்பாடுகள்

**நோக்கங்கள்:**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

i. உளவியலில் அறிவுசார் கற்றலின் பொருளின் விளக்கம் பெறுதவார்

ii. அறிவுசார் மற்றும் மனிதநேய கற்றல் கோட்டுபாடுகளின் முக்கயத்துவத்தை புரியச் செய்வார்.

iii. பியாஜேயின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் பற்றிய அறிவை பெறுவார்.

**முன்னுரை**

மனித நடத்தையில் மாற்றம் நிகழ்வதை கற்றல் நடத்தையியல் கொள்கைகள் விளக்குகின்றன. கட்டுப்பாடுடைய கற்றல் நிகழ்வு நிகழும் போது நடத்தை மாற்றம் ஏற்படும். கற்றலில் உந்துதலும், ஆர்வமும் அதிகரிக்கும் போது நடத்தையில் மாற்றம் அதிகரிக்கும். தொடர்ச்சியான பயிற்சிகள் நடத்தையியலில் முக்கியப் பங்குபெறுகின்றது. ஒரு புதுமையான நடத்தைச் செயல்பாடுகளை கற்பவரிடம் தோற்றுவித்து தொடர்ச்சியான தூண்டலைக் கொடுத்து துலங்களைப்பெற்று நடத்தையில் மாற்றம் நிகழ்வதை நடத்தையியல் கற்றல் கோட்பாடுகள் தெளிவாக்குகின்றன.

**அறிவுசார் மற்றும் மனிதநேய கற்றல் கோட்பாடுகள்:**

நடத்தை மாற்றத்திற்கு அடிப்படையாக அமைவது கற்றல் செயல்பாடு ஆகும். பேசுதல், நகைத்தல், கலைத்திறன், பொழுதுபோக்கு செயல்களில் ஈடுபடுதல் போன்ற முக்கியமான உணர்வுகளும், திறமைகளும் மனித நடத்தைகளுக்கு மட்டுமே உரியவையாகும். கற்றல் அனைத்து உயிர்களிடத்திலும் காணப்பட்டாலும் மனிதனுடைய அறிவுசார் நடத்தையில் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. கற்றல் பல்வேறு கற்றல் பயிற்சிகளையும் செயல்பாடுகளையும் ஒருங்கிணைந்த செயலாகும். இதனை உளவியல் அறிஞர்கள் நடத்தையியலில் பல்வேறு வகைகளாக வகைபடுத்தி உள்ளனர். கற்றல் என்பது சுய விருப்பத்துடன் அனுபவம் மற்றும் பயிற்ச்சிகளின் மூலம் நடத்தையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும். சூழ்நிலைத் தேவைகள் மனிதனின் கற்றலில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. கற்றலுக்கான முக்கிய நோக்கம் அறிவுசார் நடத்தையில் மேம்பட்ட மாற்றத்தை உருவாக்குவதாகும்.

மனிதக் கற்றலில் ஒரு மனிதனின் ஆர்வம், பயிற்சி மிகவும் அவசியமானதாகாது, மாறாக அறிவுதிறனின் பங்கு மிகவும் அவசியமாகும். ஒவ்வொருவருடைய தனித்திறனை பொறுத்து, கற்றல் கோட்பாடுகளை செயல்படுத்துவதன் மூலம் வெளிவரும் நடத்தை மாற்றத்தை நம்மால் ஒட்டுமொத்தமாக கணிக்கமுடியாது. ஏனெனில் தனிநபர்களுக்கிடையே அறிவுதிறன், நுண்ணறிவு வளர்ச்சியில் பல்வேறு வேறுபாடுகள்

அமையப்பெற்றிருப்பர். அறிவுசார் கற்றலில்,சூழ்நிலை கற்பவரின் நடத்தையில் மிகுந்த ஆதிக்கம் செலுத்தும். மனிதநேய அறிவுசார் கற்றலில் பின்வரும் கூற்றுகள் முக்கியமானவை.

**விருப்பமும் ஆர்வமும்:**

அறிவுசார் நடத்தைச் செயலின் முக்கிய நிகழ்வே கற்றல் ஆகும். கற்றல் நிகழும் போது கற்பவருக்கு விருப்பமான மனநிலையும், சூழ்நிலையும் அமையப்பெற வேண்டும். சூழ்நிலையே ஒருவரின் குறிக்கோளை நிர்ணயம் செய்ய ஏதுவான காரணியாகும். மேலும் ஆர்வம் நடத்தை மாற்றத்தை நிகழ்த்தும் உளவியல் காரணியாகும். ஆர்வமின்றி கற்றல் செயல் நிகழாது. எனவே ஆர்வத்தை தூண்டும் வண்ணம் ஆயத்தப்படுத்துதல் நிகழ வேண்டும்.

**அக்கறை செயல்:**

அறிவுசார் கற்றலில் மாணவர்களின் விருப்பம் அறிவதுடன் அக்கறையுடன் நடந்துகொள்வதும் மிகவும் முக்கியம் ஆகும். விருப்பத்தையும், ஆர்வத்தையும் அக்கறையுடன் கற்றல் செயலில் ஈடுபடுத்த வேண்டும், அப்போதுதான் கற்றல் செயல் முழுவதுமாக மாணவர்களை சென்றடையும்.

**முழுமையடைதல்:**

மனிதநேய உளவியலாளர்களை பொறுத்தவரை அறிவுசார் கற்றல் நிகழ்வு, ஆர்வம்,ஈடுபாடு போன்றவற்றை பிரித்துப் பார்ப்பது இல்லை. பாடப்பொருள்களின் அறிவினைப் பெற வேண்டுமெனில் ஆர்வம் மிகவும் அவசியம் என்ற கூற்றில் ஒருமித்த கருத்தையே நடத்தையியல் உளவியளாளர்கள் கையாளுகின்றனர்.

**கற்றலில் வலுவூட்டலும் பின்னூட்டமும்:-**

கற்றலில் தூண்டலுக்கேற்ற துலங்களை மாணவர்கள் வெளிப்பத்தும் போது அவர்களை ஊக்கப்படுத்தி வலுப்படுத்த நேரடி காரணிகளாக பரிசு பொருட்கள், பாராட்டுதல்கள் கற்பிப்பவர் மூலம் வழங்கப்பட வேண்டும். அதே சமயம் பின்னூடச் செயலும் உடனடியாக இடம்பெற வேண்டும். ஏனெனில் எவ்வாறு ஒரு குழந்தை பாராட்டப்படுகின்றதோ அதுபோலவே ஒருவரின் கற்றல் செயல்விளைவை கற்பவருக்கு உடனடியாக தெரியப்படுத்துதல் மிகவும் முக்கியமான செயல் ஆகும். பரிசளித்தல் புறநிலை வலுவூட்டியாகவும், பின்னூட்டம் உளவியல் செயல்பாட்டு வடிவிலும் அமையும். பெரியோர்க்கு பின்னூட்டம் மிகவும் அவசியம். குழந்தைகளுக்கும், பிற விலங்கின உயிர்களுக்கும் பரிசும் பாராட்டும் சிறந்த வலுவூட்டியாக அமையும்.

**முழுமைக்காட்சிக் கோட்பாடு:**

ஜெர்மானியச் சொல்லான கெஸ்டால்ட் "முழுமையான அமைப்பு அல்லது கோலம்" எனப்பொருள் தரும் சொல்லாகும். கற்றலில் ஒன்றைப் பற்றி முழுமையாக அறிவதால் இதனை முழுமைக்காட்சிக் கோட்பாடு என அழைக்கப்படுகின்றது. ஒரு பொருளின் அல்லது படத்தின் பகுதிகளையோ, உறுப்புகளையோ தனித்தே ஆராயும் போது முழுமையான பொருளையோ கருத்தையோ பெறுதல் இயலாது. மாறாக அனைத்து பாகங்களையும் இணைத்துப் பார்க்கும் போது அர்த்தமும், பொருளும் தெளிவாகப் புலப்படும். எ.கா. ஒரு ஆப்பிள் பழத்தின் பகுதிகளை தனித்தனியே மாணவர்களுக்கு காண்பித்து பழத்தைப் பற்றிய அறிவை மேம்படுத்துவதைவிட முழுமையான பழத்தை காண்பித்து விளக்கும் போது கற்றல் முழுமையடையும், முழுமைக்காட்சிக் கோட்பாட்டில் பொருளின் உட்பகுதிகளையும் பொருத்தி பொருளறிவை பெற வேண்டும். இதன் காரணமாக இக்கோட்பாடு "உட்காட்சிவழிக் கற்றல் கோட்பாடு" எனவும் அழைக்கப்படுகின்றது.

**உட்காட்சி வழிக் கற்றல் கோட்பாடு:**

மாணவர்களின் அறிதிறன் வளர்ச்சிக்கு மிகவும் முக்கிய கருவியாக உட்காட்சிவழிக் கற்றல் முறை அமைகிறது. கற்பவர் பெற்றுள்ள அறிவைப் பயன்படுத்தி அறியப்படாத அறிவின் திறனை பெறுதல் அல்லது உணர்தல் உட்காட்சி வழிக்கற்றல் செயல் ஆகும். மாணவரோ, கற்பவரோ தங்களிடம் உள்ள அறிதிறன், அறிவுத்திறன், அனுபவங்களை பயன்படுத்தி பிரச்சனை (அ) செயலுக்கான தீர்வை கண்டறிவதே உட்காட்சி வழிக்கற்றல் முறை ஆகும்.

**கோஹ்லரின் உட்காட்சி வழிக்கற்றல் சோதனைகள்:**

உட்காட்சி வழிக்கற்றல் முறையில் கோஹ்லரின் மனிதக்குரங்கு சோதனைகள் மிகவும் முக்கியமானவை. அவ்வாறு அவர் செய்த குரங்கு சோதனைகளில் "சுல்தான்" என்ற மனிதக்குரங்கைக் கொண்டு கோஹ்லர் மேற்கொண்ட சோதனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

சோதனையின் முதல் நிகழ்வாக சுல்தான் குரங்கு பசியுடன் ஒரு அறையினுள் பூட்டப்பட்டது. பின்னர் அந்த அறைக்கு வெளியே ஒரு குலை வாழைப்பழம் குரங்கின் கண்ணில் தோன்றும் வண்ணம் வைக்கப்பட்டது. குரங்கு பூட்டி வைக்கப்பட்ட அறையினுள் ஒரு பெரிய கோலும், சிறிய கோலும் வைக்கப்பட்டது. வாழைப்பழத்தை கண்ட குரங்கு அதை பெற முற்பட்டபோது அதனால் அறையை விட்டு சென்று வாழைப்பழத்தை பெறுவதற்கு இயலவில்லை. எனவே சுல்தான் அறையினுள் இருந்த கோலைக் எடுத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடியது. பின்னர் பெரிய கோலைக் கொண்டு பழத்தை எடுக்க

முயற்சி செய்தது. பெரியகோலும், சிறிய கோலும் ஒன்றுடன் ஒன்று இருகோலின் முனைகளின் வழியே இணைக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. பின்னர் சுல்தான் சிறிய கோலைக் கொண்டு பழத்தை எடுக்க முயன்றது. அந்த முயற்சியிலும் பழத்தினை பெறுவதில் தோல்வி கண்டது. எனவே அறையில் அமர்ந்து இரண்டு கோல்களையும் வைத்து விளையாடிக் கொண்டு இருந்தது. அப்போது தற்செயலாக சிறிய கோலின் முனையானது பெரிய கோலின் முனையில் உள்ள துளையில் பதிந்தது. சுல்தான் இதனை உற்றுநோக்கியது இதன் விளைவாக இரண்டு கோல்களையும் சரிவரப் பொருத்தியது. கோல்கள் இரண்டும் இணைத்ததால் நீண்ட கோலின் உதவியுடன் அறையின் வெளியில் இருந்த வாழைப்பழத்தை சுல்தான் குரங்கு எடுத்து உண்டது. இந்த சோதனையில் குரங்கு பிரச்சனையை படிப்படியாக புரிந்து கொண்டு, பிரச்சனைக்கான பின்புலத்தையும் தானே முயன்று பல்வேறு தவறுகளுக்குப் பின்பு சரியான துலங்களை வெளிக்கொண்டு வந்தது.




**கல்வியில் உட்காட்சிவழிக் கற்றல் முறையின் தாக்கம்:**

உட்காட்சி வழிக் கற்றல் என்பது கற்பவர் கற்றல் செயல்முறையை தானே பொருளுணர்ந்து கற்றல் செயலில் ஈடுபடவேண்டும் என்ற கூற்றினை வலியுறுத்துகின்றது. கல்வியின் நோக்கமானது கற்பவர் தன்னுடைய சுய அறிவு, ஆற்றல், சிந்தனை மூலம் பிரச்சனை, சிக்கலின் பொருளினை உணர்ந்து கற்பவர் தானே கற்றலுக்கான துலங்களை ஏற்படுத்த உந்து கருவியாக இம்முறை அமைந்தது. பாடப்பொருளுக்கு ஏற்ப கற்றல் நிகழ்வுகளை ஏற்படுத்தி தீர்வைக் காண முயற்சிப்பதை ஊக்குவிக்கின்றது. மாணவர்களின்

அறிவுத்திறன் அவர்கள் கற்றலின் போது தானே முயன்று, தவறி கற்பதன் மூலம் கற்பவரின் திறமை வெளிக்கொணரப்படுகிறது. முயற்சியின் முக்கியத்துவத்தினை கற்போரும், மாணவர்களும் புரிந்து கொண்டு கற்றலில் தங்களை மேம்படுத்திக் கொள்ள வழிவகை செய்கின்றது. தொடர்சியாக ஒரு செயலை விடா முயற்சியுடன் கற்பவர் தன்னை ஈடுபடுத்திகொள்ள உட்காட்சி வழிக் கற்றல்முறை பயன்படுகின்றது. பிரச்சனைக்கான தீர்வைக் காண்பதில் சோர்வினை பொருட்படுத்தக்கூடாது என கற்பவருக்கு புரியச் செய்கின்றது. கற்பவர் தன்னுடைய திறன்களை ஒருசேர பயன்டுத்த உதவி புரிகின்றது.

**உட்காட்சி வழிக்கற்றலின் பண்புகள்:**

1. கற்பவர் பெற வேண்டிய தீர்வு (அ) முடிவுக்கான அடிப்படைக் காரணியாக செயல்படும்.
2. நுண்ணறிவுத்திறன் மிகுந்தோர் இக்கற்றலில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.
3. ஒரு செயலுக்கான தீர்வையோ அல்லது முடிவையே பெறுவதற்கு பலமுறை முயற்சி செய்வதால் அனுபவ அறிவினை வளர்க்கின்றது.
4. தனக்கு அறிந்த பொருளையோ, திறனையோ புதிய அறிவாக மாற்றம் செய்திடவும் அறிவுத்திறனை பயன்படுத்தவும் உதவுகின்றது.

கற்பவரை தானே முயற்சி செய்து தன்னை முழுமையாக கற்றல் செயலில் ஈடுபடுத்திக் கொள்வதால் கற்பது நிலைத்த தன்மையுடன் கற்பவரிடம் இருக்கும் நிலைமை உருவாக்குகின்றது.

**பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிக் கொள்கை:-**

அறிதிறன் வளர்ச்சி என்பது புலன் உறுப்புகளின் வழியாக பெறப்படும் அறிவினை மனதில் நிறுத்துதல், விரிவுபடுத்துதல் ஆகும். சூழ்நிலையையும், புற உலகத்தைப் பற்றிய அறிவினை வளர்ப்பதே அறிதிறன் வளர்ச்சி ஆகும்.

பியாஜே என்பாரின் கூற்றுப்படி அறிதிறன் வளர்ச்சி செயலானது தொடர் நிகழ்வாக மட்டும் அல்லாமல் வரிசையாக பல்வேறு படிநிலைகளில் ஏற்படக்கூடிய நிகழ்வுளின் தொகுப்பே ஆகும். இதன்படி ஒரு கற்றல் நடத்தையினைப் பெறுவதற்கு கற்பவர் தன்னுடைய கற்றல் அனுபவங்களை முறையாக பல்வேறு படிகளாக ஒருங்கமைத்து அறிவுதிறன் வளர்சியை பெற இயலும்.

**அறிதிறன் வளர்ச்சிக்கொள்கை செயல்பாட்டின் படிநிலைகள்:**

i. புலன் இயக்க நிலை
ii. செயலுக்கு முற்பட்ட நிலை
iii. பருப்பொருள் நிலை
iv. கருத்தியல் நிலை

மேலும் அறிதிறன் வளர்ச்சியின் உட்கூறுகளாக தன்வயப்படுத்துதல், பொருத்துதல், இணங்குதல், ஒருங்கமைத்தல் போன்ற காரணிகள் அமையப்பெற்றுள்ளன. இதில் பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சி செயல்பாட்டின் படிநிலைகளைப் பற்றி காண்போம்.

**i) புலன் இயக்க நிலை:**

புலன் இயக்க நிலை 0 முதல் 2 வயது வரை உள்ள வளர்ச்சி நிலை ஆகும். குழந்தை புலன்வழியே பொருட்களின் பண்புகளை உடலியக்கத்தின், வாயிலாக உணரும் நிலையாகும். இந்நிலையில் குழந்தை மொழி அறிவின்றி, செயல் அறிவு மட்டுமே பெற்றிருக்கும். அறிந்து கொள்ள வேண்டும் என்ன ஆர்வமும், தவறுகள் மூலம் மீண்டும் மீண்டும் கற்பதன் மூலம் சூழ்நிலையின் உண்மையை குழந்தையானது கற்க முயலும். நகருதல், பிடித்தல், உறிஞ்சுதல் போன்ற செயல்களில் பொருட்களை எவ்வாறு இணைத்தல், புலன் உறுப்புகளை எவ்வாறு பயன்படுத்துதல் என அறியும் ஆற்றலைப் பெறுகின்றது.

**ii) செயலுக்கு முற்பட்ட நிலை:**

குழந்தையின் வயது 2 முதல் 7 வயது வரை உள்ள வளர்ச்சி நிலையே செயலுக்கு முற்பட்ட நிலை ஆகும். புலன் இயக்க நிலையில் பெற்ற அறிதிறன் வளர்ச்சி செயலுக்கு முற்பட்ட நிலையில் மேம்படும். மொழிவளர்ச்சியின் துவக்கம் இந்த நிலையில் ஆரம்பம் ஆகின்றது. குழந்தை சொற்களை தனித்தனியாகவே கையாளத் துவங்கும். தன் நிலையில் இருந்து செயல்படும், பிறரின் நிலையில் இருந்து சிந்திக்கும் திறன் பெற்றிருக்காது. உயிரற்ற விளையாட்டு பொருட்களையோ, வீட்டில் உள்ள பொருட்களையோ உயிருள்ளவையாக கருதும் பொருட்களை முழுமையான பண்புடன் அறியும் திறன் இருக்காது. மேலும் நடைமுறை விதிகள் போன்றவற்றை விளையாடும் போது கடைபிடிக்கும் திறனோ அறிவோ குழந்தைகள் பெற்றிருக்கமாட்டார்கள்.

**iii) பருப்பொருள் நிலை:**

7 முதல் 11 வயது வரை உள்ள வளர்ச்சி நிலையே பருப்பொருள் நிலை. அறிதிறன், ஆக்கசிந்தனை, சுயசிந்தனை உயர்ந்து காணப்படுவதுடன் வளர்ச்சிப்பெறும் சிந்தனை ஆற்றல் பெருகும். விதிகளையும் வழிமுறையையும் நன்கு அறிந்திருக்கும் ஆனால் அதனை விளக்கும் திறன்பெற்று இருக்காது. எ.கா, மிதிவண்டியை எவ்வாறு

ஓட்ட வேண்டும் என்பதை அறிந்திருக்கும், ஆனால் எவ்வாறு ஓட்ட வேண்டும் என்ற விளக்கத்தை அளிக்கும் திறன் பெற்று இருக்க மாட்டார்கள். குழந்தை ஒரு பொருட்களின் பண்புகளையும், தன்மையையும் தெளிவாக புரிந்து கொண்டு இருக்கும். விளையாட்டுக்களின் விதிகளைப் புரிந்து கொண்டிருந்தாலும் அவ்விதிகளைப் பின்பற்றி விளையாட பெரும்பாலான குழந்தைகள் தடுமாறுகின்றனர். தவறுக்கான உள்நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் அளவின் அடிப்படையில் புரிந்து கொள்வர்.

**iv) கருத்தியல் நிலை:**

11 வயதுக்கு மேற்பட்ட வளர்ச்சி நிலை கருத்தியல் நிலை ஆகும். கற்பனைத்திறன் இந்நிலையில் மிகுந்து காணப்படும். குழந்தைகளின் கண்முன் இல்லாத ஒன்றைக் கூட சுயசிந்தனை மூலம் கற்பனை செய்து பார்ப்பார்கள். தங்களின் எதிர்கால எண்ணங்கள், ஆசைகள் பற்றிய கனவு காண்பார்கள். தங்கள் கருத்துக்களை முன்நிலைப்படுத்த முற்படுவர். மற்றவர்களின் நோக்கத்தில் இருந்து செயல்படும் பண்பினைப் பெற்று காணப்படுவார்கள்.

**கல்வியில் பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிக் கொள்கையின் தாக்கம்:**

i) செயல் வழிக் கற்றலின் முக்கியத்துவத்தை கற்றல் - கற்பித்தலில் எடுத்துரைக்கின்றது.

ii) ஆசிரியர் அறிதிறன் வளர்ச்சி நிலையில் மாணவர்களின் ஆர்வத்தினை தூண்டி ஊக்குவிக்க ஏற்ற சூழ்நிலையை கையாள உதவுகின்றது.

iii) குழந்தையின் மனநிலைக்கு ஏற்ப பெற்றோரும், ஆசிரியரும் வளர்ச்சி செயல்களை வழங்கிட வழிவகை செய்கின்றது.

iv) மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் இணைந்தவை. எனவே, கற்றல் செயலின் இணைந்த நோக்கில் குழந்தை மதிப்பிட பயன்படுகின்றனர்.

v) கற்றலில் மாணவர்களின் சுயசிந்தனை, ஆக்கத்திறன், படைப்பாற்றல் போன்றவற்றை பெருக்கினால் இது ஒரு சுயகற்றலுக்கான வாய்ப்பாக அமையும்.

vi) பாடப்பொருள் புத்தகத்தோடு முடிவுபெறாமல் மாணவர்களின் பாட இணைச் செயல்பாட்டுடன் இணைந்தது என்பதனை உணர்த்துகின்றது.

**மாஸ்லோவின் சுய - இயல்பு ஊக்கம்:**

மாணவர்கள் தங்களின் திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி சிறப்பான வளர்ச்சியை அடைவதற்கு சுயமான ஊக்கம் மிகவும் தேவையான ஒன்றாகும். மனிதனுடைய ஊக்கிகள் பெரும்பாலும் தேவையுடன் தொடர்புடையவை. மனிதனின் சுய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மாஸ்லோ ஊக்கிகளை வரிசைப்படுத்தி

உள்ளார். கீழ்கண்ட ஏழு நிலைகளாக மனிதனின் தேவைகளையும், ஊக்கிகளையும் பட்டியலிட்டுள்ளார்.

i) உடலியல் தேவைகள்

ii) பாதுகாப்புத் தேவைகள்

iii) அன்பு – உரிமைத் தேவைகள்

iv) தன் மதிப்புத் தேவைகள்

v) அடைவூக்கத் தேவைகள்

vi) அழகுணர்த் தேவைகள்

vii) தன்னிறைவுத் தேவைகள்

**உடலியல் தேவைகள்:**

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு, நீர், காற்று, உறக்கம், பாலுணர்ச்சி போன்றவை உடலியல் தேவைகள் ஆகும். இத்தேவைகள் முழுமையாக கிடைத்தால் தான் குழந்தைகள் கற்றலில் ஆர்வமுடனும்,ஈடுபாட்டுடனும் செயல்படமுடியும்.

**பாதுகாப்புத் தேவைகள்:**

பாதுகாப்புடன் வாழ்வதற்கு ஆதாரமான உடை, உறைவிடம், பய உணர்வின்றி சமூகத்தில் இருப்பது, ஒழுக்கம், பாதுகாப்பின் முக்கியதுவம் உணரச் செய்தல் போன்றவை பாதுகாப்பு தேவைகளாகும்.

**அன்பு - உரிமைத் தேவைகள்:**

குழந்தைக்கு பெற்றோரின் அன்பு, பாசம், முதியவர்களுக்கு மனைவி, மக்களின் அன்பு, சுற்றத்தாரின் நட்பும், உறவும், சரிவர கிடைக்க வேண்டும். ஒரு மாணவனுக்கு அன்பும் பாசமும் சரியாக கிடைக்கவில்லை எனில் அவனால் கற்றலில் முழுமையாக ஈடுபட முடியாது.

**தன் மதிப்புத் தேவைகள்:**

கற்பவரின் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, சுயபலம், தன்னால் இயலும் என்ற எண்ணம், வெற்றிபெற முயலுதல்,இவை தன் மதிப்பிற்கான தேவைகள். தன்மதிப்புத் தேவையை அடையாத மாணவனும், நிராகரிக்கப்படும் குழந்தையும் நிலையற்ற நம்பிக்கை, தாழ்வு மனப்பான்மை பெற்று காணப்படுவர்.

**அடைவூக்கத் தேவைகள்:**

எதை, எவ்வாறு, எங்கு, கையாள வேண்டும் என்ற தெளிவு, பொருட்களின் தன்மையறிந்திருத்தல், ஒன்றை மற்றொன்றுடன் தொடர்புபடுத்திப் பார்த்தல் போன்றவை

அடைவுத் தேவைக்கானவை. அறிவு திறன் வளர்ச்சியைப் பொருத்தே அடைவுத் தேவை அமையும்.

**அழகுணர்த் தேவைகள்:**

அழகுபடுத்துதல், தன் சுத்தம் பேணுதல், விரும்பிய பாடத்தை படித்தல் போன்றவை இத்தேவையின் கூறுகள் ஆகும். தனியாள் தேவைகள் இதில் நிறைவேறினால் மட்டும் இது சமூகத் தேவையில் வெற்றி பெற இயலும். எ.கா: தன்னை அழகுடன் தூய்மையாக பேணிக்காத்துக் கொள்பவரால் மட்டுமே தன் வீட்டையும் சுற்றத்தையும் அழகுணர்வுடன் வைத்துக்கொள்ள முடியும்.

**தன்னிறைவுத் தேவைகள்:**

முதலில் உடலியல், அன்பு, பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்து கொண்டு அதன் வழியே மற்ற தேவைகளான தன்மதிப்புத்தேவை, அடைவூக்கத் தேவைகள், அழகுணர் தேவைகள் ஆகியவற்றை முழுமைபெறச் செய்தல் தன்னிறைவுத் தேவையாகும்.

கற்றல் செயலில் முழுசெயல்பாட்டுடன் கற்க **கார்ல் ரோஜர்ஸின்** பண்புகள்:

i) அனுபவத்தை முக்கியமான ஒரு கருவியாக கருத வேண்டும். நேர்மையான அனுபவமோ அல்லது எதிர்மறையான அனுபவமாக இருந்தாலும் அதை கற்பவர் ஏற்க வேண்டும். பின்னர் அந்த அனுபவ அறிவுடன் கற்றலில் முழு நிலையை அடைய முற்பட வேண்டும்.

ii) சூழ்நிலையில் பெறும் பல்வேறு அனுபவங்களின் மூலமாக உண்மைநிலை, உண்மைக்கு புறம்பான நிலையறியும் திறன் மேம்படும்.

iii) கற்பவரின் உள்ளுணர்வுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும். அதே சமயம் தன்சார்ந்துள்ளவர்களின் கருத்துணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

iv) படைப்பாற்றல் திறனை பெருக்கிக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். ஏனெனில் எல்லா நிலையிலும் மற்றவரின் உந்துதலில் செயல்பட இயலாது.

v) வாழ்வில் எதிலும் திருப்தியுடன், மனமகிழ்வுடன் இருக்க வேண்டும். அத்துடன் புதிய சவால்களையும் அனுபவத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**முடிவுரை:**

கற்றலில் உள்ள பல்வேறு உளவியல் கோட்பாடுகளின் படிநிலைகள், அதன் முக்கியத்துவம், மற்றும் தேவைகள், முழு செயல்பாட்டுடன் கற்றலுக்கான உத்திகள் போன்றவற்றைப் பற்றிய அறிவினை விரிவாக்க இப்பாடப்பகுதி வழிகாட்டுதலாக அமைகின்றது.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. மாஸ்லோவின் மனிதத் தேவைகளை விவரிக்கவும்.
2. பியாஜேவின் அறிதிறன் வளர்ச்சியின் படிநிலைகளை பட்டியலிடுக
3. முழுமைக் காட்சிக் கோட்பாடு பற்றி விவரிக்கவும்.
4. கோஹ்லரின் உட்காட்சி வழிக் கற்றல் சோதனையை விளக்குக.

## அலகு – 5 அறிவுக்கட்டமைப்பை உருவாக்கும் கோட்பாடு

**நோக்கங்கள்**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1. அறிவுக்கட்டமைப்பின் பொருளையும் அதன் இயல்பை பற்றியும் புரிந்துகொள்வார்.
2. அறிவுக்கட்டமைப்பின் கற்பித்தல் அணுகுமுறையைப் பற்றி விளக்குவார்.
3. கற்றல் செயல்முறையின் இயல்புகளைப் பற்றி விளக்குவார்.
4. அறிவுக் கட்டமைப்பின் முக்கிய சவால்களைப் பற்றி புரிந்து கொள்வார்.

**முன்னுரை :-**

கற்றல் செயல்பாட்டின் புதிய நோக்கமானது வைகாட்ஸ்கி, பியாஜே, புரூணர் மற்றும் ஆசுபெல் ஆகியோரின் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட அறிவுக் கட்டமைப்பு கற்றல் ஆகும். இதன் பொருட்டு கற்போர்கள் சுறுசுறுப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும், விரைந்து செயல்படக் கூடியவராகவும் தங்களது கற்றல் செயல்பாட்டை சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் மற்றும் அரசியல் ரீதியாகவும் பொருளுடையதாக வடிவமைக்கப்பட்டதே இத்தொகுப்பாகும்.

**அறிவுக்கட்டமைப்பை உருவாக்குதல் - பொருள் :-**

கற்றல் என்பது அறிவை ஒருமைப்படுத்திடும் ஒரு செயல்முறை ஆகும். இது கற்போர் தங்களது கற்றல் செயல்பாட்டில் பெறும் தகவல்களையும், சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து பொருளுடையதாக மாற்றி, நினைவில் பதிய வைப்பதே இச்செயலாகும்.

இதில் அறிவுசார் வழிகாட்டியின் பங்கானது மாணவர்களின் மெய்யுணர் இடைவினையை உருவாக்கும் சூழலை தகுந்த கல்வியியல் துணைக் கருவிகளோடு வழங்குதல் ஆகும். இதில் மாணவர்கள் (கற்போர்) தங்களது கற்றல் செயலில் தேர்வு செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கருத்துக்களை உருவாக்குதல் போன்றவை உள்ளடங்கும்.

கற்றலில் அறிவுக் கட்டமைப்பு செயலானது ஆக்கப்பூர்வமான பங்கேற்பு, துடிப்புடன் செயலாற்றல், பிரச்சனைக்கு தீர்வு காணுதல் மற்றும் இணைந்து கற்றல், எதையும் ஆராய்ந்தறியும் திறன் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக தகுந்த சூழலை ஆசிரியர் அமைத்துத் தருதல் வேண்டும்.

கற்போர் தாம் கற்ற புதிய அனுபவங்களையும், தகவல்களையும் ஒருங்கிணைத்திடும் செயல்களில் ஆசிரியர் உதவிடுகிறார்.

**அறிவுக்கட்டமைப்பு கோட்பாட்டின் இருமாதிரி அணுகுமுறைகள் :-**

(1) உளவியல் ரீதியான அறிவுக்கட்டமைப்பு (பியாஜே, புரூணர்)

(2) சமூக ரீதியான அறிவுக்கட்டமைப்பு (வைகாட்ஸ்கி, பாண்டூரா)

இவ்வணுகுமுறையில் இடம்பெறும் முக்கிய பிரச்சனைகள்.

(அ) சமூகத்தை மாற்றியமைத்திடுவதற்கான கல்வி

(ஆ) ஒருவரது அறிதிறன் வளர்ச்சியில் சமூகச் சூழலின் செல்வாக்கு.

**அறிவுக்கட்டமைப்பை உருவாக்குதல் - வரையறை :-**

**க்ரோல் & பாஸ்கி,** ''தொடர்பு கொள்ளும் ஒன்றைப் போலவே செய்தலும் அல்லது திரும்பத் திரும்ப அதைச் செய்தலும் அறிவை பெற்றுத் தராது. அதன் உட்பொருளோடு தொடர்பு கொள்வதாலேயே அறிவினைப் பெறுகிறோம்'', என வரையறுத்துள்ளனர். **வுல்ஃப் & மெக்முல்லன்,** ''அறிவுக்கட்டமைப்பு கொள்கை என்பது, அடிப்படையில் ஒரு கொள்கையேயன்றி, கற்பித்தல் கொள்கையன்று'', என வரையறுத்துள்ளனர்.

**அறிவைக் கட்டமைத்துக் கொள்ளும் கற்பவரின் தன்மை :-**

**(1) அறிவுக்கட்டமைப்பு கற்போரின் முக்கியத்துவம்:-**

சமூகறிவு கட்டமைப்பானது கலாச்சாரத்தை மாணவரிடையே மேம்படுத்துகிறது. அதில் கற்போர் தங்களது பிண்ணனி, கலாச்சாரம் மற்றும் உலகளாவிய பார்வை ஆகியவற்றின் செல்வாக்கை கொண்டு உண்மையை அடைவது ஆகும்.

**(2) கற்போரின் முழு பொறுப்பு:-**

கற்போரே தங்களது கற்றலின் சீரான வேகத்திற்கு பொறுப்பாவார். சமூகறிவு கட்டமைப்பே கற்போரின் கற்றல் செயல்பாடுகளின் வேகம் மற்றும் பங்கேற்பின் முக்கியத்துவத்தை மேம்படுத்துகிறது.

**(3) கற்போருக்கான உயர் ஊக்கத்தின் அவசியம்:-**

உளவியல் சார்ந்த அணுகுமுறையில், ஊக்கம் என்பது மிக முக்கியமானதாகும். ஊக்குவித்தல் கற்போரின் கற்றலில், ஆர்வத்தையும் மற்றும் தன்னம்பிக்கையையும் அதிகரிக்கின்றது. **வான்கிளேசர்ஃபீல்டு** கூறுவது போன்ற தன்னால் கற்க முடியும் என்று, தன்னம்பிக்கை கொண்டிருப்போரே கற்றல் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு உரிய ஊக்கம் கொண்டு திகழ்கின்றனர்.

**(4) கற்போரின் துடிப்பான செயல்பாடு:-**

கற்போர் என்பவர், நேரிடை அனுபவங்களின் மூலம் புதிய புரிதல்களை தாமே ஏற்படுத்திக் கொள்வர். ஆசிரியர் ஆனவர் பயிற்சியளித்தும், வடிவமைத்தும் மற்றும்

பரிந்துரைத்தும் மாணவர்களிடையே இடைவினையாற்றுவது, வினவுதல், செய்முறை மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அமைத்து தருவர்.

**(5) ஆழ்ந்து சிந்தித்தலுடன் கூடிய கற்றல்:-**

மாணவர்கள் தங்களது கற்றல் செயல்களை தாமே கையாண்டு தாம் பெற்ற அனுபவங்களை கொண்டு ஆழ்ந்து சிந்திப்பர். இதன்படி கற்போர் தங்களது கற்றல் செயல்பாடுகளில் புலமையடைவர் ஆசிரியர் மாணவர்களிடையே வினவும் தன்மைக்கும், ஆழ்ந்து சிந்தித்தலுக்கும் தக்க சூழலை உருவாக்கி தருவர்.

**(6) இணைந்து கற்றல்:-**

இணைந்து கற்றலுக்கு பல்வேறு காரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதன்படி அறிவுக்கட்டமைப்பு கற்றலில் சக மாணவர்களோடு இணைந்து கற்றலில், நல்ல விளைபயனை அளிக்கும்.

இதன் வாயிலாக, கற்போர் தங்களின் கற்றல் செயல்பாடுகளில் மேற்பார்வையிட்டு தாமாகவே, பலவிதமான கற்றல் உத்திகளையும் மற்றும் முறைகளையும் அறிகின்றனர்.

**(7) ஆராய்ந்தறியும் கற்றல்:-**

அறிவுக்கட்டமைப்பு வகுப்பறையின் முக்கிய செயல்பாடானது, பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதலாகும். மாணவர்கள் ஆராயும் முறையை கையாண்டு வினாக்கள் எழுப்பியும், தலைப்புகளை ஆராய்ந்தறிந்தும், பலவித வளங்களையும் கொண்டு சரியான தீர்வுகளை காண்பர்.

**அறிவுக்கட்டமைப்பு கொண்ட வகுப்பறையில் ஆசிரியர் பங்கு :-**

→ ஆசிரியர் மாணவர்களிடையே திறந்த நிலை வினாக்களை எழுப்பி, விடை கூறும் வரை காத்து இருப்பர்.
→ ஆசிரியர் உயர்நிலை சிந்தனைக்கும், தர்க்க ரீதியான சிந்தனைக்கும் அதிக முக்கியத்துவத்தினை மாணவருக்கு அளிப்பர்.
→ மாணவர்கள் ஆசிரியருடனும், சக மாணவருடனும் இடைவினை புரிய ஆர்வத்தோடு செயல்படுவர்.
→ ஆசிரியர் மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ப வகுப்பறைச் சூழலை மாற்றி அமைத்திடுவர்.
→ ஆசிரியர் ஆராய்ந்தறியும் கற்றலை உருவாக்குவர்.
→ ஆசிரியர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் கற்றலை மேம்படுத்துவர்.
→ குழு இடைவினை புரியும் வகுப்பறை அமர்வுகள், கூட்டுறவு கற்றல், இணைந்து கற்றல், குழு செயல்திட்டப்பணி போன்றவை வகுப்பறையில் கற்பித்தல் உத்திகளாக ஆசிரியர் பயன்படுத்துவார்.

**ஆசிரியரின் பங்கு :-**

- ❖ பாடத்தை தொடங்குவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள்.
- ❖ புாடத்தை கற்பதற்கான செயல்களை அமைத்தல்.
- ❖ மாணவர்கள் குழுவாக கற்றல் செயல்களில் ஈடுபடுதலை முறையாகக் கண்காணித்தல்.
- ❖ குழுப்பணி நடைபெற்ற விதம் மற்றும் விளைபயனை மதிப்பிடல்.

**(அ) பாடத்தை தொடங்குவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் :-**

மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தை கூட்டுறவு முறையில் கற்க தொடங்கும் முன், கல்விசார் மற்றும் சமூக குறிக்கோள்கள் குறித்து ஆசிரியர் முடிவு செய்திட வேண்டும். கல்விசார் குறிக்கோள்கள் என்பவை பாடப்பொருள் சார்ந்தறிவு மற்றும் செய்திறன் ஆகும். சமூக குறிக்கோள்கள் என்பவை மாணவர்கள் எய்திட வேண்டிய சமூக இடைவினையாற்றும் திறன்களாகும்.

**(ஆ) பாடத்தை கற்பதற்கான செயல்களை அமைத்தல் :-**

ஆசிரியர் மாணவர் குழுக்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளை விவரித்தல் வேண்டும். அந்த விவரமானது மாணவர்களிடையே சீராக சென்றடைந்ததா என்று ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பாடம் சம்பந்தமான குறிக்கோள்களை அடைவதுடன் சமூகத்திறன்களையும் வளர்த்திட வேண்டும்.

**(இ) மாணவர்கள் குழுக்களாக கற்றல் செயல்களில் ஈடுபடுதலை முறையாக கண்காணித்தல் :-**

ஆசிரியர் குழு செயலின் போது மாணவர்களிடையே மேற்பார்வையிடுதல் வேண்டும். தேவைப்படுமிடங்களில் ஆசிரியர் வினாக்களை எழுப்பி தெரிவு செய்தல் வேண்டும். மாணவர்கள் கற்றல் அடைவை அடைந்திருக்கின்றாரா என்பதை ஆசிரியர் கேட்டறிய வேண்டும்.

**(ஈ) குழுப்பணி நடைபெற்ற விதம் மற்றும் விளைப்பயனை மதிப்பிடல் :-**

ஒவ்வொரு குழுவினரும் தத்தம் குழு உறுப்பினரது கல்வி தேர்ச்சியை மதிப்பிடவும், குழுவின் அடைவு தேர்ச்சியையும், பிறக் குழுக்கள் கண்டறியவும் ஆசிரியர் வாய்ப்பளிக்க வேண்டும். அடைவு தேர்ச்சி என்பது பாடத்தின் கல்விசார் குறிக்கோளையும் சமூக வளர்ச்சியை மேம்படுத்தக் கூடியதாகவும் அமைதல் அவசியம்.

**அறிவுக்கட்டமைப்பு கோட்பாட்டின் கற்றல் செயலின் தன்மை :-**

அறிவுக்கட்டமைப்பு கோட்பாடு, கற்றலின் போது கற்பவரின் குறுகிய கால நினைவு பகுதியில் அறிவை கட்டமைத்திடும் செயல் நடைபெறுகிறது.

அதாவது கற்பவர் தாம் பெறும் புதிய தகவல்களை ஏற்கனவே நினைவில் பாதுகாத்து வைத்திருக்கும் அறிவு தொகுப்பில் இருக்கும் தகவல்களில் பொருத்தமானவற்றை தெரிவு செய்து அவற்றோடு ஒப்புநோக்கி பொருளுணர்ந்து கொள்கிறார். பின்பு புதிய தகவல்களை ஒழுங்குப்படுத்தி தனது அறிவுத் தொகுப்போடு ஒருங்கிணைத்து கொள்வர்.

**கற்றல் எனும் செயல்பாட்டில் இடம்பெறும் மூன்று முக்கிய செயல்பாடுகள் (SOI)**

(1) பெறும் தகவல்களை தேர்வு செய்து முந்தைய அறிவு தொகுப்பிலிருந்து பொருத்தமான தகவல்களை தெரிவு செய்து, பெற்ற புதிய தகவல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவை. முந்தைய அறிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தகவல்களோடு ஒப்பிடப்பட்டு பொருள் உணரப்படுதல். இப்படி நிலையில் தெரிவு செய்தல் (Selecting) (ம) பொருளுணர்தல் நடைபெறுகின்றன.

(2) பொருளுணரப்பட்ட புதிய தகவல்களை வகைப்படுத்தி, ஒழுங்குற அமைத்தல் (Organizing). நிலையில் நடைபெறுகிறது.

(3) ஒழுங்குற அமைக்கப்பட்ட புதிய தகவலை, ஏற்கனவே தாம் கொண்டிருக்கும் அறிவு தொகுப்போடு ஒருங்கிணைந்து (Integrating) அறிவுக் கட்டமைப்பை மாற்றி அமைத்தல்.

மேற்கண்ட மூன்று படிநிலைகளையும் கருத்தில் கொண்டு இக்கொள்கை "SOI" படிமம் என்று அழைக்கப்படுகிறது. பின்வரும் வரைபடம் கற்றல் செயல்பாட்டில் இடம்பெறும் மூன்று கட்டச் செயல்களில் தெளிவுப்படுத்துகிறது.



**இணைந்து கற்றல் :-**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து, தமது கற்றல் செயல்களை பகிர்ந்து கொண்டு கற்றல் தேர்ச்சி பெற முயற்சித்தலே, இணைந்து கற்றலாகும்.

(உ.ம்.) மூன்று மாணவர்கள் ஒன்றிணைந்து குறிப்பிட்டப் பாடத்தலைப்பை தெரிவு செய்து கற்க முனைப்பின் ஒருவர் இணையதளத்தை பயன்படுத்தி தகவலை சேகரித்திடவும், பிறிதோருவர் தேர்வு செய்த சேகரித்த தகவலை பொருள் உணர்ந்து நன்கு கோர்வைப்படுத்தி, அமைத்திடவும், மூன்றாமவர் தொகுக்கப்பட்ட தகவல்களை அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப தொடர்புக்கு ஏற்பவும் வகைப்படுத்தி சீராக்கி மூன்று நகல்களை எடுத்திடுவர். பின்பு மூவரும் தொகுக்கப்பட்ட பாடக்கருத்துக்களை தனித்தனியே கற்று ஒன்றுகூடி விவாதித்து கருத்து பரிமாற்றம் செய்துக் கொண்டு மூன்று பேருமே, கற்றல் தேர்ச்சி பெற முயற்சிப்பர். இதுவே இணைந்த கற்றலாகும்.

**வகுப்பறையில் இணைந்து கற்றலை செயல்படுத்துதல் :-**

(1) ஆசிரியர் மாணவர்களிடம் பொதுவான கற்கும் தன்மையுடைய கற்றல் செயல்பாடுகளைக் கருத்தில் கொள்ளுதல்.
(2) இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் இணைந்து குழுவாகக் கற்கும் செயல்பாடுகளைக் கொண்ட பாடப்பொருளைத் தருதல்.
(3) பாடப்பொருளை பிரித்து ஆய்ந்து, அதில் உள்ள பகுதிகளை குழுவில் உள்ளோர் பகிர்ந்து கொண்டு கற்றலில் ஈடுபடச் செய்தல்.
(4) தொடர்புடைய இணைய தளங்கள் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் அளித்தல்.
(5) தேவைப்படும் பிற உதவிகளையும் ஆசிரியர் மாணவர் குழுக்களுக்கு அளித்தல்.

**இணைந்து கற்றலின் முக்கிய அம்சங்கள் :-**

- இணைந்து கற்றலின் மூலம் குழு மாணவர்களிடையே நேர்மறையான எண்ணங்கள் வெளிப்படும்.
- இணைந்து கற்றல் குழுவில் உள்ள மாணவர்களது குறிக்கோள் சமமாக இருத்தல்.
- இணைந்து கற்றல் குழுவில் உள்ள மாணவர்கள் குறிக்கோளைப் பற்றி உணர்ந்து இருத்தல் வேண்டும்.
- இணைந்து கற்றல் குழுவில் ஒவ்வொரு மாணவர்களும் குழுவின் தலைவராகவே திகழ்வர். கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வர்.
- தனி மாணவன் தனது குழு வேலையை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல்.
- இணைந்து கற்றல் குழுவில் மாணவர்கள் கல்வியியல் செயல்பாட்டை மட்டுமின்றி சமூக திறன்களை பெறுவதற்காகவும் பயிற்சி பெறுகின்றனர்.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்தே குழு வேலைப்பாட்டை கவனித்து அதை மேம்படுத்த செய்வார்கள்.

- ➢ இணைந்து கற்றலின் மூலம் மாணவர்கள் தங்களுக்கு கொடுத்திருக்கும் குழு வேலைப்பாட்டை விரைந்து முடித்து விடுவர்.
- ➢ மாணவர்களின் குழு வேலைகளை பராமரித்து அவற்றை சீராக செய்து முடிக்க ஆசிரியர் உதவிடுதல் வேண்டும். சில சமயத்தில் கொடுத்த செயல்பாட்டை நிறைவு பெறாமலும் இருக்கலாம்.
- ➢ மாணவர்கள் குழு இடைவினைக்கு ஏற்ப அமருதல் வேண்டும். ஒருவருக்கொருவர் தமது கருத்துக்களை பரிமாறக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

**காக்னேயின் படிநிலைக் கற்றல் கோட்பாடு / எட்டுவகை அறிவுசார் திறன் :-**

**முன்னுரை:-**

எளிய கற்றலிலிருந்து சிக்கலான பிரச்சனைகளையும் தீர்க்க கற்றுக் கொள்வது வரை கற்றலில் எட்டு வகைகள் உள்ளன. அவர் கூறிய எட்டுவகைக் கற்றல்களையும் அவற்றிற்கான விளக்கமும் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன.

**கற்றல் வகைகள்:-**

❋ **குறியீடுகள் அல்லது அடையாளங்களைக் கற்பது:**

பாவ்லாவ் குறிப்பிட்ட ஆக்கநிலையிறுத்தக் கற்றலில். ஒருவன் ஒரு குறியீட்டுக்கு ஒரு துலங்கல் மட்டுமே வெளிப்படுத்துவதைக் கற்கிறான்.

❋ **தூண்டல் - துலங்கல் இணைப்பைக் கற்றல் (S-R Learning):**

தார்ண்டைக் குறிப்பிட்ட தூண்டல் துலங்கல் தொடர்பு : ஸ்கின்னர் குறிப்பிடும் செயல் தொடர்புள்ள துலங்கல்.

❋ **ஊடலியக்க தொடர் இணைப்பு (Motol Chaining):**

இரண்டு (அ) இரண்டுக்கு மேற்பட்ட தூண்டல் துலங்கல் தொடர்புகளை இணைப்பது. குறிப்பாக சிறு சிறு உடல் திறன்களை இணைத்து சீரிய (அ) சிக்கலான செய்திறனை அடைவது.

❋ **சொற்கள் இணைத்தலைக் கற்றல் (Verbal Chaining):**

சொற்களைப் மொத்தமாக இணைத்தலைக் கற்றுக் கொள்வதன் மூலம் மொழிப் பயிற்சியைப் பெறுதல்.

❋ **வேற்றுமையறிதல் (Discriminative Learning):**

ஒரே மாதிரியாகக் காணப்படும் பல்வேறு தூண்டல்களுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை கண்டு உணர்ந்து ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான வேறுபட்ட துலங்கல்களை வெளியிடுவது.

❋ **பொதுமைக் கருத்துக்களைக் கற்றல் (Concept Learning):**

ஒரே வகையைச் சேர்ந்த பல்வேறு தூண்டல்களுக்கு இடையே காணப்படும் பொதுப் பண்பை கண்டறிந்து அப்பொதுப் பண்பைப் பெற்ற அனைத்துத் தூண்டல்களுக்கும் ஒரே மாதிரியான துலங்கலை வெளிப்படுத்துவது.

❋ **விதியைக் கற்றல் (Rule Learning):**

இரண்டு (அ) இரண்டுக்கு மேற்பட்ட பொதுமைக் கருத்துக்களை இணைப்பதற்கான வழிமுறைகளைக் கற்றல்.

**சிக்கல் (அ) பிரச்சனையைத் தீர்க்கக் கற்றல் (Problem Solving):**

பொருத்தமான உத்திகளைப் பயன்படுத்தி பிரச்சனைக்குத் தீர்வு காணுதல்.

காக்னேயின் கூற்றுப்படி கீழ்வரிசை கற்றல் திறன்களைப் பெற்று தேர்ச்சியடைந்த பிறகுதான் அடுத்த உயர்நிலைக் கற்றலுக்கு முயற்சிக்க வேண்டும்.

**(உதாரணமாக)**

கணிதப்பிரச்சனை அதாவது கணக்கு ஒன்றிற்கான விடையை காண்பதற்கானத் திறனைப் பெறவேண்டுமானால், அக்கணக்குத் தொடர்பான விதிகளையும், சூத்திரங்களையும், அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

எனவே கீழ்வரிசை திறன்களில் தேர்ச்சியடையச் செய்து, உயர்நிலைக் கற்றல் கற்பித்தலில் முறையானது என்று காக்னேயின் கோட்பாடு வலியுறுத்துகிறது.

இதேபோன்று பொருளுணர்ந்து சரளமாக சரியான ஒலியுடன் படித்தல் என்ற உயர்நிலையை அடைவதற்கான காக்னே படிநிலையை வருமாறு.

சரளமாக பொருளுணர்ந்து முறையான ஒலியுடன் படித்தல்

↑

விதிமுறைகள் (நிறுத்துமிடம், சேர்ந்து படிக்க வேண்டியவை, ஒலி தொடர்பான முறைகள்)

↑

ஆங்கிலத்தில் எழுத்து மூலமாக கருத்துக்களை வெளியிடும் முறை

↑

பொதுமைக் கருத்துகள்

(பெயர் சொற்கள், வினை சொற்கள், இணைப்பு வார்த்தைகள் தேர்ச்சி பெறுதல்)

↑

வேற்றுமையறிதல்

(ஒரே மாதிரியாக காணப்படும் வார்த்தைகள்

வேற்றுமைப்படுத்தி அறிதல்)

மொழிசார் வரிசைகள்
அச்சிட்ட வார்த்தைகளை
புரிந்து கொள்ளுதல்.

↑

தொடராக இணைத்தல்
அச்சிட்ட எழுத்துக்களை
ஒலியின் மூலம் புரிந்து கொள்ளுதல்

↑

தூண்டல் - துலங்கல் கற்றல்
(மொழியின் ஒலிகள்)

பொதுமை கருத்துகள்
(வாய்மொழிப் பேச்சாக
அமையும் தூண்டல்)

↑

தொடராக இணைத்தல்
வார்த்தைகளை
வாய்மொழியாகக் கூறல்

↑

தூண்டல் - துலங்கல் கற்றல்
(எளிய வார்த்தைகளை கற்றல்)

**(Pedagogical Approaches to Constructivism) அறிவுக் கட்டமைப்புக் கொள்கையின் கற்பித்தல் அணுகுமுறைகள் :-**

1. பொதுவாக கற்றல் என்பது, நாம் அறிந்தவற்றோடு தற்போது கற்பவற்றை தொடர்ந்து இணைத்து அறியும் செயல்முறையாகும். மாணவர்களின் முன்னறிவு,

தற்போது கற்பவற்றிற்கு துணை புரிவதாகவோ, பாதிப்பு ஏற்படுத்துவதாகவோ அல்லது முற்றிலும் வேறுபட்ட கற்றலை மேற்கொள்வதாகவோ அமைத்திடும். ஒவ்வொரு மாணவரும் தமது முன்னறிவு மற்றும் முந்தைய அனுபவங்களுடன் வகுப்பறைக்கு வருகிறார்கள் என்பதை ஆசிரியர்கள் நினைவிற் கொண்டு, தமது கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

2. பாடப்பொருளை மாணவர்களுக்கு வழங்கிடும் விதம், அவை மாணவர்களது அன்றாட வாழ்க்கைச் சூழலோடு தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே, மாணவர்கள் பாடக் கருத்துக்களை பொருளுணர்ந்து கற்பர். மாணவர்கள் தாமே எதையும் கண்டறிந்து தாம் கற்பவற்றை நடைமுறை வாழ்க்கையில் சோதித்தறிந்து புரிந்து கொள்ளும் வகையில், ஆசிரியர் பாடக் கருத்துக்களை வழங்கிடும் அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

3. மாணவர்கள் பாடக்கருத்துக்களை பொருள் உணர்ந்து புரிந்து கொள்ளச் செய்வதோடு மட்டுமின்றி, அவை குறிப்பிட்ட சமூக பண்பாட்டுச் சூழலில் எவ்விதம் பயன்படுகின்றன பொருள் கொள்ளப்படுகின்றன என்பதையும் உணர்ந்தறியச் செய்ய வேண்டும். இதற்கு சமூகச் செயல்பாடுகளில் மாணவர்களது நேரடிப் பங்கேற்பும் கூட்டுறவுக் கற்றலில் ஈடுபடுதலும் பெரிதும் உதவும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. அறிவைக் கட்டமைத்துக் கொள்ளும் கற்பவரின் தன்மையை விவரி.
2. அறிவுக்கட்டமைப்பு கொண்ட வகுப்பறையில் ஆசிரியரின் பங்கை விவரி.
3. காக்னேயின் படிநிலைக் கற்றல் கோட்பாட்டை விவரி.
4. அறிவுக் கட்டமைப்புக் கொள்கையின் கற்பித்தல் அணுகுமுறைகளை விவரி.

# அலகு – 6 கற்போர் மையக் கற்பித்தல்

**நோக்கங்கள்**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1. கற்றோர் மையக் கற்பித்தலின் பொருளை தெரிந்து கொள்வார்.
2. கற்றோர் மையக் கற்பித்தின் அணுகுமுறைக்கான தேவையை விளக்கிக் காணுவார்.
3. கற்றோர் மையக் கற்பித்தலைப் பற்றி விவரிப்பார்.
4. கற்றோர் மையக் கற்பித்தலின் நுட்பங்களை புரிந்து கொள்வார்.

**முன்னுரை :-**

மாணவர் மையக்கற்றல் என்பது கற்போர் மையக்கல்வி எனவும் அழைக்கப்படும். இந்தக் கல்வி முறையானது ஆசிரியரின் வழிகாட்டுதலோடு, மாணவரிடம் சென்றடைகிறது. உண்மையாகவே இம்முறையானது மாணவர்களை சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் தனது கல்விப் பொறுப்புகளை கையில் ஏற்று புதிய கல்வி முறையை மேம்படுத்த பயன்படுகிறது. மாணவர் மையக் கற்றல் மூலம் பல்வேறு திறன்களையும், பயிற்சிகளையும் (ம) வாழ்நாள் முழுவதும் தனது அன்றாட பிரச்சனைக்கு தீர்வு காணும் திறனும் பெறுகின்றன.

மாணவர் மையக் கற்றல் கோட்பாடானது அறிவு கட்டமைப்பு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களது அறிவு கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள புதிய தகவல்களும் முந்தைய அனுபவங்களும் முக்கிய பங்காற்றுகிறது.

இவ்வுலகினில் கற்போர் மையக் கற்பித்தல் (ம) அதன் பண்பியல்புகள், அணுகுமுறையின் தேவை, இவற்றின் நன்மைகள் மற்றும் தீமைகள், மாணவர் மையக் கற்பித்தல் (ம) ஆசிரியர் மையக் கற்பித்தல், ஒப்பீடு ஆகியவை விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. மாணவர் மையக் கற்றலானது மாணவர்களின் ஆர்வத்தையும், திறமையும், திறனையும் மற்றும் கற்றல் பாணிகள் போன்றவற்றை மேம்படுத்துகிறது.

**கற்போர் மையக் கற்பித்தல் - பொருள் :-**

கற்போர் மையக் கற்பித்தல் என்பது ஒரு வகையான கற்பித்தல் அணுகுமுறையாகும். மாணவர் மையக் கற்பித்தல் முறையானது உயர் கல்விக்கு வழிவகுக்கிறது. கற்போர் மையக் கற்பித்தலானது ஒரு வழிக் கற்பித்தல் முறையல்ல. இந்த அணுகுமுறையானது மாணவருக்கு ஆசிரியர் தகவலை வழங்குவதை காட்டிலும் மாணவருக்கு தகுந்த கற்றல் வசதிகளை ஏற்படுத்தி தருகிறது. கற்போர் மையக் கற்பித்தல் மூலம் மாணவர்கள் எதை கற்கின்றனர் என்பதைக் காட்டிலும் எதைக் கற்றுக் கொள்கின்றனர் என்பதில் முக்கியத்துவம் வாய்க்கின்றது.

**கற்போர் மையக் கற்றல் (ம) கற்போர் மையக் கற்பித்தல் :-**

கல்வியாளர்கள் மூன்று விதமான உத்திகளை இவ்வணுகுமுறையில் கையாண்டனர். கற்போர் மையக் கற்பித்தல் என்பது எவர் ஒருவர் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனரோ அவர்மேல் அதிகம் முக்கியத்துவம் அளிப்பதாகும். கற்போர் மையக் கற்பித்தலானது கற்கும் செயல்பாட்டில் அதிக முக்கியத்துவம் அளிப்பதாகும். இவ்விரு உத்திகளும் ஆசிரியருக்கான முறையீடாக அமைந்துள்ளது. ஏனெனில் இவை கற்பித்தலில் ஆசிரியரின் பங்கை அதிகம் அடையாளம் காட்டுகிறது. ஆசிரியர் மையக் கற்றல் செயல்பாட்டு அணுகுமுறையை கற்பிப்போர் அதிகம் விரும்புவதில்லை. ஏனெனில் அவை நுகர்வோர் மேல் அதிக கவனம் காட்டப்படுவதால், ஆசிரியர் பங்கை குறைக்கிறது.

**மாணவர் மையக் கற்பித்தலின் சிறப்பியல்புகள் :-**

துடிப்புடன் கற்றல், மாணவரின் பங்களிப்பு, ஆர்வம் (ம) இதர உத்திகளுடன் கூடிய மாணாக்கர் கற்றல் செயல்பாடே மாணவர் மையக் கற்றலாகும். இதன் அடிப்படையில் ஐந்து சிறப்பம்சங்கள் கூறப்பட்டுள்ளன.

**1. மாணவர் மையக் கற்பித்தலின் பல்வகைக் கற்றல் பாணிகள் :-**

ஆசிரியரானவர் பல்வேறு கற்கும் பாணிகளை மாணவர்களிடையே வழங்குகின்றனர். கற்கும் செயல்பாட்டை மாணவர்கள் அதிகம் நுகர்ந்தாலும் அதில் ஆசிரியர்களின் வேலைப்பாடு அதிகம் காணப்படுகிறது. பல்வேறு கற்கும் செயல்பாட்டின் பாணிகளின் மூலம் மாணவர்கள் தேவையான கற்கும் செயல்திறன்களையும், அறிவையும் பெறுகின்றனர். இதில் ஆசிரியர் பயிற்சி, மாணவரின் பயிற்சியை காட்டிலும் அதிகம் காணப்படுகிறது.

**2. மாணவர் மையக் கற்பித்தலில் கற்றல் திறனுக்கான வழிமுறைகள் :-**

மாணவர் மையக் கற்பித்தலில் ஆசிரியரானவர் சிந்திக்கும் உத்திகள், பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், மதிப்பிடுதல், தர்க்க ரீதியான விவாதம், ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளை கற்பித்தல் மூலமாக மாணவர்கள் அறநெறி ஒழுக்கத்திலும், முதன்மை பெற்று விளங்குகிறது.

இவ்வகை செயல்பாட்டின் மூலம் மாணவர்களின் தன்னார்வத்தின் மூலம் வித்தியாசமடைகின்றன. ஆராய்ச்சிகள் கற்கும் செயல்திறன்கள் வெளிப்படையான பாடக்கருத்துக்கள் கற்பிக்கும் முறையில் வேகமடைகின்றது.

**3. மாணவர் மையக் கற்பித்தலின் செயல்பாட்டின் ஆக்க சிந்தனையுடன் கற்றல் :-**

மாணவர் மையக் கற்றலின் ஆசிரியரின் பல்வேறு கலந்துரையாடல், திட்டமிடும் பணியின் கீழ் பல்வேறு கிளர் வினாக்கள் எழுப்பப்பட்டன. அவை மாணவரின் கற்றல் செயல்பாட்டின் பொறுப்புகளையும், முடிவுகளையும் ஆராய்ச்சிகளுக்கும் சிந்தனைகளுக்கும்

சவாலாக அமைந்துள்ளது. இதன் முக்கிய இலக்கானது மாணவர்கள் கற்றலின் தத்தம் விழிப்புணர்வு அடைதலும் பல்வேறு கற்றல் திறன்களை பெறுவதும் மற்றும் ஆக்க சிந்தனையுடன் அவற்றின் மேல் செயல்பட்டு வளர்வதாகும்.

**4. மாணவர் மையக் கற்பித்தலின் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், கட்டுப்பாடுடனான கற்றல் செயல்பாடுகள் :-**

ஆசிரியர் பல்வேறு விதமான முடிவுகள் கற்றல் செயல்பாட்டில், மாணவருக்கு வழங்குவர்.

ஆசிரியர் மாணவர்கள் எதை படிக்க வேண்டும்? எவ்வாறு கற்க வேண்டும்? எது கற்க வேண்டும்? கட்டுப்பாடுடனான கற்றல் நிகழ்வை நிகழத்த வேண்டும், கற்றல் செயல்களில் மாணவர்கள் எதை கற்கின்றனரோ, அவை சரியா? துவறா? என்றறிந்து தாம் என்ன கற்க வேண்டும் என்பதை மாணவர் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பை அளிக்கிறது. இதன் மூலம் ஆசிரியர் முடிவுகளையும் கற்றல் ஊக்கிகளை கொண்டு கற்றல் செயல்படுகிறது.

கற்போர் மைய ஆசிரியர் தனது பொறுப்புகளை பல்வேறு விதமான ஆற்றல்களை கொண்டு கையாள்கின்றனர். இதன் மூலம் மாணவர்கள் தனது ஒப்படைப்புகளை சரிவர முடித்து காட்டுபவர் வகுப்பறையில் கலந்துரையாடல் சீராக நடைபெறும் அச்செயலின் போதே, கற்றல் அடைவுகளை மதிப்பிட உதவுகிறது.

**5. இணைந்து கற்றலை ஊக்குவிக்கிறது மாணவர் மையக் கற்றல் :-**

நேர்மறையான கற்றலை இதன் மூலம் தெளிவாக காணமுடிகிறது. மாணவர்கள் குழுவாக இணைந்து கற்றல் செயலில் ஈடுபட்டு மாணவர் மையக் கற்பிப்போர் அடையாளம் காண முடிகிறது. ஆராய்ச்சிகளை உறுதி செய்து குழுவில் இருக்கும் ஒவ்வொரு மாணவர்களும் பங்கேற்பர்.

இத்துறையின் வல்லுனர்கள் பல்வேறு பரிந்துரைகளை மேற்கொண்டு கற்போர் கற்றல் செயலில் ஈடுபட வாய்ப்பளிக்கின்றனர். கற்போர் மையக் கற்பித்தலின் மூலம் சுயமாகவே சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்கின்றனர். குழுவில் உள்ள அனைத்து மாணவர்களும் தனது எண்ணத்தையும், கருத்துக்களையும் மற்றும் உணர்ச்சிகளையும் பரிமாறிக் கொள்ள வாய்ப்பளிக்கிறது.

**கற்பித்தலில் கற்போர் மைய அணுகுமுறைகளின் தேவை :-**

1. மாணவர்களிடம் அறிவுக்கான அடிப்படைத் தளத்தை உருவாக்கிடல். ஒருவர் ஏற்கனவே நன்கு அறிந்திருக்கும் அறிவு தொகுப்பே அறிவு பெறுவதற்கான அடித்தளமாக செயல்படுகிறது. எனவே மாணவர்களின் அறிவு கட்டமைப்பை உருவாக்கிட வேண்டும் என்ற அடிப்படையில் ஆசிரியர் மாணவர் கற்றல் கற்பித்தலை மேற்கொள்கின்றார்கள்.

2. மாணவர்கள் தமது எண்ணங்களையும், நடத்தைகளையும் ஆழ்ந்து சிந்தித்து நெறிப்படுத்திக் கொள்ள உதவுவதே கற்றல் ஆகும். இதன் முக்கிய அம்சம் ஒருவர் தனது எண்ணங்கள் (ம) நடத்தைகள் குறித்து ஆழ்ந்து சிந்தித்து நெறிப்படுத்தலாகும். வெற்றிகரமாக திகழும் மாணவர்கள் கற்றலில் துடிப்புடன் திகழ்கிறார்கள்.

3. ஊக்கமும், உணர்வுப்பூர்வமான ஈடுபாடும் மாணவர் மையக் கற்பித்தலில் மாணவர்களின் கற்றல் ஊக்கமும், மனநிறைவும் அதிகரிக்கின்றன. இவ்விரு வினைபயன்கள் மாணவர்களின் உயர் கல்விக்கு அடைய வழிகோலுகிறது.

4. தனிநபர் மேம்பாடும், தனியாள் வேற்றுமைகளும் இவை மாணவர் மையக் கற்பித்தலில் கருத்தில் கொள்ளப்படுகின்றன. மரபு நிலை காரணிகள் (ம) சூழ்நிலைக் காரணிகள் செல்வாக்கினால் நாம் ஒவ்வொருவரும் மனித வளர்ச்சியின் எல்லா பருவ நிலைகளிலும் முன்னேறி செல்கின்றோம். எனவே தான் மாணவர் மையக் கற்பித்தலை ஆசிரியர் நாட வேண்டிய அவசியமாகிறது.

5. கற்றலில் சமூக சூழலில் செல்வாக்கு மாணவர்கள் தமது அறிவை கட்டமைத்திடும் செயல்பாட்டில், அதாவது கற்றலில் துடிப்புடன் ஈடுபடுதலும் சமூக இடைவினைகளும் செல்வாக்கு செலுத்திடுவதாக புரூணர், பியாஜே மற்றும் வைகாட்ஸ்கி முன்மொழிந்த கற்றல் கொள்கைகள் உரைக்கின்றன.

**ஆசிரியர் மையக் கற்பித்தலின் நன்மைகள் :-**

- ✓ மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்துகிறது.
- ✓ மாணவர்கள் பயின்றவற்றை தக்க வைக்கின்றது.
- ✓ மாணவர்களின் சுய மதிப்பீட்டை மேம்படுத்துகிறது.
- ✓ மாணவர்களுக்கு இடையேயான இடைவினைக்கு தேவையான வசதிகளை செய்து தருவதோடு, சிந்திக்கும் திறனை அதிகரித்து பிரச்சனைக்கு விரைந்து தீர்வு காண உதவுகிறது.
- ✓ காரணம் அறியும் தன்மையை வேகப்படுத்துகிறது.

| ஆசிரியர் மையக் கற்பித்தல் | மாணவர் மையக் கற்பித்தல் |
|---|---|
| ஆசிரியரே வகுப்பறையில் அதிக கவனம் ஈர்ப்பவராக விளங்குகிறார். | வகுப்பறையில் ஆசிரியர் மற்றும் மாணவர் செயல்பாடுகள் சமஅளவு முக்கியத்துவம் பெறுகின்றனர். |
| ஆசிரியரது சரளமான மொழி நடையும், எளிய சொற்களை பயன்படுத்துதல், அதிக கவனம் பெறுகின்றன. | மாணவர்களது மொழித்திறன் கவனிப்புக்கு உள்ளாகிறது. |
| ஆசிரியர் பேசுகிறார், மாணவர்கள் மௌனமாக அமர்ந்து கவனத்துடன் செவிமடுக்கின்றனர். | ஆசிரியர் முன்மாதிரியாக விளங்குகிறார். மாணவர்கள் தமக்குள்ளும் ஆசிரியருடனும் இடைவினை செய்கின்றார். |

| | |
|---|---|
| மாணவர்கள் தனித்தியங்குகின்றனர். | செயல்பாட்டின் தன்மை மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப மாணவர்கள் இணைகளாகவோ, குழுவாகவோ தனித்து இயங்குகின்றனர். |
| ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் கண்காணித்து சீர்திருத்துகிறார். | ஆசிரியர் தொடர் கண்காணிப்பின்றி மாணவர்களுக்கு ஆசிரியர் திருத்தமும், பின்னூட்டம் செய்கின்றனர். |
| ஆசிரியர் மாணவர் வினாக்களுக்கு பதில் தருவார். | ஆசிரியர் தகவல் மூலமாக செயல்படுகின்றனர். |
| ஆசிரியர் கற்பித்தல் தலைப்பை தேர்வு செய்து பாடக் கருத்துக்களை வழங்குகிறார். | மாணவர்கள் கற்க வேண்டிய பாடத்தலைப்புகள் குறித்து தமது எண்ணங்கள் வெளிப்படுத்த வாய்ப்பு உள்ளது. |
| ஆசிரியர் மாணவரது கற்றல் அடைவினை மதிப்பிடுகிறார். | மாணவர்கள் தமது கற்றல் அடைவினை தாமே மதிப்பிடுகின்றனர். |
| வகுப்பறையில் அமைதி நிலவும். | வகுப்பறை சுத்தம் மிகுந்து காணப்படும். |
| மாணவர் கற்றலில் புற ஊக்கிகள் ஆசிரியரால் பயன்படுத்தப்படும். | மாணவர் கற்றலில் அகஊக்கம் செயல்படும். |
| பெரும்பாலும் ஒருவழித் தகவல் தொடர்பே ஆகும். | இருவழி தகவல் தொடர்புகள் S → T ; S → S |

**கற்போர் மையக் கற்பித்தலின் உத்திகள் மற்றும் நிறைகள் :-**

ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்திகள் ஆனவை கற்போர் மையக் கற்பித்தலில் பெரும் விளைவை ஏற்படுத்துகிறது. தொழில் நுட்பமானது புதிய மற்றும் மாறுபட்ட வாய்ப்புகளை மாணவர் - ஆசிரியர் இடைவினைக்கு வழங்குகிறது. அத்தகைய தொழில்நுட்பம் சார்ந்த கற்றலானது மாணவருக்கு இடையே கணினி பற்றிய அடிப்படை புரிதல்களை ஏற்படுத்துகிறது. இத்தகைய ஆதாரப்பூர்வமான முடிவுகள் தொழில்நுட்ப பயன்பாட்டினால் மாணவர்களின் புரிதல் நிலைகளை மதிப்பீடு செய்ய பெரிதும் உதவுகிறது.

**தொழில்நுட்ப தேர்வுக்கான வழிமுறைகள் :-**

கற்றலில் செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடானது வகுப்பறையிலும், கணினி அறையிலும் குழு அமைப்பிலும் இடம் பெறுகிறது. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள் கலைத்திட்டத்திற்கு துணைபுரியும் வகையில் அமைந்துள்ளது.

தொழில்நுட்ப பயன்பாட்டின் முதன்மையான எ.கா. ஆனவை கணினி சார்ந்த வழிமுறைகள் (CAI – Computer Assisted Instruction). இது கணினி வாயிலாக கலைச் சொற்கள் (ம) மொழி வடிவமைப்புகளை கற்க உதவுகிறது. இப்பார்வையின் அடிப்படையில் இரண்டாம் மொழியை கையாளும் செயல்பாடுகள் (ம) செயல்திட்டம்

போன்றவற்றினை செயல்படுத்த வாய்ப்பளிக்கின்றது. தற்காலத்தில் (CALL – Computer Assisted Language Learning) ஆனது கணினி, இணையதளம், மென்பொருள் வேலைப்பாடு போன்றவற்றை வழங்கி கற்றல் செயல்பாட்டிற்கு மேலும் வலுவூட்டுகின்றன.

கற்றல் செயல்பாட்டில் பரந்து விரிந்து காணப்படும் தொழில்நுட்ப அமைப்பில் மென்பொருள் நிகழ்வு (ம) வடிவமைக்கப்பட்ட நிகழ்வுகள் முதன்மை இடம் பெறுகின்றன. இதன் வாயிலாக பாடங்கள் பல்வேறு விதமான வடிவமைக்கப்பட்ட சாயல்களில் வழங்கப்படுகின்றன. அ∴து கலைச்சொற்கள் விரிவாக்கம், இலக்கிய வடிவமைப்புகள் ஆகியவை உலக நடப்புகளுக்கு ஏற்ற வகையில் தகுந்த அனுபவங்களை மாணவர்களுக்கு அளிக்கின்றன. கற்போர் பல பதிவுகளை பல்வேறு வேகங்களிலும் மாறுதல்களிலும் பதிவு செய்து தத்தம் மொழியினை தாமே கேட்டுணர்ந்து செயல்படுகின்றனர். மென்பொருள் ஆனது புதிய வடிவங்களை கொண்ட காரணிகளை கொண்டு VS ஐக்கிய நாடுகள் பயிற்சி மேலாண்மை (ம) மதிப்பீட்டு நுணுக்கங்களையும் வழங்குகிறது.

**ஒருங்கிணைந்த பயன்கள் :-**

ஒருங்கிணைந்த கற்றல் மூலம் தொழில்நுட்ப சேவைகள் அடிப்படையான பாடப்பொருளை கொண்டு வகுப்பறைகள் (அ) ஆய்வரங்கம் (ம) பள்ளிக்கு வெளியே கற்றல் (உதாரணமாக, வீடுகளிலும், நூலகங்களிலும், சமூக மையங்களிலும்) ஆசிரியர் இல்லாமலே கற்க முடிகிறது.

தொழில்நுட்பங்களிலும் தரமாகவே ஒருங்கிணைந்து மென்பொருளை உள்ளடக்கிய நிகழ்வுகள் விவரிக்கப்படும். Computer Mediated Communication (CMC) இதன் மூலம் மாணவர்களிடையே இடைவினை, இணையம் வழியாக தரமாகவே கற்க இயல்கிறது. கற்றல் நிகழ்வுகள் (ம) அமைப்புகள் வலைதளம் மூலம் கற்றல் நடைபெறுகிறது. இங்கு பல்வேறு உதாரணங்கள் உள்ளன. அவையாவன, வலைதள வழிக்கற்றல், செயல்திட்ட வழிக்கற்றல் போன்றவை.

**இணையம் மூலம் கற்றல் :-**

இணையவழிக் கற்றலின் மூலம் ஆசிரியர் நேரிடையாகவோ (அ) மறைமுகமாகவோ உதவுவர். கற்போரும் கற்பிப்போரும் சந்தித்து கலந்துரைப்பது மிக கடினம். தொடர்பு (ம) இடைவினையாற்றுவது இணையம் வழி மூலம் சீராக நடைபெறும்.

**முக்கியத்துவம் பெறுதல் :-**

பல்வகை பிரச்சனைகள் இதன் மூலம் தீர்க்கப்படுகின்றன. முதியோர் கல்விக்கு மிகவும் துணைபுரிகின்றன. மூன்று வகையான பயன்கள் (1. ஒருங்கிணைந்து, 2. இணைய தளம், 3. வளையதளம் வழிக்கற்றல்) நெகிழ்வு தன்மையுடன் வேலை (ம) இடைவினையை மேம்படுத்துகிறது. இவ்விரண்டும் இணையதளம் (ம) நேரிடையாக

வேலை புரிந்து மென்மேலும் வளர்ச்சியடைய தொழில்நுட்ப பயன்களின் மூலம் தன்னிச்சையாக மொழிக்கற்றல் (ம) கட்டுப்பாடுடனான வாய்ப்புகளை அளிக்கிறது.

**நிறைகள் (ம) குறைகள் :-**

**நிறைகள்:**

- இது ஜனநாயக வழியில் அமைந்த கற்றலாகும். இது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரு சவாலை உருவாக்குகின்றது. அர்த்தமுள்ள படைப்பாற்றல் சிந்தனையை தூண்டுகிறது.
- சுதந்திரமாக சிந்தித்து செயல்படும் ஆற்றலை மாணவரிடம் உருவாக்குகிறது.
- மாணவர்களின் பன்முக அறிதிறன் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.
- மாணவர்களின் அறிதிறன் வளர்ச்சியும், நடைமுறை அறிவும் மேம்படுகிறது.
- கற்பித்தல் இலக்குகளுடன் சக மாணவர்கள் கற்பிக்கின்றனர்.

**குறைகள்:**

- அதிக நேரத்தை எடுத்துக் கொள்கிறது.
- இது ஆசிரியரின் பணிப்பளுவை அதிகரிக்கிறது.
- குறைந்த நுண்ணறிவு கொண்ட மாணவர்களுக்கு இக்கற்பித்தல் உத்தி அதிக பயன்தராது.
- மாணவர்கள் வெளிப்படுத்தும் அனைத்து கருத்துக்களையும் திறனாய்வு செய்திடும் ஆற்றல் ஆசிரியரிடம் இருத்தல் அவசியமாகிறது.
- இம்முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. கீழ் வகுப்புக்கு ஏற்றதல்ல.

**முடிவுரை :-**

மாணவர் மையக் கற்பித்தல் மூலம் கற்போர் தொழில்நுட்ப ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் (ம) தாமாகவே பிரச்சனைக்கு தீர்வு காணும் திறமையிலும் புலமை பெறுகின்றனர். இது முதியோர் கல்விக்கு ஒரு தூண்டுகோலாக அமைகிறது. இவ்வழிக் கற்பித்தல் மூலம் கற்போர் இணையதளத்தை பயன்படுத்தியும், (ம) செயல்திட்ட முறைகளை கையாண்டும் தங்களின் கற்றல் அடைவை அடைந்து சுயமாகவே மதிப்பீடு செய்து நிறை, குறைகள் போன்றவற்றை அறிந்துக் கொண்டு நிறைகளை தக்கவைத்தும், குறைகளை அகற்றியும் அவற்றையும் நிறைகளாக மாற்றி கற்றலில் தேர்ச்சி பெறுகின்றனர்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. மாணவர் மையக் கற்பித்தலின் சிறப்பியல்புகளை கூறுக.
2. கற்பித்தல் கற்போர் மைய அணுகுமுறைகளின் தேவைகளை கூறுக.
3. ஆசிரியர் மையக் கற்பித்தல் மற்றும் மாணவர் மையக் கற்பித்தலை வேறுபடுத்துக.
4. கற்போர் மையக் கற்பித்தலின் உத்திகளை கூறுக.

# அலகு - 7 பலதரப்பட்ட வகுப்பறைகளில் கற்பித்தல்

**நோக்கங்கள்**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1. பலதரப்பட்ட வகுப்புகளில் கற்பித்தல் என்பதன் பொருளை புரிந்து கொள்வார்.
2. கற்பிக்கும் யுக்திகளை பகுத்தறிவர்
3. வகுப்புகளில் கற்பிக்க உதவும் வழிமுறைகளை புரிந்து கொள்வார்
4. வகுப்புகளில் கற்பித்தலைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வார்.

**முன்னுரை**

பலதரப்பட்ட மாணவர்களுக்கு மாறுபட்ட (கற்பிக்கும் முறை) கற்பித்தல் என்ற கருத்து சமீப காலங்களில் கல்வித் துறையில் முக்கியமானதாக கருதப்படுகிறது. ஏனெனில் மனித இனம், கலாச்சாரம், இயற்கை சூழல் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்து இருப்பதை புரிந்து கொள்ளுதலும் பாராட்டுதலும் அவசியமாகிறது. இந்நிலையில் பலதரப்பட்ட கலாச்சாரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடும்போது பாடத்திட்டம், உதாரணங்கள், கதைகள், வகுப்பறை செயல்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல் பரதரப்பட்ட மாணவர்களை கையாள்வதில் ஆசிரியரின் பங்கு மிக முக்கியமானது. மாறுபட்ட சூழலிலிருந்து வரும் மாறுபட்ட மாணவர்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்த ஆசியரியர்கள் தக்க தொழில் பற்றிய அறிவு திறன்கள் மற்றும் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். பலதரப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்தல், மாறுபட்ட வகுப்புகளில் கற்பிக்கும் யுக்திகள் (வழிமுறைகள்), பலதரப்பட்ட வகுப்புகளில் கற்பித்த ஆசிரியர்களை தயார் செய்தல் ஆகியவற்றைப் பற்றிய விரிவான கருத்துக்களை பினனர் கருதுவோம்.

**பலதரப்பட்ட வகுப்பறை என்பதன் பொருள் வரையறை**

மாறுபாடுகள் (வேற்றுமை) என்ற கருத்து ஏற்றுக் கொள்ளுதல் மதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இதன் பொருள் ஒவ்வொரு நபரும் தனித்தன்மை வாய்ந்தவர் என்பதையும், ஒருவருக்கொருவரிடையே வேறுபாடுகள் உள்ளன என்பதையும் புரிந்து கொள்ளுதல் ஆகும். இவை இனம், பால், சமூக பொருளாதார அந்தஸ்து, மதம், அரசியல் பற்றிய நம்பிக்கைகள் மற்ற கோட்பாடுகள் இவற்றை சார்ந்தள்ளது. இத்தகைய மாறுபாடுகளை நல்ல கண்ணோட்டத்துடன் நல்ல வளர்ச்சி தரும் சூழலில் ஆராய்தல் அவசியமாகிறது. இது ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல் பற்றியும் பொருத்துக் கொள்ளுதல் பற்றியும் ஒவ்வொரு தனி நபரிடையே உள்ள பலதரப்பட்ட வேறுபாடுகளை கொண்டாடுதல் என்பவற்றை பொருத்ததாகும்.

மாறுபாடுகள் என்ற உண்மைநிலை மாறுபட்ட வாழுமிடம் மற்றும் தத்துவம் இவற்றைக் கொண்ட தனி நபர்கள் குழுக்கள் ஆகியவர்களால் உருவாக்கப்பட்டதாகும். இதுபோன்ற வேறுபாடுகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்து கருத்து வேறுபாடின்றி பாதுகாத்தல்

சமத்துவம் ஒருவரையொருவர் மதித்தல் போன்ற நற்குணங்களை வளர்க்க உதவுகிறது. மாறுபாடுகள் என்பது வேற்றுமைகளை ஏற்றுக் கொள்வது மற்றும் பொருத்துக்கொள்வது ஆகும்.

வேறுபாடுகள் என்பது நாம் தெரிந்து பினபற்றும் நடைமுறைகள் கீழ்க்கண்டவற்றை உள் அடக்கியது.

- மனித இனம் ஒன்றையொன்று சார்ந்துள்ள தன்மை, கலாச்சாரம், இயற்கை சூழல் இவற்றை புரிந்து கொள்ளுதல் மற்றும் பாராட்டுதல்.
- நம்மிடமிருந்து வேறுபட்ட பண்புகள் அனுபவங்கள் ஆகியவற்றை மதித்து நடந்து கொள்ளுதல்.
- மாறுபாடுகள் என்பவை இருக்கும் வழிமுறைகள் மட்டுமல்ல. அறிந்து கொள்ளும் முறைகளையும் உள்ளடங்கியது என்பதை புரிந்து கொள்ளுதல்.
- தனி நபர் கலாச்சாரம் இவற்றை பாகுபடுத்துதல் சிலருக்கு சலுகைகளையும் மற்றோருக்கு இடையூறுகளையும் உண்டாக்குகிறது என்பதை புரிந்து கொள்ளுதல்.
- அனைவரும் நன்றாக இணைந்து செயல்பட்டு, எல்லாவித பாகுபாடுகளையும் நீக்கி வேற்றுமைகளுக்கிடையே தோழமையை உருவாக்குதல்.
- வேறுபாடுகள் என்பது நம்மிடமிருந்து நாம் சார்ந்துள்ள குழுக்களிடமிருந்தும் மாறுபடுமாயின் மற்ற நபர்கள் குழுக்களிடமிருந்தும் மாறுபடுமாயின் மற்ற நபர்கள் குழுக்களிடையே நிலவும் பண்புகள் மற்றும் நிலைகள் இவற்றுடன் தொடர்பு கொள்ளுதலை உள்ளடக்கியது.

இவை மரபு, வகுப்பு, பால், கல்வித் தகுதி, வாழும் இடம், வருமானம், மனநிலை, பெற்றோரின் தொழில் வருமானம் இவற்றை மட்டும் உள்ளடக்கியது அல்ல, முடிவாக வேற்றுமை வகைகள் எப்போதும் நிலையானதல்ல. மாறக்கூடியவை என்பதை எற்றுக் கொள்கிறோம். தனிநபரின் தனிப்பட்ட உரிமைகளை ஏற்றுக் கொள்கிறோம். எந்த காலாச்சாரமும் மற்ற காலாச்சாரத்தைவிட இயற்கையில் உயர்ந்தது அல்ல என்பதையும் அறிந்து கொள்கிறோம்.

**பலதரப்பட்ட வகுப்பறையில் கற்பித்தல்**

நமது மாணவர்களை தனிப்பட்டவர்களாகவும் குழுவைச் சார்ந்தவர்களாகவும் அறிந்து கொள்ளுதல் நல்ல கற்பித்தலின் ஒரு பகுதியாகும். சமீப காலங்களில் உயர்கல்வி மிகவும் மாறுபாடுகள் உள்ளதாக மாறியுள்ளது. கடந்த காலத்தைவிட மாணவர்களின் வகைகள் அதிகரித்துள்ளது. அவர்களின் தேவைகள் மிக மாறுபட்டு உள்ளன. இந்த மாறுபட்ட மாணவர்கள் உள்ள சூழலில் சிறப்பாக கற்பித்தல் என்பது என்பதை ஆய்வு செய்கிறது. மாறுபட்ட சூழ்நிலை தேவைகள் கொண்ட மாணவர்களின் கற்றலுக்கு உதவ நீங்கள் விரும்பினால் கீழ்க்கண்ட அம்சங்கள் முக்கியமானவை எல்லா மாணவர்களையும் தமக்கே உரிய வலிமை, குறைகள் மற்றும் தேவைகள் உள்ள தனி

நபர்களாக கருதவேண்டுமேயன்றி ஒரு குறிப்பிட்ட இனம், கலாச்சாரம் இவற்றின் பிரிதிநிதிகளாக கருதக்கூடாது. மாறுபட்ட கற்போருக்கு உகந்தபடி பலவகையான கற்பிக்கும் பாணிகளை கையாள வேண்டும். மாணவர்களின் அனுபவங்கள், நோக்குகள், இவற்றை மதிக்கக்கூடிய திறந்த வகுப்பறையை உருவாக்க வேண்டும்.

**1. உயற் கல்வியில் வேற்றுமைகள்**

சமீப காலங்களில் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் மிகவும் மாறுபட்ட நிறுவனங்களாக ஆகியுள்ளன. இதை எடுத்துக்காட்ட வேன் நோட்சிஸம் (1947) கீழ்க்கண்ட பண்புகளை குறிப்பிடுகிறார். உயர் கல்வியில் வயது முதிர்ந்த மாணவர்கள் மாணவர் தொகையில் பாதிக்குமேல் உள்ளனா. பெண்கள் பட்டப்படிப்பில் 54% மாணவர்களாக உள்ளனர். சிறுபான்மை சமூக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உடல் கற்றல் சம்பந்தமான குறைகள் உள்ள மாணவர்கள் அதிகமாக காணப்படுகிறார்கள்.

**2. பலதரப்பட்ட மாணவர்கள் உள்ள வகுப்பில் கற்றல் கற்பிக்கும் பாணி.**

எப்டி (1999) கற்றல் பாணி என்பது நாம் எவ்வாறு கற்றலை அமைத்துக்கொள்கிறோம் என விவரிக்கிறார். அடிப்படையில் மூன்று கற்றல் பாணிகள் உள்ளன. கேட்டறியும் மாணவர்கள், கேட்டல் மூலம் கருத்துகளையும், தகவல்களையும் பெற விரும்புகின்றனர். இத்தகைய மாணவர்கள் படிக்கவும் எழுதவும் சிரமப்படுவார்கள். ஆயினும் பாட்டுகள், கவிதைகள் போன்ற வாய்மொழி மூலம் பேசப்பட்டவற்றை மனப்பாடம் செய்வதில் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் கலந்துரையாடல்கள் வாய்மொழியாக கருத்து பரிமாற்றம் அவை நிறைந்த வகுப்புகளின் மூலம் மிகுந்த பயன் அடைகின்றனர். பார்த்து கற்பவர்கள் செய்திகளை பார்த்து கற்பதை விரும்புகின்றனர். இத்தகையமாணவர்கள் பாடக் கருத்துகளுக்கு அதிக கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் கேட்டறியும் மாணவர்களைவிட வகுப்பில் குறைவாக பேசுவார்கள். குறைவான வார்த்தைகளை பயன்படுத்துவர். படங்கள் வரைபடங்கள் தொகுப்புகள் போன்றவை இவர்களுக்கு மிக பயன்படுவனவாக உள்ளன. தொடுதல் - அசைவுகள் வழியே கற்கும் மாணவர்கள் அசைவுகள் தொடுதல் இவற்றின் மூலம் சிறப்பாக கற்றுக் கொள்கின்றனர். இத்தகைய மாணவர்கள் சுறுசுறுப்பானவர்கள் என பெயரிடப்படுகின்றனர். அசைவுகளை விரும்புவதால் இவர்கள் சுற்றுப்புறத்தை ஆராயுவம் சோதனைகள் செய்யவும் அனுமதிக்கப்படும்போது நிறைந்த குறிப்புகளை எடுத்து சிறப்பாக கற்கின்றனர். இத்தகைய மாறுபட்ட பாணிகள் (முறைகள்) மாணவர்களால் விரும்பப்படுகின்றன என்பதை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். நாம் பல வழிகளில் கற்கின்றோம் என்ற உண்மையே நம் கற்பித்தலில் பல கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும் என்பதை நியாயப்படுத்துகிறது. மாணவர்களில் மாறுபட்ட கற்றல் பாணியை புரிந்துகொள்ளுதல் அனைவரும் வெற்றி பெற வாய்ப்புள்ள ஒரு சிறந்த வகுப்புகளை உருவாக்க உதவுகிறது.

**மாறுபட்ட திறன் உள்ள மாணவர்களைக் கொண்ட வகுப்புகளுக்கு ஆசிரியர்களை தயார் செய்தல்**

தரமுள்ளகல்வி பெறும் வாய்ப்பு என்பது நம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான ஒரு அம்சமாகும். பல சந்தர்பங்களில் பலகாரணங்களால் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தரமான கல்வி பெறும் வாய்ப்பை பெறுவதில்லை. இந்த வாய்ப்பின்மை குறையை நீக்கவும் தேசிய மாநில அளவில் கற்றல் விளைவுகளை மேம்படுத்த, ஆசிரியர்கள் பல சூழலிருந்து வரும் மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்த, சிறந்த தொழில் அறிவு திறன்கள் ஈடுபாடுகள் இவற்றை பெற்றிருக்கவேண்டும். இந்த முக்கியமான பணிக்கு ஆசிரியர்களை உருவாக்க ஒரு முழுமையான ஆசிரியர் கல்வி திட்டம் தேவைப்படுகிறது.

**பலதரப்பட்ட வகுப்பறைகளில் கற்பிக்கும் யுக்திகள்(முறைகள்)**

பல தரப்பட்ட வகுப்புகளில் கற்பிக்க பல வழிமுறைகள் உள்ளன.

1. கருத்து கோரல், கருத்து பரிமாற்றம் இதில் எல்லா மாணவர்களும் கலந்துரையாடி ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முயலுவர்.
2. பிரச்சனைக்குரிய நிகழ்வுகள், இதில் மாணவர்கள் அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒரு பிரச்சனையை வார்த்தைகளை பயன்படுத்தாமல் தெரிவித்தல்.
3. செய்து காட்டுதல் (நடித்து காட்டுதல்) வாய் மொழி வார்த்தைகளை பயன்படுத்தாமல் செயல்கள் மூலம் ஒரு நாடகத்தை நடித்துக் காட்டுதல்.
4. செய்து காட்டுதல்: இதில் மாணவர்கள் ஏதாவது ஒரு நகைக்சுவையான நிகழ்ச்சியை நடித்து காட்டுவர்.
5. குழு விவாதம் இது பலதரப்பட்ட மாணவர்களை அவர்களின் தன்மைகள் பாடப் பொருள் மற்றும் எதிர்பார்க்கும் விளைவுகள் இவற்றின் அடிப்படையில் ஈடுபடுத்துதல்.
6. பலதரப்பட்ட மாணவர்கள் வகுப்பறைகளில் வெற்றி பெற உதவும் ஆறுவகையான கருத்துகள் இங்கு இடம்பெறுகின்றன.

**அ.** காலாச்சாரத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உம்முடைய கலாச்சாரம் மொழி சமூக ஆர்வங்கள் குறிக்கோள்கள் ஆகியவை கலாச்சாரம் மொழி இவற்றில் மாறுபட்ட பலதரப்பட்ட மாணவர்களுக்கு சிறப்பாக எப்படி கற்பிப்பது என்பதை அறிந்து கொள்வதிலிருந்து தடுக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

**ஆ.** மாணவர்களின் கலாச்சாரத்தைப் பற்றி அறிந்து கொள்ளுதல்: நோக்கு சுயமதிப்பீடு பண்புகள் வகுப்பறையில் நடந்து கொள்ளும்முறை, கற்றல் இவற்றை எவ்வாறு பாதிக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**இ.** மாணவர்களின் மொழிப் பண்புகளை புரிந்து கொள்ளுதல்.மாணவர்களின் தொடர்பு கொள்ளும் வகைகள் மற்றும் மொழி வேறுபாடுகள் எவ்வாறு அவர்களின் வகுப்பறை கற்றலை பாதிக்கிறது என்பதையும், இரண்டாவது மொழி கற்றல் அவர்களின் கற்றலை எப்படி பாதிக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

**ஈ.** இந்த விவரங்களை உங்கள் கற்பித்தலை மேம்படுத்த பயன்படுத்தவும். உம்மாணவர்களில் பலதரப்பட்ட கலாச்சாரத்ததைப் பற்றிய அறிவு உங்கள் கற்பித்தலை மாற்றியமைக்க உதவுகிறது. இத்துடன் மாணவர்களின் மீதுள்ள அக்கறை மாணவர் பங்கேற்பு ஈடுபாடு இவற்றை அதிகரிக்கிறது.

**உ.** பல்வேறு கலாச்சாரத்தை சார்ந்த புத்தகங்கள், பொருள்கள் இவற்றை மாறுபட்ட கலச்சாரங்களை புரிந்து கொள்ளச் செய்ய பயன்படுத்தவும். வேறுபட்ட கலாச்சாரத்தை சார்ந்த இலக்கியங்களை குறிப்பாக, குழந்தைகள் இலக்கியங்களை கவனத்துடன் பயன்படுத்தி மாணவர்களின் கலாச்சாரத்தை சார்ந்த இலக்கியங்களை கவனத்துடன் பயன்படுத்தி மாணவர்களில் கலாச்சாரத்தை மதிப்பதுடன் மாறுபட்ட கலாச்சாரத்தைப் பற்றிய அறிவை வளர்க்கவும். பலவகையான கற்பிக்கும் யுக்திகளை திறந்த மனதுடன் நோக்க வேண்டும். ஏனெனில் மாணவர்களின் கலாச்சாரத்திற்கு சில குறிப்பிட்ட யுக்திகள் உகந்ததாக இருக்காது. உதாரணமாக போட்டி விளையாட்டுகள் மாணவர்கள் தாங்களாக முன் வந்து செய்திகளை தெரிவித்தல்.

**ஊ.** மாணவர்களின் வீடு மற்றும் பள்ளித் தொடர்பு பற்றி தெரிந்து கொள்ளுதல், மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களுடன் ஒத்துழைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கவனிக்க வேண்டுமேயன்றி கற்றலின் முக்கியத்துவம் பற்றி முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டாம்.

**மாறுபட்ட கற்பித்தலுக்குரிய சிறந்த கற்பித்தல் யுக்திகள் வழிகள்**

மாறுபட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்பிக்கும்போது எவ்வாறு பாடம் நடத்துவது எப்படி நடந்து கொள்வது என்பதைப் பற்றி மக்கள் நிலையான எண்ணங்கள் இன்மையை உணர்கின்றனர். ஒரே கற்பிக்கும் முறையை எல்லா மாணவர்களுக்கும் பயன்படுத்திய நிலை மாறி இன்றைய சூழலில் நம்மிடமிருந்து மாறுபட்ட நோக்குடைய மாணவர்களை ஏற்றுக்கொள்ளவும் பாடத்திட்டத்தை வகுப்பறை செயல்முறைகளுக்கு ஏற்றதாக மாற்றவும், நம் மாணவர்கள் கற்றலை எப்படி எதிர்கொள்கின்றனர் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. நம் நிறுவனங்களின் வெற்றியும் மாணவர்களின் வெற்றியும் இத்தகைய சவால்களை ஒருங்கிணைந்து எதிர்கொண்டு உயர்வு அடைவதைப் பொருத்து அமைகிறது.

எல்லா வகையான மாணவர்களுக்கும் கற்பித்தலை மேம்படுத்த விரும்பும் ஆசிரியர்களுக்கும் துறைக்கும் உதவ அது மாறுபட்ட திறன்களை சிறப்பாக வளர்க்க

கல்வியாளர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையில் இந்த டிப் ஷீட்டை நாங்கள் தயாரித்துள்ளோம். பலவகையான கலாச்சாரத்தை சார்ந்தவர்களுக்கு கற்பிக்கும் சூழலுக்கு அசிரியர்கள் தங்களை பல வழிகளில் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான வழிமுறைகள் யுக்திகள்.

1. பலவகை கலாச்சார வகுப்பறைகளை மனதில் கொண்டு பாடத்திட்டம் செயல்பாடுகள், உதாரணங்கள், கதைகள் வகுப்பறை செயல்பாடுகள் இவற்றை திட்டமிடவேண்டும்.
2. வகுப்பறையை எல்லாவிதமான மாணவர்களுக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க செய்யவும் பாடங்கள் எல்லோருக்கும் பொருந்துவதாகவும் இருக்கும்படி செய்ய வழிமுறைகளை கண்டறியவேண்டும்.
3. உமது கலாச்சாரத்திலிருந்து மாறுபட்ட மக்களைப் பற்றிய எதிரான நேர்முக மறைமுக உணர்வுகளை மதிப்பீடு செய்யவும்.

**மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்களுள்ள கல்லூரிகளில் கற்பித்தலுக்கு கருத்துகள்:**

பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் உள்ள வகுப்புகளில் கற்பிக்க கீழ்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்கலாம். பரிந்துரை செய்கிறோமேயன்றி இவை முடிவான தீர்வுகள் என உத்திரவாதம் அளிக்கவில்லை. ஆசிரியர்கள் தம்முடைய எல்லா மாணவர்களின் எல்லா தேவைகளுக்கும் ஏற்ற பலவகையான கற்பித்தல் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தலைப்பை பல்வேறு நோக்கங்களில் ஆராயுகின்ற பாடத்திட்டத்தை தாயாரிக்க வேண்டும்**

- ➢ விரிவுரையில் முடிந்தவரை பல்வேறு கலாச்சார சார்புடைய உதாரணங்கள் பாடங்கள் காட்சிகள் இவற்றை உள்ளடக்கவேண்டும்.
- ➢ கற்பித்தல் முறைகள் கற்றல் விளைவுகள் பற்றிய எதிர்பார்ப்பு பாடத்திட்டத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும்.
- ➢ செயல்திட்ட குழுக்கள், ஆய்வுக்கூடங்கள் குழுக்கள் போன்றவற்றை அமைக்கும்போது உறுப்பினர் தலைவர் போன்ற செயல்களுக்கு பல இனத்தவர்கள் இருபாலரையும் (ஆண் பெண்) சோந்தவர்களுக்கிடையே சமமாக பகிர்ந்து அமைக்க வேண்டும்.
- ➢ பல்வேறுபட்ட இன கலாச்சார நோக்குகளை மாணவர்களிடையே வளர்க்கக்கூடிய தலைப்புகளை தேர்வு செய்யவும், படித்துக் கொண்டிருக்கும் தலைப்புக்கு பொருத்தமான மாறுபட்ட இனம் சமுதாயத்தைச் சார்ந்தஅறிஞர்களின் படைப்புகளை பரிந்துரை செய்யவும்.
- ➢ வகுப்பறை போதனை பாடங்கள் இவற்றை அமைக்கும்போது மாறுபட்ட குழுக்களைச் சாந்த மாணவர்களை கருத்தில் கொள்ளவும்.

- மாணவர்கள் வகுப்பறையில் ஒருவருடன் ஒருவர் கலந்துரையாடுவதை வழிநடத்தக்கூடிய சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டும்.
- தெளிவான அமைப்புடைய வகுப்புகளை உருவாக்கவேண்டும். (கற்றலும் கற்பித்தலும் எவ்வாறு நிகழவேண்டும் என்பதை தீர்மானிக்க ஒரு தெளிவான வழி உள்ளது)மேலும் நெகிழ்வுத்தன்மை இருக்க வேண்டும். (சமன் செய்ய இயலாத அளவுக்கு கடுமையானதாக இல்லாமல்)
- எல்லா மாாணவர்களும் பாடத்திட்டத்தை எவ்வாறு கருதுவார்கள் என்பதை கருதவேண்டும்.
- பாடப்பொருளை பற்றி எல்லா கலாச்சாரங்களை சார்ந்த மாணவர்களிடையே பின்னறிவு உள்ளதா என்பதை கருதவேண்டும்.
- கற்றலுக்கு உதவும் பலவகையான அணுகுமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை கவனிக்கவேண்டும்.
- கற்பிக்கப்படும் பாடப் பொருளில் உணர்வுகளை தூண்டக்கூடிய பகுதிகளை முன்கூட்டியே அறிதல் வேண்டும்.
- உணர்வுகளை தூண்டக்கூடிய பாடப் பொருளை வெடித்தெழக்கூடிய தருணங்கள் இவற்றை எப்படி கையாள்வது என்பதைப் பற்றி முன்னதாகவே சிந்திக்க வேண்டும்.

**உமது மாணவர்களை தனி நபராக நெருக்கமாக தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.**

- ✓ ஒவ்வொரு மாணவனையும் தனித்து தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் பெயரையும் அதை எப்படி சரியாக உச்சரிப்பது என்பதையும் தெரிந்து கொள்ளவும்.
- ✓ அனைத்து மாணவர்களுடன் நேரடி தொடர்பை பயன்படுத்துங்கள் வகுப்பறைக்கு வெளியே நட்புடனும், வெளிப்படையாகவும் இருங்கள்.
- ✓ மாணவர்கள் உங்களை சந்திக்க எப்பொழுதும் தயாராக இருங்கள். அவர்கள் உங்களை வேலை நேரத்தில் சந்திப்பதை ஊக்குவியுங்கள்.
- ✓ மாணவர்களை மதித்து ஒத்துழைப்பு கொடுத்து அவர்களுடன் பேசிப் பழகுங்கள்.
- ✓ மாணவர்கள் ஒருவருடன் ஒருவர், மரியாதையுடனும், பொருள் நிறைந்ததாகவும் கலந்து பேச வாய்ப்புகளை உருவாக்குங்கள்.
- ✓ வகுப்பை சிறிய குழுக்களாகப் பிரித்து பொருத்தமான நேரத்தில், குழுவில் வேலையைப் பற்றி தெரிவிக்கும் பொறுப்பை ஒரு நபருக்கு கொடுங்கள்.
- ✓ சிறிய குழுக்கள் அமைக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்
- ✓ மாணவர்கள் தங்கள் வேலையை ஒருவருக்கொருவருக்கும், மொத்த வகுப்புகளும் தெரிவிக்க வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.

**மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்**

- ❋ ஒவ்வொருவரும் தம் பொறுப்பை உணர்ந்து வெளிப்படையாகவும், கருத்துகளை தெரிவிக்கவும் ஏதுவாக மாணவர் - ஆசிரியர் பங்கேற்க வாய்ப்புகளை ஏற்படுத்துங்கள்.
- ❋ தகுந்த நேரத்தில், தலைப்பைப் பற்றியும் அவர்களின் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்து, அவர்கள் கூறும் கருத்துகளை ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ❋ தக்க தருணத்தில், மாணவர்கள் வகுப்பறையில் கற்ற கருத்துகளுடன் தம் சொந்த அனுபவத்திலிருந்து கற்றவற்றையும் இணைப்பதற்கு ஏதுவாகவும், பாடப் பொருளை தம் சொந்த கண்ணோட்டத்தில் தம் சொந்த அனுபவத்திலிருந்தும் உதாரணங்களின் மூலம் தொடர்புபடுத்தவும் வாய்ப்புகளை ஏற்படுத்தவும்.
- ❋ எல்லோருடைய கருத்துகளையும் முக்கியமானதாக ஏற்றுக்கொண்டு, எல்லோரும் தம் கருத்துகளை தயக்கமின்றி சொல்ல வாய்ப்பளியுங்கள். எந்த மாணவனையோ, அல்லது கருத்தையோ குறை சொல்லாதீர் மாணவர்களை மற்றவரின் ஒத்துழைப்பின்றி தனித்து இருக்க விடாதீர்கள்.
- ❋ மாணவர்கள் தங்கள் இனத்தின் பிரதிநிதிகளாக வைக்கப்படும் சூழ்நிலையை உருவாக்குவதை தவிர்க்கவும்.
- ❋ மாணவர்கள் தங்கள் படைப்புத்திறன், ஆய்வு உருவாக்குதல் மற்றும் சிந்திக்கும் திறன்களை வளர்க்க, ஏதுவாக, ஒரு சிறந்த கற்றல் முறையை உருவாக்குங்கள்.
- ❋ வகுப்பறை விதிகளை வெளிப்படையாக அறிவிக்கவும்.
- ❋ உங்கள் எதிர்பார்ப்புகளை உயர்த்தி, அவற்றை நிறைவேற்ற தேவையான ஒத்துழைப்பை கொடுங்கள்.
- ❋ பாடப் புத்தகங்களிலோ மற்ற இடங்களிலோ ஒருதலைபட்சமான, பாடப் பொருள் இருந்தால், அதை மாணவர்களை கண்டறியச் சொல்லுங்கள்.
- ❋ மாணவர்கள் அவர்கள் சௌகார்யம் இல்லாததாக கருதும் நிலையைப் பற்றி ஆராய்ந்து, தம் நிலைக்கு ஆதரவாக பேச தயார் படித்துக் கொள்ள சொல்லுங்கள்.
- ❋ ஒரு பிரச்சனையின் எல்லா கோணங்களையும் விளக்குங்கள், மிகவும் ஆதரவு இல்லாத கருத்துக்கு ஆதரவு அளியுங்கள்.
- ❋ கருத்துகளை, செயலுடன் இணைக்க மாணவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குங்கள். அதாவது தாங்கள் கற்பவற்றை, உலகில் நடப்பவைகளுடன் இணைக்க ஊக்குவியுங்கள்.
- ❋ பலதரப்பட்ட மாணவர்களிடையே நிலவும் மாறுபட்ட கற்கும் முறைக்கு ஏற்ப பலவகையான கற்பிக்கும் முறைகளை பயன்படுத்துங்கள்.

❋ மாணவர்களின் கற்றலில் உங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்த தெளிவான நேரான மதிப்பீடுகளை கொடுங்கள்.

**பலதரப்பட்ட வகுப்பறைகளில் சிறப்பாக கற்பித்தல்**

ஒவ்வொரு வகுப்பறையும், மாணவர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்களின் கலாச்சார குழு ஆய்வு செய்கின்றது. கற்றல் வெற்றிகரமாக நிகழ பல கலாச்சாரங்களை தொடர்புபடுத்தி பார்க்கவேண்டும். மாணவர்கள் தாமே கேட்டு, படித்து, அனுபவித்து தம் சகமாணவர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அவர்களுடைய சொந்த நோக்குகளையும் அவற்றை அடைந்த விதத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். கற்றல் என்பது உருவாக்குதல், கலந்து சிந்தித்தல், கருத்துகளை ஆழ்ந்து ஆராய்தல், விரிவுபடுத்துதல், இவற்றை உள்ளடக்கியது என்பதையும் புரிந்து கொள்ளுதல் இது போட்டி இல்லாது, ஒத்துழைப்பு நிறைந்த சூழலில் சிறப்பாக நடக்கும் என்பதை மாணவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இந்த பிரச்சனைக்கு சரியான அணுகுமுறை, ஒரு கல்லூரியில் நிலவும் பலவிதமான கற்றல் முறைகளை கவனித்தல் ஆகும். இவ்வித மாறுபட்ட கற்றல் முறைகளை புரிந்து கொள்வதன் மூலம் ஒருவர் தனிப்பட்ட மாணவரின் கற்றல் முறை, வகுப்பில் உள்ள சிறிய குழுக்கள், மொத்த வகுப்போ ஒரு கற்கும் குழு இவற்றின் மீது கவனம் செலுத்த முடிகிறது.

மிகுந்த மாற்றங்களுடைய வகுப்புகளில் கூட ஆசிரியர்கள், மாணவரிடையே சிறந்த கற்றலை உண்டாக்கி சிந்திக்கும் திறன்களை வளர்க்கக்கூடிய பலவகையான கற்பிக்கும் முறைகளைப் பற்றி ஆசிரியர்கள் அறிந்திருக்கவில்லை.

- மாணவர்கள் வெவ்வேறு கலாச்சாரத்திலும் மாறுபட்ட, கருதுகோள்கள், பேசும் முறைகள், நடத்தைகள் உள்ளன என்பதை தெரிந்து கொள்ளலாம். மேலும் மாறுபட்ட கலாச்சாரங்கள் உள்ளது போலவே ஒவ்வொரு கலாச்சாரத்திலும் பல வேறுபாடுகள் உள்ளன என்பதையும் உணரலாம். இவற்றை அறிவது மாணவர்கள் மொத்த சமுதாயத்திலும் கலாச்சார வேறுபாடுகளை உடைத்தெறிய உதவுகிறது.

**வகுப்பறையில் வேறுபாடுகள்**

வேறுபாடுகளை வளர்ப்பதில் உள்ள சில பிரச்சனைகளை சுட்டிக் காட்டுவதும், வகுப்பறையிலும், வெளியிலும் உள்ள மாறுபாடுகளை புரிந்து கொள்ளச் செய்வதுமே இந்தப் பகுதியுடன் நோக்கமாகும்.

வேறுபாடுகள் என்ற சொல் சூழ்நிலையைப் பொருத்து, வெவ்வேறு பொருள்கள் பெற்றிருக்க இப்பகுதியில் வேறுபாடு என்பதை முழுமையாக வரையறை செய்வதற்கு பதிலாக, வேறுபாடுகளுடன் தொடர்புடைய இருமுக்கிய இடங்களை விளக்குகிறது.

- வேறுபாடுகள் எவ்வாறு வகுப்பறையில் பாதிக்கின்றது.
- ஒருங்கிணைந்த வகுப்பறையை வளர்ப்பதற்கு உண்டான வழிமுறைகளை தருதல்

மாறுபாடுகள் பற்றிய அநேக கலந்துரையாடல்கள், கீழ்க்கண்ட (ஒதுக்கி வைக்கும்) தனிமைப்படுத்தும், அம்சங்களை குறிப்பிடுகிறது. இனம், மரபு, பால், பால் பற்றிய தேர்வுகள் இவற்றின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மாணவர்கள் பல்கலைக் கழக வகுப்புகளுக்கு மாறுபட்ட சூழ்நிலைகள் கலாச்சாரம், அனுபவங்கள், உலக நோக்கு இவற்றுடன் வருகின்றனர்.

ஆயினும் மாறுபாடுகள் என்ற அம்சம் இந்த வகைப்பாடுகளையெல்லாம் மீறி வகுப்பறையில் பங்கு வகிக்கிறது. உதாரணமாக அநேக கல்வி பற்றிய உளவியல் பற்றிய இலக்கியங்கள் மாணவர்கள் வேறுபட்ட முறையில் கற்கின்றனர் என்பதை விளக்கி காட்டுகின்றன. இவர் பார்த்தல் மூலம் சித்திரங்கள் வரைபடங்கள், படங்கள் மூலம் கற்கின்றன. மற்றோர் முக்கியமாக கேட்டல் மூலம் (விரிவுரை) கேட்பதன் மூலம் கற்கின்றனர். மேலும் சிலர் தொடுதல் அசைவு மூலம் செய்வதன் மூலம் கற்கின்றனர். மாணவர்களிடையே உள்ள கற்றல் தேர்வுகளை கவனித்தல் என்பது, மாணவர்களிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வதால் ஒரு முக்கிய அம்சமாகும்.

மேலும், மாறுபாடுகள் பற்றிய பிரச்சனைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் வகுப்பறையில் முக்கியத்துவத்தை எப்படி நோக்குகிறார்கள் என்பதையும், அங்கு என்ன நடக்க வேண்டும் என்பதையும் தீர்மானிப்பதால் முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக ஒரு சிறந்த மாணவன் எதை தெரிந்து இருக்க வேண்டும், அவரிடம் என்ன திறன்கள் உள்ளன, அவர்களின் முன்னறிவு இவற்றைப் பற்றி நாம் வைத்திருக்கும் கருத்துக்கள்.

மாணவர்கள் தாம் அந்த வகுப்பறைக்கு பொருந்தாதவர் என நினைக்கும்போது குறைந்த பங்கேற்பு, தகுதியின்மை என்ற உணர்வு போன்ற மற்ற விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படும் ஆசிரியர்கள் மாணவர்களுடைய திறன்கள் பற்றி தவறான கருத்துக்களை கொண்டிருக்கலாம் அல்லது, எல்லோரிடமிருந்தும் ஒரே மாதிரியான செயல்பாட்டை எதிர்பார்க்கலாம் ஆசிரியர்களே, தம்முடைய குணங்களின் அடிப்படையில் பொருத்தமில்லாதவராக உணரலாம்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. மாறுபட்ட வகுப்பறைகள், மாறுபட்ட மாணவர்கள் இவற்றை வரையறை செய்க.
2. பலதரப்பட்ட மாணவர்கள் கொண்ட வகுப்பறைகளில் கற்பிக்கும் யுக்திகள் யாவை?
3. மாறுபட்ட மாணவர்கள் உள்ள வகுப்பறையில் மாறுபட்ட கற்பித்தலில் பயன்படும் வழிமுறைகளை விவரிக்கவும்.
4. பல்வேறு இனங்களைச் சார்ந்த மாணவர்கள் உள்ள வகுப்பறைகளில் ஆசிரியரின் பங்கு என்ன?
5. மாறுபட்ட வகுப்புகளில் நிலவும் பலவித கற்றல் பாணிகளை எடுத்து விளக்கவும்.

**நோக்கங்கள்**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

1. பள்ளியிலும், பள்ளிக்கு வெளியிலும் கற்றலின் நோக்கத்தை புரிந்து கொள்வார்.
2. பள்ளியிலும், பள்ளிக்கு வெளியிலும் கற்றலின் நன்மைகளை விளக்குவார்
3. பள்ளிக்கு வெளியே உற்று நோக்குதலின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வார்
4. வகுப்பறைக்கு வெளியே கற்றல் பற்றி அணுகுமுறைகளை அறிந்து கொள்வார்.

**முன்னுரை**

பள்ளியினுள் கற்பது மாணவர்களுக்கு மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் அளிக்கிறது. இந்த கற்றல் மாணவர்களின் வாழ்வுடன் இணைந்துள்ளது. மேலும், பள்ளியில் பலவிதமான கற்பிக்கும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தபோதிலும் பள்ளிக்கு வெளியே கற்றல் பாடத்திட்டத்தில் சேராத கற்றல் அனுபவங்களை கொண்டது. பள்ளிக்கு வெளியே ஏற்படும் அனுபவங்கள், விளையாட்டு நிகழ்வுகள் பிறருக்கு உதவும் முயற்சிகள், மற்றவை இவற்றால் அமைக்கப்படுகிறது. எனவே, மாணவர்களுக்கு பள்ளியிலும், பள்ளிக்கு வெளியிலும் கற்றலின் பயன்களைப் பற்றி தெளிவுப்படுத்த வேண்டும்.

**பள்ளியில் கற்றலின் நோக்கம்**

இது ஒரு பாரம்பரியமான கருத்து ஆயினும் இயற்கையான கற்றலுக்கு உகந்ததாக உள்ளது. பள்ளிக்கு வெளியே கற்பதைவிட, பள்ளியில் கற்பது மகிழ்ச்சியானது. வளரும் குழந்தைகளுக்கு பள்ளியில் கற்றல் மிகுதியாகவும் இயற்கையாகவும் கற்க உதவுகிறது. பள்ளிச் சூழலில் மட்டுமே மாணவர்கள் புதிய புதிய விஷயங்களை மாதிரிகள் மூலமும், ஆசிரியர் உதவியுடனும் கற்கின்றனர். பள்ளியில் தான் நம் முதல் வெளிப்படையான கற்றல் நிகழ்கிறது. இங்கு ஏற்படும் நிகழ்வுகள் வாழ்க்கை முழுதும் நாம் எப்படி கற்கின்றோம் என்பதை தீர்மானிக்கிறது. பள்ளி மகிழ்ச்சியுள்ளதாகவும், ஆர்வத்தை தூண்டக்கூடியதாகவும், இருக்கும்போது நமக்கு கற்பவராக நம்மீது நம்பிக்கையை கொடுக்கிறது. அப்படி இல்லாதபோது நாம் ஒதுக்கப்பட்டு, நம்மால் கற்க இயலாது, அல்லது கற்றல் மகிழ்ச்சியற்றது என நாம் எண்ணக்கூடும். இன்றைய எதிர்கால மாணவர்கள் நல்ல பள்ளி அனுபவங்களை பெறவும், எதிர்காலத்தில் அவர்களின் கற்றலை தொடரவும், இந்த முயற்சி பள்ளிகளுடனும், ஆசிரியர்களுடன் சேர்ந்த நல்ல வழிமுறைகளை வளர்க்க முயலுகிறது.

**1. வகுப்பறை :** வகுப்பறையே, மாணவர்கள், ஆசிரியர்கள் பாடத்திட்டம் இவற்றுடன் அன்றாடம் தொடர்ந்து கருத்து பரிமாற்றம் நிகழும் மையமாக உள்ளது. வகுப்பறையே

மாணவர் கற்கும் வாய்ப்பின் முக்கிய அம்சமாக இருக்கும் நிலையும், ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகின்றன. பள்ளியில் கடைபிடிக்கப்படும் சிறந்த கற்பிக்கும் முறைகளில் கற்றலை மாணவர்களை வாழ்க்கைக்கு முக்கியமான அம்சங்களுடன் தொடர்பு படுத்துதல் அடங்கும். கற்றல் ஆர்வமிக்கதாகவும் பயனுள்ளதாகவும் செய்ய பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

தொடர், மற்றும் இறுதி மதிப்பீடுகளை முறையாக செய்வது, மாணவர்களுக்கு தம் நிலை பற்றிய தகவல்களை அளிப்பதுடன், கற்றலையும், சாதனைகளையும் வெகுவாக அதிகரிக்கிறது. குறிக்கோள்களை முன்வைத்தல் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அளித்தல் ஆகியவை கற்றலை மேம்படுத்த உதவும்.

## 2. ஆசிரியர் குழுக்கள்

ஆசிரியர் குழுக்கள் கற்றல் மற்றும் வகுப்பறை நடைமுறைகளை பார்த்து, அதன் மூலம் மாணவர்களின் விளைவுகளில் மறைமுக தாக்கம் ஏற்படுத்தலாம். ஆசிரியர் குழுக்கள் மாணவர்களின் செயல்பாடுகளின்மீது நல்ல வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## 3. பள்ளிக்கற்றலில் வகுப்பறை அம்சங்கள்

- கற்றல் மாணவர்களின் வாழ்க்கையுடன் தொடர்புடையது.
- பலவிதமான கற்பிக்கும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- மாறுபட்ட கற்றல் முறைகள் மதிக்கப்படுகின்றன.
- எல்லா மாணர்வகளிடமிருந்து உயர்ந்த எதிர்பார்ப்புகள்
- தொடர் மதிப்பீடுகள் முறையாக பயன்படுத்தப்படுகின்றன.
- ஆசிரியர்கள் குறிக்கோள்களை முன் வைத்து முன்னேற்றத்தை கண்காணித்து, விளைவுகளைப் பற்றி தெரிவிக்கின்றனர்.
- வகுப்பறையில் பங்கேற்க வாய்ப்புகள்
- வேறுபாடுகள், தனிநபர் வித்தியாசங்கள் இவை மதிக்கப்படுகின்றன.
- ஒருங்கிணைந்து, உணர்ச்சியுடன் கற்றல் மதிக்கப்படுகிறது.
- ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயும் மாணவர்-மாணவியர்களுக் கிடையேயும் நல்ல உறவு நிலவுதல்.
- முறையான வகுப்பறை மேலாண்மை செயல்பாடுகள்
- ஒழுக்கத்தை மேம்படுத்தும் செயல்பாடுகள், ஒரே மாதியானதாகவும் வற்புறுத்தல் இல்லாததாகவும் உள்ளன.

## பள்ளிக்கு வெளியே கற்றலின் நோக்கம்

பள்ளிக்கு வெளியே கற்றல் என்ற கருத்து 1987-ல் **லாரா ரெஸ்நிக்கால்** தன் AERA தலைமையுறையில் முதல் முறையாக முன்வைக்கப்பட்டது. இதில்

பாடத்திட்டத்தில் அடங்கிய, அடங்காத பள்ளிக்கு வெளியே ஏற்படும் கற்றல் அனுபவங்கள் இடம் பெறுகின்றன. பள்ளிக்கு வெளியே கற்றல், கற்றல் குறைபாடுகளை தீர்க்கவும், மாணவர்களின் சிறப்பு திறன்களை வளர்க்கவும், குழுக்களை வலுப்படுத்தவும், கல்வியில் உள்ள ஆர்வத்தை அதிகரிக்கவும், உண்மை உலகில் மேலும் கற்கக்கூடிய வாய்ப்புகளை உண்டாக்குகிறது என அவர் சுட்டிக் காட்டுகிறார். பள்ளிக்கு வெளியே கற்றல் என்பது பள்ளியில் நிர்வாகம் செய்யப்படுவது அல்ல. பள்ளிக்கு வெளியே கற்றல், சமூக அங்கத்தினர்களாக இருக்கும் அருங்காட்சியகம், விளையாட்டுதிடல்கள், உதவும் நிறுவனங்கள் இவற்றால் ஏற்பாடு செய்யப்படுகிறது. கோடை விடுமுறை வகுப்புகள், கலை கற்பித்தல், விளையாட்டு நிகழ்ச்சிகள், வெளிப்பயணங்கள் போன்றவை பள்ளிக்கு வெளியே கற்றலுக்கு உதவுகின்றது.

**பள்ளிக்கு வெளியே கற்றலுக்கு சில உதாரணங்கள்**

- வீட்டுப்பாடம், வீட்டுப்பாட குழுக்கள்
- கலந்து படித்தல் மற்றும் விரிவான பாடத்திட்டம்
- பெற்றோர், முதியோர் மற்ற மாணவர்கள் மேற்பார்வை செய்தல்
- குடிமகனாக, சமூக சேவை செய்தல்
- பள்ளி நாட்களிலோ, வார இறுதியிலோ தம் பகுதியில் செய்யும் செயல்பாடுகள்
- பள்ளிக்கு வெளியே கல்வி, சிறப்பு திறன்களை கண்டறியவும், வளர்க்கவும் ஒரு வாய்ப்பு என கண்டறியப்பட்டுள்ளது.

**கற்றலில் உற்று நோக்களின் முக்கியத்துவம்**

உற்று நோக்கி (பார்த்து) கற்றல் என்பது மற்றவரின் நடத்தையை கவனிப்பதன் மூலம் நிகழ்கிறது. அது பல வழிமுறைகளைச் சார்ந்த பல வடிவங்கள் கொண்ட சமூக கற்றல் முறையாகும். மக்களிடையே இதுபோன்ற கற்றல் நிகழ எந்த வலுப்படுத்துதலும் தேவைப்படாது. ஆயின் பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர் போன்றோரின் தொடர்பு தேவை. குறிப்பாக குழந்தைப் பருவத்தில் உயர்நிலையில் இருப்பவர் அல்லது, ஆளுமை உள்ளவரே மாதிரியாகிறார்.

பாண்டுராவின் சமூக அறிவு சார்ந்த கற்றல் கருத்தின்படி, உற்றுநோக்கி கற்றல் நடத்தையை பல வழிகளில், நல்ல அல்லது கெட்ட விளைவுகளுடன் பாதிக்கும். அது ஒருவருக்கு முழுதும் மாறுபட்ட நடத்தையை கற்பிக்கலாம். அது முன்னால் கற்றலை நடத்தை ஏற்படும் அளவினை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யலாம்.

**1. யதார்த்தமான கற்றல்**

மாணவர்கள் கவனித்து கற்றலை மற்றவர்களின் செயலை கவனிக்கவும், அதை பயன்படுத்தி சில வழிகள் எவ்வாறு செயல்படுகின்றன, அவற்றை நாமாகவே எவ்வாறு செய்யலாம் என அறிய உதவுகிறது.

**2. பயிற்சி பெறுதல்**

பயிற்சி பெறுபவராக இருக்கும்போது உற்றுநோக்குதல் மற்றும் மாதிரிகளை உருவாக்குதல் இரண்டும் நிகழ்கின்றன. பயிற்சியாளர்கள் தம் தொழிலுள்ள மேலோருடன் சேர்ந்து வேலை செய்வதன் மூலமும் தம்முடன் இருக்கும் மற்ற பயிற்சி மாணவர்களின் வேலைகளில் கவனித்தல், மதிப்பீடு செய்தல் மூலமும் தம் திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர்.

**3. சக உடன்பயிலும் மாணவர்களின் தாக்கம்**

பலன் அளிக்கக்கூடிய, வலுப்படுத்தக்கூடிய உடன் பயிலும் மாணவர்களில் மாதிரிகள் இருக்கும்போது கவனித்து கற்றல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சக மாணவர்கள் எப்போது கற்றலை அதிகரிக்கின்றனர். மாணவர், தம் போன்றவர்களின் நல்ல நடத்தைகளை கவனித்து அதை தாமும் செய்ய முயல்கின்றனர்.

**4. கலாச்சார மாறுபாடுகள்**

குழந்தைகள் விவரங்களை அறிய வாய்மொழி வேண்டுகோள்கள் இன்றி கவனித்தல் மூலம் மட்டுமே எந்த அளவுக்கு செய்திகளை கற்றுக் கொள்கின்றனர் என்பதில் கலாச்சார வேறுபாடுகளை காணலாம்.

**பாடத்திட்ட கற்றலை மாணவர் வசிக்கும் பகுதிக்கும், வகுப்பறைக்கும் வெளியே நீட்டிப்பு செய்தல்**

வகுப்பறைக்கு வெளியே கற்றலை, தொடர்ந்து வளரக்கூடிய கல்வியை வளர்க்க பயன்படுத்தலாம். இது பள்ளி விளையாடுமிடம், அவர்கள் வசிக்கும் பகுதி மக்கள், விவசாய நிலங்கள். தொழிற்சாலைகள், அறிவியல் மையங்கள், காடுகள் கடற்கரை போன்ற இடங்களுக்கு செல்தல் ஆகியவற்றை கொண்டது.

மாணவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை மாறுபட்ட நோக்குகளில் புரிந்து கொள்ள பாராட்ட வகுப்பறைக்கு வெளியே தக்க சூழலிலுள்ள உயர்ந்த கற்றல் செயல்களை அளிக்க வேண்டும். வகுப்பறைக்கு வெளியே ஏற்படும் அனுபவம், மாணவர்கள் தம் திறன்களை பயன்படுத்தவும், ஆராய்தல், தெளிவுபடுத்துதல் எல்லா சூழ்நிலைகளிலும் உள்ள பிரச்சனைகளை தீர்த்தல் போன்ற திறன்களை பயன்படுத்த வாய்ப்பை கொடுக்கிறது.

ஆயினும், மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே எடுத்துச் செல்லும்போது கற்றல் செயல்களை கவனத்துடன் திட்டமிடுதல் உடல் நலம், பாதுகாப்புக்கு உள்ள இடையூறுகள் ஆகியவற்றை கவனிக்க வேண்டியுள்ளது.

**வகுப்பறைக்கு வெளியே கற்றலில் உள்ள பிரச்சனைகள்**

- வகுப்பறைக்கு வெளியே கற்றலுக்கு சாதகமான உதாரணங்கள் இருந்தபோதிலும் இதில் பல முக்கிய பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியுள்ளது.

- பெரிய மாணவர் குழுவை மேற்பார்வை செய்தல், அவர்களுக்கு தேவையான உதவியை கொடுத்தல், போன்றவற்றை திட்டமிட்டு செயல்படுத்துவதில் உள்ள சிரமங்கள்.
- மாணவர்களும் ஆசிரியர்களும் இழக்கின்ற அன்றாட பாடங்கள், பள்ளி கால அட்டவணையில் செய்ய வேண்டிய மாற்றங்கள்.
- ஒரு பயனுள்ள பயணத்தை தயாரிக்க நேரம் தேவைப்படுகிறது.
- தேவையான போக்குவரத்து மற்றும் தங்குமிடம் இவற்றுக்கான செலவுத்தொகை.
- அப்பகுதியைப் பற்றி விவரமான அறிவு இன்மை
- மாணவர்களின் பாதுகாப்பு

இத்தகைய பிரச்சினைகள் இருந்தபோதிலும், மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே பல்வேறு பட்ட சூழல்களை ஆய்வு செய்யும் போது மிக அர்த்தமுள்ள நிலையான கற்றல் நிகழ்கிறது என்பதை மறக்கக்கூடாது. வகுப்புக்கு வெளியே கற்றல், மாணவர்கள், ஆசிரியர்கள் ஒருவரையொருவர் கலந்துரையாடி நன்கு புரிந்து கொள்ள உதவுகிறது.

**வகுப்புக்கு வெளியே கற்றலுக்கான அணுகுமுறைகள்**

இருபொதுவான அணுகுமுறைகள் (1) இடங்களைப் பற்றி கற்பித்தல் (2) இடங்கள் பற்றிய ஆய்வு.

**1. இடங்களைப் பற்றி கற்பித்தல்**

தலைப்பைப் பற்றி வகுப்பில் ஆய்வு செய்தல், ஆசிரியரின் பேச்சு, பாடப் புத்தகத்தை படித்தல் குறிப்பு எடுத்தல், வீடியோ காட்சிகளை பார்த்தல் போன்றவை.

- இடங்களை பார்வையிடல் (ஆசிரியரின் வழிகாட்டுதலின்படி) தலத்தில் உள்ள விவரங்களை குறித்துக் கொள்ளுதல், சில தல ஆய்வுகள்.
- வகுப்பறைக்கு வந்தபின் - ஒன்றுசேர்ந்து பரிசீலனை செய்தல் விளக்குதல் - இடம் பற்றிய விவரங்களை எழுதுதல்
- இதுவே வகுப்பறைக்கு வெளியே கற்பிக்கும் பொதுவான முறை ஆகும். இம்முறையில் மாணவர்களை ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லுதல், ஒரு விரிவுணர்வு செய்து, மாணவர்களை குறிப்பு எடுக்கச் செய்தல், இதில் மாணவர்களின் கருத்தை சொல்லவோ, அவர்களின் தாக்கத்தை தெரிவிக்கவோ வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்த அணுகுமுறையில் மாணவர்கள் கவனமாக செயல் நடைபெறும். இடத்தை உற்றுநோக்கி, தாம் முன்னால் சேகரித்த விவரங்களின் அடிப்படையில் தகுந்த விவரிப்புகளை முன் வைத்தல் இடம் பெறுகிறது. இந்த அணுகுமுறை கற்றல் அனுபவத்தின் முக்கிய பகுதியாக வரையறை செய்யப்பட்ட வழியில் தங்கள் உதாரணங்களை காண வகை செய்கிறது.

## 2. கள ஆய்வு

- நேரடி கவனித்தல் மூலமோ, வகுப்பு வேலையில் அடிப்படையிலோ அல்லது மாணவர்களின் சிறப்பு ஆர்வத்தினை வழியாகவே ஒரு பிர்சசனையை கண்டறிதல்.
- படித்தல், கலந்துரையாடல், சிந்தித்தல் மூலம் ஒரு கருதுகோளை உருவாக்குதல்.
- தம் கருதுகோளை சரிபார்க்க இடத்திற்கு சென்று தகவல்களை சேகரித்தல்
- சேகரித்த விவரங்களை ஆய்வு செய்தல், தகவல்களை வகைப்படுத்துதல்
- களத்திலிருந்து சேகரிக்க விவரங்களை பயன்படுத்தி கண்டறிதல் பிரச்சினைகளை தீர்க்கும் வழிமுறைகளை கலந்துரையாடி எழுதுதல்.
- கருதுகோளை சோதித்தல் - ஏற்றுக் கொள்ளுதல் அல்லது மறுத்தல்

இந்த அணுகுமுறை கற்றலில் உதாரணங்களின் அடிப்படையில் முடிவு செய்யும் வழிமுறையை பயன்படுத்துகிறது. இதில் ஒரு பிரச்சினை தீர்க்க வேண்டி உற்று நோக்கல், விவரித்தல், விளக்கமளித்தல்,ஆகியவை இடம்பெறும். மாணவர்கள், விஞ்ஞானம், சரித்திரம் பூகோளம் ஆகியவற்றில் பயன்படும் ஆய்வு முறைகளை பயன்படுத்துகின்றனர். இதுவே கள ஆய்வுக்கு பயன்படுத்தப்படும் விதிவிலக்கு அனுகுமுறை (Inductive Approach) எனப்படும்.

### வகுப்பறைக்கு வெளியே கற்றலுக்கான வாய்ப்புகள்

மாணவர்கள் கீழ்க்கண்ட வகையான வெளி சூழல்களிலிருந்து கற்கலாம்.

- பள்ளி விளையாட்டு கூட சூழ்நிலை
- உள்ளூர் சமுதாயம்
- கிராமப்புற, இயற்கை சூழல்கள்
- நகர மையங்கள்

### வகுப்பறைக்கு வெளியே கற்பதிலுள்ள நல்ல அம்சங்கள்

வகுப்பறைக்கு வெளியே கற்றல் மாணவர்களுக்கு உடலை பயன்படுத்துதல், இடம் விட்டும் இடம் செல்தல், சுதந்திரம், ஆரோக்கியமாக உணர்தல் போன்றவை கொண்ட, ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை வளர்க்க உதவுகிறது.

- வகுப்பறைக்கு வெளியே கற்றல் குழந்தைகளுக்கு இயற்கையான உலகுடன் தொடர்பை கொடுக்கிறது. மேலும் மாறுபட்ட (சீதோஷணம்) கால நிலைகள் (Weather) பருவகாலங்கள் இவற்றுடன் நேரடி தொடர்பை உண்டாக்குகிறது.
- வெளியே விளையாடுதல், கற்றல் மாணவர்களின் இயற்கை, சுற்றுப்புறம் இவற்றைப் புரிந்து கொள்ளவும், மதிக்கவும், மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள், வாழ்க்கை சுழற்சி இவை ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதை புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

- வெளிப்புற விளையாட்டு குழந்தைகளின் பிரச்சினை தீர்க்கும் திறனை வளர்க்கவும், படைப்பாற்றலை அதிகரிக்கவும், செய்வதுடனே அவர்களின் கற்பனைத் திறன் கண்டறியும் திறன், தயாரிப்பு நிலை இவற்றை வளர்க்க வாய்ப்புகளை அளிக்கிறது.
- குழந்தைகள் வெளியே செல்லவும் மற்றும் சுற்றிப்பார்த்து ஆராய்ந்து கண்டறியவும், ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்து தம் உடல் திறன்களை வளர்க்கவும் தகுந்த வெளி சூழ்நிலையை தேவைப்படுகிறது.
- சுறுசுறுப்பாக செயல்படுவதன் மூலம் கற்கும் குழந்தைகளுக்கு வெளி சூழல் மிக உகந்ததாக உள்ளது. மிக இளவயது குழந்தைகள் அவர்களின் மூளை, நரம்பு மண்டலம் வளர்ச்சிக்கு உதவும், உடல் மூலமும் உணர்வுகள் மூலமம் அதிகமான கற்கின்றன.
- பல குழந்தைகளுக்கு, மிக இளம் வயதில் வெளியே விளையாடுதல் மட்டுமே சுதந்திரமாகவும், பத்திரமாகவும் செயல்படும் வாய்ப்பை கொடுப்பதுடன் ஆபத்துக்களை கண்டறிந்து, அவற்றை சமாளிக்கும் திறனை உண்டாக்குகிறது.
- உள்ளும் வெளியிலும் தொடர்ந்து நடைபெறும் கற்றல், ஆர்வம், மகிழ்ச்சி இருக்கும் பொருள்களை திறம்பட பயன்படுத்துதல் ஆகிய திறன்களை வளர்க்கிறது.
- குழந்தைகளை தொடர்ந்து வெளியே அழைத்துச் செல்பவர், அவர்கள் சூழலுடன் ஆர்வத்துடன் தொடர்பு கொள்வதால் பெறும் மகிழ்ச்சி, ஆச்சர்யப்படுதல் போன்றவற்றை காணமுடிகிறது.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1 பள்ளியில் கற்றலின் நோக்கம் யாது?
2. பள்ளிக்கு வெளியே கற்றலில் உற்றுநோக்கங்களின் முக்கியத்துவம் பற்றி குறிப்பு வரைக.
3. புள்ளிக்கு வெளியே கற்றலின் நன்மைகளைக் கூறுக.
4. வப்பறைக்கு வெளியே கற்றலை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் யாவை?
5. வகுப்பறைக்கு உள்ளே மற்றும் வெளியே கற்றலின் நன்மைகளை விளக்குக.

**நோக்கங்கள்:-**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

- ஆசிரிய மாணவ உறவை பற்றிய அறிவைப் பெறுவார்
- ஆசிரிய மாணவ உறவை பராமரிக்கும் தேவையை புரிந்துகொள்வார்
- வகுப்பறை மேலாண்மையின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையை அறிந்துகொள்வார்.
- ஆரோக்கியமான வகுப்பறை மேலாண்மை மற்றும் கல்வி சாதனையை ஆராய்ந்து அறிவர்.

**முன்னுரை:-**

தவறான புரிதல் மற்றும் முரண்பாடுகளை குறைப்பதன் மூலம் அமைதியான சூழல் வளர மனித உறவு ஒரு இன்றியமையாத கூறாகும். குறிப்பாக, பள்ளிகளில் வகுப்பறை செயல்பாடுகளை செய்வதற்கான சரியான சூழல் வளர மிகவும் பயன்படுகிறது. இது மாணவர்களின் கற்றல் திறனை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள மிகவும் உதவுகிறது, இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் மனிதவளங்களையும் மற்றும் இருக்கும் பொருள் ஆதாரங்களை பயன்படுத்தி சிறந்த கற்றலுக்கான வழியை வழங்குவர். இந்த சூழ்நிலையில் மாணவர்கள் தங்கள் பாடப்பொருளை கவனிக்கும் ஆர்வத்தை ஊக்கப்படுத்திகொள்வர் மற்றும் தங்களது சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள ஆசிரியர்களிடம் கருத்து பரிமாறிகொள்வர். இதனால் கல்வியில் மாணவர்களின் சாதனைகள் அதிகரிக்கும். நல்ல மனித உறவு என்பது உளவியல் மற்றும் சமூக ரீதியில் மனநிறைவை அதிகரிக்க பள்ளி சூழல்களை உண்டாக்குதல். இதில் ஆசிரியர் மாணவ உறவு எனும் அமைப்பு கல்வி செயல்பாடுகளை அதிகரிக்கும் நோக்கமாக இருக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவ உறவு கற்றல் கற்பித்தலில் மிக முக்கியமான செயல்முறையாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அக்கரை மற்றும் பாதுகாப்போடு அறிவை புகட்ட வேண்டும். மாணவர்களை நல்ல பாத்திரமாக பிரதிபலிக்க செய்வதும் வழிநடத்துவதும் ஆசிரியரின் பங்காகும். மாணவர்களை சரியான வழியில் நடத்தி செல்ல ஆசிரியர்கள் ஒரு கலங்கரை விளக்கமாகவும் மற்றும் ஏணியாகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்களால் கிடைக்கும் அறிவை மாணவர்கள் பெற்றுகொள்ள வேண்டும். மாணவர்கள் எப்போதும் ஆசிரியர்களுக்கு பணிந்தவர்களையும், பண்புடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

வகுப்பறை செயல்களில் ஆசிரியர்கள் சுறுசுறுப்பான பங்கு வகித்து மாணவர்களை புரிந்துகொண்டு பாடப்பொருளுடன் அவர்களது ஆர்வத்தை இணைக்க வேண்டும். இதனால் கற்றல் நிலையானதாக இருக்கும். ஆசிரியர்கள் மாணவர்களிடையே உள்ள ஆர்வத்தை வெளியே கொண்டுவர வேண்டும். அது கற்பித்தலில் அடிகோடிட்ட நிலையான ஈடுபாடாகும். கற்பித்தல் செயல்முறைகளை அர்த்தமுள்ளதாக்குவதற்காக

தேடுவதே ஆசிரியரின் முக்கிய பணியாகும் குழந்தை தங்கள் செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடுத்திக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதனால் மாணவர்கள் தானாகவே உள்ளார்ந்த ஆதாரங்களையும் மற்றும் உள்ளார்ந்த உணர்வை ஒழுங்குமுறையாக்குவர். ஆரம்ப நிலை கற்றலிலே மாணவர்களுக்கு ஆதரவு அளிக்கும் சூழலை உருவாக்குவதே ஆசிரியர்களின் முக்கிய பணியாகும்.

**ஆசிரிய-மாணவ உறவு**

**பொருள்:-**

கற்றல் கற்பித்தல் செயல்முறையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையே உள்ள கல்வி உறவாகும்.

**ஆசிரிய மாணவ உறவை பராமரிப்பதற்கான தேவை:-**

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு மாணவ ஆசிரியர் உறவு மிக முக்கியம். குழந்தைகள் ஏறத்தாழ 5 முதல் 7 மணி நேரம் ஒரு நாளைக்கும் 10 மாதங்கள் ஒரு வருடத்திற்கும் ஆசிரியரோடு செலவிடுகின்றனர். நாம் அனைவரும் பள்ளிக்கு சென்றிருப்போம். நமக்கு பிடித்தமான அதிக ஆசிரியர்கள் இருந்திருப்பார்கள். ஆசிரியர்களுடன் மாணவர்களது உறவை மேம்படுத்துவது இன்றியமையாதது. நேர்மறையான உறவு மாணவர்களின் கல்வி சமூக வளர்ச்சிக்கு நீடித்த தாக்கத்தை உருவாக்கும்.

**பாடிஸ்டிக், ஸகாப்ஸ் & வில்சன்** இவர்கள் ஆசிரிய மாணவ உறவை நேர்மறையாக வெளிப்படுத்தி ஆசிரியர்கள் சாட்சியமாணவர்கள், இவர்களது அறிக்கை குறைவான முரண்பாடு, உயர்ந்த நெருங்கிய உறவு மற்றும் ஆதரவு இதனுடன் சிறிய சார்பை மாணவர்களுக்கு காட்டினர். இதனால் மாணவர்கள் சமூக திறன்களில் பங்கு மற்றும் கல்வி செயல்திறன்களை நிலைநிறுத்தினர். கல்வி செயல்திறன்களில் நெகிழ்ச்சியை மாணவர்களிடையே வளர்த்தனர். மாணவர்களின் சாதனைகளை வெளியே கொண்டு வருவதே தொழில்சார்ந்த ஆசிரியர்களின் கடமையாகும். ஒரு மாணவனை முட்டாள் என்று அழைப்பதே முட்டாள்தனம்தான். ஒரு டசன் குழந்தைகளை என்னிடம் ஒப்படைத்தால், நான் அவர்களில் ஒருவனை பொறியாளராகவும், ஒருவனை மருத்துவராகவும், ஒருவனை தச்சனாகவும், இன்னொருவனை ரௌடியாகவும் உருவாக்குவேன் என்று சிக்மண்ட் பிராய்டு கூறினார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது மாணவர்களின் மனவளர்ச்சி என்பது ஆசிரியர்கள் அளிக்கும் சமச்சீரான ஆக்கப்பூர்வ அறிவை சார்ந்ததாகும். இதில் ஆசிரியர்கள் மாணவர் இடையேயான உறவு சரியான வழியில் வலுப்பெறுகிறது.

**ஆசிரியர்களின் ஈடுபாடு மற்றும் கருத்து பரிமாற்றத்தின் இன்றியமையாமை**

**பிர்ச் மற்றும் லேடின் கூற்றுப்படி,** எந்த ஆசிரியர்கள் மாணவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டனரோ. அந்த ஆசிரியர்களின் மாணவர்கள் பள்ளியை ஒதுக்குவதை விரும்பமாட்டார்கள், சுயமாக இயக்குபவர்களாகவும், அதிக ஆதரவுடையவர்களாகவும் மற்றும் கற்றலில் அதிக ஈடுபாடுள்ளதாகவும் இருப்பர். மாணவ ஆசிரியரிடையே நல்ல தொடர்பு இருந்தால், வகுப்பறையில் அது நல்ல சூழலை உருவாக்கும். மாணவர்களின்

உணர்ச்சியின் மதிப்பை ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் மாணவர்கள் இன மோதல் காணாத அனைத்து வளர்ச்சியுடைய அம்சங்களை கொண்டவர் ஆவார். பள்ளிகளை போல மாணவர்களை உருவாக்கினால், அவர்கள் முக்கிய சமூக நலன்களான நட்பு, சமூக நண்பர்களின் மரியாதையை சம்பாதித்தல் சமூக திறன்களை கற்றல். இது மாணவர்களுக்கு நல்ல கல்வி பதிவுகள் செயல்திறன்களாக உதவும். வகுப்பறை சூழ்நிலைகளில் எழுச்சியுடன் மாணவர்கள் ஆக்கபூர்வமான கருத்தை பரிமாற ஆசிரிய மாணவ உறவு ஆசிரியர்களால் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**வகுப்பறை மேலாண்மையில் உளப்பகுப்பாய்வின் அணுகுமுறை**

உளப்பகுப்பாய்வின் நோக்கமானது ஆசிரிய மாணவ உறவை இரண்டு சொற்கூறுகளாக பிரிக்கவும்: கட்டுப்பாடு மற்றும் அடையாளம், கட்டுப்பாடு என்பது ஆசிரியர் மாணவர்களிடையே நடப்பதை ஆசிரியர்கள் தீர்மானிப்பது. அதேசமயம் அடையாளம் என்பது ஆசிரிய மாணவர்களுக்கான நல்லிணக்கத்ததிற்கு எதிரான மோதல். இங்கு ஆசிரியர்கள் நன்மைகளை மாணவர்களுக்கு அளிக்கின்றனர், மாணவர்கள் அதை வாங்கிகொள்கின்றனர். உளப்பகுப்பாய்வின் உறவு ஆசிரிய மாணவர்களுக்கிடையே மிக முக்கியமானது, இது நன்றாக இருந்தால்தான் கல்வி பரிவர்த்தனைகளும் நன்றாக அமையும்.

**கற்றலில் மாணவர்களின் ஈடுபாட்டை வளர்க்கும் உத்திகள்**

மாணவர்கள் வெற்றிகரமான கற்போராய் வருவர் என்பது கல்வியாளர்களின் தெளிவான நம்பிக்கையாகும். நல்ல காரணங்களுக்காக அதிகபடியான ஆராய்ச்சியாளர்கள் மாணவர்களின் ஈடுபாட்டை ஆய்வு செய்தனர். பல வகையான ஈடுபாடுகள் கண்டரியப்பட்டுள்ளன, அவை கல்வி, அறிவாற்றல், அறிவுசார் நிறுவனங்கள், உணர்ச்சி, நடத்தை, சமூகம் மற்றும் உளவியலாகும்.

கிளாக்ஸ்டன்(2007) கற்றலின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான உத்திகளை சுருக்கமாக பரிந்துரைக்கின்றனர்.

- மொழி
- செயல் பாடுகள்
- காட்சி தலைப்புகள்
- வெளிப்படைத்தன்மை மற்றும் ஈடுபாடு
- நினைப்பதை பரிமாறுதல்
- முன்னேற்றம்
- மாதிரிகள்.

**ஆரோக்கியமான வகுப்பறை மேலாண்மை மற்றும் கல்வி அடைவுகள்**

“வகுப்பறை மேலாண்மை என்பது வகுப்பறையில் ஆசிரியர்கள் நேர்மறையான வகுப்பறை சூழலில் பயனுள்ள கற்றல் கற்பித்தலை உருவாக்குவது”.

நேர்மறையான உறவுகளை எந்த ஆசிரியர்கள் மாணவர்களிடம் வளர்க்கிறார்களே அவர்களின் கற்றல் சூழ்நிலையை எளிதாக்குவதும், மாணவர்களின் வளர்ச்சியை சந்திப்பதும் கல்வி தேவைகள் நிறைந்ததாகும்.

**ஆசிரிய மாணவரிடையேயான சில நெருக்கத்திற்கான எடுத்துக்காட்டுகள்:**

- ஒரு உயர்கல்வி மாணவன் தனக்கு கிடைத்த வெற்றியை தனது ஆசிரியரிடம் பகிர்ந்து கொள்கிறான், ஏனென்றால் அம்மாணவனுக்கு தெரியும் அவனது வெற்றியில் அவன் ஆசிரியர் உண்மையான ஆர்வம் காட்டுவார் என்று.
- கணிதத்தில் போராடும் நான்காம் தர மாணவன் பெருக்கல், வகுத்தலில் உதவி தேவைப்படும்போது அவனது ஆசிரியரை நாடுகின்றான்.
- நேர்மையான ஆசிரிய- மாணவ உறவு பள்ளியை சீராக்கவும், கல்வி, சமூக செயல் திறன்களில் பங்களிக்கின்றன.
- ஆசிரிய மாணவ உறவை நேர்மறையாக வெளிபடுத்தி ஆசிரியர்கள் சாட்சியாளர்கள்,இதனால் குறைந்த முரண்பாடு, உயர்ந்த நெருங்கிய உறவு சிறிய ஆதரவை மாணவர்களுக்கு காட்டினர், சமூக திறன்களில் பங்களித்தனர், கல்வி செயல் திறன்களை நிலைநிறுத்தினர்.
- எந்த ஆசிரியர்கள் மாணவர்களிடம் நெருங்கிய உறவு கொண்டுள்ளனரோ. அந்த மாணவர்கள் அறிக்கை என்ன சொல்கிறது என்றால், அம்மாணவர்கள் பள்ளி வருவதை குறைவாக தவிர்ப்பர், அதிக ஒற்றுமையுடனும், கற்போர் மைய கற்றலில் அதிக ஈடுபாடுடன் கற்ப்பர்.
- கணித வகுப்பை கலந்துகொள்ளும் மாணவர்கள் கணித கற்றலை ஈடுபாடோடு கற்க முடிகிறது, அவர்கள் கணக்குகளை தீர்வு காண்பதிலும் புதிய கருத்துகளை அறிந்துகொள்ளுதலும் நல்ல அனுபவம் பெறுகின்றனர்.

**நேர்மையான வகுப்பறை சூழலை உருவாக்குவது:**

மாணவர்கள் தங்கள் சொந்த அனுபவங்களில் கற்கும் போது அவர்களை கருத்து மற்று திறன்களை இணைக்க தேவையான நேரத்தை அளிக்க வேண்டும். சமூகத்தை பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தும் செயல்களை மாணவர்களிடம் அளித்தால் அவர்கள் முன்பு தெரிந்து கொண்டதும், இப்போது கற்க்கும் புதிய பொருளையும இணைத்து பார்க்க வாய்ப்பு ஏற்படும் அதேபோல சக மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து மகிழ்ச்சியயைடவர். சமூக மற்றும் உணர்வுள்ள ஆதரவை, உயர்ந்த எதிர்பார்ப்புகளுடனான கற்றலை உருவாக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களுக்கு, ஒரு நல்ல நண்பனாகவும், வேதாந்தியாகவும், வழிநடத்துபவராகவும் இருக்க வேண்டும். மாணவர்களிடம் உள்ள பக்தி, ஒற்றுமையை அறிந்து கொள்ளும் ஆர்வம் வேண்டும். ஆசிரியர்களது பணி குழந்தைகளை காக்கும் பணி அதனால் அவர்களின் இளமனது நிறைவுற்ற சிந்தனைகளோடு திகழ்வர். தங்களது பொறுப்பில் இருக்கும் மாணவர்களின் நல்லிணக்கத்தை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிக பெரியதாகும்.

**ஆசிரியர் செய்ய வேண்டியவை:**

- தங்களது மாணவர்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர்களது நுண்ணறிவு, ஆர்வம், மனநாட்டம் விருப்பு வெறுப்புகளை அறிய வேண்டும்.
- தங்களது மாணவர்களின் வளர்ச்சியில் உண்மையான ஆர்வம் இருக்க வேண்டும்.
- மாணவர்களின் மனதில் பயத்தைவிட மரியாதையை உருவாக்க வேண்டும்.
- தங்கள் மாணவர்களின் நிலைக்கு இறங்கி வரவேண்டும்.
- ஜாதி, இனம், மதம், கொள்கை, இடம், தகுதி, மொழி மற்றும் பிறந்த இடம் இதில் எதிலும் வேறுபாடின்றி அனைத்து மாணவர்களையும் அன்புடனும் பாசத்துடனும் நடத்த வேண்டும்.
- மாணவர்களின் நல்ல செயல் மற்றும் உள்ளார்த்த மதிப்புகளை வளர்க்கும், சமூகம், உடல்ரீதியாக, அறிவுசார்ந்த மாணவர்களாக உருவாக உதவ வேண்டும்.
- அறிவியல் அறிவு, சுய வெளிப்பாடு, அழகுணர்வு, தலைமைப்பண்பு, சரியான கருத்து, சரியான மனப்பான்மை மாணவர்களில் சூழலில் வளர்த்து, கேள்வி கேட்கும் ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.
- பொறுப்பிலிருந்து தவிர்க்காமல் இருக்க மாணவர்களை உறுதிசெய்ய வேண்டும்.
- நமது நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் வேற்றுமையில் ஒற்றுமையை செயல்படுத்தும் மாணவர்களை பாராட்ட வேண்டும்.
- மாணவர்களை அவர்கள் பாடத்தில் ஆர்வம் காட்ட உருவாக்குதல், தனது பாடத்தை நன்கு அறிந்திருந்தல் மற்றும் புதிய முறைகளை கற்பித்தலில் செயல்படுத்த வேண்டும்.
- பேசுவதில் பணிவு மற்றும் திடமான செயல் வேண்டும்.
- மாணவர்களை, கவனத்துடன் கையாண்டு அவர்கள் மீது அக்கரை கொண்டால் சிறந்த முயற்சியை மேற்கொள்வர்.
- மாணவர்கள் பங்கிலுள்ள எந்த குற்ற செயலையும் அனுமதிக்கவோ, சகித்துக்கொள்ளவோ கூடாது.

**முடிவுரை:-**

நேர்மையான உறவுகளால், மாணவர்கள் பள்ளியிலும், வகுப்பறையிலும் குறிப்பான நம்பிக்கையில் மட்டும் பயன்பாட்டோடு செயல்பட்டு கற்பதில்லை, அவர்களுடைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் உள்ளார்ந்த நம்பிக்கையின் மதிப்பை பெற்றுள்ளனர். நேர்மறையான உறவு என்பது மனதின் சுய செயல்பாட்டை கொண்டது, இது நேர்மையான சிந்தனையை உருவாக்கும். ஆசிரிய மாணவ உறவு வகுப்பறையில் ஆசிரியரிடமிருந்து கவனத்தை அடைவதாகும், இது அவர்களுக்கு சுக, துக்கங்களின் ஆதாரமாகும். இந்த மன ஊக்கத்திற்க்கும் மற்றும் ஈடுபாட்டிற்கும் நேர்மறை உளப்பகுப்பாய்வு உறவில் ஒரு முக்கிய வழி வகுக்கும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1. ஆசிரிய-மாணவ உறவை பாதுகாக்க வேண்டிய தேவை – விவாதிக்க
2. வகுப்பறை மேலாண்மையில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை பற்றி கட்டுரை எழுதுக.
3. மாணவர்களின் கற்றலின் ஈடுபாட்டை ஊக்கப்கடுத்த தேவையான உத்திகளை விரிவாக விவாதிக்க.
4. ஆசிரியர்களின் ஈடுபாடு மற்றும் கருத்து பரிமாற்றத்தின் தேவையை விளக்குக.
5. ஆரோக்கியமான வகுப்பறை மேலாண்மை மற்றும் கல்வி அடைவின் பங்கை ஆராய்க.

## அலகு 10 கற்பித்தலும் ஆசிரியர் பணியும்

**நோக்கங்கள்:-**

**இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,**

i) திறம்பட கற்பித்தலுக்கான பண்புகளை அறிந்து கொள்வார்.

ii) ஆசிரியர் (அ) கற்பிப்போரின் முன்னேற்றத்திற்கான திட்டங்களின் பயன்களைப் பற்றி புரிந்து கொள்வார்.

iii.) கற்பித்தல் பணியின் முக்கியத்துவத்தினை உணரச் செய்வார்.

iii.) ஆசிரியரின் கற்பித்தல் பணியின் திறன்களை மதிப்பீடு செய்வார்.

இன்றைய பள்ளிக்கல்வி முறையானது மாணவர்களின் மீது பல்வேறு சுமைகளை சுமக்கச் செய்யும் முறையாக விளங்குகின்றது. அறிவு என்பது ஒரு தொடர்ச்சியான கற்றல் செயலின் மூலம் பெறப்படும் ஒரு திறனாகும். கல்வி என்பது இயந்திர செயல்பாடு அல்ல. ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் மிகவும் முக்கிய மாணவராக திகழ்கின்றார்கள். எனவே ஆசிரியப் பணி என்பது சேவையுணர்வுடன் மாணவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு செய்யும் அறப்பணி ஆகும். கற்பித்தல் என்பது மாணவர்களின் அறிவு, திறன்கள், எண்ணங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றை வாழ்வின் முன்னேற்றத்திற்கும், சமுதாய முன்னேற்றதிற்கும் வித்திடும் வகையில் மாணவர்களுக்கு வழங்குதல் ஆகும். மாணவர்கள் கற்பித்தல் செயலின் விளைவு ஒழுங்கே அமைந்தால் மட்டுமே அவர்களால் சிறந்த கற்றலைப் பெற்று சமுதாயத்தில் தங்குதடையின்றி செயல்பட இயலும். எனவே ஆசிரியர் பணி என்பது கற்பித்தல் செயல்களில் ஈடுபடுவது மட்டும் அல்லாமல் வாழ்வியல் திறன்களை மேம்படுத்தி மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கித்தரும் பொறுப்பான பணி ஆகும். இத்தகை ஆசிரியப் பணியின் முக்கியத்துவத்தைப்பற்றி கீழ்கண்ட பாடப்பகுதிகளில் காண்போம்.

### கற்பித்தலும் ஆசிரியரும்:-

சமுதாயத்தில் உள்ள எல்லா பணியினைக் காட்டிலும் ஆசிரியர் பணி மிகவும் புனிதமான சிறந்ததொரு பணியாகும். எல்லா பணிக்கும் அடிப்படையான கல்வியை வழங்கும் பணியை செய்பவர் ஆசிரியர் ஆவார். கற்பித்தலில் மாணவர்களின் சுயசிந்தனையும் ஆற்றலும் முன்னேறவும், வளர்ச்சி அடையவும் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் கற்றல் செயல்பாடுகளை அமைத்துத்தர வேண்டிய பொறுப்பு ஆசிரியரையே சாரும். கற்றல் பெரும்பாலும் பள்ளியின் வகுப்பறை செயல்பாடுகளின் அடிப்படையிலேயே அமையும். தனித்திறன், தேர்வை எதிர்நோக்குதல், வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை கையாளுதல் போன்றவற்றை எதிர்கொள்ளும் வகையில் கல்வியை வழங்கும் கடமை உணர்வுடன் ஆசிரியர் கற்பித்தலை மாணவர்க்கு அளிக்கும் பொறுப்புணர்வு பெற்றிருக்க வேண்டும். அனைத்து மாணவர்க்கும் ஒரு வழிகாட்டியாக

விளங்க வேண்டும். ஆசிரியர் பணியில் பல்வேறு சமூகக் கடமையும், பொறுப்புணர்வும் அதிகம் உண்டு. மாணவர்களின் அறியாமையை போக்கி, அவர்களின் அறிவுத்திறனை வளர்க்கவும், வாழ்க்கைக் கல்வியையும் கற்பித்தலோடு இணைத்து வழங்குபவர் ஆசிரியர். பெற்றோர்க்கு பிறகு மாணவர்களின் நலனில் பெரும்பங்காற்றுவோர் ஆசிரியர்.

**ஆசிரியரின் பண்புகள்:-**

i.) மாணவர்களுக்கு சிறந்ததொரு பள்ளிக்கல்வியையும், வாழ்க்கைக் கல்வியையும் வழங்கவேண்டுமாயின் குழந்தையின் சுயவிருப்பு வெறுப்புகளை புரிந்து கொள்ளும் பண்பு பெற்றருக்க வேண்டும்.

ii.) மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி, அவர்களின் அறிவுத்தாக்கத்தையும் தீர்க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

iii.) தொடந்துக் கல்விநிலையில், உறவு நிலையில் ஆசிரியர்கள் பெற்றோரின் மறு உருவமாக மாணவர்களிடம் பிரதிபளிக்க வேண்டும்.

iv.) கற்றலில்-கற்பித்தல் பணியில் ஒரு ஆசிரியர் கற்பிக்கும் ஆற்றல் மட்டும் பெற்றிருந்தால் போதாது, மாணவர்களுக்கு விளக்கி சொல்லக் கூடிய செயல்திறனும் முக்கியமாக அமையப்பெற்றவராக இருக்க வேண்டும்.

v.) மாணவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு, வகுப்பறையில் கற்றல் மற்றும் பிற நடவடிக்கைகளை உற்றுநோக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

vi.) பாடத்திட்டம் மட்டுமின்றி கதைகள், தத்துவம், வரலாறு, அறிவியல், சமூகம் போன்றவற்றில் மாணவர்க்கு தேவையான அனுபவ அறிவினைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

மாறிவரும் சமூக தேவைகளுக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்கும் பொறுப்புணர்வு கொண்டவராக இருக்க வேண்டும்.

புதிய கற்றல்-கற்பித்தல் கருவிகளை கையாளும் திறனும், நவீனமயமாக்கப்பட்ட கல்வியறிவை வழங்கும் அறிவுப் பண்பை பெற்று மாணவருக்கு வாழ்வில் வழிகாட்டும் முன்னோடியாக திகழ வேண்டும்.

**ஆசிரியரும் பயிற்சியும்:**

கல்விப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் செயலில் ஈடுபட பயிற்சியானது மிகவும் அவசியம் ஆகும். தேவைகளுக்கு ஏற்ப பயிற்சியானது ஓரிரு நாட்கள் முதல் இரண்டு வருடங்கள் வரை வழங்கப்படுகின்றது. ஆசிரியராக பணியில் சேர பயிலும் பயிற்சி ஆசிரியர்களுக்கும், பணியில் உள்ள ஆசிரியர்களுக்கும் பயிற்சியானது வழங்கப்படுகின்றது. ஒரு சில பயிற்சியானது கட்டாயமாக கல்வி நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன. வேறு சில பயிற்சிகளில் சுய விருப்பம் மற்றும் ஆர்வத்துடன் ஆசிரியர்கள் பங்கு பெறுவார்கள். பயிற்சியானது சிறந்த கற்பித்தலுக்கு ஆசிரியர்களை

ஆயத்தப்படுத்துகின்றது. ஆக்கத்திறனை ஆசிரியர் வளர்த்துக் கொள்ள பயிற்சியானது உதவும். கற்பித்தலில் புதிய உத்திகள், கற்பித்தல் முறைகள், கருவிகள், புதிய தொழில்நுட்பம் போன்றவற்றை பயன்படுத்தி கற்றல்-கற்பித்தல் செயல் செம்மையுற பயிற்சியானது வழிகாட்டும்.

**ஆசிரியருக்கான ஆக்கச்செயல்கள்:**

i.) மாணவர்களின் விளையாட்டு நடனம், நாடகம், பாடல், இசை போன்ற பல்வேறு திறன்களை பெற்று விளங்கிட இத்தகையை ஆக்கத்திறனை ஆசிரியர் முதலில் பெற்று ஆக்கச்செயலில் மாணவர்களுக்கு உதாரணமாக விளங்கிட வேண்டும்.

ii.) பல்வேறு பயிற்சிகளை பெறுவதன் மூலம் ஆக்கச்செயல்கள் பலவற்றை ஆசிரியரால் பெற்று அதனை மாணவர்களுக்கும் வழங்கும் ஆக்கத்திறன் கொண்டவராக இருக்க வேண்டும்.

iii.) ஆசிரியர் தான் கற்றவற்றை மாணவர்களிடத்தில் செயல்வடிவம் பெறச் செய்வது இன்றியமையாதது. பயிற்சி காலத்தில் பள்ளிக்குச் சென்று பெற்ற பயிற்சியினை செயல்வடிவத்திற்கு கொண்டுவரும் ஆக்கச் செயலில் ஈடுபட வேண்டும்.

iv.) மாணவர்களின் செயல்களை உற்றுநோக்கி, அவர்களின் பல்வேறு வளர்ச்சியை கண்காணித்து வளர்ச்சியானது வயதுக்கு ஏற்ப உள்ளதா எனவும், குறைபாடுகள் இருப்பின் காரணம் கண்டறிந்து களையும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

**ஆசிரியப் பணியின் கற்பித்தல் தகுதிகள்:-**

ஆசிரியர் அன்பு, கருணை, சமத்துவ எண்ணம் போன்ற பண்புகள் மட்டும் அல்லாமல் தனிப்பட்ட குணநலன்களையும், சில திறன்களும் கற்பித்தல் செயலில் வெற்றிபெறுவதற்கு பெற்றிருக்க வேண்டும்.

i.) கற்பிக்கும் பாடத்தின் பொருள் உணர்ந்தும், பாடத்திட்டமிடும் திறனும், மிகவும் அவசியமான தகுதியாகும்.

ii.) கற்பித்தல் செயலில் ஈடுபட முன்கூட்டியே திட்டமிடும் ஆற்றல், கொண்டவராக இருக்க வேண்டும். கற்றல் கற்பித்தல் கருவிகளை தயார் செய்யும் திறன் கண்டறிந்து தனிப்பட்ட கவனத்துடன் மீண்டும் கற்பித்தலை நினைவுகூர்ந்து சிறந்த போதனையாளராக விளங்கும் தகுதிபெற்றிருக்க வேண்டும்.

iii.) மாணவர் பாடம் தொடர்பான கற்றல் செயல்பாடுகளில் அமைந்துள்ள முன்னேற்றத்தை அளவிடும் ஆராய்ச்சியாளராக திகழ்ந்து பின்தங்கியுள்ள மாணவரைப் படிப்பில் முன்னேற்றம் அடைய வழிகாட்ட வேண்டும்.

iv.) மாணவர்களிடம் ஒரு சமூகமான தொடர்பினை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டு ஏகாதிபத்திய போக்கை கையாளுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

மேற்கண்ட அனைத்தும் ஒரு சிறந்த ஆசிரியர்க்குத் தேவையான தொழில்சார்ந்த கற்பித்தல் தகுதிகள் ஆகும்.

**ஆசிரியப்பணியின் வகுப்பறை நிகழ்வுகளின் முக்கியத் தேவைகள்:-**

**திட்டமிடுதல்:-**

எந்த பாடத்தை ஒரு ஆசிரியர் கையாளுகின்றாரோ அந்த பாடத்தில் போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும். மாணவரை ஒழுங்குப்படுத்துவதில் போதிய திறமைபெற்று இருந்தால் மாணவர்களை நம்பிக்கையோடு எதிர்நோக்க முடியும். மாணவர்கள் மற்றும் அவர்களின் குணநலன்கள், கல்விக்குறிக்கோள்கள், ஊடக அறிவு பெற்று அவற்றின் துணைகொண்டு வகுப்பறை நிகழ்வுகளை திட்டமிட வேண்டும். மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்ளும் திறனையும், திட்டமிடலும் ஆசிரியரிடம் இருக்க வேண்டும்.

**கட்டுப்பாட்டு திறன்:-**

மாணவர்களுக்கு கற்பித்தலை தெளிவாகவும், சுருக்கமாகவும் அதே சமயம் விளக்கமாகவும், வகுப்பறையில் கட்டுப்பாட்டுடன் கவனிக்கும் சூழலை ஏற்படுத்தும் நிர்வாகத்திறன் கொண்டவராக தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். கரும்பலகையில் வரைதல், கேள்வியை எழுப்புதல், தெளிவாக விளக்குதல் போன்ற தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டு வகுப்பறையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நிர்வாகத்திறன் படைத்தவராக விளங்க வேண்டும்.

**தொடர்பு கொள்ளுதல்:-**

ஒரு ஆசிரியர் நேர்த்தியாகவும், தெளிவாகவும், நேர்மையாகவும் மாணவர்களிடம் தொடர்புகொள்ளும் திறன் அவசியம் ஆகும். மாணவர்களின் திறன் கண்டறியவும், அவர்களின் சுய சிந்தனை செயல்பாட்டோடு அணுகும் திறன், தன்னம்பிக்கையை வளர்த்தல் மற்றும் ஏற்புடைய வகையில் எல்லா வகுப்பறை நிகழ்வுகளை ஏற்படுத்திக் கொடுத்து தன்னை மாணவரிடத்தில் இணக்கமான தொடர்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**நிர்வாகத்துறைக் கற்பித்தல்:-**

வகுப்பறையிலும், பள்ளியிலும் கிடைக்கும் பொருள் வளங்களை நிர்வகித்துக் கற்றுக் கொடுத்தல், பயன்படுத்துதல் வேண்டும். கற்பித்தல் கருவிகள், உபகரணங்களை திட்டமிட்டு வகுப்பறையில் பாடத்திட்டத்தோடு பயன்படுத்த வேண்டும் நூலகத்தில் உள்ள பாடம் சார்ந்த புத்தகங்கள், கலை களஞ்சியங்கள், வரைபடங்கள் போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். எல்லா நிகழ்வுகளையும் பள்ளிச் செயல்பாடு மற்றும்

அதனோடு சார்ந்துள்ள பயிற்சிகள், விழாக்கள் போட்டிகள் போன்றவற்றின் போது சிறந்து நிர்வகிக்க வேண்டும்.

**மாணவர்களுக்கு முன்உதாரணமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குதல்:-**

மாணவர்களை ஊக்கப்படுத்தி, உந்து சக்தியாக செயல்படுவது ஆசிரியரின் மற்றொரு பெரிய கடமையாகும். கற்றலில் மாணவர்களுக்கு உள்ள இடர்பாடுகளையும், குறைகள், சிக்கல்களை உணர்ந்து அவர்களுக்கு கற்றலில் வழிகாட்ட வேண்டும். மாணவர்களின் தவறுகளை பொறுத்துக் கொண்டு அவர்களை திருத்தி நல்வழிகாட்டி முன்உதாரண மனிதராக மாணவர்கள் முன்னிலையில் தன்னை அடையாளப்படுத்த வேண்டும். மாணவர்களின் குற்றங்களையும், குறைகளையும் வகைபடுத்துவதைவிட ஒவ்வொரு மாணவரின் ஆர்வம், வலுவினை கண்டறிந்து அவர்களின் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் ஊக்குவித்து சிறந்த கற்றலுக்குத் தேவையான எல்லா வாய்ப்புகளையும் வழங்க வேண்டும்.

**மதிப்பிடுதல்:-**

மாணவர்களை மதிப்பிடவும், அவர்களின் கற்றல் சார்ந்த வெளிப்பாடுகளை நிர்ணயம் செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும். மாணவர்களின் செயல்பாடு, பண்புகள், குடும்பம், வரலாறு போன்றவற்றை கண்டறிந்து அவர்களின் நடத்தை குணங்களை மதிப்பிட வேண்டும். மதிப்பிடல் செயலானது மாணவர்களுக்கு சரியான கற்றல் உத்திகளையும், கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்தவும், கற்பித்த கருவிகளை வடிவமைக்கவும் உதவிபுரியும்.

**ஆசிரியர் பயிலரங்குகள்:-**

ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த பிறகும், ஆசிரியர் பயிற்சியின் போதும் ஆசிரியப் பணியில் பயிலரங்குகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. பயிலரங்கத்தில் பயிற்சி பெறுவதன் மூலம் ஆசிரியர்கள் தனக்கும் மாணவர்களுக்கும் தேவையான கற்றல் கற்பித்தல் அறிவையும், பாடதிட்டத்தின் உத்திகளையும், செயல்பாட்டுடன் கூடிய கற்றல்-கற்பித்தல் அறிவையும் பெறுகின்றனர். பயிலரங்கத்தில் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள், இடர்பாடுகள் தீர்ப்பதற்கும், பலவிதமான வலுவூட்டும் செயல்முறை நிகழ்வுகளை வகுப்பறையில் பயன்படுத்த முன்னோட்ட பயிற்சியும் பயிலரங்குகள் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**ஆசிரியப் பணியின் சிறப்பு:-**

மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் உணர்ந்து அவற்றிற்கேற்ப ஆசிரியர் தன் செயல்களை வடிவமைத்துக் கொண்டு அவர்களை திருப்தியடையச் செய்து வாழ்கையை உணரச் செய்யும் உன்னதமான சிறப்புவாய்ந்த பணி ஆசிரியப்பணி. மாணவர்களை

மகிழ்ச்சி அடையச் செய்து மனமகிழ்பவர் ஆசிரியர். மாணவர்களின் எந்த ஒரு வெற்றியானாலும் தன்வெற்றியாக கொண்டாடுபவர். ஒவ்வொரு நாளும் அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் மாற்று பெற்றோர்கள் ஆசிரியர்களே. வாழ்நாள் முழுவதும் மாணவர்களுக்காக கற்றுக்கொண்டு மாணவர்களை வாழ்ககையை கற்க கற்பிக்கும் கடமையுணர்வு கொண்டவர்கள் ஆசிரியப்பணி செய்பவர்கள். கற்பனைத்திறனையும், கலைத்திறனையும் ஊக்குவித்து மாணவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்பவர்கள். கற்பித்தலில் உள்ள அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு கரும்பலகையில் மாணவர்களின் கனவுகளை எல்லாம் நிஜமாக மாற்றும் மகத்தான பணி ஆற்றுபவர்கள் ஆசிரியர்களே. ஏனெனில் ஒரு ஆசிரியரால் மட்டுமே ஒரு சமூதாயத்தில் உள்ள மற்ற பணியாளார்களான மருத்துவர், வழக்கறிஞர், பொறியாளர், ஆய்வாளர், காவலாளி, வடிவமைப்பாளர் போன்றவர்கள் மட்டும் அல்லாமல் பல்வேறு துறைகளிலும் சிறந்தவர்களாக தன் மாணவர்களை உருவாக்க முடியும். ஆனால் ஒரு மருத்துவரால் மற்றொரு மருத்துவரையோ, ஒரு பொறியாளரால் மற்றொரு பொறியாளரையோ உருவாக்குவது சாத்தியமற்ற காரியம் ஆகும். ஆனால் ஒரு ஆசிரியரால் மட்டும் பல ஆசிரியர்களையும் உருவாக்க முடியும். அனைத்துறையை சேர்ந்த பணியாளர்களை உருவாக்க ஒரு ஆசிரியரால் மட்டுமே முடியும் என்ற சிறப்பு வாய்ந்த பணி ஆசிரியப் பணி ஆகும்.

**ஆசிரியரும் சமுதாய முன்னேற்றமும்:-**

ஒரு சமுதாயம் முன்னேற்றம் அடைய மிக முக்கியமான தேவை கல்வியும், ஆகும். ஆகவே சமுதாயத்தின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் எதிர்கால குடிமக்களான இன்றைய மாணவர்களின் கைகளிலேயே உள்ளன. மாணவர்களை சமுதாயத்திற்கு நன்மைசெய்யும் சிறந்த சிற்பியாக மாற்றுவது ஆசிரியரின் சமுதாய பொறுப்பு ஆகும். ஆசிரியருக்கும் சமுதாயத்திற்கும் இடையேயான தொடர்பு பள்ளியில் இருந்தே தொடங்கிவிடுகின்றது. மாணவர்கள் பள்ளியில் பயிலும் போது சமுதாயத்துடன் அவர்களுக்கு உள்ள தொடர்பினை பாடத்திட்டத்தின் வழியே மட்டும் எடுத்துக் கூறாமல் பள்ளியில் பல்வேறு விழாக்களும் கூட்டங்களும் நடத்தி மக்களை அதில் பங்குபெற செய்து சமுதாயத்துடன் தங்களுக்கு உள்ள தொடர்பையும் மாணவர்களின் வளர்ச்சியே சமுதாய வளர்ச்சி என்பதையும் மாணவ பருவத்திலேயே ஆசிரியர் உணர வைத்து சமுதாய முன்னேற்றத்திற்கு வித்திடும் சமூக அக்கறை கொண்ட பணியாளரே ஆசிரியர் ஆவார். சமுதாயத்தின் இன்றியமையாத தேவைகளையும், பொருளாதார தேவைகளையும், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை மாணவர்களை அறியச் செய்து சமுதாயம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வளர்ச்சிப்பாதையில் செல்ல வழிவகுக்க ஆசிரியர் பணி செய்பவர்களால் மட்டுமே முடியும்.

**ஆசிரியரின் கற்றல்-கற்பித்தல் உத்திகள்:-**

பல்வேறு திறன்களின் செயல்பாடுகளை ஒருங்கமைத்து தந்து மாணவர்களின் கற்றலை வெற்றியடையச் செய்யவும், அறிவுத்திறனை வளர்க்கவும்,

i.) செயல்வழிக் கற்றல் - கற்பித்தல் முறைகள், கருவிகள்,

ii.) கதை கூறுல்

iii.) விழுமக் கல்வி

iv.) சிக்கல்களை தீர்த்தல்

v.) குழுகற்றல்

vi.) வகுப்பறைக்கு வெளியேயும் கற்கச் செய்தல்

பிரச்சனைகளை சுலபமாக தீர்த்தல் போன்ற உத்திகளை கையாளுதல் வேண்டும்.

**முடிவுரை**

அனைத்து மாணவர்களும் பல்வேறு சமுதாய பலத்தையும், பாரம்பரியம், பழக்கவழக்கத்தையும் அடிப்படையாக கொண்டு பள்ளிக்கு பயில வருகின்றனர் என்பதை ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு மாணவரின் திறமையும், தேவையும், கற்றலும் மாறுபடும் என்பதை உணர்ந்து கற்றல்-கற்பித்தல் உத்திகளை மாணவரின் திறன் மற்றும் தேவைக்கேற்ப பயன்படுத்தி ஒவ்வொரு மாணவரையும் கற்றலிலும், பள்ளியில் மட்டும் வெற்றியடைய செய்யாமல் அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும், சமுதாயத்திலும் வெற்றிபெற்றவர்களாக மாற்றும் கடமையும் பொறுப்புணர்வும், கொண்ட பணி ஆசிரியப்பணி என்பதை உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியரும் பணி செய்திட வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள்**

1) ஆசிரியரின் பண்புகளை பட்டியலிடுக
2) பயிலரங்குகள் பற்றி குறிப்பு வரைக.
3) கற்றல் - கற்பித்தலின் நோக்கங்கள் பற்றி விளக்கவும்.
4) ஆசிரியரின் திறன்களையும், தகுதியையும் விளக்கவும்.
5) ஆசிரியருக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள தொடர்வினைக் கூறுக.

&&&&

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## சென்னை - 600 097


இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு ( முதலாம் ஆண்டு) **2016-2017**

## பாடம் 1: குழந்தைப் பருவமும், வளர்ந்தோங்குதலும்
(Course 1: Childhood and Growing Up)

அலகு -1 - குழந்தைகளின் வளர்தல், வளர்ச்சி
**(Growth and development of the child)**

அலகு -2 - குழந்தை வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகள், பரிமாணங்கள்
**(Stages and dimensions of child development)**

முனைவர்.மா.கோவிந்தன் பேராசிரியர் & துறைத்தலைவர்

அலகு -3 - குழந்தை வளர்ச்சி பற்றிய கோட்பாடுகள்
**(Theories of the child development)**

அலகு -4 - குழந்தை வளர்ச்சியில் சமூகமயமாக்கும் முகமைகள்
**(Socializing agencies of child development)**

முனைவர். த.சிவசக்தி ராஜம்மாள், உதவிப் பேராசிரியர்

அலகு -5 - பாலின வார்ப்புகளும், பாலின பங்களிப்பும்
**(Gender stereotype and gender role)**

அலகு -6 - விளிம்புநிலைக் குழந்தைகள்: பிரச்சனைகளும் தீர்வுகளும்
**(Marginalized children: Issues and concerns)**

முனைவர்.ப.ந.லட்சுமி சண்முகம், உதவிப் பேராசிரியர்

அலகு -7 - வளரிளம் பருவத்தினரை புரிந்து கொள்ளல்
**(Understanding of adolescence)**

அலகு -8 - விளையாட்டும், குழந்தையின் வளர்ச்சியும்
**(Play and child development)**

முனைவர். வெ.வாசுதேவன், உதவிப் பேராசிரியர்

அலகு -9 - குழந்தைப் பருவமும், வளர்ச்சியும்
**(Childhood and development)**

அலகு -10 - குழந்தை வளர்ச்சியில் நகரமயமாதலும், பொருளாதார மாற்றமும்
**(Urbanisation and economic change in child development)**

திரு.சா.பாலமுருகன், உதவிப் பேராசிரியர்

---


***கல்வி உளவியல் துறை***

***தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்***

***சென்னை- 600 097***

## அலகு – I
## குழந்தைகளின் வளர்தல், வளர்ச்சி
## (Growth and Development of the Child)

### நோக்கங்கள் (Objectives)

இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்,

1. வளர்தல், வளர்ச்சி பற்றிய கருத்துகளை புரிந்துகொள்ள முடியும்.
2. வளர்தல், வளர்ச்சி பற்றிய கொள்கைகளைத் தெரிந்துகொள்ள முடியும்.
3. வளர்தல், வளர்ச்சி ஆகிய இரண்டினையும் வேறுபடுத்திட முடியும்.
4. குழந்தைகளின் வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய காரணிகளை கண்டறிய முடியும்.
5. குழந்தைகளின் வளர்ச்சியில் மரபு சூழ்நிலை ஆகியவைகளின் விளைவுகளை பகுத்தாராய முடியும்.

### முன்னுரை (Introduction)

பொதுவாக குழந்தைப் பருவம் என்பது பிறப்பிலிருந்து வளரிளம் பருவம் வரை உள்ள காலமாகும். இந்தப் பருவத்தில் குழந்தைகள் பள்ளி, விளையாட்டு ஆகியவைகளில் அதிக நேரம் பங்கெடுக்கின்றனர். மேலும் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் போன்றவர்களின் அன்பினையும், ஊக்குவிப்பினையும் பெறக்கூடிய காலமாகும். இந்த காலத்தில் குழந்தைகள் பயத்திலிருந்து விடுபட்டும், வன்முறைகளில் இருந்து பாதுகாக்கப்பட்டும், தவறான முறைகள், ஏமாற்றுகளில் இருந்து பாதுகாக்கப்பட்டும் வளர்க்கப்படவேண்டும். இந்தப் பருவத்தில் குழந்தைகள் தரமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும்.

### வளர்தல், வளர்ச்சி (Growth and Development)

மாற்றம் என்பது இயற்கையின் நியதியாகும். உயிருள்ள ஜீவன்கள், உயிரற்ற சடப்பொருள்கள் அனைத்தும் மாற்றத்திற்குட்பட்டதாகும். குழந்தையானது, தந்தையின் உயிரணுவினால் தாயின் கருவறையில் கருவாக வளர்ச்சிபெற்று மனித உயிராக உருவெடுத்து வாழ்க்கையை தொடங்குகின்றது. தாயின் கருவரையில், கருவானது கிட்டத்திட்ட ஒன்பது மாதங்கள் பாதுகாப்புடன் வளர்ந்து பச்சிளங் குழந்தையாக உலகிற்கு அறிமுகமாகின்றது. வளர்தல், வளர்ச்சி ஆகிய நிகழ்வுகளானது உயிர்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஊடகமாக அமைகின்றன.

### வளர்தல்: பொருள், வரையறை (Growth: Meaning and Definition)

'வளர்தல்' என்ற சொல்லானது உடலியல் முதிர்ச்சியின் செயல்பாட்டையும், அதன் விளைவாக உடல் அமைப்பு பெரிதாவதையும், உடலுறுப்புகள் வளர்ச்சியடைவதையும் குறிக்கின்றது. செல்களின் பெருக்கத்தினாலும், செல்லக பொருட்களின் கூடுதலினாலும் இந்த நிகழ்வு ஏற்படுகிறது. உடலமைப்பில் ஏற்படும் மாற்றத்தினை கிலோகிராம், பவுண்ட், மீட்டர், இன்ச் போன்றவைகளின் மூலம் அளவிட முடியும்.

'வளர்தல்' என்பது உருவ அளவு அதிகரித்தல் அல்லது அமைப்பில் மாற்றம் ஏற்படுதலாகும் என்று பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம் (Encyclopaedia of Britannica) வரையறுக்கிறது. மனிதனின் முதிர்ச்சியடைதல் செயல்முறைகளில் ஏற்படும் அனைத்து உடலியல், அமைப்பியல் மாற்றங்களே 'வளர்தல்' எனப்படும்.

உருவ அளவில் மாற்றம், விகிதாச்சாரத்தில் மாற்றம், பழைய உடல் அமைப்பில் மாற்றமடைந்து புதிதாய் மிளிர்வதே வளர்தல் என்று **ஹர்லாக் (Hurlock, 1959)** குறிப்பிடுகிறார்.

"வளர்தல்" என்பது அமைப்பியல் உடலியல் மாற்றங்கள் என்று **குரோ குரோ (Crow and Crow, 1962)** குறிப்பிடுகின்றனர்.

### வளர்ச்சி: பொருள், வரையறை (Development: Meaning and Definition)

‘வளர்ச்சி’ என்ற சொல்லானது செயல்பாடுகளின் முதிர்ச்சியை குறிப்பிடுகிறது. நரம்பு மண்டல வளர்ச்சி முதிர்ச்சி, மனிதர்கள் முழுமையாக செயல்படுவதற்கு தேவையான பல்வேறு திறன்களை பெறுதல் போன்றவைகள் வளர்ச்சியுடன் தொடர்புடையது. வளர்ச்சி என்பது குழந்தைகளின் செயல்களில் ஏற்படும் பண்புறு மாற்றத்தினை குறிப்பிடுகிறது. இம்மாற்றத்தினை உற்றுநோக்கல் மூலம் அளவிட முடியும்.

உயிரியின் அளவு, அமைப்பு செயல்பாடுகளில் ஏற்படும் அபரிதமான மாற்றம் ஆகியவைகளின் விளைவாக மரபியல் ஆற்றலானது வளர்ச்சியடைந்த அமைப்பின் செயல்பாட்டிற்கு மாற்றமடைவதே வளர்ச்சி என்று பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம் வரையறுக்கிறது.

முதிர்ச்சி அனுபவங்களின் விளைவுகளினால் ஏற்படும் சீரான, யூகிக்கக்கூடிய அபரிதமான தொடர் மாற்றமே வளர்ச்சி எனப்படும் என்று **ஹர்லாக் (1959)** குறிப்பிடுகிறார்.

சுற்றுப்புற நிகழ்வுகளின் விளைவாக நடத்தையில் ஏற்படும் அபரிதமான வளர்தல் மாற்றமே வளர்ச்சி ஆகும் என்று **ஆண்டர்சென் (1950)** குறிப்பிடுகிறார்.

### வளர்தல், வளர்ச்சி பற்றிய கொள்கைகள்
### (Principles of Growth and Development)

**ஹர்லாக் (Hurlock, 2015)** என்பவர் எழுதிய குழந்தை வளர்ச்சி (Child Development) என்ற நூலில் வளர்தல் வளர்ச்சி பற்றி 10 கொள்கைகளை குறிப்பிட்டுள்ளார். அவைகள்

1. வளர்ச்சியானது மாற்றத்திற்கு உட்டபட்டதாகும்.
2. முன் பருவ வளர்ச்சியானது பின்பருவ வளர்ச்சியை விட நெருக்கடியானதாகும்.
3. வளர்ச்சியானது முதிர்ச்சி கற்றலில் ஆகியவைகளின் வெளிப்பாடாகும்.
4. வளர்ச்சிசார் நடைமுறையானது யூகிக்ககூடிய பண்புகளை பெற்றுள்ளது.
5. வளர்ச்சிசார் நடைமுறையானது யூகிக்கக்கூடிய ஒன்றாகும்.
6. வளர்ச்சியில் தனிநபர் வேறுபாடு காணப்படும்.
7. வளர்ச்சிசார் நடைமுறையானது கால நிலைக்கு உட்பட்டது.
8. ஒவ்வொரு வளர்ச்சிசார் நடைமுறைக்கும் சமுதாய எதிர்ப்பார்ப்புகள் உண்டு.
9. வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையும் கடுமையான ஆபத்துகள் நிறைந்ததாகும்.
10. மகிழ்ச்சியானது வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் மாறுபடுகிறது.

### வளர்தல், வளர்ச்சி ஆகியவைகளுக்கிடையேயான வேறுபாடு

### (Difference between Growth and Development)

பெரும்பாலன மக்கள் வளர்தல், வளர்ச்சி ஆகிய இரண்டு வார்த்தைகளுக்கும் ஒரே மாதிரியான பொருள் கொள்கிறார்கள். ஆனால் இவையிரண்டும் வெவ்வேறான பொருள் கொண்டவை. வளர்தல் என்பது உடல், உடலமைப்பில் ஏற்படும் மாற்றத்தினை குறிப்பதாகும். ஆனால் வளர்ச்சி என்பது உடலுறுப்புகளின் செயல்பாடுகளில் ஏற்படும் மாற்றத்தினை குறிப்பதாகும்.

| வளர்தல் | வளர்ச்சி |
|---|---|
| 1. வளர்தல் என்பது பருமன் சார்ந்தது. | 1. வளர்ச்சி என்பது பண்பு சார்ந்தது. |
| 2. வளர்தல் என்பது உடல் ரீதியாக ஏற்படும் வடிவம் நீளத்தை குறிக்கிறது. | 2. வளர்ச்சி என்பது உடல் பருமன், வடிவம், அமைப்பு போன்றவற்றின் மாற்றங்களையும், அதனடிப்படையிலான செயல்களையும் குறிக்கிறது. |
| 3. வளர்தலானது வாழ்நாள் முழுவதும் தொடர்வதில்லை. முதிர்ச்சி நிலையை | 3. வளர்ச்சியானது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக நடைபெறக் கூடியது. |

| | |
|---|---|
| அடைந்தவுடன் வளர்தல் நின்றுவிடுகிறது. | |
| 4. வளர்தல் மூலம் ஏற்படும் மாற்றமானது அளவிடக்கூடியதும் எண்ணிடக் கூடியதாகும். | 4. வளர்ச்சி என்பது செயல், நடத்தையில் ஏற்படும் முன்னேற்றத்தினை குறிக்கிறது. இதனை உற்றுநோக்கல் மூலம் அளவிட முடியும். |
| 5. வளர்தலானது செல்களின் (cells) பெருக்கத்தினால் ஏற்படுகிறது. | 5. வளர்ச்சியானது சீராக முன்னேறக் கூடியதாகும். |

**குழந்தையின் வளர்தல், வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்தும் காரணிகள்**

**(Factors Influencing Growth and Development of the Child)**

வளர்தல், வளர்ச்சியானது பல்வேறு காரணிகளை சார்ந்தது. இவைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வளர்தல், வளர்ச்சி ஆகியவைகளின் செயல்முறைகளில் ஆதிக்கம் செலுத்துகிறது.

**காரணிகள் (Factors)**

- **பிறப்பிற்கு முந்தைய காரணிகள் (Prenatal factors)**
  - ஜீன்களின் ஆற்றல்
  - பாலினம்
  - கரு ஹார்மோன்கள்
  - கரு வளர்தல் பண்புகள்
  - தொப்பூழ்கொடி காரணிகள்
  - தாயின் பண்புகள்
- **பிறப்பிற்கு பிந்தைய காரணிகள் (Postnatal factors)**
  - சத்துணவு
  - தொற்று நோய்கள்
  - ஹார்மோன்களின் ஆதிக்கம்
  - வேதியியல் நிகழ்வுகள்
- **சமூகக் காரணிகள் (Social factors)**
  - சமூக பொருளாதார நிலை
  - வறுமை
  - இயற்கை வளங்கள்
  - தட்பவெப்ப நிலை
  - மனவெழுச்சி காரணிகள்
  - இயற்கை, உளவியல் சூழ்நிலை
  - கலாச்சார காரணிகள்

**குழந்தை வளர்ச்சியில் மரபு சூழ்நிலை ஆகியவைகளின் தாக்கம்**

**(Impact of Nature and Nurture on Child Development)**

வளர்ச்சிசார் மாற்றமானது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒன்றாகும். இந்த செயல்முறையானது வாழ்நாளில் நன்மையும், தீமையும் கொண்டதாக இருக்கும். கடந்த காலங்களில் குழந்தை வளர்ச்சியில் மரபு, சூழ்நிலை ஆகியவைகளின் தாக்கத்தினை பற்றிய விவாதங்கள் நடைபெற்றாலும் தற்போதும் அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இன்றைய சூழலில் குழந்தைகளின் வளர்ச்சியில் மரபு சூழ்நிலை ஆகிய இரண்டுமே மிக முக்கியமான காரணிகளாக அமைகிறது என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தையின் உருவாக்கத்தில் மரபின் பங்கு முக்கியமானதாக கருதப்பட்டாலும், அதன் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்வதில் சூழ்நிலையின் பங்கும் அதிகமாக உள்ளது. இவ்வாறு மரபு

சூழ்நிலை, ஆகியவைகளின் தாக்கம் குழந்தைகளின் வளர்ச்சியில் ஆதிக்கம் செலுத்துவதை தான் இடைவினை புரிதல் அணுகுமுறை (Interactionist approach) என்கிறோம்.

### மரபு சூழ்நிலை (Nature Vs Nurture)

மரபு (Nature), சூழ்நிலை (Nurture) ஆகிய இரண்டுமே உளவியல் சார்ந்த சொற்களாகும். மனிதனின் உளவியல்சார் வளர்ச்சிகளான நடத்தைமாற்றம் (Behaviour), நுண்ணறிவு (Intelligence), ஆளுமை (Personality) போன்றவைகளில் அதிக அளவு விளைவுகளை மரபு, சூழ்நிலை காரணிகள் எவ்வாறு ஏற்படுத்துகின்றது என்பதையும் தெளிவாக்குகிறது.

மரபு, சூழ்நிலை ஆகியவற்றின் பற்றி விவாதிக்கும் போது, மரபு என்பது தனிமனிதனின் பிறவிசார் குணங்களையும், சூழ்நிலை என்பது அவரது சுய அனுபவங்களையும் குறிப்பிடுகிறது.

கேள்வி என்னவென்றால் குழந்தையின் வளர்ச்சியில் அதிக அளவு செல்வாக்கு (influence) செலுத்தக்கூடியது மரபியலா? அல்லது சூழ்நிலையா? என்பதுதான். குழந்தையின் வளர்ச்சியில் உயிரியல் சூழ்நிலையியல் காரணிகள் எந்த அளவு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றி இன்றளவும் அதிகப்படியான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**ஜான் லாக் (1632-1704)** என்பவரது கருத்துப்படி குழந்தைகள் ஒன்றும் வெற்று எழுது பலகை அல்ல. இதனடிப்படையில் பார்த்தால் குழந்தைகளின் பண்புநலன்கள் அவர்களின் அனுமானத்தின் அடிப்படையிலேயே வடிவமைக்கப்படுகிறது. லாக் அவர்களின் கருத்துப்படி பெற்றோர்கள்தான் சிறந்த ஆசிரியர்கள், அவர்கள் தங்களின் குழந்தைகளை கனிவான கற்றுக்கொடுத்தல் மூலமும், நல்ல எடுத்துக்காட்டுகள் மூலமும், நல்ல நடத்தைகளை பின்பற்றும்போது வெகுமதியளித்தும் தங்கள் விருப்பபடி உருவாக்குகிறார்கள். மேலும் லாக் அவர்களின் கூற்றுப்படி வெற்று எழுது பலகையாக உள்ள குழந்தைகளை மரபு, சூழ்நிலை ஆகிய இரண்டும் அவர்களை வெற்றியாளர்களாக வடிவமைக்கிறது.

**ஜுன் ஜேக்ஸ் ரூசோ (1712-1778)** அவர்கள் குழந்தைகளைப் பற்றி புதிய கருத்தினை அறிமுகப்படுத்தினார். ரூசோ அவர்களின் கருத்துப்படி முதிர்ச்சி பெற்றவர்களின் அறிவுரைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு குழந்தைகள் ஒன்றும் வெற்று எழுது பலகையுமல்ல அல்லது வெற்று பாத்திரமும் அல்ல. அவர்கள் புனிதர்கள். நல்லது எது, கெட்டது எது என்பதை அறிந்து நலமுடனும், சீருடனும் வளர்வதற்கான ஆற்றலை இயற்கை அவர்களுக்கு கொடுத்துள்ளது. குழந்தை மைய தத்துவம் அறிவுறுத்துவது என்னவெனில் குழந்தைகளின் பல்வேறு நிலைகளான குழவிப்பருவம், குழந்தைப்பருவம், பின்குழந்தைப் பருவம், வளரிளம் பருவம் ஆகியவைகளில் வயது முதிர்ந்தவர்கள் குழந்தைகளின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்பவராக இருக்க வேண்டும்.

ரூசோவின் தத்துவமானது படிநிலை (Stage), முதிர்ச்சி (Maturity) ஆகிய இரண்டு ஆதிக்கம் செலுத்தக்கூடிய கருத்துக்களை உள்ளடக்கியதாகும். முதிர்ச்சி என்பது மரபுகளால் நிர்ணயிக்கப்பட்டு இயற்கையாக மலரக்கூடிய வளர்ச்சியை குறிப்பதாகும். ரூசோவின் பார்வைப்படி குழந்தைகள் தங்களின் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக் கொள்கிறார்கள். குழந்தைகளின் வளர்ச்சியானது, தொடர்ச்சியற்ற, வரிசைகிரமமான இயற்கை வகுத்து கொடுத்த பாதையில் நடைபெறும் செயலாகும் என்று ரூசோ குறிப்பிடுகிறார்.

### மரபியல் குறைபாடுகள் (Genetic Disorder)

தற்போது 7000 க்கும் மேற்பட்ட மரபியல் குறைபாடுகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. பெரும்பாலான மரபியல் குறைபாடுகள் குழந்தைகளின் வளர்ச்சிசார் செயல்களை பாதிப்பதுடன், உடல்சார்ந்த நோய்கள், மனநோய்கள், மனவளர்ச்சி குன்றுதலுக்கும் காரணமாகின்றது. உதாரணத்திற்கு Down syndrome, Fragile syndrome Alzheimer's diseases போன்றவைகள்.

Down syndrome, Fragile syndrome Alzheimer's diseases போன்றவகைள் மரபணு சார்ந்தது. மன இறுக்கமானது (Autism) மரபியல் சூழ்நிலை ஆகிய காரணிகளால் ஏற்படுவதாகும்.

ஜிம் லெவிஸ் (Jim Lewis) ஜிம் ஸ்பிரிஞ்சர் (Jim Springer) ஆகிய ஒரு கரு இரட்டையர்களை (identical twins) அவர்களின் இளம் வளதிலேயே பிரித்து தனித்தனியே வளர்த்தனர். மின்னசோட்டா

(Minnesota) இரட்டையர் ஆய்வானது அவர்களின் வளர்ச்சி மாற்றத்தில் மரபியல் சூழ்நிலை எந்த அளவு தொடர்பு கொண்டுள்ளது என்பதை குறிப்பிட்டு காட்டுகிறது.

ஜிம் லெவிஸ், ஜிம் ஸ்பிரிஞ்சர் ஆகிய இருவர்களின் வாழ்க்கையிலும் சில திகைப்பான ஒற்றுமைகள் இருப்பதை மின்னசோட்டா ஆய்வானது நிரூபித்துள்ளது.

- இரு குழந்தைகளுமே பதற்றத்துடன் உறங்குதல், நகம் கடித்தல் போன்ற பழக்கங்களை கொண்டிருந்தனர்.
- இருவருமே ஒற்றைத் தலைவலி, இரத்த உறைவு, அதிக இரத்த அழுத்தம் உடையவர்களாக இருந்துள்ளனர்.
- இருவருமே தங்களின் செல்ல பிராணியான நாய்க்கு ஜாய் (Joy) என்று பெயர் சூட்டடியிருந்தனர்.
- இருவருமே லிண்டா என்ற பெயருடைய பெண்களை திருமணம் செய்துள்ளனர். இருவருமே விவாகரத்து பெற்றிருந்தனர். பிறகு இருவருமே பெல்டி (Belty) என்ற பெயருடைய பெண்களை மறுமணம் புரிந்துள்ளனர்.
- ஜிம்ஸ் லெவிஸ், ஜிம் ஸ்பிரிஞ்சர் இருவருமே தங்களின் முதல் ஆண் குழந்தைக்கு ஜேம்ஸ் ஆலன் என்று பெயர் சூட்டி இருந்தனர்.
- இருவருமே Sheriff's deputies ஆக பணி செய்துள்ளனர்.
- இருவருமே விடுமுறை நாட்களில் புளோரிடா கடற்கரைக்கு செல்வதை விரும்பியுள்ளனர். இருவருமே ஒரே பெயருடைய பீர் (Beer) குடிப்பதையும், ஒரே பெயருடைய வெண்சுருட்டை (Cigarette) புகைப்பதையும் விரும்பியுள்ளனர்.

ஒரு கரு இரட்டையர்கள் (identical twins) மாறுபட்ட இரட்டையர்களை (Non identical twins) விட பெரும்பாலான உளவியல் சோதனைகளில் ஒருமித்தவர்களாக காணப்பட்டனர். உதாரணத்திற்கு ஜிம்ஸ் இரட்டையர்கள் ஆளுமை, நுண்ணறிவு ஆகிய சோதனைகளில் ஒரே மாதிரியான மதிப்பெண்களை பெற்றிருந்தனர். மேலும் ஒரே மாதிரியான கையெழுத்து உடையவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். (Tollegenetal, 1988)

குழந்தைகளின் வளர்ச்சியில் மரபு, சூழ்நிலை இரண்டுமே அதிக அளவு பங்கு பெற்றுள்ளது. இவை இரண்டையும் தனித்தனியாக பிரித்து பார்ப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். ஆனாலும் இந்த இரண்டில் எந்த ஒன்று குழந்தைகளின் வளர்ச்சிசார் செயல்களில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதே கேள்வியாகும்.

பெரும்பாலான நிகழ்வுகளில் உள்ளீடுகளை தீர்மானிப்பதில் மரபணு பங்கெடுத்தாலும், வெளியீடுகளை சூழ்நிலை தீர்மனிக்கிறது.

மேற்கண்ட ஆய்வு முடிவுகளில் இருந்து நாம் புரிந்துகொண்டது என்னவென்றால் **'nature Vs nurture'** என்ற கூற்றினை **'nature and nurture'** என்று மாற்ற வேண்டும்.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள்**

**Questions for Discussion and Reflection**

1. வளர்தல், வளர்ச்சி – வரையறு.
   Define the terms 'growth' and 'development'.

2. வளர்தல், வளர்ச்சி பற்றிய கொள்கைகளை பட்டியலிடுக.
   List out the principles of growth and development.

3. வளர்தல், வளர்ச்சி ஆகியவைகளை வேறுபடுத்துக.
   Distinguish between growth and development.

4. குழந்தைகளின் வளர்தல், வளர்ச்சி ஆகியவைகளில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய காரணிகளை விவரிக்கவும்.
   Explain the factors influencing growth and development of the child.

5. குழந்தைகளின் வளர்ச்சியில் மரபியல், சூழ்நிலை ஆகியவைகளின் தாக்கத்தினைப் பற்றி கட்டுரை ஒன்று வரைக.
   Write on essay on the impact of nature and nurture on child development.

## அலகு – II

## குழந்தை வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகள், பரிமாணங்கள்

## (Stages and Dimensions of child Development)

**நோக்கங்கள் (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்,

1.குழந்தைகள் வளர்ச்சியில் காணப்படும் பல்வேறு படிநிலைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும்.

2.கருவுறுதல் காலங்களைப் பற்றி புரிந்துகொள்ள முடியும்..

3.குழவிப் பருவம் முதல் வளரிளம் பருவம் வரையில் நடைபெறும் உடல் வளர்ச்சி, அறிகை வளர்ச்சி, சமூக வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி ஆகியவைகளைப் பற்றி புரிந்துகொள்ள முடியும்.

**முன்னுரை (Introduction)**

பிறப்பு என்பது வாழ்க்கையின் ஆரம்பம் அல்ல, மாறாக இது கருவுறுதல் முதற்கொண்டு தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் பிறப்பு என்பது ஒரு குழந்தையானது தாயின் கர்ப்பபையில் வளரும் சூழ்நிலையில் இருந்து புற உலகிற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளும் பாங்கினை குறிக்கிறது.

குழவிப் பருவத்தை இரண்டு வகையான காலங்களாக பிரிக்கலாம்.

காலங்கள்
- 1.குழந்தை பிறந்தவுடன் உள்ள காலநிலை(Partunate). அதாவது குழந்தை பிறந்து 15-30 நிமிடங்கள் வரை உள்ள காலம்.
- 2.பச்சிளம் குழந்தை பருவம் (Neonate)

**பச்சிளம் பருவம் (Neonate)**

Neonate என்ற சொல்லானது 'Neos'என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறப்பட்டதாகும். மேலும் லத்தீன் வினைச் சொல்லான 'Nascor' என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 'Neos' என்பதுற்கு 'new' என்றும் 'nascor' என்பதற்கு 'born' என்றும் ஆங்கிலத்தில் பொருள்.

மருத்துவ நியதிப்படி பச்சிளம் பருவம் என்பது குழந்தை பிறந்து சுமார் 2 வாரத்திற்கு பிறகு தொப்புழ் கொடி அறுந்துவிழும் வரை உள்ள காலத்தை குறிப்பதாகும்.

உளவியல் நியதிப்படி பச்சிளம் பருவம் என்பது பிறந்த குழந்தையானது தான் இழந்த எடையை மீண்டும் (regaining of lost birth weight) பெறும் வரை உள்ள காலத்தை குறிப்பதாகும்.

**வளர்தல், வளர்ச்சி ஆகியவைகளின் படிநிலைகள்** (Stages of Growth and Development)

1.பிறப்பிற்கு முந்தைய காலம் (Prenatal Period)

பிறப்பிற்கு முந்தைய காலம் என்பது கருவுற்றதிலிருந்து குழந்தை பிறக்கும் வரையிலான 9 மாத காலத்தை குறிப்பதாகும். இந்த 9 மாதத்தில் ஒரு செல் உயிரியானது பல

மாற்றங்களை அடைந்து சுற்றுப்புற உலகிற்கு ஏற்ற இணக்கமான திறன்களை பெற்று ஒரு குழந்தையாக உருவாகிறுது.

2.குழவிப்பருவம் (Infancy)
- 1.பச்சிளம் குழந்தை–பிறந்ததிலிருந்து 1 மாதம் வரை உள்ள காலம். (Neonate)
- 2.சிசுப்பருவம் - 1 மாதத்திலிருந்து 1 வருடம் வரை உள்ள காலம். (Infancy)

3.முன்குழந்தைப்பருவம் (Early Childhood)
- 1.தளர்நடைபருவம் - 1 முதல் 3 வருடங்கள் (Toddler)
- 2.முன்பருவ பள்ளிப் பருவம் - 3 முதல் 6 வருடங்கள் வரை (Pre Schooler)

**4. பள்ளிப்பருவம்** - 6 முதல் 12 வருடங்கள் வரை
(Middle Childhood)

**5.வளரிளம்பருவம்** - தோரயமாக 13 முதல் 18 வருடங்கள் வரை
(Adolescent)

1. **பிறப்பிற்கு முந்தைய காலம் (Prenatal Period)**

பிறப்பிற்கு முந்தைய காலம் என்பது கருவுறுதலுடன் தொடங்குகிறது. கருவுற்றலின் போது 38 வாரங்களில் நடைபெறும் மாற்றத்தினை பொதுவாக 3 கால நிலைகளாக பிரிக்கலாம். அவைகள்

a. **கருவின் ஆரம்ப நிலை** (Period of Zygote)

கருவின் ஆரம்பநிலை என்பது கருவுற்றலில் இருந்து இரண்டு வாரத்தில் முடியும் காலத்தை குறிக்கிறது. அந்த சமயத்தில் பாலோப்பியன் குழாயில் இருந்து வெளிப்படும் அதிக அளவிலான செல்கள் கர்ப்பபையின் சுவரில் பதிகமாகிறது. கருவுற்றதிலிருந்து சுமார் 30 மணி நேரத்திற்கு பிறகே சைகோட்டின் முதல் செல்லானது பல்கிப் பெருகுகிறது. இதனைத் தொடர்ந்து 4 வது நாளில் 60-70 செல்கள் இணைந்து ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி பிளாஸ்டோசிஸ்ட் (Blastocyst) என்ற திரவம் நிறைந்த பந்தை உருவாக்குகிறது. பிளாஸ்டோசிஸ்ட்டின் உள்ளே உள்ள செல்கள் கருவட்டு (Embryonic disk) என்று அழைக்கப்படுகிறது. இதுவே ஒரு புதிய உயிரியாக உருவாகிறது. ட்ரோபோபிளாஸ்ட் (Trophoplast) என்று அழைக்கப்படும் மெலிந்த வெளி வளைய செல்கள் உயிரிக்கு வடிவத்தை கொடுத்து பாதுகாத்து ஊட்டமளிக்கிறது.

b. **கருமுட்டை காலம்** (Period of Embryo)

கருவுற்ற 8 வது வாரத்தில் கருபதித்தலோடு கருமுட்டை காலம் நிறைவுறுகிறது. முதல்வாரத்தில் கருவட்டானது 3 வகையான செல் அடுக்குகளை உருவாக்குகிறது. அவைகள்

i). **வெளியுறை** (Ectoderm)

இது நரம்புமண்டலம் தோலாக மாறுகிறது.

ii). **நடுவுறை** (Mesoderm) -இது தசைகள், எலும்பு மண்டலம் இரத்த ஓட்ட மண்டலமாக மாறுகிறது.

iii). **உள்வுறை (Endoderm)**

இது செரிமான மண்டலம், நுரையீரல், சிறுநீர் பாதை, சுரப்பிகளாக மாறுகிறது.

கிட்டத்தட்ட 32 வது நாளில் சிசுவின் தலை பெரிதாகி மூளை உருவாகிறது. கருவுற்ற முதல் மாத இறுதியில் கருவானது ¼ இன்ச் நீளத்துடன் மில்லியன் கணக்கிலான செல்களை கொண்டிருக்கும். மேலும் வாய், கண்கள், மூக்கு, தாடை, கழுத்து பகுதி போன்றவைகள் உருவாகிறது. இந்தத் தருணத்தில் கருமுட்டையானது 1 இன்ச் நீளமும் 1 அவுன்ஸ் எடை கொண்டதாகவும் இருக்கும். 7வது வாரத்தில் அதிவேகமாக அதாவது 1 நிமிடத்திற்கு 250000 நியூரான்கள் நரம்புக் குழாயின் உள்ளே உற்பத்தியாக தொடங்குகிறது.

**c.வளர்கரு காலம் (Period of Fetus)**

வளர்கரு காலமானது பிறப்பிற்கு முந்தைய கால நிலையின் நீண்ட கால நிலையை கொண்டது, அதாவது கருவுற்ற 9 வது வாரம் தொடாங்கி குழந்தை பிறக்கும் வரை உள்ள காலத்தை குறிக்கிறது. மேலும் 3 வது மாதத்தில் சிசுவின் உடல் உறுப்புகள், தசைகள் நரம்பு மண்டலம் ஆகியவை ஒன்றோடொன்று ஒருங்கமைத்து இணைக்கப்படுகிறது.

பிறப்பிற்கு முந்தைய காலத்தை சில நேரங்களில் முப்பருவங்களாக அல்லது மூன்று சம காலங்களாக பிரிக்கலாம். மூன்றாவது மாதத்தின் இறுதியில் முதல் முப்பருவம் (trimesters) முடிவடைகிறது. இரண்டாவது முப்பருவ மத்தியில் அதாவது 17-20 வாரங்களின் இடையில் சிசுவானது பெரிய அளவில் வளர்ச்சி அடைகிறது. இதனை சிசுவின் அசைவின் மூலம் தாய்மார்கள் உணரமுடியும். இரண்டாவது முப்பருவ முடிவில் சிசுவின் பல்வேறு உறுப்புகள் நன்கு வளாச்சி அடைகிறது. 20 வது வாரத்தில் இருந்து குழந்தை பிறக்கும் வரை சிசுவின் மூளை எடையானது 10 மடங்கு அதிகரிக்கிறது. இறுதி முப்பருவ பகுதியில் சிசுவானது முழு வளர்ச்சி அடைந்து உயிர் வாழும் நிலையினை பெறுகின்றது. இந்த சமயத்தில் சிசுவானது 5 பவுன்ட் எடையும் 7 இன்ச் நீளமும் உடையதாக இருக்கும்.

**2.குழவிப் பருவம் (Infancy)**

குழவிப் பருவமானது பிறப்பிலிருந்து 1 வருடம் வரை நீடிக்கிறது. இந்த தருணத்தில் குழந்தைகள் பெற்றோர்களை முழுவதும் சார்ந்திருக்கும். மேலும் மொழி மேம்பாடு, அடையாள நினைவுகள், புலனுறுப்பு ஒருங்கிணைப்பு போன்ற செயல்கள் ஆரம்பமாகின்றது.

குழவிப் பருவத்தினரின் உடல், அறிகை, சமூக மனவெழுச்சி வளர்ச்சி

**Physical, Cognitive, Social and Emotional development of the Infancy**

| உடலியல் வளர்ச்சி (Physical Development) | அறிகை வளர்ச்சி (Cognitive Development) | சமூக மனவெழுச்சி வளர்ச்சி (Social and Emotional Development) |
|---|---|---|
| **உடலியல் வளர்ச்சி என்பது உயரம், எடை, எலும்பின் தன்மை, பார்த்தல், கேட்டல் போன்ற புலன் உறுப்பபுகளின் வளர்ச்சியினை குறிப்பதாகும்.**<br><br>• தலை முதல் பாதம் வரை மத்திய பகுதிமுதல் கைகால்களின் வளர்ச்சி.<br>• உயிர் வாழ்வதற்கு தேவையான தன்னியல்பான அடிப்படை செயல்களில் வளர்ச்சி.<br>• நெரும்பாலான நேரங்களில் உள்ளங்கைளை மடக்கியே வைத்திருப்பர்.<br>• கைகள், கண்களை ஒருங்கிணைக்க தெரியாது.<br>• தெரிந்த முகங்கள், குரலினை பார்க்கும்போது, கேட்கும் போது புன்னகை புரியும்.<br>• ஏதேனும் ஒரு அசையும்<br>• பொருளையே அல்லது பராமரிப்பாளரையோ பார்க்கும் போது கண்களை திருப்பும்.<br>• தன்னுடைய தோள்கள், கால்களை நெளிந்து கொடுக்கும்.<br>• முதல் பல் அல்லது பால்பற்கள் முளைக்கத் தொடங்கும்.<br>• சத்தம், அசைவுகள் வரும் திசைக்கு தன்னுடைய தலையை திருப்பும்.<br>• பால் குவளையை தன் கைகளால் பிடித்து பால்குடிக்கும்.<br>• பிறர் உதவியுடன் அமர ஆரம்பிக்கும்.<br>• பாலுறுப்புகளை அடிக்கடி தொடும். | **அறிகை வளர்ச்சி என்பது குழந்தை வளர்ச்சி நிலையில் காரணகாரியம் அறிதல், பிரச்சினைக்கு தீர்வு காணுதல், மொழி வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, உடலில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.**<br><br>• 12 முதல் 15 அங்குல தூரத்தில் உள்ள பொருட்களை காணமுடியும்.<br>• தாயின் குரலை கேட்டவுடன் புன்னகை புரியும்<br>• திடீரென சத்தம் கேட்கும் திசை நோக்கி திரும்பும்.<br>• சுவை வாசனை ஆகியவைகளை வேறுபடுத்தி அறிய முடியும்.சுவை நிறைந்த திரவ உணவுகளை தேர்வு செய்தும் மணமற்ற பொருட்களை விலக்கி வைக்கவும் செய்யும்.<br>• நிறங்கள், ஒளியை பார்க்கும்போது தலையை திருப்பும்.<br>• பராமரிப்பவர்களின் குரலால் கவரப்படும்.<br>• கண்பார்வையில் உணவு படும்போது வாயை திறந்து உண்பதற்கு எதிர்பார்க்கும்.<br>• பாரமரிப்பவர்களின் அசைவுகள் முகபாவங்களை பிரதிபலிக்கும்.<br>• ஒரே ஒரு பொம்மை மீது ஒரே நேரத்தில் கவனம் செலுத்தும்<br>• பராமரிப்பவர்கள் பேசும் வார்த்தைகள் அல்லது சத்தங்களை குழந்தைகள் பிரதிபலிக்கும்.<br>• முதன்முதலில் பேச ஆரம்பிக்கும். | **சமூக மனவெழுச்சி வளர்ச்சி ஆகியவைகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாகும். சமூக மனவெழுச்சி வளர்ச்சி என்பது பிறருடன் நட்புறவுடன் பழகுவதையும் இணக்கமுடன் செயல்படும் தன்மையையும் குறிப்பதாகும்.**<br><br>• பிறந்த குழந்தையானது சராசரியாக 17 முதல் 19 மணி நேரம் வரை உறங்கும்<br>• முக்கிய பராமரிப்பாளர்களை நினைவுகொள்ள ஆரம்பிக்கும்<br>• மற்றவர்கள் தன்னை பார்த்து சிரிக்கும் போது தானும் சிரிக்க ஆரம்பிக்கும்<br>• குழந்தைகளை கிச்சு கிச்சு மூட்டும் போது மகிழ்ச்சி அடையும்<br>• பழக்கப்பட்டவர்களின் குரலை கேட்கும் போது மகிழ்ச்சி அடையும்.<br>• முக்கிய பாராமரிப்பாளர்களிடம் அபரிதமான பாசம் கொள்ளும்.<br>• அந்நியர்களை பாத்தவுடன் பதட்டம் அடையும்<br>• பொம்மைகளை அவர்களிடமிருந்து எடுத்தால் எதிர்ப்பு காட்ட ஆரம்பிக்கும்<br>• பராமரிப்பவர்கள் தன்னை விட்டு போகும் போது அழ ஆரம்பிக்கும்.<br>• தன்னுடைய விளையாட்டு பொருட்களை மற்ற குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளும்<br>• பிடிவாதம், எதற்கெடுத்தாலும் கோபபடுதல் ஆகியவை அதிகமாக இருக்கும்.<br>• தனியாக விளையாட ஆரம்பிக்கும் |

| | | |
|---|---|---|
| • சமதரையில் தானே தலைகுப்புற கவிழும்.<br>• எந்த பொருளையும் வாயில் எடுத்து வைக்கும்.<br>• தானே நகர வலம்வர ஆரம்பிக்கும்.<br>• பிறா் உதவியுடன் குவளையில் பால் குடிக்க முயலும்<br>• தானாகவே அமர முடியும்.<br>• பிறா் உதவியுடன் நடக்க முற்படுவார்கள்.<br>• ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு பொருளை மாற்றும்.<br>• ஆட்காட்டிவிரல் நடுவிரல், கட்டை விரல்களின் துணையுடன் சிறுசிறு பொருட்களை எடுக்கும்.<br>• 4 முதல் 5 வாரங்களில் குழந்தை பிறக்கும்போது உள்ள எடையை போல இருமடங்காகவும், 10 முதல் 12 வாரங்களில் மும்மடங்காகவும் எடை அதிகரிக்கும்.(2.5 கிலோ கிராம் முதல் 3.5 கிலோகிராம்)<br>• 1 முதல் 3 மாதங்களில் 3 செ.மீ உயரமும், 4 முதல் 6 மாதங்களில் 2 செ.மீ உயரமும், 7முதல் 12 மாதங்களில் 1½ செ.மீ உயரமும் வளரும் (47.5-53.75செ.மீ) | | • நிதானம், திடீா் வெறித்தனம், ஆகிய செயல்கள் தொடங்கும் |

### 3.முன் குழந்தைப் பருவம் / முன் பள்ளி பருவம்

முன்குழந்தைப் பருவம் என்பது குழவி பருவ முடிவில் தொடங்கும் பருவம் ஆகும். இது குழந்தையின் 6 வயது வரை நீடிக்கும். இப்பருவக் காலத்தில் குழந்தைகள் பள்ளிச் செல்வதற்கு தேவையான திறன்களை பெறுகிறார்கள். மேலும் தனது ஒப்பார் குழுவினருடன் அதிக மணிநேரம் செலவிடுவா். இப்பருவத்தினை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

a. தளா் நடை பருவத்தினா் (Toddler) 1 - 3 வயது

b. முன்பருவ பள்ளியினா் (Pre - Schooler) 3 - 6 வயது

தளர்நடை பருவம் (Toddler) (1 முதல் 3 வருடம்)

| உடலியல் வளர்ச்சி (Physical Development) | அறிகை வளர்ச்சி (Cognitive development) | சமூக, மனவெழுச்சி வளர்ச்சி (Social and Emotional development) |
|---|---|---|
| • தனியாக நடக்க பயிலும்<br>• குனிந்த பின்பு மெதுவாக எழுந்து நிற்பார்கள்.<br>• மேஜை, நாற்காலி போன்றவற்றில் ஏறுவார்கள்.<br>• தனது கைவிரல்களை சப்புவார்கள்.<br>• உணவை நன்கு மென்று உண்ண பழகுவார்கள்<br>• விரைப்பான ஓட்டம் உடையவர்களாக இருப்பார்கள்.<br>• தண்ணீர், உணவு ஆகியவைகளை சைகை மூலமும், குரல் மூலமும் கேட்பார்கள்.<br>• எல்லா இடத்திலும் குதித்து விளையாடுவார்கள்.<br>• பென்சிலின் மூலம் விரல்களால் எழுதும் பழக்கம் உருவாதல்<br>• 6 லிருந்து 8 வரையிலான கனசதுரங்களைக் கொண்டு வடிவங்களை உருவாக்குதல்.<br>• ஆடைகளை குழந்தையை வளர்ப்பவர்கள் அணிவிப்பார்கள்.<br>• உணவுகளை கொத்துக் கரண்டி மூலம் உண்ண பழகுதல். | • 'இல்லை' என்ற வார்த்தைக்கு பொருள் புரிந்து கொள்வர்.<br>• புத்தகத்தில் உள்ள படங்களை பார்த்து கருத்துக்களை புரிந்து கொள்ளல்.<br>• எளிமையான கதைகளை கேட்பதன் மூலம் மகிழ்ச்சி அடைவார்கள்.<br>• 50 அல்லது அதற்கு மேற்பட்ட வார்த்தைகளை பேசத் தொடங்குவார்கள்.<br>• உடல் உறுப்புகளின் பெயர்களை தனித்தனியாக குறிப்பார்கள்.<br>• பிறர் கேட்கும்பொழுது தனது முழு பெயரை சொல்ல கூடியவராய் இருப்பார்கள்.<br>• 6 மீட்டர் தொலைவில் இருக்கும் நன்கு பழக்கப்பட்டவர்களை அடையாளம் சொல்வார்கள்.<br>• இரண்டு, மூன்று வண்ணங்களை பொருத்தி பார்க்கும் ஆர்வம் பெறுதல். | • முக்கிய பராமரிப்பாளர்களை அதிகமாக சார்ந்திருப்பார்கள்<br>• தன்னை வளர்ப்பவர்கள் எந்த நேரமும் தனது கண் பார்வையில் இருக்க வேண்டும் என நினைப்பார்கள்.<br>• விளையாட்டுகளில் மகிழ்ச்சியுடன் பங்குகொள்ளுதல்<br>• தன்னுடைய பொருட்களையும் உடைகளையும் தானே பாதுகாத்தல்<br>• பாராட்டுதலை எதிர்ப்பார்ப்பார்கள்.<br>• அச்சம் தரக்கூடிய பார்வை காட்சிகள், சத்தம் கேட்டல் போன்ற செயல்கள் மூலம் பய உணர்வை அடைவார்கள்.<br>• தனித்து விளையாடுவார்கள் அல்லது மற்ற குழந்தைகளுடன் வெளியே விளையாடுவார்கள்.<br>• பரிவு, கருணை, கூச்ச சுபாவம், போன்றவைகளை வெளிப்படுத்துவார்கள்<br>• விளையாட்டு பொருட்களை வைத்து மற்ற குழந்தைகளுடன் விளையாடுவார்கள் ஆனால் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள தயக்கம் காட்டுவார்கள். |

முன் பருவ பள்ளியினர் **(Pre – School ) (3-6 Years)**

| உடலியல் வளர்ச்சி **(Physical Development)** | அறிகை வளர்ச்சி **(Cognitive development)** | சமூக, மனவெழுச்சி வளர்ச்சி **(Social and Emotional development)** |
|---|---|---|
| • இந்நிலையில் வளர்ச்சி மிக குறைவாக தான் இருக்கும்.<br>• இந்நிலையில் குழந்தைகள் வருடத்திற்கு சுமார் 1.8 கிலோ வரை எடை கூடுவார்கள்<br>• பிறந்ததை விட 4 லிருந்து 5 வயதில் குழந்தைகளின் நீளம் இரண்டு மடங்கு அதிகமாக காணப்படும்.<br>• நிமிடத்திற்கு 80 லிருந்து 120 வரை நாடி துடிப்பு இருக்கும்<br>• சுவாசம்: 20லிருந்து 30C /ஒரு நிமிடத்திற்கு<br>• இரத்த அழுத்தம்: 100/67 +24/25<br>• அவர்களே தனது பற்களை துலக்குவார்கள்.<br>• கால்பந்து போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்.<br>• கழிவறையை பயன்படுத்துவார்கள். | • பொருட்களின் பெயர்களை சொல்லத் தெரிந்து கொள்வார்கள்.<br>• கத்திரிக்கோல், வண்ண உபகரணங்களை பயன்படுத்தி உருவங்களை செய்வார்கள்.<br>• அதிக அளவில் விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்.<br>• பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவார்கள்<br>• 2 அல்லது 3 வண்ணங்களை பொருத்துவார்கள்<br>• எண்கள், குறியீடுகள், வார்த்தைகள் ஆகியவைகளை பொருத்துவார்கள்.<br>• பெரியவர்களின் பேச்சு, செயல்களை தனது நடத்தையின் மூலம் பிரதிபலிப்பார்கள்.<br>• ஏன்? எதற்கு? எப்படி? போன்ற கேள்விகளை கேட்பார்கள்.<br>• வார்த்தைகளை உருவாக்குதல், தனது | • தனது நம்பிக்கைக்கும், செயல்களுக்கும் காரணம் கூறுவார்கள்.<br>• இருட்டை கண்டால் பயம் இருக்கும்.<br>• சமூகத்துடன் இணைந்து செயல்படுவார்கள்.<br>• குறைவான அளவே பெற்றோர்களை சார்ந்திருப்பார்கள்.<br>• மாற்றுப் பாலின பெற்றோர்களுடன் ஒன்றியிருப்பார்கள்<br>• எரிக்சனின் கோட்பாட்டின் படி, இந்த வயது குழந்தைகள் தன்னை பற்றிய கருத்துக்களை பிற மக்களிடமும், உலக செயல்களிலிருந்தும் கற்கிறார்கள்.<br>• தானே பல செயல்களை செய்தல், அதாவது கை கழுவுதல், சின்ன துணிகளை உடுத்துதல், மலம் கழித்தல் போன்ற |

| | | |
|---|---|---|
| | பெயரை எழுதுதல் போன்ற செயல்களை செய்வார்கள். | செயல்களை மேற்கொள்வார்கள்.<br>• தனக்குரிய நட்புகளை அமைத்துக் கொள்வார்கள்.<br>• தனியாகவே பல செயல்களை செய்வார்கள். |

**4.பள்ளிப் பருவம் (School Age) (6 லிருந்து 12 வயது)**

6 லிருந்து 12 வயதுடைய குழந்தைகளை பள்ளிப்பருவ குழந்தைகள் என்று கூறுவர். இதுவரையில் தனது குடும்பத்தாருடன் மட்டுமே பழகி வந்த குழந்தையானது, இப்பொழுது வெளி உலகத்தில் உள்ள மாணவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், தன் மீது அன்பு செலுத்துபவர்கள் போன்றவர்களுடன் பழகுகிறார்கள். இவ்வாறு அவர்கள் சமூகத்துடன் இணைந்து செயலாற்றும் போது பல அனுபவங்கள் கிடைக்கின்றது. இந்த சூழ்நிலையில் அவர்கள் பெறும் அனுபவங்களிலிருந்து தோன்றும் கற்றலானது அவர்களின் நடத்தையில் வெளிப்படும். சில சமயங்களில் இது அவர்களுடைய தன்மதிப்பை பாதிப்பதாகவும், மன அழுத்தத்தை தர கூடியதாகவும் அமையும். இப்பருவத்தினை குழந்தைகள் வளரிளம் பருவத்திற்கு தயாராகக் கூடிய காலம் என்றும் கூறலாம்.

| **உடலியல் வளர்ச்சி (Physical Development)** | **அறிகை வளர்ச்சி (Cognitive Development)** | **சமூக, மனவெழுச்சி வளர்ச்சி(Social and Emotional Development)** |
|---|---|---|
| • வளர்ச்சியானது மிக குறைவாகத்தான் இருக்கும். ஆனால் சீராக இருக்கும்.<br>• பள்ளி பருவ குழந்தைகள் வருடத்திற்கு 3லிருந்து 8 கிலோமுதல் எடை கூடுவார்கள்.<br>• இப்பருவத்தில் அவர்களின் உயரம் வருடத்திற்கு 5 cm உயரும்.<br>• நாடித்துடிப்பு: 90+15/ நிமிடம்.<br>• சுவாசித்தல்: 21+3cm / நிமிடம்.<br>• இரத்த அழுத்தம்: 100/60 _+ 16/10 என்ற | • வார்த்தைகளை புதிர்களுக்கு ஏற்றவாறு பொருத்துவார்கள்.<br>• சுலபமான அளவீட்டு முறைகளை பயன்படுத்துவார்கள்<br>• சரளமாக பேசுவார்கள்<br>• காரண காரிய உறவுகளை புரிந்து கொள்வார்கள்.<br>• கூட்டல், கழித்தல் ஆகியவற்றை நன்கு கற்பதன் மூலம் தீர்வு காண்பார்கள்.<br>• பெரிய வார்த்தைகளை உபயோகிப்பார்கள். | • மற்றவர்கள் மீது பொறாமை படும் குணம் கொண்டவராக இருப்பார்கள்.<br>• அடிக்கடி மனப்போராட்ட நிலையினை அடைவார்கள்<br>• பெற்றோர்களை விட நண்பர்களையே நம்புவார்கள்.<br>• திடீர் திடீரென கோபம் அடைவார்கள்.<br>• தன்னிச்சையாக பல நடவடிக்கைகளை செய்வார்கள்<br>• சகிப்புத்தன்மை |

| | | |
|---|---|---|
| நிலையில் இருக்கும்.<br>• காலணிகளை அவர்களே அணிவார்கள்<br>• கைகள், கண்களின் ஒருங்கமைவு நிலை சிறப்பாக இருக்கும்.<br>• தசை வளர்ச்சி நல்ல முன்னேற்றம் அடைந்த நிலையில் இருக்கும்.<br>• நன்கு சைக்கிள் ஓட்டுவார்கள்<br>• விளையாட்டு போட்டிகளில் ஆர்வமாக பங்கேற்பார்கள்<br>• ஆண்குழந்தைகளும், பெண்குழந்தைகளும் சமமான வளர்ச்சி, பாலியல் முதிர்ச்சி பெற்றிருப்பார்கள்.<br>• பால் பற்கள் விழுந்து நிலையான பற்கள் வளரும்<br>• கண்கள் நன்கு வளர்ச்சி அடைந்து செயல்படும். | • வாசித்தல் மூலம் பலவிதமான மகிழ்ச்சிகளை அடைவார்கள்.<br>• தகவல்கள், நிகழ்வுகள் ஆகியவைகளைப் பற்றி படிக்க விரும்புவார்கள்.<br>• சமூக, உலகளாவிய பிரச்சனைகளை குறித்து விவாதம் செய்வதில் ஆர்வம் கொள்வார்கள்.<br>• மௌனமாக படிக்கும் பழக்கத்திற்கு முன்னுரிமை தருவார்கள்.<br>• படங்களில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிவார்கள்<br>• அனைத்து வண்ணங்களையும் தெளிவாக கூறுவார்கள் | சிறிதளவே காணப்படும்.<br>• பெற்றோர்களை சார்ந்திருப்பது குறைந்த அளவாக மாறும்.<br>• தனது தந்தையை முன் மாதிரியாக எண்ணுவார்கள் அதன் மூலம் நேர்மறை எண்ணங்களைப் பெறுவார்கள்.<br>• நண்பர்களிடம் மகிழ்ச்சி, இரகசியம் ஆகிய அனைத்தையும் பகிர்ந்து கொள்வார்கள்<br>• தனது முயற்சியில் தோல்வியடைந்தால் தாழ்வு மனப்பான்மை பெறுவார்கள்.<br>• தானே முற்பட்டு செயலாற்றி வெற்றி பெறுவதன் மூலம் உற்சாகம் அடைவார்கள். |

**5.வளரிளம் பருவம் (Adolescence) (13 லிருந்து 18 வயது வரை)**

மனிதனின் வாழ்க்கையில் வளரிளம் பருவம் என்பது மிகவும் முக்கியமான கால கட்டமாகும். இந்த பருவத்தில்தான் ஒருவரின் வாழ்க்கையின் அனைத்து வகையான வளர்ச்சியும் உச்சநிலையினை அடைகிறது. இப்பருவமானது 13 வயதில் தொடங்கி 18 வயது வரை தொடரும். இப்பருவத்தில் பாலின உறுப்புகள் வளர்ச்சி பெறுகிறது. மேலும் குழந்தைகளின் உடல் உறுப்புகள் அனைத்தும் நன்கு வளர்ச்சி பெற்று, உளவியல் ரீதியாகவும் முதிர்ச்சி அடைகிறது.

| **உடலியல் வளர்ச்சி (Physical Development)** | **அறிகை வளர்ச்சி (Cognitive Development)** | **சமூக மனவெழுச்சி வளர்ச்சி (Social and Emotional Development)** |
|---|---|---|
| • நாடித்துடிப்பு: 60-80 /நிமிடம்<br>• சுவாசித்தல்: 16-20 cm/ நிமிடம்.<br>• **வளரிளம்பருவத்தில் ஆண்களின் உடல் வளர்ச்சி:**<br>• பாலின உறுப்புகள் வளர்ந்து இருக்கும்.<br>• முகம், மார்பக பகுதிகளில் முடிகள் | • இப்பருவத்தினர் தனக்கு எழும் பிரச்சனைகளை தாங்களே சமாளிப்பார்கள்<br>• தங்களுடைய திறன்களை சிந்தித்தல் மூலம் மேம்படுத்திக் கொள்வார்கள்<br>• தனக்கென தனித்த கருத்துக்கள் உண்டு என்பதை மற்றவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் | • Selfi எடுத்துக் கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டுவார்கள்.<br>• மாற்று பாலினத்தினர் மீது ஈர்ப்பு ஏற்படும்.<br>• தலைமைப்பண்பு இப்பருவத்தினரிடம் இயல்பாகவே காணப்படும்.<br>• அதிரடியான உடல் வளர்ச்சி ஏற்பட்டு பெருத்த மாற்றங்கள் ஏற்படுதலின் மூலம் இப்பருவத்தில் |

| | | |
|---|---|---|
| வளரும்.<br>• குரலில் மாற்றம் ஏற்படும்<br>• தோள்பட்டை விரைவான வளர்ச்சி பெற்று அகலமாக காணப்படும்.<br>• ஆண்குழந்தைகளின் விதைப்பைகள் வளர்ச்சியுற்று இயங்கத் தொடங்கும்.<br>• **வளரிளம்பருவத்தில் பெண்களின் உடல் வளர்ச்சி:**<br>• பெண்களின் இடுப்புப் பகுதி விரிவடையும்.<br>• 10 வயதில் பெண் குழந்தைகளின் மார்பகங்கள் வளரத் தொடங்கும்.<br>• இப்பருவத்தில் பெண்கள் 10லிருந்து 13 வயதில் பூப்பு நிலை அடைவாகள்.<br>• பெண் குழந்தைகளின் சினைப்பைகள் முழு வளர்ச்சியுற்று இயங்க தொடங்குகின்றன.<br>• குரலில் மாற்றம், மர்ம பகுதிகளில் முடி வளர்தல் போன்றவைகள் தோன்றும் | என்று நினைப்பார்கள்<br>• எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான கல்வியை தேர்ந்தெடுத்து அதற்கான வழிமுறைகளில் தன்னை ஆயத்தபடுத்திக் கொள்வாார்கள்.<br>• அறிவு வளர்ச்சி, நுண்ணறிவு ஆகியவற்றின் அடிப்படையில் இப்பருவத்தினரின் இலட்சியம் அமைகின்றது.<br>• தனது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவுகளை எடுப்பார்கள்.<br>• தினமும் செய்யும் செயல்களை நுண்ணறிவுடனும் ஆக்கத்திறனுடனும் செயல்படுத்துவார்கள். | உள்ளவர்கள் மனக்குழப்பத்தில் இருப்பார்கள்.<br>• திடீரென துரித மாற்றங்கள் ஏற்படுவதன் மூலம் வெட்கம், கூச்சம், பயம், படபடப்பு போன்றவைகள் ஏற்படுகின்றன.<br>• பெற்றோர்களிடையே இடைவெளி உடையவர்களாக இருப்பார்கள்<br>• குழு உறுப்பினர்களது அங்கிகாரத்தையும் பாராட்டையும் பெற எச்செயல்களையும் செய்யத் துணிவார்கள்<br>• எப்போதும் எங்கேயும் பாராட்டுதல்களை பெற வேண்டும் என்று நினைப்பார்கள்.<br>• ஒப்பார் குழுவிடம் அதிக பற்று கொண்டிருப்பார்கள்<br>• இப்பருவத்தினர் பதற்றம், கோபம், அன்பு, பரிவு, போன்ற மனவெழுச்சிகளை மாறி மாறி வெளிப்படுத்துபவர்களாக இருப்பார்கள்<br>• சுயமாக செயல்படவும், சமூக அங்கிகாரம் பெறவும், வினாக்கள் கேட்டு உண்மை அறிவதிலும் ஆர்வமாய் இருப்பார்கள் |

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள்**

**Questions for Discussion and Reflection**

1. கருவுறுதலின் மூன்று முக்கிய கால நிலைகளை விவரி.

   Describe the three major periods of pregnancy.

2. முன்குழந்தைப் பருவ, நடுத்தரவயது குழந்தைகளின் உடலியல், அறிகை, சமூக, மனவெழுச்சி வளர்ச்சியினை ஒப்பிடுக.

   Compare the physical, cognitive, social and emotional development of the early childhood and middle childhood.

3. வளரிளம் பருவத்தினரின் உடலியல், அறிகை, சமூக, மனவெழுச்சி வளர்ச்சினைப் பற்றி விவாதிக்கவும்.

   Discuss the physical, congnitive, social and emotional development of the adolescence.

## அலகு - III

## குழந்தை வளர்ச்சி பற்றிய கோட்பாடுகள்

## (Theories of the child development)

**நோக்கங்கள்: (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்:

1. பியாஜேயின் அறிவு வளர்ச்சி கோட்பாட்டினை புரிந்து கொள்ள முடியும்.
2. கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சி நிலைகளை அறிந்து கொள்ள முடியும்.
3. அறிவாற்றல் வளர்ச்சி பற்றிய வைகாட்ஸ்கியின் சமூக-கலாச்சார நோக்கை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.
4. சுற்றுச்சூழல் எவ்வாறு குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடியும்.

### 1. எரிக்சனின் உள-சமூக வளர்ச்சிக் கோட்பாடு (Erikson's psycho - social theory)

**முன்னுரை (Introduction)**

பிராய்டை (Freud's) பின்பற்றிய பலர் அவருடைய கருத்துக்களில் பயனுள்ளவற்றை எடுத்து, அவருடைய தொலைநோக்கை (Vision) மேம்பாடு அடையச் செய்தனர். இவர்களில் மிக முக்கியமானவராகிய எரிக் எரிக்சன் (Erik Erikson, 1902 – 1994) குழந்தைகளின் ஒவ்வொரு நிலைகளிலும் வளர்ச்சி பற்றிய கருத்தை விரிவாக்கினார். எரிக்சன், தன்முனைப்பு (Ego), மற்ற துாண்டுதல்களுக்குமேல், வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதுடன் குழந்தையை, திறன்கள், நோக்கங்கள் பெற்று, சமூகத்தில் செயல்பட்டு, பயன் அளிக்கக் கூடியவராக செய்கிறது என்பதை வலியுறுத்துகிறார். ஒரு அடிப்படை உளவியல் - சமூகபோராட்டம் (Basic psycho - social conflict), தொடர்ந்து எதிரானதிலிருந்து நேரானதாக மாற்றி தீர்க்கப்படுவது ஒவ்வொரு நிலையிலும் பயனுள்ள அல்லது பொருத்தமற்ற விளைவுகளை தீர்மானிக்கிறது. படம் - 1ல் காட்டியுள்ளபடி எரிக்சனின் முதல் ஐந்து நிலைகள் பிராய்டின் நிலைகளுக்கு ஒப்பாக உள்ளன. ஆனால் எரிக்சன், மூன்று இதர நிலைகளான, முன்முதிர் பருவம் (Young adulthood), நடுமுதிர் பருவம் (Middle adulthhood), பின்முதிர் பருவம் (Old age), ஆகியவற்றைச் சேர்த்துள்ளார். வாழ்க்கை முழுதும் தொடர்ந்து நடைபெறும் வளர்ச்சியின் தன்மையை புரிந்து கொண்டவர்களில் இவர் முதன்மையானவர்.

படம் - 1

**Erikson's Eight Stages of Psycho - social Development**




**ஆதாரம்: www.whaddayaknowabout.com**

## அட்டவணை - 1

## எரிக்சனின் உள-சமூக வளர்ச்சி நிலைகள்

## (Erikson's psycho - social stages)

| நிலைகள் (Stages) | தோராயமான வயது (Approximate age) | எரிக்சனின் உள - சமூக வளர்ச்சி நிலைகள் (Erikson's psycho - social stages) |
|---|---|---|
| குழவிப் பருவம் **(Infant)** | 0 - 18 மாதங்கள் | **அடிப்படை நம்பிக்கை – அவநம்பிக்கை (Trust vs Mistrust):** குழந்தைகளை பரிவால், அன்பால் கவனித்தலின் விளைவாக, சிறுகுழந்தைகள் (Infants) பிறர்மீது நம்பிக்கை (Trust), தன்னம்பிக்கை (Confidence) இவற்றைப் பெற்று, இவ்வுலகம் நல்லது (World is good) என்ற எண்ணத்தைப் பெறுகின்றனர். குழந்தைகள் கொடூரமாக நடத்தப்பட்டாலோ (Handled harshly), கவனிக்காமல் விடப்பட்டாலோ (Neglected), நம்பிக்கையின்மை (Mistrust) ஏற்படுகிறது. |
| குறுநடை பருவம் **(Toddler)** | 18 மாதங்கள் - 3 ஆண்டுகள் | **சுதந்திரமாக செயல்படல் - வெட்கம், சந்தேகம் (Autonomy vs Shame & Doubt):** குழந்தைகள் தம் அறிவு உடல்திறன் (Mental and motor skills) இவற்றைப் பயன்படுத்தி, தாமே முடிவுகளை எடுக்க (Decide for themselves) விரும்புகின்றனர். பெற்றோர் அவர்களை, வற்புறுத்தவோ (Forcing), வெட்கப்பட வைக்கவோ (Shaming) செய்யாமல், தாமே சுதந்திரமாக தேர்வு செய்ய அனுமதித்து, சுதந்திரமாக செயல்படும் திறனை வளர்க்கலாம். |
| முன்பருவ பள்ளியினர் **(Pre-Schooler)** | **3 – 5 ஆண்டுகள்** | **தானே முன்வந்து செய்தல் - குற்ற உணர்வு (Initiative vs Guilt):** விளையாட்டின் மூலம் குழந்தைகள், தான் எந்த மாதிரி மனிதனாக ஆக முடியும் என்பதைப்பற்றி தெரிந்து கொள்கின்றனர். பெற்றோர் குழந்தையின் குறிக்கோள்களை ஆதரிக்கும்போது, முயற்சி (Initiative), லட்சியம் (Ambition), பொறுப்பு (Responsibility) ஆகியவைகள் வளர்கின்றன. ஆனால் பெற்றோர் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கும்போது, குழந்தைகள் குற்ற உணர்வு பெறுகின்றனர். |
| பள்ளி செல்லும் பருவத்தினர் **(Grade-Schooler)** | 5 – 13 ஆண்டுகள் | **கடின உழைப்பு - தாழ்வு மனப்பான்மை நிலை (Industry vs Inferiority):** பள்ளியில் குழந்தைகள் வேலைசெய்யவும் (Learn to work), மற்றவருடன் ஒத்துழைக்கவும் (Cooperate with others) கற்றுக்கொள்கின்றனர். வீட்டிலோ, பள்ளியிலோ, சக மாணவர்களுடன் இருக்கும்போதோ, எதிரான அனுபவங்கள் ஏற்படும்போது, தாழ்வுமனப்பான்மை (Inferiority complex), தகுதியற்றவர் என்ற எண்ணம் (Feeling of incompetence) வளர்கிறது. |
| வளரிளம் பருவம் **(Adoleerscent)** | **13 - 21** ஆண்டுகள் | **தன்னைப்பற்றிய உணர்வு – தன் நிலை பற்றிய குழப்பம் (Identity vs Role Confusion):** மதிப்புகள் (Exploring values), தொழில்கள் பற்றிய குறிக்கோள்கள் (Vocational goals) இவற்றை அறிவதால் இளைஞர்கள் தன்னைப் பற்றிய கருத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். எதிரான பண்புகளால் (Negative outcome), தன் எதிர்கால தொழில் பற்றி குழப்பம் (Confusion about future) அடைகிறார்கள். |
| முன் முதிர் பருவம் **(Young Adult)** | 21 - 39 ஆண்டுகள் | **நெருக்கம் - தனிமை (Intimacy vs Isolation):** இளைஞர்கள் நெருக்கமான உறவை (Intimate relationship) ஏற்படுத்திக் கொள்கின்றனர். முன்னாளில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் (Earlier disappointments) காரணமாக, சில இளைஞர்கள் நெருக்கமான உறவு இன்றி தனிமையாக (Isolated) ஆகின்றனர். |

| நிலைகள் (Stages) | தோராயமான வயது (Approximate age) | எரிக்சனின் உள - சமூக வளர்ச்சி நிலைகள் (Erikson's psycho - social stages) |
|---|---|---|
| நடு முதிர் பருவம் (Middle-Age Adult) | 40 - 65 ஆண்டுகள் | **உருவாக்குதல் - நோக்கம் (Generativity vs Stagnation):** உருவாக்குதல் என்பது குழந்தைகளை வளர்த்தல் (Child rearing), மற்றவரின் மீது அக்கறை கொள்ளுதல் (Caring for others) போன்ற செயல்கள் மூலம் அடுத்த தலைமுறைக்கு உதவுதல் ஆகும். இவற்றுள் தோல்வி அடைபவர்கள் (Person who fails), ஒரு அர்த்தமுள்ள சாதனையில்லாமையை (Absence of meaningful accomplishment) உணர்கிறார்கள். |
| பின்முதிர் பருவம் (Older Adult) | 65 வயதிற்கு மேல் | **ஒருங்கிணைந்து இருத்தல் - விரக்தி (Integrity vs Despair):** தம் வாழ்கை பயனுள்ளதாக (Life was worth) இருந்தது என்ற எண்ணம், ஒருங்கிணைந்த தன்மையை (Integrity) உருவாக்குகிறது. தம் வாழ்க்கையைப் பற்றி அதிருப்தியுள்ள முதியோர் (Older people who are dissatisfied with their lives), சாவைப்பற்றி அஞ்சுகின்றனர் (Fear death). |

## முடிவுரை (Conclusion)

உளவியலில் சிறந்த சிந்தனையாளர்கள், குழந்தை வளர்ச்சியின், வெவ்வேறு நிலைகளை விளக்கவும், ஆய்வு செய்யவும், வெவ்வேறு கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இந்த எல்லா கருத்துக்களும் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும், அவை, குழந்தையின் வளர்ச்சி (Child development) பற்றி புரிந்து கொள்வதில் முக்கிய பங்கு வகித்தன. குழந்தைகளின் வளர்ச்சி, நடத்தை, சிந்தனை இவற்றைப் புரிந்து கொள்ள, பல்வேறு கோட்பாடுகளையும், நோக்குகளையும் பயன்படுத்துகின்றனர்.

## 2. பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கோட்பாடு

## (Piaget's cognitive-development theory)

### முன்னுரை: (Introduction)

பியாஜேயின் அறிவு வளர்ச்சி கொள்கையின்படி குழந்தைகள் தம் உலகை ஆராய்ந்து, மாற்றி அமைக்கும்போது, தம்(அறிவை) கருத்துக்களை உருவாக்குகின்றனர். பியாஜேயின் கருத்துப்படி, மூளை வளர்ந்து, அனுபவங்கள் விரிவடையும் போது, ஒவ்வொன்றும், வேறான சிந்திக்கும் முறைகள் பெற்ற நான்கு நிலைகளை கடக்கின்றன. கீழே கொடுக்கபபட்டுள்ள படம் - 2 பியாஜேயின் நிலைகளை சுருக்கமாக விளக்குகின்றன.

**படம் - 2**

**பியாஜேயின் அறிவு வளர்ச்சி படிநிலைகள்**




**Piaget's stages of cognitive development**

**ஆதாரம்: https://www.google.com/**

**பியாஜேயின் அறிவு வளர்ச்சிப் படிநிலைகள் (Piaget's stages of cognitive development)**

1. **புலன் இயக்க நிலை (பிறப்பு முதல் 2 வயது வரை)**

   **Sensorimotor stage (Birth-2 years)**

   குழவிகள் (Infants), தம் கண்கள், காதுகள், கைகள், வாய் இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் சிந்திக்கின்றனர். இதனால் பொருள்களை பெட்டிகளுக்குள் வைத்தல், எடுத்தல் போன்ற இயக்க செயல்களில் ஈடுபடும் வழிகளை (Solving sensorimotor problems) கண்டு பிடிக்கின்றனர்.

2. **செயலுக்கு முற்பட்ட நிலை (2 வயது முதல் 7 வயது வரை)**

   **Preoperational stage (2 -7 years)**

   பள்ளி செல்வதற்கு முன் உள்ள நிலையில் உள்ள குழந்தைகள், தம் உணர்வு மூலம் வந்த கண்டுபிடிப்புகளை, செய்கைகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இந்த நிலையில் மொழி வளர்ச்சி, கற்பனை திறன் ஏற்படுகிறது. ஆயினும் அவர்களின் சிந்தனை, மற்ற இரு நிலைகள் போல ஆக்க பூர்வமானதாக இல்லை.

3. **புலனீடான செயல் நிலை / பருப்பொருள் நிலை (7 வயது முதல் 11 வயது வரை)**

   **Concrete operational stage (2-7 years)**

   குழந்தைகளின் சிந்தனை தர்க்க ரீதியாகவும் (Logical), நன்கு அமைக்கப்பட்டதாகவும் உள்ளது. பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகள், தனக்கு அனுபவத்தை ஏற்படுத்தும் பொருட்களின் ஒரு பண்பினை மட்டுமே ஒரு சமயத்தில் உணரவியலும். எனவே பொருட்களின் உருவம், இடம் மாறினாலும் அவற்றின் அளவு குறையாது என்னும் கருத்து உணரப்படாது. பொருட்களை அவற்றின் தன்மைகளின் அடிப்படையில் படிப்படியாக அமைக்கின்றனர். ஆயினும் அவர்களின் சிந்தனை வயதுவந்தோரின் புத்திக் கூர்மையைவிட குறைவாக உள்ளது. அது கருத்து வடிவத்தில் இல்லை.

4. **முறையான செயல் நிலை / கருத்தியல் நிலை (11 வயதிற்கு மேல்)**

   **Formal operational stage (11 years onwards)**

   கருத்துக்களை சிந்திக்கும் திறன் கொண்ட வளரிளம் பருவத்தினர் (Adolescents), பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது, ஒரு கருதுகோளில் தொடங்கி, யூகித்து, மாற்றங்களை தனிமைப்படுத்தி, இணைத்து, எந்த முடிவுகள் சரியானவை என கண்டறிகின்றனர். வாய்மொழி கருத்துக்களின் உண்மையை, உலக சூழ்நிலைகளுடன் ஒப்பிடாமல் மதிப்பிடும் திறன் பெறுகின்றனர்.

**முடிவுரை: (Conclusion)**

பியாஜேயின் கருத்துக்கள், ஆசிரியர், பெற்றோர், குழந்தைகளுடன் செயல்படும் மற்ற எல்லோருடைய குழந்தைகளை கவனித்தல், அவர்களின் சூழலுக்கேற்ப நடந்துகொள்ளுதல் ஆகியவற்றை மாற்றியுள்ளது. குறிப்பாக பியாஜேயின் கருத்துக்கள், பள்ளியில் கற்பித்தலில் அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகள், பியாஜேயின் கருத்துக்கள் மற்ற நாட்டு குழந்தைகளுக்கு பொருந்துகிறது என்பதை காட்டின. குறிப்பாக தொடக்க நிலையிலுள்ளவர்களைப் பற்றிய கருத்துக்கள் பொருத்தமாக இருந்தன. அவருடைய சில கண்டுபிடிப்புகள், கருத்துக்கள், திறனாய்வு செய்யப்பட்ட போதிலும், ஜீன் பியாஜேயின்

கருத்துக்கள் குழந்தைகளின் நடத்தை பற்றிய ஆய்வுக்கு முன் மாதிரியாக இருந்தது. பொதுவாக அறிவு வளர்ச்சியை புரிந்து கொள்ள ஒரு தொடக்க நிலையாக பியாஜேயின் கோட்பாடுகள் உள்ளன.

### 3. கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சி நிலைகள்

### (Kohlberg stages of moral development)

### முன்னுரை (Introduction)

சமூகத்தில், ஒருங்கிணைந்து செயல்படுவதில் ஒழுக்க வளர்ச்சி (Moral deevelopment) முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த சொல், மக்கள் எவ்வாறு தாம் நல்லது, கெட்டது என்பதை அறிகின்றனர் என்பதை குறிக்கிறது. இது சமுதாயம் நன்கு செயல்பட முக்கியமானது. ஒழுக்க வளர்ச்சி சமுதாயத்திற்கு, எது சரியானது, எது நல்லது என்பதை கருதாமல், கட்டுப்பாடற்ற தூண்டுதல்களின் பேரில் செயல்படுவதை தடுக்கிறது. லாரன்ஸ் கோல்பர்க் (Lawrence Kohlberg, 1927 – 1987) மக்கள் எது சரியானது, எது தவறானது என்பதை தீர்மானிக்க எப்படி கற்கின்றனர் என்பதில் ஆர்வம் காட்டினார். இவர் முன்னர் தெரிவிக்கப்பட்ட பியாஜேயின் அறிவாற்றல் கருத்துக்களை மேலும் விரிவாக்கம் செய்து ஒழுக்க வளர்ச்சியை விவரித்தார். அவர் ஒழுக்க வளர்ச்சியின் மூன்று நிலைகளைப் பற்றிய கருத்துக்களை உருவாக்கினார். அவை மரபுக்கு முற்பட்ட நல்லொழுக்க நிலை (Pre-conventional morality), மரபு நிலையிலான நல்லொழுக்க நிலை (Conventional morality), மரபுக்கு பிற்பட்ட நல்லொழுக்க நிலை (Post-Conventional morality) ஆகியவையாகும். இவர் ஒழுக்க வளர்ச்சி, அறிவாற்றல் வளர்ச்சியைப் போன்று, பல நிலைகளில் ஏற்படுகிறது என நம்பினார்.

## Kohlberg's stages of moral development

### கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சி நிலைகள்




**ஆதாரம்:**https://www.boundless.com/psychology/textbook/boundless-psychology-textbook/human-development…

**கோல்பர்க்கின் ஒழுக்க வளர்ச்சி நிலைகள் (Kohlberg's stages of moral development)**

கோல்பர்க் (Kohlberg's) ஒழுக்க அறிவின் மூன்று நிலைகளை கண்டறிந்துள்ளார். அவை மரபுக்கு முற்பட்ட நல்லொழுக்க நிலை (Pre-conventional morality), மரபு நிலையிலான நல்லொழுக்க நிலை (Conventional morality), மரபுக்கு பிற்பட்ட நல்லொழுக்க நிலை (Post-conventional morality) ஆகியவைகளாகும். ஓவ்வொரு நிகழ்வும் சிக்கலான ஒழுக்க வளர்ச்சி நிலைகளைக் (Complex stages of moral development) கொண்டது.

**நிலை 1 – மரபுக்கு முற்பட்ட நிலை (Pre-conventional morality)**

மரபுக்கு முற்பட்ட நிலையில் (9 வயது, அதற்கு குறைவான, சற்று அதிகமான) நமக்கு ஒரு தனிப்பட்ட ஒழுக்க வழிகாட்டுதல்கள் (Personal code of morality) இல்லை. அதற்கு பதில் நம் நன்னடத்தை, வயது வந்தோரின் நடத்தைகளின் அடிப்படையிலும், விதிகளின் பின்விளைவுகளாலும் அல்லது அதன் விதிகளை மீறுவதாலும் (Breaking their rules) வடிவமைக்கப்படுகிறது. அதிகாரம் தனிநபருக்கு வெளியே உள்ளது அவர்களின் நியாயவாதம், செயல்களின் விளைவுகளின் அடிப்படையில் அமைகிறது.

- **படிநிலை 1. கீழ்படிதல், தண்டணை அடிப்படையில் (Obedience and Punishment orientation):** தண்டணையைத் தவிர்க்க குழந்தை நன்னடத்தையை கடைப்பிடிக்கிறது.
- **படிநிலை 2. தனித்தன்மை, பரிமாற்றம் (Individualism and Exchange):** இந்நிலையில், குழந்தைகள், அதிகாரத்தில் உள்ளோர் காட்டும் ஒரே ஒரு சரியான நோக்குதான்

உள்ளது என்பதை ஏற்பதில்லை. வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு நோக்குகள் உள்ளன.

**நிலை 2 – மரபு நிலையிலான நல்லொழுக்க நிலை (Conventional morality)**

இந்நிலையில் (அநேக இளைஞர்கள், வயது வந்தோர்) வயதில் மரியாதைக்குரிய மூத்தவர்களின் ஒழுக்க நடைமுறைகளை மனதில் பதிய வைத்துக் கொள்கிறார்கள். மேலாண்மை மனதில் பதிந்து, அதை எதிர்த்து கேள்வி கேட்காமல், தன் குழு மதிக்கும் நடத்தை முறைகளின் அடிப்படையில் சிந்திக்கிறார்கள்.

- **படிநிலை 3. ஒருவருக்கொருவர் நல்ல தொடர்பு (Good interpersonal relationships):** மற்றவர்கள் தன்னை நல்லவராக நினைக்கவேண்டும் என்பதற்காக குழந்தை நன்றாக நடந்து கொள்கிறது. எனவே மற்றவர்களின் சம்மதம் நடத்தையை வழி நடத்துகிறது.
- **படிநிலை 4. சமூக அமைப்பை பாதுகாத்தல் (Maintaining the social order):** குழந்தை சமுதாயத்திலுள்ள விரிவான விதிகளைப் பற்றி அறிந்து, விதிகளைக் கடைப்பிடித்து சட்டத்தை நிலைநாட்டி, குற்ற உணர்வை தவிர்க்க முயல்கிறது.

**நிலை 3 – மரபுக்குப் பிற்பட்ட நல்லொழுக்க நிலை (Post-conventional morality)**

தனி நபரின் முடிவு (Individual judgement), தானே தேர்வு செய்த கருத்துக்களின் அடிப்படையில் (Self-chosen principles) அமைந்துள்ளன. கோல்பெர்க்கின் கருத்துப்படி, இத்தகைய தார்மீக சிந்தனைமுறை (Moral reasoning), மக்களால் முடிந்தவரை பின்பற்றப்படும்.

10 அல்லது 15% ம் பேர் மட்டும் படிநிலை 5, படிநிலை 6 க்கு தேவையான கருத்து பூர்வ சிந்தனை திறனை (Abstract thinking) பெற்றுள்ளனர். அதாவது அநேக மக்கள், தங்கள் தார்மீக கருத்துக்களை, சுற்றியுள்ள மற்றவர்களிடமிருந்து எடுத்துக்கொள்கின்றனர். ஒரு சிலர் தார்மீக பிரச்சிகைளைப் பற்றி தாமதமாக சிந்திக்கின்றனர்.

- **படிநிலை 5. சமூக ஒப்பந்தமும் தனிநபர் உரிமைகளும் (Social contract and Individual rights):** சட்டங்கள் பொதுவாக அநேக மக்களின் நன்மைக்காக இருந்தபோதிலும் சில நேரங்களில் அவை தனி நபரின் நன்மைக்கு எதிராக செயல்படுகின்றன என்பதை குழந்தைகள் உணர்கின்றார்கள்.
- **படிநிலை 6. அனைவருக்கும் பொதுவான கொள்கைகள் (Universal principles):** இந்நிலையில் உள்ளவர் தாமே தார்மீக வழிமுறைகளை (Moral guidance) ஏற்படுத்திக் கொள்வர். இவை சட்டத்தை பின்பற்றியோ, எதிராகவோ இருக்கலாம். இந்த கொள்கைகள் எல்லோருக்கும் பொருந்தும். உதாரணம், மனித உரிமைகள் (Human rights), நீதி (Justice), சமத்துவம் (equality) ஆகியவை. அந்த நபர் இக்கருத்துக்களின்படி நடக்க தயாராக இருப்பார், அது மீதமுள்ள மக்களுக்கு எதிராக இருந்தாலும் சரி; கொள்கையை ஏற்காமல் சிறைக்கு செல்ல வேண்டியிருந்தாலும் சரி.

**முடிவுரை (Conclusion)**

லாரென்ஸ் கோல்பெர்கின் கோட்பாடு, புரிந்துகொள்வதற்கு கடினமான பிரச்சினைக்கு (Difficult to understand) ஒரு வடிவம் கொடுக்கிறது. அவர் உருவாக்கிய அறநெறி பற்றிய கருத்துக்கள், கார்ல் கில்லிகன் (Carl Gilligan) உருவாக்கிய பெண்களின் நன்னடத்தை

பற்றிய கோட்பாடுகளை (Moral development of women) பாதித்தது. உலகம் முழுவதும் உள்ள கல்வியாளர்களிடையே பரவியது. அவருடைய கருத்துக்கள் உளவியல் துறையில் மட்டுமின்றி, கல்வித் துறையிலும் பயனுள்ளதாக உள்ளது. மாணவர்களின் நடத்தை, அவர்கள் எடுக்கும் முடிவுகள் இவற்றை புரிந்து கொள்வதற்கு இவருடைய நன்னடத்தை வளர்ச்சி நிலைகள் பற்றி புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாகிறது. அவர்களின் வளர்ச்சி நிலையை சரியாக மதிப்பீடு செய்தல், மாணவர்கள் ஏன் அவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை புரிந்து கொள்ளவும், அவற்றை கையாளவும் உதவுகிறது. உதாரணமாக, நன்னடத்தை வளர்ச்சியில் முதல் படியிலுள்ள மாணவியை, அவள் வகுப்பில் ஆசிரியர் இல்லாதபோது, அமைதியாக உட்கார்ந்து இருக்க வேண்டும் என வற்புறுத்திக் கூறுதல் பயனற்றது. அதற்கு பதிலாக ஆசிரியர் இல்லாதபோது, ஒரு அதிகாரம் மிக்க நபர் வகுப்பில் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்க ஒரு வழியை காணவேண்டும். முடிவாக, வகுப்பறையை சமாளிக்கத் தகுந்த வழிமுறைகள் இருப்பின், பாடத்தின் சிறப்பு அதிகரிக்கப்படும்.

## 4. வைகாட்ஸ்கியின் சமூக - கலாச்சாரக் கோட்பாடு (Vygotsky's socio - cultural theory)

### முன்னுரை (Introduction)

சமீபகாலத்தில் குழந்தை வளர்ச்சி துறையில், மாணவர்களின் கலாச்சார சூழல் (Cultural Context) பற்றிய ஆய்வுகள் வேகமாக அதிகரித்துள்ளன. மாறுபட்ட கலாச்சாரத்தை பின்பற்றுபவர் ஒரே கலாச்சாரத்தைச் சார்ந்த வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் பற்றிய ஆய்வுகள், வளர்ச்சி வழிமுறைகள் எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்துமா அல்லது ஒரு குறிப்பிட்ட சூழலில் உள்ளவருக்கு மட்டும் பொருந்துமா என்பதைப் பற்றி ஆழ்ந்த கருத்துக்களை தருகின்றன (Goodnow, 2010).

- வைகாட்ஸ்கியின் கோட்பாட்டின்படி, சமூகத்தில் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளுதல் சிந்தனை வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதாகும்.
- ஒரு தனிப்பட்ட குழந்தையைப் பற்றி கருதவில்லை. ஆயினும் சமுதாயத்தடன் தொடர்பு கொள்ளல் மூலம், குறிப்பாக வயது வந்தோருடன் உருவாக்கப்பட்ட குழந்தையை கருத்தில் கொண்டு கவனம் செலுத்துதல்.
- குழந்தை தனக்குத்தானே பேசுவதைவிட மற்றோருடன் கலந்து பேசுவதை விரும்புகிறது.
- வெவ்வேறு கலாச்சாரத்தை சார்ந்தவர்கள், வெகுவாக மாறிய முறையில் சிந்திக்கின்றனர்.

### சமூக - கலாச்சாரக் கோட்பாடு (Socio-cultural theory)

வைகாட்ஸ்கி (Vygotsky, 1934 - 1987), குழந்தைகள் தம் சமூக சூழலை எவ்வாறு புரிந்து கொள்கின்றனர் என்பதைப் பற்றியே முதன்மையாகக் கருதினார். கற்றல் என்பது படிப்படியாக குழந்தைகளுக்கு, பெற்றோர், ஆசிரியர், அக்கலாச்சாரத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் இவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் படிப்படியாக நிகழும் விளைவு என கருதினார். வைகாட்ஸ்கியின் கருத்துப்படி, சமூக கற்றல் என்பது குழந்தைகள், தற்சமயம்

செயல்படுத்தக்கூடிய திறன்களுக்கும், அதிக அனுபவம் மிக்கவர்களிடமிருந்து வழிகாட்டுதல் பெற்று செய்யக்கூடிய செயல்களுக்கும், இடையே உள்ள மேம்பட்ட வளர்ச்சி மண்டல பகுதியில் நிகழ்கிறது என்பதை வலியுறுத்தினார். தற்சமயம் உள்ள குழந்தையின் திறன், அறிவுக்கு தக்கபடி கற்பித்தலை அமைத்தல் ஆகியவை 'சாரக்கட்டு' (Scaffolding) வகை போதனைகளாக இருந்து வருகிறது.

**Vygotsky's Sociocultural Theory**




**ஆதாரம்:** https://www.google.com/

**குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சி (Children's thinking development):**

சமூக கலாச்சார கோட்பாடு எனப்படும் வைகாட்ஸ்கியின் நோக்கு, ஒரு சமுதாயத்தில் நற்பண்புகள் (Values), நம்பிக்கைகள் (Beliefs), வழக்கங்கள் (Customs) திறன்கள் (Skills) எவ்வாறு மற்ற வம்சாவளியினருக்கு மாற்றப்படுகின்றன என்பதை முக்கியமாக கருதுகிறது. இவருடைய கருத்தின்படி, சமுதாயத்தில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளல் - குறிப்பாக குழந்தைகளுக்கும், அறிவு மிகுந்த சமுதாய அங்கத்தினர்களுக்கும் இடையே நிகழும் பேச்சு, குழந்தைகள் அந்த சமுதாயத்தில் சிந்தனை, நடத்தை இவற்றை கற்றுக்கொள்ள அவசியம் தேவை என்பதாகும். வயது வந்தோரும், திறன் மிக்க சக மாணவர்களும், குழந்தைகளுக்கு, பொருள் நிறைந்த கலாச்சார செயல்களை, நன்றாக செய்ய உதவும் போது, அவர்களிடையே நடக்கும் கருத்துப் பரிமாற்றம், குழந்தைகளின் சிந்தனையில் ஒரு பகுதியாக ஆகிறது என வைகாட்ஸ்கி நம்பினார்.

**குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சி ( Cognitive development of children):**

வைகாட்ஸ்கியின் கோட்பாடு, குழந்தைகளின் அறிவாற்றல் (Children's cognition) பற்றிய ஆராய்ச்சியில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வைகாட்ஸ்கி, குழந்தைகள் செயல்பட்டு, உருவாக்கும் நபர்கள் (Active, Constructive begins) என்ற பியாஜேயின் கருத்தை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் பியாஜே, உலகைப் புரிந்து கொள்ள குழந்தைகளின் தனிப்பட்ட முயற்சியை வலியுறுத்தினார். ஆனால் வைகாட்ஸ்கி அறிவாற்றல் வளர்ச்சி, சமுதாயத்தால் வளர்க்கப்படும் நிகழ்வு என்றும், இதில் புதிய பிரச்சிளைகளை சமாளிக்க குழந்தைகள், வயது முதிர்ந்தோரின் உதவியையும், சிறந்த சக மாணவர்களின் உதவியையும் சார்ந்து உள்ளனர் என்றும் கருதுகிறார்.

**குழந்தையின் மொழி வளர்ச்சி (Child's language development)**

வைகாட்ஸ்கியின் கோட்பாட்டின்படி, குழந்தைகள் ஒவ்வொரு நிலையிலும் மாற்றங்களை அடைகின்றனர். உதாரணமாக, அவர்கள் மொழியை கற்கும்போது,

மற்றவர்களுடன் உரையாடலில் பங்கு கொள்ளும் திறனை பெறுகின்றனர். மேலும் கலாச்சார திறன்களை வேகமாக கற்கின்றனர். குழந்தைகள் பள்ளியை அடையும் போது, அவர்கள் மொழி, கல்வியறிவு பிற கல்வி சார்ந்த கருத்துக்களைப் பற்றி கலந்துரையாடுவதில் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். இதன் விளைவாக அவர்கள் தங்கள் பிரச்சினைக்கான தீர்வு, காரணங்களைப் பற்றி சிந்தித்தல் போன்ற திறன்களில் விரைவாக முன்னேற்றம் அடைகின்றனர்.

**முடிவுரை (Conclusion)**

வைகாட்ஸ்கி குழந்தையின் முன்னேற்றத்தில், கலாச்சாரம், நண்பர்கள், வயது வந்தோர் இவற்றின் தாக்கத்தை வலியுறுத்துகிறார். அறிவு மிகுந்தவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம், ஒரு கலாச்சாரத்தில் அடங்கியுள்ளவற்றை, சிந்திக்கும் திறன், நடந்து கொள்ளும் முறைகளை குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். சமூக தொடர்புகள், குழந்தையின் எண்ணங்கள், நடத்தை இவற்றில் படிப்படியான மாற்றங்களை உண்டாக்குகின்றன. இவை ஒரு கலாச்சாரத்திற்கும் மற்றொரு கலாச்சாரத்திற்கும் இடையே மாற்றம் உள்ளதாக இருக்கும். வைகாட்ஸ்கி, தனது கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ளவர்களிடம், பெற்றோர் தம் குழந்தைகளை பலதரப்பட்ட சமூக சூழ்நிலைகளில் ஈடுபடுத்த அறிவுறுத்துகிறார். ஏனெனில் ஒவ்வொரு சூழலும், ஒரு கற்றல் அனுபவமாக கருதப்படுகிறது. குறிப்பாக, குழந்தைகளை, அவர்களின் அப்போதைய நிலைக்கு மேல் உள்ள, மக்களின் கருத்துக்களைப் பார்க்கச்செய்து, புதிய கருத்துக்களையும், எண்ணங்களையும் அறியச்செய்தல் மிக முக்கியமானது. மற்றவர்களிடம் பார்ப்பதைப் போல், தாமும் செய்து விடைகளை அறிய குழந்தைகளை ஊக்குவிப்பது, கட்டளைகளைக் கேட்டு, ஒரு குழுவின் பகுதியாக செயல்படுதல் ஆகியவை அவர்களின் தகுதியை விரிவு செய்ய உதவும். வைகாட்ஸ்கியின் கருத்துக்கள் சரி எனில், வளர்ச்சியானது இறப்பு வரை தொடர்ந்து நடைபெறுகிறது என்பதால், பெற்றோர், தாமும், கற்றலுக்கும், வளர்ச்சிக்கும் ஆன வாய்ப்புகளை எதிர்கொள்ள விரும்புவர்.

## 5. சுற்றுச்சூழல் அமைப்பு கோட்பாடு (Ecological systems theory)

**முன்னுரை: (Introduction)**

யூரி ப்ரோன்பென்பிரென்னர் (Urie Bronfenbrenner, 1917-2005) - ன் குழந்தை வளர்ச்சியைப் பற்றிய அணுகுமுறையானது, இத்துறையில் முதன்மை நிலையை அடைந்துள்ளது. ஏனெனில் அது குழந்தையின் வளர்ச்சியில், சூழ்நிலையின் தாக்கம் பற்றி புதுமையான விளக்கத்தைத் தருகிறது. சூழலியல் அமைப்பு கோட்பாடு, குழந்தை சுற்றுச்சூழலில் உள்ள சிக்கலான தொடர்புகளால் பாதிக்கப்பட்டு வளர்வதாக கருதுகிறது. ப்ரோன்பென்பிரென்னர், சுற்றுச்சூழல் என்பது ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்ட, சிக்கலான செயல்படும் அமைப்பு (Complex functioning) என கருதுகிறார். இவற்றுள் வீடு, பள்ளி, குழந்தை அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சுற்றியுள்ள மக்கள், தவிர மற்ற அம்சங்கள் அடங்கியுள்ளன. சூழ்நிலையில், ஒவ்வொரு நிலையும் மற்றவற்றுடன் இணைந்து வளர்ச்சியை வெகுவாக பாதிக்கிறது.

**Structure of the Environment in Ecological System Theory**

**சுற்றுச்சூழல் அமைப்பு கோட்பாட்டில் சுற்றுச்சூழலின் கட்டமைப்பு**




**ப்ரோன்பென்பிரென்னர் சுற்றுச்சூழல் அமைப்பு கோட்பாடு**
**(பெர்க் மற்றும் ராபரட்ஸ், 2009, இல்.ப.28)**

ஆதாரம்: **https:/www.google.com/**

ஐந்து வகையான சுற்றுச்சூழல் அமைப்புகள் **(The five environmental systems)**

சுற்றுச்சூழல் அமைப்புக் கோட்பாட்டின்படி, நாம் வாழ்க்கை முழுவதும் எதிர்கொள்ளும் மாறுபட்ட சூழல்கள், நம் நடத்தையை பல நிலைகளில் பாதிக்கின்றன. இந்த அமைப்புகளில் நுண் அமைப்பு (The Microsystem), இடைநிலை அமைப்பு (The Mesosystem), புற அமைப்பு (The Exosystem), பெரு அமைப்பு (The Macrosystem), கால ஓட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் (The Chronosystem) ஆகியவைகள் அடங்கும்.

**1.** நுண் அமைப்பு **(The Microsystem):** சூழ்நிலையின் உள் பகுதியில் உள்ள இந்த நுண் அமைப்பு, குழந்தையின் நேரடி சூழலில் நடைபெறும் செயல்கள், தொடர்பு முறைகள் ஆகியவற்றை கொண்டது. நம் வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ள நேரடி சூழல்தான் இது. இந்த அமைப்பில் நம்முடன் நேரடி தொடர்பு உள்ள குடும்பம், நண்பர்கள், சக மாணவர்கள், ஆசிரியர்கள், அருகில் வசிப்பவர் ஆகியோர் அடங்குவர். இதில் உள்ளோருடன் நாம் நேரடியாக தொடர்பு கொள்கிறோம். இக்கோட்பாட்டின்படி, நாம் மற்றவர்களுடன் பழகும் போது வெறும் அனுபவங்களை பெறுபவர் மட்டும் அல்ல, நாமும் அந்த சூழலை உருவாக்குவதில் பங்கு கொள்கிறோம் என்பதாகும்.

**2.** இடைநிலை அமைப்பு **(The Mesosystem):** இரண்டாவது நிலையில் உள்ள இந்த அமைப்பில், வீடு, பள்ளி, சுற்றுப்புறத்திலுள்ளோர் இவற்றுக்கிடையே உள்ள தொடர்புகள் அடங்கியுள்ளன. இந்த இடைநிலை அமைப்பில் நம் வாழ்வின் நுண் அமைப்புக்களுக்கிடையே உள்ள தொடர்பு உள்ளடங்கியுள்ளது. இதன் பொருள் நமது குடும்ப அனுபவங்கள், நமது

பள்ளி அனுபவத்துடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்பதாகும். உதாரணமாக, பெற்றோரால் ஒதுக்கப்பட்ட ஒரு குழந்தை, தம் ஆசிரியர் பற்றி, ஒரு நல்ல நோக்கை வளர்க்க வாய்ப்பு மிகக் குறைவு. மேலும் இக்குழந்தை, தன் நண்பர்களிடையே பழகும்போது, மதிப்பு குறைவானவராக தன்னை எண்ணி சக மாணவர்களிடமிருந்து விலகிச் செல்ல முடிவு செய்யலாம்.

**3.** புற அமைப்பு **(The Exosystem):** இந்த சமூக அமைப்பில் குழந்தைகள் இல்லை ஆயினும், குழந்தைகளின் அனுபவங்களை பாதிக்கிறது. இந்த சூழலில், ஒருவர் முயற்சியுடன் செயல்படாமல் இருக்கும் சூழலுக்கும், முயற்சியுடன் செயல்படும் சூழலுக்கும் இடையே தொடர்பு ஏற்படுகிறது. ஒரு குழந்தை, தாயை விட, தந்தையின் மீது மிக்க பாசம் கொண்டதாக இருக்கும்போது, அவளின் தந்தை பல மாதங்கள் வெளிநாடுகளில் வேலைக்காக செல்லும்போது, குழந்தைக்கும், தாய்க்கும் இடையே உள்ள தொடர்பில் சிக்கல் தோன்றலாம். மாறாக, குழந்தைக்கும் தாய்க்கும் இடையே ஒரு வலுவான உறவும் ஏற்படலாம்.

**4.** பெரு அமைப்பு **(The Macrosystem):** ப்ரோன்பென்பிரென்னரின் மாதிரியில், மிக வெளியே உள்ள இந்த நிலையில், கலாச்சார பண்புகள், சட்டங்கள், வழக்கங்கள், வளங்கள் ஆகியவைகள் அடங்கும். இது அந்த நபரின் கலாச்சாரத்தைக் குறிக்கிறது. இதில் ஒருவரின் அல்லது குடும்பத்தின் சமூக பொருளாதார அந்தஸ்து, அவருடைய இனம் (Ethnicity), அவர் வசிக்கும் நாட்டின் வளர்ச்சி நிலை ஆகியவை அடங்கும். உதாரணமாக, ஏழைக்குடும்பத்தில் பிறந்தால் தினமும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

**5. கால ஓட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் (The Chronosystem):** இதில் ஒருவர் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் (Transitions), ஒருவரின் ஆயுளில் மாற்றம் (Shifts in one's lifespan) ஆகியன அடங்கும். ஒருவரின் நடத்தையை பாதிக்கும் சமூக பொருளாதார தாக்கங்கள் இதில் அடங்கும். இதற்கு ஒரு தெளிவான உதாரணம், விவாகரத்து (Divorce). இது வாழ்வின் ஒரு முக்கிய மாற்றம் ஆகும். இது தம்பதிகளின் உறவினை மட்டுமின்றி, குழந்தைகளின் நடத்தையையும் பாதிக்கிறது.

### முடிவுரை **(Conclusion)**

சுற்றுச் சூழல் அமைப்பு கோட்பாடு, சுற்றுச் சூழல் அம்சங்களானது, வளர்ச்சி நிலைகளில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை வலியுறுத்துகிறது. குறிப்பாக, ப்ரோன்பென்பிரென்னர், குடும்பத்திலும், அதன் நேரடி சூழலிலும் ஏற்படும் உறவுகளை வலுப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் (Kail & Cavanaugh, 2007). ஆசிரியர்கள், உடன் பிறப்புகள், விரிவுபட்ட குடும்பம், வேலை மேற்பார்வையாளர்கள், சட்டம் இயற்றுவோர், ஆகியோர்கள் கொடுக்கும் சமூகப்பண்புகள், குழந்தைகளின் நேர்மறை வளர்ச்சியில் செல்வாக்கு வாய்ந்ததாக திகழ்கின்றன. குழந்தையின் வளர்ச்சியில், பெற்றோரின் பங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கும், அரசியல் பொருளாதார கொள்கைகளுக்கு தகுந்த மதிப்பு அளிக்கப்பட வேண்டும்.

## விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)

1. எரிக்சனின் உள-சமூக நிலைகள் பற்றிய கோட்பாட்டை விளக்குக.
   Explain Erikson's theory of psycho-social stages.
2. ஜீன் பியாஜேயின் அறிகை வளர்ச்சிக் கோட்பாட்டையும், அதன் கல்வி தாக்கங்களையும் சுருக்கமாக விளக்குக.
   Discuss briefly Jean Piaget's theory of cognitive development and bring out its educational implications.
3. கோல்பெர்க்கின் ஒழுக்க வளர்ச்சி கோட்பாட்டினை விவரிக்கவும்.
   Explain the Kohlberg's theory of moral development.
4. வைகாட்ஸ்கியின் சமூக-கலாச்சார கோட்பாட்டை விவரிக்கவும்.
   Describe Vygotsky's Socio-cultural theory.
5. ப்ரோன்பென்பிரென்னரின் சுற்றுச்சூழல் அமைப்பு கோட்பாட்டை விளக்குக.
   Explain the Bronfenbrenner's ecological systems theory.

## அலகு - IV

## குழந்தை வளர்ச்சியில் சமூகமயமாக்கும் முகமைகள்

## (Socializing agencies of child development)

**நோக்கங்கள்: (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்:

1. குழந்தைகளை கவனிப்பவர்கள், பெற்றோர் குடும்பங்களுக்கிடையே கூடி செயல்படுதலை அறிந்து கொள்ள முடியும்.
2. குழந்தைகளின் வளர்ச்சிக்கும், குழந்தைகளின் வகுப்பறை செயல்பாடுகள், தற்கருத்து, சமூகமயமாக்கலில் வளர்ச்சி, பயனுள்ள வழிகாட்டுதல் இவற்றுடன் உள்ள தொடர்புகளைத் தெரிந்து கொள்ள முடியும்.
3. குழந்தைகள், வளரிளம் பருவத்தினரின் சமூகமயமாக்குதலை ஊக்குவிப்பதில், ஒப்பார் குழுவின் முக்கியத்துவம் பற்றி புரிந்து கொள்ள முடியும்.
4. சமுதாய தொண்டு நிறுவனங்களுக்கும், அவர்களால் உதவி பெறும் மக்களுக்கும், தேவையான உதவியைத் தர மாணவர்களை தயார் செய்வது பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

**முன்னுரை (Introduction)**

சமூகமயமாக்கல் (Socialization) என்ற வழிமுறை இளைய தலைமுறையினருக்கு கலாச்சாரத்தை பரிமாற்றம் செய்யும் ஒரு வழிமுறையாகும். இதன் மூலம் மக்கள் அவர்களுடைய சமூகத்தின் விதிகள், பழக்கங்கள் போன்றவைகளை கற்றுக் கொள்கின்றனர். சமூகமயமாக்கல் மூலம், சமூகம் தன் சமுதாய அமைப்பை பாதுகாக்கிறது. ஆளுமை என்பது, அப்படியே தானாக வருவதில்லை. சமூக நிறுவனங்களிடமிருந்துதான் நாம் சமுதாயத்தைப் பற்றியும், நம்மைப் பற்றியும் தெரிந்து கொள்கிறோம். நம் சுயமதிப்பீடு, உணர்ச்சிகள், நோக்குகள் இவற்றை பாதிக்கும் குழுக்களை சமூகமயமாக்கும் முகமைகள் என்கிறோம். சமூகமயமாக்கும் முகமைகள் என்பது, குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள், காவல்துறை, வேலைகொடுப்போர், ஆசிரியர்கள, அரசியல் தலைவர்கள், வியாபார தலைவர்கள, மதகுருக்கள், விளையாட்டு வீரர்கள் கலைஞர்கள் ஆகியோர்களை உள்ளடக்கியதாகும்.

கதைகளில் வரும் பாத்திரங்கள், தொலைக்காட்சியில் வருபவர்கள், திரைப்பட பாத்திரங்கள் ஆகியவையும் சமூகமயமாக்குதலை ஊக்குவிக்கும் சாதனங்கள் ஆகும். நாம் பெறும் ஒவ்வொரு சமூக அனுபவமும் நம்மை சிறிய அளவிலேனும் பாதிக்கிறது. ஒரு குழந்தையை ஒரு மதிப்புள்ள மனிதனாக ஆக்குவது ஒரு நீண்ட கால நிகழ்வு ஆகும். எனவே ஒவ்வொரு சமுதாயமும் குழந்தையின் சமூகமயமாக்குதலை வளர்க்க முகமைகளை உண்டாக்குகிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் போது கலாச்சார பரிமாற்றம் ஏற்படுகிறது. எனவே கருத்துப்பரிமாற்றம், தொடர்புகொள்ளல், ஆகியவை கலாச்சாரத்தை தெரிவிக்கும், வளர்க்கும் சாதனமாக விளங்குகிறது. ஒரு சமுதாயத்தில் குழந்தையின் சமூகமயமாக்கும் திறனை வளர்க்க, பல முகமைகள் உள்ளன. சமூகமயமாக்குதலை ஊக்குவிப்பதில் வெவ்வேறு முகமைகள், வெவ்வேறு பணியை செய்கின்றன. ஆயினும் இம்முகமைகள் ஒன்றோடொன்று தொடர்பு உள்ளவை. சமூகமயமாக்கும் திறன் வாழ்நாள் முழுவதும் நடைபெறுகிறது. ஆனால், மிக முக்கிய சமூக பண்புகள் குழந்தைப்பருவத்தில்

ஏற்படுகின்றன. எனவே இதில் மிக்க தாக்கம் உண்டாக்கக் கூடிய முகமைகளை நாம் அறிந்துகொள்வோம். அவைகளில் 1. குடும்பம் (Family), 2. பள்ளி (School), 3. ஒப்பார்குழு (Peer Group) 4. சமுதாயம் (Community) ஆகிய நான்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவைகள் எவ்வாறு குழந்தைகளின் சமூகமயமாக்கும் திறனை வளர்க்க உதவுகின்றன என்பதைப் பற்றிக் கீழே காண்போம்.

**1. குடும்பம் (Family)**

**முன்னுரை (Introduction)**

சமூகமயமாக்குதலை கற்பிப்பதில் குடும்பமே முதன்மைப் பங்கு வகிக்கிறது. பெற்றோர்கள், உடன் பிறந்தோர், தாத்தா, பாட்டி குடும்பத்திலுள்ள மற்ற நபர்கள் குழந்தைகள், தெரிந்து கொள்ள வேண்டியவற்றை கற்பிக்கின்றனர். உதாரணமாக, அவர்கள் குழந்தைக்கு பொருள்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று காட்டுகிறார்கள் (உடைகள், கணிப்பொறிகள், சாப்பிட உதவும் கருவிகள், புத்தகங்கள், சைக்கிள்கள்) மற்றவர்களுடன் எப்படி தொடர்பு கொள்ளுதல், (சிலரை, குடும்ப அங்கத்தினர்களாக, மற்றவர்களை நண்பர்களாக, அறியாதவர்களாக, ஆசிரியர்களாக, அண்டை வீட்டுக்காரர்களாக), இவ்வுலகம் எவ்வாறு வேலை செய்கிறது (எது உண்மையானது, எது கற்பனையானது) என்பன போன்றவைகள். உங்கள் குழந்தைப் பருவ அனுபவத்திலிருந்தோ, அல்லது ஒரு குழந்தையை வளர்க்கும் பணியை செய்வதிலிருந்தோ நீங்கள் அறிவது, சமூகமயமாக்கல் என்பது, முடிவற்ற பொருள்கள் கருத்துக்களைப் பற்றி கற்றுக்கொள்ளல் ஆகும்.

**வாழ்க்கை முழுவதும் நடைபெறும் செயல் (It is a life – long act)**

குடும்பம் வாழ்க்கை ஆகியவைகள் வாழ்நாள் முழுவதும் நடைபெறும் செயல் ஆகும். குழந்தைகள் பெரும்பாலும் மற்றவர்களைச் சார்ந்து உள்ளனர். அவர்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களுக்கும், மற்ற குடும்ப நபர்களுக்கும் உள்ளது. குடும்பத்தில், குழந்தைகள் தாமாக கற்கும் சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் குழந்தைகள் ஆண், பெண்களுக்கான நடைமுறைகள் அறிதலை கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். குழந்தைகள் பாலின வேறுபாடுகளுக்கு உகந்த நடத்தையைக் கற்றுக் கொள்கிறார்கள்.

**தான் யார் என்பதைப் பற்றிய முடிவுகள் (The result of who he is)**

நாம் யார்? நம்மைப் பற்றியும், குடும்பத்தின் நிலை பற்றியும் கருத்துக்கள் நமக்கு அளிக்கப்படுகின்றன. பெற்றோரின் நிலை, அவர்கள் குழந்தைகளை வளர்க்கும் விதத்தை தீர்மானித்து. பெற்றோரின் நிலை அவர்கள் எவ்வளவு பணம் செலவு செய்யவேண்டும் என்பதைப் பற்றி மட்டுமின்றி, அவர்கள் குழந்தைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதையும் தீர்மானிக்கிறது. கீழ்நிலையில் உள்ளவர்கள், கீழ்படிதல் (Obedience), ஒத்துப்போதல் (Confirmity) இவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். ‘‘பிரச்சிளையில் மாட்டிக்கொள்ளாதே’’ (‘‘Don’t get into trouble’’) என பெற்றோர் சொல்கின்றனர். கீழ்நிலையில் உள்ளவர்களிடையே உடல்வழி தண்டனை, மற்ற நிலையில் உள்ளவர்களைவிட அதிகம் காணப்படுகிறது. கீழ்நிலையில் உள்ளவர்களின் குழந்தைகள் பொதுவாக குறைந்த அளவு கல்வியே பெறுகின்றனர். சாதாரண செயல்களை உன்னிப்பான மேற்பார்வையில் செய்கின்றனர். அவர்கள் குழந்தைகள் தம் போன்ற நிலையை அடைவர் என எதிர்பார்ப்பதால் கீழ்படிதலை

மிகவும் எதிர்பார்க்கின்றனர். வசதி மிகுந்த, நன்கு மிகுந்த கல்வி கற்ற பெற்றோர் பொதுவாக கற்பனை, படைப்புத்திறன் போன்ற வேலைகளில் உள்ளனர். அவர்கள் தம் குழந்தைகளிடம் இந்த பண்புகளை உருவாக்க முயல்கின்றனர். எனவே நடுத்தர நிலையில் உள்ளவர்கள், ஆர்வத்தை வளர்த்தல் (Curiosity), தன்கருத்துக்களை வெளியிடல் (Self-expression), சுயகட்டுப்பாடு (Self-control), சிந்தித்தல் (Reasoning) ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

**ஆளுமையை வளர்த்தல் (Developing personality)**

எல்லா சமூகங்களிலும் குடும்பத்தைத் தவிர, கல்வி நிறுவனங்கள், நண்பர்கள் போன்றவை சமூகமயமாக்கலுக்கு உதவுகின்றன. ஆயினும் ஆளுமையை உருவாக்குவதில் குடும்பம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மற்ற நிறுவனங்கள், இந்த வளர்ச்சிக்கு உதவ ஆரம்பிக்கும்போது, குடும்பம் குழந்தையின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது சமுதாயம் குழந்தைகளிடமிருந்து எதிர்பார்க்கும் பண்புகளை வளர்க்க பெற்றோர் பரிசு கொடுத்தல்(Reward), தண்டணை(Punishment) இவை இரண்டையும் பயன்படுத்துகின்றனர்.

**குடும்பம் ஒரு சமுதாயம் (Family is a community)**

குடும்பம் அதன் அங்கத்தினர்கள் மீது சாதாரணமான கட்டுப்பாட்டை செலுத்துகிறது. குடும்பம் ஒரு சிறு சமுதாயம்போல் இருந்து, தனிநபருக்கும், சமூகத்துக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தும் சாதனமாக பயன்படுகிறது. அது இளைய தலைமுறையினரை, தம் வேலையை சிறப்பாக செய்யும் வயது வந்தோராக தயார் செய்கிறது. குடும்பம் ஒரு நெருக்கமான, முக்கிய குழுவாக இருப்பதால், தம் அங்கத்தினர்களின் விரும்பத்தகாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, முறைசாரா முறைகளை (Informal methods) பயன்படுத்துகிறது. தனி நபர் வாழ்க்கை சுழற்சி, குடும்பத்தின் வாழ்க்கை சுழற்சிகளுக்கு இடையேயான இடைத்தொடர்பு காரணமாக சமூகமயமாக்கல் செயல்முறை, ஒரு செயல்முறையாகவே உள்ளது.

**கலாச்சாரத்தை எடுத்துச்செல்லும் முக்கிய சாதனம் (The main device to carry the culture)**

ராபர்ட். கே. மெர்டனின் (Robert. K. Merton) கருத்துப்படி, ‘‘குடும்பமே அடுத்த வம்சாவளியினருக்கு கலாச்சார பண்புகளை எடுத்துச்சொல்லும் முக்கிய சாதனம் ஆகும்’’. குடும்பம், சமுதாய தொடர்ச்சிக்கு பயன்படும் இயல்பான, வசதியான ஊடகம் (Convenient channel) ஆகும்.

**கூட்டுக் குடும்பம் அற்ற நிலை (Non family)**

கிராமப்புறங்களில், குழந்தைகளின் ஆரம்ப நிலைகளில், சமூகத்தொடர்பு குடும்பத்துடன் ஏற்படுகிறது. ஆனால்,இன்று குழந்தையின் வாழ்க்கையில் குடும்பத்தின் பங்கு மாறி வருகிறது.உதாரணமாக, அமெரிக்க குடும்பங்களில், இரு பெற்றோர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் கொண்ட இணைந்த குடும்பமாக இப்போது இல்லை. ஐந்தில் ஒன்றைவிட குறைவான குடும்பங்களில், வேலை செய்யும் தந்தை, முழுநேர வீட்டு வேலை செய்யும் அம்மா, குறைந்த அளவில் ஒரு குழந்தை என்றுதான் அடங்கியுள்ளது. ஒரு பெற்றோர் உள்ள குடும்பங்கள் அதிகரித்து வருகின்றன. 6 வயதுக்கு குறைவான குழந்தைகள் உள்ள, 56 சதவீத தாய்கள் வேலை செய்து வருகின்றனர் என அமெரிக்க

மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனம் (U.S. Bureau of the census, 1985a, p.399) தெரிவிக்கின்றது.

### சமூக அந்தஸ்து பெறுதல் (Getting social status)

அநேக குழந்தைகள் பெற்றோரைத் தவிர மற்றவர்களிடமிருந்துதான், தொடக்க நிலையில் கற்கின்றனர். வீட்டில் ஒரே ஒரு பெற்றோர் மட்டும் உள்ள குழந்தைகளின் மீது ஏற்படும் விளைவுகள் என்ன? வீட்டுக்கு வெளியே பணிபுரியும் தாய் உள்ளவர்களின் நிலை என்ன? ஒரு ஆய்வின்முடிவு, பொருளாதார வசதியுள்ள ஒரே ஒரு பெற்றோர், தம் குழந்தைகளை சிறப்பாக வளர்க்க முடிகிறது (Monaghan-Leckband,1978) என்பதைக் காட்டுகிறது. அமெரிக்காவில் வளரும் அநேக குழந்தைகள் மிகுந்த நேரத்தை குடும்பத்தைத் தவிர மற்றவர்களுடன் செலவிட்டாலும், இது சமூகமயமாக்கலை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கு முடிந்து விட்டது என்பது இல்லை. மாறாக குடும்பம், மதிப்புகள், மனப்பான்மைகள், நடத்தை நோக்குகள், ஆகியவற்றைக் கற்றுத்தரும் முக்கிய அமைப்பாக தொடர்கிறது. குடும்பம் குழந்தையின் சமூக வாய்ப்புகள், அனுபவங்கள் போன்றவற்றை உருவாக்க மிக பயனுள்ளதாகிறது. ஒரே சமூகத்தில் வசித்த போதிலும், மாறுபட்ட சமூக அந்தஸ்து நிலைகள் மாறுபட்ட சமூகமயமாக்கலை உண்டாக்கும்.

### பகல் பராமரிப்பு மையம் (Day care centre)

5 வயது அதற்கு குறைவான சுமார் 10 மில்லியன் குழந்தைகளின் தாயார்கள் வீட்டுக்கு வெளியே பணி புரிகின்றனர். இது போன்ற குழந்தைகளுக்கு, பகல் நேர பாதுகாப்பு மையங்கள் சமூகமயமாக்கலை வளர்க்கும் முகமைகளாக இருக்கின்றன. 1982 – களில் 30,000 க்கும் மேற்பட்ட, பகல் பராமரிப்பு மையங்கள், பக்கத்து வீட்டில் இருக்க வைத்தல், பெரிய பள்ளிகள் நடத்தும் நர்சரிகள், தேவாலயங்கள், மாநகராட்சிகள், அறக்கட்டளைகள் போன்றோர் நடத்தும் பகல் நேர பாதுகாப்பு மையங்கள் இருந்தன (Lindsey, 1984).

### குழந்தைகள் காப்பகத்தின் செயல்பாடுகள் (Activities of children's archives)

ஆசிரியர்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையே உள்ள விகிதம் பத்துக்கு ஒன்றாகவோ, அதைவிட குறைவாகவோ இருக்கும்போதும், குழந்தைகளின் எண்ணிக்கை 20 க்கும் குறைவாக இருக்கும்போதும், கவனித்துக் கொள்பவர்கள் குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சிபற்றி பயிற்சி பெற்றவராக இருக்கும்போதும், குழந்தைகளின் மீது அதிக கவனம் செலுத்தும் போதும், இதுபோன்ற மையங்களிலுள்ள குழந்தைகள் சிறப்பாக செயல்படுகின்றனர் (Collins, 1984; Lindsey, 1984). குறைந்த வருமானமுள்ள குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள், அரசால் பொருளாதார உதவிபெறும் "ஹெட் ஸ்டார்ட்" (Head start) போன்ற குழந்தை காப்பகங்கள் மூலம் மிக்க பயன் அடைந்துள்ளன.

### குடும்ப சமூகமயமாக்கலின் விளைவுகள் (Effects of family socialization)

குடும்பமே சமூகமயமாக்கலை வளர்ப்பதில் மிகுந்த தாக்கம் கொண்டுள்ளது. குழந்தைகள் முழுவதும் மற்றவர்களை சார்ந்துள்ளதால், அவர்களை கவனித்துக்கொள்ளும் பொறுப்பு பெற்றோர்களையும், மற்ற அங்கத்தினர்களையும் சாரும். அது குழந்தையின் திறமையான வாழ்வை தீர்மானிக்கிறது. அங்கு இயல்பான கற்றலுக்கான சூழ்நிலை

நிலவுகிறது. தான் ஆணா அல்லது பெண்ணா என்று வரையறை செய்து, அதற்கு ஏற்றபடி அங்கம் வகிக்க, நடந்து கொள்ள குடும்பம் கற்பிக்கிறது. மத்தியதர வகுப்பு குழந்தைகள் கல்வியிலும், தொழில் துறையிலும் சிறப்பாக செயல்பட தேவையான கலாச்சார திறன்களை பெறுகின்றனர். பணிபுரியும் பெற்றோரின் குழந்தைகள், குறைந்த ஊதியங்களில் பணிபுரிய தேவையான கலாச்சார பண்புகளை பெறுகின்றனர்.

### முடிவுரை (Conclusion)

சமூகமயமாக்கலை புரிந்துகொள்ள, எரிக்சனின் வளர்ச்சி நிலை படிகள் உதவுகின்றன. ஒவ்வொரு நிலையிலும், சமூகமயமாக்கலை பற்றிய கருத்துக்களை கற்பிக்கும் அமைப்புகளும், அவற்றிலிருந்து பெறும் கருத்துக்களும் உள்ளன. குழந்தை வளர்ந்து, உள-சமூகவளர்ச்சி பெறும்போது, இந்த அமைப்புகளின் தாக்கம் வலுவானதாகவோ, வலுவிழந்ததாகவோ ஆகின்றன. குழந்தையின் ஆரம்ப வளர்ச்சியில், குடும்பமே வலுவான அமைப்பு. ஆயினும் குழந்தை பள்ளி செல்லும் நிலையை அடையும்போது, பள்ளியின் செயல்பாடுகள் அவர்களை பாதிக்கின்றது. பள்ளி வயதில், ஒப்பார்குழுக்கள் சமூகமயமாக்குதலை வளர்க்கும் சாதனங்களாவார்கள். முதல் எட்டு ஆண்டுகளில், குடும்பம், பள்ளி, ஒப்பார்குழு, சமுதாயம் ஆகியவைகள் சமூகமயமாக்கலை வளர்ப்பதில் கீழ்க்கண்ட அம்சங்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

- நம்பிக்கையை வளர்த்தல்
- சுயமாக செயல்படலை வளர்த்தல்
- முனைப்புடன் செயல்படலை ஊக்குவித்தல்
- தகுதி உள்ளவராக எண்ணுதல், சாதனைகள் பற்றிய ஆர்வம்/ஆசை
- தான் யார் என்பதைப் பற்றிய முடிவுகள்
- மற்றவர்களுடன் தொடர்புகள்
- அடுத்த வம்சாவளியினரைப் பற்றிய முடிவுகள்
- வாழ்க்கை பற்றி சிந்தித்தல்

## 2. பள்ளிகள் (Schools)

### முன்னுரை (Introduction)

சமுதாயங்கள் சிக்கலானவையாக ஆகும்போதும், பணியை பகிர்ந்தளித்தல் அதிகரிக்கும்போதும், குழந்தைகள் சமூகத்தில் வயது வந்தோராக சிறப்பாக செயல்பட, நாள் முழுதும் சொல்லிக் கொடுக்க இயலாது. எனவே அநேக சமூகங்கள், குழந்தைகளுக்கு சில திறன்களை கற்றுத்தர பள்ளிகளை நிறுவியுள்ளன. பள்ளிகள், குழந்தைகளுக்கு மதிப்புகள், நல்ல மனப்பான்மைகள் ஆகியவற்றை கற்பிக்கின்றன. இவற்றில் போட்டிபோடுதல, ஒத்துழைத்தல், அனுசரித்தல், புதியவற்றை கண்டு பிடித்தல் போன்றவையும் அடங்கும்.

### நற்பண்புகளை உருவாக்குதல் (Creating virtues)

சமூகமயமாக்கலை கற்றுக்கொடுப்பதில் பள்ளி இரண்டாவது இடத்தில் உள்ளது. பள்ளியில் குழந்தை தன் கருத்துக்களையும், நோக்குகளையும் உருவாக்கும் கல்வியை பெறுகிறது. முறையான கல்வி ஒரு குழந்தையை நல்ல குடிமகனாக செய்கிறது. முறையற்ற கல்வி, அவர்களை ஒரு குற்றவாளியாக மாற்றலாம். சமூகமயமாக்கலில் கல்வி மிக முக்கிய

பங்கு வகிக்கிறது. நன்கு திட்டமிடப்பட்ட கல்வி, நல்ல சமூகப்பண்புகள் உள்ள மக்களை உருவாக்கும். பள்ளிகள், பாடத்திட்டத்தில் நேரடியாக குறிப்பிட்டவற்றை கற்றுக்கொடுத்து சமூக பண்புகளை வளர்ப்பதுடன், மறைமுகமாக அமைந்துள்ள பகுதியில், கலாச்சாரத்தையும் கற்றுத் தருகின்றன. இவற்றுள் ஒன்று, மேலாண்மைக்கு மதிப்பு கொடுத்தல் - குழந்தைகள் வரிசையில் நிற்பது போன்றவையாகும்.

**திறன்களுக்கான மதிப்பீடு (Evaluating for skills)**

பள்ளிகள், பரிசுகள் பெறுவதற்காக (rewards), உழைப்பதன் முக்கியத்துவத்தை கற்றுக் கொடுப்பதுடன், நேரம் தவறாமை (Puntuality), சுத்தம் (Neatness), ஒழுங்குமுறையாக்கம் (Orderliness) மேலோருக்கு மரியாதை கொடுத்தல் (Respect for authority) ஆகியவற்றையும் கற்றுத்தருகின்றன. ஆசிரியர்கள், குழந்தைகள் எந்த அளவுக்கு செயலை செய்கின்றனர். அவர்களிடம் எவ்வளவு திறன் உள்ளது என்பதை மதிப்பிட வேண்டியுள்ளது. எனவே பள்ளியில் குழந்தைகளுக்கு பெரியோர்களிடம் உள்ள தொடர்பு, நடத்தை முறைகளிலிருந்து செயல்களை செய்தல், மற்றோரால் தீர்மானிக்கப்பட்ட திறன்களுக்கு ஏற்ப மதிப்பீடு (Evaluating for skills) மாறுகிறது.

**அடிப்படைத் திறன்களை வளர்த்தல் (Developing basic skills)**

பள்ளிகள், மாணவர்களை பலவழிகளில் பழக வைக்கின்றன. முதலில் தீர்மானிக்கப்பட்ட பாடத்திட்டத்தை (Formal curriculum) குழந்தைகள் கற்கின்றனர். 3R's எனப்படும் அடிப்படைத்திறன்களான, படித்தல் (Reading), எழுதுதல் (Writing), கணிதம் பழகுதல் (Arithmetic) ஆகியவைகள், அவர்கள் சமூகத்தில் சிறப்பாக பணிபுரிய அவசியம் ஆகிறது. இரண்டாவதாக, குழந்தைகள் அன்றாடம் மாணவர்களுடன் கலந்து பழகுவதால் அவர்களுடைய சமூகமயமாக்கும் திறன் வலுவடைகிறது. மூன்றாவதாக, அவர்கள் அதிகாரம் உள்ள ஆசிரியர்களுடன் பழகுகின்றனர். முதல்நிலை கல்வி பெறாத குழந்தைகளுக்கு, பெற்றோரைத் தவிர ஆசிரியர்களே அவர்கள் சந்திக்கும் அதிகாரம் மிக்க நபர்கள் ஆவர். இதுபோன்ற அதிகாரம் மிக்கோருடன் தொடர்பு கொள்ளுதல், பழக கற்றுக் கொள்ளுதல் மற்றொரு முக்கிய அம்சம் ஆகும்.

**மறைமுக பாடத்திட்டம் (Hidden curriculum)**

தம் சூழ்நிலையிலிருந்து மாறுபட்டவர்களுடன் பழக வாய்ப்பளித்து, பள்ளிக்கல்வி குழந்தைகளின் சமூக உலகை பெரிதாக்குகிறது. பள்ளிகள், குழந்தைகளுக்கு விரிவான அளவுடைய அறிவுதிறனை கற்பிக்கிறது. பள்ளிகள் மற்ற விஷயங்களை மறைமுகமாக கற்றுத் தருகின்றன. இவை மறைமுக பாடத்திட்டம் (Hidden curriculum) எனப்படும். பல செயல்பாடுகள் மூலம், பள்ளிகள் தேசபக்தி (Patriotism), ஜனநாயகம் (Democracy), நீதி (Justice), நேர்மை (Honesty), முழுமை (Completion) போன்ற பண்புகளை கற்பிக்கிறது. பொருளாதார அமைப்பு, அரசியல் அமைப்பு ஆகியவற்றை அறிமுகம் செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

**சமூகத்தில் பழகும் திறனை வளர்த்தல் (Developping community skills)**

அமெரிக்கக் குழந்தைகள் பெரும்பாலோனோர், நாளொன்றுக்கு 7 மணி நேரமும், ஓர் ஆண்டில் 180 நாட்களும் பள்ளியில் செலவிடுகின்றனர். எனவே சமூகத்தில் பழகுவதை

வளர்ப்பதில் இவற்றின் பங்கை மறுக்க முடியாது (U.S.Department of Education – 2004). மாணவர்கள் பள்ளியில் வெளிப்படையான கணிதம், அறிவியல் மற்ற பாடங்களை மட்டும் கற்பதில்லை. பள்ளிகள் மாணவர்களிடையே குழுவாக செயல்படல், திட்டப்படி நடத்தல், பாடப் புத்தகங்களை பயன்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடுத்தி சமூக பண்புகளை வளர்க்கின்றன. ஆசிரியர், அவருடைய செயல்பாடுகளை, மாணவர்களிடமிருந்து அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதை வலுப்படுத்தும் விதமாக அமைக்கின்றார். இது போன்றவை 'மறைமுக பாடத்திட்டம்' (Hidden curriculum) என சமூகவியல் வல்லுனர்களால் அழைக்கப்படுகிறது.

**முடிவுரை (Conclusion)**

மாணவர்களின் சமூகமயமாக்கலை வளர்ப்பதில் பள்ளி ஒரு முக்கிய நிறுவனம் ஆகும். அலுவலக நோக்கின்படி பள்ளியின் முக்கிய நோக்கம், பாடம் பற்றிய அறிவை உண்டாக்குதல், வாழ்க்கைக்கு தேவையான வழிகாட்டுதல்களை பின்பற்றுதல், குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தல் போன்றவை. ஆயினும் மாணவர்கள், ஆசிரியர்கள் பள்ளி நிர்வாகம் செய்வோர் போன்றோர் தயாரித்த பாடத்திலிருந்து மட்டும் கற்பதில்லை. பள்ளியில் ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மற்றவர்களுடன் பழகுவதன் மூலம் கூட சமூகமயமாக்கும் திறன்களை கற்றுக் கொள்கிறார்கள். உதாரணமாக கீழ்படிதலின் முக்கியத்துவத்தையும், வெற்றிபெற அமைதியாக காத்திருத்தல், ஆர்வமில்லாதபோது கூட, ஆர்வத்துடன் செயல்படல் ஆகியவற்றை கற்றுக்கொள்கிறார்கள். அலெக்சாண்டர், அவருடைய ஆசிரியை கற்பிக்க நினைக்காதவற்றையும் மற்ற குழந்தைகள் போல் கற்றுக் கொண்டாராம். உதாரணமாக, கையை உயர்த்துவதற்கு பதிலாக, பதிலை உறக்கக் கூறுதல் சிறந்தது என கற்றுக்கொள்ளலாம்.

**3. ஒப்பார் குழு (Peer group)**

**முன்னுரை (Introduction)**

ஒப்பார் குழு என்பது (Peer group) ஒரே வயது, சமூக அந்தஸ்து, ஒரே மாதிரியான ஆர்வம் உள்ள மாணவர்களைக் கொண்டது. ஒப்பார் குழுக்களுடன் கலந்து பழகுதல், இளமைப்பருவத்தில் ஆரம்பிக்கிறது. உதாரணமாக, விளையாட்டுத்திடலில், குழந்தைகள் தம்மைவிட சிறியவர்களுக்கு ஒருவர் ஒருவராக வரிசையில் செயல்படுதல், ஒரு விளையாட்டின் விதிமுறைகள் ஆகியவற்றை கற்றுத்தருகின்றனர். குழந்தைகள் மாணவர்களாக வளரும்போது இந்த முறை தொடர்கிறது. ஒப்பார் குழுக்கள் என்பது இளைஞர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், அவர்கள் தம் பெற்றோரிடமிருந்து, மாறுபட்ட தனித்தன்மையை வளர்க்க ஆரம்பித்து, சுதந்திரமாக செயல்படுதலை விரும்புகின்றனர். மேலும் இக்குழுக்கள், சமூக பண்புகளை வளர்க்க வாய்ப்புக்களை கொடுக்கின்றன. ஏனெனில் ஒப்பார் குழு தம் குடும்பத்தாருடன் ஈடுபடும் செயல்பாடுகளிலிருந்து மாறுபடட செயல்பாடுகளை செய்ய வாய்ப்புகளை அளிக்கிறது. இளைஞர்களுக்கு ஒப்பார் குழு முதல் சமூகமயமாக்கும் அனுபவத்தை, குடும்பத்தைத் தவிர அளிக்கிறது.

**வளரிளம் பருவத்தினரின் நட்பு (Friendship of adolescents)**

நீவிர் 16 வயது சிறுவனாக இருந்தபோது, உம் பெற்றோரிடம்,"என் நண்பர்கள் அனைவரும் இதை செய்யும்போது நான் மட்டும் ஏன் இதை செய்யக் கூடாது? இது நியாயமா? என புகார் செய்திருப்பீர்கள். இந்த சாதாரண உதாரணம் காட்டுவது, நம் நண்பர்கள், நம் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதுதான். இது குறிப்பாக குமரப்பருவத்தினருக்கு மிக பொருத்தமானது. அப்போது நண்பர்கள் குழுவால் நம் வாழ்வின் பல அம்சங்கள் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, தற்கால இளைஞர்கள் எப்போதும் செல்போன்களுடனே இருப்பதை நாம் கருதலாம். ஆயினும், நண்பர்கள் வாழ்வின் மற்ற நிலைகளிலும் முக்கியமானவர்கள்தான். நாம் நகைச்சுவைக்கு, நம் உணர்வுக்கு ஆதரவு அளிக்க, கூடி இருக்க, நண்பர்களையே நம்பி உள்ளோம். நட்பின் நல்ல அம்சம் இதுவே.

**நண்பர்களால் கட்டாயப்படுத்தப்படுதல் (Compulsion by friends)**

நட்பில், குறையாக நாம் கருதிடும் ஒன்று ஒப்பர் குழுவினரால் கட்டாயப்படுத்தப்படுதல் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. உதாரணமாக வெள்ளிக்கிழமை அன்று, திங்கள் அன்று நடைபெற உள்ள முக்கிய தேர்வுக்காக நீவிர் படித்துக் கொண்டிருக்கிரீர் என்று வைத்துக்கொள்வோம். உம் நண்பர்கள் வந்து, பிட்சா, பானம் சாப்பிட அவர்களுடன் வருமாறு அழைக்கின்றனர். அப்போது அநேகமாக நீவிர் அவர்களுடன் செல்ல ஒப்புக்கொள்வீர். ஏனெனில் ஒரு பக்கம் வெள்ளிக்கிழமை இரவு படிப்பதை நீர் விரும்பவில்லை, இது தவிர உம்மீது இப்படி செய்ய ஒரு மறைமுக அழுத்தம் உள்ளது. இந்த உதாரணத்தில் காட்டியது போல, நம் நண்பர்கள் நம்மை பல விதங்களில் பாதிக்கின்றனர். குமரப் பருவத்தில் அவர்களுடைய ஆர்வங்கள், திரைப்படங்களிலுள்ள ஆர்வம், இசை, பிரபல கலாச்சாரத்தின் மற்ற பகுதிகள் இவற்றை ஒப்பார் குழுக்கள் பெரிதும் பாதிக்கின்றன.

**சுயமாக செயல்பட கற்றுக்கொள்ளல் (Learn to act independently)**

ஒப்பார் குழு என்பது குடும்பம், பள்ளி போல் இன்றி நண்பர்கள் குழுவாதலால், குழந்தைகளை மூத்தோர்களின் நேரடிப் பார்வையிலிருந்து தப்பிக்க உதவுகிறது. ஓப்பார் குழுவில், குழந்தைகள் தாமாக எப்படி உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது என்பதை கற்றுக்கொள்கின்றனர். ஒப்பார் குழு தமக்கு ஆர்வமுள்ளவற்றைப் பற்றி கலந்துரையாட வாய்ப்பளிக்கிறது. கேள்விக்குறியாகிவிடும் சமுதாயத்தில், ஒப்பார் குழு ஒரு நபரின் மீது மிகுந்த செல்வாக்கு உள்ளதாக இருக்கிறது.

**நம்பிக்கையை வளர்த்தல் (Develop confidence)**

தலைமுறை இடைவெளிகள் காரணமாக இளைஞர்கள், முதியோர்களின் நோக்குகளில் வேறுபாடுகள் காணப்படும். இளைஞர்கள் தம் குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று, தம்மை வயது வந்தோராக எண்ணும் போது, ஒப்பர் குழுவின் முக்கியத்துவம் மிக உயர்ந்த நிலையை எட்டுகிறது. சுற்றியுள்ள பகுதிகள் பள்ளிகள் பலவிதமான ஒப்பார் குழுக்களை அளிக்கின்றன. தனி நபர்கள், தம் நண்பர்கள் குழுவை உயர்வாகவும், மற்றவைகளை ஏற்கத் தகாதவைகளாகவம் கருதுகின்றனர். தாம் இணைய விரும்பும் ஒப்பார் குழுவின் தாக்கம், சமூகவியல் வல்லுர்களால் "முன்கூட்டியே சமூகமயமாக்கல்" (Anticipatory socialization) என அழைக்கப்படுகிறது. இது ஒருவர் தாம் விரும்பும் நிலையை அடைய உதவுகிறது.

**விளையாட்டு நண்பர்கள் (Game friends)**

கூட விளையாடுவோர் நண்பர்கள் சமூகமயமாக்கலை வளர்க்கும் முக்கிய முகமைகள் ஆகும். குழந்தைகளுக்கும், அதன் விளையாட்டு நண்பர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு சமமானது. அது ஒத்துழைப்பு, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவர்கள் சம வயதுள்ளவர்களாக இருப்பர். மேலே கூறியபடி, குழந்தைகள் நண்பர்களிடமிருந்தும், விளையாட்டு தோழர்களிடமிருந்தும், பெற்றோரிடமிருந்தும் பெற முடியாத சிலவற்றை பெறுகின்றனர். அவர்களிடமிருந்து ஒத்துழைப்பு நடைமுறைகள், அன்றைய உடை அணியும் முறை, விருப்ப செயல்கள் போன்றவற்றை கற்றுக்கொள்கிறது. இவற்றைப் பற்றிய ஆய்வு, சமூகமயமாதலுக்கு உதவக்கூடிய ஒன்றாகும். உதாரணமாக, பால் தொடர்பு பற்றிய அறிவு இளைஞர்களுக்கு அவர்களுக்கு திருமணம் ஆகும் வரை, விரும்பத்தகாதது என நம் சமுதாயம் கருதுகிறது. இது போன்ற அறிவு திருமணம் ஆகும் வரை தடைசெய்யப்பட்டால், பால் வாழ்க்கையில், திருமணத்திற்குப் பின் பாலியல் செயல்களில் ஈடுபடுவது கடினமாகிறது. இதுபற்றிய அறிவை குழந்தை தம் நண்பர்களிடமிருந்து, விளையாட்டு குழுவினரிடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

**கலாச்சார அறிவினை வளர்தல் (Developing cultural knowledge)**

ஒப்பார் குழுவின் உறுப்பினர்கள் சமூகமயமாதலில் ஒரே நிலையில் இருப்பதால், அவர்கள் எளிதாக, சுயமாக ஒருவரோடொருவர் பழகுகின்றனர். ஒப்பார் குழுவின் உறுப்பினர்கள் தம் கலாச்சாரம் பற்றி அறிய மற்ற இடங்களும் உள்ளதால் அவர்களின் கலாச்சார அறிவு வளர்ந்து கொண்டு செல்கிறது. அவர்கள் உலகை ஒரே கண்ணோட்டத்துடன் நோக்கி ஒரே மாதிரியான நோக்குகளை பெற்றுள்ளனர். குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட படி குழந்தை அவர்களைப் போன்ற பண்புகள், விருப்பு, வெறுப்புகளை காட்டவேண்டும். ஒப்பார் குழுவின் நிலையிலும், குழந்தையின் குடும்பத்தின் நிலையிலும் மாறுபாடுகள் இருக்கும்போது பிரச்சிளைகள் எழுகின்றன. இதன் விளைவாக அவர்கள் குடும்பத்திலிருந்து விலகி செல்ல முயலுவர். நாளடைவில் நண்பர் குழுவின் தாக்கம் உயர்ந்து கொண்டே செல்கிறது. இது மாறி வரும் சமுதாயத்தில் தவிர்க்க முடியாத நிகழ்வாக இருக்கிறது.

**குறிக்கோளை அடைய உதவும் ஒப்பார் குழு (Peergroup to help achieve the goal)**

சோவியத் யூனியன் நண்பர்கள் குழுவை, அவர்கள் விரும்பும் நோக்கங்கள், நடத்தைகள் இவைகளை வலுப்படுத்த பதவியில் உள்ளோரை பயன்படுத்தினர். உதாரணமாக ஒரு குழந்தை காலதாமதமாக பள்ளிக்கு வரும்போது, இதை கவனிப்பது ஆசிரியர் மட்டுமல்ல (சரியான நேரத்தில் வரும் குழந்தைகளுடன் பழகுதல் மூலம்) அந்த குழந்தையுடன் அதே வரிசையில் அமரும் குழந்தைகளை, குழந்தையை சரியான நேரத்தில் வரும்படி வற்புறுத்துமாறு செய்ய சொல்வர் (Bronfenbrenner, 1970). ஒப்பார் குழுவின் தண்டணைகள் குறிப்பாக பயனுள்ளவை. இஸ்ரேல் நாட்டில், வயலில் வேலைசெய்யும் குழுவாலும் ஒரு குழந்தை விதிகளுக்கு மாறாக டிராக்டரை பயன்படுத்தி பயிர்களுக்கு சேதம் விளைவித்தால் சில காலம் ஒதிக்கி வைக்கப்படும். இந்த நேரத்தில் மற்ற குழந்தைகள், அந்த குழந்தையுடன் பேசவோ, விளையாடவோ மாட்டார்கள், ஒத்து நடக்காத குழந்தைக்கு, ஒப்பார் குழு அதிகாரிகளின் இணைந்து செயலாற்றும் போது ஏற்படும் விளைவு, குறிக்கோளை அடைய

உதவியபோதும், மிக வலிமையுள்ளதாகவும், வலிஉள்ளதாகவும் இருக்கும். நம் சமூகத்தில், இளைஞர்கள், தங்கள் உடை, விரும்பும் பாட்டுகள், ஏமாற்றுதல், போதை பொருள்கள் பயன்படுத்தல் இவற்றில் தம் ஒப்பார் குழுவால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தம் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடுவதில் தம் ஒப்பார் குழுவைவிட பெற்றோரின் தாக்கமே அதிகமாக உள்ளது. பெண்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிய திட்டங்களில், ஆண்களைவிட அதிகமாக தம் ஒப்பார் குழுவால் பாதிக்கப்படுகின்றனர்.

**முடிவுரை (Conclusion)**

குழந்தைகள் வளர்ந்து, பள்ளிக்குச் செல்லும்போது, நம் வயதுள்ள மற்ற குழந்தைகளின் தொடர்பு அன்றாடம் நிகழ்கிறது. இந்த ஒப்பார் குழுவில் தம் விளையாட்டு பொருள்களையும் மற்ற அறிதானவற்றையும் (ஆசிரியரின் கவனம் போன்ற) பகிர்ந்து கொள்ள கற்றுக்கொள்கின்றனர். ஓப்பார் குழு பெற்றோர், பள்ளிகளில் வற்புறுத்தப்படும் நடத்தைகளை வலுப்படுத்தலாம். உதாரணமாக மற்றொருவரை அடித்தல் சரியானதா பையன்கள், பெண்களுக்கு உகந்த நடத்தைமுறைகள் யாவை என்பனவாம். இது குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பற்றி உண்மையாக உள்ளது. மேலும் சில சோசியலிச நாடுகளுக்கும் பொருத்தமாக உள்ளது. குழந்தைகளின் ஆர்வம், கவனம், ஆகியவை பிரசித்தமான இசை, திரைப்படங்கள், விளையாட்டு, பால், இனம் அல்லது சட்டத்திற்கு புறம்பான செயல்கள் இவற்றை நோக்கியுள்ளது. ஆயினும் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் குழந்தைகள் வீட்டுப்பாடம் செய்யவேண்டும், வீட்டில் உதவ வேண்டும், பிரச்சினைகளை தவிர்க்க வேண்டும் என விரும்புகின்றார். ஓப்பார் குழு, தம்குழுவில் உள்ள நண்பர்களில் வயது வந்தோரால் ஏற்றுக்கொள்ளப்படாத செயல்களை செய்பவருக்கு, கௌரவம், புகழ்தல் ஆகியவற்றைக் கொடுக்கலாம்.

**4. சமுதாயம் (Community)**

**முன்னுரை (Introduction)**

ஒவ்வொரு சமுதாயமும் இளைஞர்கள் எவ்வாறு வளர்கின்றனர் என்பதை தீர்மானிக்க(வழி நடத்த) முயலுகிறது. இந்த தாக்கம் வெகுவாக பெற்றோர், பள்ளி, சக மாணவர்கள் ஆகியோர்களால் ஏற்படுத்தப்படுகிறது. ஆயினும், நம் சமுதாயத்தில் முக்கியமாக கருதப்படும் அரசியல், பொருளாதார கருத்துக்கள் இவைகள் குழந்தையை அடைகின்றன என்பது கருதப்பட வேண்டிய ஒன்று. சமுதாயம் குடும்பத்தைப் போன்று நேரடியாக குழந்தையின் கல்வியில் பங்கு கொள்வதில்லை. அது சமுதாய வாழ்க்கை என்ற ஊடகத்தின் மூலம் குழந்தைக்கு முறைசாராக் கல்வியை அளிக்கிறது. சமுதாயம் குழந்தையை சமூக நெறிப்படுத்துகிறது. தனது தனித்தன்மை வாய்ந்த கலாச்சார பாரம்பரியத்தை குழந்தைக்கு சமுதாயம் அளிக்கிறது. பள்ளி என்பது சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட முறைமையான கல்வி ஆகும். இதுபோன்றே தொழிற்கூடங்கள், பயிற்சி நிலையங்கள், கல்வித் தொண்டுநிறுவனங்கள், தொழில்நுட்ப வளர்ச்சிகள் போன்றவைகளும் சமூகமயமாக்கலை வளர்ப்பதில் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றன.

**தேசப்பற்று உணர்வினை வளர்தல் (To promote patriotism)**

குழந்தைகள் தொடக்கப்பள்ளி நிலையில் 4 அல்லது 5ஆம் வகுப்பிற்கு இடையில் அரசியல் விஷயங்கள் போன்ற செய்திகளை விரைவாக கற்றுக் கொள்கின்றனர் (Hess and Torney, 1967). அவர்கள் முதலில் கற்பது, தாம் ஒரு குறிப்பிட்ட அரசியல் அமைப்பை சார்ந்தவர் என்பதாகும். மிகச்சிறிய குழந்தைகள் கூட தம் நாட்டைப் பொறுத்து 'நாம்' என்ற உணர்வையும் மற்ற நாடுகளைப் பொறுத்து 'அவர்கள்' என்ற உணர்வையும் வளர்த்துக் கொள்கின்றனர். குழந்தைகள் தம் நாடு, மொழி ஆகியவை மற்ற நாடுகளைவிட உயர்ந்தது என நம்புகின்றனர். இது அந்நாட்டின் அரசியல் வாழ்வைப் பொறுத்து, மிக சிக்கலான கூடிப்பழகுதல் தன்மையாக இருக்கலாம் (Hess and Torney, 1967). குடும்பம், இந்த தேசப் பற்றை வளர்க்க உதவுகிறது. ஆயினும், பள்ளியும் குழந்தையின் ஆரம்பகால பிணைப்புகளை விரிவுபடுத்த உதவுகிறது. தொடக்கப்பள்ளி முடிவு நிலையில், அரசியல் சார்புகள் வளர்ந்து, வயது வந்தோருக்கு இணையான அளவை அடைகின்றன. ஆயினும் சில முக்கிய மாற்றங்கள் மற்ற நிலைகளில் ஏற்படுகின்றன. உயர்கல்வி மாணவர்கள், அரசியல் கட்சிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து, அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டவராகின்றனர். இருபது ஆண்டுகளில், தாம் புதிய தொழில், குடும்ப மேலாண்மை இவற்றை அடையும்போது, மக்கள் தம் அரசியல் நோக்கை மாற்றிக் கொள்கின்றனர். (Jennings and Niemfi, 1968).

**பொருளாதார கருத்துக்களை வளர்த்தல் (Developing economic ideas)**

குழந்தைகள் வாழ்வின் தொடக்க நிலையிலேயே பொருளாதார கருத்துக்களை அமைத்துக் கொள்கின்றனர். ஒரு ஆய்வு, இளைஞர்களை எவ்வாறு முதலாளித்துவத்திற்குள் கலந்து பழக கற்றுக்கொள்கின்றனர் என்பதை கவனித்தது. 3 ஆம் வகுப்பு மாணவர்களை 12ஆம் வகுப்பு மாணவர்களுடன் ஒப்பிடும்போது வயதில் மூத்த மாணவர்கள் தொழிற் சங்கங்களைப் பற்றி எதிரான நோக்கையும், வியாபாரம் பற்றி சாதகமான நோக்கையும் கொண்டிருப்பது தெரியவந்தது. (Cummings and Taebel, 1978). இதிலிருந்து தெரிய வருவது யாதெனில் பள்ளியில், வீட்டில், பத்திரிக்கைகளிலிருந்து கற்றவற்றின் அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு சாதகமான கருத்துக்களை வளர்த்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

**மக்களிடையே இடைவெளி அதிகரிப்பதால் ஏற்படும் சமுதாய இழப்பு (Community loss due to increased interval among people)**

பௌலிங் அலோன் (Bowling Alone, 2000), தம் பிரசித்தி பெற்ற புத்தகத்தில் அரசியல் ஆராய்ச்சியாளர் ராபெர்ட் புட்நம் (Robert Putnum) அமெரிக்க சமுதாயத்தின் இழப்பைப் பற்றி வருந்துகிறார். புட்நாமின் (Putnum) கருத்துப்படி, பந்து வீச்சுக்களில் (Bowling leagues) அமெரிக்கர்களின் பங்கேற்பு குறைந்தது என்பது, மக்களுக்கிடையே இடைவெளி அதிகரித்தலையும், பொது வாழ்வு செயல்கள், சமூகங்களில் பங்குகொள்ளுதல் இவற்றிலிருந்து விலகிச்செல்லுதல், தனிப்பட்ட செயல்களாகிய டெலிவிஷன் பார்த்தல் போன்றவற்றில் ஈடுபடுதல் இவற்றை காட்டுகிறது. கூட்டமைப்புகளில் அங்கத்தினர்களாக இருத்தல், அரசியலில் ஈடுபாடு, தாமே உதவி செய்ய முன்வருதல் இவற்றின் எண்ணிக்கை குறைந்து வருவதை கணக்குகள் காண்பிக்கின்றன. புட்நம் (Putnum) இந்நிலையைப பற்றி

வருந்துகிறார். ஏனெனில் இதுபோன்ற சமுதாய செயல்களில் பங்கேற்பது, சமூகமயமாக்கலுக்கு அவசியமானவை என்று கருதுகிறார். இருந்தபோதிலும், பாரம்பரியமாக நடைபெறும் வீட்டுவேலை சார்ந்த நடவடிக்கைகளிலும், பந்து வீச்சு, PTA (பெற்றோர் ஆசிரியர் கழகம்) இவற்றின் பங்கேற்பு குறைந்த போதிலும், மற்ற சமூக அமைப்புகள் அதிகரித்துள்ளன.

**சமுதாயத்தில் தொழில்நுட்பங்களின் தாக்கங்கள் (The impacts of technologies in society)**

புதிய தொடர்பு கொள்ளும் தொழில்நுட்பங்கள் பல வகையான தொடர்பு முறைகளை ஏற்படுத்தி உள்ளது. ஆன்லைன் (Online) மூலம் தொடர்பு கொள்ளல் அதிகரித்துள்ளது. ஆன்லைன் (online) மூலம் வளர்ந்துவரும் சமூகம் என்பது,'பேஸ்புக்' (Facebook), 'மைஸ்பேஸ்" (MySpace) அல்லது 'ப்ளிக்கர்' (Flicker) போன்றவைகள் ஆகும். இவை குடும்ப சார்புடையவை அல்ல, தனி நபர் சார்புடையவை. அவை சம்பிரதாய சமூகங்களை விட மாறுபட்ட கலந்து பழகுதலை அளிக்கின்றன. ஆன்லைன் (Online) தொடர்புமுறை சமுதாயங்கள் மாறிவருவதை காட்டுகிறது. பொதுவாக சுற்றுப்புறம் அல்லது கிராமம் நமது சமுதாயமாக இருந்தது. உலகமயமாக்கல் (Globalization) நடைபெறும் இந்நிலையில், மக்கள் நாடு விட்டு நாடு, உலகம் முழுவதும் எல்லைகள் தாண்டி செல்லும் நிலையிலும், சமுதாயங்கள் மறையவில்லை. ஆயினும் வேறுவிதமாக, வெவ்வேறு இடங்களில் வாழ்வோரை இணைத்து புதிதாக உருவாகி வருகின்றன.

**ஊடக பெருக்கம் (Media multiplicity)**

ஜெப்ரிபோஸ் (Jeffrey Boase, 2006) கருத்துப்படி இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் சமுதாயங்கள், மின்னஞ்சல் (Email), இனணயதளம் (Internet) ஆகியவை மூலம் இணைக்கப்படுகின்றன. மேலும் புதிய தொடர்பு சாதனங்கள் நம் சமூக தொடர்புகளை விரிவாக்குகின்றன, மேலும் ஆழமுள்ளதாக ஆக்குகின்றன என்பது ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. நேருக்கு நேர் சந்திப்பவர்கள் கூட, தொலைபேசி மூலம் தொடர்பு கொள்கின்றனர். மின்னஞ்சல் மூலம் (Via emails) செய்திகளை பரிமாற்றம் செய்கின்றனர். இது போன்று பல முறைகளில் தொடர்பு கொள்ளல் 'ஊடக பெருக்கம்' (Media Multiplicity) எனப்படும். இது போன்ற புதிய தொடர்பு கொள்ளும் சாதனங்களை பேரி வெலமேன் (Barry Wellman) 'இணைக்கப்பட்ட தனித்துவம்' (Networked individualism) என அழைக்கிறார்.

**இணைக்கப்பட்ட தனித்துவம் (Networked individualism)**

இனணயதளம் (Internet) மூலம் மற்றோருடன் பலவகையான காரணங்களுக்காக தொடர்பு கொள்வதை 'இணைக்கப்பட்ட தனித்துவம்' (Networked individualism) என்கிறோம். இதன்படி இணையதளம் (Internet) தொடர்புகள், வழக்கிலுள்ள சமுதாயங்களை போகச் செய்வதில்லை. ஆயினும் அதற்கு உதவியாக உள்ளது என்பதால் மக்கள், செய்திகள், உதவி இவற்றை காணவோ, புதிய உறவுகளை ஏற்படுத்தவோ சம்பிரதாய வழிமுறைகளை (உறவினர்கள் போன்றோர்) பயன்படுத்தலாம் அல்லது மற்றவர்களின் விரிவுபடுத்தப்பட்ட 'இணைக்கப்பட்ட தனித்துவத்தை' (Networked individualism) பயன்படுத்தலாம். இதனால் புதிய தொடர்பு சாதனங்களை பயன்படுத்த தெரிந்து கொள்ளல், நிறைந்துள்ள செய்திகளை கண்டறியவும், நேருக்கு நேர் சந்திக்காத பலருடன் தொடர்பு கொள்ளவும் பயன்படுகின்றது.

**தகவல் நெடுஞ்சாலைகள் ( Information superhighways)**

சமமில்லாத வன்பொருள் (Hardware) பகிர்ந்தளிப்பு, அதேபோல் சமமில்லாத இணைய (Internet) வாய்ப்பு இவற்றை 'உலகளாவிய டிஜிட்டல் பிளவு' (Global digital divide) என்கிறோம். இது முக்கியமான பகுதிகளுக்கும், மேலெழுந்த முக்கியமற்ற பகுதிகளுக்கும் இடையே அதிகமாக காணப்படுகிறது. இதன் பொருள் உலகின் பெரும்பான்மையினர் நிறைந்த கருத்துக்களை அறிந்து கொள்ளவோ, இணைய தளம் (Internet) மூலம் தொடர்பு கொள்ளவோ உள்ளனர் என்பதால் செய்திகள் நிறைந்த, தகவல் நெடுஞ்சாலைகள் (Information superhighways) உடன் தொடர்பு கொள்ள இயலாமை, விளிம்பில் உள்ள குழந்தைகளை எதிர்கொள்ளும் பிரச்சிகைகள் ஆகியன. ஆயினும் முக்கிய பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் இவற்றிலிருந்து பயன் அடைகிறார்கள்.

**சமுதாய வளர்ச்சியில் மதங்களின் பங்களிப்பு (Religious contribution to community development)**

மதங்கள், சமூகமயமாக்கலில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. சில மதங்கள், போதிக்கும் நிறுவனங்களாக செயல்பட்டாலும், இங்கு பொதுவாக இயங்கிவரும் நிறுவனங்களின் செயல்பாடுகளை நோக்குகிறோம். நாட்டில் கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் போன்ற மத ஸ்தாபனங்கள் உள்ளன. இங்கு மக்கள் வழிபாட்டிற்கு செல்கின்றனர். இங்கு மக்கள், எப்படி மதச்சார்பான பொருள்களை கையாளுவது என்பதை கற்றுக்கொள்கின்றனர். சில சமூகத்தினரின் முக்கியமான நிகழ்வுகளான, திருமணம், பிறப்பு போன்றவை மதம் சம்பந்தமான விழாக்களாக உள்ளன. இந்நிறுவனங்கள், பால் அடிப்படையை (Gender roles) பின்பற்றுகின்றன. குடும்ப உறவை வலுப்படுத்தும் சடங்குகளில் தொடங்கி ஆண், பெண் நிலையை வலுப்படுத்துதல் வரை மதம் பொதுவான பண்புகளை வளர்க்கிறது.

**முடிவுரை (Conclusion)**

குழந்தையை சமூகமயமாக்குதலில், சமுதாயம் அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, அதற்கேற்றவாறு பொறுத்தமான கல்வி நிறுவனங்களையும், கல்வியோடு தொடர்புடைய பிற வசதிகளையும் ஏற்படுத்தி தருகிறது. குழந்தைகள் 'நம்நாடு' என்ற உணர்வையும், மொழி, சமுதாய வாழ்வியல் பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்கிறார்கள். குழந்தைகளின் தொடக்கப்பள்ளி முடிவு நிலையில், அரசியல் சார்புகள் வளர்ந்து, வயது வந்தோருக்கு இணையான அளவை அடைகின்றன. உயர்கல்வி மாணவர்கள், அரசியல் கட்சிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்கிறார்கள். முதல் இருபது ஆண்டுகளில், பள்ளியில், வீட்டில், பத்திரிக்கைகளிலிருந்து கற்றவற்றின் மூலம் அவர்கள், புதிய தொழில், பொருளாதார கருத்துக்கள், குடும்ப மேலாண்மை இவற்றை அடைகிறார்கள். தீவிரமான தொழில்நுட்ப வளர்ச்சியால், மக்களிடையே சமூக இடைவெளி அதிகரித்துள்ளது. ஆயினும், புதிய தொடர்பு கொள்ளும் தொழில்நுட்பங்கள் பல வகையான தொடர்பு முறைகளை ஏற்படுத்தி உள்ளன. அவைகளில், ஆன்லைன் (Online), பேஸ்புக் (Facebook), மைஸ்பேஸ் (MySpace) அல்லது ப்ளிக்கர் (Flicker) போன்றவைகள் அடங்கும். இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் சமுதாயங்கள், மின்னஞ்சல் (Email) , இனணயதளம்

(Internet) ஆகியவை மூலம் இணைக்கப்படுகின்றன. மேலும் புதிய தொடர்பு சாதனங்கள் நம் சமூக தொடர்புகளை விரிவாக்குகின்றன. இதனால் புதிய தொடர்பு சாதனங்களை பயன்படுத்த தெரிந்து கொள்ளவும், நிறைந்துள்ள செய்திகளை கண்டறியவும், நேருக்கு நேர் சந்திக்காத பலருடன் தொடர்பு கொள்ளவும் பயன்படுகின்றது. மேலும் மதங்களும், சமூகமயமாக்கலில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. குடும்ப உறவை வலுப்படுத்தும் சடங்குகளில் தொடங்கி, ஆண், பெண் நிலையை வலுப்படுத்துதல் வரை மதம் (Religion) பொதுவான பண்புகளை வளர்க்க உதவுகிறது.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Question for Discussion and Reflexion)**

1. குழந்தை வளர்ச்சியில் குடும்பம் ஒரு சமூகமயமாக்கும் முகமையாகச் செயல்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்குக.

   Explain family as socializing agency in child development.
2. குழந்தை வளர்ச்சியில் பள்ளியின் பங்கு பற்றி விவாதிக்கவும்.

   Discuss the role of school in child development.
3. குழந்தை வளர்ச்சியில் ஒப்பார் குழு சமூக முகமையாக செயல்படுகிறது என்பதை விவரிக்கவும்.

   Describe peer group as social agencies in child development.
4. குழந்தை வளர்ச்சியில் சமுதாயம் ஒரு சமூகமயமாக்கும் முகமையாக செயல்படுகிறது என்பதை விளக்குக.

   Explain community as socializing agency in child development.

## அலகு - V

## பாலின வார்ப்புகளும், பாலின பங்களிப்பும்

## (Gender Stereotype and Gender Role)

**நோக்கங்கள் (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்,

1.பாலின வார்ப்புகள், பாலின பங்களிப்பு பற்றி அறிந்து கொள்ள முடியும்.

2.குழந்தைப்பருவம் முதல் வளரிளம்பருவம் வரையில் உருவாகும் பாலின தன்னடையாளங்களை புரிந்து கொள்ள முடியும்.

3.சமூகப் பாலின கட்டமைப்புக் கொள்கைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

**முன்னுரை: (Introduction)**

ஆண், பெண் ஆகியோர்களுக்கான குணாதிசியங்களின் விசாலமான நம்பிக்கைகளே பாலின வார்ப்புகள் எனப்படும். அன்றாட வாழ்வின் பாலின வார்ப்புகளின் பிரதிபலிப்பு பாலின பங்களிப்பு ஆகும். பாலின தன்அடையாளம் என்பது ஒரு தனி நபரின் ஆண்பால் அல்லது பெண்பால் பற்றிய குணாதியசியங்களின் தனிப்பட்ட அனுபவமாகும். பாலின பிரிவு உயிரியியல் பாலினத்தில் இணைந்திருக்கும் பருப்பொருள் செயற்பாடுகள், பங்குப் பணிகள் அல்லது குணாதியசியங்களைக் குறிப்பிடுகின்றது.

பாலின வார்ப்புகளின் தனி நபர் வேறுபாடு பற்றியும், குழு வேறுபாடு பற்றியும் பாலின வார்ப்புகளுக்கும் பாலின பங்களிப்பு இவற்றிற்குள்ள தொடர்புகளைப் பற்றிக் கீழ்வருமாறு காண்போம்.

ஆண்களைவிட பெண்கள் இரக்ககுணம் அதிகம் உடையவர்கள். கண்ணீர் நாட்டமும் அதிகம் கொண்டவர்கள். ஆண்கள் ஆபத்தில் துணைமை வழங்குவதில் அதிகமாக செயல்படுவர். பெண்களைவிட அதிகம் துணிச்சல் உள்ளவர்கள். ஆண்கள், தான் அறிந்ததைச் சொல்வர். பெண்கள் பிறர் ஏற்றுக்கொள்ளுமாறு விருப்பமானதைச் சொல்வர். ஆண்கள் தைரியம் கொண்ட ஆதிக்க பண்பையும் பெண்கள் மென்மையான இதயம் கொண்ட தன்னடக்க பண்பையும் பெற்றவர்கள். ஆண்களுக்கு காதல் அல்லது நேசம் என்பது கிளர்ச்சியற்ற உள உணர்வு. பெண்களுக்கு காதல் அல்லது நேசம் என்பது உயிர்ப்பிழைப்பு அல்லது உயிர்நீக்கம். ஆண்கள் தேவையில்லாத விவாதங்களை உறவின் இடையே மேற்கொள்வதில்லை. பெண்கள் சிறு பிரச்சனையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கு வேறு பிரச்சினையைத் தேடுவார்கள். இயந்திரப்பணி உணர்வு, போட்டியிடல், பகுத்தறிவு தன்முனைப்பு உள்ளவர்கள் ஆண்கள். பெண்களிடம் சொல்திறம் சார்ந்த பணி, பிறரிடம் பரிவு காட்டுதல், அடுத்தவரிடம் அக்கறை காட்டுதல், உணர்ச்சி வசப்படுதல் ஆகிய குணங்களைக் காணலாம். மேலும் ஆண்கள் பெண்களுக்கென ஆளுமை குணாதிசியங்கள் குறித்து காணப்படும் பாலின வார்ப்புகளும் அமைந்துள்ளன. ஆண்கள் உயரமானவர், மன வலிமை கொண்டவர்கள், கல்வி பண்பு உள்ளவர்கள், பெண்கள் மென்மையானவர்கள், மாசுமறுவற்றவர்கள், நேர்த்தியானவர்கள். இவைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள வெளிப்படையான குணாதியசியங்கள் ஆகும். பாரவண்டி இழுத்தல், காப்பீட்டு முகவர், வேதியியலர் ஆகியன ஆண்களுக்கான பொதுவான தொழில் ஆகும். தொடக்கப்பள்ளி

ஆசிரியர், செயலாளர், செவிலியர் ஆகியன பெண்களுக்கான பொதுவான தொழில் ஆகும். ஆண்கள் நடத்தைக்குறிய செயல்பாடுகளை நிறுத்துகையில் வல்லவர். இவர்கள் குழு செயலாட்சி நன்றாக செய்வார்கள். குழந்தை பாராமரிப்பு, அழகுப்படுத்துதல் இவற்றில் பெண்கள் சிறந்தவர்கள்.

**முன்குழந்தைப் பருவத்தின் பாலின வார்ப்புகள் (Gender Stereotypes in Early Childhood):**

சிறுவன், சிறுமி, ஆண், பெண் என்ற வார்த்தைகளை பயன்படுத்துவதிலிருந்து குழந்தைகள் தன்னுடைய மேலும் மற்றவர்களின் பாலினத்தை அறியத் தொடங்குகின்றது. ஆண் பெண் குழந்தைகளுக்கென உள்ள செயல்பாடுகள் நடத்தைகளை குழந்தைகள் வகைப்படுத்துகின்றன. இவ்வாறு தோன்றும் பாலின வார்ப்பட எண்ணங்களை விரைவாக சிறுகுழந்தைகள் நுட்பமாக சிந்திக்கின்றனர்.

ஆண் என்றால் கடுந்தன்மை, கூர்மையான எண்ணம் கொண்டவர்கள் எனவும் பெண் என்றால் மென்மையான வளைந்து கொடுக்கும் எண்ணம் கொண்டவர்கள் என்றும் பாலினத்தின் நுட்பமான பிணைப்பினை சிறு குழந்தைகள் தனது இரண்டு வயதிற்குள் அறியத் துவங்குகின்றன.

பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளும் ஆண்களுக்கு, பெண்களுக்கென உள்ள நடத்தைகள், விளையாட்டுப் பொருள்கள், உடைகள், வீட்டில் உபயோகிக்கும் கருவிகள், வண்ணங்கள், பொழுதுபோக்கு பணிகள் என வேறுபடுத்திக் காண்கின்றனர். மேலும் கரடுமுரடான கரடிகளை ஆண்களுக்கும் மென்மையான வண்ணத்துப் பூச்சிகளை பெண்களுக்கெனவும் உருவகப்படுத்தும் பாலின வார்ப்பு எண்ணங்களை சிறுகுழந்தைகள் கொண்டுள்ளனர்.

முன்குழந்தைப் பருவம் என்பது மூன்று முதல் ஆறு வயது வரை நீடிப்பதாக கருதப்படுகிறது. பாலின வார்ப்பட எண்ணங்களிலிருந்து மாறுபட்ட குழந்தைகளிடம் மற்ற சிறுகுழந்தைகள் பழகவும் விலகிச் செல்வதையும் காணலாம். எடுத்துக்காட்டாக ஆண் குழந்தைகள் நகப்பூச்சு அணிதல், பெண்குழந்தைகள் பாரவண்டியுடன் விளையாடுதல் என மாறுபட்ட நடத்தைகளை மேற்கொள்ளும் குழந்தைகளுடன் நட்புக் கொள்ள மற்ற குழந்தைகள் விரும்புவதில்லை. பொம்மைக்கு ஆடை, அணிகலன் அணிவித்து பெண் குழந்தைகள் விளையாடுவதையும், கார், விமானம் போன்ற பொம்மைகளுடன் ஆண் குழந்தைகள் விளையாடுவதையும் காணலாம். இவ்வாறு அன்றாட நடத்தைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை மெதுவாக முன் குழந்தைப் பருவத்தில் அவர்கள் மனதில் அறியாமலேயே பாலின வார்ப்புகள் பதிந்து விடுகின்றன.

**நடுகுழந்தைப் பருவம், வளரிளம்பருவத்தில் உருவாகும் பாலின வார்ப்பட எண்ணங்கள் (Middle Childhood and Adolescence)**

குழந்தைகள் தனது ஐந்து வயதிலேயே அன்றாட நடவடிக்கைகளிலிருந்தும் வேறு பணிகள் ஈடுபாட்டிலிருந்தும் பாலின வார்ப்பட எண்ணங்களை உறுதிபடுகிறது. குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் பருவம் முதல் வளரிளம்பருவம் தொடங்கும் வரை உள்ள காலத்தை நடுத்தர குழந்தைப் பருவம் என்று கூறலாம். இந்த நிலையில் பாலினம் சார்ந்த வார்ப்பட எண்ணங்கள் குழந்தைகளிடம் மேலும் அதிகரிப்பதை காணலாம். தான் ஒரு ஆண் அல்லது

பெண் என்கிற தன் அடையாளம் மனதில் உறுதிப்படுகிறது. அதே நேரத்தில் இந்தப்பருவத்தில், ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் சேர்ந்த ஒப்பார் குழுவினர் அமையும் இடங்களில் சமூக பாலினத்தவரிடம் வளைந்து கொடுக்கும் வண்ணம் சமத்துவம் பாராட்டும் நிலைமை ஏற்படுகிறது.

**ஆளுமைப் பண்புகள் (Personality Traits)**

பெண் குழந்தைகள் நளினமாகவும், மென்மையாகவும், ஆண் குழந்தைகள் என்றால் உடல் வலிமை, பகுத்தறிவு இரக்கமற்ற சுபாவம் கொண்டவர்களாகவும் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நடுத்தர குழந்தை பருவத்தில் ஏற்படும் சமூக பாலின நடத்தைகளின் காரணமாக சமூக பாலினம் சார்ந்த விருப்புகள், தெரிவுகள் மனப்பான்மைகள் தோன்றுகின்றன. நேர்மறையான பாலின வார்ப்புகள் சார்ந்த நடத்தைகளும் எதிர்மறையான நடத்தைகளும் வளரிளம்பருவத்தில் ஏற்படுகின்றன.

**அடைவுப் எல்லைகள் (Achievement Areas)**

வளரிளம்பருவத்து ஒப்பார் குழுவினரின் நடத்தைகளை ஆய்வு செய்யும்போது பெரும்பாலானவைகளில் பாடசம்பந்தமான செயல்பாடுகளும் உடல் தன்மையைச் சார்ந்த செயல்பாடுகளும் காணப்படுகின்றன என ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. வளரிளம்பருவத்தில் இருக்கும் பள்ளி மாணவர்களிடம் ஆண்கள் என்றால் உடல் வலிமையை காண்பிக்கவேண்டும் என்றும் உடற்பயிற்சி அதிகம் செய்து உடல் வலிமையை மேம்படுத்த வேண்டும் என்றும் கணிதம் கருவிகள் சம்மந்தமான அறிவியல் பாடங்களை படிக்கவேண்டும் என்றும் பெண்கள் என்றால் இலக்கியம், இசை, நடனம், தையல் பயிற்சி போன்ற பாடங்களை பயில வேண்டும் என்றும் முயலுகின்றனர். பள்ளிக்கூடப் பாடங்களில் தேர்ச்சி பெறுதலிலும் பாலின வேறுபாடு இருப்பதாகக் கருதப்படுகிறது. பெண்குழந்தைகள் மொழிப்பாடங்களிலும் ஆண்குழந்தைகள் கணிதம், அறிவியல் உடற்பயிற்சி விளையாட்டுகளிலும் அதிக தேர்ச்சி பெறுவதாகக் காணப்படுகிறது. தனது ஐந்து வயது முதல் பத்து வயது வரை ஆண்குழந்தைகளும் பெண்குழந்தைகளும் சேர்ந்த ஒப்பார் குழுவினர் அமையும் இடங்களில் சமூகப் பாலினத்தவரிடம் சமத்துவம் பாராட்டும் நிலைமை ஏற்பட்டு ஆண் பெண் வித்தியாசமின்றி குழந்தைகளிடம் சமமான நடத்தைகள் உருவாகின்றன என்று காணப்பட்டுள்ளது. ஏழு வயது முதல் 13 வயது வரை அனைத்து வாய்ப்புகளும் பள்ளிகளில் ஆண்குழந்தைகளுக்குச் சமமாக பெண்குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது.

**சமூகப்பாலின வார்ப்புகள் பாலின பங்களிப்பு மேற்கொள்வதின் ஆதிக்கங்கள்**

**(Influences of Gender Stereotyping: Biological, Cultural and Environmental)**

**உயிரியலின் ஆதிக்கம் ( Biological, Cultural Influences)**

சமூகப்பாலின செயல்பாடுகளில், சமூகம் தனது கலாச்சாரத்தின் வாயிலாக அமைக்கும் மனப்பான்மைகள், எதிர்பார்ப்புகளே தொன்றுதொட்டு வரும் சமூகவார்ப்பு நடத்தைகளை ஏற்படுத்துகின்றன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆண்கள் என்றால் சுதந்திரமான போக்கு, பிறரை அடக்கி ஆள நினைத்தல் போன்ற தன்மைகளை உடையவர்கள் என்ற சமூக ஒருபடித்தான நடத்தையை கலாச்சாரம் எதிர்பார்க்கிறது. இதுபோல் பெண்கள் என்றால்

மென்மை, குழந்தையை வளர்த்தல், ஆண்களுக்கு அடங்கி பணியாற்றுதல் போன்றவைகளையும் சமூகக்கலாச்சாரம் எதிர்ப்பார்க்கிறது என்றும் கூறலாம்.

நவீன காலத்தில் ஏற்பட்ட உலகமயமாக்கலின் காரணமாக தொழிற்கல்வி ஆண்களுக்கும் பெண்களுக்கும் எளிதாக கிடைப்பதால் நவீன கணிப்பொறியை பயன்படுத்தி கணக்கிடுதல், வலைதளங்களைப் பயன்படுத்துதல், கணிப்பொறி மென்பொருட்களை தயாரித்தலில் ஆணுக்கு நிகராக பெண்ணும் தெளிவான அறிவைப் பெற்றிருக்கின்றனர். பொதுவாக தாய் செய்யும் பணிகளில் பங்கு பெறுவது மகளின் பொறுப்பாக ஆக்கப்படுகிறது. வீட்டில் சிறுகுழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மூத்த பெண்ணிற்கும் வீடு பெருக்குதல், பாத்திரம் துலக்குதல் போன்ற பணிகள் பெண்குழந்தைகளுக்கும் வரையறுக்கப்படுகிறது. வளரிளம்பருவ ஆண்கள் நண்பர்களுடன் அரட்டை அடிப்பது, வெளியிடங்களில் சுற்றுவது, அதிகார மையத்தில் இருப்பது, ஒப்பார் குழுவினரது கருத்துக்களுக்கே மதிப்பளிப்பது, சமூக மரபுகளை மீறுவதை இயல்பாகக் கொண்டிருப்பர்.

நுண்ணறிவைப் பொறுத்தவரை இருபாலரும் சமமாக இருப்பினும் வளரிளம்பருவத்து பெண்கள் அலங்காரம் செய்து கொள்வதிலும், ஒப்பார் குழு நண்பர்களிடம் அதிக நேரம் செலவழிப்பதிலும், கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

உயிரியல் சார்ந்த வேறுபாடுகள் என்றால் பெண் இனப்பெருக்கம் செய்து குழந்தைகளை பெறுவதற்கு மட்டுமே என்று ஆணிடமிருந்து இயற்கையில் வேறுபடுவதாக அமைந்துள்ளது என்றும் சமூகப் பாலின ஒருபடித்தான நடத்தைகள் அனைத்தும் சமூகத்தாலும் கலாச்சாரத்தாலும் உருவாக்கப்பட்டவைகள் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**சுற்றுச்சூழலின் ஆதிக்கம் (Environmental Influences)**

சமூகப்பாலின ஒத்த நடவடிக்கைகளில் பெரும்பாலும் வீட்டுச்சூழல், பள்ளிச்சூழல் அக்கம்பக்கத்தினர் சூழல்கள் பெரும்பங்கு வகிக்கும். குடும்பம், சமுதாயம், பள்ளிச் சூழலில் காணப்படும் சமூகப்பாலின வார்ப்புகள் சார்ந்த ஆண்கள் பெண்களுக்கென வரையறுத்து வைத்த நடத்தைகளை தன்னை அறியாமலேயே குழந்தைகள் கடைபிடிக்கின்றனர். பெண்களை வளர்க்கும் முறையிலிருந்து அவர்களுக்கு செய்யும் சடங்குகள், சம்பிரதாயங்கள் யாவும் அவரவரின் குடும்பங்களின் பண்பாட்டுச் சூழ்நிலைகளின் அடிப்படையிலேயே அமையும்.

குழந்தைகள் பெரியவர்களைப் போலச் செய்து கற்றலுடன் பெரியவர்களின் ஆலோசனைகளும் அறிவுரைகளாலும் சமூகப்பாலின வார்ப்புகளாக இருக்கின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மக்கள் சாதன ஊடகங்களும் பல நிகழ்ச்சிகள் மூலமாக சமூகப்பாலின வார்ப்புகளை காட்சிப்படுத்தி ஒரு சுற்றுச்சூழலை அமைத்து அதைக் குழந்தைகளிடம் கற்றுத்தருகிறது.

**பாலின தன்அடையாளம் (Gender Identity)**

பாலின அடையாளம் என்பது ஆண்/ பெண் என்பது பற்றிய ஒருவருடைய தனிப்பட்ட கருத்தாகும். நடுகுழந்தைப் பருவத்தில் உளவியல் ரீதியான ஒரு சிறந்த பெண்/ஆண் என்ற தன்னறிவு, மதிப்பு ஆளுமை வளர்ச்சியில் ஏற்படுகிறது.

உயிரியல், சுற்றுச்சூழல் என மற்ற காரணிகளும் சமஅளவு பாலினம் பாலினம் பற்றி மாறாக் கருத்துக்களில் நாட்டம் கொண்டுள்ளது. பாலின அடையாளம் என்பது தான் ஆண், பெண் பற்றிய ஒருவருடைய சொந்த கருத்தாகும். ஆளுமை வளர்ச்சியில் தன்னறிவு, தன் மதிப்பு முக்கியப் பங்காற்றுகின்றன. இவ்வகையில் தான் ஒரு சிறந்த பெண் அல்லது ஆண் என்று தானே கருத்தை ஏற்படுத்திக் கொள்வது பாலின அடையாளம் காண்பதாகும். இது ஏற்படவில்லை எனில் அவர்களின் நடத்தையில் குழப்பம் ஏற்பட்டு முறையான ஆளுமை வளர்ச்சியும் ஏற்படாது.

ஒருவர் தன்னை ஆண் அல்லது பெண் என உள்ளார்ந்த நிலையில் தன்னைக் காண்பதும் அதற்கேற்றவாறு நடந்து கொண்டு சமூகத்தின் பிற உறுப்பினர்களை அறியச் செய்தலும் அவரது பாலினத் தன் அடையாளம் என்றறியப்படுகிறது. அதாவது பாலின தன் அடையாளம் என்பது குறிப்பிட்ட ஹார்மோன்களின் ஆதிக்கத்தின் காரணமாகத் தோன்றும் உள்ளார்ந்த உணர்வுகளின் அடிப்படையில் உளவியல் ரீதியாக தன்னை ஆண் அல்லது பெண் என உணர்தலும் பிறரை அவ்வாறே உணரச் செய்தலுமாகும்.

**நடு குழந்தைப் பருவம் , வளரிளம்பருவத்தில் பாலின அடையாளம் (Gender Identity in Middle Childhood and Adolescence)**

குழந்தைப் பருவத்தில் ஆண், பெண் என்ற பால் வேறுபாடுகள் நன்கு புரிய ஆரம்பிக்கின்றன. பொதுவாக 3 முதல் 6 வயதிற்குள் குழந்தைகள் தன்னுடைய பாலின தன் அடையாளத்தை உணரத் தொடங்கிவிடும். ஆண் குழந்தையின் தன்னடையாளம் என்பது வலிமையுடன் இருப்பது என்பதையும் பெண்குழந்தையின் தன்னடையாளமாக தாய்க்கு உதவிபுரிவது, அடக்கமாக இருப்பது என்பதனை ஓரளவுக்குக் கற்றுக் கொள்கின்றனர். ஒரு குழந்தை தனது பாலினத்திற்குரிய செயல்பாடுகளைக் கொண்டு தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. தங்களின் தன்னடையாளத்தை நடத்தைகளின் மூலமாக மற்றவர்களுக்கு அவர்கள் அறியும் வண்ணம் வெளிப்படுத்துகிறது. குழந்தைகளின் ஆண் , பெண் மாறுபாடு என்பது உளவியல், சமூகக் காரணிகளின் கலவையாக அமைகிறது.

ஏனெனில் நடுத்தர குழந்தைப் பருவம் முழுவதும் பள்ளிப் பருவத்தில் குழு சார்ந்த இடைவினைகள், சமூகப் பாலினம் சார்ந்த நடத்தைகள் இக்குழுவினர் எதிர்பாலின குழுவினரிடம் அதிக வெறுப்பு கொள்ளுமாறு நடந்து கொண்டால், வளர்ந்து பெரியவரான பிறகு எதிர்பாலினத்தவரை தவறாக நடத்தும் இயல்பும் சில குழந்தைகளிடம் ஏற்படலாம்.

**குறிப்பிடத்தக்க பாலினம் (Gender Typicality)**

ஒரு குழந்தை தன்னை பெண், ஆண் என்று எல்லோராலும் அழைக்கப்படுவதைக் கேட்கிறது. ஏறத்தாழ மூன்று வயதாகும்போது தனது பாலின அடையாளத்தைப் புரிந்து கொள்கிறது. தான் தனது குழுவின் உறுப்பினராக இருக்கிறோம் என்கின்ற மகிழ்ச்சி தனது குழுவின் நடத்தைகளில் ஒற்றுமைக்கான உணர்வையும், தனது பாலினம்தான் சிறந்தது என்று கருதும் உணர்வும் குழந்தைகளிடம் காணப்படுகிறது.

**பாலின நிலைத்தன்மை (Gender Contentedness)**

தனது பாலினம் சார்ந்த குழுவில் உறுப்பினர் என்கின்ற உணர்வு. இந்த குழுவில் தான் ஒரு குறிப்பிடத்தக்க உறுப்பினர் என்கின்ற மகிழ்ச்சி தனது குழுவின் நடத்தைகளின்

மூலமாக அழுத்தத்தை உணர்தல் போன்றவைகள் இப்பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு ஏற்படும்போது அவர்கள் தங்களது குழுவினரிடம் ஒரு ஆர்வத்தை உணர்கின்றனர். இக்குழுவின் ஒருபடித்தான நடத்தைகளை முன்னிறுத்தி குழுவினர் செயல்படுவதும் காணப்படுகிறது.

குழந்தை வளர வளர பாலினம் குறித்த சித்தரிப்பையும் பாலின ஒருபுறச் சார்பையும் பற்றிய அனுபவங்களை சந்திக்க நேரிடும். இதனால் அவர்களின் நடத்தையிலும் செயல்பாடுகளிலும் நடைமுறையிலும் அவர்களின் பாலின அடையாளம் வெளிப்படும்.

கற்றலில் பாலின வேறுபாடுகளும் ஒருபுறச் சார்பும் மிகக் குறைவாகவே இருக்கும். வளரிளம்பருவத்தில் இருப்பவர்கள் தங்களுக்கென ஒரு சமூகத் தன்னடையாளத்தை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதில் ஒரு பிரிவாக இருப்பது சமூகப் பாலினத் தன்னடையாளமாகும். இந்த தன்னடையாளத்தில் தான் ஒரு ஆண் அல்லது பெண் என்பதை அறுதியிட்டு அறிந்து கொண்டு அவர்களின் ஆண் தன்மை அல்லது பெண் தன்மையை வெளிப்படுத்த முடியும். அவர்களின் செயல்கள், நடத்தை மூலமாக வளரிளம்பருவத்தின் பாலினத் தன்னடையாளத்தை உணர்ந்து வெளிப்படுத்துவர்.

பெண்கள் தன்னைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள மனப்பான்மைகள், உணர்ச்சிகள் போன்றவற்றின் தொகுப்பே தற்கருத்து ஆகும். தான் எப்படிபட்டவர், தன்னால் எவற்றை எல்லாம் செய்ய இயலும் தன்னுடைய பலம் எது பலவீனம் எது என்பவைகளைப் பற்றி ஒவ்வொரு மனிதனும் கொண்டுள்ள மதிப்பீடே சுயமரியாதை (self-esteem) ஆகும்.

திண்மையான, உறுதியான, உயர்வான பாலின அடையாளம் ஏற்பட்டிருந்தால் அது ஆளுமை வளர்ச்சிக்கு உதவும். இல்லையேல் பல மனச் சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே சமூகமயமாக்கும் காரணிகளில் உரிய சீர்திருத்தங்களை செய்ய வேண்டியது தேவையான ஒன்றாகும்.

**சமூகப் பாலின கட்டமைப்புக் கொள்கை (Gender Schema Theory)**

சமூகப் பாலின கட்டமைப்புக் கொள்கையை மார்ட்டின், ஹால்வெர்சன் உருவாக்கினர். இந்தக் கொள்கை கோல்பெர்க்கின் குழந்தையின் சிந்தனை சார்ந்த கொள்கையை மறுத்துரைத்து உருவாக்கப்பட்டது. இதில் கட்டமைப்பு என்பது தகவல்களை ஒருங்கிணைத்தல் என்கின்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. தகவல்களை ஒருங்கிணைத்தல் செய்யும் கட்டமைப்பை குழந்தைகள் இரண்டு வயதிலேயே அமைத்து சமூகப்பாலின தன்னடையாளத்ததைப் பற்றி கற்கத் துவங்குகிறார்கள் என்று இக்கொள்கை கூறுகிறது.

குழந்தைகள் முதல் இரண்டு வயதில் சமூகப் பாலினம் பற்றிய கட்டமைப்பை ஏற்படுத்தி அதைப்பற்றிய மனப் பிரதியை தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை ஒருங்கிணைத்து அமைக்கின்றனர். இந்தக் கட்டமைப்பில் குழந்தைகளின் சொந்த அனுபவங்களும் பெரியவர்கள் கூறும் தகவல்களையும் சமூகப் பாலின வார்ப்புகளையும் உள்ளடக்கலாம். இந்தக் கட்டமைப்புகள் குழந்தைகளுக்கு கிடைக்கும் தகவல்களைப் பொருத்து மாறும் தன்மையுடையன. மேலும் குழந்தைகள் சமூகப் பாலினம் பற்றிய அடிப்படை கருத்துகளை அடைந்த பிறகு அவர்கள் சமூகப் பாலினம் சார்ந்த நடத்தைகளையும் குணங்களையும் பெற ஊக்கமடைகின்றனர். இதுபோல் குழந்தைகள் தங்களது

குழுவினரிடமிருந்து தொடங்கி சமூகப்பாலினம் பற்றிய கட்டமைப்பை அமைக்கின்றனர். பின்னர் தன்னுடைய சமூகப்பாலினத்தைப் பற்றி முழு அறிவையும் பெற விரும்புகின்றனர்.

மார்ட்டின் நடத்திய ஆய்வின்படி குழந்தைகள் தங்களது விளையாட்டுப் பொம்மைகளில் இருக்கும் அடையாளங்களைக் கொண்டு சமூகப் பாலினம் சார்ந்த நடத்தைகளை உருவாக்குகின்றனர். குழந்தைகள் சமூகப்பாலினம் பற்றிய கட்டமைப்பை உருவாக்கும் போது சமூகப்பாலின வார்ப்புகள் பற்றிய தகவல்களையும் ஒருங்கிணைக்கின்றனர்.

இக்கொள்கையின்படி குழந்தைகள் சமூகப்பாலின வகைப்பாடு சமூகப்பாலின பங்கேற்பு அடிப்படையில் செயல்படுகின்றனர். சமூக பாலின வார்ப்புகளைப் பற்றி இதன் மூலம் ஆராயும் போது ஆய்வாளர்கள் சமூகப் பாலின வார்ப்புகள் மனக்கட்டமைப்புக் காரணமாக குழந்தைகளின் மனதில் பதிவதால் அவர்களது உளவியலில் உள்ளார்ந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறுகின்றனர்.

பள்ளியில் குழந்தைகளிடம் சமூகப்பாலின சமத்துவம் பற்றிய தகவல்களைத் தந்து அவர்களிடம் மனக்கட்டமைப்பு உருவாக்கும் போது சமூகப்பாலின வார்ப்புகள் மறைகின்றன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பெரும்பாலான குழந்தைகளின் சமூகப்பாலின கட்டமைப்புகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் செயல்பாட்டை உற்று நோக்குவதால் கட்டமைக்கப்படுகிறது என்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

**பாலின வேறுபாடற்ற குழந்தைகளை உருவாக்குவதற்கான உத்திகள்**

**(Strategies for Development of Non–Gender Stereotyped Children)**

ஆண், பெண் தொடர்பான பண்பியல்புகள் கடமைகள், பணிப்பொறுப்புகள், நடத்தை நெறிகள் குறித்து ஒரு சமூகம் அல்லது பண்பாட்டைச் சார்ந்தோர் கொண்டிருக்கும் ஆதாரமற்ற நம்பிக்கைகளே பாலின வார்ப்படக் கருத்துகள் என்பதை நாம் அறிவோம்.

**பாதுகாப்பான இடத்தை உருவாக்குதல் (Create a safe space)**

பொதுவாக ஆண்கள், பெண்கள் கல்வி பெறுவது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் சமூகத்தில் நிலவுகின்றன. இருபாலரும் கற்கும் வழிமுறைகள் வெவ்வேறானவை. பெண்கள் பலரும் கூட்டுறவு முறையில் அதிகம் முயன்று கற்கிறார்கள். ஆண்களது கற்றலில் போட்டி மனப்பான்மை மேலோங்கி நிற்கிறது.

பாலின வகைப்படுத்தும் தன்மையை உடையோர், பாலின வார்ப்பட எண்ணங்களையும், கண்டுணரும் திறன்களையும், மதிப்பீடுகளையும், பாலின வகைப்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கிக் கொள்கின்றனர். (எ-கா) ஆண்கள் அழக்கூடாது. பெண்கள் பொது இடங்களில் உரக்க சிரிக்கக் கூடாது போன்றவைகள்.

**பாடநூல்கள் (Make the most of books)**

பாடங்களையும், கலைத்திட்டச் செயல்களையும் சமமாக கற்பிக்க வேண்டும். இருபாலரையும் உள்ளடக்கும் பொதுச் சொற்களையே பயன்படுத்துதல் எ.கா. Chairman என்பதற்கு பதில் Chairperson என்றும், Man power என்பதற்கு பதில் Human power போன்ற சொற்களை பயன்படுத்தலாம்.

பொது சொற்களாகிய அலுவலக உதவியாளர் (Office Assistant) செவிலியர் (Nurse) போன்ற சொற்களை அன்றாட நடைமுறையில் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். வகுப்பறையில் ஆண் பெண் என்று பிரித்துப் பார்க்காத இருபாலரையும் குறிக்கும் பொதுவான சமூகப் பாலின நடுநிலை சொற்களைப் பயன்படுத்தலாம்.

**Make sure there aren't 'girls' jobs and 'boys' jobs** குழந்தைகள் யார் எது சொன்னால் செய்வார்கள் என்று அறிய வேண்டும். அனைத்து செயல்முறைகளிலும் கலந்து மாற்றம் வர வேண்டும். இருபால் ஆசிரியர்களும் சம ஊதியத்தில், சம அந்தஸ்தில், சம பதவி உயர்வு வாய்ப்புகளுடன் நியமிக்கப்படல் வேண்டும். ஆசிரியைகளது நிர்வாகத் திறனுக்கும், ஆசிரியர்களது கலைத்திறனுக்கும் ஊக்கமளிக்க வேண்டும். அவர்களுக்கு உரிய வாய்ப்புகளை நல்க வேண்டும்.

**முடிவுரை**

இவ்வலகில் வார்ப்பட எண்ணங்கள் என்பதன் பொருள், பாலின வார்ப்படக் கருத்துகள் என்பதன் விளக்கம், குழந்தை, வளரிளம் பருவத்தில் தெரிவிக்கப்படும். பாலின வார்ப்படக் கருத்துகள், பாலின வார்ப்படக் கருத்துகளை உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் குறிப்பாக உயிரியல் காரணிகள், பண்பாட்டுக் காரணிகள், சுற்றுச் சூழல் காரணிகள் ஆகியவைகளைப் பற்றி தெரிந்துகொண்டோம். மேலும் பாலின தன்னடையாளம் என்பதன் பொருள் அது குழந்தைப் பருவத்திலும், வளரிளம்பருவத்திலும் வளர்ச்சியுறும் விதம், முன்மொழிந்த பாலின மனப்பதிவு கோட்பாடு, வார்ப்பட கருத்துக்களைக் கொண்டிராத குழந்தைகளை உருவாக்கிடுவதற்கான உத்திகள் ஆகியவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பாலின இயல்புகள், திறமைகள், நாட்டங்கள் பணிப்பொறுப்புகள் பற்றிய வார்ப்பட எண்ணங்களும், சார்பெண்ணங்களும், சமூகத்திலிருந்து முழுமையாக நீக்கப்படல் வேண்டும். இதற்கு குடும்பம், கல்வி நிறுவனங்கள், பாடநூல்கள் பள்ளிச் செயல்கள் ஆகிய அனைத்தும் உதவிட வேண்டும்.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)**

1.சமூகப் பாலின கட்டமைப்பு கொள்கையினை விவரி.

Explain the Gender Schema Theory.

2. பாலின வார்ப்புகளின் தாக்கங்கள் யாவை?

What are the influences of Gender Stereotyping?

3.குழந்தைப் பருவத்திலும், வளரிளம்பருவத்திலும் உருவாகும் பாலின வார்ப்புகளை விவரி.

Describe Gender Stereotypes in Childhood and Adolescence

4.குழந்தைகளிடம் பாலின வேறுபாடற்ற கருத்துகளை உருவாக்கும் உத்திகள் பற்றி விவாதி.

Discuss the strategies for development of non Gender Stereotyped Children.

## அலகு – VI

## விளிம்புநிலைக் குழந்தைகள்: பிரச்சனைகளும் தீர்வுகளும்

## (Marginalized children: Issues and concerns)

**நோக்கங்கள் (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்,

1. விளிம்புநிலைக் குழந்தைகளின் நிலையை உயர்த்தும் நடவடிக்கைகளை அறிந்து கொள்ள முடியும்.
2. குழந்தைகளுக்கு ஊறுவிளைவித்தல் வகைகளைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்.
3. பல்வேறு வகையான குழந்தைகளின் பிரச்சனைகள் அனுபவங்களுக்கான தீர்வுகளை தெரிந்து கொள்ள முடியும்.

**முன்னுரை (Introduction)**

விளிம்புநிலைக் குழந்தைகள் என்பவர்கள் நகரங்களின் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், ஆதரவற்ற சமூகத்தினால் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் (தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின், பெண்குழந்தைகள்), தவறாக பயன்படுத்தப்பட்ட குழந்தைகள், வறுமையில் வாடும் குழந்தைகள், தெருவில் வசிக்கும் குழந்தைகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அமைப்புசாரா நிறுவனங்களில் பணிபுரியும் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், அநாதைக் குழந்தைகள் ஆகிய அனைவரும் பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர்களை உள்ளடைக்கியதாகும்.

**பொருள் (Meaning)**

மனித சமூகங்களில் உள்ள ஆதிக்கப் பிரிவினர், சமுதாயத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் பலனளிக்காதவர்கள் அல்லது விரும்பத்தகாதவர்கள் என்று தாம் கருதுவோரை சமூகத்தின் நடைமுறை வாழ்க்கைச் செயல்களிலிருந்தும், பண்பாட்டுச் செயல்களிலிருந்தும், ஒதுக்கி வைத்து புறக்கணித்தலே விளம்பு நிலைக்குத் தள்ளுதல் எனப்படுகிறது.

**கருத்து (Concept)**

புறக்கணிக்கப்பட்ட, எண்ணற்ற பிரச்சனைகளைக் கொண்ட குழந்தைகள் அனைவரையும் விளிம்பு நிலைக் குழந்தைகள் என்று கருத்தாக்கம் செய்யலாம்.

சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தோர் தமக்குள் ஒருவித ஒன்றுணர்வையும் கூட்டு அடையாளத்தையும் பெற்று குழுவாக செயல்பட்டு பொதுவான தடைகளையும் கூட்டாக எதிர் கொள்கின்றனர். இக்குழுக்களைச் சேர்ந்தோர் தம் குழுவில் யாரெல்லாம் உள்ளடங்குவர் என்பது குறித்த சமூக நியதிகளைக் கொண்டிருப்பர். தத்தம் குழுவில் உள்ளோரையே திருமணம் புரிவதிலும் நாட்டம் கொள்வர். இத்தகைய குழுவினர் சேர்ந்து வாழும் பகுதிகள் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவும் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி சுகாதார சீர்கேட்டுடன் இருக்கும்.

**விளிம்புநிலைக் குழந்தைகளின் இயல்புகள் (Characteristics of Marginalized Groups)**

விளிம்பு நிலைக் குழந்தைகளின் இயல்புகளாக பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. கல்வி பெறும் வசதிகளும் வாய்ப்புகளும் இன்றி இருப்பர்.

2. ஊட்டச்சத்து இன்மையால் அடிக்கடி உடல்நல பாதிப்புக்கு உள்ளாவர்.
3. இத்தகைய குழந்தைகளுக்கு போதிய மருத்துவ வசதிகள் கிட்டுவதில்லை
4. ஏழ்மையின் காரணமாக நகர்ப்புறங்களிலிருந்து வெகுதூரம் தள்ளி வசிப்பர்
5. இவர்கள் வசிக்கும் இடங்களில் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் துப்புரவற்ற சூழ்நிலையே நிலவும்.
6. இளம் வயதிலேயே வேலைக்குச் சென்று குடும்பத்திற்கு பொருளீட்டி உதவிடும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவர்.
7. இவர்களது ஒத்த வயதினர் யாரும் பள்ளிக்குச் செல்ல அக்கறை காட்டுவதில்லை
8. இத்தகைய குழந்தைகளது பெற்றோர்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும், கல்வியின் முக்கியத்துவத்தை உணராதவர்களாகவும், நிரந்தர வருமானம் இன்றி வறுமையில் வாழ்பவர்களாகவும் இருப்பர்.
9. விளிம்புநிலைக் குழந்தைகள் கல்வியறிவு இல்லாதிருப்பதோடு எத்தகைய தொழில்சார் திறன்களும் பெற்றிருப்பதில்லை.
10. விளிம்புநிலைக் குழந்தைகளுக்கு முன்னேற்றத்தைத் தூண்டிட உதவும் முன்மாதிரிகளாக (Role models for development) அவர்களது சமுதாயத்தில் யாரும் இருப்பதில்லை.

**நகர்ப்புற குடிசைப்பகுதியில் வாழும் குழந்தைகள் (Children Living in Urban Slum)**

**நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் வாழும் குழந்தைகளின் பிரச்சனைகள் - Issues of Children Living in Urban slum**

இந்தியாவில் நகர்ப்புற குடிசைப்பகுதியில் வாழும் குழந்தைகளின் பிரச்சனைகளாக பின்வருவனவற்றகை குறிப்பிடலாம்.

1.வசிப்பிடம், அடிப்படைவசதி சுற்றுச்சூழல் துப்புறவு இன்றி இருத்தல்

- பள்ளிக்கு செல்லாமை
- குழந்தைகளை தவறாக பயன்படுத்துவது
- போதை பொருட்கள் மதுவுக்கு அடிமையாவது
- சிறுவயதிலேயே தாய்மை அடைவது

2.பள்ளி இடைநின்றலின் முதன்மை காரணிகள் (Primary Causes of Children being out of school)

- பள்ளி கட்டணம் செலுத்த இயலாமை,
- குடும்ப வறுமை காரணமாக குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல்
- பெற்றோர்களால் ஒதுக்கப்பட்ட (புறக்கணிக்கப்பட்ட) குழந்தைகள்
- தாய்மை அடைதல்
- பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவம் அறியாமை
- சிறுவயதிலேயே மற்ற குழந்தைகளோடு சேர்ந்து கொண்டு குப்பை பொறுக்குவது.

3.முறையான இருப்பிடம், பாதுகாப்பானக் குடிநீர், கழிப்பிட வசதி, கழிவுநீர் அகற்றம் போன்ற அடிப்படை வசதிகள் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை.

4.குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளது சுற்றுச் சூழல் தூய்மையற்றதாகவும், துப்புரவு இன்றியும் காணப்படும். இத்தகைய அசுத்தமான சுற்றுச்சூழல், தூய்மையற்ற தண்ணீரைப் பருகுவதாலும் நகா்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வாந்தி, பேதி, காலரா போன்ற நீா்மூலம் பரவும் தொற்று நோய்களுக்கு இலக்காகின்றனா். ஊட்டச்சத்துக் குறைபாடும், மோசமான உடல் நலமும் குழந்தைகளது சராசரி வாழ்நாள் அளவை பெரிதும் பாதிக்கின்றன.

5..நகா்ப்புற குடிசைப்பகுதிகளில் வாழும் குழந்தைகளது குடும்பச் சூழலும் உடல் ஆரோக்கியமின்மையும் அவா்கள் பள்ளிக்கு ஒழுங்காகச் செல்ல முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றன. பெற்றோா்களும் கல்வியின் முக்கியத்துவத்தை உணராமல் இருப்பதால் நகா்ப்புற குடிசைவாழ் குழந்தைகள் பெரும்பாலும் தொடக்கக் கல்வியைச் கூட முடிக்காதவா்களாக இருக்கிறாா்கள். சிறுவயதிலேயே தன்னை ஒத்த குழந்தைகளோடு சோ்ந்து கொண்டு குப்பைப் பொறுக்குவதிலும், உணவு விடுதியில் தூய்மைப்பணி செய்வதிலும் ஈடுபடுகின்றனா்.

**ஆதரவற்ற குழந்தைகள் (Deprived Children)**

பெற்றோா்களது கவனிப்பும், பராமரிப்பும் கிடைக்காமல் கல்வி, மருத்துவ வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் பெற முடியாமல் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையில் உள்ள 18 வயதிற்குட்பட்ட குழந்தையே ஆதரவற்றக் குழந்தை என்று சட்டம் வரையறுக்கிறது.

‘‘ஆதரவற்றக் குழந்தை’’ என்ற சொல் அநாதைக் குழந்தை, இருப்பிடமற்றக் குழந்தை (Homeless Child), கைவிடப்பட்டக் குழந்தை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

முன்னேறிய நாடுகளில் ஆதரவற்றக் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் போா்களாலும், உள்நாட்டுக் கலவரங்களாலும் சீரழிந்த நாடுகள், இயற்கைப் பேரழிவுகளால் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகளிலும் ஆதரவற்றக் குழந்தைகள் கணிசமான அளவில் உள்ளனா். தாம் வாழும் அருகாமையில் நல்ல முன்மாதிரியாக விளங்கக் கூடியவா்கள் இல்லாததாலும் இத்தகைய தெருவோர வாசிகளாக மாறிய அநாதைகள் பின்னாட்களில் குற்றம் புரிவதையே தொழிலாகக் கொண்ட கூலிப்படையினராக மாறி விடுகின்றனா்.

**தலித் (Dalit)**

தலித் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியினரைக் குறிப்பதல்ல. சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டு, வாழ்வாதாரம் ஏதுமற்ற ஏழைகளைக் கொண்ட, பல்வேறு சாதிகளை உள்ளடக்கிய சமூக குழுக்கள் ஆகும். இவா்கள் கல்வியறிவில் மிகவும் பின்தங்கியும், பொருளாதார ரீதியாக நலிந்தும், குறைந்த விலையில் வாங்கும் சக்தி உடையோா்களாகவும், நிரந்தர வேலையற்ற கூலித் தொழிலாளா்களாகவும் வாழ்ந்து வருகின்றனா். கோயில், குளம் போன்ற பொது இடங்களைக் கூட இவா்கள் பிற சாதியினரோடு பகிா்ந்து கொள்ள முடியாது. இவா்கள் சமூக ரீதியாக தனிப்பிரிவினா்களாக கருதப்பட்டு கிராமங்களின் ஒதுக்குப்புறமான பகுதிகளில் அடிப்படை வசதிகளற்ற, அசுத்தமான சூழலில் வசிக்க வேண்டி உள்ளது.

இவர்களது உடல் ஆரோக்கியமும், வாழ்க்கைத் தரமும் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது.

**தலித்களின் மேம்பாடு (Concerns for Dalit Improvement)**

1. தலித் மக்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகளான, பாதுகாப்பான குடிநீர் வழங்கல், பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், கழிவுப் பொருட்களை முறையாக அவ்வப்போது அகற்ற ஏற்பாடு செய்தல் போன்றவற்றை உள்ளூர் நிர்வாகம் செய்து கொடுத்தல்.
2. மானிய விலையில் அரசு உணவுப் பொருட்கள் வழங்குதல்
3. சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. இரண்டு மைல் தொலைவிற்குள் தொடக்கப்பள்ளியும், ஆரம்ப சுகாதார நிலையமும் அமைத்துச் செயல்படச் செய்தல். ஐந்து மைல் சுற்றளவுக்குள் உயர்பள்ளி இருத்தலை உறுதி செய்தல்
5. இவர்களின் தடைகற்களை உடைத்து, குழந்தை தொழிலாளர்களையும் சேர்த்து முறையான முழுநேர கல்வியை வழங்க வேண்டும். அரசு இவர்களின் மேல் தனி கவனம் செலுத்த வேண்டும்.
6. தொழிற்கல்வியை அதிகரித்து அவர்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும். தலித்து ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் அவர்களின் விருப்பப்படி தொழிலை தேர்வு செய்து கொள்ள அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதனை ஊடகங்களின் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் வெளியிட வேண்டும். அது மட்டும் அல்லாது இணையம் வழியாகவும் தகவல்கள் பெற வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

**பழங்குடி மக்கள் (Tribal)**

சமூக அமைப்பின் காரணமாக பல நூற்றாண்டுகளாக நசுக்கப்பட்டிருந்த பழங்குடி பெண் குழந்தைகள், அவர்கள் வாழும் சூழ்நிலை காரணமாக போதுமான வாய்ப்புகளைப் பெற முடிவதில்லை.

- தாய் தந்தையர் படிப்பறிவின்றி இருப்பர்
- வீட்டுச் சூழல், உடல், உள்ளம், அறிவாற்றல், மன எழுச்சி மேம்பாட்டிற்கு ஏற்றதாக இருப்பதில்லை.
- பள்ளிகளிலும், மற்றச் சூழல்களிலும் சமூக நிலைப்பாட்டினால் ஒதுக்கப்படுகிறார்கள்.
- பன்னெடுங்காலமாக பள்ளிக்கு முறையாக அனுப்பப்படுவதில்லை.
- இப்போதும், வீட்டு வேலை, குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற காரணங்களால் பள்ளிக்கு முறையாக அனுப்பப்படுவதில்லை.

**பழங்குடியினர் குழந்தைகளின் முன்னேற்றம் (Improvement for Tribal Children)**

சமூகத்தால் புறக்கணிக்கப்படல் என்பது பிற சமூக உறுப்பினர்களுடன் கலாச்சாரம் சமூக அளவில் இடைவினை புரியாமல் தடுத்தல் என்று வரையறுக்கப்படுகிறது. இதற்குக் காரணமாக இருப்பது தீண்டாமை, கல்வியறிவின்மை, சமூகத்தில் தாழ்ந்த அந்தஸ்த்து வறுமை போன்றவைகளாகும்.

இப்பிரிவினருக்கு கல்வியில் சலுகைகளும், உதவித்தொகையும் கொடுக்கப்படுகிறது. இப்பிரிவினரது பெண் கல்விக்கு முக்கியத்துவமும் கொடுக்கப்படுகிறது. இலவச புத்தகங்கள், இலவச சீருடை, இலவச சைக்கிள் மதிய உணவும் கொடுக்கப்பட்டு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

மேற்கண்டவாறு சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின் பெண் குழந்தைகளின் கல்வி உடல் நலம், மனநலம் போன்றவைகளில் மேம்பாடு ஏற்படுத்தப்படுகிறது.

**துன்புறுத்தலுக்கு உள்ளான குழந்தைகள் (Abused Child)**

உடல்ரீதியாகவோ, பாலியல் (Sexual)ரீதியாகவோ, மனவெழுச்சி (Emotional) ரீதியாகவோ குழந்தை அல்லது குழந்தைகளை முறைகேடாக நடத்தினால் (Maltreatmeat) அல்லது முறையாக கவனித்துக் கொள்ளாமல் இருந்தால் அது குழந்தைகளுக்கு ஊறு விளைவித்தல் என்பதில் அடங்கும்.

குழந்தைகளின் பெற்றோர் அல்லது பிற குழந்தை காப்பாளர்கள், தாம் மேற்கொள்ளும் அல்லது மேற்கொள்ளத் தவறிய செயல் / தொடர் செயல்கள் மூலம் குழந்தைகளுக்கு எவ்விதத்திலும் தீங்கு இழைத்தாலோ அல்லது தீங்கு ஏற்படக்கூடிய வாய்ப்பு / அபாயத்தை உருவாக்கினாலோ, அது குழந்தைகளுக்கு ஊறுவிளைவித்தல் என்றறியப்படும்.

குழந்தைகள் இயங்கும் தளங்களான குடும்பம், பள்ளி, பல்வகை நிறுவனங்கள் (Organisations) சமுதாய நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றில் குழந்தைகளுக்கு ஊறுவிளைவித்தல் நிகழக்கூடும்.

**வகைகள்** (Types)

குழந்தைகளுக்கு ஊறுவிளைவித்தலை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள்

உடல் ரீதியானவை (Physical Abuse)

உளவியல் ரீதியானவை (Psychological Abuse)

மனவெழுச்சி சார்ந்தவை (Emotional Abuse)

பாலியல் ரீதியானவை (Sexual Abuse)

**உடல் ரீதியாக ஊறுவிளைவித்தல்**

குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துதல், பலமாகத் தாக்கி காயங்களை ஏற்படுத்துதல், உடலுறுப்புகளை சேதப்படுத்துதல், மரணம் விளைவித்தல் ஆகிய யாவும் உடல் ரீதியாக ஊறுவிளைவித்தல் என்பதில் உள்ளடங்கும்.

ஐ.நா. சபையின் மனித உரிமைக் குழு, மனிதர்களை இழிவுபடுத்தும் தண்டனைகளைத் தடுத்தல் (Prevention of degrading punishment ) என்பதன் கீழ் உடல் ரீதியான தண்டனைகளை (Corporal Punishments) அளித்தலை தடைசெய்துள்ளது.

**உளவியல் ரீதியாக ஊறுவிளைவித்தல்**

குழந்தைகளை அடிக்கடி அச்சுறுத்துதல் (Terrorizing), தனிமைப்படுத்துதல், அவர்களது உழைப்பை உறிஞ்சுதல், மகிழ்ச்சியுறும் செயல்பாடுகளில் ஈடுபடுதலை

முற்றிலுமாக தடுத்தல், மோசமான வார்த்தைகளால் எப்போதும் திட்டிக் கொண்டேயிருத்தல், எதற்கும் பயனற்றவர்கள் என எப்போதும் கூறிக் கொண்டிருத்தல் போன்ற தீவிர மன உளைச்சல்களை குழந்தைகளிடம் ஏற்படுத்தும் செயல்கள் அனைத்தும் உளவியல் ரீதியாக ஊறுவிளைவித்தல் என்பதில் உள்ளடங்கும். இந்தியாவில் ஏழ்மையின் காரணிகள், விளைவுகள் தீர்வுகளை, கீழ்கண்டவாறு விவாதிக்கலாம்.

**பாலியல் ரீதியாக ஊறுவிளைவித்தல்**

பாலியல் எழுச்சியை (Sexual Stimulation) ஏற்படுத்தும் விதமாக குழந்தைகளிடம் நடந்து கொள்ளுதல், குழந்தைகளை வயதில் பெரியவர்கள் தமது பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல், குழந்தைகளின் உறுப்புகளை ஆபாசமாக வெளியே காட்டிடச் செய்தல், பாலியல் தொழிலுக்காக, (Sexual Services) குழந்தைகளை விற்பனை செய்தல் போன்ற பாலியல் ரீதியாக குழந்தைகளுக்கு ஊறுவிளைவித்தல் என்பதில் உள்ளடங்கும்.

**ஏழ்மையில் வளரும் குழந்தைகள்** (Children Growing up in Poverty)

ஒருவரிடம் பணம், சொத்து இல்லாத நிலை அடிப்படைத் தேவைகளுக்கான பற்றாக்குறை நிலை இருப்பின் வறுமை ஏற்படுகிறது. ஏழ்மையில் வாழ்கிறார் என்று அர்த்தம். ஒருவர் கண்ணியமாக வாழ மிகவும் அவசியமான எளிய சத்துணவு, தூய்மையான உடை, குடியிருக்க வீடு, அடிப்படைக் கல்வி அறிவு, சில அடிப்படையான பண்பாட்டுச் செயல்கள் ஆகியவை இல்லாத நிலைமைதான் ஏழ்மை எனப்படுகிறது.

**குழந்தை வறுமைக்கான காரணங்கள்**

வறுமையில் வாடும் பெற்றோர்கள்

கல்வியறிவு இன்றி பெற்றோரிருத்தல்

அரசாங்கத்தின் கொள்கையால் பாதிக்கப்படுதல்

முன்னேறிய நாடுகளில் முறைத் தவறிப் பிறக்கும் குழந்தைகள்

தாய்-தந்தையை பிரிந்து தனியாக வாழ்தல்

சில நாடுகளின் பொருளாதாரப் பின்னடைவு

**விளைவுகள்**

முன்னேற்றமடையாத நாடுகளில் மிக அதிகமான வறுமையில் வளரும் குழந்தைகளை ஆய்வு செய்ததில், அவர்களிடத்தில் போதுமான உடல் வளர்ச்சி இல்லை, ஊட்டச்சத்துப் பற்றாக்குறைகளால் மனவளர்ச்சி குன்றுகிறது. மேலும், நோய் எதிர்ப்பாற்றல் இல்லாமல் பல நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களது வளர்ச்சி ஓரளவு நடந்த பிறகு கல்வியறிவு பெறுவதில் பின்னடைவு ஏற்படுகிறது. சமூக ஏற்றத்தாழ்வை சந்திக்கின்றனர். இது போல், குழந்தை தொழிலாளியாக மாறுகின்றனர். சமூக விரோதிகள் இவர்களை பிச்சை எடுக்கவும் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுத்தவும் செய்கின்றனர். கல்வியறிவு பெறுதல் இவர்களுக்கு இயலாததாக இருக்கிறது.

**தீர்வுகள்**

தெருவோரத்தில் வசிப்போருக்கு இரவில் பாதுகாப்பாக தங்கியிருப்பதற்கும், குளிக்க மலஜலம் கழிக்க உரிய வசதிகளை ஏற்படுத்தித் தரும் விதமாக மாநகராட்சிகளும்,

நகராட்சிகளும் இலவச தங்குமிடங்களை ஏற்படுத்தி, முறையாகப் பராமரித்திட வேண்டும் என்று இந்திய நீதிமன்றங்கள் உத்திரவிட்டு, படிப்படியாக செயல் படுத்தப்பட்டு வருகிறது,

கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்காக புதிய தொழில்களை கிராமங்களிலேயே தொடங்குவதற்கு தொழில் முனைவோர்களுக்கு பல சலுகைகளை அரசாங்கம் அளித்து வருகின்றது.

கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்கள் அதிகமாகத் தொடங்கப்படுகின்றன. மருத்துவ வசதி மேம்படுத்தப்பட்டு நிறைய மருத்துவ மனைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

கிராம மக்களின் எழுத்தறிவின்மையை போக்கும் வகையில் முதியோர் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. கிராம மக்களின் வேண்டாத மூடப் பழக்க வழக்கங்களைக் களைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப்புற மக்களுக்கு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர அரசு பாடுபட்டு வருகின்றது.

வறுமையில் வளரும் குழந்தைகளுக்கு உடல் உள திறன் வளர்ச்சிக்கு உதவுமாறு பல்வேறு உதவிகளை அரசு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**தெருவோரக் குழந்தைகள்** (Street Children)

தெருவோர நடைபாதைகளிலும், புழக்கத்தில் இல்லாத கட்டிடப் பகுதிகளிலும், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் போன்ற நகர்ப்புற பொது இடங்களில் உண்டு, உறங்கி, பெற்றோர் அல்லது உறவினர்களின் முறையான பாதுகாப்பு, அரவணைப்பு ஏதுமின்றி தமது தங்குமிடத்தையே, வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்திடும் சிறுவர், சிறுமியர்களே தெருவோரக் குழந்தைகள் எனப்படுவர்.

**தெருவோரக் குழந்தைகள் உருவாகக் காரணம்**

ஏழ்மை
இனம்
குடும்பங்கள் சிதைந்து போதல்
பொருளாதார நிலை
சமூக சீர்குலைவு
குடும்ப வன்முறை
மனநலம் பாதிக்கப்படுதல்
போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாதல்
மூன்றாம் பாலினத்தவராக மாறுதல்

**தீர்வுகள்**

அரசு தெருவோரக் குழந்தைகளை ஒருங்கிணைக்க திட்டம் தீட்டுகிறது. இவை இன்றி பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேசிய அளவிலும், மாநில அளவிலும், பன்னாட்டு அளவிலும் இயங்கி வருகின்றது.

**பன்னாட்டு அமைப்பு**

குழந்தைகளுக்கான உலகச் செயல் இந்திய அமைப்பு பட்டாம்பூச்சிகள் (Butterflies) தெருக்குழந்தைகளுக்காக தில்லியில் இயங்குகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் தெருக்குழந்தைகளின் பிரச்சனைகளுக்கு முழுமையாக ஈடுகொடுக்க முடிவதில்லை. அவரவர்களுக்கு முடிந்தவரை செய்து வருகின்றனர்.

## H.I.V பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள் (H I V Affected Children)

எய்ட்ஸ் (Aids) என்னும் சொல் நான்கு ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துத் தொகுப்பாகும் பொதுவாக நம் உடல் நோய் கிருமிகளைப் பெருமளவிற்குத் தடுக்கக்கூடிய எதிர்ப்பாற்றலை பெற்றுள்ளது. இந்த ஆற்றல் இரத்தத்தில் உள்ள வெள்ளை அனுக்களால் அழிக்கப்படுகிறது. அவை அழிக்கப்படும் போது நோய் எதிர்ப்பாற்றல் குறைகிறது.

எய்ட்ஸ் என்னும் நோய், H.I.V எனப்படும் மனித நோய் எதிர்ப்பாற்றலைக் குறைக்கும் வைரஸ் கிருமியால் உண்டாகிறது. இந்த வைரஸ் கிருமி நமது உடலிலுள்ள நோய்ப் பாதுகாப்பு அமைப்பில் உள்ள வெள்ளை அணுக்களை சிறிது சிறிதாகக் குறைத்து முற்றிலும் அழித்துவிடுகிறது. இதனால் நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து, பாதிப்புக்கு ஆளானோரின் உடல், நோய் உண்டாக்கும் கிருமிகளால் அதிகமாக பாதிக்கப்பட்டுத், தொடர் நோயாளியாக ஆகும் நிலைமை ஏற்படுகிறது.

**தீர்வு**

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்திய உண்மைகளாவன:

எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த மருந்துகள் ஏதும் இல்லை, என்றாலும் அது வராமலும், பரவாமலும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எய்ட்ஸ் மூலம் உண்டாகும் பல நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் அவற்றிலிருந்து குணம் பெற்று நோயாளி சாகும் வரை துயரங்களின்றி இயல்பாக வாழ முடியும்.

இந்திய அரசாங்கம் தேசிய அளவில் எய்ட்ஸ் கண்காணிப்புக்காகவும், கட்டுப்பாட்டிற்காகவும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பை (National AIDS Control Organisation - NACO) உருவாக்கியிருக்கிறது. இந்த அமைப்பு மாநில கண்காணிப்பு மையங்களையும், பல்வேறு தன்னார்வக் குழுமங்களையும் ஆதரித்து கண்காணித்து வருவதோடு, ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு விழப்புணர்வை உருவாக்கிட முனைப்புடன் செயல்படுகிறது.

ஒழுக்கமான வாழ்க்கை, கட்டுப்பாடான நெறிமுறைகள், முறையான பாதுகாப்புகள் ஆகியவற்றைக் கடைபிடிப்பதன் மூலம் எய்ட்ஸ் வராமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். வந்த பின் அலறுவது புத்திசாலித்தன்மையல்ல.

## அமைப்புசாரா நிறுவனங்களிலும், தொழிலகங்களிலும் பணிபுரியும் குழந்தைகள் (Children Working in Unorganized Sectors)

அமைப்புசார நிறுவனங்கள் தொழிலகங்கள் என்பது ஒரு குடும்ப நிறுவனமோ, அல்லது கூட்டுறவு நிறுவனமோ 10 பேருக்குக் குறைவான தொழிலாளிகளைக் கொண்டு அரசாங்கத்தின் தொழிலாளர் நலச்சட்டத்திற்கு உட்படாமல் குறைந்தபட்ச கூலி, வேலை செய்யும் நேர அளவின்றி மருத்துவக் காப்பீடு இன்றியும் செயல்படும் தொழிலகங்கள் என்று இந்திய தேசிய தொழில் முனைவோர் கமிட்டி வரையறுத்துள்ளது. இதில் பணிபுரியும் குழந்தைகளுக்கு எந்த

வித பணிபாதுகாப்பும், சம்பளத்திற்கான உத்திரவாதமும் இல்லை. தொழிற்சாலை சட்டம் (1948) சுரங்கத் தொழிலாளி சட்டம் (1952) இளம் குற்றவாளி சட்டம் (1986) ஆகியவைகள் குழந்தைகளை பணியில் அமர்த்தாமல் தடுப்பதற்கு வழிவகை செய்கிறது.

**அரசுத்திட்டங்கள்**

இவ்வகையான குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு கல்வி அளிக்கவும் நிதி உதவி செய்யவும் சமூகத் தொண்டு நிறுவனங்களையும், சமூக நலத்துறையையும் அரசாங்கம் செயல்படுத்துகிறது.

**அமைப்புசாரா நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள்**

தீப்பெட்டி தயாரித்தல் தொழில், நெசவுத் தொழில், கல்லுடைக்கும் தொழில், விவசாயக் கூலித் தொழில், செயற்கை வைரத் தொழில் போன்றவைகள்.

### குழந்தைத் தொழிலாளி (Child Labour)

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் கட்டாய இலவசத் தொடக்கக் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபிறகும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் குடும்பப் பணியாளர்களாகவும், தீப்பெட்டித் தொழிற்சாலைகள், பட்டாசுத் தொழிற்சாலைகள், உணவகங்கள், குறு சிறு தொழிற் கூடங்கள், கடைகள் போன்றவற்றில் சொற்ப ஊதியத்தில் பணியாற்றி வருவதை நாம் காண்கிறோம். இவர்களே குழந்தைத் தொழிலாளர்கள் ஆவர்.

**காரணங்கள்**

வேலையின்மை

வறுமை /ஏழ்மை நிலை

பொருளாதார சூழ்நிலை

குடும்ப சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை

**விளைவுகள்**

பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய வயதில் குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சியையும், கற்கும் ஆர்வத்தையும் தொலைத்து விட்டு தினமும் 8மணி நேரத்திற்கு மேல் உழைத்து கொத்தடிமைகளாக வாழ்க்கையை ஓட்ட வேண்டிய அவலத்திற்கு ஆட்படுகின்றனர்.

14 வயதுக்குட்பட்ட இந்த இளஞ்சிறார்கள் பெரியவர்களைப் போன்றே குறைந்தது எட்டு மணி நேரமாவது உழைக்க வேண்டியுள்ளது. ஆனால் பிற தொழிலாளிகளைப் போன்று குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் தரப்படுவதில்லை.

பெண் குழந்தைத் தொழிலாளிகள் பாலியல் பலாத்காரத்துக்கு ஆட்பட்டு தாய்மை அடைகின்றனர். பீடி புகைத்தல், மது அருந்துதல், கஞ்சா போன்ற போதை பொருட்களுக்கு அடிமையாதல் ஆகிய கெட்ட பழக்கங்களுக்கு ஆட்பட்டு சீரழிகின்றனர்.

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி கல்வி கற்காமல் தொழிற் பயிற்சியளித்து, தரமான உழைக்கும் கரங்களைக் கொண்ட தொழிலாளர்களாக அவர்களை மாற்றி அமைக்காமல் அதாவது மனித வளமாக உருவாக்காமல், பிஞ்சு வயதிலேயே வேலைக்கு அனுப்புவது, காய்களை கனிய வைப்பதற்கு பதில் வெம்பிப்போகச் செய்வதற்கு ஈடாகும். குழந்தைத் தொழிலாளர் பிரச்சனை நம் நாட்டின் மனித வளத்தை நாசம் செய்வதோடு, இந்தியப்

பொருட்களின் நேர்த்தி குறைவு படுவதற்குக் காரணமாக அமைந்து நாட்டின் ஏற்றுமதியையும் பாதிக்கிறது.

**தீர்வுகள்**

**சட்ட நடவடிக்கைகள்**

குழந்தைத் தொழிலாளர் தடுப்புச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்துதல் வேண்டும். ஆய்வாளர்கள், அதிரடி சோதனைகள் மூலம் குழந்தைகளை தொழிலில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உறைகளில் இப்பொருள் தயாரிக்க குழந்தைத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படவில்லை என்ற சான்று அளிப்பதும் நிறுவனங்களின் கடமையாக ஆக்கப்பட்டுள்ளது. இதனை தீவிரமாக கண்காணித்து நடைமுறைப்படுத்துதல் அரசின் கடமையாகும்.

**தொண்டு நிறுவனங்களின் பங்கு**

நேரடி பார்வை செய்தல், குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களை சந்தித்து சிறு தொழில் பயிற்சி அளித்தல், முறைசாராக் கல்வி அளித்தல், பொது மக்களிடம் இது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தல் கிராம நிர்வாக அலுவலர்கள், பள்ளி தலைமையாசிரியர் ஆகியோர் அடங்கிய குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளிகள் நியமிக்கப்படுவதை தடுத்தல்.

பள்ளிகளில் வழங்கப்படும் இலவச வசதிகளையும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (SSA) சிறப்புப் பயன்களையும் குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு விளக்கும் பொறுப்பை பள்ளி ஆசிரியர்களும், சமூக ஆர்வலர்களும் தத்தம் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும்.

மாணாக்கர்கள் பள்ளியை விட்டுப் போகாமல் இருக்கும் வகையில் வகுப்புச் சூழலையும், பள்ளி நடைமுறைகளையும் சிறப்பாக அமைக்க வேண்டும்.

முறைசாராக் கல்வியை மேலும் சிறப்பாக வழங்க வேண்டும்.

விழிப்புணர்வு திட்டங்களை அரசின் கல்வித்துறையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்படுத்துதல் வேண்டும்.

**விளிம்புநிலைக் குழந்தைகளின் சமூகத் தரநிலையை உயர்தும் நடவடிக்கைகள் (Measures to promote Marginalized Children)**

சமூக ஒதுக்கத்தை தகர்த்தெறிதல், அனைத்து பிரிவு மக்களும் ஒன்றிணைந்து வாழும் சமத்துவபுரக் குடியிருப்புகளை அதிக எண்ணிக்கையில் பரவலாக அமைத்தல்.

அனைவருக்குமான பொதுப்பள்ளிகளை உடைய கல்வி அமைப்பை உருவாக்குதல்.

அடிப்படை வசதிகள் கொண்ட குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

அரசு மான்ய விலையில் உணவுப் பொருட்கள் எரிபொருளை வழங்குதல்.

விளிம்பு நிலை மக்களுக்கு சிறு தொழில்களில் இலவச குறுகியகாலப் பயிற்சியளித்து, சுயமாக தொழில் தொடங்க கருவிகளும், மான்யமும் அளித்தல்.

கல்வி மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

மாற்றுப் பள்ளிகளையும், முறைசாராக் கல்வியையும் ஊக்குவித்தல்.

வயது வந்தோருக்கும் இடைநின்ற குழந்தைகளுக்கும் முறைசாராக் கல்விமையங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படச் செய்தல்.

**முடிவுரை**

இவ்வலகில் 'விளிம்புநிலைக் குழந்தைகள்' என்பதன் விளக்கம், விளிம்புநிலைக் குழந்தைகளின் பல்வேறு வடிவங்களான நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட குழந்தைகள் குறிப்பாக தலித் பழங்குடியின சிறுமிகள், பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், எச்.ஐ.வி. பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள், குழந்தைத் தொழிலாளிகள், அமைப்புச் சாரா தொழில் பிரிவில் பணிபுரியும் குழந்தைகள், ஏழ்மை நிலையில் வளரும் குழந்தைகள் ஆகியோரது பிரச்சனைகள், விளிம்பு நிலைக் குழந்தைகளது சமூகத் தரநிலையை உயர்த்தும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விரிவாக விளக்கபட்டுள்ளன.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)**

1. விளிம்புநிலைக் குழந்தைகள் என்பவா்கள் யாா்? இந்தியாவில் இக்குழந்தைகளின் நிலையை உயா்த்தும் நடவடிக்கைகள் என்னென்ன என்பதை விவாதி.

   Who are manrginalised children? Discuss briefly the remedial measures to promote the status of marginalised children in India.
2. நகா்ப்புற, குடிசைவாழ் பகுதிகளில் உள்ள குழந்தைகளின் பிரச்சனைகளை விவரி.

   Explain the issues related to children living in urban and slum areas.
3. குழந்தைத் தொழிலாளா் முறையினை ஒழிக்க இந்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விவரி.

   Explain the measures taken by the Government of India for abolishing the child labour.

## அலகு - VII

## வளரிளம் பருவத்தினரை புரிந்து கொள்ளல்

## (Understanding of Adolescence)

### நோக்கங்கள் (Objectives)

இந்த அலகு முடிவுறும் தருவாயில் கற்போர்,

1. வளரிளம் பருவத்தின் பொருள் வரையறைகளை புரிந்து கொள்ள முடியும்.
2. வளரிளம் பருவத்தினரின் பண்புநலன்களை அறிந்து கொள்ளமுடியும்.
3. வளரிளம் பருவத்தின் வழிகாட்டுதல் சேவைகளைப் பற்றி விளக்க முடியும்.
4. வளரிளம் பருவத்தின் வளர்ச்சியை பற்றி எடுத்துரைக்க முடியும்.

### முன்னுரை (Introduction)

வளரிளம் பருவம் மனித வாழ்வில் மிக முக்கியமான பருவம். இந்த பருவத்தில் ஒருவர் குழந்தை நிலையிலிருந்து வளரிளம் பருவத்திற்கு மாற்றமடைகிறார். இந்த பருவத்தில் தான் உடல் வளர்ச்சி அதிகமாகிறது. உளவியலாளர்கள் இந்த பருவத்தை வாழ்கையின் வளர்ச்சி பருவமாக கருதுகிறார்கள். ஏனெனில் இது தனித்தன்மை, உடல், மொழி, திறன்கள், ஆர்வம், நுண்ணறிவு, அறிவுத்திறன் ஆளுமைதிறன் போன்றவற்றை மேம்படுத்துகிறது.

### பொருள் (Meaning)

வளரிளம் பருவம் என்னும் வார்த்தை இலத்தின் மொழியில் இருந்து பெறப்பட்டது. வளர்ச்சியின் பொருள் என்பது வளருதல் மூலம் முதிர்ச்சியடைதல் ஆகும். இது குழந்தை பருவத்தில் இருந்து வளரிளம் பருவத்திற்கு வளர்ச்சி அடையக்கூடிய குழந்தை, இந்த பருவத்தில் மனிதனாக மாற்றமடையும் நிகழ்வு ஆகும். முக்கியமான தனித்தன்மை வாய்ந்த வாழ்க்கை, இந்த காலத்தில் மதிப்புகளால் மாற்றமடைகிறது. மேலும் உடல், மனம், நன்னெறி, சமுதாய மதிப்பு போன்ற வளர்ச்சி ஏற்படுகிறது.

### வரையறை (Definition)

வளரிளம் பருவத்தின் வரையறையானது, பல்வேறு தலைசிறந்த கல்வியாளர்கள் உளவியலாளர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது.

1. ஜீன் பியாஜேயின் கூற்றுப்படி,

   "இந்த பருவம் சிறந்த சிந்தனையில் தொடங்கி நல்ல வாழ்க்கைக்கு பொருந்திபோகச் செய்யும் பருவம் ஆகும்".

2.ஸ்டாலின் ஹால்,

   "மன அழுத்தமும், திறனும் ஒன்றிணைந்து தோன்றும் பருவ மாற்றம் ஆகும்".

3.பார்த்தி ரோகர்ஸ்,

“வளரிளம் பருவம் என்பது, ஒரு கால கட்டம் என்பதை விட ஒரு செயல்முறை என்று சொல்லலாம். இந்தச் செயல்முறையானது, சமுதாயத்தில் சிறப்பாக ஈடுபடுவதற்கு தேவையான நம்பிக்கை நடத்தைகளில் வெற்றி பெறுவதாகும்.

### வளரிளம் பருவத்தினரின் நடத்தையில் இயற்கையில் ஏற்படும் அமைப்பு (Study of adolescent behaviour in the natural settings)

நடத்தை என்பது பார்த்து, உற்றுநோக்கி, உணர்த்து கொள்ளல் நடத்தையின் மூலம் தனித்தன்மை வாய்ந்த செயல்பாடு கொண்டிருத்தல் ஆகும். நடத்தை தனித்தன்மை செயல்பாடுகள், உடல் வளர்ச்சி வெளிப்புற சூழல் சார்ந்து அமைந்து உள்ளது. வளரிளம் பருவத்தின் மாற்றத்தினை, எளிய குறுகிய காலகட்டத்தில் கண்டறியலாம்.

### குமரபருவத்தின் பண்பு நலன்கள் (Characteristices of adolescents)

**1.பதற்றம் (Anxiety)**

பெற்றோரின் பாதுகாப்பு, அரவணைப்பு, பொருளாதார சார்பு போன்றவை, தான் வயது வந்ததும் தனக்கென தனித்த கருத்துகளும் உண்டு, என்பதை ஒப்புகொள்ளும் தன்மை பற்றிய குழப்பத்தில் இருந்து விடுபடாமல் பதற்றமாக உணர்தல் ஆகும்.

**2.மன உளைச்சல் (Mood Swings)**

வளரிளம் பருவம் நிலையான மன இயல்பை கொண்டிருக்காது. சில சமயம் மிகுந்த மகிழ்ச்சியும், சில சமயம் மிகுந்த மன அழுத்தமும் ஏற்படலாம். இது உடலில் உள்ள ஹார்மோன்களின் மாற்றம், தூண்டுதலால் ஏற்படுகிறது.

**3.குழப்பம் (Confusion)**

எரிக்சனின் மனவளர்ச்சி கோட்பாட்டின் படி, வளரிளம்பருவம் அமைதியற்ற பருவமாகும். காரண காரிய தொடர்பின்றி ஏற்ப்படும் மனவெழுச்சி வளரிளம் பருவத்தினரிடம் சிக்கல்களை தோற்றுவிக்கும், தகுதி, திறமை இவற்றிற்கு மேலான விருப்பங்களை அடைய முடியாத நிலையில் மன முறிவிற்கு ஆளாகின்றனர். வளரிளம் பருவமானது உண்மை நிலையை அறியாத பருவம் ஆகும்.

**4.சோம்பேறித்தனம் (Lethergy)**

வளரிளம் பருவத்தில், தங்களது தனித்தன்மையை நிலைநாட்டும் முயற்சியில் அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்ப்பதும், சமூக மரபுகளை மீறுவதும், சக நண்பர்களை பின்பற்ற முயற்சி செய்தல் சமூகத்தில் பிரச்சனைகளை உருவாக்க முயற்சி செய்வதாகும்.

**5.கோபம், எரிச்சல் (Anger and Irretability)**

வளரிளம் பருவத்தினர், தங்கள் முடிவுகளை தாங்களே கண்டறிவர். கிண்டல், கேலி, பிறருடன் ஒப்பிட்டு பேசுதல் போன்ற செயல்கள் குழந்தைகளுக்கு அதிகமான கோபத்தை ஏற்படுத்தும். தோல்வியில் இருந்து வெற்றியை கண்டறிய முயற்சி செய்வர். மற்றவர்கள் அதை புரிந்து கொள்ளவில்லை எனில் அதிக கோபம் ஏற்படுகிறது.

**6.சோதித்தல் (Experimentation)**

வளரிளம் பருவத்தில், மாணவர்கள் தங்கள் வாழ்க்கை பயணத்தில் சில நேரங்களில் முடிவுகள் எடுப்பதில் குழப்பம் அடைகின்றனர். இதில் சக குழுவையே பெரிதும் நம்பியிருப்பர். தங்களின் விருப்பத்தின் படி, போதை பழக்கத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள். அவர்களிடம் பாலுணர்வு அதிகமாக காணப்படும் போது, இவர்கள் குடி போதை பழக்கத்திற்கு அடிமையாகி, எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய் தாக்கத்திற்கு ஆளகின்றனர்.

**பெற்றோராக குடிமகனாக சமூகத்தை புரிந்து கொள்ளுதல் (Undrestanding the society as a parent and citizen)**

எத்தனை வயதானவர்களாக இருந்தாலும், அவர்கள் பெற்றோருக்கு மட்டும் உதவி புரிதலுக்காக தொடர்ந்து இயங்குவதன் காரணமாக உணர்ச்சிவசப்பட்ட குழந்தைகள் போலவே இருக்கிறார்கள். உண்மையாக வயது வந்தவர்கள் அவர்களது மதிப்பு தனது சொந்த முடிவுகளை தேர்வு செய்வதன் மூலமாக தங்களது சொந்த வாழ்கையும் வாழ்கின்றனர். பெற்றோர்களின் அதிகாரத்திற்கு குழந்தை பருவத்திலிருந்து, முதிர்ச்சியடைந்த வளர்ச்சிக்கு குழந்தைகளை கொண்டுவர பெற்றோர்களின் சில முக்கியப் பொறுப்புகள் தேவைப்படுகின்றன.

- வளரிளம் பருவத்திலுள்ள குழந்தைகளிடம் நெருங்கிய உறவுக் கொண்டு அவர்களை புரிந்துக்கொள்ள முயற்ச்சிக்க வேண்டும்.
- சக தோழர்களின் உணர்வுகளை புரிந்துக்கொள்ள முயற்சித்தல், அவர்களை எப்படி சமாளிப்பது என்பதை அறிதல்.
- சமூக கலாச்சாரத்தை அறிய செய்தல், சமூகக் கொடுமைகளிலிருந்து வளரிளம் பருவத்தினரை பாதுகாத்தல்.
- குடிப்பழக்கம் போதைப்பழக்கம் அறவே தவிர்க்கப்பட வேண்டும். குழந்தைகளுக்குப் பெற்றோர் முன்மாதிரியாக திகழவேண்டும்.

**ஓர் ஆசிரியராக பள்ளிகளில் குமரபருவத்தினரைப் புரிந்துக்கொள்ளுதல் (Understanding the anxiety in school as a teacher and facilitator)**

கற்பித்தல் பிறச்செயல் ஆகியவைகளின் மூலம் மாணவர்களிடம் இடைவினையாற்றும் போது ஆசிரியர்கள் சில பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். மாணவர்களின் செயல்கள், அவர்களின் ஆர்வங்களை கூர்ந்து கவனிக்க வேண்டும். இது அவர்களின் நடத்தைகளை புரிந்துக் கொள்ள உதவியாக இருக்கும். சமூக கலாச்சார மதிப்புகள் சார்ந்த கலந்துரையாடல்களை மாணவர்களிடம் ஊக்குவித்தல் வேண்டும். இளம் குற்றவாளிகள், போதை பழக்கம், பால் சார்ந்த முறைகேடுகள் பற்றி நேர்மறை அனுகுமுறையை மேற்கொள்ளுதல், அறிவுரை கூறுதல், சுய மதிப்பு தீர்வு கொடுத்தலில் கவனமுடன் இருக்க வேண்டும். வாழ்க்கை விருப்பங்களில் உதவுதல் வேண்டும். குறிக்கோள்களை தீர்மானிப்பதில் ஊக்குவிப்பதோடு, அக்குறிக்கோளை அடைவதில் உதவுதல் வேண்டும்.

**வளரிளம் பருவத்தினரிடம் நேர்காணல் அமர்வு அனுகுமுறை (An approach to interviewing adolescents)**

வளரிளம் பருவத்தினர், அவர்களின் சுகாதாரத் தகவல்களை அதிக எண்ணிக்கையிலான மூலங்களிலிருந்து பெறுகின்றனர். இதன்மூலம் சுகாதர அமைப்பாளர்கள் அதிக மதிப்பை

பெறுகின்றனர். எனவே மருத்துவர்கள் வளரிளம்பருவத்தினரிடம் அனுகுமுறை தகவல் தொடர்பு திறன்களை தொடர வேண்டும். வளரிளம்பருவத்திலுள்ள சவால்களில் ஒன்று அவர்களுக்கு ஏற்ற ஆரோக்கியமான வாழ்க்கைப் பாதையை கண்டுபிடிப்பது. உடல் ஆரோக்கியத்தை மதிப்பிடுவதற்கும், கண்டறிவதற்கும் அவசியமான தகவலை பெறவேண்டியது அவசியம். நோயாளிக்கு தகவல் பெறும் முறையில் அவர்கள் சுகாதரப் பிரச்சனைகளை திறம்படச் சமாளிக்க வேண்டும்.

வீடு, கல்வியில், நடவடிக்கைகள், மருந்துகள், பாலியல் பாதுகாப்பு தற்கொலை, நினைவாற்றல் ஆகிய தகவல்கள் வளரிளம் பருவ நோயளிகளிடமிருந்து பெற வேண்டும். இது முக்கியமான தகவல்களை நமக்கு நினைவுபடுத்த மிகவும் பயனள்ளதாக இருக்கம். இந்த அனுகுமுறை பாலுட்டல், மன அழுத்தம், தற்கொலை எண்ணங்கள் போன்ற உணர்ச்சிகரமான திறந்த தவறான கேள்விகளோடு தொடங்குகிறது.

இந்த HEDDSSS (Home Education Ability Drinking/Drugs Sex Safety Suicide) அனுகுமுறை கவலை அல்லது துயரத்தின் வெளிப்பாடுகளை கண்டறிய உதவுகிறது அல்லது பாதுகாப்பற்ற காரணிகள், அல்லது ஆதரவு அமைப்புகளை அடையாளம் காண உதவுகிறது. மேலும், இது வலிமை ஆரோக்கியம் போன்றவைகளை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

சில கெட்ட பழக்கங்கள் தவிர்க்கப்படுவதற்கு கூட வளரிளம் பருவத்தனருக்கு மருத்துவ நிபுணர் முறையான தகவலை வழங்க வேண்டும். வளரிளம் பருவத்தினருக்கு, உதவுவது மருத்துவரின் முக்கியமான பணி ஆகும். மேலும் ஆபத்தான நடத்தைகளை தவிர்த்தல், சிறந்த நலமான வாழ்க்கையை பரிந்துரைத்தல் ஆகும். முடிவெடுத்தல் திறனை ஊக்குவிப்பதே, இந்த அனுகுமுறையில் இறுதிநிலையாகும். வளரிளம் பருவத்தினரின் பிரச்சனைகளை தீர்க்கும் அனுகுமுறைகள் பின்வருமாறு,

**PASTE-Problem, Alternatives ,Select, Try and Evaluate**

**P-**பிரச்சனையை வரையறுத்தல்

**A-**மாற்றுத்தீர்வு, அதன் நன்மை தீமைகளை பட்டியலிடுதல்

**S-**மாற்றுவழியை தேர்ந்தெடுத்தல்

**T-**முயற்சித்தல்

**E-**மதிப்பிடுதல் தேவைக்கேற்ப மாற்றியமைத்தல்.

பெரும்பாலான வளரிளம் பருவத்தினா், அதிக மனஅழுத்தத்தையும், கொந்தளிப்பையும் பெற்றுள்ளனர். இப்பருவத்தினரின், இத்தகைய பிரச்சனைகளை தீர்ப்பது, பிரச்சனையிலிருந்து அவர்களை வெளியேற்றுவது மிக முக்கியமான ஒன்றாகும். வளரிளம் பருவத்தினரின் பலம் துணைச்செயல்கள் பற்றி அறிவது அவசியமாகும். இப்பருவத்தினரின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான உத்திகளை கற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த வெற்றியை பெறலாம்.

**வளரிளம் பருவத்தினா் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சனைகள் (Important problems of adolescents in educational institutions)**

**1. வளரிளம் பருவத்தினரின் கடமை தவறுதல் (Deliquancy in adolescence)**

இப்பருவத்தினர் ஆர்பாட்டம் கொண்டு செயல்படுவதோடு பள்ளி விதிகள், ஆகியவைகளின், கட்டுபாடுகளை பின்பற்றுவதில்லை. இவர்கள் ஆபத்தான சைகளை வெளிப்படுத்துவர். இவர்களின் இத்தகைய செயல்களை பெற்றோரிடமும், ஆசிரியர் கல்வி நிர்வாகத்தினரிடமும் வெளிப்படுத்துவா்.

**பகல்- கனவு (Day - deraming)**

இப்பருவத்தினர் அதிக பகல்கனவு காண்பர். குறிப்பாக, சராசரி அறிவுத்திறனுடையவர்களின் வளரிளம் பருவத்தினரின் பகல்கனவு புதைக்கப்படுகிறது. அவர்களின் பல்வேறுவித பகல்கனவுகள், விருப்பத்திற்கேற்ப அமைகிறது. கனவுகளில் அழகிற்காக அதிக செலவு செய்வது இப்பருவத்தினரே.

**2.குமரப்பருவத்தினர் கல்வியில் பின்தங்கியிருக்கும் நிலை (Scholistic backwardness of adolescence)**

கல்வி என்பது சிறப்பான வாழ்க்கைக்கான ஒரு கருவியாகும். இன்றைய பொதுவான பிரச்சனை என்பது, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது கொண்டுள்ள அளவற்ற எதிர்பார்ப்புகளை குழந்தைகளால் நிறைவு செய்ய முடிவதில்லை. இதற்கு முக்கியக் காரணம், வளரிளம் பருவத்தினா் தங்களுக்குள் புதைத்து கிடக்கும் திறமைகளை பயன்படுத்தாமல் இருப்பதே ஆகும். வளரிளம் பருவத்தினரிடம் அறிவார்ந்த பின்னடைவு கீழ்கண்ட விதங்களில் காணப்படுகிறது.

1.கொடுக்கப்பட்ட செயல்பாடுகளை தங்களது திறமைக்கு ஏற்ப செய்யாதிருத்தல்.

2.குறிப்பிட்ட பாடத்திட்டத்தை பின்பற்ற சிரமப்படுவர்.

3.பிற செயல்பாட்டின் குறுக்கீட்டால் படிப்பில் நாட்டம் இன்றி இருப்பார்.

**3.கேலி-கிண்டல் (Ragging)**

ஆங்கிலத்தில் “Ragging” என்ற சொல் கேலி, கிண்டல், நகைச்சுவை என தமிழில் பொருள்படும். இச்செயல்பாடு கல்லூரி காலங்களில் வளரிளம் பருவத்தினரால் நிகழ்த்தப்படுவது ஆகும். கல்லூரியில் பயிலும் பழைய மாணவர்கள் புதிதாக வரும் மாணவர்களிடம் மேற்கொள்ளும் கேலி, கிண்டல்களே இவ்வாறு அழைக்கப்படுகிறது. இது மாணவர்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்க உதவுகிறது. மாணவர்களின் நல்லுறவு என்பது கல்லூரி நிர்வாகத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும். இருப்பினும் இத்தகைய கேலி-கிண்டல்கள் நன்மை பயப்பதைவிட தீமை பயப்பதாகவே உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பாக நன்மையை மட்டுமே தருவதாக இருந்த இச்செயல்பாடுகள் தற்போது மாணவர்களுக்கு தீமை பயக்கும் கொடூரச் செயலாக மாறிவருகிறது. சில நேரங்களில் இவை மாணவர்களிடம் பாலியல் தொல்லை, தற்கொலை போன்ற வெறிச்செயல்களை துாண்டுவதாக அமைந்துவிடுகிறது.

**4. தேர்வு பயம் (Exam Anxiety)**

தேர்வு பயம் என்பது இயற்கையாக, உலக மக்கள் அனைவரிடமும் காணப்படக்கூடிய ஒன்று ஆகும். தேர்வு பயம் மாணவர்களை விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற பிற செயல்பாடுகளில்

ஈடுப்படுவதைத் தவிர்த்து, படிப்பில் கவனம் செலுத்த தூண்டுகிறது. இதற்காகவே ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களை தேர்வைக் காட்டி பயமுறுத்துகின்றனர். ஆனால், இத்தகைய பயமானது, மாணவர்களின் கல்வி அடைவை பாதிக்கிறது. அதாவது பயத்தின் காரணமாக காய்ச்சல், வாந்தி, தலைவலி, மயக்கம், உதறல், சுவாச கோளாறு போன்ற உடல்நலக் கேடுகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக, மாணவர்கள் தாங்கள் படித்தவற்றை நினைவில் கொள்ள இயலாது, தேர்வு எழுத முடியாமல் போகிறது.

### 5.தற்பெருமை-தாழ்வு மனப்பான்மை (Self-pride and Inferiority complex)

தற்பெருமை என்பது தன்னம்பிக்கையை தோற்றுவித்து, பிரச்சனைகளை எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்க்க உதவுகிறது. இதன் மூலம் ஒப்படைப்புகளை சிறப்பாக செய்து முடிக்க முடியும். ஆனால், உலகில் பெரும்பான்மையானோரிடம் சுய பெருமை என்பது நிலைபெற்றுள்ளது. ஒருவரின் தாழ்வு மனப்பான்மையானது, அவரது முன்னேத்திற்கும், வெற்றிக்கும் தடையாக அமைந்துவிடுகிறது.

### 6. வளரிளம் பருவத்தினரின் அடையாள நெருக்கடி (Teenage identity crisis)

வளரிளம் பருவம் என்பது பிரச்சனைகள் நிறைந்த பருவமாக காணப்படுகிறது. வளரிளம் பருவத்தினா் எப்போதும் தன்னைப்பற்றிய குழப்பத்திலேயே இருப்பார். தங்களை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும், சுதந்திரமாக செயலாற்ற வேண்டும் என விரும்புவர். இதனாலேயே, தனது பெற்றோர், மூத்தோர் கட்டுப்பாடுகளில் இருந்து விலக முயற்ச்சிப்பர். தன் வயதை ஒத்த, ஒப்பார் குழுவிடம் அதிக அன்பும், நம்பிக்கையும் கொண்டிருப்பர்.

### 7. வளரிளம் பருவத்தினரின் தற்கொலைகள் (Adolescent suicide)

வளரிளம் பருவத்தினரின் தற்கொலைகள் பல நாடுகளில் அதிகளவு காணப்படுகிறது.. பள்ளி தேர்வில் தோல்வி அடைதல், பெற்றோர் குழப்பத்தினால் தனிமைபடுத்தப்படுவது, காதல் தோல்வி, தந்தை குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல், தன்னம்பிக்கை குறைவு, பிறர் முன்னிலையில் கடினமான வார்த்தைகளை பயன்படுத்துதல் கண்டித்தல், தவறாக நடத்துதல் ஆகியவை வளரிளம் பருவத்தினரிடம் தற்கொலை அதிகரிக்க காரணமாகின்றன.

### 8.வளரிளம் பருவத்தினரின் மன உளைச்சல் (Adolescence depression)

வளரிளம் பருவத்தினரிடம் விரைவான உடல் வளர்ச்சி ஏற்பட்டு தங்களைப் பற்றிய மன குழப்பத்திற்கு ஆளாகின்றனா். அவா்களின் உடலில் தோன்றும் மாற்றம் அச்சத்தையும், கவலையும் அளிக்கிறது. சுயமாக செயல்படவும், சமூக அங்கீகாரம் பெறவும் அதிக ஈடுபாடு கொண்டிருப்பர்.

### 9.போதைப்பொருள் சார்ந்த பிரச்சனைகள் (Substance related problem)

தங்களின் உணர்ச்சிகளை கட்டுபடுத்த முடியாமல் செயல்படுவோர், அதிகளவு போதைக்கு அடிமையாகி விடுகின்றனா். இந்த பருவத்தில், முக்கியமான பிரச்சனையான போதைக்கு அடிமையாதல், புகை பிடித்தல், குடிப்பழக்கம் அதிகரிக்கிறது.

### போதைக்கு அடிமையாதல் (Drug addiction)

இன்றைய காலகட்டத்தில், குடிபழக்கம் அதிகரித்து காணப்படுகிறது. குடித்தல், புகைபிடித்தல், தவிர போதை பொருட்களான கஞ்சா, கொக்கைன், கெராய்ன் பயன்படுத்துபவரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

### மதுப்பழக்கம் (Alcohol)

மதுப்பழக்கம் மனம், உடல், சமூக மதிப்புகளை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. மது அருந்துதல் தனிநபரை பாதிப்பதோடு மட்டுமல்லாமல் அவரை சார்ந்தோரையும் பாதிப்படையச் செய்கிறது. இதனால் மூளை பாதிக்கப்பட்டு சுயசிந்தனை இழந்து விடுகிறார்கள். குடிப்பது என்பது வளரிளம் பருவத்தினரிடம் ஒரு பழக்கமாக மாறி விட்டது. இந்த புதிய கலாச்சாரம் பல தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது.

### புகைபிடித்தல் (Smoking)

புகைப்பிடித்தல் என்பது மிக வேகமாக போதை தரும் முறையாகும். புகைப்பிடிக்கும் போது நுரையீரலானது பாதிப்படைகிறது. வளரிளம் பருவத்தினா் தங்களை வளர்ந்தவா்களாக காட்டிக் கொள்வதற்காக புகைப்பிடித்தலை ஒரு பழக்கமாக கொண்டுள்ளனா்.

### வளரிளம் பருவத்தினற்கு வழிகாட்டுதல் தேவை (Guidance needed for adolescence)

வழிகாட்டுதல் தனிநபரின் முன்னேற்றத்திற்கு துணை புரிகிறது. தன்னை பற்றிய தெளிவு, தன் குழப்பத்தினை புரிந்து தீர்வு காணவும் ஒருவரின் உதவி தேவையாக உள்ளது. வழி காட்டுபவர் ஒருவா் பிரச்சனையை சுயமுடிவுடன் கையாள கற்று கொடுக்க வேண்டும். தனியாள் நல்ல புரிதல், பண்பு நலன்கள், முடிக்கும் திறன், வாய்ப்புகள், மதிப்புகளை ஏற்படுத்துகிறது. புதிய முயற்சி, தொழில் முன்னேற்றம், கல்வி, சமூக நன்னெறி, உடல் பற்றிய பிரச்சனைகளுக்கு வழிகாட்டுதல் அவசியம்.

### வழிகாட்டுதலின் நோக்கங்கள் (Objectives of guidance)

- மாணவரின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஏற்பட உதவி செய்ய வேண்டும்.
- கல்வியில் சிறந்த துறையை தேர்ந்தெடுக்க உதவி செய்ய வேண்டும்.
- எதிர்காலம் பற்றிய தெளிவையும், தொழில் சார்ந்த அறிவையும் வழங்க வேண்டும்.
- மாணவர்கள் பள்ளியையும், வீட்டு சூழல் போன்று கருத வேண்டும்.
- வீட்டுச் சூழல் சாா்ந்து வழிகாட்டல் வேண்டும்.
- மாணவர்களிடம் குறைகளை கண்டறிந்து முன்னேற்றம் ஏற்படச் செய்ய வேண்டும்.
- மனதில் உள்ள தேவையற்றவற்றை நீக்க வேண்டும்.
- தேவை உடையோா் சிறப்பு தேவை உடையோருக்கு, வகுப்பு நேரம் அல்லாமல் மற்ற நேரத்தையும் செலவிட வேண்டும்.
- பள்ளியை நிர்வகிக்கும் திறமை அதிகரிக்க வேண்டும்.
- இடைநிலை (ம) உயர்நிலை கல்வியை சிறப்படைய செய்ய வேண்டும்.
- மாணவர்களின் தவறாக செயல்களை குறைக்க வேண்டும்.

**வளரிளம் பருவத்தினருக்கான வழிகாட்டுதல் சேவை (guidance service to the adolescence)**

மாணவர்கள் தங்கள் இலக்குகளை அடைவதற்கு கீழ்க்கண்ட வழிக்காட்டு மையங்கள், பள்ளிகள் கல்லூரிகள் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றன.

**1.சேர்க்கைக்கு முன்பான வழிகாட்டல் (The pre-admission service)**

மேல்நிலைக் கல்வியை முடிக்கும் மாணவர்கள், உயர்கல்வியைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிக்காட்டுதல் இன்றியமையாததாகுகின்றன. வழிகாட்டுதல் மையம் வேலைவாய்ப்புத் தகவல்களையும், பல்கலைகழக வேலைவாய்ப்பு தகவல்களையும் இணைத்து வழங்குகின்றன.

**2.சேர்க்கைக்கான வழிகாட்டுதல் (The admission service)**

இது ஒரு நபருக்கு ஏற்ற துறையை தேர்ந்கெடுக்கவும், அவற்றின் மூலம் தனிமனித வளர்ச்சி (ம) சமூக வளர்ச்சி பெறவும் உதவுகின்றன. இந்த சேவையின் மூலம் ஒரு துறையில் தேர்ச்சி பெறாமல் தோல்வியுறுதல் ̇ (ம) வெளியேற்றப்படுதலின் எண்ணிக்கையை குறைக்கிறது

**3. புத்தாக்க வழிகாட்டுதல் (The orientation service)**

புத்தாக்க சேவை என்பது வழிக்காட்டுதல் மையத்தின் தொடர்ச்சியான சேவையாக உள்ளது. இம்மையம் விதிமுறைகளையும், தேவைகளையும் போதுமான அளவு கொடுக்கின்றது. இது மாணவர்களுக்கு படிக்கும் திறனையும், நூலகம் தொடர்பான செய்திகளையும், புதிய கொள்கைகளையும் ஏற்படுத்தும் வகையில் அமைகின்றது.

**4.மாணவர் தகவல் சேவை (The student information service)**

மாணவர் தகவல் சேவை என்பது அவர்களிடமுள்ள திறன், ஆளுமை பண்புகள், சாதிப்பதற்கான பாடம், செயல், ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை கொடுக்கின்றது. இதன் மூலம் மாணவர்கள் தங்களைப் பற்றிய மனப்பான்மையை உணர இயலும். இது மாணவர்களின் முன்னேற்றத்தில் முக்கியப்பங்கு வகிக்கின்றது.

**5.தகவல் சேவை (Information service)**

இம்மையம் மாணவர்களின் வளர்ச்சி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை உருவாக்குகின்றது. இம்மையத்தின் மூலம் குழு வழிக்காட்டுதல், கல்வி தொடர்பான கருத்தரங்கு, கலந்துரையாடல், தனியாள் நேர்க்காணல் போன்றவை மாணவர்களுக்கு உதவியாக உள்ளது.

**6.ஆலோசனை சேவை (Counseling service)**

இச்சேவை மையம் ஆலோசனை வழங்குபவருக்கும், பெறக்கூடிய மாணவருக்கும் இடையே இடைவினையை ஏற்படுத்துகின்றது. இதன்மூலம் கல்வி, வேலைவாய்ப்பு தொடர்பான வழிக்காட்டுதல்களை அளிக்கின்றது.

**7.வேலைவாய்ப்பு தொடர்பான சேவை (Placement service)**

ஒரு பணியை (அ) பள்ளியை தேர்தெடுக்கவும், கல்வித்துணைச் செயல்கள், தொழில் தொடர்பான செயல்களைச் செய்யவும், சூழ்நிலைத் தொடர்பான சேவை மிக முக்கியப் பங்கு

வகிக்கிறது. இந்த சேவை மாணவர்கள் பகுதி நேர வேலை செய்யவும், விடுமுறை நாட்களில் வேலை செய்யவும் உதவுகிறது.

**8.பரிந்துரைச் சேவை (Referral service)**

வழிக்காட்டுபவர், மாணவரின் தனிப்பட்ட பிரச்சனையை தீர்ப்பதற்கு, இச்சேவைமையத்தைப் பயன்படுத்துகிறார். இதன் மூலம் வழிக்காட்டுபவர்க்கும், மாணவருக்கும் இடையேயான பணி சார்ந்த உறவுமுறை அதிகரிக்கின்றது.

**9.தீர்வுக்கான சேவை (Remedial services)**

மாணவர்கள் பல்வகை திறன்களான பேச்சுத் திறன், கற்கும் திறன், படிக்கும் திறன்களைக் கொண்டிருப்பார். இத்தகைய மாணவர்களுக்கு உதவி செய்வதே தீர்வுக்கான சேவையின் முக்கிய நோக்கமாகும்.

**10.பின்தொடர் சேவை (The follow-up service)**

மாணவர்களின் பொதுவான மாறுபட்ட தேவைகளை மதிப்பீடுச் செய்ய பின்தொடர் சேவைப் பயன்படுக்கின்றது. இவை மூன்று வகையகச் செயல்படுகிறது. அவை நேர்க்காணல், மின்னஞ்சல், கேள்விகேட்டல். இதன்மூலம் பெறப்பட்ட தகவல்கள் கலைத்திட்டத்தை மேம்படுத்தவும், கற்பித்தல் திறனை மேம்படுத்தவும் உதவுகின்றது.

**11.ஆராய்ச்சி சேவை (Research service)**

இந்த சேவை வழிக்காட்டுதலில் மிக முக்கியச் சேவையாகும். இது மாணவர்கள் புரிந்துக் கொள்ளவும், பள்ளி வளங்களை அறியவும், மாணவர்கள் சாதனை படைக்கவும் உதவுகிறது. ஆசிரியர் சிறந்த உளவியல் பண்பினைப் பெறவும் உதவுகிறது. இச்சேவை அடிப்படை வழிக்காட்டுதல் சேவைக்கு உதவுகிறது.

**மதீப்பீடு சேவை (The evaluation service)**

மதிப்பீட்டு சேவை என்பது ஒரு முழுமையான தொடர் சேவை ஆகும். தொடக்கம் முதல் வழிகாட்டுதலானது ஒரு நிகழ்வாகும். இந்த சேவையானது தகவல்களையும், செயல்களையும், தேவையான நேரம், பணம், தனியாள் போன்ற தேவைகளை நிறைவு செய்கின்றன.

**வளரிளம் பருவத்தினரின் முன்னேற்றங்கள் (Development in adolescence)**

வளரிளம் பருவம், மனித வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையான இடத்தை பிடித்துள்ளது. தனியாளின் உடல், மனம், சமூக மதிப்புகளை மற்றவர் பார்வையில் இருந்து மதிப்பு மாற்றங்களாகக் கொண்டுள்ளது. இந்த மாற்றங்கள் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்பருவ நிகழ்வாக குறுகி விடுகிறது. இது பல்வேறு பரிமாணங்களை தனியாள் வளர்ச்சியின் மூலமாக ஏற்படுகிறது.

**உடல் முன்னேற்றம் (Physical development)**

வளரிளம் பருவ நிகழ்வானது, பல்வேறு உடல் மாற்றங்களை உள்ளடக்கியது. இதில் உடல் வளர்ச்சியானது மாற்றமடைகிறது. முதல், இரண்டாம் நிலை பால் வளர்ச்சி ஏற்படுகிறது. உடல் வளர்ச்சியானது, உளவியல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. திடீரென ஏற்பட்ட தனிபட்ட வளர்ச்சியானது,

இருபால் ஆண் பெண் (பெண்=10/11) (ஆண்=12/13) ஆண், பெண் உயரமானது அதிகரிக்கும். பெண்கள் ஆண்களை விட உயரமாக காட்சியளிப்பர். பெண்கள் சராசரி உயரத்தினை அடைவர். ஆண் (ம) பெண் தனித்தனி பால் பற்றிய தெளிவான அறிவினை பெற்றிருப்பார்.

**அறிவுசார் முன்னேற்றம் (Cognitive development)**

அறிவுசார் திறன்களான சிந்தித்தல், நினைவு, பொதுமைபடுத்துதல், கருத்துகளையும் சிக்கல்களையும் சிந்தித்து அறியும் திறன், சமூக முன்னேற்றம் ஏற்பட ஆலோசித்தல் போன்ற பல முன்னேற்றங்கள் ஏற்பட வழிசெய்யும். நீண்ட கால நினைவுத் திறனும், தெளிவான அறிவின் பழமையான முறையும், தெளிவான அறிவின் வழியே பிரச்சனைக்கு உரிய தீர்வினை கண்டறியும் திறன், பன்னாட்டு பிரச்சனையை தீர்க்கும் ஆற்றல், சாலை தேநீர் விடுதிக் கடைகளில் விளம்பர பலகை பற்றிய ஆர்வம் வளரிளம் பருவத்தில் அதிகரித்து காணப்படும். ஒரு உண்மையை ஆராய்வதற்கு, அதை பற்றிய அறிவில் முன்னேற்றம் ஏற்பட பொதுமைபடுத்தி சிறந்த வழியை புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். வளரும் குழந்தைகளின், சிந்தனையானது சிக்கல் நிறைந்தது. பிரச்சனைகளை வரிசைபடுத்தி மாற்றம், முன்னேற்றம் ஏற்பட சிந்தனை செய்யும்.

**ஓழுக்க வளர்ச்சி (Moral development)**

உறுதியான ஒழுக்க வளர்ச்சியானது, முதன் முறையாக வளரிளம் பருவத்தில் ஏற்படுகிறது. இந்த நிலையில் தனி மனித ஆளுமை, புதிய சிந்தனை, சுய கட்டுபாட்டுடன் பல்வேறு வளரிளம் பருவத்தினா் பிறருடைய தவறுகளிலிருந்து தன்னுடைய தவறுகளை திருத்திகொள்வர். பிறரின் குற்றங்களை பெரிதுபடுத்துவதில்லை.

**சமூக முன்னேற்றம் (Social development)**

எரிக்சன் என்பவரின் வரையறைப்படி, குழந்தை பருவத்திலிருந்து வளரிளம் பருவத்தில், உடல், உள முன்னேற்றமானது தன் கையில் இருந்து மற்றொரு கைக்கு மாற்றுவது போல அமையும் முறையாகும். மேலும் இது தனிச்சிறப்புடன் அமைதியான முறையில், சூழ்நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் நிகழ்வாகும். இதன் மூலம் புதிய சிந்தனைகளையும், சமூக உணர்ச்சிகளையும், மதிப்புகளையும் பெற்றுக் கொள்ளமுடியும். எரிக்சனின் கூற்றுபடி, இது ஒற்றுமையுணர்வுடன் சூழ்நிலையோடு இணைந்து செயல்பட வைக்கிறது. சக குழு, சமூக மாற்றம், சமூக குழு, புதிய நட்பு வட்டாரம், புதிய மதிப்புகளையும் தலைசிறந்த தலைவனை தேர்தெடுக்கும் ஆற்றலை பெற்றுக் கொள்ளவர். குழுக்களை வழிநடத்தி செல்ல நட்புணர்வுடன் செயல்படுவா்.

**மனவெழுச்சி வளர்ச்சி (Emotional development)**

இந்த கால கட்டத்தில் பல்வேறு சூழ்நிலைகளை கட்டுப்படுத்தி, சமூக மதிப்புகளை பெற வேண்டும். தனித்தன்மை வாய்ந்த பால் வேறுபாடு அல்லாத ஆண், பெண் பாகுபாடு குறைய வேண்டும். உணர்ச்சிகளை மெதுவாகவும், இயல்பாகவும் கட்டுபடுத்த வேண்டும். மன எண்ணங்களை உள்வாங்கி கொண்டு தெளிவான எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். பெரியோர்களின் ஆலோசனைளையும், முடிவுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)**

1.வளரிளம் பருவத்தினரின் பண்புநலன்களை கூறுக.

Mention the characteristics of adolescence.

2.கல்வி நிறுவனங்களில் வளரிளம் பருவத்தினருக்கான முக்கிய பிரச்சணைகள் யாவை?

What are the important problems of adolescence in educational institutions?

3.வளரிளம் பருவத்தினரின் வளர்ச்சி என்பது யாது?

What are the developments in adolescence?

4.வளரிளம் பருவத்தினருக்கான வழிகாட்டுதல், சேவைகள் என்றால் என்ன?

What are the guidance and services to the adolescences?

## அலகு – VIII

## விளையாட்டும் குழந்தையின் வளர்ச்சியும்

## (Play and Child Development)

**நோக்கங்கள் (Objectives)**

இந்த அலகு முடியும் தருவாயில், கற்போர்:

1) விளையாட்டின் பண்புகளைப் பற்றி விளக்கமுடியும்.
2) சமூக பங்கேற்றலின் வகைகளை புரிந்து கொள்ள முடியும்.
3) விளையாட்டின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைக்க முடியும்.
4) விளையாட்டின் செயல்முறைகளைப் பற்றி புரிந்துக்கெள்ள முடியும்.

**முன்னுரை (Introduction)**

விளையாட்டு ஒரு குழந்தையின் தனிப்பட்ட, சமுதாய ஒத்துழைப்பை பெற உதவுகிறது. குழந்தை வளர்ப்பில் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து இன்று அது சார்ந்து பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். விளையாட்டு என்பது நேரத்தை வீணடிப்பது என்பதிலிருந்து மாறி மதிப்புமிக்க கற்றல் அனுபவத்தை வழங்குவதே என அறிவியல் ஆய்வுகள் நிருபித்துள்ளது.

விளையாட்டு என்பது குழந்தைகளின் இயற்கையான, தொடச்சியான செயலாகும். விளையாட்டை வரையறுக்க மூன்று காரணங்கள் உள்ளன. அவை,

1) தேர்தெடுத்தலில் சுதந்திரம்.
2) தனிப்பட்ட மகிழ்ச்சி.
3) விளையாட்டே ஒரு செயல்.

குழந்தையின் இயல்பான செயலே விளையாட்டாகும். குழந்தையின் தொழிலே விளையாட்டுதான். விளையாட்டு என்பது குழந்தையை வளர்த்தல், முன்னேற்றுதல் கற்றலை அளவிட உதவுகிறது.

**விளையாட்டு (Play)**

குழந்தையின் சிறந்த முன்னேற்றத்திற்க் விளையாட்டு கட்டாயத் தேவையாக உள்ளது. மூளையின் 75% வளர்ச்சி குழந்தை பிறப்பிற்கு பின்பே நிகழ்கிறது. மூளையின் வளர்ச்சியில் விளையாட்டு, நரம்பு செல்களை இணைப்பதற்கு உதவுகிறது. விளையாட்டு செயல்கள் பல்வேறு திறன்களை வளர்க்க உதவுகிறது. (எ.கா) ஒரு குழந்தை தன்னுடைய கைகளால் பென்சில் அல்லது வண்ணப் பென்சிலை பிடிக்கும் திறன். குதித்தல், ஓடுதல் போன்ற விளையாட்டுகள் குழந்தைகளின் மொழி, சமூக திறன்களை வளர்க்கிறது. விளையாட்டு, குழந்தைகளின் உணர்ச்சி, சிந்தனை, கண்டுபிடித்தல், பிரச்சனையை தீர்த்தல் போன்றவற்றை கற்க உதவுகிறது

**கருத்து (Concept)**

குழந்தையின் சிறந்த வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு விளையாட்டு மிக முக்கியமானது. விளையாட்டு என்பது குழந்தைகள் தங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ளவும், தங்களை சுற்றுயுள்ளவர்களை பற்றி அறியவும், தன்னுடைய சமுதாயத்தை பற்றி அறிந்து கொள்ளவும் உதவுகிறது.

விளையாடுவதன் மூலம் குழந்தைகள் உணர்வுகளை ஒலியின் மூலமோ, சுவையின் மூலமோ, தொடுதல் மூலமோ, பெறுகின்றனர். விளையாட்டின் மூலம் மன அழுத்தம் குறைகிறது.

**பொருள் (Meaning)**

'மன மகிழ்ச்சிக்காக குழந்தைகள் மேற்கொள்ளும் செயலே விளையாட்டு' ஆகும் . எனவே எவ்வித விளைபயனும் எதிர்பார்க்கப்படுவதில்லை.

**வரையறை (Definition)**

பெத்தெலஹேம் என்பவர், ''விளையாட்டு என்பதற்கு குறிப்பிட்ட விதிமுறைகள் ஏதும் இல்லை. அப்படி இருப்பின் அவ்விதிமுறைகள் விளையாடுவோரால் உருவாக்கப்படுவதாகும். மேலும் விளையாட்டின் விளைபயன் என்பது புறவயத்தன்மையுடையது", என்று வரையறுக்கிறார்.

**விளையாட்டின் இயல்புகள் (Charateristics of Play)**

விளையாட்டின் வரையறையிலிருந்து கீழ்க்கண்டவைகள் அதன் இயல்புகளாக அறியப்படுகிறது.

1) குழந்தையால் தானே தேர்ந்தெடுக்கப்படுவது.
2) அகவயப்படுவது, தன்னாலேயே இயக்கப்படுவது.
3) மனம் வகுக்கும் விதிகளின்படி செயல்படுவது.
4) கற்பனை வயப்பட்டது.
5) செயல்படுவதும், விழிப்புணர்வுடையதும், மன அழுத்தத்தை ஏற்படுத்தாத செயல்களைக் கொண்டு நடைபெறுவதும் ஆகும்.

**விளையாட்டின் செயல்பாடுகள் (Functions of Play)**

1. உலக அறிவை பெற முற்படுதல்.
2. சமூக, கலாச்சார புரிதலை விரிவுபடுத்துதல்.
3. சுய எண்ணங்கள், உணர்வுகளை வெளிப்படுத்துதல்.
4. நெகிழ்வு மனப்பான்மைக்கு பயிற்சிப்படுத்துதல்.
5. உண்மையான பிரிச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.
6. பிறரது எண்ணங்களை புரிந்துக்கொள்ள கற்றல்.
7. சுய கட்டுப்பாட்டை திட்டமிடுதல, மேம்படுத்துதல்.
8. மொழி, கல்வியறிவை விரிவுபடுத்துதல்.
9. அறிவு மேம்பாட்டை உயர்த்துதல்.

**விளையாட்டின் வகைகள் (Types of Play)**

குழந்தையின் வளர்ச்சி, முன்னேற்றத்தில் விளையாட்டு முக்கியப்பங்கு வகிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட வகை விளையாட்டு, ஒரு குறிப்பிட்ட வயதினருக்கு மட்டுமே என்ற வரம்பு இல்லை.

**1.குழந்தைகள் விளையாட்டாகச் செய்திடும் செயல்கள் (Unoccupied play)**

இது விளையாட்டின் ஆரம்ப நிலையிலிருந்து, பிறந்து மூன்று மாதம் வரையிலான குழந்தை கை-கால்களை அசைத்தல், கண் சிமிட்டுதல், காலால் உதைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவது ஆகும். இந்நிலையில் குழந்தை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தையோ அல்லது குறிக்கோளையோ கொண்டு விளையாடுவதில்லை.

**2. தனித்து விளையாடுதல் (Solitary play)**

3 முதல் 18 மாதம் வரையிலான குழந்தைகள் தனித்து விளையாடுவதிலேயே அதிக ஆர்வம் காட்டுவர். இக்குழந்தைகள் தமக்கு அருகில் அமர்ந்திருப்பவர் யார்? என்று அறிவதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள் அவர்களது கையிலிருக்கும் பொருளின் மீதே முழுக்கவனத்தையும் செலுத்துவர்.

**3. பார்வையாளராக செயல்படும் விளையாட்டு (Onlooker play)**

இவ்வகை விளையாட்டு குழவிப்பருவம் முதல் முனபள்ளிப்பருவம் வரை நீடிக்கக்கூடியது. குழந்தைகள் பார்வையாளாராக செயல்பட்டு விளையாட்டிற்கான விதிமுறைகள், சொல்வளம் மூலம் செயல்பட்டு விளையாட்டிற்கான விதிமுறைகளை அறிந்துக் கொள்கின்றனர். மேலும் விளையாட்டு தொடர்பான கேள்விகளை எழுப்புகின்றனர். ஆனால் விளையாட்டில் கலந்து கொள்வதில்லை.

**4.இணையாக விளையாடுதல் (Parallel play)**

இவ்விளையாட்டு 18வது மாதம் முதல் 2 வயது வரை நீடிக்கக் கூடியது. இம்முறையில் குழந்தைகள் தனித்து விளையாடுவதில்லை. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இணைந்து விளையாடுவதால் இணையாக விளையாடுதல் என்றழைக்கப்படுகிறது. இம்முறையில் குழந்தைகள் தன்னுடைய பொருள் எது என்பதை உணரும் திறன் பெற்றிருக்கும். மற்ற குழந்தைகளுக்கு உதவி செய்யும் திறனையும் பெற்றிருக்கும்.

**5. உடன் பழகுமுறை விளையாட்டு (Associative play)**

இவ்விளையாட்டு முறையில் குழந்தைகள் செய்ய வேண்டியது, செய்யக்கூடாதது போன்றவற்றை கற்றுக்கொள்ள முடியும. மேலும் பகிர்ந்தளித்தல், குழுவாக செயல்படுதல் ஆகிய செயல்களையும் கற்றுக் கொள்ள முடியும். மேலும், இது மொழி வளர்ச்சியை மேம்படுத்துதல், பிரச்சனையை தீர்த்தல் போன்றவற்றையும் கற்றுத்தருகிறது. இம்முறையால் ஒரு குழுவாக உள்ள குழந்தைகள் ஒரே மாதிரியான இலக்கைக் கொண்டிருப்பர். ஆனால், இவர்கள் விதிமுறைகளை கொண்டிருப்பதில்லை.

**6. சமூக விளையாட்டு (Social play)**

இம்முறையிலான விளையாட்டு 3-வயது முதல் தொடங்குகிறது. இவ்வயதிலான குழந்தைகள் சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களுடன் சேர்ந்து வாழவும், உரையாடவும், விளையாடவும் கற்றுக்கொள்கின்றனர். மேலும் இவர்கள் சமூக விதிமுறைகளான பகிர்ந்தளித்தல், இணைந்து செயல்படுதல் போன்ற செயல்களைக் கற்றுக் கொள்கின்றனர். சமூக செயல்களுக்கான காரணத்தையும், அதன் மதிப்புகளையும் அறிந்துக் கொள்கின்றனர். பல்வேறு விதமான சமூகச் சூழலில் வாழ்வதற்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்கின்றனர்.

**7. புலன் - இயக்க விளையாட்டு (Motor-physical play)**

குதித்தல், ஓடுதல் போன்ற விளையாட்டுகள் குழந்தைகளின் உடல்வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதனால் குழந்தைகளின் உடல்தசைகள் வலிமையடைகின்றன. இதன் காரணமாக குழந்தைகள் வெற்றி-தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை பெறுகின்றனர்.

**8. ஆக்கமுறைகள் அமைந்த விளையாட்டு (Constructive play)**

இம்முறை விளையாட்டு குழந்தைகள் பொருட்களின் உதிரிபாகங்களைக் கொண்டு முழுமையான உருவத்தை உண்டாக்குதல், மணல் வீடு, மணல் சிற்பம் போன்றவற்றை உருவாக்குதல், பாலங்களுக்குகிடையே சாலைகள் அமைத்தல், ஐஸ் புருட் குச்சிகளை கொண்டு வீடு அமைத்தல், தெர்மோகோல் அட்டையில் வீடு அமைத்தல் போன்ற பல்வேறு வடிவங்களை உருவாக்குதல் போன்ற விளையாட்டுகள் அடங்கும். இவ்வகையில் உருவாக்கப்படும் பொருட்கள் நிலையற்றவை. எனவே இவ்வாறு பயன்படுத்தப்படும் பொருட்கள் அன்றாட பயன்பாட்டுக்கு உதவாதவை என்பது குழந்தைக்குத் தெரியும்.

**9. உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் விளையாட்டு (Expressive play)**

ஒரு சில விளையாட்டுகள் குழந்தைகளின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. கலர் பென்சில், மெழுகினாலான வண்ணக்குச்சிகள், களிமண், ஒத்திசைவு நயம் கொண்ட ஒலி எழுப்பும் கருவிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி, விளையாடுவதன் மூலம் தங்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றனர். பெற்றோர்களும் இவ்வகை விளையாட்டுகளில் குழந்தைகளுடன் ஈடுபடலாம்.

**10. கலாச்சார விளையாட்டு (Cultural play)**

இம்முறையில் குழந்தைகள் புதிய மொழி சார்ந்த, கலாச்சாரம் சார்ந்த பண்புகளையும், சூழ்நிலைகளையும் கற்றுக்கொள்கின்றனர். குழந்தைகள் தங்களுடைய வளர்ச்சிக்கு அப்பாற்பட்டு சிந்திக்கவும், செயல்படவும் கற்றுக்கொள்கின்றனர்.

இதன்மூலம் குழந்தைகளின் கற்பனைத்திறன் வளர்கின்றது. மேலும் தங்களுடைய கருத்துக்களையும், கனவுகளையும், வரலாறுகளையும் வெளிப்படுத்த புதிய வார்த்தைகளையும், எண்களையும் வெளிப்படுத்துகின்றனர்.

**11. கூட்டுறவு விளையாட்டு (Co-operative play)**

இவ்வகை விளையாட்டுகளில் குழந்தைகள், ஒரு குழுவாக இயங்கி, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதைக் காணமுடியும். இக்குழுவில் ஒருவர் தலைவராக செயல்படுவார். இவர்கள் தாமாகவே விளையாட்டுக்கான விதிமுறைகளை உருவாக்கிக் கொள்வர். கூட்டுறவு முறை விளையாட்டுகள், சமூகத் திறன்களை வளர்க்கும் வல்லமை பெற்றவை. இவ்வகை விளையாட்டு குழந்தைகள், வாழ்க்கை விதிமுறைகளை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கின்றது.

**விளையாட்டு பற்றிய பியாஜேவின் கருத்து (Piaget's thoughts on play)**

1. ஆக்கபூர்வமான விளையாட்டு.

2. குறியீட்டு விளையாட்டு.

3. நோக்கத்துடன் கூடிய விளையாட்டு.

4. சமூக நாடக விளையாட்டு.

5. சமூக அம்சம் சார்ந்த விளையாட்டு.

6. பாசாங்கு விளையாட்டு.

7. சமூக விளையாட்டு.

**1. ஆக்கபூர்வமான விளையாட்டு (Constructive play)**

இவ்வகை விளையாட்டு மகிழ்ச்சி தருவதாகவும், வருங்கால வாழ்விற்கு உதவும் வகையில் திறன்களை வளர்க்கும் விதமாக அமைக்கின்றன. (எ.கா.) தெரு கிரிக்கெட், கும்மி, கோலாட்டம்.

**2.குறியீட்டு விளையாட்டு (Symbolic play)**

2 முதல் 3 வயதிக்குட்பட்ட குழந்தைகள், சில விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தவோ, மாற்றி அமைத்துக் கொள்ளவோ முயற்சிக்கும். (எ.கா.) தனது பெற்றோரால் தண்டிக்கப்படும் குழந்தை, தனது பொம்மைகளை அடித்து, உதைத்து தனது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடும். மாறாக, சில குழந்தைகள் தனது பொம்மைகளை அரவணைத்து அன்பைப் பொழியக் கூடும். இவ்வாறு தமது விளையாட்டுச் செயல்கள் மூலம் தனது நிலையை குறியீடாக வெளிப்படுத்தக் கூடும்.

**3. நோக்கத்துடன் கூடிய விளையாட்டு (Purposive play)**

10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு, இவ்வகையான விளையாட்டுகளை கையாளுகின்றனர்.

**4. சமூக நாடக விளையாட்டு (Play in social aspect)**

இவை தன்னியல்பாக நிகழ்வதாகவோ அல்லது வழிகாட்டுதலுடன் கூடியதாகவோ, இருத்தல் கூடும். மேலும் தமக்கும் ஏற்படக்கூடும் என கருதி நிகழ்வுகளை குழந்தைகள் நடித்தும் காட்டக்கூடும்.

**5. சமூக அம்சம் சார்ந்த விளையாட்டு (Social play)**

குழந்தைகள் தாங்களாகவே பொருட்களை கையாண்டு அவற்றை பற்றி நன்கு அறிந்திட தவறு செய்தல். (எ.கா.) விட்டுக் கொடுத்தல், உதவி செய்தல்.

**6. பாசாங்கு விளையாட்டு (Pretend play)**

இத்தகைய விளையாட்டுகளை கற்பனையாகவோ, பாவனையாகவோ குழந்தைகள் மேற்கொள்ளும் செயல்களை கொண்டதாகும். குழந்தைகள் தம்மை பூனை, நாய், யானை போன்று கற்பனை செய்துக் கொண்டு, அவை போல நடப்பதையும், ஒலியெழுப்புதலையும் காணலாம்.

**7.சமூக விளையாட்டு (Social play)**

ஒரு குழந்தை வேறொரு குழந்தையுடனோ அல்லது பல குழந்தைகளுடனோ சேர்ந்து விளையாடுதல் சமூக விளையாட்டு என்றழைக்கப்படுகிறது. பிற குழந்தைகளைத் தொட்டுப் பார்த்தல், அவர்களிடம் உள்ளவற்றை பிடுங்குதல், அவர்களிடம் கொடுத்தல், ஒருவரை ஒருவர் துரத்துதல், சில சமயங்களில் விருப்பு- வெறுப்புகளை முகத்தைச் சுளிப்பதன் மூலம் தெரிவித்தல் போன்ற செயல்களை சமூக விளையாட்டில் குழந்தைகள் வெளிப்படுத்துவர்.

**உடல் சார்ந்த விளையாட்டு (Physical loco motor play)**

குழந்தைகள் தனது ஒத்த பருவத்தினருடன் விளையாடும் போது விரிவான சிந்தனை, பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன் அதிகரிக்கிறது. மேலும் உலகம் பற்றிய பொதுவான புரிதல் ஏற்படுகிறது. (எ.கா.) ஓடுதல், குதித்தல்.

**பாலின வேறுபாடு (Gender difference)**

சமூகம் உருவாக்கிய விளையாட்டுகளில், ஆண்கள், பெண்கள் தனக்கு உகந்த விளையாட்டை விளையாடுக்கின்றனர். இதன் மூலம் உறவுமுறை பங்களிப்பு, உண்மையை புரிந்து கொள்கின்றனர்.

**விளையாட்டு, பற்றிய பிராய்டு கருத்து (Freaud's view on play)**

விளையாட்டு என்பது குழந்தைகளின் பதற்றத்தை குறைக்கின்றது. விளையாட்டு கற்பனை திறனை வளர்க்கிற ஒரு கருவியாகும்.

**விளையாட்டு ஆக்கிரமிட்புக்கு இடையே உள்ள வேறுபாடு (Difference between paly and encrochment)**

பிறரை தொந்தரவு செய்பவர்கள் விளையாட்டின் திறன் குறைந்தவர்கள். குறைந்த ஆக்கிரமிப்பு திறன் உடையவர்கள் பிரபலம் ஆகாத குழந்தைகள்.

1. நிராகரித்தல்.
2. புறக்கணித்தல்.
3. பொருள் சார்ந்த விளையாட்டு.
4. பாசாங்கு விளையாட்டு.

**நிராகரித்தல் (Ignorance)**

விளையாட்டை சீர்குலைப்பவர்கள், விவாதம் செய்பவர்கள், அதிகமாக சுறுசுறுப்பாக இருப்பவர்கள், ஆர்வம் இல்லாதவர்கள் தங்களது தனித்த நடத்தையை வெளிப்படுத்துவர்.

**புறக்கணித்தல் (Negligence)**

வெட்கம், குறைந்த ஆக்கிரமிப்பு திறன், உரையாடலை தவிர்த்தல் போன்றவை, முரட்டுத்தனமாக சண்டையிடுதல் போன்றவற்றில் இருந்து வேறுபட்டது.

**பொருள் சார்ந்த விளையாட்டு (Object based play)**

கார், பொம்மை போன்ற விளையாட்டுப் பொருட்களை பயன்படுத்தும் போது பிரச்சனை தீர்க்கும் திறன் வளர்க்கிறது.

**பாசாங்கு விளையாட்டு (Pretentive play)**

15 மாத வயது நிறைந்த குழந்தை ஒரு பொருளைப் பார்த்து அல்லது ஒரு செயலை பார்த்து அதே போன்று உண்மையாக பாசாங்கு செய்வது ஆகும்.

**குழந்தை வளர்ச்சியில் விளையாட்டின் பங்கு (Role of play in child development)**

விளையாட்டின் மூலமாக குழந்தைகள் நிறைய நன்மைகளைப் பெறுகின்றனர். இதன் மூலம் சிந்தனை திறன், நினைவு கூறும் திறன் பிரச்சனையை தீர்க்கும் திறன்களைப் பெறுகின்றனர். குழந்தைகள் உலகம் பற்றிய தங்களது நம்பிக்கைகளை விளையாட்டுகள் மூலம் சோதித்து பார்க்க இது ஒரு வாய்ப்பாக அமைகிறது. விளையாட்டு மூலம் சீக்கலை தீர்க்கும் திறன் வளர்கிறது. மேலும் விளையாட்டு பல்வகை கற்றலைத் துாண்டுகிறது.

பிறர் விளையாடும் போது குழந்தைகள் பார்ப்பதால் அவர்களின் சொல்வளம் பெருகுகிறது. குழந்தைகள் அவர்களின் குடும்ப அனுபவத்தை, பாவனை விளையாட்டு மூலம் வெளிப்படுத்துகின்றனர். இதன் மூலம் குழந்தைகள், தங்களது குடும்ப உறுப்பினர்களின் தனித்தனியான பங்களிப்பை தெரிந்து கொள்கின்றனர். இது குழந்தைகள் உலகத்தில் உள்ள வெவ்வேறு பொருட்களின் தன்மையினை அறிந்து கொள்ள உதவுகிறது.

உலகத்தை புரிந்து கொள்ள விளையாட்டு உதவுகிறது. விளையாட்டு குழந்தைகளின் கற்பனை திறனை வளர்க்கிறது. மூளை வளர்ச்சியில் விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது. விளையாட்டு குழந்தைகளின் திறனை வளர்ப்பதோடு மன உறுதியுடன் செயல்படும் திறனையும் அளிக்கிறது.

பள்ளி வாழ்க்கையில் விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளிச் சூழலில் குழந்தைகள் தங்களை நிலைநிறுத்தி கொள்ள இது உதவுகிறது. தோல்வி பயம் இல்லாமல் முன்னேற விளையாட்டு உதவுகிறது. பள்ளியில் விளையாடுவதால் சமூகத் திறன் வளர்கிறது. விளையாட்டு, சுயகற்றல், பிறருடன் பழகுதல் சமூகத்தில் தனிமனித பங்கேற்பை அதிகப்படுத்துகிறது. விளையாட்டு, குழந்தைகள் தங்களின் சுற்றுச்சூழலை திறம்பட கையாள உதவுகிறது.

**விளையாட்டின் மதிப்புகள் (Values of play)**

1. உடல் சார்ந்த மதிப்பு.
2. அறிவு சார்ந்த மதிப்பு.
3. ஒழுக்கம் சார்ந்த மதிப்பு.
4. கற்பனை சார்ந்த மதிப்பு.
5. சிகிச்சை சார்ந்த மதிப்பு.
6. சமூகமயமாக்கல்.

**உடல் சார்ந்த மதிப்பு (Physical value)**

விளையாட்டு மூலம் தசை, உணர்திறன் வளர்ச்சியடைகிறது. குழந்தை, இளம் குழந்தைகளின் உணர்திறன், புலன் உறுப்புகள் மூலம் பெறப்படும் அனுபவங்களின் மூலம் வளர்க்கிறது. (எ.கா.) பார்த்தல், கேட்டல், தொட்டுணர்தல். இப்பருவ குழந்தைகள் பொம்மையை வைத்து விளையாடுவர். பள்ளிக் குழந்தைகள் ஓடுதல், குதித்தல், பந்தய விளையாட்டுகள் மூலம் உடல்திறனை வளர்த்து கொள்கின்றனர்.

**அறிவு சார்ந்த மதிப்பு (Knowledge value)**

விளையாட்டு மூலம் குழந்தைகள் உருவம், வடிவம், நிறம், அமைப்பு, எண்கள் பொருட்களின் பெயர்களையும், அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளையும் கற்றுக் கொள்கின்றனர். விளையாட்டு மூலம் உறவுமுறைகள் பற்றிய அறிவு, சிந்தனை திறன், சிக்கலைக் தீர்க்கும் திறன், வளர்க்கிறது. குழந்தைகள் இதன் மூலம் உண்மைக்கும், பொய்க்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்கின்றனர்.

**ஒழுக்கம் சார்ந்த மதிப்பு (Discipline value)**

குழந்தைகள் விளையாட்டு மூலம் உண்மை, நேர்மை, திறன் இரக்ககுணம், போன்ற மதிப்புகளை பெறுகின்றனர். தனது நடத்தைக்கு தானே பொறுப்பேற்று குழுவின் மதிப்பை பெறுக்கின்றனர்.

**கற்பனை சார்ந்த மதிப்பு (Imaginative value)**

குழந்தைகள் தனித்து விளையாடும் போது அதிக கற்பனை திறனைப் பெறுகின்றனர். களிமண், காகிதம், கலர் பென்சில்களைப் பயன்படுத்தி விளையாடுகின்றனர். இவ்வகை விளையாட்டு மூலம் வெளியுலகத்திற்கு புதிய கண்டுபிடிப்புகளைத் தருகின்றனர்.

**சிகிச்சை மதிப்பு (Therapeutic value)**

விளையாட்டு மூலம் மனஅழுத்தம் குறைகிறது. குழந்தைகள் தங்களின் உணர்ச்சிகள் பிரச்சனைகளை விளையாட்டின் மூலம் வெளிப்படுத்துகின்றனர். பெற்றோர்கள் குழந்தைகள் விளையாடுவதை வைத்து அவர்களின் தேவைகள், உணர்வுகள் ஆகியவற்றை கண்டறிகின்றனர். குழந்தைகளின் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முறையான பாதுகாப்பான விளையாட்டை மேற்கொள்ளவும் சரியான வழி நடத்துனர் தேவை.

**சமூகமயமாக்கல் (Socialisation)**

விளையாட்டு மூலம் குழந்தைகளின் சமூக, மனவெழுச்சி வளர்ச்சியடைகிறது. குழந்தைகள், பெற்றோர்கள், பெரியவர்கள், ஒத்த பருவத்தினருடன் விளையாடும் போது சமூக உறவுகளை வளர்த்துக் கொள்கின்றனர்.

**முடிவுரை (Conclusion)**

குழந்தை வளர்ச்சியில், விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது. விளையாட்டு குழந்தைப் பருவத்தில் தொடங்கி வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. விளையாட்டின் மூலம் சிந்தித்தல், பிரச்சனையை தீர்த்தல் போன்ற திறன்களை பெறுகின்றனர். குழந்தைகள், பெற்றோர்களுடன் சேர்ந்து விளையாடும் போது அவர்களுக்கிடையே உள்ள உறவு வலுப்பெறுகிறது. பெற்றோர்கள் குழந்தைகளுடன் விளையாடும் போது குழந்தை வளர்ச்சி மேம்பாடு அடைகிறது. பெற்றோர்கள் குழந்தைகளின் பார்வையில் இந்த உலகத்தை பார்க்க ஒரு வாய்ப்பாக அமைகிறது.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)**

1.விளையாட்டின் பொருள்களை விளக்கத்தினையும் தருக.

Give the concept and meaning of play.

2.விளையாட்டு செயல்பாடுகளின் வகைகளை எடுத்துரைக்கவும்.

Describe the functions of play.

3.விளையாட்டின் கொள்கைகளை விளக்கவும்.

Explain the principles of play.

4.குழந்தை வளர்ச்சியில் விளையாட்டின் பங்களிப்பை விவாதிக்கவும்.

Discuss the role of paly in child development.

5.விளையாட்டின் மதிப்புகள் யாவை?

What are the values of play?

## அலகு – IX

# குழந்தைப் பருவமும், வளர்ச்சியும்

# (Childhood and Development)

### நோக்கங்கள் (Objectives)

இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்:

1. குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு பற்றிய அறிவை பெற முடியும்.
2. குழந்தைகள், வளரிளம் பருவத்தினரிடையே ஊடகங்களின் தீங்கான பாதிப்புகளுக்கான காரணிகளை பகுத்தாராய முடியும்.
3. குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் மீதான ஊடக வன்முறை தாக்கத்தை உணர முடியும்.
4. இனம், பாலின வார்ப்பு சார்ந்து ஊடகத்தின் பங்கையும், பங்களிப்பையும் பற்றி அறிய முடியும்.
5. ஆரோக்கியமான ஊடக பயன்பாட்டிற்கான பல்வேறு வழிமுறைகளை ஆராய முடியும்.

### முன்னுரை (Introduction)

அறிவியல் வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, 21ம் நூற்றாண்டின் வரம் என குறிப்பிடப்படுகின்ற வேளையில் ஊடகங்களின் தாக்கமும், இந்த தொழில்நுட்ப புரட்சியால் அதிகரித்துள்ளது. இந்த அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக, பல்வேறு வளரும் நாடுகள், குறிப்பாக இந்தியா ஆசிய அளவில் மட்டுமின்றி, உலக அரங்கிலும் தவிர்க்க முடியாத சமூக-பொருளாதார சக்தி மிக்க நாடாக உருவாகியுள்ளது. இந்தியா, அதன் மக்கள் தொகையில் 25% பேர் 18 வயதிற்கு உட்பட்டவர்களையும், 65% பேர் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்களையும் உள்ளடக்கிய மனித வளத்தைக் கொண்ட நாடாக உள்ளது. தற்காலத்தில் மிண்ணனு சாதனங்களான கைபேசி, டேப்லெட் (Tablet), ஐபேடு (ipad), மடிக்கணினி போன்றவை இளைஞர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறி உள்ளது, அதே வேளையில், ஊடகங்களின் பாதிப்புகளும் இளம் சமுதாயத்தில் அபரிமிதமாக காணப்படுகிறது.

**பொருள் விளக்கம் (Meaning and Definition)**

**1. ஊடகம் (Media)**

செய்திகள், பொழுதுபோக்கு, கல்வி, புள்ளி விவரங்கள் சார்ந்த தகவல்களை பல்வேறு தொலைத் தொடர்பு சாதனங்களின் மூலமாக மக்களுக்கு எடுத்துச் செல்லும் சாதனங்கள் ஊடகங்கள் ஆகும். மேலும், செய்தித் தாள்கள், வார, மாத இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி, மின்னஞ்சல், தொலைப்பேசி, விரைவு அஞ்சல், இணையம் போன்ற சாதனங்களையும் உள்ளடக்கியது ஊடகம் ஆகும்.

**2. புள்ளி விவர சேகரிப்பு சாதனங்கள் (Data and Storage devices)**

இவ்வகை சாதனங்கள் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது.

- காந்த தட்டுகள், சுருள்கள்.
- கண்ணாடியிழை, நுண்ணிழைகள்.
- காந்த கண்ணாடியிழைகள் சார்ந்த ஒளி, ஒலி தட்டுகள்.

**3. வெகுசன ஊடகம் (Mass media)**

பெரும்பான்மையான மக்களை பேச்சு, எழுத்து, நேரடி ஒளிபரப்பு மூலம் சென்றடைகின்ற தொலைத் தொடர்பு சாதனங்கள் வெகுசன ஊடகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை தொலைக்காட்சி, வானொலி, விளம்பரங்கள், திரைப் படங்கள், செய்தித் தாள்கள், இதழ்கள், இணையம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**4. சமூக ஊடகம் (Social media)**

மக்கள் தங்களது கருத்துக்கள், எண்ணங்கள் தகவல்களை ஒருவருக்கொருவர் மெய்நிகர் (virtual) சமூகமாக, இணைய இணைப்பு வலையின் மூலமாக பகிர்ந்து கொள்வது சமூக ஊடகம் எனப்படுகிறது.

**குழந்தை மீதான ஊடகத்தின் தாக்கம் (Influences of media on children )**

அமெரிக்க குழந்தைகள் கல்வி பயிற்சி அமைப்பு (American Academy of Paediatrics) கூற்றுப் படி, குழந்தைகள், ஊடகங்களை உற்று நோக்குதல் போலச் செய்தல் (Imitation)

மூலம் தங்களது நடத்தையை மாற்றியமைத்துக் கொள்கின்றனர். தற்போது, குழந்தைகள் மீதான ஊடகங்களின் தாக்கமானது பெற்றோர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. குழந்தைகளின் மீதான ஊடகத்தின் தாக்கமானது, இந்தியா போன்ற பல்வகை கலாச்சாரம் கொண்ட நாடுகளில் பல்வேறு பிரச்சனைகளுக்கு காரணமாக உள்ளது. இந்தியக் குடும்பங்களில், ஊடகங்கள், குழந்தைகளுக்கு எளிதாக கிடைக்கப் பெறக் கூடிய, எளிதாக அணுகக்கூடிய வகையில் உள்ளது. இதன் மூலம் பல்வேறு வகையான நன்மைகளும் குழந்தைகளுக்கு கிடைக்கின்றன. கற்றலுக்கு தயாராகுதல், கல்வி மேம்பாடு, சமூக பிரச்சனைகள் சார்ந்த கலந்துரையாடல்களில் பங்கெடுத்துக் கொள்வதற்கும், இசை, நடிப்பு போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கும் இவை மிகவும் உதவியாக உள்ளன.

**ஊடகத்தால் குழந்தைகளுக்கும், வளரிளம் பருவத்தினருக்கும் ஏற்படும் தீங்குகள்/பாதிப்புகள் (Harmful effects of media on Children and Adolescents)**

குழந்தைகள் அவர்களுக்கான நேரத்தில், குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினை தொலைக்காட்சி, படங்கள் பார்ப்பதற்கும், இணையத்தில் விளையாடுவதற்கும் செலவிடுகின்றனர். ஊடகங்கள், குழந்தைகளுக்கு கல்வி, கலை, அறிவியல், விளையாட்டு, கலாச்சாரம் போன்ற துறைகளில் மிகவும் உதவியாக உள்ளன. கடந்த 20 ஆண்டுகளில், இளம் பருவத்தினரிடையே ஊடகங்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து உள்ளது. ஊடகங்கள் என்பது இரண்டு பக்கமும் கூர்மையான முனைகள் கொண்ட வாள் போன்று நன்மைகள் தீமைகளை கொண்டதாகும்.

எனவே, பெற்றோர்கள் குழந்தைகளின் மீதான ஊடகத்தின் பாதிப்புகளை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். மேலும், இது போன்ற பிரச்சனைகளை சிறப்பாக கையாள வேண்டியதும் தற்போது மிக முக்கிய தேவையாக உள்ளது.

**குழந்தைகள், வளரிளம் பருவத்தினரிடையே ஊடகத்தின் பயன்பாடு (Media usage by Children and Adolescents)**

இன்றைய குழந்தைகள், ஊடக பயன்பாடுகள் அதிகம் நிரம்பிக் காணப்படுகின்ற உலகத்தில் வளர்கின்றனர். சராசரியாக இளம் பருவத்தினர், ஒரு நாளில், மூன்றில் ஒரு பங்கு

நேரத்தை ஏதேனும் மின்னனு ஊடகத்தில் செலவுகிடுகின்றனர். இந்தியக் குழந்தைகள், இளம் பருவத்தினரின் மீதான ஊடக தாக்கம் சார்ந்த ஆய்வுகள் பெரும்பான்மையாக இல்லை என்ற போதிலும், இந்தியக் குழந்தைகள் தினமும் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக தொலைக்காட்சியை பார்ப்பதில் செலவிடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் மூலமாக, ஊடகங்கள் குழந்தைகளின் வளர்ச்சியில் உடல், மனம், சமூக ரீதியாக எதிர்மறை பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, ஊடகத்தின் தாக்கமானது, வன்முறை, கோபம், உடல் பருமன், ஊட்டச் சத்து குறைபாடுகள், உணவு சார்ந்த நோய்கள் போன்ற பாதிப்புகளை உருவாக்குகின்றன.

**ஊடகமும், வன்முறையும் (Media and Violence)**

தொலைக்காட்சி வன்முறை சார்ந்த ஆய்வு முடிவுகள், இளைஞர்கள் சராசரியாக ஒரு ஆண்டிற்கு 61% அதாவது, 10,000 வன்முறை சார்ந்த நிகழ்வுகளை காண்பதாக கூறுகிறது. மேலும் கீழ்கண்ட சில முதன்மையான பாதிப்புகளையும் பட்டியலிட்டுள்ளது.

- கற்றலில் கோபமான நடத்தை, செயல்பாடுகள்.
- வன்முறை சார்ந்த விழிப்புணர்வின்மை.
- வன்முறைக்கு பலியாகி விடுவோம் என்ற பயம்.

பொதுவாக, குழந்தைகளுக்கு உண்மைக்கும், கற்பனைக்கும் இடையேயான வேறுபாடுகளை அறியத் தெரிவதில்லை. மேலும் அவர்களிடம், பகுத்தறியும் ஆற்றலுக்கான முதிர்ச்சியின்மையால், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காண்பனவற்றை உண்மையானவை என்று நினைத்து தங்களது நடத்தைகளை மாற்றியமைத்துக் கொள்கின்றனர். சமூக குடும்பங்களால் வன்முறைக்கு உள்ளான இளைஞர்கள் இதன் காரணமாக, தங்களையே வன்முறைக்கு ஆளாக்கிக் கொள்கின்றனர்.

**போதைப் பொருள் பயன்படுத்துதலில் ஊடகத்தின் தாக்கம் (Media and Substance abuse)**

தொலைக் காட்சி விளம்பரங்களில் வரும் மது அருந்துதல், புகைப் பிடித்தல் போன்ற காட்சிகள் இளைஞர்களின் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஊடகங்கள் நான்கில் ஒரு பங்கு நேரத்தை, இசை படத்தொகுப்புகள், போதைப் பழக்கம் புகையிலை பயன்படுத்துவது போன்ற காட்சிகளை

ஒளிபரப்புகின்றன. உதாரணமாக, 50% க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திரைப்படங்களில் வரும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் காட்சிகளின் மூலமாக தூண்டப்படுகின்றனர் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**பாலியல் முன் தொடக்கமும், பாலியல் ஒழுக்கமின்மையில் ஊடகம் சார்ந்த பாதிப்புகளும் (Media and Risks of early Sexual Initiation and Sexual promiscuity)**

வளரிளம் பருவத்தினரிடையே ஆரம்ப பாலியல் தொடக்கத்திற்கு ஊடகங்களின் பாலியல் சார்ந்த வெளிப்பாடுதான் மிக முக்கிய காரணமாக உள்ளது. கடந்த சில வருடங்களாக, ஊடகங்களில் பாலியல் ரீதியிலான படங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றன. தொலைக் காட்சியில் 50% க்கும் அதிகமாக பாலியல் சார்ந்த காட்சிகளும், 66% பாலியல் சார்ந்த முதன்மை காட்சிகளும் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இளைஞர்கள் இணையத்தை அதிகமாக பயன்படுத்துவதால் தொடர்ச்சியாக பின் தொடர்தல் தொந்தரவு, தேவையற்ற கருத்துக்களை பறிமாறிக் கொள்ளுதல், கண்டிக்கத் தக்க படங்களை இணையத்தில் ஏற்றுதல் போன்ற பிரச்சனைகளை பொதுவாக, சமூக ஊடகங்களின் மூலம் சந்திக்க நேரிடுகிறது.

**ஊடகமும், உடல் பருமனும் (Media and Obesity)**

இன்றைய குழந்தைகள், அவர்களது ஓய்வு நேரங்களை பெரும்பாலும் உடல் சார்ந்த விளையாட்டுகளில் செலவிடாமல், தொலைக் காட்சி, கணினி கணினி சார்ந்த விளையாட்டுகளை விளையாடுவதில் செலவிடுகிறார்கள். தொலைக் காட்சி பார்ப்பதற்கும், உடல் பருமன் அடைவதற்கும் குறிப்பிடத்தக்க ஒற்றுமை இருப்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குழந்தைகள் தினமும் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக கணினி, கைப்பேசியில் விளையாடுவதன் மூலம் அவர்களின் உடல் பருமன் இரண்டு மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**ஊடக தாக்கத்தின் அதிகாரப் பரப்புகள் (Domains of Influence)**

**1. வன்முறையும், கோபமான கொண்ட நடத்தைகள் (Violence and Aggressive behaviour)**

குழந்தைகளிடையே காணப்படும் கோபம், வெறித்தனமான நடத்தையை ஊக்குவிப்பதில் ஊடங்களின் பங்கு பெருமளவில் உள்ளது. மேலும், இது போன்று

ஊடகங்களில் காட்சிப்படுத்தப்படுகின்ற வன்முறைகள், இளம் குழந்தைகளை மனதளவில் வெகுவாக காயப்படுததுவதோடு, பாதிப்படையவும் செய்கிறது.

**2. பாலியல் சார்ந்த காட்சிகள் (Sexual Content)**

1996-ல் நடத்தப் பெற்ற ஆய்வின் படி, ஊடகங்களின் மூலமாக குழந்தைகள் குறைந்த பட்சம் ஒரு மணி நேரத்தில் எட்டு பாலியல் சார்ந்த காட்சிகளைப் பார்ப்பதற்கு ஆளாகின்றனர்.

**3. உடல் பிம்பம் சுயமரியாதை (Body image and self esteem)**

ஊடகங்களில் விளம்பரங்கள் மூலம் உடல் பிம்பம் சுய மரியாதை வெகுவாக பாதிக்கப்படுகிறது. ஊடகங்கள், இளைஞர்களிடையே சுயமரியாதையை உடல் பிம்ப செய்திகளின் மூலம் ஏற்படுத்துகின்றன. மேலும் தொலைக்காட்சி, வார, மாத இதழ்களில் காணப்படும் விளம்பரங்கள் அவர்களிடையே உண்மைக்கு புறம்பான எதிர்பார்ப்புகளை அழகியல், உடல் எடை, உடல் அமைப்பு, வெளித்தோற்றம் சார்ந்து ஏற்படுத்துகின்றன.

**4.உடல் ஆரோக்கியமும், பள்ளி செயல் திறனும் (Physical Health and School performance)**

குழந்தைகள் ஊடக செயல்பாடுகளில் செலவிடும் நேரம் அதிகரித்து வருகின்றது விளக்குகிறது. சராசரியாக, ஒரு குழந்தை அல்லது வளரிளம் பருவத்தினர், ஒரு வாரத்தில் 24 மணி நேரத்தை தொலைக்காட்சியை பார்ப்பதில் செலவிடுகின்றனர். மேலும், கூடுதல் நேரத்தினை திரைப்படங்கள் பார்த்தல், இசை கேட்டல், கணினியில் விளையாடுதல் இணையத்தில் செலவிடுகின்றனர். இதன் காரணமாக, வீட்டுப் பாடம் பள்ளி ஒப்படைப்புகளில் குறைவான நேரம் செலவிடுவதால், அவர்களின் பள்ளிச் செயல்திறன் பாதிக்கப்படுகிறது.

**குழந்தைகள், வளரிளம் பருவத்தினரின் நடத்தை மீதான ஊடகத்தின் தாக்கம்**

**(Influence of Media violence on Children's Adolescent's Behaviour)**

21-ம் நூற்றாண்டின் சமூக சூழலில், வெகுசன ஊடகமானது, நமது கலாச்சாரம் தினசரி வாழ்வில் நிரம்பிக் காணப்படும் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு காரணமாக உள்ளது.

**1.குழந்தைகள், வளரிளம் பருவத்தினரிடையே ஊடகத்தின் தாக்கம்**

**(Effect of Media on Children and Adolescents)**

குழந்தைகள், வளரிளம் பருவத்தினரின் ஆரோக்கியம் சார்ந்த நடத்தைகளில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் தீங்கான பாதிப்புகளை வெகுசன ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. எனவே, இதில் பெரும்பான்மையானவர்கள் நிஜத்தையும், கற்பனையையும் பிரித்தறியும் அளவிற்கு முதிரச்சியடையாதவர்களாகவே உள்ளனர். இதன் காரணமாக, அவர்கள் உடல் ஆரோக்கியம் சார்ந்த விளையாட்டுகள், உடற் பயிற்சிகள், சமூக சேவைகள், கலாச்சார பின்தொடர்தல், குடும்பத்திற்கு செலவிடும் நேரத்தை ஊடகங்கள் வெகுவாக குறைத்து விட்டன.

**2.தொலைக்காட்சி பார்த்தல், சமூக தனிமையும் (Television viewing and social Isolation)**

குழந்தைகள் தொலைக்காட்சியை பார்ப்பதில் செலவிடும் நேரத்துடன் ஒப்பிடுகையில், அவர்களின் நண்பர்களுடன் செலவிடும் நேரம் மிகவும் குறைவாக உள்ளது. எனவே, இது நல்ல நண்பர்களுடன் பழகுவதற்கும், அவர்களுடன் நட்புறவை ஏற்படுத்துவதற்க்கும் தடையாக உள்ளது. இதன் விளைவாக, சமூக தனிமை, கவலை, சீர்குலைவு, வெளி அச்சம், சமூக விரோத நடத்தைகள், தவறான குழுக்களுடன் ஈடுபடுதல் போன்ற தீங்கு விளைவிக்கும் செயல்கள் அதிகரிக்கின்றன.

**3. புகைப் பிடித்தலில ஊடகத்தின் தாக்கம் (Media and Smoking)**

வளரிளம் பருவத்தினரிடையே காணப்படும் புகைப் பிடித்தல் பழக்கத்திற்கும், ஒரு சில வெகுசன ஊடகங்கள் வெளிப்படுத்தும் விளம்பரங்களுக்கும் இடையே வலுவான ஒற்றுமை இருப்பதை ஆய்வுகள் உறுதி செய்கின்றன. உதாரணமாக, 50% க்கும் மேற்பட்ட இளைஞர்கள், திரைப்படங்களில் காண்பிக்கப்படுகின்ற புகைப் பிடித்தல் காட்சிகளின் மூலம் தொடக்க நிலை புகைப் பிடித்தல் பழக்கத்திற்கு ஆளாகின்றனர். இந்தியாவில் திரைப்படங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வருகின்ற புகைப் பிடித்தல் காட்சிகளுக்கு தடை விதிப்பதில் அதிகமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. தொடக்கத்தில், 2006-ம் ஆண்டு, ஜனவரி 1-ல் திரைப்படங்கள் தொலைக்காட்சிகளில் வரும் புகைப் பிடித்தல் காட்சிகளுக்கு டெல்லி உயர் நீதி மன்றம் தடை விதித்தது. பின்பு, ஜனவரி 23, 2009-ல் அந்த தடையை விலக்கிக்

கொண்டது. எனவே, இது போன்ற பிரச்சனைகளுக்கு ஆதாரம் சார்ந்த வழிகாட்டி குறிப்புகள் மிக அவசிய தேவையாக உள்ளன.

**குழந்தைகள், வளரிளம் பருவத்தினரிடையே காணப்படும் ஊடக தாக்கத்தினை எவ்வாறு சரி செய்ய முடியும்? (Which can be done to pacify impact of Media on Children and Adolescents?)**

குழந்தைகள், வளரிளம் பருவத்தினரிடையே காணப்படும் ஊடக தாக்கத்தினை சரி செய்யும் பொருட்டு கீழ்கண்ட வழிகாட்டி குறிப்புகளை அமெரிக்க குழந்தைகள் கல்வி பயிற்சி நிறுவனம் (AAP-American Academy of Paediatrics) பரிந்துரை செய்துள்ளது.

1. படுக்கை அறையில் ஊடக சாதனங்களான, தொலைக்காட்சி, கணிணி, இணையத்தை அனுமதிக்காது இருத்தல்.
2. சிறந்த ஊடக நிகழ்ச்சிகளை காண்பதற்கு மட்டும் 1-2 மணி நேரம் அனுமதித்தல்.
3. இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்க்க செய்தல்.
4. உணவு நேரத்தின் போது தொலைக்கட்சியை அணைத்து வைத்தல்.

**இனம், பாலினம் வார்ப்பு சார்ந்து ஊடகங்களின் பார்வை (Media on Racial and Gender Stereotyping)**

சனநாயகத்தில் ஊடகத்தின் பங்கானது, அரசியல், சமூகவியல் பொருளாதார பிரச்சனைகள் சார்ந்து பெருந்திரள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இருப்பினும், ஊடகங்கள் சமூக பிரச்சனைகளை, குறிப்பாக பெண்கள் சார்ந்த பிரச்சனைகளை விட அரசியல், பொருளாதாரம் சார்ந்த செயல்களில் மட்டுமே முனைப்பு காட்டுகின்றன. ஊடகங்களின், இது போன்ற செயல்பாடுகளால் பெண்கள் சார்ந்த பிரச்சனைகள் பின்னுக்கு தள்ளப்படுகின்றன. சமூகத்தில் பாலின பிரச்சனைகள் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகத்தின் பங்கு இன்றியமையாததாகும். இரண்டு பாலினத்திற்கும் இடையே உள்ள உடல், பொருளாதாரம் சார்ந்த சமமற்ற அதிகார பங்கீடு, பெண்களுக்கு எதிரான பாகுபாட்டிற்கு வழிகோலுகிறது. பெண்களின் பிரச்சனைகளை ஊடகங்கள், உணர்வு, பொறுப்பு சார்ந்த வழிகளில் கையாள வேண்டும். ஊடகங்கள், பெண் பாலின விகித சரிவு, கற்பழிப்பு, பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல், வரதட்சனை சார்ந்த குற்றங்கள், குடும்ப வன்முறை, மானபங்கம், பகடி வதை செய்தல், கௌரவக் கொலைகள் பற்றிய விழிப்புணர்வை

சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். பெண்கள் தங்களது அதிகாரத்தை அரசியல், சமூகவியல், கலாச்சாரம், மனித வாழ்வியலின் மற்ற பரிமானங்களை உள்ளடக்குவதன் மூலமே பெற முடியும்.

### இந்திய ஊடகங்கள் (Media in India)

ஊடகம் என்பது சனநாயகத்தின் நான்காவது தூணாகவும், சமூகத்தை கண்காணிப்பதற்கான ஒரு மகத்தான சக்தியாகவும் விளங்குகிறது. இது சமூகத்தின் கண்ணாடியாகவும், சமூகத்தில் நடப்பவைகளை பிரதிபலிப்பு செய்பவையாகவும் உள்ளது. மேலும், இது பெருந்திரள் செல்வாக்கைப் பெறுவதோடு, பொது மக்களிடம் மதிப்பு, கருத்துகளை உருவாக்கும் ஆற்றல் மிக்க கருவியாக உள்ளது. அரசியல், சமூக, பொருளாதார பிரச்சனைகளை பற்றிய பெருந்திரள் விழிப்புணர்வை, ஊடகங்களை பயன்படுத்தி ஏற்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தின் முக்கிய அடித்தளங்களை பிடிப்புடன் இருக்கச் செய்ய முடியும்.

### பாலின வார்ப்பு (The Gender Stereotype)

பாலினம், என்பது சமூகத்தால் உருவாக்கபட்ட பொறுப்பு, பங்குகள் சார்ந்து கொடுக்கப்பட்ட கலாச்சாரம் இடம் சார்ந்தவையாகும். இந்த பங்குகளில், அரசியல், கலாச்சார சூழல்கள், பொருளாதர, சமூக, மதம் சார்ந்த காரணிகள் செல்வாக்கு கொண்டுள்ளன. வழக்கமுறை, சட்டம், வர்க்கம், இனம் தனியாள் அல்லது நிறுவன பாரபட்சம் போன்றவையும் பாலின ஒத்த மாதிரியின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. இந்தியாவில், ஆணாதிக்க சமூகம் வளமாகவும், இதில் ஆண் மகன் விருப்பம், நீண்ட கால பழக்க வழக்கத்தில் உள்ள பாலின பாரபட்சம் ஆண்கள் மட்டுமே தனது பெற்றோரின் வயோதிக காலத்தில் ஆதரவாகவும், அவர்கள் இறக்கும் போது இறுதிச் சடங்குகள் செய்பவராகவும், கருதப்படுகிறது. உண்மையில், பெண் குழந்தைகள் யாரோ ஒருவரின் சொத்தாகவும் மணமகனுக்கு வரதட்சனை கொடுப்பதன் மூலம் அவர்கள் குடும்பத்தின் பொருளாதார சுமையாகவும் கருதப்படுகிறார்கள்.

**பாலின வேற்றுமையில் காணப்படும் சில நிலைகள் (Gender differences seen in some Situations)**

**1. சமூக நிலை (Social Situation)**

சமூகமானது ஆண் மகனே, ஒரு குடும்பத்தின் தலைவனாக இருக்க வேண்டும் என கோருகிறது. அவன் மேலும் குடும்ப நலன் தனக்காக சம்பாதிப்பவராகவும், பெண் வழக்கம் போல் குடும்பத்தை உருவாக்குபவராகவும், வளர்ப்பவராகவும், நலம் பேணுபவராகவும் இருக்க வேண்டும் என்கிறது.

**2. அரசியல் நிலைமை (Political Situation)**

அதிகார பகிர்வில் ஆண், பெண் இடையே பாராபட்சம் காணப்படுகிறது. ஆண்கள் தேசிய அளவில் அரசியலில் உயர்ந்த நிலையில் காணப்படும் வேளையில், பெண்கள் உள்ளுர் அளவிலேயே எதிர்பார்க்கப் படுகிறார்கள்.

**3. கல்வி நிலைமை (Educational Situation)**

கல்வி வாய்ப்புகளிலும், எதிர்பார்ப்புகளிலும் வரையறுக்கப்பட்ட பாலின பாரபட்சம் காணப்படுகிறது. ஆனால், ஒரு குடும்பத்தில் ஆண் மகன் உயர் கல்விக்கான அனைத்து வளங்களையும் பெற முடிகின்ற போது, பெண்கள் வழக்கமாக சவால்கள் குறைந்த கல்வித் துறைகளில் செல்வதே எதிர்பார்க்கப்படுகிறது.

**4. பொருளாதார நிலை (Economical Situation)**

ஆண்கள், பெண்களுக்கிடையே, இலாபகரமான தொழில்கள் நிதியை பெறுவதில் பரந்த இடைவெளி காணப்படுகிறது. புகழ், கடன், நிலம், சொத்துரிமை, உரிமைகள், கொள்கைகள் பெரும்பாலும் ஆண்கள் சார்புடையதாகவே உள்ளன.

**பெண்களும் ஊடகமும் (Women and Media)**

**1. ஊடகத்தில் பிரதிநிதித்துவம் (Representation in the Media)**

பாலின கட்டமைப்புகளின் தூண்டல்கள் மூலமோ, அல்லது சவால்களின் மூலமோ, ஊடகம் தனது குறிப்பிடத்தக்க நீண்ட கால செல்வாக்கின் மூலமாக, உலக அளவில் உள்ள பெண்ணியளாலர்களை கண்டு கொண்டது.

**2. ஊடகத் துறையில் தொழில் முறை பெண்கள் (Women Professionals in the Media)**

2005-ல் அச்சு ஊடகத்தில் பெண் கதாசிரியர்கள் 35%, செய்தி தொலைக்காட்சிகளில் 45% அதிகரித்துள்ள வேளையில், வானொலி செய்தி வாசிப்பில் 27% குறைந்து காணப்படுகிறது. ஆண் ஊடகவியளாலர்கள் 19% பெண்கள் சார்ந்த கதைகளையும், பெண் ஊடகவியளாலர்கள் 26% பெண்கள் சார்ந்த கதைகளையும் எழுதுகின்றனர். பெண் ஊடகவியளாலர்கள் ஆண்களைப் போன்று இரண்டு மடங்கு பாலின ஒத்த தன்மையுள்ள சவால்களை சந்திக்க வேண்டி உள்ளது. ஊடகங்களில், 12% செய்திகள் மட்டுமே பாலின சமத்துவம் பாலின வேறுபாடுகள் சார்ந்த பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

**ஊடகத்தின் பயன்பாட்டை ஆரோக்கியமானதாக சீராக்குதல் (Regulating the Healthy Media Usage)**

**ஆரோக்கியமான ஊடக பயன்பாடு, குழந்தைகள் - பெற்றோர்களுக்கான வழிமுறைகள் (Children and healthy media usage – Guidelines for parents)**

பின் வரும் ஆரோக்கியமான பாதுகாப்பு குறிப்புகள் அமெரிக்க குழந்தைகள் கல்வி பயிற்சி நிறுவனத்திலிருந்து (American Academy of Paediatrics) பெறப்பட்டது.

**1.வரம்பை ஏற்படுத்தி விளையாட்டு நேரத்தை ஊக்குவித்தல் (Set limit and encourage playtime)**

தொழில் நுட்ப பயன்பாடு என்பது மற்ற செயல்களை போலவே ஒரு காரணமுள்ள வரம்பாக இருத்தல் வேண்டும். குறிப்பாக இளம் குழந்தைகளுக்கு கட்டமைப்பில்லாத விளையாட்டு நேரத்திற்கு தினமும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**2.ஒன்றாக விளையாடி, ஒன்றாக கற்கும் குடும்பங்கள் (Families who play together and learn together)**

குடும்ப பங்களிப்பும், ஒரு நல்ல ஊடகச் செயலாகும். இது சமூகக் கருத்து பரிமாற்றத்தையும், பிணைப்பையும், கற்றலையும் ஊக்குவிக்கிறது. இது போன்ற, விளையாட்டுத் திறன்களை செய்துகாட்டல் என்பது பந்தய ஆதாரத்துக்கு ஒரு நல்ல வழியாகும். உங்களது சொந்த வாழ்க்கை அனுபவங்கள், பார்வைகள், வழிகாட்டுதல்கள் இவற்றை விளையாட்டு மூலமாக அறிமுகப்படுத்தவோ அல்லது பகிரவோ செய்யலாம்.

### 3. நல்ல முன்மாதிரியாக இருத்தல் (Be a good role model)

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நன்னடத்தை (Good manner) கருணை (Kindness) போன்ற முன்மாதிரி செயல்களை கற்ப்பிக்க வேண்டும். மேலும் அவர்களின் நிறைகள் குறைகளை உற்று நோக்குவதை விட, அதிகமாக குழந்தைகளுடன் பேசுவது, அன்போடு அரவணைப்பது விளையாடுவது, அவர்களோடு நம்மை இணைக்கும்.

### 4. நேருக்கு நேராக உரையாடுவதின் மதிப்பை அறிதல் (Face to Face Conversation to know Value)

இளம் குழந்தைகள், இரு வழித் தொடர்பு (Two-way Communication) மூலமாக சிறப்பாக கற்க முடியும். "பேசும் போது" முன்னும் பின்னுமாக (Back and Forth) ஈடுபடுதல் மொழி வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். உரையாடல் என்பது நேருக்கு நேராக இருத்தல் வேண்டும். வெகு தொலைவில் உள்ள தாத்தா பாட்டியுடனும் உரையாடும் போது காணொலி வாயிலாக உரையாடலாம். செயலற்ற கவனித்தல் (Passive Listening), திரையுடனான ஒரு வழி தொடர்பை (Screen One-way Communication) விட முன்னும் பின்னுமான (Back and Forth) உரையாடல்கள் மூலம் மொழித் திறன்களை மேம்படுத்திக் கொள்ள முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன.

### முடிவுரை (Conclusion)

இவ்வாறாக, குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் வளர்ச்சி, ஆரோக்கியமான ஊடக பயன்பாடு, பாலின வார்ப்பு பாலினம் மீதான ஊடகங்களின் பார்வை பற்றி விவரிக்கிறது.

### விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)

1. இந்தியாவில் வளர்ச்சி, சுதந்திரத்திற்கு முன்னும் சுதந்திரத்திற்கு பின்னுமாக ஊடக வளர்ச்சியிணை விவாதிக்கவும்.

   Discuss the development of media in pre and post independent India.

2. இந்தியாவில் குழந்தைகள் இளம்பருவத்தினரின் மீதான ஊடக வன்முறையின் தாக்கம் பற்றி ஆராய்க.

   Explore the impact of media violence on children and adolescents.

3. பாலின வார்ப்பு பாலினம் மீதான ஊடகத்தின் பார்வை – ஆய்க.

   Analyse the view of media on gender and gender stereotype.

4. ஆரோக்கியமான ஊடக பயன்பாட்டிற்காக, அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி குறிப்பு எழுதுக.

   Write about the measures to be taken by the government for the healthy use of media.

# குழந்தை வளர்ச்சியில் நகரமயமாதலும், பொருளாதார மாற்றமும் (Urbanisation and Economic Change in Child Development)

**நோக்கங்கள் (Objectives)**

இந்த அலகு முடிவுறும் தருவாயில், கற்போர்:

1. நகரமயமாதல், பொருளாதார மாற்றம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள முடியும்.
2. குழந்தை வளர்ப்பில் குடும்பம் புலம்பெயர்தலின் தாக்கத்தை உணர முடியும்.
3. குழந்தை வளர்ப்பில் சுற்று சூழல் மாசுபாட்டிற்கான காரணிகள், அதனால் ஏற்படும் விளைவுகளை ஆய்வு செய்ய முடியும்.
4. தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதலின் விளைவுகளைப் பற்றிய அறிவை பெற முடியும்.

## குழந்தை வளர்ச்சியில் நகரமயமாதல் (Urbanisation in Child Development)

**முன்னுரை (Introduction)**

நகரமயமாதல் என்பது பல்வேறு மாறுபாடுகளை உள்ளடக்கியதாகும். ஒரு மனிதனின் நடத்தைகள் மதிப்புகள் நகரமயமாதலின் தாக்கத்திற்கு உட்படும் போது அவனுடைய புவியியல் இட அமைவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, அல்லது அவன் வாழும் நகரம் வளர்ச்சியுற்ற பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அரசியல் பொருளாதாரமும், நகர தொழில் நிறுவனங்களின் தாக்கமும், ஒரு தனி நபரின் உடல் நலம், கல்வி, பொது நலத்தை நிர்ணயிக்கின்றன. இதன் அடிப்படையில் சமூகமும், கலாச்சார அமைப்பும் தவிர்க்க முடியாத அளவில் நகரம், வளர்ச்சியுற்ற பகுதிகளில் வேறுபடுகிறது.

**நகரமயமாதலின் காரணிகள் (Factors of Urbanisation)**

ஒரு சமூகமானது, நகரத்தை நோக்கி செல்வதன் மூலம் நகரமயமாதலின் தாக்கத்தை உணரமுடியும். நகர வாழ்க்கையில் நகரமயமானது, பல்வேறு மாற்றங்களை வெவ்வேறு தாக்கங்களின் அடிப்படையில் ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக, இயற்கை (அ) அமைவிடம் சார்ந்த, சமூகம், உளவியல் சார்ந்த கலாச்சார ரீதியிலான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**1. இயற்கை அமைப்பு ரீதியாக (Physical)**

a. நகரங்களின் வளர்ச்சி (Growth of cities)
b. வீடற்ற நிலை (Homelessness)
c. புறநகர் பகுதி (Suburbanisation)

**2. சமூகம் (Social)**

a. குடும்பம் (Family)

b. குற்றங்கள் (Crimes)

c. வேலையின்மை (Unemployment)

d. ஏழ்மை (Poverty)

e. விபச்சாரம் (Prostitution)

f. சூதாட்டம் (Gambling)

g. பிச்சை எடுத்தல் (Beggary)

h. சச்சரவுகள் (அ) முரண்பாடுகள் (Conflicts)

**3. உளவியல் (Psychological)**

a. போதைப் பழக்கம் (Alcoholism)

b. மன அழுத்தம் (Stress)

**4. கலாச்சாரம் (Cultural)**

a. எந்திரத்தனமான வாழ்க்கை (Mechanical way of life)

b. நகர வெளிப் பார்வை (Urban outlook)

**5. பொருளாதாரம் (Economical)**

a. தொழில்மயமாதல் (Industrialisation)

b. புலம்பெயர்தல் (Migration)

**6. அரசியல் (Political)**

**7. சுற்றுச் சூழல் (Environmental)**

**குடும்பம் புலம் பெயர்தல் (Family Migration)**

**புலம் பெயர்தலின் முக்கியத்துவம் (Significance of Migration)**

குறைந்த அளவிலான வருமானம் உள்ள பகுதிகள், வாய்ப்புகள் உள்ள கிராமப் புறங்களிலிருந்து அதிக எண்ணிக்கை கொண்ட மக்கள் ஒரு குழுவாக, ஒரு மில்லியன் அளவுக்கும், அதிகமாக மக்கள் வசிக்கின்ற பெரு நகரத்தை நோக்கி படையெடுத்தல் புலம்பெயர்தல் ஆகும். சில நேரங்களில், இது போன்ற கட்டுக்கடங்காத புலம் பெயர்தல்களால் பேரழிவை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இது மேலும், வேலையில்லா திண்டாட்டம் தகுதி குறைந்த வேலைவாய்ப்புகளுக்கு காரணமாக அமைகிறது.

இது போன்ற புலம் பெயர்தலால், வீடற்றோரின் எண்ணிக்கை அதிகரித்து, அவர்கள் குடிசைகள் தெரு ஓரங்களில், அடிப்படை வசதிகளான தண்ணீர், சுகாதாரம் ஆரோக்கியமற்ற போன்ற வாழ்க்கையை மேற்கொள்வதற்கு காரணமாகிறது.

**புலம் பெயர்தலுக்கான காரணங்கள்: (Reasons of Migration)**

**1. அரசியல் (Political)**

ஒருவர் நகரத்தில் அதிக எண்ணிக்கையிலான புதிய குடியிருப்புகளை காணலாம். இவை, கிராமப்புற பாரம்பரிய அமைப்பு வடிவங்களுடன் உருவாகின்றன. பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களது சொந்த அரசியல் ஆதாயத்துக்காக இந்த அமைப்புகளை பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த அமைப்பின் உறுப்பினர்கள், அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள ஆரம்பிக்கும் போது, கூட்டாக அதிகாரத்தை கையாள ஆரம்பிக்கின்றனர். இச்சமயத்தில், இந்த அமைப்பினர் அரசியல் கட்சிகளுக்கான வடிவங்களை உருவாக்குகின்றனர். சில நேரங்களில், சனநாயக நாட்டில் கிராமப்புற மக்களின் செல்வாக்கே எதிர் காலத்தில் அரசியல் கட்சிகளாக மாறுகிறது.

**2. சுற்றுச் சூழல் (Environmental)**

இன்றைய நகர்புற சுற்றுச் சூழல் என்பது இயற்கையான சுற்றுசூழல் அல்ல, இது மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கையான சுற்றுச் சூழலாகும். அதிகமான மக்கள் தொகை பெருக்கம் வேகமான தொழில்மயமாக்கல், போன்றவை மிகப் பெரிய அளவில் நகர்புற சுற்றுச் சூழலை மாசுப் படுத்துகிறது. சுற்றுச் சூழல் மாசு, என்பது நகர்புற சுற்றுசூழலுக்கு பெரும் சவாலாக மாறி வருகிறது. எனவே, சுகாதரமற்ற நிலையில் பெரும்பான்மையான நகர்புற மக்கள் வாழ்கின்றனர். மாசுக் கட்டுப்பாட்டு கருவிகளை நிறுவுதன் மூலம் வறுமை மாசு அடைதலை தடுக்க முடியும்.

**குழந்தைகளின் வளர்ச்சியில் சுற்றுச் சூழலின் பாதிப்பு (Environmental Risks on Children Development)**

**1. உட்புறக் காற்று மாசுபாடு (Indoor Pollution)**

உலகில் உள்ள பாதி அளவுக்கும் அதிகமான குடும்பங்கள், தங்களது வீடுகளில் உயிரி பொருட்கள், மரக்கட்டை, சாணம் அல்லது பயிர் எச்சங்களை எரிபொருட்களாகப் பயன்படுத்துகின்றனர். இவை குறிப்பாக, கார்பன்-மோனாக்சைடு போன்ற உட்புற மாசுகளை உருவாக்குகின்றன. உலக சுகாதார அமைப்பின் (World Health Organisation) கூற்றுப்படி, ஒரு பில்லியன் மக்களில் குறிப்பாக, பெண்களும், குழந்தைகளும் உட்புற காற்று மாசுபாட்டால் தினமும் 100 பேர் இறக்கின்றனர். அதிக நேரம் வீட்டின் உட்புறங்களில் சமையல் செய்வதால், ஏற்படும் விஷவாயு சிறு குழந்தைகளை வெகுவாக பாதிக்கின்றது. இந்தியாவில், 80% வீடுகளில் உயிரி எரிவாயு பயன்படுத்துத்தப்படுகிறது. இதன் விளைவாக, 5,00,000 பெண்கள் 5 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகள், ஒவ்வொரு வருடமும் உட்புற காற்று மாசுபாட்டால் இறப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால், அதிக கடுமையான சுவாச தொற்று (Acute Respiratory Infections) ஏற்படுகின்றது. சுற்றுச் சூழலில் புகையை

வெளியேற்றுவது, காற்று மாசுபாடு, இரசாயன உறுத்தல்கள் குளிர் வானிலை, இவை அனைத்தும் உடல் அழற்சி, சுவாசத் தொற்று, குறைந்த எடையுடன் குழந்தை பிறத்தல் போன்ற பாதிப்பகளை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன. புகைப் பழக்கம் இல்லாத குழந்தைகளை விட புகைப் பிடிக்கும் அம்மாக்களால் 70% சுவாசக் கோளாறு மையக் காது தொற்று ஏற்படுகின்றது. சுவாச நோய் (Respiratory disease) உள்ள குழந்தைகளின் உடல் நிலை, புகையிலையை புகைக்கும் சூழலால் மிக மோசமாக பாதிப்படைகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 2. வெளிப்புற மாசுபாடு (Outdoor Pollution)

60% வியாதிகள் சுவாசத் தொற்றுடன், காற்று மாசுபடுவதால் ஏற்படுகின்றன. வெளிப் புற மாசுபாடுகளான சல்பர்-டை-ஆக்ஸைடு, ஓசோன், நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, எளிதில் ஆவியாகின்ற கனிம கலவைகள், அனைத்து வகையான மோட்டார் வாகனங்களிலிந்து வெளியேறும் புகை, அனல்மின் நிலைய மாசுக்கள், பொது வெளியில் திடக் கழிவுகளை எரித்தல், கட்டுமானப் பணிகளால் உருவாகின்றன. உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) ஏற்கும் அளவை விட, நகரங்களில் வாழும் மக்களில் 10 மில்லியனுக்கும் அதிகமானோர், 2 முதல் 10 மடங்கிற்க்கும் அதிகமாக காற்று மாசுபாட்டால் பாதிக்கப் படுகின்றனர்.

### பாதுகாப்பற்ற குடிநீர், மோசமான தூய்மை (Unsafe Drinking water and Sanitation)

அசுத்தமான குடிநீர், துப்புரவு பற்றாகுறை, வியாதிகளின் எல்லையை விரிவாக்குகின்றன. இது வாழ்க்கையை அச்சுறுத்துவதோடு, அதிகமான வயிற்றுப்போக்கு வியாதியானது சுற்றுச் சூழல் காரணிகளால் 80% - 90% உருவாகின்றது. மோசமான துப்புரவு நிலை, தேவைக்கு குறைந்த ஆட்கள், சமூக சுகாதாரம் இவை அனைத்தும் வயிற்று போக்கு தொற்றை உருவாக்குகின்றன. இருந்த போதிலும், குறிப்பிட்ட முதலீடுகளால் குடிநீர் விநியோகிப்பதில் வளர்ச்சி காணப்பட்டாலும், உலக மக்கள் தொகையில், 20% மக்கள் துப்புரவின்றியும் 18% மக்கள் பாதுகாப்பான குடிநீர் இன்றி தவிக்கின்றனர். மேலும் 40% மக்களுக்கு தூய்மையான சுகாதாரம் கிடைப்பதில்லை. ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் குறிப்பாக ஆப்பிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா நாடுகளில் சேரிகளில் வாழ்கின்றனர்.

### அபாயகரமான இரசாயனங்களின் வெளிப்பாடு (Menace Substance Exposure)

தேசங்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த பயன்படுத்தபடும் அபாயகரமாய் வளர்ந்து வரும் ரசாயனங்கள், குழந்தைகளின் ஆரோக்கியத்தை ஒடுக்குவதோடு பாதுகாப்பற்ற நீர், மோசமான சுகாதாரத்திற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. தொழில்மயம், நவீனமுறை விவசாயம் மூலம் நிறைய நன்மைகள் கிடைக்கின்ற போதிலும், அடிக்கடி வெளிப்படும் பூச்சுக் கொல்லிகளினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் பொருத்தமற்ற விகிதாசாரம் மற்ற பிரச்சனைகளோடு சேர்ந்து கொள்ளுகின்றன. மீள்சுழற்ச்சி நடவடிக்கையால் வெளியேறும்,

பாதரசம் நைட்ரேட்ஸ், ஆர்சீனிக், குடிநீரிலுள்ள புளுரைடு இவை அனைத்திலும் மறைந்திருக்கும் நச்சுக்கள் காணப்படுகின்றன.

உலக தொழிலாளர் அமைப்பின் (International Labour Organisation), பொருளாதார அறிக்கையின் படி, 5-17 வயதுக்கு உட்பட்டோர் 352 மில்லியனுக்கும் அதிகமானோர் வேலையில் முறைசாரா துறை, பணம் செலுத்தப்படாத சட்ட விரோத வேலை போன்ற காரணங்களால் பாதிப்படைகின்றனர். இவை அனைத்தையும் உலகமே ஒப்புகொள்ள வேண்டிய நிலை உள்ளது.

### 1. காரீயம் (Lead)

சுற்றுசூழல் பாதுகாப்பு, குழந்தைகள் காரீய விஷ தடுப்பு கூட்டமைப்பு (Environmental Defence and the Alliance to End Childhood Lead Piosoning) கூற்றுப்படி காரீயம், வளரும் நாடுகளில் குழந்தைகளுக்கான சுற்றுசூழல் பிரச்சனைகளை ஏற்படுத்துவதில் முதன்மையாக உள்ளது, சிறிதளவு காரீயம் கூட பெரிய அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, மூளை வளர்ச்சியை பாதிக்கிறது. இரத்தத்தில் காணப்படும் ஒவ்வொரு 10மி.கி. காரீயமும், 6 அலகு நுண்ணறிவு இழப்பிற்கு காரணமாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. காரீயம் கலந்த எரிவாயு 80% - 90% காற்றின் மூலம் பரவக்கூடிய மாசுக்களால் பெருநகரங்கள் பாதிக்கப்படுகின்றன. இது மேலும், அப்பகுதியில் வாழும் மக்களின் இரத்தத்தில் காரீயத்தின் அளவை அதிகரிக்கச் செய்கிறது. இந்த காரீயமானது, மண், காற்று, குடிநீர், உணவு போன்ற பொருட்களில் கலப்பதின் மூலம் இளம் குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான சவாலாக விளங்குகிறது.

### 2. பூச்சிக் கொல்லிகள் (Pesticides)

பூச்சிக் கொல்லி மருந்துகளில், சில வகைகள் வளரும் நாடுகளால் தடை செய்யப்பட்ட போதிலும், வளர்ச்சியில் பின் தங்கிய நாடுகள் அவற்றை அதிக அளவில் பயன்படுத்துகின்றன. விவசாயத்தின் போது பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளால் மனிதர்கள் பலவகையான நோய்களுக்கு ஆளாக நேரிடுகின்றது. பூச்சிக் கொல்லிகளை நிலத்தில் தெளிப்பதின் மூலம் குடிநீர் மாசு அடைகிறது. எனவே, பூச்சிக் கொல்லி மருந்துகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கண் எரிச்சல், சரும நோய்கள், சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகளைக் கொண்ட, நீண்ட கால உடல் நல பிரச்சனைகளான புற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

### குழந்தைகளுக்கு சுற்று சூழலின் மூலமாக ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகள், அவற்றிற்கான கல்வியை உருவாக்குதலும், தொடர்ச்சியான விழிப்புணர்வை வளர்த்தலும் (Continue to raise awareness and provide education about children's environmental health issues)

1997-ம் ஆண்டு, G-8 நாடுகள், முதன் முதலாக குழந்தைகளுக்கான ஆரோக்கியமான சுற்று சூழல் பொறுப்புணர்வின் முக்கியத்துவத்தை பிரகடனப்படுத்தின. மேலும், இது சார்ந்து சர்வதேச, தேசிய மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது. சர்வதேச நிறுவனங்கள் குழந்தைகளை பாதிக்கும் சுற்றுச் சூழல், சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகளை

தீர்ப்பதற்காக சிறப்பு அமைப்புகளை உருவாக்கியது. கூடுதலாக, பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலமாக குழந்தைகளை சுற்று சூழல் அழிவிலிருந்து பாதுகாக்கவும், ஆரோக்கியமான சுற்று சூழலை ஊக்குவிக்கவும் பல்வேறு வகையான செயல் திட்டங்களை வகுத்தன.

**சுற்று சூழலில் புகையிலை, புகை பிடித்தலை குறைத்தலும், இவற்றிலிருந்து வெளிப்படும் மாசுக்களிலிருந்து குழந்தைகளை பாதிப்படைவதை கல்வி, ஒழுங்கு முறை, தூய்மையான எரிபொருள் உபயோகித்தல் விழிப்புணர்வின் மூலமாக குறைத்தல். (Reduce children's exposure to pollutants through education, regulation, use of cleaner fuel and reducation of environmental tobacco smoke)**

சிகரெட்டுகள், சமைக்கும் அடுப்புகள், காற்றினால் ஏற்படும் மாசுகள், இவற்றிலிருந்து வெளிப்படும் மாசுக்களால் ஏற்படும் சுவாசக் கோளாறு, ஜன்னி போன்ற மரணங்களை குறைப்பதற்கான யுத்திகளை உருவாக்க வேண்டும். அரசு உட்புற மாசுகளை குறைக்க தேவையான நடவடிக்கைகளின் மூலம் கூடுதல் ஆற்றலுடைய பாதுகாப்பை ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகள் அடிக்கடி புகையிலை உபயோகிப்பதை நிறுத்த உலகளாவிய சுகாதார வல்லுனர்கள் சட்டமன்ற தலையீடுகளோடு, இணைந்த கல்வித் திட்டங்களை பரிந்துரைக்கின்றனர்.

**சுத்தமான குடிநீர், சுகாதார வசதிகள் சார்ந்த திட்டங்களில் மூதலீடு செய்தலும், சிறந்த சுகாதாரத்திற்கான பயிற்சியை மேம்படுத்துதலும் (Invest in programmes to increase access to clean water and sanitation facilities and to promote better hygine practices)**

வயிற்றுப் போக்கால் ஏற்பட்ட மரணங்கள், 1999 - 2000 இடைப்பட்ட காலத்தில் 50% வாய் வழி வறட்சி நீக்கல் சிகிச்சையின் மூலமாக குறைந்துள்ளது. வயிற்றுப் போக்கால் ஏற்படும் வியாதிகள் குறைந்துள்ளது என்பதற்கு சில சான்றுகள் உள்ளன. உள்நாட்டு சுகாதாரம் துப்புரவு வசதிகள், சுத்தமான குடிநீரை அதிகரித்தல், ஊட்டச் சத்ததை வளர்த்தல், பால் கொடுக்கும் பழக்கம், இவற்றுடன் வயிற்றுப் போக்குக்கான மருத்துவ சிகிச்சை வயிற்று போக்கு எனும் நோயை முறியடிக்கும். நீர் ஆதாரம் துப்புரவு தேவைகளை வளர்த்தாலே வயிற்றுப் போக்கை 20% - 26% வரை குறைக்க முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் நல்ல சுகாதார பழக்கமான, ''தினமும் கைகளை சுத்தமாக கழுவுதல்'' மூலம் வயிற்றுப் போக்கு பிரச்சனையை 35% வரை குறைக்க முடியும்.

**காரீயம் விஷ காரீயம் சார்ந்த வேலைகள்/செயல்களில் குழந்தைகள் ஈடுபடுவதை குறைத்தல் (Reduce children's exposure to lead and screen for lead piosoning)**

காரீயம் கலந்த பெட்ரோலை, உலக அளவில் 50 நாடுகள் பயன்படுத்துகின்றன. அதில் குறிப்பாக, 20க்கும் மேலான வளர்ச்சியில் பின் தங்கியுள்ள நாடுகள் படிப்படியாக, நல்ல பயிற்சியுடன், மாற்றத்திற்கான குடிமைப் பாங்கினை ஊக்குவித்து, குழந்தைப் பருவ காரீய விஷத்திற்க்கு முடிவை கொண்டுவரும் பொருட்டு, காரீயம் கலந்த பெட்ரோலை குறைக்கவோ அல்லது தடுக்கவோ முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**அபாயகரமான இடங்களில் வேலை செய்யும் குழந்தைகளின் அவல நிலையை மதிப்பிடுதலும், களைதலும்** (Evaluate and address the plight of children employed at hazardous workplace)

குழந்தைகள் வாழ்கின்ற, விளையாடுகின்ற, வேலை செய்கின்ற இடங்களில் இராசயனங்களின் வெளிப்பாடு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. குழந்தைகளை பயமுறுத்தும், குறிப்பாக அபாயகரமான இடங்களில் செய்கின்ற வேலைகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்களின் மீது, நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும், சகித்து கொள்ள முடியாத, அபாயகரமான சூழலில் வேலை செய்கின்ற குழந்தைகளை அடையாளம் கண்ட கண்காணிப்பு அமைப்புகள் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மிக மோசமான நிலையில் குழந்தை தொழிளார்களாக உள்ளனர் என்பதை 120 நாடுகள் பங்கேற்ற மாநாட்டில் ஒப்புக் கொண்டுள்ளது.

**தாரளமயமாதல், உலகமயமாதல், தனியார்மயமாதல்**

**(Liberalisation, Globalization and Privatisation)**

**முன்னுரை (Introduction)**

உலகமயமாதல் என்ற சொல் 1980-ல் சேர்க்கப்பட்டது. அதற்கு முன்பாகவே, பல நாடுகளில் இது பற்றிய கருத்து இருந்தது. இது வாழ்க்கையின் அனைத்து கோணங்களிலும் பொருளாதாரம், கல்வி, நுட்பவியல், கலாச்சாரம், சமூகம் என அனைத்தையும், இன்றைய நவீன நாகரீக நாட்களில் உலகமயமாதல் தொட்டு விட்டது. "உலக கிராமம் எப்போதுமே உலக மயமாதலை முன்னிலைப் படுத்தும்". மேலும், உலகத்தை மின்னனு தொடர்புடன் இணைக்கும் புரட்சியை இவ்வார்த்தை குறிக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி, உலகமயமாதல் நடப்புப்போக்காய் மட்டுமல்லாமல் எதிர் கால உலக அமைப்பாய் மாறும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**வளர்ந்து வரும் நாடான இந்தியாவில் உலகமயமாதலின் தாக்கம்**

**(Impact of Globalization on India)**

**1. தொழில் நுட்பத்தில் அடைவு (Technological Achievement)**

உலகமயமாதலால் தொழில் நுட்பத்தை அடைவதில் கடுமையான போட்டி வளர்ந்து வருகிறது. அறிவைப் பெற உலக முழுவதும் இணைய வசதி சேவை அளிக்கப்படுகின்றன. மற்ற நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசியின் புரட்சியால் பயன் அடைந்துள்ளோம்.

**2.சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சி (Growth of International Trade)**

கட்டணத் தடைகள் விலகியதால் தேசங்களுக்கு இடையேயான வர்த்தகங்கள் வளர்ந்தன. இது சர்வதேச வர்த்தகத்தினால் (General Agreement on Service and Trade, World Trade Organisation etc.) எளிதாக்கப்பட்டது.

**3. உற்பத்தியில் உயர்வு (Increase in Production)**

பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்வது உலகமயமாதலால் அதிகரித்துள்ளதன் விளைவாக, உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உலகம் முழுவதும் (Multi National Company) நிறுவப்பட்டுள்ளது.

**4. வேலை வாய்ப்புகள் (Employment Oppoutunities)**

MNC (Multi National Company), நிறுவியதால் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

**5.வெளிநாட்டு மூலதனத்திற்கான இலவச ஓட்டம் (Free flow of Foreign Capital)**

வளரும் நாடுகளின் பொருளாதாரத்தை அதிகரிக்க உலகமயமாதலின் இலவச ஓட்ட மூலதனத்தை (Free flow of foreign Capital) ஊக்கப் படுத்த வேண்டும். இது மூலதனத்தை உற்பத்தியை அதிகரிக்கும்.

**உலகமயமாதலாலின் எதிர்மறையான விளைவு (Negative Effects of Globalisation)**

**1. நாடுகளிடையே சமநிலை இல்லாதது (Inequity among Nations)**

உலக நாடுகளிடையே சமநிலையற்ற தன்மையை உலகமயமாதல் அதிகரித்துள்ளது. சில உலகமயமாதல் கோட்பாடுகள் வளர்ந்த நாடுகளுக்கு அதிக நன்மையை அளிக்கின்றன. இலவச வர்த்தக நிரலை கொண்டுள்ள நாடுகள் அதிக வெற்றியை அடைந்துள்ளன. உதாரணமாக, உலகமயமாதலால் சீனா வெற்றி கண்டுள்ளது. ஆனால், இந்தியாவைப் போன்ற வளரும் நாடுகள், இப்பிரச்சனைகளிலிருந்து வெளிவருவது கடினமாக உள்ளது.

**2. நிலையற்ற நிதித்தன்மை (Financial Instability)**

உலகமயமாதலின் விளைவால் வளர்ந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு மூலதனத்தின் இலவச ஓட்டம் ஊக்கப்படுத்தப்படுகிறது. இதனால் பொருளாதாரம் ஏற்ற இறக்கத்தை கொண்டுள்ளது. மேலும் வெளிநாட்டு இலவச மூலதனங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**3. தொழிலாளிகளின் மீதான தாக்கம் (Impact on Labours)**

உலகமயமாதலால், வேலை வாய்ப்பு திறந்த நிலையில் உள்ளது. ஆனால் தொழிலாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பு இல்லை. இது வேலையாட்களின் மீது வேலையின் தன்மை மூலமாக புதிய அழுத்தங்களை உருவாக்கியுள்ளது. இதன் வழக்கமான வேலையாக உள்ளது. மேலும், அவர்கள் வர்த்தக தொழிற்சங்கங்கள் உருவாக்குவதை அனுமதிப்பதில்லை.

**4. விவசாயிகளின் மீதான தாக்கம் (Impact on Farmers)**

உலக சந்தைகளில் இந்திய விவசாயிகள் பெரும் அச்சுறுத்தல்களை சந்திக்கின்றனர். மேலும், இவர்கள் வளர்ந்த நாடுகளின் விவசாயப் பொருட்களை குறைவான விலைக்கு இந்தியாவில் இறக்குமதி செய்வதால், சக்தி வாய்ந்த விவசாய நிறுவனங்களுடன் கடுமையான போட்டியை சந்திக்கின்றனர்.

**5. சுற்றுச் சூழலின் மீதான தாக்கம் (Impact on Environment)**

உலகமயமாதல், உலக வர்த்தகத்தின் 50% உயர்வுக்கு காரணமாக உள்ளது. பெருமளவிலான பொருட்களை, உலகம் முழுவதும் கொண்டு செல்வதால், அதிகமான புகை வெளியேற்றப்படுகிறது. உலக வங்கியால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டங்கள் சில சுற்று

சூழல் சம நிலைக்கு பேரழிவை ஏற்படுத்துவதாக உள்ளன. (எ.கா.) விரிவான இறைச்சி ஏற்றுமதியும், இறக்குமதியும்.

### 6. பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் (Influence of Multi National Company)

உலகமயமாதலில், பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Company) ஒரு உந்து சக்தியாக உள்ளது. அவர்கள் கட்டளையிடும் அதிகார நிலையில் உள்ளனர். பன்னாட்டு நிறுவனங்கள் வலிமையான வர்த்தக சக்தியாக வளர்ந்து வருகின்றன. குறிப்பாக, இந்நிறுவனங்கள் அந்நாடுகளில் உள்ள இயற்கை வளங்களையும், மலிவான வேலையாட்களையும் சுரண்டுகின்றன.

### 7. தேசிய இறையாண்மைக்கான அச்சுறுத்தல் (Threat to National Sovereignty)

உலகமயமாதலாலின் காரணமாக, சில தற்சார்பு நாடுகள் தங்களது பொருளாதார சக்தியை சர்வதேச நிறுவனங்களான ஐ.நா.சபை (United Nations), உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organisation) போன்ற உலக அமைப்புகளுடன் மாற்றி அமைத்துள்ளன. இதன் கொள்கைகள் உலகமயமாதலுக்கு சாதகமாக உள்ளன. பீட்டர் டிரக்கர் கூற்றுப்படி, உலகமயமாதல் வர்த்தகம் செய்யும் வழியை, நல்ல விதமாகவோ அல்லது மோசமான விதமாகவோ மாற்றி உள்ளது. இது நிறுத்த முடியாதது. எனவே, உலகமயமாதல் என்பது தவிர்க்க முடியாதது. இதன் காரணமாக, இந்தியா அனைத்துத் துறைகளிலும் உலகளாவிய போட்டியோடு இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

### தாராளமயமாதல் (Libralisation)

உலகமயமாதலின் உடனடி விளைவே தாராளமயமாதல் என்பதாகும். இது தடையில்லா, கட்டுப்பாடற்ற வர்த்தகத்தைக் குறிக்கின்றது. இந்தியா தாராளமயமாக்குதலுக்கு அதிக முயற்சிகளை மேற்கொண்டது.

### புதிய பொருளாதாரக் கொள்கை 1991 – நோக்கங்கள்
### (New Economic Policy 1991 - Objectives)

1. உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடைதல்.
2. பண வீக்கத்தை குறைப்பது.
3. வெளிநாட்டு இருப்பை பறிமாறிக் கொள்வது.

### FEMA (Foreign Exchange Management Act)

வெளிநாட்டு பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்தும் செயல் (1973) நீங்கி வெளிநாட்டு பரிமாற்ற மேலாண்மை செயல் வந்தது, இதனால் MNC (Multi National Company) சுலபமாக நுழைந்தது.

1. வெளிநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி (எ.கா) TVS, SUZUKI.
2. இறக்குமதி கட்டணத்தை குறைத்தல்.

3. ஏற்றுமதிக்கான மானியத்தை நீக்குதல்.

4. பணத்தை முழுவதும் நடப்பு கணக்கில் மாற்றம் செய்தல்.

5. வெளிநாட்டின் நேரடி முதலீட்டை ஊக்குவித்தல்.

தாரளமயமாதலின் விளைவினால் வளரும் நாடுகளில் உள்ள நிறுவனங்கள், வளர்ந்த நாடுகளின் சக்தி வாய்ந்த வர்த்தக நிறுவனங்களுடன், கடுமையான போட்டிகளை சந்திக்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்களுக்கான (Multi National Company) ஒழுங்கு வரைமுறை விதிகளின் நீக்கத்தால், உள்ளூர் சமூகம் சுரண்டப்படுகிறது.

**தனியார்மயமாதல் (Privatization)**

உலகமயமாதலின் காரணமாக, தாரளமயமாதல், இன்று ஒரு கட்டாயமாக மாறி வருகிறது. தனியார்மயம் என்பது பொதுத் துறைகளின் நிர்வாகத்தை தனியாருக்கோ, நிறுவனங்களுக்கோ, முதலாளிகளுக்கோ அளிப்பதாகும். இதன் காரணமாக, சர்வதேச நிதி அமைப்பு (International Monetry Fund) நடைமுறைப்படுத்தும் கட்டமைப்பு சார்ந்து ஒத்துப் போதல் திட்டம் தவிர்க்க இயலாதது.

**தனியார்மயமாதலின் நோக்கங்கள் (Objectives and Privatisation)**

- தனியார் துறையை வலுப்படுத்துதல்.
- உள் கட்டமைப்பு கல்வி போன்றவற்றில் அரசு கவனம் செலுத்துதல்.
- உலகமயமாதலில், அரசின் பொதுத் துறைகளில் திறமையின்மை அதிகரிக்கும் போது, உலக அளவிலான சாதனை நிகழ்த்த முடிவதில்லை. இதனால் பொதுத் துறைகளை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவு எடுக்கப்படுகின்றன.

**பொதுத் துறையின் திறனின்மைக்கான காரணங்கள் (Inability of Public Sectors)**

- அதிகாரத்துவ நிர்வாகம்
- பழைய தொழில் நுட்பம்
- ஊழல்
- பொறுப்பின்மை
- தொழிற் சங்கத்தின் ஆதிக்கம்
- அரசியல் குறுக்கீடு
- ஒழுங்கான வர்த்தக செயலின்மை

**நன்மைகள் (Merits)**

- திறன்
- அரசியல் குறுக்கீடின்மை
- தரமான சேவை

- முறையான விற்பனை
- நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல்
- பொறுப்புணர்வு
- போட்டிக்குரிய சூழல் உருவாதல்
- கண்டு பிடிப்புகள்
- ஆராய்ச்சி வளர்ச்சி
- வளங்களின் சிறப்பான பயன்பாடு
- உள்கட்டமைப்பு

**குறைபாடுகள் (Demerits)**

- வேலையாட்களிடம் சுரண்டல்
- நிர்வாகிகள் தவறாக அதிகாரத்தைப் பயன்படுத்துதல்
- செல்வம் வருவாயை சமமற்ற முறையில் பங்கிடுதல்
- வேலையாட்களுக்கு வேலை பாதுகாப்பின்மை
- தற்போதைய சூழ்நிலையில் தனியார்மயமாதல் தவிர்க்க முடியாதது. ஆனால், சில கட்டுப்பாடுகளை அரசு தனியார் துறை மீது விதிக்க முடியும்.

**1.இலவச வர்த்தக பகுதி (Free Trade Zone)**

சர்வதேச வர்த்தகத்தை எடுத்துச் செல்வதில் உள்ள கட்டுப்பாடுகளையும், தடைகளையும், ஒழிக்க ஒரே சூழலில் உள்ள நாடுகள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றன.

**2. சுங்க அமைப்பு (Custom Union)**

உறுப்பு நாடுகளில் ஒரே சீரான வணிக கொள்கைகளை ஏற்க, அனைத்து தடைகளையும், கட்டுப்பாடுகளையும் தகர்த்தன.

**3. ஐரோப்பிய பொருளாதார சமூகம் (European Economic Society)**

இது பிரான்ஸ், சுதந்திர கூட்டாட்சி ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாண்டு, லக்சம்பர்க் ஆகிய ஆறு நாடுகளை கொண்டு துவங்கப்பட்டுள்ளது. 1.1.1958-ல் இது நடைமுறைக்கு வந்தது. EEC 15 உறுப்பினர்களை கொண்டது. EEC-யில் உறுப்பினராக வேண்டுமென்றால், அந்நாடு ஐரோப்பிய நாடாய் இருக்க வேண்டும் அல்லது ஜனநாயக நாடாக இருக்க வேண்டும்.

**ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் செயல்பாடுகள் (Functions of European Economic Society)**

- ஏற்றுமதி இறக்குமதியில் கட்டுப்பாட்டின் அளவையும், சுங்க கடமையையும் நீக்குகிறது.
- பொதுவான விவசாய கொள்கைகளை இயற்றுதல்.
- பொதுவான போக்குவரத்து கொள்கைகளை இயற்றுதல்.
- கட்டண சம நிலைகளை சீர் குலைவதை கட்டுபடுத்துதல்.
- பொதுவான வணிக கொள்கையை வளர்த்தல்.

**4. வட அமெரிக்க இலவச வர்த்தக ஒப்பந்தம் (North American Free Trade Agreement)**

வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, கனடா வளர்ந்து வரும் நாடான மெக்ஸிகோ 1994 முதல் உறுப்பினர்களாக உள்ளன.

**வட அமெரிக்க இலவச வர்த்தக ஒப்பந்தத்தின் நோக்கங்கள் செயல்கள் (Objectives and Functions of NAFTA)**

- இலவச வர்த்தகத்தை எளிதாக்குவதற்காக தடைகளை உறுப்பு நாடுகளில் தகர்த்தல்.
- தொழிற்துறை வளர்ச்சியை அதிகரித்தல்.
- போட்டியை அதிகரித்தல்.
- உறுப்பு நாடுகளிடையே அரசியல் உறவை வளர்த்தல்.
- சர்வதேச சந்தையில், மெக்சிகோவில் தொழில்களை வளர்த்தல்.

**ஐரோப்பிய இலவச வர்த்தக ஒருங்கிணைப்பு (European Free Trade Cooperation)**

இந்த அமைப்பு 1959-ல் உருவானது. இதில் உறுப்பு நாடுகளாக ஆஸ்திரேலியா, நார்வே, டென்மார்க், சுவீடன், ஸ்விட்சர்லாந்து பிரிட்டன் உள்ளன.

**EFTA-வின் நோக்க்ங்கள் (Objevtives of Europen Free Trade Association)**

- வர்த்தக தடைகளை அகற்றுதல்.
- கட்டணங்களை நீக்குதல்.
- இலவச வர்த்தகத்தை ஊக்குவித்தல்.
- உறுப்பு நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தல்.

**மூன்றாம் உலக நாடுகளில் மாற்றங்கள் (Changes in Third World)**

தற்போதைய சூழலில் மூன்றாம் உலகத்திற்கான கருத்தியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை. சோவியத் ஐக்கிய நாடுகள் உடைவதற்க்கு முன்பாக, இந்த கருத்து

பிரபலமாக இருந்தது. உலகத்தில் உள்ள நாடுகள் தனித்தனியாக ஆதரவு அளித்ததால் USA USSR மிக மேன்மையான சக்திகளாக உருவானது. இந்த இரு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளாத நாடுகள் மூன்றாம் உலக நாடுகளாக கருதப்படுகின்றன. USSR (Union of Soviet Socialist Republics)-ன் சிதைவினால் மூன்றாம் உலக நாடுகள் என்ற கருத்தே மறைந்து போனது. ஆசிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், ஐரோப்பிய USA (United States of America) அல்லாத நாடுகள், இந்தியாவை பாதிப்புள்ளாக்கின. இம் மாற்றங்களின் விவாதம் பின்வருமாறு:

**ஆசியாவின் வர்த்தக பகுதிகள் (Asian Trade Zones)**

தெற்கு ஆசிய ஒருங்கிணைப்பின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பானது (South Asian Association for Regional Cooperation), 1983-ல் இந்தியா, வங்கதேசம், பூட்டான், பாகிஸ்தான், மாலத்தீவு, இலங்கை போன்ற நாடுகள் சார்க் அமைப்பின் உறுதி ஆவணத்தை ஏற்றுக் கொண்டன.

## SAARC – யின் நோக்கங்கள் (Objectives of South Asian Association for Regional Cooperation)

1. உறுப்பு நாடுகளிடையே பொருளாதார, சமூகம் கலாச்சார வளர்ச்சியை ஊக்குவித்தல்.
2. உறுப்பு நாடுகளிடையே உள்ள மக்களின் வாழ்வை வளர்த்தல்.
3. மற்ற வளரும் நாடுகளிடையே ஒற்றுமையை அதிகரித்தல்.
4. உறுப்பு நாடுகளிடையே வர்த்தகத்தை தாராளமயமாக்குதல்.
5. உறுப்பு நாடுகளிடையே ஒற்றுமையை ஊக்குவித்தல்.

**ஆசியநாடுகளின் மாற்றங்கள் (Changes in Asian Countries)**

**சீன சந்தை (China Market)**

அதிக பொருளாதார சீர்திருத்தத்தை சீனா அறிமுகப்படுத்தியது. 1984-ல் தனியார்மயமாதலை ஆரம்பித்தது. சிறப்பு பொருளாதார மண்டலங்களை சீனா உருவாக்கியது. மேலும், அதிக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்த்தது. இதன் காரணமாக, பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சி மண்டலங்களை நகரங்கள் பெருநகரங்களில் ஏற்படுத்தியது. இந்த பகுதிகள் இலவச வர்த்தக மண்டலங்களையும், விரைவான தொழில் செயல்முறைகளையும் கொண்டிருந்தன.

**இந்தியாவின் மீதான தாக்கம் (Impact on India)**

ஐரோப்பா, அமெரிக்கா மூன்றாம் நிலை நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள், தங்களது சொந்த தாக்கத்தை இந்தியாவின் மீது திணித்தது.

1. இந்தியாவின் பொருளாதாரம் மற்ற நாடுகளை சார்ந்திருத்தல் என்பது குறிப்பிடதக்க அளவில் அதிகரித்தது.

2. தகவல் தொழில் நுட்பத்தில் விரிவான வாய்ப்பு இந்தியாவுக்கு இருந்தது.
3. தொலைத் தொடர்புதுறையில் விரிவான வாய்ப்பு இந்தியாவுக்கு இருந்தது.
4. உடன்பாட்டுக்கான உத்திகள், கூட்டுமுயற்சி, இவையெல்லாம் அன்றைய நாளின் கட்டளையாக இருந்தது.
5. விரிவான ஆராய்ச்சி வளர்ச்சி.
6. இலவச வர்த்தகம் அதிகரிக்க இரு தரப்பு ஒப்பந்தங்கள்.
7. உலக வர்த்தக நிறுவனத்தின் (World Trade Organisation) உறுப்பினர்.
8. உள்நாட்டு சட்டங்களை தாரளமயத்தின் பொருளாதாரத்துக்கு ஏற்றவாறு திருத்திக் கொள்வது. (எ.கா.) FEMA (Foreign Exchange Management Act) காப்புரிமை திட்ட திருத்தம்.
9. சர்வதேச அரசியலில் உற்சாக ஈடுபாடு.
10. உற்பத்தியில் வளர்ச்சி.

இதன் முடிவாக ஐரோப்பா, அமெரிக்கா, மற்ற நாடுகள் குறிப்பாக, பொருளாதாரத்தை மாற்றின. மற்ற நாடுகளில் மாற்றங்களை காணாமல், தங்களது வர்த்தகம் வளராது என்பதை இந்தியா உணர்ந்தது. இந்திய பொருளாதாரம் உலகத்தின் மிக முக்கிய பெரிய பொருளாதாரமாக மாறியது. குறிப்பாக, வர்த்தக பங்குதாரராக புதிய சகாப்தத்தில், புதிய உற்பத்திக்கான சாத்தியத்தை இந்தியா எதிர் நோக்கி உள்ளது.

**மேலாண்மை சார்ந்த கண்ணோட்டம் (Management Perspective)**

உலகமயமாதல், கலாச்சாரம் சார்ந்த மேலாண்மை பயிற்சிக்கு இட்டுச் சென்றது. நவீன வர்த்தக அமைப்பானது, உலக மேலாண்மை பயிற்சியை ஏற்றுக்கொண்டது. ஜப்பான் சீனாவின் மேலாண்மையை புரிந்து கொள்ள இந்தியா முயற்சிகள் மேற்கொண்டது. கலாச்சார ஊக்குவித்தல், தொடர்பு சார்ந்த பிரச்சனைகள் முக்கியத்துவம் அடைந்தன. மேலாண்மைக்கான ஒவ்வொரு செயல்முறைப் பகுதியும், உலக கண்ணோட்டத்துடன் கற்றுக் கொள்ளப்பட்டன. (எ.கா.) சர்வதேச மனித வள மேம்பாட்டு மையம், சர்வதேச நிதி மேலாண்மை, சர்வதேச சந்தை.

**முடிவுரை (Conclusion)**

இந்த அலகில் குழந்தை வளர்ச்சியில் நகரமயமாதலும், பொருளாதார மாற்றமும் எப்படி தாக்கத்தை ஏற்படுத்துகிறன என்பதை விரிவாக பார்த்தோம்.

**விவாதத்திற்கும், சிந்தனைக்குமான வினாக்கள் (Questions for Discussion and Reflexion)**

1. குழந்தை வளர்ச்சியில் நகரமயமாதலின் பங்கு - விவாதிக்க.

   Discuss the role of urbanisation in child development.
2. குடும்பம் புலம்பெயர்தலின் நன்மை தீமைகளை ஆய்க.

   Analyse the merits and demerits of family migration.
3. குழந்தைகள் மீதான சுற்றுச் சுழலின் தாக்கத்தை பற்றி விவரிக்க.

   Describe the impact of environment on children developmet.
4. குழந்தை வளர்ச்சியில் தாரளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதலின் தாக்கத்தை – ஆராய்க.

   Explore the impact of liberalisation, privatisation and globalisation on child development.

**&&&&&&**

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
சென்னை - 600 097

இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (முதலாம் ஆண்டு) 2016-2017

# Course 6 : பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம்

அலகு –1 சமுதாயத்தில் பாலினத்தின் பங்குகள்

*முனைவர். M. சௌந்தரராஜன், பேராசிரியர் & தலைவர், விழுமக்கல்வித் துறை.*

அலகு –2 பாலின அடையாளமும் சமூகமயமாதலும ;

V. *விஜயகுமார், உதவி பேராசிரியர், விழுமக்கல்வித் துறை.*

அலகு –3 பாலினமும் பள்ளி கல்வித்திட்டமும்

*முனைவர். M. சௌந்தரராஜன், பேராசிரியர் & தலைவர், விழுமக்கல்வித் துறை.*

அலகு –4 பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் பாதுகாப்பும்

*முனைவர்..R.ராஜலட்சுமி, உதவி பேராசிரியர், விழுமக்கல்வித் துறை*

அலகு -5 மக்கள் சாதன ஊடகமும் சமூகப்பாலினமும்

*முனைவர்..R.ராஜலட்சுமி, உதவி பேராசிரியர், விழுமக்கல்வித் துறை*

***விழுமக்கல்வித் துறை***

***தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்***
***சென்னை- 600 097***

## அலகு- 1

## சமுதாயத்தில் பாலினத்தின் பங்குகள்

**நோக்கங்கள்**

- சமுதாயத்தில் பாலினத்தின் பங்குகள் பற்றிய அறிவைப் பெறுதல்
- பாலினத்திற்கும் பாலுக்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளுதல்.
- குடும்பம், சாதி, வர்க்கம், மதம், கலாச்சாரம், ஊடகம், சமூகத்தில் பிரபலமான கலாச்சாரம், சட்டம் மற்றும் அரசாங்கம் பற்றி மதிப்பீடு செய்தல்.
- பாலின சமத்துவமின்மைக்கான காரணங்களை ஆய்வு செய்தல்.

**அறிமுகம் :**

பாலினம் என்பது பொதுவாக பெண்களை விட ஆண்களுக்கு அதிக நன்மை தரும் வகையில் சுற்றுக்சூழல் கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்க கட்டமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பாலினம் தனிப்பட்ட குடும்பத்தின் வாழ்க்கையை பாதிக்காது. பாலினப்பங்கு என்பது தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சமூகங்கள் தங்கள் பால் அடிப்படையில் ஒவ்வொரு சமுதாயத்தின் மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு எதிர்பார்ப்புகளை அடிப்படையாக கொண்டவை. பாலினப்பங்கு தனிநபர்களுக்கும் அவற்றின் சூழல்களுக்கும் இடையிலான பரஸ்பரத்தின் விளைபொருளாகும். மேலும் பாலியல் சம்பந்தமாக எந்த விதமான நடத்தையுடனான நம்பகத்தன்மையுடையவர்கள் என்பதை பற்றியும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். பாலினங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பற்றிய ஒரு சமூகத்தின் நம்பிக்கைகளின்படி பொருத்தமான பாலினப்பங்கு வரையறுக்கப்படுகிறது.

பாலினம் மற்றும் பால் இடையேயான வேறுபாடுகள் பெண்களின் இரண்டாம் நிலையை வரையறுக்க வாய்மொழியாக வந்தது. சமுதாயத்தில் ஒழுங்குப்படுத்தக்கூடிய மற்றும் மாறுபடாத தங்கள் பாலினத்தால் பல்வேறு சமூக அமைப்புகள் நிர்வகிக்கப்படும். சமுதாயத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் பல்வேறு பங்குகளையும், பொறுப்புகளையும் மற்றும் பண்புகளையும் நிர்ணயிப்பது என்பது பெரிய அளவில் மிகப்பரவலாக உள்ளது. பெண்களின் உடலியல் வேறுபாடுகள் காரணமாக அவர்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். சமுதாயத்தில் அவர்களின் இரண்டாம் நிலை காரணமாக பாலின பாகுபாடு, சுரண்டல், சமத்துவமின்மை, அநீதி மற்றும் விதிமுறைகளால் ஒழுங்குப்படுத்தப்பட்ட சமூகத்தின் அநீதி, ஆகியவற்றின் பிரச்சினைகளை முன் வைப்பதில் இயற்கையாகவே இந்த நிகழ்வு உள்ளது.

**பாலினம் : பொருளும், வரையறையும்**

பாலினம் என்ற கருத்து முதலில் 1984 இல் ”ஜில் மத்தேயுஸ்” என்பவரால் பெண்ணியத்தை நிர்வகிப்பது என்னும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டது. மத்தேயூசின் கருத்துப்படி ஒவ்வொரு சமூகமும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையில் வேறுபடுகின்றனர் என்ற உண்மையை, பாலினம் என்ற கருத்து அங்கீகரிக்கிறது. பாலினம் என்பது இயற்கையிலும் அர்த்தத்திலுமே குறிப்பிட்ட ஒரு சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது. சமுதாயத்தில், சமூக மற்றும்

கலாச்சாரம் சார்ந்த சமூக கலாச்சார கட்டமைப்பு சமூகத்தின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு சமூகப் பங்கினைக் கொண்டிருக்கும்.

பல்வேறு சமூக நிறுவனங்கள் (அதாவது குடும்பம், திருமணம், மதம் போன்றவற்றால்) சமூக நிலைப்பாட்டின் நிலைமைகள், தாபங்கள் மற்றும் உண்மைகளை ஆய்வு செய்யும் ஒரு கருவியாக இது பயன்படுத்தப்படுகிறது. பாலின அடையாளம் இரட்டை நிலையிலிருந்து பெறுக்கமாகவும், திரவகமாகவும், உருவகமாகவும் உடையது. ஆனால் அது ஒன்றுபட்டதல்ல.

உலக சுகாதார அமைப்பின் வரையறையின்படி, ''பாலினம்'' என்பது சமூகத்தில் தீர்மானிக்கப்பட்ட பங்குகளின் நடத்தை, நடவடிக்கைகள், குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொருத்தமானதாக கருதும் ''ஆண்பால்'' மற்றும் ''பெண்பால்'' என இரு பிரிவுகளைக் கொண்டது.

பாலினம் என்பது குணவியல்பு, ஆண்மை மற்றும் பெண்மைக்கு இடையில் உள்ள வேறுபாடுகள் ஆகும். சூழலைப் பொறுத்து இந்த குணங்களில் உடலியல் சார்ந்த பாலினம் (அதாவது ஆண், பெண் அல்லது சந்ததி) பாலின அடிப்படையிலான சமூக கட்டமைப்புகள் (பாலின பங்கும் பிற சமூக பங்கு உட்பட) அல்லது பாலின அடையாளம் ஆகியவை அடங்கும்.

பாலினம் என்ற சொல் பொருளாதாரம், சமூகம், அரசியல், கலாச்சாரப் பண்புகள், வாய்ப்புகள் ஆண் மற்றும் பெண் ஆகியவற்றோடு தொடர்புடையது. பெரும்பாலான சமுதாயங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் வேறுபடுகிறார்கள். வளங்களை அணுகவும், கட்டுப்பாட்டுடன் முடிவெடுப்பதில் பங்கேற்கவும் பெரும்பாலான சமுதாயங்களில் பெண்கள் குழுவாக வளங்கள், வாய்ப்புகள் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றில் ஆண்களைக் காட்டிலும் குறைவான அணுகலைக் கொண்டிருக்கின்றனர்.

பாலினம் என்பது மனிதர்கள் சமூகத்தில் தோற்றுவிக்கும் ஒரு கருத்து ஆகும். ஒருவருக்கொருவர் மற்றும் அவற்றின் சுற்றுச்சூழலுடன் தொடர்புபடுத்தி ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள உயிரியல் வேறுபாடுகளையே இதுபெரிதும் நம்பியிருக்கிறது. மனிதர்கள் சமூகத்தில் பாலினம் என்ற கருத்தை உருவாக்குவதால் பாலினம் ஒரு சமூக கட்டுமானமாக குறிப்பிடப்படுகிறது. தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சமூகங்கள், தங்கள் பாலினத்தால் மட்டுமே தனித்துவமான குணங்கள், நிலைகள் அல்லது மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின சமூக கட்டமைப்பை நிரூபித்துள்ளனர். ஆனால் இந்த மேற்கோள்கள் சமூகங்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் இடையில் வேறுபடுகின்றன.

பாலினம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ''ஆண்பால்'' மற்றும் ''பெண்பால்'' என்னும் வெவ்வேறு சமமற்ற பங்கு மற்றும் பண்புகளை ஒழுக்கநடைமுறையில் கூறப்பட்டுள்ளது. இது ''ஆண்பால்'' மற்றும் ''பெண்பால்'' பங்குகள் மற்றும் பண்புக் கூறுகளை ''இயற்கை'' வேறுபாடுகள் என வகைப்படுத்தப்படுகிறது. இது சமச்சீர் உறவுகளில் இயல்பானதாக தோன்றுகிறது. பாலின வேறுபாட்டிற்குள் இருக்கும் பலவிதமான பாலின வேறுபாட்டை ஆராய்ந்தால் பாலினம் பற்றி கொடுக்கப்பட்ட செய்திகள் ஒரு கட்டுமானமாக வெளிப்படுத்தப்படுகின்றது. பாலின உறவு நிலையானது அல்ல. அவர்கள் கலாச்சாரம் மற்றும் கால நேரங்களில் வேறுபடுகிறார்கள். அவர்கள்

மாற்றியமைத்த புதிய வழிகளில் ஆண்மை மற்றும் பெண்மை என்று உருவாக்கப்படுகிறார்கள். பாலினம் ஒரு பரிணாமக் கருத்து என்பதால் மறு ஆய்வுக்கும் மாற்றத்திற்கும் அது உட்பட்டு இருக்கும்.

**பாலினம் மற்றும் பாலியல் இடையேயான வேறுபாடுகள் :**

பாலினம் மற்றும் பாலியல் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பாலினம் என்பது பாலினங்களுக்கு மக்கள் கூறுகின்ற வெவ்வேறு அர்த்தங்கள், மதிப்புகள் மற்றும் பண்புகளைக் குறிக்கிறது. பாலினம் ஆண் அல்லது பெண் என்ற சமூக தொடர்புள்ள மனப்பான்மை மற்றும் நடத்தைகளைக் குறிக்கிறது. பாலியல்,நாம் ஆண் அல்லது பெண் என்பதை தீர்மானிக்கின்ற பிறப்புடன் உள்ள உடலியல் பண்புகளைக் குறிக்கிறது. பால், உடற்கூறு வேறுபாடுகள், பாலின நிறமூர்த்தங்கள், சுரப்பிகள் மற்றும் உடலியல் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளைக் குறிக்கிறது.

பாலினம் தொடர்பான கட்டமைப்புகள் பாலினம் மற்றும் பாலியலை வேறுபடுத்துகின்றன. ஏனெனில், ஆண் மற்றும் பெண் என ஒவ்வொரு நபரும் பிறப்புறுப்புப் பகுதிகளை கொண்டு எளிதில் அடையாளம் காணப்படக்கூடியவர்களாக உள்ளனர். சமூக–கலாச்சார சூழலில் ஆண் மற்றும் பெண் தொடர்பான நிகழ்வு, வேறுபட்ட சமுதாயத்தின் முழு உலகத்திலிருந்தும் அவர்களின் பங்களிப்புகள், பொறுப்புகள், கடமைகள், பதில்கூறுதல் மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டதாகும். இந்தியாவில் இந்த (ஆண், பெண்) ஆண்களுக்கும் பெண்களுக்கும் படிப்படியாக சமுதாய செயல்முறை மாற்றியமைக்கப்படுகிறது. ஆண்மையையும், பெண்ணியமும் அடிப்படை கருத்திலிருந்தும் குடும்பத்தின் அடிப்படையிலுருந்தும் நிர்ணயிக்கப்படுகிறது. இது முற்றிலும் நடத்தை முறைகள் ஆகும். வரலாற்று ரீதியாக சமூக மற்றும் கலாச்சார ரீதியாக, அடையாளங்கள் சமூக அமைப்பின் கட்டமைப்பைத் தூண்டுகிறது.

பாலினம் மற்றும் பால் இடையே உள்ள வேறுபாடு பாலினம் (பாலினப்பங்கு) அல்லது பால் அடிப்படையிலான சமூகப் பங்கினைக் குறிக்கும். (ஒரு தனி நபரின் இனப்பெருக்க அமைப்பு மற்றும் இரண்டாம் நிலை பாலினப் பண்புகள் ஆகியவற்றை வேறுபடுத்துகிறது). ஒரு உள் விழிப்புணர்வின் (பாலின அடையாளம்) அடிப்படையில் சில சூழ்நிலைகளில் ஒரு தனி நபரின் பால் ஒதுக்கீடு செய்யப்படாது, மூன்றாம் பாலினம் அல்லது இரண்டும்கெட்டான் அல்லது இரண்டுக்கும் இல்லாத நிலையில் இருக்கலாம்.

பாலினம் மற்றும் பால் வேறுபாடு உலகளவில் இல்லை. பாலினம் மற்றும் பாலியல் ஆகியவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தப்படுகின்றன. சில அகராதிகள் மற்றும் கல்விக் கழகங்கள் வேறுபட்ட வரையறையை அளிக்கின்றன. விஞ்ஞானிகள் மத்தியில் பாலியல் வேறுபாடுகள் (பாலின வேறுபாடுகளுடன் ஒப்பிடுகையில்) பாலியல்ரீதியான துல்லியமான பண்புகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆண் மற்றும் பெண் உயிரினங்களுக்கு இடையில் உள்ள உயிரியல் வேறுபாடுகளைக் குறிப்பிடும் போது உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) பாலினத்திற்கு பதிலாக பாலியலைப் பயன்படுத்திக் கொண்டது. 2011 இல் அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றியமைத்தனர். அவர்கள் பாலை உயிரியல் வகைப்பாடு என்றும் பாலினத்தை ஒரு நபரின் ஆண், பெண் என்ற

சுய பிரதிநித்துவம் அல்லது சமூக நிறுவனங்களால் வெளிப்படுத்தப்படும் தனி நபரின் வெளிப்பாடுகள் என்றும் கூறுகின்றனர்.

| பாலினம் | பால் |
|---|---|
| • பாலினம் சமுதாய கட்டமைப்பில் உருவாக்கப்பட்டது, பாலினத்திற்க்கு குறிப்பிட்ட பங்கு, பொறுப்புகள் மற்றும் நடத்தை முறைகள் உள்ளன.<br>• பாலினம் கலாச்சார தனித்தன்மை வாய்ந்தது.<br>• இது சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இடையே வேறுபடுகிறது.(அதாவது சமூக நிறுவனங்களின் கட்டுப்பாடுகளின் படி) | • பால் உயிரியல் : இது இனப்பெருக்க உறுப்புளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை குறிக்கிறது.<br>• பால் இயற்கையானது, நிலையானது மற்றும் உலகளலாவியது.<br>• பால் மாற்ற முடியாது. |

**சமுதாயத்தில் பாலின பங்கு : குடும்பம், சாதி, வர்க்கம், மதம், கலாச்சாரம், ஊடகம் மற்றும் பிரபலமான கலாச்சாரம், சட்டமும் மற்றும் அரசாங்கமும்.**

பாலினம், ஆண் அல்லது பெண் என்ற சமூக தொடர்புள்ள மனப்பான்மை மற்றும் நடத்தைகளைக் குறிக்கிறது. பங்கு என்பது ஒரு குறிப்பிட்ட நிலையில் வைத்திருக்கும் ஒருவர் எதிர்பார்த்த நடத்தை ஆகும். பங்கு என்பது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட நபருக்கு வரையறுக்கப்படும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. எனவே ஒரு விபத்து ஏற்படின் அவசர மருத்துவ தொழில்நுட்பத்தின் பங்கு உயிர்களை காப்பாற்ற வேண்டும் என்பதே ஆகும்.

பாலின பங்கு என்பது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் ஆண் அல்லது பெண்ணிடத்தில் சமூகம் எதிர்பார்க்கும் மனப்பான்மைகள் மற்றும் நடத்தைகள் ஆகும். பாலின பங்கை விளக்குவதற்கு பாலியல் பங்கு என்னும் வார்த்தை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தொழில்நுட்பரீதியாக இது தவறு. உயிரியல் கட்டுப்பாடுகளால் வரையறுக்கப்பட்ட நடத்தையே பாலின பங்கு ஆகும்.

**குடும்பம் :**

பாலின பங்கு குறித்த குழந்தைகளின் முதல் தாக்கம் குடும்பம் ஆகும். பிறப்பு முதல் ஐந்து வயது வரை, பெரும்பாலான குழந்தைகள் குடும்பத்தால் சூழப்பட்டிருக்கிறார்கள். பாலின வேறுபாடுகள் பற்றி ஒரு குழந்தையின் முதல் வெளிப்பாடு அவரது பெற்றோருடன் தொடர்பு கொண்டு கற்றுக் கொள்ளப்படுவதே ஆகும். பெரும்பாலான பெற்றோர்கள் குறிப்பிட்ட ஆடைகளை தங்கள் குழந்தைகளை அணியச் செய்கின்றனர் மற்றும் குறிப்பிட்ட பொம்மைகளை வழங்குகிறார்கள். பாலினம் பற்றியபசுமையான கருத்து குழந்தைகளுக்கு குறிப்பிட்டபாலின பொம்மைகளை விநியோகம் செய்வதில் வெளிப்படும்.

ஆரம்பகால வாழ்க்கையில் பாலின பங்கினைக் கொண்டிருக்கும் குடும்பம் மற்றும் நடமுறைகளுக்கு இடையேயான தொடர்புகளை குழந்தைகள் கவனிக்கிறார்கள். வீட்டுக்குள்ளே குழந்தைப்பருவக் காரணிகள் பாலின செயல்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளது. குடும்பத்தின் நடத்தைக்கு ஒத்துப் போவதாக குழந்தைகள் கருதுவதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றது. பொதுவாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை குறிப்பிட்டபாலின நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்குவிக்கிறார்கள். பாலின பங்கு கற்பிப்பதில் பெற்றோருக்கு குடும்பத்தில் மிகப்பெரிய செல்வாக்கு இருந்தாலும் உடன்பிறப்புகளும் சமூகமயமாக்கலில் ஒரு குறிப்பிட்ட பங்கினை வகிக்கின்றனர். இதன் விளைவாக உடன்பிறப்புகள் ஒரே மாதிரியான சமுதாயத்தில் தொடர்ந்து நிலைத்து நிற்கும் பாலின பங்கினை வளர்ப்பதில் துணை புரிகின்றனர்.

**சமுதாயத்தில் பாலினமும் பாலியல் உறவுகளும் :**

பாலியல் தொடர்பான ஒரே பங்கு இனப்பெருக்கத்துடன் தொடர்புடையவை. ஆண் மற்றும் பெண் மரபணுப்பொருள் பரிமாற்றத்திற்கு பங்களிப்பு செய்கின்றன. மேலும் பெண்களுக்கு பிறப்பு மற்றும் தாய்ப்பால் கொடுப்பது போன்றபண்புகள் சமுதாயத்தில் பெண்களுக்கு ஒதுக்கப்படும் செயல்பாடுகள் ஆகும். அதாவது ஒரே மாதிரியான சித்தாந்தங்கள், மதிப்புகள், மனப்பான்மைகள், நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை வரையறுக்கப்படுகின்றன. பாலின உறவுகள், ஆதிக்க உறவுகள், ஒத்துழைப்பு, வலிமை, மற்றும் வன்முறை ஆகியவற்றின் அடிப்படையில் இவை தீர்மானிக்கப்படுகிறது.

பாலின உறவுகள் சமூக ரீதியாக கட்டியெழுப்பப்படுகின்றன. எனவே எந்த நேரத்திலும், இடத்திலும் மாறும் தன்மை உடையது. பாலின உறவுகள் குடும்பத்தின் விதிகளை பின்பற்றுகின்றன. கருத்தியல் மற்றும் சமூக அமைப்புகளில் ஆண்கள் பெண்களைவிட உயர்ந்தவர்களாக கருதப்படுகிறார்கள்.

பாலினம் குறித்த கோட்பாடுகள் பல்வேறு பரிமாணங்களுடன் அதை இணைக்கிறது. சிக்மண்ட் பிராய்ட், பாலின அடையாளத்தை ஒரு ஆண் அல்லது பெண் என்ற பாலியல் நிலையுடன் இணைத்ததைப் போல உணர்ந்தார். உயிரியல் ரீதியாக ஆண்களுக்கு பலவீனமான பாலினம் என்றும் Y குரோமொசோம் (ஆண்களிடம் மட்டுமே காணப்படுகின்றன) பெண்களின் பல்வேறு ஊனத்திற்கு பொறுப்பேற்கின்றன. ஆஸ்லே மான்டாக் தனது நூலில் பாலுடன் இணைக்கப்பட்ட மரபணுக்களால் 62 குறிப்பிட்ட குறைபாடுகள் பெரும்பாலும் அல்லது முற்றிலும் ஆண்களிடம் காணப்படுகிறது. “அவர்களில் பாதிபேர் உடல் குன்றியும், ஹீமோபிலியா (இரத்தக் கசிவு செயல்திறன்), தவறான ஸ்டெனொசிஸ் (இதயத் துடிப்பு) மற்றும் மனரீதியான குறைபாடு ஆகியவைற்றை உடையவராக உள்ளனர். ஒவ்வொரு கட்டத்திலும் கருத்தரித்தல் தொடங்கி அதிக மரபணுச் சார்ந்த இறப்பு பெண்களைவிட ஆண்களிடமே அதிகளவு காணப்படுகிறது.

இந்திய சூழலில் மரபுவழிகள் கட்டமைப்பின்படி ஆண் பேரினவாதம் சமூகத்தின் அதிகார கட்டமைப்பில் பாலின உறவுகளை நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் செய்கிறது. பரம்பரைத் தலைவன் அல்லது ஆண்கள் குடும்பத் தலைவனாக இருப்பது என்று பொருள். மேலும் அது உலகில் உள்ள ஆண் ஆதிக்கத்தை அனைத்து விதமான பாலினம், பள்ளி மற்றும் சமுதாயத்திற்கு உள்ளே, குடும்பத்திற்கு வெளியே நீட்டிக்க முடியும். இந்த மரபின் தோற்றம்

சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட வகை ஆண் ஆதிக்கம் செலுத்தும் கட்டமைப்பை வரையறுக்கின்றது. இது தனி குடும்பம், கூட்டுக் குடும்பம் போன்ற குடும்பங்கள், இளைய ஆண்கள், குழந்தைகள் ஆகியோர் இந்த ஆணின்ஆதிக்க ஆட்சியின் கீழ் உள்ளார்கள்.

இந்த சமூக அமைப்பு பெண்களை ஒரு துணை அல்லது இரண்டாம் நிலையாக வகைப்படுத்துகிறது. இது அடுத்த நிலைக்கு தங்கள் பங்குகளை நகர்த்துகிறது. 'தெற்காசியாவில் இது இந்தி மொழியில் 'பிட்ஸ்பாத்தா' எனப்படுகிறது. உருது மொழியில் 'Pidarshahi' மற்றும் வங்காள மொழியில் 'Pitritontro' எனப்படுகிறது. ஆணோ அல்லது பெண்ணோ, அது பெண்கள் முற்றிலும் சக்தியற்ற அல்லது முழுமையாக உரிமைகள், செல்வாக்கு அல்லது வளங்களை இழந்து விட்டதாக குறிப்பிடவில்லை. இது சமூக உறவுகளின் ஒழுங்குமுறை (அதாவது குடும்பம், சமூதாயம், மதம், சாதி முதலியவற்றின்) மூலம் ஆண்கள் பல்வேறு வழிகளில் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதின் மூலம் அதிகார உறவுகளையும் கட்டமைப்புகளையும் இது சுட்டிக்காட்டுகிறது. பெண்ணியவாதிகளின் கூற்றுப்படி ஆண்களின் கட்டுப்பாட்டின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளனர். அவர்கள் மீது ஆண் ஆதிக்கம் செலுத்துவது ஆணாதிக்கத்தை அடையாளப்படுத்துகிறது.

பெண்களின் கட்டுப்பாடு, பல சமூகவியல் மற்றும் பெண்ணியவாதிகளால் வரையறுக்கப்படும் அதிகாரமும் பதவியின் மூலம் பெண்களைக் கட்டுபபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை பின்வருமாறு கட்டுப்படுத்தப்படுகின்றன: பெண்களின் உற்பத்தி அல்லது உழைப்பு, சக்தி, இனப்பெருக்கம், பாலியல் இயக்கம், சொத்து மற்றும் பிற பொருளாதார வளங்கள், அதிகாரத்தில் பல வேறுபட்ட முன்னோக்குகள் உள்ளன. பின்வருமாறு பெண்ணியவாதம் ஆணாதிக்கத்தை விளக்குகிறது. ஆண்களின் மேலாதிக்கம் பெண்களை ஒடுக்கி சுரண்டுவதன் மூலம் தனது அதிகாரத்தையும், ஆளுமையையும் கொண்டது என வரையறுக்கப்படுகிறது. மேலும் பெண்கள் அவர்களின் உடல் அமைப்பு ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் உறவுகளுக்கும் எதிரான போராட்டத்தை நோக்கி அது விரிவடைகிறது.

சமுதாயம், தனிநபரின் நடத்தை மற்றும் வாழ்க்கையை வடிவமைக்க உதவுகிறது. சிலர் தனிப்பட்ட குணநலன்களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நடத்தைகளை தோந்தெடுப்பதாக நம்புகிறார்கள். ஆனால் நடத்தையானது இயல்பான நிகழ்வைக் காட்டிலும் சமூகமயமாக்கப்படுகிறது. தனிநபர்கள் தங்கள் குழு அடையாளத்தை உணர வேண்டும் மற்றும் சமூதாயத்தின் ஆண் மற்றும் பெண்ணின் பங்கு பற்றிய எதிர்பார்ப்புகளை புரிந்து கொள்ள வேண்டும்.

**பாலினமும் சாதியும் :**

'இந்திய மக்கள் ஒரு கடுமையான சாதி அமைப்பு முறையை பின்பற்றுகின்றனர். இது மக்கள் அதிகாரத்தையும் சமூதாயத்தின் அடையாளத்தையும் நிர்வகிப்பதற்கான ஒரு வரிசைக்குள்ளாகப் பிரிக்கிறது. சமுதாய சாதி அமைப்பு நான்கு தனித்தனி வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிராமணர், சத்திரியர், வைசியர் மற்றும் சூத்திரர் ஆகிய இந்த நான்கு வகுப்புகள் ''ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தவை'' என்பதால் அவை அனைத்தும் இந்து கடவுளான பிரம்மாவின் பல்வேறு உடல் பகுதியிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது.

‘உள்துறை அமைச்சகத்தின்’ கருத்துப்படி 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 166 மில்லியனுக்கும் மேலான தலித்துக்கள் உள்ளனர். இந்தியாவின் மக்கள் தொகையில் 16.2% உள்ளனர். (இந்திய அரசு,2001) மத, தார்மீக மற்றும் கலாச்சார நம்பிக்கைகள் மற்றும் அணுகுமுறைகளின்படி பல நூற்றாண்டுகளாக தலித்துக்கள் தூய்மையற்றவர்கள் அல்லது மாசுபடுபட்டவர்கள் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது’’. மற்ற சாதிகளுக்கு இது தாழ்வானதாகக் கருதப்படுகிறது. மேலும் இது‘‘தீண்டாமை’’ எனக் கருதப்படுகிறது. இதன் விளைவாக அவர்கள் பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டுள்ளனர். உதாரணமாக, ஒரு பழக்கம், தலித்துக்கள் பொது வீதிகளில் செல்லும்போது தங்களின் நிழல் ஒரு ‘மேல் சாதி’ இந்துவின் மீது விழுந்து விடுமோ என்ற அச்சத்தை அவர்களுக்கு தருக்கிறது. இன்றைய தினம் இந்தியாவில் சாதிகள், சாதிப்பிரிவினைகள் மற்றும் அவர்கள் மீதான பாகுபாடு ஆகியவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கவில்லை.

இந்தியாவின் அரசியலமைப்பில் வழங்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கோட்பாடுகளின் ஒழுங்குமுறை மற்றும் ஜனநாயக தூண்கள் இந்தியாவில் காலணித்துவ அரசின் செயற்பட்டியலை நிறுத்தி வைத்தல் அல்லது சமூக சமத்துவமின்மையினை குறைந்தபட்சம் குறைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. வளர்ந்த மாநிலத்தின் குறிக்கோள், தாழ்த்தப்படடவர்கள் மீது பல நூற்றாண்டு பழக்கவழக்கங்களைக் குறைப்பதன் மூலம் நவீன சாதி குறைவான சமூகத்தை உருவாக்குவதும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சந்தைகளில் இட ஒதுக்கீடு, குறிப்பாக அரசாங்க அதிகாரத்துவம் மற்றும் அதிக அளவிலான பொதுத்துறை நிறுவனங்களில் இட ஒதுக்கீடு, பிறப்பு, பாலினம் அல்லது மத நம்பிக்கைகள் இல்லாமல் அனைத்து குடிமக்களையும் சமமான முறையில் நடத்த அரசை இந்திய அரசியலமைப்பு கோருகிறது. எனினும் சமுதாயமானது முறையான கொள்கைகளின் அடிப்படையில் மட்டும் செயல்படவில்லை. சட்டரீதியான கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சமூக பாகுபாட்டை நீக்குவதற்கான முயற்சி என்பது சமூதாய அமைப்பின் சிக்கல்களில் சிக்கிக் கொள்வதாகும். ஜாதியம்,நிறம், வகுப்பு வாதம் ஆகியவற்றின் நாகரீகமான அம்சங்கள் இவைகள். மனிதர்களுக்கு சிந்தனை மற்றும் மதிப்புகளில் சமமான வாய்ப்புகளை அளிக்கவேண்டும்.

முக்கியத்துவம் வாய்ந்த மேற்குல கல்விக் கருத்துகளில், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கு இடையே ஒரு முரண்பாடு உள்ளது. சமூக நீதிப் பிரச்சினை, சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் கூற்றுக்களை சமநிலைப்படுத்துவதற்கான அடிப்படைகளை உருவாக்குகிறது. சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கு பிரதிநிதித்துவத்தை வழங்கும் சில அறிஞர்கள் சமத்துவத்திற்கு மிகவும் குறைந்த முன்னுரிமை அளிக்கிறார்கள். சமத்துவம், ஒரு சக்தி வாய்ந்த, தார்மீக மற்றும் அரசியல் உச்சம் ஆகும். இது பல நூற்றாண்டுகளாக தூண்டப்பட்டு மனித சமுதாயத்தை வழிநடத்தும். அரசியலின் உயர்வான நிலையில் பாலினம், பள்ளி, சமூதாயம் மற்றும் சமத்துவம் என்ற கருத்து அனைத்து மனிதர்களுக்கும் அவர்களின் வண்ணம், பாலினம், இனம் அல்லது ஜாதியாக இருந்தாலும் சமமான மதிப்பைக் கொண்டிருக்கிறது. மனிதனைப் பொறுத்த வரையில் சமமான சிந்தனை மற்றும் மரியாதைக்கு தகுதியுடையவர்கள் என்று கருதப்படுகிறது. ஒற்றுமையானது சமத்துவத்திற்கு சமமானதாக இருக்க

வேண்டும். சமத்துவம் சுயாதீனமாக அல்லது சமத்துவத்திற்கு புறம்பான கொள்கைகளுடன் இணைந்திருப்பது நீதியின் பிரதிபலிப்பாகும்.

இந்த சமகால சூழ்நிலையில் மனிதர்களிடையே சமத்துவம் என்பது மாநிலங்கள் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு எதிராக குரல் எழுப்ப ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. இது மக்களிடையே பதவிகள், செல்வம் அல்லது சிறப்புரிமைகளின் ஆற்றல் வாய்ந்த கட்டமைப்புகளை உருவாக்குகிறது. தனிநபரின் நலனுக்காக உருவாக்கப்பட்ட சமூக மற்றும் அரசியல் நிறுவனங்கள் தனிநபர்களின் நல்வாழ்க்கையின் நிமித்தம் தொடர்கின்றன. ஜான் லாக்கின் சமூக ஒப்பந்த கோட்பாட்டின் படி சிவில், சமுதாயம் மற்றும் அரசுக்கு வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் சொத்து ஆகிய மூன்றும் அடிப்படை கூறுகள் ஆகும் என்று வாதிட்டார். ஜனநாயகத்தின் பரிணாம வளர்ச்சி இந்த நல்லொழுக்கங்களில் சமத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றின் அம்சங்களைச் சேர்த்தது. இந்தியாவின் சமூக சமத்துவமின்மை உலகில் வேறு எங்கும் இல்லாத சாதியினர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்தியாவில் சாதி நீண்ட காலம் வாழந்தாலும் நவீன காலத்தில் அது இந்தியா மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்திருக்கிறது. சுதந்திரம் பெற்றதிலிருந்து சாதியில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அது இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்களை உள்ளடக்கியிருக்கிறது. அதன் முன்னுரையில் இந்தியாவின் அரசியலமைப்பு சாதி அடிப்படையில் எதிர்மறை பொது பாகுபாட்டை தடை செய்கிறது. இருப்பினும் சாதித் தரவரிசை மற்றும் சாதி அடிப்படையிலான தொடர்பு பல நூற்றாண்டுகளாக நிமிர்ந்திருக்கின்றன. மேலும் எதிர்காலத்தில் நகர்ப்புற அமைப்புகளை விட கிராமப்புறங்களில் இன்னும் அதிகமாகவும் உறவினர்களுடன் தனிப்பட்ட தொடர்புகளில் இருப்பதை விடவும் அதிகமாக தொடர்ந்து இருக்கும்.

**மதம் :**

உலகின் பிரதான மதங்கள், சமுதாயத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொருத்தமான பங்கு குறித்த சில கருத்துக்களைக் கொண்டுள்ளன. பாரம்பரியமாக, இது வீட்டிலும் உலகிலும் பெண்களை வெளியே வைத்துள்ளது. இப்பொழுதெல்லாம் இது உண்மையாகவே உள்ளது. சமூகத்தில் அதிகமான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இதில் பெண் தொழிலாளின் சந்தை பங்களிப்பு மற்றும் அதன் மீதான மனப்போக்கு ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. இது சம்பந்தமாக சில சமயங்களில் மதங்கள் வேறுபடுகின்றன. ஆனால் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்குப் பற்றி இதே போன்ற நெறிமுறை கூற்றுக்கள் அனைத்து மதங்களிலும் காணப்படுகின்றன. ஆயினும் முஸ்லீம்கள் மற்றும் பௌத்தர்கள், யூதர்கள், புரட்டஸ்டன்ட் மற்றும் கத்தோலிக்கர்கள் ஆகியோரைக் காட்டிலும் குறைவான சமத்துவம் பாலினம் சார்ந்த பங்கினைக் கொண்டுள்ளனர் எனக் காட்டுகிறது. இஸ்லாமியம், குறிப்பாக பெண்களை அடக்குவதற்காக விமர்சிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியத்தைப் பற்றிய எதிர்மறையான மனோபாவங்கள் மேற்கத்திய சமூகங்களில் பெரும்பாலும் அடிக்கடி வெளிப்படுத்தப்படும் பகுதியாகும். பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம் ஆகியவற்றில் இஸ்லாமியம் பாலின சமத்துவமற்ற தன்மையைக் கொண்டதாகவே தோன்றுகிறது. இஸ்லாமிற்குள் வேறுபட்ட பாலின பங்கு காணப்படுகிறது. மேலும்தனி நபர்கள் தங்கள் சொந்த வாழ்வின் பின்னணியில் இந்த வித்தியாசத்தை விளக்குகின்றனர். இஸ்லாமிய தலைவர்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான மதிப்பை வலியுறுத்துகின்றனர். ஆனால் ஆண்களும் பெண்களும் சமுதாயத்தில் வேறுபட்ட பங்கினைக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். முஸ்லீம் பெண்ணியவாதிகள் இதை எதிர்த்துப் போராடுகின்றார்கள். பெண்களுக்கு

ஒரு பொதுப் பங்கினை அனுமதிக்க வேண்டும். அதே வேளையில் மற்ற சமூகங்களில் உள்ள விவகாரங்களைப் போலவேகுடும்பத்தில் ஆண்கள் அதிக ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறுது.

மதத்தின் குறித்த நிலைக்கான பங்கிலும், பாலின பழமைவாத கற்பித்தலிலும் பெரும்பாலான மதங்கள், மதசார்பற்ற நபரைவிட ஒரு மதத்தை சார்ந்த நபரிடம் குறைந்த அளவிலான மக்களாட்சி மாண்புகளை எதிர்பார்க்கிறார்கள். உயர்ந்த மத போதனை, சமய சார்பின்மை மற்றும் சமய சேவைகளில் பங்கேற்பு ஆகியவற்றில் மத நம்பிக்கைகளின் அடிப்படையில், பாரம்பரிய பாலின பங்கு சார்ந்த மனப்பான்மைகள் சமமாக இருக்க வேண்டும். சுயக்கோட்பாடு என்பது மத கோட்பாடுகளுடன் தொடர்புடையது.

**கலாச்சாரம் :**

கலாச்சாரம் என்பது சமுதாயத்தின் நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைக் குறிக்கிறது. குறிப்பாக இவை பாரம்பரியம் அல்லது மதத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றன. கலாச்சாரம் என்பது ஒவ்வொரு சமூகத்தின் உடமையாக கருதப்படுகிறது. இது விசயங்கள் செய்யப்படுவதையும் ஏன் அப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய நமது புரிதலை வடிவமைக்கும். கலாச்சாரக் கொள்கைகளின் உலக மாநாடு (மெக்ஸிகோ 1982) படி "கலாச்சாரம்" என்பது ஆன்மீக, பொருள்வகை, அறிவுசார்ந்த, மனவெழுச்சி சார்ந்த உயர்ந்த கூறுகளின் முழு சிக்கலான ஒரு பண்புகளைக் கொண்ட சமுதாயம அல்லது ஒரு சமூகக் குழுவைக் குறிக்கும். இது கலை மட்டுமல்லாது, வாழ்க்கையின் முறைகள், மனிதனின் அடிப்படை உரிமைகள், மதிப்புகள்,மரபுகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பாலினம், பெண்கள் அல்லது ஆண்கள் இடையே உள்ள உறவு பற்றிய பண்புகளை மற்றும் நடத்தைகள் பற்றிய எதிர்பார்ப்புகள் மற்றும் கலாச்சாரம் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாலின அடையாளம் மற்றும் பாலின உறவுகள் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. ஏனென்றால் அது தினசரி குடும்ப வாழ்க்கையிலும், பரந்த சமூதாயத்திலும், பணியிடத்திலும் கூட அமைந்துள்ளது.

பாலினமானது கலாச்சாரத்தை போன்றே ஆண்களிடமும் பெண்களுடமும் அவரவருக்குரிய நடத்தை மற்றும் பண்புகளை எதிர்பார்க்கிறது. பாலினமானது கலாச்சாரத்தால் வடிவமைக்கப்படுகிறது. பாலின அடையாளங்களும், பாலின உறவுகளும் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களாகும். ஏனெனில் அவை குடும்பம், பரந்த சமூகம் மற்றும் பணியிடத்தில் தினசரி வாழும் முறைகளை வழிநடத்தி அவர்களை நெறிமுறைபடுத்துகிறது. சமூக உறவுகளின் குறிப்பிட்ட சில இயல்புகள் சமூகங்களிடையே வேறுபடுகின்னன. அதே சமயத்தில், பெண்களுக்கு குறைந்த சுயாட்சியும், குறைவான ஆதாரங்களும் அவர்களின் வசம் உள்ளன. மேலும் சமுதாயத்தில் பெண்களது சொந்த வாழ்வில் முடிவெடுக்கும் செயல்முறைகளின் மீது கட்டுபட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கு உள்ளது. பாலின அடிப்படையில் இந்த வகை வேறுபாடு ஒரு மனித உரிமை மற்றும் ஒரு வளர்ச்சி பிரச்சினை ஆகும். இது சங்கங்கள் மற்றும் கலாச்சாரங்களின் புள்ளிவிவரம் அல்ல. அவர்கள் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்டு மறுபகிர்வு செய்யப்பட்டு வருகின்ற உயிரினங்கள்.

சமுதாயத்தின் அழுத்தம் காரணமாக உலகமயமாதல், புதிய தொழில்நுட்பங்கள், சுற்றுச்சூழல் அழுத்தங்கள், ஆயுத மோதல்கள், அபிவிருத்தி திட்டங்கள் போன்றவற்றால் சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களின் மீது கலாச்சார மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**சமூக ஊடகம்**

கடந்த சில காலங்களில் சமூகத்தில் மாற்றங்கள் மற்றும் பாலின வேறுபாடுகள் மெதுவாக தொடங்கியுள்ளன. இந்த மாற்றங்கள் தொடர்புபடுத்துதலில் பெரும்பாலும் மெதுவாக நடைபெறும். ஆனால் குறிப்பாக சமூக தொடர்புகளில் மக்கள் தொடர்பு மற்றும் சமூகமயமாக்கலுக்கான வழிகளும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றத்துடன் இணைந்து செயல்பட ஆரம்பித்தன. இந்த மாற்றத்திற்கான மிகப்பெரிய காரணங்களில் ஒன்று சமூக ஊடகங்கள் ஆகும்.

பாலினங்களிடையே தொடர்பு கொள்ளும் போது சமூக ஊடகம் ஒரு பெரிய பங்கினை வகிக்கிறது. எனவே இணையவழி பரிமாற்றங்களின் போது பாலின பழமையாதல் எவ்வாறு உடைகிறது என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம். 1990களில் நடந்த ஆராய்ச்சியில் பல்வேறு பாலினங்களின் வெளிப்பாடுகளில் கவர்ச்சிகரமான, பிறரை சார்ந்து, ஆதிக்கமிக்க, சுயாதீனமாக, உணர்ச்சிகரமான மற்றும் இணையத்தில் ஒருங்கிணைக்கும் போது கீழ்படிதல் போன்ற சில பண்புகளைக் காண்பிக்கிறது. இந்த குணாம்சங்கள் பாலின முரண்பாடுகளால் தொடர்ந்து காட்டப்பட்டாலும், சமீபத்திய ஆய்வுகளின் படி, பாலினம் நமது சமூக வாழ்க்கையை கட்டமைப்பதில் ஒரு வலுவான பங்கினை வகிக்கிறது. குறிப்பாக ''ஆண்'' மற்றும் ''பெண்'' வகைகளை சமூகம் ஒதுக்கி உருவாக்குகிறது. சமுதாயத்தில் வேறுபாடுகளை விட பாலினத்திற்கு இடையேயான ஒற்றுமையைப் புரிந்துகொள்ளும் வரை சமுதாயத்தில் நாம் ஒரு போதும் சமரசமாக இருக்க முடியாது. இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. சமூக ஊடகங்கள் அதிக சமத்துவத்தை உருவாக்க உதவுகிறது. ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் பாலினம், பள்ளி மற்றும் சமுதாயம் பற்றிய அவர்களின் கருத்தை வெளிப்படுத்த உரிமை உண்டு. சிலர் அதை மறுக்கக்கூடும் என்றாலும் ஒவ்வொரு பாலினருக்கும் சமமான அளவுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**மக்கள் சாதன ஊடகம் :**

பாலின பாகுபாடு மற்றும் ஒரே மாதிரியானபாலின மாதிரிகள் மக்கள் சாதன ஊடகத்தில் வலுவூட்டப்படுகின்றன. ஊதாரணமாக செய்தித்தாள்களில், ஆண்கள் முன் பக்க குறிப்புகளில் நான்கில் மூன்று பங்கு இடத்தை பிடிக்கின்றனர். 1990களின் நடுப்பகுதியில் முதல் பக்கங்களின் படங்களில் 3ல் 2 பங்கு ஆண்கள் தோன்றினர். ஐக்கிய நாடுகளின் பெண்கள் பற்றிய அதன் பீஜிங் பிரகடன மேடையில் ''தொடர்ந்து ஊடக தகவல் தொடர்புகளிலுள்ள பெண்கள் பற்றிய எதிர்மறை மற்றும் இழிவான படங்களை திட்டமிட்டு மின்னணு, அச்சு, காட்சி மற்றும் ஆடியோவில் வெளியிடுவதை மாற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பெரும்பாலான அச்சு மற்றும் மின்னணு ஊடகம் பெண்களுக்கு பல்வேறு விதமான வாழ்க்கை மற்றும் பங்களிப்புகளுக்கான ஒரு சமநிலையான படத்தை வழங்குவதில்லை. மாறிவரும் உலகில் சமுதாயம் கூடுதலாக வன்முறை மற்றும் சீரழிவு அல்லது ஆபாச ஊடக பொருட்கள் எதிர்மறையாக பெண்களை பாதிக்கின்றது. சமுதாயத்தில் அவை பெரும் பங்கு வகிக்கின்றது. ஊடகத்தின் வன்முறையானது, பொழுதுபோக்கு

நிகழ்சிகளில் ஊடகங்கள் எவ்வாறு “எதிர்மறையாக” பெண்களின் உணர்வுகளை பரப்பி அவர்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஊடகங்களில் பாலின பங்கு பரவலாக இருக்கிறது. பெண்களை பாலூட்டும் தாயாகவும், மென்மையான தோற்றத்துடனும், கூட்டுணர்வுமிக்கவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவும் மனிதர்களாகவும் கருதப்படுகிறார்கள். தர்க்கரீதியாக போட்டியிடும் சுயபுத்தியுடைய உறுதியான, நிதிவழங்குநர்கள், வணிகத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஊடகங்கள் ஆண்களைவிட பெண்களை மிகவும் எதிர்மறையாக குறிப்பிடுகின்றன. ஆண்களை கடின உழைப்பாளர்களாகவும், நகைச்சுவையாளர்களாகவும், அறிவுறை பகர்பவர்களாகவும், உடலளவில் ஆவேசமானவர்களாகவும் காட்டப்படுகிறார்கள்: பெண்களை விரும்பத்தக்க, இரக்கமுள்ள, கீழ்ப்படியும்தன்மை, செயலற்ற மற்றும் பலவீனமாக உள்ளவர்களாக காட்டப்படுகிறார்கள். பெண்கள் பாசம், பகிர்வு,விட்டுக் கொடுத்தல் போன்ற உணர்ச்சிப் பழக்கங்களைக்காட்ட கூடியவர்களாகவும், மற்றவர்கள் பற்றி கவலைப்படுபவர்களாகவும் சித்தரிக்கபடுகிறார்கள். கணிணிகள் பற்றி விளம்பரங்களில் பொதுவாக ஆண்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்துவது போல் சித்தரிக்கப்படுகின்றனர். ஆண்கள் செயல் திறமிக்க பயனர்கள், செயலில் அல்லது தொழில்முறைகளில் ஈடுபடுகின்றனர். அதே நேரத்தில் பெண்கள் செயலற்றவர்களாக இருகின்றனர். பெண்களை பார்வையாளர்களாக வெறுமனே அழகாக அல்லது ஆத்திரமூட்டும் வகையில் ஊடகங்கள் சித்தரிக்கின்றது. ஊடகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே தொழில் போட்டி சமமற்றதாக உள்ளது.

இளைஞர்கள் மீதான விளைவுகளின் சுய மதிப்பு, உணர்ச்சிவயப்பட்ட வெளிப்பாடு, ஊடகங்களின் தொழில் விருப்பங்கள் போன்றவற்றில் வியத்தகு பங்கு வகிக்கின்றது. இந்த பொதுவான பழமையான கலாச்சாரம் முதலில் ஊடகங்களில் அல்லது சமுதாயத்தில் இருந்ததா இல்லையா என்பது கேள்விக்குறியே. அவைகள் முற்றிலும் உண்மை இல்லை. ஆனால் ஒரே மாதிரியான பாலினத்தை வரையறுக்கும் போது, அதை எதிர்கொள்வது கடினமாகிவிடுகிறது. அது ஒரு ஆணாகவோ அல்லது ஒரு பெண்ணாகவோ இருக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்வது கட்டாயமாகிறது.

**பாலின சமத்துவத்துக்கான மாற்றங்களின் முகவர்கள் என பிரபல கலாச்சாரம் மற்றும் கருத்துகளின் பங்கும் :**

**பிரபல கலாச்சாரம் என்றால் என்ன?**

பிரபல கலாச்சாரம் என்பது மைக்கேல் ஜாக்சனின் திரில்லர் ஆல்பம் போன்றது என விவரிக்கலாம். அதை பரவலாக பலர் விரும்பினர்.

பிரபலமான கலாச்சாரம் பெரும்பாலும் குறைவான அல்லது சிக்கலானதாக கருதக்கூடிய கருத்துக்களை குறிக்க பயன்படுத்தப்படுகிறது. வயதுவந்தவர்கள் பெரும்பாலும் குழந்தைகளின் கலாச்சாரத்தை அப்பாவித்தனம் என்று முணுமுணுக்கின்றனர். உதாரணமாக, நான்சி ட்ரூ போன்ற இளைஞர்களுக்காக தயாரிக்கப்படும் பிரபலமான இரகசிய தொடர் புத்தகங்கள், பல ஆண்டுகளாக பொது நூலக வசூலில் கிடைக்கவில்லை. நூலகர்கள் சிறிய அல்லது இலக்கிய மதிப்பு இல்லாத பிரபலமான நூல்கள் என அதனை நிராகரித்தனர்.

பிரபலமான கலாச்சாரம் என்பது புதிய கருத்து வடிவங்களை உருவாக்கும் இடமாக வரையறுக்கலாம். குறிப்பாக, முக்கிய பிரபலமான கலாச்சாரம் மற்றும் ஊடகங்கள் ஒரு கலாச்சாரம் நெரிசல் போன்ற தந்திரங்கள் மூலம் புதிய அர்த்தங்களை உருவாக்குகின்றது. கலாச்சாரம் நெரிசல் என்பது பெருநிறுவன குறியீடுகள் போன்ற ஊடகங்களை மீண்டும் மீண்டும் எழுத அல்லது மறுபரிசீலனை செய்வதை குறிக்கிறது. விளம்பரங்களை ஒரு வகையில் தொடர்ந்து ஒளிபரப்புவதன் மூலம் எடுத்துக் கொள்ளும் கருத்துகள் மாற்றியமைக்கபடுகிறது.

ஊடகங்கள் மற்றும் பிரபலமான கலாச்சாரம் ஆகியவற்றில் பாலின பழமைவாதம் பரவலாக இருக்கின்றது. நுகர்வோர் தயாரிப்புகள், ஆடைகள், பள்ளிக்கூடங்கள், பொம்மைகள் மற்றும் பாலியல் வகை செய்திகளை குழந்தைகளுக்கு உடனுக்குடன் தருகின்றது. இந்த தயாரிப்புகள் குறிப்பிட்ட பாலினர்களுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது. ஆனால் அவை கடைகளில் பெண்களிடம் பிங்க் மற்றும் நீலநிற பொருட்கள் அதிகவிற்பனைக்காக உருவாக்குகின்றது.

பாலின சமத்துவத்தை கொண்டுவரும் முயற்சிகள் நேரடியாக நடைபெறுகின்றன. அரசாங்க கொள்கையில் மாற்றங்களை கொண்டு வருவதற்க்கும் சமூக குழுக்களின் முயற்சிகள் மூலம் மக்களின் மனப்பான்மையை மாற்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஒரு சில பெண்கள் (மற்றும் சிலர்) சில ஆண்கள் பழங்கால மத நூல்களால் பாலின சமத்துவத்திற்காக நீண்ட காலமாக போரிடுவதாக, கலாச்சார வரலாற்றாளர்களின் சமீபத்திய ஆராய்ச்சி வாதிட்டிருக்கிறது. 18ஆம் நூற்றாண்டின் நடுத்தர காலங்களில் பாலின சமத்துவம் என்ற கருத்துக்கள் பரவலாகிக் கொண்டிருந்தது.

நீதி என்பது ஆண், பெண் ஆகிய இருபாலினருக்கும் சமமான ஒன்றாகும். இருவருக்கும் அனைத்து உரிமைகளும், வளங்களும் சமமாக கிடைக்க வேண்டும். எனவே, நீதிக்கு அணுகல் என்பது ஒரு உரிமையே அல்ல. அதுவும் ஒரு சமமான விளைவுகளை உறுதி செய்ய வேண்டும்.

பாலின சமத்துவமின்மையை அகற்றுவதற்கு இந்திய அரசியலமைப்பு சாதகமான முயற்சிகளை வழங்குகிறது. அரசியலமைப்பிற்கான முன்னுரையில் சமூக பொருளாதார மற்றும் அரசியல் இலக்குகளை பற்றி பேசுகிறது. குடிமக்கள்அனைவருக்கும் நீதி, சமநிலை மற்றும் வாய்ப்பினை வழங்குகிறது. மேலும், நமது அரசியல் அமைப்பில் பெண்கள்வாக்களிக்க சமஉரிமை உண்டு. அரசியமைப்பின் 25வது பிரிவு மற்ற காரணங்களிலிருந்தும் பாலியல் அடிப்படையில் மதம், இனம், சாதி அல்லது பிறந்த இடம் போன்ற பாகுபாடு தடை செய்யப்படுவதை ஆதரிக்கிறது. சட்டம் 15(3) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை வழங்குகிறது. மேலும் மாநிலக் கொள்கையின் விதிமுறைக் கோட்பாடுகள் பெண்களின் நன்மைக்காவும், பாதுகாப்பை அளிக்கின்ற வகையில் பல்வேறு விவகாரங்களையும் பாகுபாடுகளுக்கு எதிராக வழங்குகிறது.

இந்த அரசியலமைப்பு பாதுகாப்பை தவிர பல்வேறு பாதுகாப்பு சட்டங்கள் உள்ளன. பெண்கள் சுரண்டப்படுவதை அகற்றவும், சமூகத்தில் அந்தஸ்து வழங்கவும், பாதுகாப்பு சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. உதாரணமாக, சதி தடுப்பு சட்டம் 1987ல் நிறைவேற்றப்பட்டது. சாதியின் மனித நேயமற்ற தண்டனைக்குரிய சட்டம், வரதட்சணை தடுப்புச்சட்டம், 1961ல் நிறைவேற்றப்பட்டது. சிறப்பு திருமண சட்டம், 1954 திருமணம் செய்ய சரியான நிலையை வழங்கிய தலித்துகளிடம் அல்லது மாற்று மதத்தினரை திருமணம் செய்து

கொள்ளும் தம்பதி சிறப்பு திருமண சட்ட மூலம் பாராளுமன்றத்தில் 1991ல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1994ல் நிறைவேற்றப்பட்டது. பெண் சித்ரவதை மற்றும் இன்னும் பல சட்டங்கள் மூலமும், பாராளுமன்ற மூலமும், பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக தற்போது இருக்கும் சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யப்படுகின்றன. சமுதாயத்தின் தேவைகளை பொருத்து உதாரணமாக, பிரிவு 304-B இந்திய தண்டனைக்கு உரியதாக சேர்க்கப்பட்டது. நீதிமன்றம், 1960 வரதட்சணை இறப்பு அல்லது மணமகள் தற்கொலை போன்ற குறிப்பிட்ட குற்றத்தை தண்டித்து ஆயுள் தண்டனையை வழங்குகிறது.

எனவே பெண்களுக்கு பல்வேறு சட்டப்பூர்வ பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்காக வழிமுறைகள் உள்ளன. இவை எல்லாம் இருந்தாலும் பெண்கள் இன்னும் சோதிக்கப்படுகிறார்கள். பெண் சிசுக்கொலைகள், வரதட்சனை கொடுமை, பாலியல் வன்முறை ஆகியவை இன்றும் பரவலாக நடைபெற்று வருகிறது.

**பாலின சமத்துவமின்மைக்கான காரணங்கள் :**

பாலின சமத்துவமின்மை என்பது உலகளாவிய ஒரு வரலாற்று நிகழ்வாக உள்ளது என்று ‘‘லார்பா’’ குறிப்பிடுகிறார். மனித கண்டுபிடிப்புகள் பாலின அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டது. அது வேரூன்றிய உறவின் விதிகள் தொடர்பானது. சமூக உறவு, மனித உறவுகள், அதே போல் பாலினம் மற்றும் பாலின விதிமுறைகளும் சமூக அடிமட்டத்தில் ஒரு பெண்ணின் அடிபணிதலை ஊக்குவிக்கிறது. அமர்த்தியாசென் பாலின சமத்துவமின்மையை வளர்க்கும் சமூக கலாச்சார தாக்கங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் எனக் கோடிட்டுள்ளார்.

இந்திய சமுதாயத்தில் பாலின சமத்துவமின்மையின் அடிப்படைக் காரணம் அதன் மரபு வழி அமைப்பில் உள்ளது. புகழ் பெற்ற சமூகவியலளார்கள் சில்வியா, வால்வியின் கூற்றுப்படி,“ஆணாதிக்கம் என்பது பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்துதல், ஒடுக்குதல் மற்றும் சுரண்டல் ஆகியவை கொண்ட ஒரு சமுக அமைப்பு” ஆகும். பெண்கள் சுரண்டல் என்பது இந்திய சமுதாயத்தின் ஒரு பழமையான பழக்கம் ஆகும். இந்த ஆணாதிக்கஅமைப்பு இந்து, முஸ்லீம் அல்லது ஏதெனும் வேறு மதமோ என்பதை பொருத்து மாறாத ஒன்றாகும்.

இந்திய கலாச்சாரம் ஆண் குழந்தைகளை உறவுகள், அடையாளம், நிலைமாற்றங்கள், பொருளாதார பாதுகாப்பு போன்றவற்றிற்க்காக விரும்புகின்றனர். இந்த விருப்பம் வர்க்கம் மற்றும் சாதிகள் பாகுபாடற்று அது பெண்களுக்கு எதிராகவே உள்ளது. குடும்பத்தினர், மகன்களையோ அல்லது மருமகள்களையோ கொலை செய்யும் விதத்தில் பாகுபாடு, கௌரவக் கொலைகள் போன்றவற்றிற்குஎதிரான சட்டங்கள் இருந்தாலும் பெண்கள் அதிகளவு அவமதிக்கப்படுகிறார்கள். ஆண் குழந்தைக்கு விருப்பம், பெண் குழந்தை மீது வெறுப்புஎன்ற செயல்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. தீவிர வறுமை மற்றும் பற்றாக்குறை கல்வி ஆகியவையே சமுதாயத்தில் பெண்களின் தாழ்ந்த நிலைக்கான காரணங்கள் ஆகும்.

**பாலினம் – பாட நெறிக்கான கல்வி முறைகள் :**

இந்த சமுதாயத்தில் உள்ள குழந்தைகள் மிகவும் இளம் வயதிலேயே ஆண்கள் மற்றும் பெண்கள் என்று வேறுபடுத்தப்படுகிறார்கள். இது தினசரி வாழ்க்கையை ஊடுருவி, பெற்றோர்கள், சக மாணவர்கள், பள்ளி மற்றும் ஊடகங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது. சிறிய பெண்கள்

விளையாடும் போது பொம்மைகள் மற்றும் இளஞ்சிவப்பு நிறமுடைய பொருட்கள் வேண்டும் என்றும் சிறிய பையன்கள் லாரிகள் மற்றும் நீல வண்ணமுடையபொருட்கள் வேண்டும் என்கின்றனர். பல்வேறு வடிவங்கள், வெளிப்புற தாக்கங்கள் ஆகியவை வழிகாட்டும் திசையில் குழந்தைகள் பாலின சமூகத்தை அனுபவிக்கின்றனர். பெற்றோர்கள், சகோதரர்கள், ஊடகங்களின் சித்தரிப்பு மூலம் இந்த பாரம்பரிய பாலின கருத்துக்கள் இன்னும் வலுவூட்டப்படுகின்றன. இதன் விளைவாக, பாலினம் சம்பந்தப்பட்ட நம்பிக்கைகளை குழந்தைகள் உள்வாங்கிக் கொள்கின்றனர். அவர்களின் பாலின பங்கு மற்றும் நடத்தை அதன்படி மாற்றியமைக்கப்படுகிறது..

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம்பாதியில் சமுதாயத்தில் பாலினம் பற்றிய ஒரு வியத்தகு மாற்றம் ஏற்பட்டது. இது பல காரணிகளால் ஏற்பட்டது. ஆனால் மிக முக்கியமான காரணம் பணியிடத்தில் பெண்களின் பங்கு அதிகரித்ததே ஆகும். இந்த சமுதாயம் பெண்களையும் ஆண்களையும் சமமாகப் பார்க்க தொடங்கியுள்ளது. ஆனால் இன்னும் குழந்தைகள் மீதான பெரியவர்களின் எண்ணங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை.அவர்கள் குழந்தைகள் மீது பாலியல் பங்கு பற்றியஎண்ணங்களை ஏற்படுத்துவதை தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

**முடிவுரை:**

ஆசிரியர்கள் தங்கள் வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த சார்புகளை அங்கீகரிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். இந்த பாகுபாடுகள் தங்கள் வகுப்பறை நடத்தையை பாதிக்கின்றன என்றும் அறிய வேண்டும். கூடுதலாக, குழந்தைகள் சார்புகளை எதிர்கொள்வதில் பயிற்சி, அதனால் அவர்கள் பாலினத்தை ஒத்துழைப்பதை குறைக்கிறார்கள். இதனை வெளிப்படையாக அறிய வேண்டும். பாலினம் பற்றிய மாணவர்களுக்கான கல்வி அமைப்புகளை பெற்றோர்கள் பெற்றிருக்க வேண்டும். ஒருங்கிணைந்த மற்றும் நேரடியாக கற்பிப்பதற்கான பாடத்திட்டத்தை பயன்படுத்தி, சவால், பாலின சார்பு மற்றும் சமத்துவமின்மைகளை போக்க வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. பாலினம் மற்றும் பாலியல் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி,
2. சமூகத்தில் பாலினப்பங்கினை விரிவாக விவாதிக்கவும்.
3. சமூகத்தில்குடும்பம் மற்றும் மக்கள் சாதன ஊடகத்தில் பாலின பங்கு எப்படி வகிக்கின்றன என்பதை விவரி?
4. பாலின சமத்துவத்தில் மாற்றத்தின் முகவர்கள் என பிரபலமான கலாச்சாரம் மற்றும் கருத்துக்களின் பங்கை விவரியுங்கள்.
5. பாலின சமத்துவமின்மைக்கான காரணங்களை விவரிக்கவும்.

# அலகு- 2

## பாலின அடையாளமும் சமூகமயமாதலும்

**நோக்கங்கள்**

- பாலின அடையாளம் மற்றும் சமூக நடைமுறைகள் பற்றிய அறிவைப் பெறுதல்.
- பள்ளிக்கூடம், சகமாணவர்கள், ஆசிரியர்கள், பாடத்திட்டங்கள் மற்றும் பாடப்புத்தகங்களில் உள்ள சவால்களை ஆய்வு செய்தல்.
- பாலின சமத்துவமின்மை மற்றும் பெண் கல்வியுடன் அதன் உறவைப் பற்றிய அறிவை உருவாக்குதல்.
- பாடப் புத்தகத்தில் பாலினம் மற்றும் பாலின சமத்துவமின்மை தொடர்பான உறவுகள் பற்றிய கருத்துக்களை அடையாளம் காணுதல் மற்றும்
- பாடத்திட்டத்தில் பாலியல் பங்குகுறித்த ஆய்வுகளை மேற்கொள்ளல்.

**அறிமுகம் :**

பாலின அடையாளம் என்பது குறிப்பிட்ட பாலினம் மற்றும் பால் உடன் சமுதாயத்தில் தனிப்பட்ட அடையாளத்தை குறிக்கிறது. பெண் என்ற வார்த்தை வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமீப காலத்தில் பெண்ணின் உடல் பற்றியகருத்தில் சில சர்ச்சைக்குரியதாக கருதப்படுகிறது.

பாலின பிரதிநிதிகளை ஆராயக்கூடிய தரமான பகுப்பாய்வுகள் பல உள்ளன. இருப்பினும், பெண்ணியவாதிகள் பாலினப்பங்குகளின் இந்த மேலாதிக்க கருத்தாக்கங்களை எதிர்த்து சவால் விடுகின்றனர். ஒரு உயிரியல் பாலியல் நேரடியாக குறிப்பிட்ட சமூகப் பங்குகளுடன் எதிர்பார்ப்புகளை இணைக்கின்றது. ஒரு பெண்மணியானவள் இன்றும் பல சவால்களை எதிர் கொண்டிருப்பதாக உளவியலாளர்கள் கருதுகிறார்கள். சமுதாய பார்வையாளர்கள் பெண்களை ஒரு சமூகவடிவமாக மட்டுமல்லாமல் சுயமாக உணர்தல் என்பது ஒரு கலாச்சார ரீதியாக கட்டியமைக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அகநிலை அடையாளமாகும். சமூக அடையாளம் பொதுவானது, ஒரு பொதுவான கலாச்சாரத்தை உருவாக்கும் ஒரு கூட்டு அல்லது சமூக வகையுடன் அடையாளம் காண்பது சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்களால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

கல்வி, அறிவைப் பெறுவது மட்டும்இல்லை. கல்வியை விட சமூக செயல்முறை, நியமனங்கள் போன்ற நெறிகள் மற்றும் மதிப்புகளினால் பரிமாற்றத்தில் ஆண், பெண்களில் சமத்துவம் இருப்பதே முக்கியம் ஆகும்.

சமூகமயமாக்கல் என்பது ஒரு செயல்முறையாகும். இதன் மூலம் குழந்தைக்கு ஒரு அக சுற்றுச்சூழல், சட்டங்கள், நெறிகள் மற்றும் சமூகத்தின் மீது தனிப்பட்ட மரியாதை தருவதாகும்.

பாலின சமூகமயமாக்கல் என்பது ஒரு கவனம் செலுத்தும் வடிவமாகும். சமூகமயமாக்கப்படுவது எப்படி இருக்கும் என்றால் அது ஆண் அல்லது பெண் என்று பொருள்படுவதாக அமையும்.

பாலின சமூகமயமாக்கல் என்பது தனிநபர்கள் கற்றுக் கொள்ளும் செயல்முறையாகும். சமுதாயத்தில் பெண்கள் மற்றும் ஆண்கள் உடன்பிறப்புகளுடன் தொடர்புடைய மதிப்புகள் மற்றும் விதிமுறைகளின்படி பாலினம் பற்றிய புரிதல் காணப்படுகிறது. தனிநபர்கள், பாலினம் (அதாவது பெண் அல்லது ஆண்) அவர்கள் தங்கள் பாலினத்தைக் பற்றி கற்றுக் கொள்ள வேண்டும் (அதாவது தான் ஒரு பெண் அல்லது ஒரு ஆண் என்று பொருள்). இதன் மூலம் பாலின சமூகமயமாக்கல் செயல்முறை தனிநபர்கள் தங்கள் பாலின அடையாளம் அல்லது அவர்களின் வரையறைகளை வளர்த்துக் கொள்கின்றனர். ஒரு பெண்ணோ அல்லது ஒரு ஆணோ இந்த இரட்டை நிலைக்குள் தங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார். பெரும்பாலான பாலினம் என்பது குழந்தை பருவத்தில் சமூகமயமாக்கல் நடைபெறுகிறது. சமூகமயமாக்கல் அங்கு முடிவுக்கு வரவில்லை. ஏனென்றால் பாலினம் ஒரு சமூகக்கட்டுமானம் ஆகும். அது அனைத்து சமூக நிறுவனங்களையும் பாதிக்கிறது. வாழ்க்கைக் காலப்பகுதி முழுவதும் இன்றைய சமூகத்துடன் தொடர்பு உள்ளது.

**குடும்பம் :**

சமூகத்தின் மிக முக்கியமான முகவராக குடும்பம் இருப்பதால் அது குழந்தையின் வாழக்கையின் மையமாக உள்ளது. மேலும் குழந்தைகள் முற்றிலும் மற்றவர்களைச் சார்ந்து உள்ளனர். எல்லா சமூகமும் வேண்டுமென்றே சுற்றியுள்ளவற்றை சார்ந்துள்ளவை அல்ல. இதன் மிக ஆழமான விளைவு பாலின சமூகமயமாக்கலாகும். எனினும் குடும்பம், கலாச்சாரங்கள் சார்ந்த மற்றும் மனப்பான்மைகளை கற்பிப்பதற்கான பணியை தோற்றுவிக்கிறது. தங்களை மற்றும் மற்றவர்களை பெரியவர்கள் உருவாக்கும் சூழலில் இருந்து தொடர்ந்து குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள் மிக இளம் வயதிலேயே வர்க்கத்தைப் பற்றி அறிந்திருந்திருக்கிறார்கள். அந்த வர்க்கத்தின்படி ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான மதிப்புகளை வழங்குகிறார்கள்.

பாலின வேறுபாடுகள் குறித்து உண்மையில் குடும்பம் மற்ற குழுக்கள் போலல்லாமல் உள்ளது. குறிப்பாக பாலியல் வேறுபாடு இதில் அடிப்படை அறிகுறியாக நம்பப்படுகிறது மற்றும் அதே நேரத்தில் குறிப்பாக குடும்பத்தில் பாலினம் தன்னிசையான பெற்றோரின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது. குடும்பம் என்பது ஒரு 'பாலின உறவு', குடும்பத்தில் தந்தை மற்றும் தாயுடனான உறவு ஒரு காரணமாகிறது. பாலினம் குறித்த வரையறையில் அடிப்படை முக்கியத்துவம் உள்ளது. ஏனென்றால் இதில் முதல் அனுபவம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள தொடர்பு ஆகும்.

பாலின அடையாளங்களில் ஆண் மற்றும் பெண்ணின் பங்குகள் குறித்த எதிர்பார்ப்புகள் பெற்றோர்-குழந்தைகள் உறவுகளில் சமூகமயமாக்கப்படுகின்றன. இத்தகைய எதிர்பார்ப்புகள் நிகழ்காலத்துடனும் கடந்த காலத்துடனும் ஒப்பிடுகையில் புதியவையாக உள்ளது. ஒரு குழந்தையின் பெற்றோரே ஆண் அல்லது பெண் என தொடர்பு கொள்ள விரும்பும் முதல் சமூகமயமாக்கல் முகவர்கள் ஆவர். பெற்றோர்கள் வெவ்வேறு வழிகளில் நடத்தை மூலம் ஒரே

மாதிரியான வழிகளைக் கற்பிக்கிறார்கள். தங்கள் குழந்தைகள் ஆடைகள் அணிந்து கொள்வதன் மூலமும், தங்கள் குழந்தைகளின் அறைகள் மூலமும், அவர்கள் கொடுக்கும் பொம்மைகள் மூலமும் அலங்கரித்து கொள்கின்றனர். அவர்களது குழந்தைகள் விளையாடுவது, அவர்களின் சொந்த அணுகுமுறை மற்றும் நடத்தை சார்ந்ததாக அமையும்.

பாலின பங்கினை கற்பிப்பதில் குடும்பம் மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ளது என்றாலும் மூத்த உடன்பிறப்புகளும் சமூகமயமாக்கலில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். குழந்தைகள் ஒரே பாலினத்தைக் கற்றுக் கொள்கிறார்கள். மூத்த உடன் பிறப்புகளிலிருந்து மாதிரியாக்கம் மற்றும் வலுவூட்டல் வடிவங்களின் மூலம் ஒரே மாதிரியான வடிவங்களை பெறுகின்றனர். குழந்தைகள் மூத்த உடன்பிறப்புகளின் நடத்தைகள் பற்றிய பார்வை பாலின பங்கு பற்றிய எதிர்பார்ப்புகளுக்கு ஒரு வழிகாட்டியாகும். ஆகையால் இந்த கணிப்புகள் பாலின பங்கின் ஒரே மாதிரியான பாதிப்பை அதிகரிக்கும். இளைய உடன்பிறப்புகளால் உள்வாங்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். மூத்த உடன்பிறப்புகளின் நடவடிக்கை பொழுதுபோக்கு,ஆர்வம் மற்றும் இலக்குகள் பெரும்பாலும் உதாரணங்களாக சேவை செய்கின்றன. இதன் விளைவாக மூத்த உடன் பிறப்புகளின் பாலின பங்கு ஒரே சமுதாயத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**பள்ளியும், அமைப்பும் :**

பாலின பங்கு குழந்தைகளுக்கு தரும் மற்றொரு நடைமுறை செயல் பள்ளி ஆகும். இது முக்கியமாக சகாக்களின் செல்வாக்கு மூலம் நிறைவேற்றப்படுகிறது. எனவே பள்ளி என்பது மற்ற மாணவர்களை விட அதிக பாரம்பரிய பாலின பங்கினை பாதிக்கும் ஒரு பகுதி ஆகும். வகுப்பறையின் உள்ளே பயன்படுத்தப்படும் பொருட்கள் பாலின பங்கினை குழந்தைகள் கற்றுக் கொள்வதில் ஒரு செல்வாக்கு இருக்கிறது. தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் அதிகரிப்பு காரணமாக பல வகுப்பறைகளில் தொலைக்காட்சி பெட்டிகள் உள்ளன. இந்த தொலைக்காட்சிகளை மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு விரிவுப்படுத்த ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். கல்வி மற்றும் தகவல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துவதன் மூலமும், இந்தக் கல்வித் திட்டங்கள் மூலமும், பழமையான பாலியல் நடத்தைகளை குறைந்த அளவில் வெளிப்படுத்தும் திறனை கொண்டுள்ளன. ஆனால் துரதிஷ்டவசமாக இந்த திட்டங்கள் அவற்றின் கல்வி சார்ந்த நிர்வாகங்களுக்கு பாரம்பரிய ஆண், பெண் சித்தரிப்புக்கு ஒத்தவை. பள்ளி விளையாட்டுகளும் ஒரு முக்கிய வழிமுறையாகும். இது பாலின பங்கின் ஒரே மாதிரியான கற்பித்தல் மற்றும் வலுவூட்டுதல் ஆகும். குழந்தைகள் பலவற்றிலிருந்து வெளிப்படும் அமைப்புகளை பள்ளி விளையாட்டுகளில் ஐந்து வயதில் எளிதாக ஈடுபடுத்துகிறார்கள். ஆரம்ப பள்ளிகளில் ஒரு முயற்சியாக பாலின சமத்துவம் கற்பிக்க இணை அணிகள் ஊக்குவிக்கின்றன. உலகெங்கிலும் ஒவ்வொரு பாலினம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்து நடை, உடை, பேசுதல் என வெவ்வேறு மாதிரிகள் உள்ளன. இது ஒரே மாதிரியான சமுதாயத்தை ஊடுருவியது மற்றும் இதன் விளைவாக குடும்பம், செய்தி ஊடகம் மற்றும் பள்ளி அமைப்பு ஆகியவற்றில் தெளிவாகத் தெரிகிறது. அவர்களின் ஆரம்ப காலங்களில் வளர்ச்சி, குழந்தைகள் தங்கள் சமூகத்தில் ஒரு பெண் அல்லது ஒரு ஆண் என பொருள் அறிய செய்கிறது. பெற்றோருக்கு குழந்தையின் பாலின பங்குகளின் மீது முதன்மை செல்வாக்கு உள்ளது. மழலையர் பள்ளியில்

குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் பெரும்பாலான நேரத்தை செலவிடுகிறார்கள். எனினும் குழந்தைகள் மழலையர் பள்ளிக்கு வந்தவுடன் சக குழுவினர் செல்வாக்கு செலுத்துகின்றனர். பாலினம் என்பது ஒருவரைப்பற்றி ஒருவர் கற்றுக் கொள்வது என்ற கருத்து பொருத்தமானது. ஊடகங்கள், விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி மூலம் இணக்கமான பாலின பங்கினை வரையறுத்து, சமுதாயத்தில் ஆணாக அல்லது பெண்ணாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கற்பனை செய்யக்கூடிய வகையில் குழந்தைகளுக்கு கற்பித்தல் வேண்டும். இந்த மூன்று பகுதிகளிலும் குழந்தைகள் நடந்து கொள்ளுவதும், மீறுவதும், தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட வழியில் ஊக்குவிக்கின்றன. இறுதியில் பிள்ளைகள் இந்த செய்திகளை உள்முகப்படுத்தி, தங்கள் நம்பிக்கைகளை செல்லுபடியாகும் வகையில் தொடங்குகிறார்கள்.

பள்ளி அமைப்பு கூட மனிதர்களின் சிந்தனைக்கு வலுவூட்டுகிறது. அதிகார பதவிகள் மற்றும் கீழ்படியும் பதவிகளில் உள்ள பெண்கள் பள்ளியில் பாலினத்தை பிரதிபலிப்பது சமூகம் முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும். பள்ளிகள் மிகவும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றாலும் பிள்ளைகள் தங்களுடைய பாலின நம்பிக்கைகளை சரிபார்க்கவும், புதுப்பிக்கவும் முக்கியமான சமூக அமைப்புகள் பெரும்பாலும் ஆண் மற்றும் பெண் உருவங்களை குழந்தைகளுக்கு தெரியப்படுத்துவது அடிக்கடி சமுதாயத்தில் காணப்படுகிறது.

**பள்ளி, ஒப்பார் குழு, ஆசிரியர்கள், கலைத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களில் பாலின சமத்துவமின்மைக்கான சவால் :**

கல்வி அதன் மாற்றியமைத்த திறனைப் பொறுத்தவரை, ஒரு சமூகமாக கருதப்படுகையில் ஏற்கனவே இருக்கும் உண்மைகளை மறு ஆய்வு செய்வதற்கு செயல்படும் தலையீடு, அது பாலின சமத்துவமின்மையை அகற்றுவதற்கான மிகவும் சக்தி வாய்ந்த செயல்முறையாக மாற்றஉதவுகிறது. மதிப்புகள் மற்றும் சமுதாயத்தின் வடிவங்கள் ஆகியவை பெண்களையும், ஆண்களையும் தங்கள் வளர்ச்சிக்காக வளர்க்க உதவும் முழுமையான மனிதத்திறன். பாலினம் பற்றி ஒரு பொதுவான கல்வி பங்குகளும், ஒரு பொதுவான திட்டமும் இன்னும் இல்லை. பாடங்களை வழங்குவதன் மூலம் இப்போதுள்ள நிலையில் இருந்து நமது எதிர்காலத்தை கற்பனை செய்வதற்கான வழிகளை உணரச் செய்ய முடியும்.

ஆண் மற்றும் பெண் பற்றிய ஆசிரியர்களின் உணர்வுகள், அவற்றின் உறவுகளுக்கு முக்கியமானது பள்ளிகளில் பாலின சமத்துவத்தை உருவாக்குவதில் ஒரு முக்கியமான காரணியாக இருக்க முடியும். பள்ளிகளில் பாலினம் பற்றி வாசிக்கும்பாடப்புத்தகங்கள் மற்றும் வாசிப்பு பொருள்கள் ஆகியவற்றால் ஒரே மாதிரியான கருத்து வலுவிழக்கவோ அல்லது பலவீனப்படவோ வாய்ப்புள்ளது.

**பாலின சமநிலை :**

நீண்ட காலமாக, பாலின சமத்துவம் என்பது வெறும் பேச்சு அளவில் மட்டுமே அதிகாஈடுபாடு காட்டப்பட்டுவருகிறது. கல்வியில் பாலின சமத்துவமின்மை இருக்கும் என்று

பொதுவாக நம்பப்படுகிறது. ஆணுக்கும் பெண்களுக்கும் சமமான அணுகல் வழங்கப்பட்டிருந்தால், பாலின வேறுபாடுகள் பதிவு செய்யப்படாவிட்டால் சரியான புள்ளிவிவரங்கள் மற்றும் தகவமைப்பு விகிதம் நீக்கப்பட்டு இருக்கும். கல்விக்கான அடங்கல் இன்னும் முக்கியமான சிக்கலாக உள்ளது. அதில் கவனம் தேவை. இருப்பினும் ஒரு பரந்த அணுகுமுறை அவசியம். எடுத்துக்காட்டாக இதில் அடங்கும் பாடத்திட்டங்கள், பாடப்புத்தகங்கள் மற்றும் கற்பித்தல்-கற்றல் நடைமுறைகள் போன்ற கல்வித் திறனைக் கற்றல். கல்வியில் பாலின அணுகல் சமத்துவத்தை ஊக்குவிப்பது என்பது படிப்படியாக அறியப்படுகிறது. பாலின சமத்துவத்தை அடைவதற்கு ஒரு குறிக்கோளாக கருதுவது என்பது மிகவும் குறுகிய விளைவாகும்.

பாலின சமத்துவத்தை நோக்கமாகக் கொண்ட கல்வி, தடைகளையும், சவால்களையும் எதிர்கொள்கிறது. பெண்கள் பல வழிகளில் பின்தங்கியுள்ளனர். அரசாங்கத்தில் மாற்றங்கள் இருந்தாலும், கொள்கைகள் மற்றும் இன்னும் முழுமையான உத்திகளை நடைமுறைப்படுத்துவது அவசியமாக உள்ளது. ஒன்றாக சேர்க்கும் போது மாற்றங்களை ஏற்படுத்தகூடிய பணிகளைச் செய்ய முடியும். கல்வியில் அதிக பாலின சமத்துவத்தின் திசையில் பயிற்சி தர வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கல்வியில் ஆண் மற்றும் பெண்களை சமத்துவமாக நடத்துவதற்கு பல தடைகள் உள்ளன.அதற்கு வெற்றிகரமான திட்டங்கள் தேவை.

**பள்ளி :**

பாலின பங்கை குழந்தைகளுக்கு மாற்றப்படும் மற்றொரு ஊடகம் பள்ளி ஆகும். இது முக்கியமாக சகாக்களின் செல்வாக்கு மூலம் நிறைவேற்றப்படுகிறது. அடிப்படை ஆரம்ப ஆண்டுகளில் பள்ளி, ஆண்கள் மற்றும் பெண்கள் என்ன பொருத்தமான பாலின பங்கு என்று சுட்டிக்காட்ட வரைவு உள்ளது. உதாரணமாக சிறுவன் ஒரு குட்டி பிஸ்கட்டை உண்பதற்கு முயற்சித்தால் அவர் விரைவாக உண்கிறார். பெண்ணின் நடவடிக்கையும் இதுவே ஆகும். மிக இளம் வயது குழந்தைகளை பாலினம் மூலம் பிரிக்க அதன் வடிவமும், மற்ற பாலினக் குழுவை விட வேறுபட்ட அடையாளங்களும் காணப்படுகின்றன.

பல வழிகளில் பாலின வேறுபாடு சமூகமயமாக்கப்படுவதற்கு உதவுகிறது. ஒரு சக குழு உறுப்பினர்களின் நலன்களை சமூக நிலைகள் மற்றும் வயது உள்ளவர்களுக்கு பொதுவான குழந்தைகள் மேற்பார்வையிலிருந்து தப்பித்து உறவுகளை உருவாக்க கற்றுக் கொள்ளலாம். பருவ காலப்பகுதியின் செல்வாக்கு பொதுவாக பருவ வயதில் உச்சமாக இருக்கும். குழுக்கள் பொதுவாக குறுகிய கால நலன்களை பாதிக்கின்றன. பள்ளிக்குள் நுழைந்தவுடன் பலர் சக மனிதர்களை சந்திக்கிறார்கள். இவர்கள் பலரின் மாதிரி பாரம்பரிய பாலின நடத்தை, பாலின உள்ளடக்கம், உற்பத்தி மற்றும் வலுவூட்டுதல் ஒரே மாதிரியானவையான இருக்கும். ஆகையால் பாடசாலையில் மற்ற மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியும். மேலும் பாரம்பரிய பாலின பங்கினை நோக்கி திருப்பவும் முடியும்.

பள்ளியின் சூழல் பெண்களின் கல்வி குறிப்பாக இளமை பருவத்திலிருந்தும் தொடா்கிறது. பள்ளிகளில் குடிநீா், கழிப்பறையை அணுகல் மற்றும் சுகாதாரம் பொதுவாக மோசமான தரநிலையில் உள்ளது. இந்த சூழல்களால் சிறுவா்களைக் காட்டிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனா். இது மாணவா் சோ்க்கை மற்றும் தக்கவைப்புக்கான தடையாக இருக்கலாம்.

**ஆசிரியா்கள் :**

குழந்தைகள் பள்ளி நேரத்தில் பெரும்பாலான நேரம் ஆசிரியா்களுடன் கழிக்கின்றனா். அதனால் அவா்களின் செல்வாக்கு குழந்தைகளிடம் காணப்படும். வளரும் நாடுகளில் உள்ள பல கிராமப்புற பள்ளிகளில் புத்தகங்கள் ஏதும் இல்லை. ஆசிரியரின் பங்கே மிகவும் முக்கியமானது. ஆசிரியா்கள் பெற்ற செய்திகளை பாடத்திட்டம் மற்றும் நிறுவன முடிவுகள் மூலம் சொல்கிறாா்கள். பல ஆசிரியா்கள், ஆண் மற்றும் பெண் குழந்தைகளை சமமாக நடத்த வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தி அவா்களின் பாலினம் பொருத்தமற்றதாக இருக்கிறது என்று கூறுகின்றனா். இந்த நிலையை பாலினக் குருட்டுத்தன்மை என அழைக்கப்படுகிறது. இது ஒரு தவறான அந்தஸ்த்தை புறநிலை மற்றும் பாரபட்சமற்ற தன்மையை வகுக்குகிறது. ஆசிரிய மனப்பான்மைகள் பெண்கள் மற்றும் ஆண்களை நோக்குபவையாக இருக்கலாம். பயன்கள் உள்ள காணக்கூடிய பாகுபாடுகளைக் காட்டிலும்,நுட்பமான விஷயம் மற்றும் அதிகமான உணா்ச்சிகரமான நடத்தைகள் ஏற்படலாம். பெண்கள் அல்லது ஆண்கள் கவனமாக கவனிக்கப்பட வேண்டும். இந்த நடத்தை குறைவான ஆதரவு மாணவா்கள் மத்தியில் ஊக்குவிப்பது, அந்நியப்படுதல் மற்றும் தனிப்பட்ட கல்வி, தொழில்முறை வளா்ச்சி ஆகியவற்றை தடுக்கிறது.

பாலின சமத்துவம் என்பதன் பொருள் ஒரு பெயரை மட்டுமே அறிந்திருப்பது அல்லது தவறாக புரிந்து கொள்ளப்பட்ட ஒரு கருத்து பாலின சமத்துவம் ஆகும். ஆசிரியா்கள் பாலின உணா்தல் போதனை முறைகளைப் பற்றி கேள்விப்பட்டதில்லை;ஆசிரியா் பயிற்சியாளா்களுக்கும் இது பற்றி தெரியாது. பாலின பழமைவாதம் பொதுவானது மற்றும் பாடப்புத்தகங்களில் அடிக்கடி பாலினம் சாா்ந்தவையாக உள்ளது. கற்பித்தல் மற்றும் ஆசிரியா்களின் குறைந்த தரம் யுனிசெப் நிருவணங்களால் விவரிக்கப்பட்டபடி தகுதிகள் ஒரு பாலின உணா்திறன் ஆசிரியரை எதிா்மறையாக பாதிக்கின்றது.

குழந்தைகளின் எண்ணங்களை வளா்ப்பதில் ஆசிரியா்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கிறாா்கள் மற்றும் இளம் மாணவா்களின் நம்பிக்கைகள், சிந்தனை வடிவங்களை மாற்ற முடியும். ஒரு ஆசிரியா் தொடா்ந்து அவரது நடவடிக்கைகள், அணுகுமுறைகள், நடத்தை முன்னோக்கு முறையில் மேற்பாா்வை மூலம் தொகுத்து ஒரு குழந்தையின் பாலின பங்கினை வடிவமைக்க உதவும். ஆண், பெண் என்று பல உத்திகள் மற்றும் தலையீடுகளை பயன்படுத்தலாம். இவை இரண்டிற்கும் மாணவா்கள் சம வாய்ப்புகள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றனா். தங்கள் குறிக்கோள்களை உருவாக்கவும், பெறவும் வாய்ப்பு உள்ளது. பாலின வேறுபாடுகளை நேரடியாகக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னுரிமை சிகிச்சை, வகுப்பறை இயக்கவியல் மற்றும் கல்வி வெற்றிக்கான வழிமுறைகள் ஆகும். ஆசிரியா்கள் பாலின பிரச்சனை பற்றி தீவிரமாக இருக்க வேண்டும். ஆசிரியா்கள்

சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை கொண்டு வருவது பற்றி அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். பாலின கல்வி உணர்திறன், பாடத்திட்டங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் மட்டுமல்லாது பாலின சமத்துவத்தை வலியுறுத்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக பணியாற்ற முடியும்.

**பாடத்திட்டம் :**

பாலின சமத்துவம் என்பது பல நாடுகளில் பாடத்திட்டத்தின் பரவலான கொள்கை ஆகும். இதன் பொருள் பாலின முன்னோக்கு முழு பாடத்திட்டத்தையும் ஊடுருவி இருக்க வேண்டும், அனைத்து பாடங்களிலும் மற்றும் பகுதிகளிலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் சில நாடுகளில் பாலினம் முன்னோக்கு பற்றி ஒரு பரந்த கொள்கை வெளிப்படுத்தவில்லை என்பது தொடர்பான பிரச்சினைகளை தெரிவிக்க பாலினம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பாலினம் அடிக்கடி சமூக அறிவியல், குடிமையியல், வரலாறு, மொழி மற்றும் பொருளாதாரப் பாடங்களில் ஒரு தலைப்பாக கையாளப்படுகிறது. ஆனால் பல நாடுகளில் பள்ளிகள் கணிசமான கட்டாயமான குறைந்தபட்சத்திற்கு செல்லும் பாடத்திட்டத்தை அல்லது பொதுவான முறைப்படுத்தப்பட்ட இலக்குகளை தீர்மானிக்க சுயாட்சி பாடத்திட்டம் உள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி தலைமை பாலின முன்னோக்கு எந்த அளவிற்கு தீர்மானிக்கப்படுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது உற்றுநோக்கத்தக்கது. பாலினம் அடிக்கடி பாடத்திட்டத்தில் ஒரு தலைப்பாக, பாலின உணர்திறன் போதனையாக, வாக்கியமாக சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ஆகஸ்போர்டு அகராதி (2010) கலைத்திட்டங்களுக்கான பாடத்திட்டத்தை வரையறுக்கிறது. ஒரு பாடசாலையிலோ அல்லது கல்லூரிகளிலோ கற்பதோ அல்லது கற்பிக்கப்படுவதோ உள்ளிட்டவை இந்த அறிவுரைகளை பிரதிபலிக்கிறது. இதனையே பள்ளிகளில் பயிற்றுவிப்பதற்காக மதிப்புமிக்க மற்றும் பொருத்தமானது என்று சமுதாயம் கருதுகிறது. சமுதாயம் மாறமாற பாடத்திட்டமும் மாறும். அத்துடன் இது இருக்கும் வழிமுறையும் பார்க்கப்பட்டது மற்றும் மதிப்புமிக்கதாகவும் இது கருதப்படுகிறது. இதன் பொருள் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் நடைமுறைகள் பாலின சமத்துவமின்மையால் குறிக்கப்படாத கருத்துக்கள் மற்றும் நடைமுறைகளை வெளிப்படுத்தலாம். போதனை மற்றும் கற்றல் பொருட்கள், மதிப்பீடு நடைமுறைகள் மற்றும் மொழிக் கொள்கை ஆகியவை பாடத்திட்டத்தின் கூறுகளில் உள்ளன. பல ஆண்டுகளாக பாடத்திட்டத்தின் ஒரு பெரும்பகுதியில் சீர்திருத்தம் தேவை என்பது நாட்டின் தேசிய அடையாளத்தை அல்லது உலகப் பொருளாதாரத்தின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்கிறது.

**பாடப்புத்தகங்கள்:**

மாணவர்கள் பாடநூல்களில் பொதுவாக ஆண் ஆதிக்கம் நிலைத்திருக்கின்றன. இலக்கியத்தில் பெண்கள் முன்னணி கதாபாத்திரங்களில் இல்லை மற்றும் அவர்கள் குறைவாக காட்டப்படுகின்றனர். முக்கியமாக ஆண் கதாபாத்திரங்களைவிட திறன் குறைந்த பெண்கள் குறித்த கருத்துகள் வரலாற்றின் பக்கங்களில் உள்ளது.

கடந்த காலத்தில் முன்னேற்றம் இருந்த போதிலும் பாலின வேறுபாட்டை அகற்றுவதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. சமத்துவத்தை அடைய குறிப்பாக கல்வியில் சமநிலையை அடைய

முடியும். முக்கியமாக பிரச்சினை பள்ளிகளின் பெண்களின் குறைந்த அடைவு, குறைந்த கல்விஅணுகல் மற்றும் கல்வியை தொடா்வது ஆகும். பெண்கள் கல்விக்கான பின்னடைதலை ஏற்படுத்துவதில் பல காரணிகள் உள்ளன. அவை பொருளாதார சார்புநிலை மற்றும் குறைந்த வருமானம், பாரம்பரியம் கொண்ட குடும்பம் மற்றும் சமூக சூழல், ஆணாதிக்கக் கட்டமைப்புகள் மற்றும் கல்வி முறையின் செயல்பாட்டு தோல்விகள் (பள்ளிகளின் பற்றாக்குறை, கற்பித்தல் பொருட்கள் மற்றும் ஆசிரியர்கள் பெண்கள மீது பாலியல் அத்துமீறல் மற்றும் பல) ஆகும். பெண்களின் குறைந்த அடைவுக்கு பாடப்புத்கங்களும் ஒரு காரணமாகும். பாலின சமத்துவமின்மை மற்றும் பாகுபாடு பாடப்புத்கங்களில் காண்பிக்கப்படுவதன் மூலம் அவை வலுவூட்டப்படுகின்றது. இந்த காரணங்களுக்காக பாடப்புத்தகங்களில் பெண்களின் சமமான அணுகல் மற்றும் பாலின பிரதிநிதித்துவம் ஆகியவற்றை மாற்ற வேண்டும். சமத்துவமின்மையை வெளிப்படுத்தும் பிரதிநிதித்துவங்களின் பரிமாற்றத்திற்கு பங்களிப்பதை தவிர்க்க ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் அதற்குத்தான் பாடப்புத்தகம் பயன்படுத்தப்படுகிறது.

**பள்ளிகளிலும் வகுப்பறைகளிலும் மாணவர்களிடையே காணப்படும் பாலின பங்குகளும் பொறுப்புகளும் :**

உலகளாவிய ஆய்வுகளின் கூற்றுப்படி கல்வியின் அமைப்புகளில்வெளிப்படையான பாலின பாகுபாடு காணப்படுகின்றன. ஆசிரியர்கள் பெண்கள் விட வித்தியாசமாக ஆண்களுக்கு சலுகை காட்டுகிறார்கள். அவா்கள் மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள். இதன் காரணமாக ஆண்கள் மதிக்கப்படுகிறார்கள் மற்றும் வசதியாக உணர்கிறார்கள். பெண்கள் இதை எதிர்பார்ப்பதில்லை மற்றும் நம்பிக்கையற்றவர்களாக உணர்கிறார்கள்.

பள்ளியில் உள்ள பெண்கள் தோட்டக்கலை, துப்புரவு, அலங்காரங்கள்,புத்தகம் தொடர்பான வேலைகளைச் செய்கிறார்கள். சிறுவா்கள் பளு தூக்குதல், கட்டுமானப்பணி, விவசாயம், நிர்வாகம் போன்ற உடல் வேலைகளை செய்கிறார்கள்.

பள்ளியின் மற்ற அம்சங்களிலிருந்து கற்றல் கற்பித்தல் போன்ற வகுப்பறை தொடர்பை பாலின சமத்துவமின்மைக்கான பாடத்திட்டத்தை உருவாக்க முடியாது. பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் எதுவாக இருந்தாலும் சமத்துவம் இருக்காது. பெண்கள் பேசுவதை ஊக்கப்படுத்தினால் அடையக்கூடிய அளவுக்கு பையன்களின் ஆற்றல் அல்லது சூழல் சமமான அணுகலில் சிறுவர்களுக்கு ஒரு விகிதாசார பங்கு உண்டு என்று சர்வதேச ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் முன்பு வகுப்பு தொடர்புப்படுத்தலுக்கான பங்களிப்புகள் பெண்களை விடஆண்களுக்கு நேர்மறை மற்றும் எதிர்மறை நிலைமைகளை உருவாக்கி மற்றும் மேலாதிக்க நிலையை எளிதாக்கும் வகுப்பறை தொடர்பு ஆசிரியர்களின் கவனத்தை ஈர்த்தது. சிறுவர்களின் இந்த மேலாதிக்க நிலை அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அனுபவத்தை கற்க வேண்டும். அதாவது நம்பிக்கையின் காரணமாக இன்னும் பங்கேற்க வேண்டும் என்ற உணர்வு தூண்டுகிறது. பெண்கள் இதனால் செயல்திறன் மையத்தில்

இருந்து வெளியேறுதல் அல்லது வெளியேறாமல் குறைந்த பங்களிப்பை எதிர்பார்க்கக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

எல்லா வயதினரும் சிறுவர்கள் ஆண் மற்றும் பெண் ஆசிரியர்களிடமிருந்து அதிக பாராட்டுக்களைப் பெறுகின்றனர். ஆனாலும் ஆசிரியர்கள் பெண்களை விட ஆண்களை கவனிக்கவில்லை எனறே பிடிவாதமாக இருக்கின்றனர்.

ஆசிரியர்களின்அறிவாற்றல் திறன்களுக்கும், மாணவரிடையே உரையாடுவதற்கும், அவர்களின் கற்பித்தல் அனுபவத்திற்க்கும் எந்த தொடர்பும் இல்லை. பெண்களின் குறைந்த எதிர்பார்ப்புகள் கணிதம் மற்றும் அறிவியல் போன்ற உயர்நிலைப் பாடங்களில் பெண் ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போலவே எதிர்பார்ப்புகளையும் வலுப்படுத்துகின்றன. பரீட்சைப் பொருட்கள், பள்ளிகளில் இடத்தைப் பயன்படுத்துவது ஆகியவை பெண்களை ஓரளவிலும் மாற்றுகிறது.

**பாலின அடையாளத்தினை அளவீடு செய்தல் :**

ஆரம்ப பாலின அடையாள ஆராய்ச்சி ஆண்மையும் பெண்மையும் ஒரு ஒற்றை இருமுனை பரிமாணத்தை ஒரு தொடர்ச்சியில் எதிரொலிக்கும். சமுதாயம் ஒரே மாதிரியான மாறுபட்ட மாதிரிகள் மற்றும் சவால்களால் செய்யப்பட்டது. இது இரு பரிமாண பாலின அடையாள மாதிரியை உருவாக்க வழி வகுத்தது. ஆண்மையும் பெண்மையும் இரு தனி பரிமாணங்களாக கருதப்பட்டன. ஒரு தனிநபருக்குள் மாறுபட்ட கோணத்தில் இணைகிறது. ஆண்மைமற்றும் பெண்மையின் இந்த கருத்துருவாக்கம் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலையானதாக உள்ளது.

ஆண்மையின் பல பரிமாண இயல்புடன் இணைந்த இரண்டு கருவிகள் பாலின அடையாளம் ஆராய்ச்சியில் ஆதிக்கம் செலுத்துகிறது. BSRI மற்றும் PAQ ஆகிய இரு கருவிகளும் தனி நபர்களை பாலினமாக வகைப்படுத்துகின்றன. (ஆண் குழந்தைகள் முதன்மையாக ஆண்பால் பண்புகளை அடையாளம் காட்டுகின்றன. பெண்கள் தங்களை முதன்மையாக பெண்ணிய பண்புகளுடன் அடையாளம் காட்டுகின்றன). ஆண்மையும் பெண்மையுமான குணநலன்களில் தங்களை உயர்வாகக் கருதிக் கொள்ளுதல் அல்லது (மாறுபட்ட ஆண் அல்லது பெண்) பெண்கள் ஆண்மையும் பெண்மையுமான குணநலன்களில் தங்களைத் தாழ்வாகப் உணர்கிறார்கள். ஆராய்ச்சிகளின் முடிவில் பெண்கள் பொதுவாக பெண்களை விட அதிக ஆண்களாக இருப்பதை விரும்புவதாக ஆய்வின் முடிவுகள் காட்டுகிறது.

**வகுப்பறைகளிளும் பள்ளியிலும் காணப்படும் பாலின பாகுபாடு :**

அமெரிக்க பல்கலைக் கழக மகளிர் சங்கம் நடத்திய ஒரு ஆய்வின்படி 1991ல், பாலின சார்புகளின் விளைவுகள் பெண்பள்ளி மாணவர்களுக்கு மிகத் தீவிரமாகத் தோன்றியது. ஒரு ஆசிரியரால் வித்தியாசமாக நடத்தப்படுவதால், மாணவிகளின் சுயசிந்தனை மற்றும் சுயகருத்தை பாதிக்கலாம். இளம் பெண்கள் மீது இந்த விளைவுகள் அதிகரிக்கின்றன. உயர்நிலைப் பள்ளியை அடைந்தவுடன், சிறுவர்கள் பெரும்பாலும் திறமை மற்றும் குறைபாடுகளுக்கான தோல்விகளுக்கு விடையளிக்க முயற்சிப்பர். ஆரம்ப பள்ளியில் ஆண் மற்றும் பெண் இடையே திறன்களில் 10

புள்ளி வேறுபாடு இருந்தது. திறன்களின் உணர்வுகள் ஆரம்பக் கல்வி சூழல்களில் கூட ஆண்கள் மற்றும் பெண்கள் என்று வித்தியாசமான சுயகருத்துக்களை கொண்டுள்ளனர். பாடசாலையானது எந்தவொரு விஷயத்தையும் விட பாடவகுப்புகளில் ஒருநாளில் அதிக நேரத்தை செலவிடுகின்றது. வகுப்பறை தொடர்ந்து ஆசிரியர் மற்றும் மாணவர்கள், கல்வி முக்கிய கூறுகளையும் பள்ளிகளின் தற்போதைய நடைமுறைகளையும் உருவாக்குகின்றன. மேலும் பாலின வேறுபாடு மற்றும் பாலியல் பாகுபாடு ஆகியவை உயிருடன் இருப்பவை என்பது தெளிவாக உள்ளது.

வகுப்பறையில் பாலினங்களுக்கு இடையே ஆசிரியர்கள் அடிக்கடி போட்டியைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆசிரியர்கள் வேண்டுமென்றே பாடங்களைப் பற்றிக் கூறுவதற்கு வகுப்பறை உரையாடல்களில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதற்கு சிறுவர்களின் கவனத்தை மற்றும் கட்டுப்பாட்டை தக்க வைத்துக் கொள்ள முயல்கிறார்கள். பெண்கள் பெரும்பாலும் செயலற்றவர்களாக இருக்கின்றார்கள். வகுப்பிலும் ஆசிரியர்களிடத்திலும் “கண்ணுக்கு தெரியாத” அவர்களின் சாதனைகளை குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் ஆண்கள் மற்றும் பெண்கள் இடையே வகுப்பறையில் பெண்களின் சுயமரியாதை மற்றும் நம்பிக்கையை பாதிக்கும் என்று பரிந்துரைக்கின்றன.

ஆசிரியர்கள் உண்மையில் ஆண் மாணவர்களிடம் அதிகம் பேசுகிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். மேலும் ஆய்வுகள் சொல்கின்றது ஆசிரியர்கள் ஆண் மாணவர்களிடம் அதிக கவனத்தை செலுத்துவதோடு சிறுவர்களுக்கு அதிக திண்பண்டங்களும் தருகிறார்கள். ஏன் என்று கேட்டால் சிறுவர்கள் அடிக்கடி கோரிக்கை விடுத்துள்ளனர். மாணவிகள் இதே போல் நடந்து கொள்வது இல்லை. கண்காணிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் நடத்தையைத் திரும்பத் திரும்ப நிராகரித்தனர். பெண்களை சிலர் நேரடியாக தவறாகப் பயன்படுத்துகின்றனர். ஆசிரியர்கள் பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றிலிருந்து வன்முறை, கற்பழிப்பு வரை துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

மேலும் கவனத்தின் தரம் கூட வேறுபடுகிறது. வகுப்பறையில் ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் பொதுவாக அவர்களுடன் தொடர்பு கொண்டு அதைச் செயல்படுத்துகிறார்கள். வாய்மொழியாக அவர்களுக்குக் கேள்விகளுக்கு விடையளிக்கவும் தங்கள் கருத்துக்களை விரிவாக எடுத்துரைக்கவும் அவர்களுக்கு உதவுகிறார்கள். ஆண்கள் அடிக்கடி வினாக்களுக்கு விடையளிப்பதற்காக அழைக்கப்படுகிறார்கள். மேலும் பாராட்டுகளைப் பெறுகிறார்கள். பெண்கள் பொதுவாக வீட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள் பெண்கள் பொதுவாக ஒழுங்கற்ற போதனைகளால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

**ஆண்களும் பெண்களும் வகுப்பறையில் ஒழுங்குபடுத்தப்படும் முறைகள் :**

ஆண்களும் பெண்களும் வகுப்பறையில் வித்தியாசமாக ஒழுங்குபடுத்தப்படுகிறார்கள். ஆண்கள் பெண்களை விட மிகவும் கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள். அவர்களின் பெயர்கள் எப்போதும் நடத்தை பிரச்சினைகள் பட்டியலில் உள்ளது. பெண்கள் பேசுவதற்கும், பதில்களைப் சொல்வதற்கும் அதிகமான ஒழுங்கமைக்கிறார்கள். பின்வரும் நுட்பங்களை அமெரிக்க மருத்துவ அகாடமி பரிந்துரைக்கிறது:

**நல்ல நடத்தைக்கான வெகுமதி :**

நல்ல நடத்தை என்பதை ஒப்புக்கொள்வது, உங்கள் பிள்ளைகள் அதை தொடர ஊக்குவிக்க சிறந்த வழி ஆகும்.

**இயற்கை விளைவுகள் :**

ஒரு குழந்தை ஏதோ ஒரு தவறு செய்தால் அதன் விளைவை குழந்தைகள் அனுபவிக்க விடவேண்டும். அதற்கு விரிவுரை தேவை இல்லை. இயற்கை விளைவுகள் பற்றி எச்சரிக்கைகளை கேட்க தேவையில்லை எனினும் அவர்கள் அனுபவிக்கும் எந்தவொரு விளைவுகளும் ஆபத்தானவை அல்ல என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தர்ககரீதியான விளைவுகள் :**

இந்த நுட்பம் இயற்கை விளைவுகளுக்கு ஒத்தாகும். ஆனால் உங்கள் குழந்தைக்கு விளைவுகளை பற்றி விவரிக்கவும் .உதாரணமாக குழந்தை பொம்மைகளை எடுக்காமல் ஒரு வாரம் வைத்திருந்தால் அது அகற்றப்படும் என்று தெரிவிக்கவும்.

**சலுகைகளை எடுத்துக் கொள்ளுங்கள் :**

சில நேரங்களில் உங்களின் ஒரு மோசமான நடத்தை தாக்கரீதியான அல்லது இயற்கை விளைவாக இருக்காது. இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைக்கான விளைவு ஒரு பாக்கியத்தை எடுத்துக் கொள்ளலாம் உதாரணமாக ஒரு நடுத்தர பள்ளி மாணவர் வீட்டுப்பாடங்கள் முடிக்கவில்லை என்றால் காலப்போக்கில் மாலையில் தொலைக்காட்சி நிகழ்ச்சகைளை பார்க்கும் சலுகைகளை தடைசெய்வதை நீங்கள் தேர்வு செய்யலாம். இந்த ஒழுக்க நுட்பம் சிறந்த வேலை என்றால்

- நடத்தை சில வழியில் தொடர்புடையது.
- குழந்தையின் மதிப்புகள் ஏதோ ஒன்று உள்ளது.
- பொருத்தமற்ற நடத்தை

**வழிகாட்டுதல்களை பராமரிப்பதற்கான உதவிக்குறிப்புகள் :**

நீங்கள் பயன்படுத்த விரும்பும் எந்த ஒழுங்குமுறை உத்திகளும் அவை மிகவும் பயனள்ளதாக இருக்கும். இந்த எண்ணங்களை நீங்கள் மனதில் வைத்திருந்தால் உங்கள் பிள்ளையின் குணநலத்தோடு நன்கு பொருந்தும்படி உங்கள் ஒழுக்கவியல் நுட்பங்களை வழிகாட்டுங்கள்.

திறம்பட ஒழுக்க நெறிகளுக்கான முக்கியமானது உங்கள் பிள்ளை குறிப்பாக அவன் யார் என்பதை புரிந்து கொள்வதாகும். மனநிறைவான பணியையும் கொடுக்கப்பட்ட ஆற்றலைப் பெறுவதற்கு உதவியாக உங்கள் ஒழுங்குமுறையைப் பயன்படுதவும்.

**உங்கள் குழந்தைக்கு மரியாதை காட்டுங்கள் :**

உங்கள் பிள்ளையை மதிக்க வேண்டும். உங்கள் பிள்ளையை ஒழங்குபடுத்தும் போது. உங்கள் குழந்தை உங்களை மற்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரது வாழ்க்கையில் மற்றவர்களை மதிக்க வாய்ப்பு அதிகம் உள்ளது.

**"ஏன்" நடத்தைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும் :**

பொருத்தமற்ற நடத்தை ஒரு முறை நீங்கள் பார்த்தால் தீர்வு பகுதியாக பார்க்க வேணடும். உதாரணமாக உங்கள் பிள்ளையோ ஒரு நண்பரைப் பற்றிய ஏதாவது ஒரு விஷயத்தை பற்றி கவலைப்படுகிறார்கள். அல்லது உங்கள் குழந்தை பள்ளியில் ஒரு கெட்ட நாள், குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி மன அழுத்தத்தை உணரலாம். ஒருவேளை அவர் சோர்வாகவோ அல்லது பசியாகவோ இருக்கலாம். இந்த நிகழ்வுகளை தவிர்க்க இயலாது ஆனால் மோசமான நடத்தை ஏற்படுகிறது ஏன் என்று புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் உங்கள் குழந்தைக்கு உதவ முடியும்.

**பாலின உறவுகளின் பகுப்பாய்வு :**

பாலின பங்கு ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கள் அடிப்படையில் தான் ஆக்கிரமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரம்பரியமாக பல மேற்கத்திய சமூகங்கள் பெண்களை விட ஆண்களை விரும்புகின்றனர் என்று நம்புகிறார்கள். எனவே பாலின பங்கின் மரபார்ந்த பார்வையானது பெண்கள் பாரம்பரியமாக முழுநேரமாக வேலை செய்வதன் மூலம் தனது குடும்பத்தை வளர்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. வீட்டுக்கு வெளியில் வேலை செய்வதை விரும்புவர் ஆண்கள், மறுபுறம் தலைவர்கள் என்று பாலின பங்குகள் பாரம்பரிய கருத்துக்கள் மூலம் கருதப்படுகிறது. பாரம்பரிய பார்வை ஆண்கள் தங்கள் குடும்பத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. குடும்பத்திற்கு நிதி அளிப்பதன் மூலம் முக்கியமான குடும்ப முடிவுகளை எடுப்பதன் மூலம் இந்த பொது கருத்துக்கள் சமுதாயத்தின் பல துறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மரபார்ந்த மாற்று முன்னோக்கு பாலின பங்குகள் பற்றிய நம்பிக்கைகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் மிகுந்த ஆதரவைப் பெற்றுள்ளன.

பாலின பங்குகள் ஆண்கள் மற்றும் பெண்களின் எதிர்பார்ப்புகளுக்கு வெளியே மற்றும் பணியிடத்தில் அடிக்கடி எதிர்பார்க்கப்படுகிறது. வெவ்வேறு பணிகளை செய்து பாலியல் அடிப்படையில் வெவ்வேறு பங்குகளை ஆக்கிரமித்துள்ளனர்.

பாலின பழமைவாதம் ஆண்களையும் பெண்களையும் புரிந்து கொள்வதை மிகைப்படுத்தியுள்ளன. அரசியல் இயக்கங்கள், பெண்ணிய இயக்கம் போன்றவை பாலின முறைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்கு தொடர்ந்து வேலை செய்து வருகிறது.

இறுதியாக பாலின பங்குகள் பெரும்பாலும் ஒரு தனிநபரின் பாலினப்பங்குகளின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டது. பாரம்பரியமாக அல்லது பாரம்பரியம் அல்லாத வகையில் விவரிக்கப்படுகிறது. ஒரு பாரம்பரிய பாலினப்பங்குகளின் நோக்கு நிலை ஆண்கள் மற்றும்

பெண்களுக்கு இடையிலான வேறுபாடுகளை வலியுறுத்துகிறது ஒவ்வொரு பாலுக்கும் குறிப்பிட்ட நடத்தைக்கும் இயற்கை உறவு உள்ளது. ஒரு பாரம்பரியமிக்க அந்த பாலின பங்குகள் நோக்குநிலை தலைமுறையின் விதிகள் மற்றும் சடங்குகள் ஆகியவற்றால் பாதிக்கப்படும்

**முடிவுரை :**

இளம் குழந்தைகளின் சமூகமயமாக்கலுக்கு முக்கிய கூறுகள் பள்ளிகளின் மனப்பான்மை மற்றும் நடத்தை ஆகும். ஆசிரியர்கள் மற்றும் வகுப்பு தோழர்கள் குழந்தைகளின் பாலின மனப்பான்மையை வடிவமைத்துள்ளனர். அறிவாற்றல் மற்றும் நடத்தையில் பாலின வேறுபாடுகள், துரதிஷ்டவசமாக, ஆசிரியர்கள் ஒப்புமையில் பெறுகிறார்கள். இருப்பினும், பாலின சமத்துவத்துக்கான ஒரு அர்ப்பணிப்புடன் கல்வியறிவு பெற்றவர்கள் விவாதிக்கவும், கற்பிக்கவும் பாலின பழமைவாத மற்றும் தொந்தரவுக்கான சவால்களை சமாளிக்கவும் தங்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கு உகந்த கருத்துக்களை வெளிபடுத்த வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. பாலின அடையாளம் மற்றும் சமூக மயமாக்கல் செயல்முறையை விளக்கவும்.
2. பாலின அடையாளத்தில் குடும்பம், பள்ளி மற்றும் அமைப்பு ஆகியவற்றின் பங்கு பற்றி விவாதிக்கவும்.
3. வகுப்பறை மற்றும் பள்ளியில் பாலினப்பாகுபாடு உள்ளது என்பதை விளக்குக.
4. பாலின சமத்துவமின்மைக்கு பாடநூல் மற்றும் பாடநூல்களின் பங்கு பற்றி விவாதிக்கவும்.
5. பாலின அடையாளம் அளவீடுகள் - விவாதிக்க.
6. சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் ஒழுங்குபடுத்தும் நுட்பங்களைப் பற்றி விவரிக்கவும்.

# அலகு–3

## பாலினமும் பள்ளி கல்வித்திட்டமும்

**நோக்கங்கள்:**

1. பாலினத்தின் பங்கு பற்றி அறிதல்
2. பள்ளி கலைத்திட்டத்தில் பாலின பங்கு பற்றி புரிந்து கொள்ளுதல்
3. பாலினம், பால் வேறுபாடு, அநீதிக்கான அணுகுமுறை பற்றி ஆய்வு செய்தல்
4. பாலின பிரச்சனைகளில் பெண்களின் பங்குபற்றி மதிப்பீடு செய்தல்

**முன்னுரை :**

அனைத்து சிறுவர் மற்றும் சிறுமியரையும் பள்ளியில் சேர்ப்பதும் அவர்களை தக்க வைப்பதே ''அனைவருக்கும் கல்வி'' என்பதன் நோக்கமாகும். வளமான உலகத்தை உருவாக்குவதில் சரிசமமான பங்கினை பெண்கள் ஆற்றிட எல்லா பெண்களுக்கும் தனது திறனை மேம்படுத்திட கல்வி மிகவும் அவசியமான ஒன்றாகும். அவரவர் வாழ்விற்கும் கற்றல் அனுபவத்திற்கும் பாலின வேறுபாடு என்பது ஒரு தடைக்கல்லாகவே உள்ளது. சிறந்த தரமான கல்விக்கு முக்கிய காரணியாக இருப்பது பாலின வேறுபாடின்மையே ஆகும். கல்விச் செயல்பாடுகளில் சமநிலையை மேம்படுத்துவதற்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் வளர்ச்சிக்கும் தேவையான புதுமையான கற்பித்தல் முறைகளும், கற்றல் முறைகளும் அனைத்து சிறுவர், சிறுமியரையும் சமமாக பங்கு கொள்ளச் செய்யும் கலைத்திட்டம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**பள்ளிப் பாடப்புத்தகத்திலும், கலைத்திட்டத்திலும் பாலினத்தின் பங்கு :**

யுனெஸ்கோ கூட்டமைப்பு பள்ளியின் அனைத்து நிலைகளிலும் உள்ள பாடபுத்தகங்க்ளையும் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் அவர்கள் கண்டறிந்தது பாடப்புத்தகங்களில் பெண்களின் பங்கு பற்றி சிறிய அளவிலேயே கூறப்பட்டுள்ளது. அதுவும் பொதுவான கல்வி பற்றிய புத்தகங்களில் பெண்களைப் பற்றி பாராபட்சமாகவே கூறப்பட்டுள்ளது. ஆனால், உடல்நலம் மற்றும் சமூகநலம் பற்றிய கருத்துக்களை விவரிக்கும்போது பெண்கள் பற்றி அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளது. பெண்களின் தனித்தன்மைகள், திறமைகள், சுதந்திரம் பற்றி எந்தவித கருத்துக்களும் விவரிக்கப்படவில்லை. பெண்கள் மிகவும் வலிமையற்றவர்கள் என்றும் அவர்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ்பவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்கள் மிகவும் வலிமைவாய்ந்தவர்கள் என்றும் சுதந்திரம், தலைமைப்பண்பு மிக்கவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான ஆய்வு வெளியீடுகள் பாலின வேறுபாட்டை அகற்ற பரிந்துரைகளை வழங்கியுள்ளது. மேலும், விழிப்புணர்வு கூட்டங்கள், பயிற்சிகள், பயிற்சிகள் வழங்கும் முறைகள் பற்றியும் கூறியுள்ளது.

ஒரு பள்ளி அல்லது கல்லூரி கலைத்திட்டமானது சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். சமுதாய மாற்றத்திற்கேற்ப கலைத்திட்டத்திலும் மாற்றம்

செய்தல் வேண்டும். அதாவது கலைத்திட்டமும் கற்பித்தல் முறைகளும் பாலின வேறுபாடற்ற கருத்துக்களையும் செயல்முறைகளையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். கற்றல் கற்பித்தல் பொருள்கள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் மொழிக்கல்வி பற்றிய விதிகளும் கலைத்திட்டத்தின் கூறுகளாகும். ஆகவே, இவற்றில் பாலின வேறுபாடற்ற நிலையை உறுதிபடுத்தக்கூடிய கருத்துக்களையும் செயல்முறைகளையும் சேர்க்க வேண்டும்.

தேசிய கல்வித்திட்டம் மற்றும் தேசிய கலைத்திட்டம் பற்றிய குறிப்புகளில் அனைவருக்கும் கல்வி என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தில் பெண் கல்விக்கான தேவையும்,மதிப்புகளும்அதன் முக்கியத்துவம் பற்றியும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். பெண் குழந்தைகள், அவர்கள் குடும்பத்தினர் மற்றும் ஆசிரியரின் கல்வி மீதான பார்வை மற்றும் கலைத்திட்டத்தின் பொருளடக்கம் ஆகியவை இந்த பரந்த சமூகத்தில் பாலின சமநிலை பற்றிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

தற்போதைய இந்தியாவில் பெண்கள் பற்றிய உயர்வான எண்ணங்களை தோற்றுவிக்கும் வகையில் முயற்சகள் எடுக்கப்பட்டுள்ளது. (எ.கா. ஜான்சி ராணி, அன்னிபெசன்ட் அம்மையார், மதர்தெரசா, கல்பனா சாவ்லா போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது). பெண்களின் முக்கியத்துவம், பெண் கல்வி, பெண்களின் நலன், பெண்களின் உரிமை, சுதந்திரம் ஆகியவற்றை பற்றிய கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், இவற்றை உள்ளடக்கிய கலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**மாணவ, மாணவிகளை இளைஞர்களாக்குவதில் பள்ளியின் பங்கு:**

ஆண்மை மற்றும் பெண்மை அல்லது ஒருவருடைய பாலின தனித்தன்மை என்பது அவர் இந்த சமுதாயத்தில் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ எப்படி தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதனைப் பொறுத்ததாகும்.

இந்த சமுதாயத்தில் ஆண்மை மற்றும் பெண்மை என்பது பாலினமாக வேரூன்றி உள்ளது. இது உயிரியல் நிலைப்பற்றி குறிப்பிடப்படுவது அல்ல. சமுதாய அங்கத்தினர்கள் ஆணினம் அல்லது பெண்ணினம் எது என்பதை தீர்மானிக்கிறார்கள். ஆண்கள் தனது ஆண்மையையும், பெண்கள் தனது பெண்மையையும் வெளிப்படுத்தி தனது பாலினத்தை நிரூபிப்பார்கள். இது அவர்களின் நடத்தையின் வெளிப்பாடே ஆகும்.

மாணவ, மாணவியரிடையே பாலின அடையாளம் மற்றும் பாலின சமநிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் ஆசிரியரின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆசிரியர்களுக்கு பாலின வேறுபாட்டை களைவதற்கு தேவையான கற்பித்தல் முறைகளும், வளங்களும் கருவிகளும் அளிக்கப்பட வேண்டும். பள்ளியிலும், வகுப்பறையிலும், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளிலும் பாலின சமநிலையை நிலைபடுத்தி பெண்களுக்கு தொடர்ந்து சரிசமமான கல்வி அளிக்கப்பட ஆசிரியர்கள் பணியாற்றிட வேண்டும். கல்வித்துறை, ஆசிரியர்களுக்கான பாலின சமநிலைப் பற்றிய பணிமுன், பணியிடைப் பயிற்சி ஆகியவற்றை அளிக்க வேண்டும்.

ஒரு பாலினத்தை சேர்ந்த நபர் தனது எண்ணங்கள், நடத்தைகள், தன்னை வெளிப்படுத்தும் முறை ஆகியவற்றை குறிப்பிடுவதே பாலின அடையாளம் ஆகும்.பாலின வெளிப்பாடு (அ) பாலின பங்கு பற்றி பல்வேறு கருத்துக்கள் உலவுகின்றன. எண்ணங்கள் மற்றும் நடத்தைகள் ஒருவரது உயிரியல் பாலினத்தின் இயற்கையான வெளிப்பாடே ஆகும் என்று ஒரு பகுதியினரும், இது கட்டுமானத்தின் முழுமையான வெளிப்பாடே என்று சிலரும் கூறுகின்றனர்.

ஆண் பெண் பாலின அடையாளங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆண்கள் :**

1. வலிமை : மனவெழுச்சி, கடினத்தன்மை, தைரியம், தற்சார்பு, பகுத்தறியும் தன்மை.
2. மரியாதை : கடமை, வாய்மை, விசுவாசம்,பொறுப்பு, நேர்மை, சுயநலமின்மை, இரக்கம், இனப்பெருக்கம்.
3. செயல் : போட்டித்தன்மை, லட்சியம், பணயம் வைத்தல், முகவர், தன்னிச்சையாக செயலாற்றல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ''நேர்மறை'' (அ) ''சமநிலையான'' ஆண்மை பற்றிய அடையாளங்களாகும்.

**குறைவான ஆண்மை நிலை :**

1. பலவீனம் : நலிந்த மனவெழுச்சி, அளவுக்கதிகமான பயம், சார்ந்திருத்தல், பகுத்தறிவுக்கு புறம்பான நிலை.
2. விருப்பு வெறுப்பற்ற நிலை : நம்பிக்கையின்மை, பொறுப்பின்மை, உறுதியில்லாத நிலை.
3. செயலற்ற நிலை : சோம்பல், பணிவுள்ள நிலை, தன்னிறைவு நிலை.

**உயர்வான ஆண்மை நிலை**

1. குளிர் : இன்ப துன்ப நடுநிலை கோட்பாடு, தொடர்புகள் துண்டிப்பு, அச்சமின்மை
2. சமுதாயத்தை எதிர்த்து வாழும் தன்மை : தற்பெருமை, கர்வம், கையாளுதல், சுயநலம், மனசாட்சியின்மை.
3. பகைமை: வன்முறை, அருகிவரும் வாழ்க்கை, தீங்கு செய்தல்

**பள்ளியிலும் கலைத்திட்டத்திலும் பாலின அடையாளத்தின் ஒருங்கிணைப்பு :**

ஒரு சிறந்த பாலின மேம்பாட்டு கலைத்திட்டமானது மாணவர்களுக்கு பாலினம் பற்றிய அறிவை கொடுப்பதோடு அதற்குரிய திறன்களையும் கொடுப்பது ஆகும். அனுபவமிக்க கல்விச் சிந்தனையாளர்களும் மற்றும் பல்கலைக்கழக அளவில் பெண்கல்வி பற்றி கற்பிப்பவர்களும்

பாலினத்தை கலைத்திட்டத்தோடு இணைந்து கற்பிக்கலாம் என்று உறுதியளிக்கிறார்கள். மேலும், இதை பல்வேறு பாடங்களை உள்ளடக்கிய பரந்த பரிமாணங்களை கொண்ட பொருளடக்கம் உள்ள பாலினக் கல்வியாக அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். வழிகாட்டி செயல்முறைகள் உள்ளடக்கிய கலைத்திட்டமானது குழந்தைகளுக்கு தோழமையான வகுப்பறைகள் உருவாவதற்கும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மேம்பாட்டுக்கும் துணைபுரிகிறது.

ஒருங்கிணைந்த அணுகுமுறை கொண்ட பள்ளி கலைத்திட்டத்தில் பாலினத்தை சேர்ப்பதற்கான அனைத்து சாத்தியங்களும் உள்ளன. இந்த கலைத்திட்டமானது மாணவர்களுக்கு பழக்கப்பட்ட அமைப்புடன் அனுபவங்களும் ஒன்று சேர்த்து தன்னுடைய சூழ்நிலைகளை உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் அமைத்தல் வேண்டும். கலைத்திட்டத்தில் கீழ்க்கண்ட கருப்பொருள்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அவை: சேவை, உடல், பாலியல், திருமணம், பெற்றோர் நிலை, குடும்பம், சாதி, சமூகம், நாடு, நவீனம், பொருளாதாரம், வன்முறை, போராட்டம், படிநிலை ஆகியவைகளை மொழியியல், சமூக அறிவியல் மற்றும் அறிவியல் பாடங்களின் மூலமும் வழங்க முடியும். இவை மாணவர்களின் அறிவை மேம்படுத்தவும்,அடுத்த தளத்திற்கு எடுத்து செல்லவும் அவர்களின் ஆராய்ந்து அறியும் திறனை வளர்ப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கலைத்திட்டத்தில் பாலினத்தை முக்கியமாக்க பாடப்புத்தகங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதில் பாலின வேறுபாட்டை களைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், சிறுவர், சிறுமியரின் அனுபவங்களும் கண்ணோட்டங்களும் பாலின பங்குகள், பாலின வேறுபாடுகள் பற்றிய கருத்துக்களை கணக்கு, கலை மற்றும் அறிவியல் பாடங்களில் இணைக்க வேண்டும்.

**பாலினப்பிரச்சனைகளில் பல்வேறு கலாச்சாரத் தடைகள்:**

கலாச்சாரம் கடந்த பல்வேறு பாலின வேறுபாடுகள் மற்றும் பாலினம் சார்ந்த நடத்தைகளும் இந்த சமுதாயத்தில் உள்ளன. பல்வேறு கலாச்சாரத்தில் குழந்தைகளின் அனுபவம் மற்றும் பாலின வெளிபாடுகளில் வயது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலான கலாச்சாரங்களில் காணப்படும் பாலின வேறுபாடுகள் பொதுவானவையாகவே அமைந்துள்ளது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

பல்வேறு கலாச்சாரங்களில் பாலின அடையாளங்கள் பெரும்பாலும் பொதுவானதாகவே உள்ளது. அவற்றில் ஆண்களை குறிப்பிடும் போது சாகசங்கள், அதிகாரம், ஆற்றல் வாய்ந்த, சுதந்திரமான, ஆண்மை, பலமான போன்ற பதங்கள் பயன்படுத்தப்படுகிறது. பெண்களை குறிப்பிடும்போது உணர்ச்சி வசப்படுகிற, பணிந்து போகிற, மூடநம்பிக்கை போன்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், ஆண்கள் மற்றும் பெண்கள் சார்ந்த பதங்களைப் பற்றி குறிப்பிடும் போது பெரும்பாலான கலாச்சாரங்களில் ஒரே மாதிரியாகவே காணப்படுகிறது.

**ஆசிரியரின் பங்கு:**

சமுதாய மக்களின் வாழ்வின் பல்வேறு பகுதிகளிலும் பாலின பிரச்சனைகள் மற்றும் சர்ச்சைகள் எழும்புகின்றன. இந்த சமுதாயத்தை மாற்றக்கூடிய சக்தியாக வளர்ந்துவரும் இளம் தலைமுறையினரின் மனநிலையில் மாற்றம் கொண்டுவரும் போது சமுதாயமும் மாற்றம் அடையும். ஏனெனில் இளம் தலைமுறையினர் புதுமையான கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் பயிற்சிகள் மூலம் சமுதாயத்தில் புரையோடிப்போன பாலின ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கு முயற்சிகளை செய்வர். இந்த இளம் சமுதாயத்தினரின் மனநிலையை மாற்றுவது ஆசிரியர்களால்தான் முடியும். இதற்கு பாலின பிரச்சனைகள் பற்றிய தெளிவான அறிவு கொண்ட ஆசிரியர்கள் தேவை.

தனது வகுப்பறையில் மாணவ, மாணவியர் இருப்பதால் ஆசிரியரால் அவர்கள் மூலம் பாலின அடையாளம் அல்லது பாலின பங்குகளை வலுபடுத்த முடியும். குழந்தைகளிடத்தில் சிறந்த பழக்க வழக்கங்களை வளர்க்க ஆசிரியரால்தான் முடியும். ஆகவே, ஆசிரியர்கள்தான் குழந்தைகள் வளர்ப்பு முறையில் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றனர். ஆகவே, ஆசிரியர் தனது செயல்கள், எண்ணங்கள், நடத்தைகள், கண்ணோட்டங்கள், அணுகுமுறைகன், மனப்பான்மைகள் ஆகியவற்றின் மூலம் மாணவர்களை வடிவமைக்க முடியும் என்ற வழிப்புணர்வை கொடுக்க வேண்டும்.

பாலின பகுப்பாட்டிற்கும், விருப்ப நடத்தைகள், பள்ளி நடைமுறைகள், கல்வி தேர்ச்சிமுறைகள் ஆகியவற்றிற்கும் நேரடி தொடர்பு உண்டு. ஆகவே, ஆசிரியர்கள் இந்த பாலின பிரச்சனைகள் பற்றி தீவிரமாக சிந்தித்து செயல்பட வேண்டும். ஏனெனில் ஆசிரியரால் இந்த சமூதாயத்தில் நல்ல மாற்றத்தை கொண்டு வர முடியும். ஆசிரியர்கள் பாடப் புத்தகம், கலைத்திட்டம் ஆகியவற்றின் மூலம் மட்டுமல்லாமல் பாலின சமக்கல்வியை அளிக்க முயற்சிக்க வேண்டும். மேலும், அவர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கி பாலின சமநிலைக்கல்வியை அளிக்க முன் வர வேண்டும்.

**கல்வியில் பாலினப் பாகுபாடுகள்:**

கடந்த சில வருடங்களாக வகுப்பறை முறைகளிலும், கலைத்திட்ட முறைகளிலும் பெண்களை நடத்தும் முறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், பாலினப் பாகுபாடுகளிலிருந்து விடுதலை அடைந்துள்ளது என்று கூறுவதற்கு சாத்தியமில்லை. பாடப்புத்தகத்திலும், கல்விசார் பொருட்களிலும், வளங்களிலும் இன்றும் பாலின அடையாளங்கள் சரிவர காட்டப்படவில்லை. குழந்தைகளின் பாலினம், வகுப்பு, இனம் சார்ந்த எதிர்பார்ப்புகள் பெரும்பாலான ஆசிரியர்களிடையே நிலவுகின்றன. ஆசிரியர்கள் அனைத்து குழந்தைகளையும் ஒரே மாதிரியாக நடத்துவதாக எண்ணுகிறார்கள். ஆனால், அவர்களது எண்ணங்கள் மற்றும் நடத்தைகளை ஆராய்ந்தால் பாலின சமத்துவமின்மையை வெளிப்படுத்தப்படுகிறது என்பதை உணரலாம்.

**வகுப்பறைகளில் நிலவும் பாலின பாகுபாடுகள் :**

1. பெரும்பாலும் ஆசிரியர்கள் பெண்களைவிட ஆண்களிடமே அதிகமான வினாக்களைக் கேட்கின்றார்கள்.
2. பெண்களிடம் பதில்களை எதிர்பார்க்க குறைந்தளவு காலமே அளிக்கப்படுகிறது.
3. தொடர் கேள்விகள் ஆண்களிடமே கேட்கப்படுகிறது.
4. வகுப்பறை செயல்பாடுகளில் ஆசிரியர்கள் மாணவர்களிடமே அதிக அக்கறையும் கவனமும் செலுத்துகிறார்கள்.
5. வகுப்பறையில் பிரிக்கப்பட்ட மாணவர் அமரும் நிலை ஆசிரியரின் கவனத்தை ஒரே இடத்தில் செலுத்தும் நிலை உருவாகிறது.
6. தவறான நடத்தைகளுக்கு ஆண்கள் மீதே அதிகமான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
7. வேலையில் தெளிவாகவும், சரியாகவும் செயல்படுவதற்கு பெரும்பாலும் பெண்களே அதிகமாக பாராட்டப்படுகிறார்கள்.
8. தெளிவாகவும், அழகாகவும் எழுதுவதால் பெரும்பாலான எழுத்து வேலைகள் பெண்களிடமே அளிக்கப்படுகிறது.
9. மாணவர்களுக்கே அதிகமான பின்னூட்டம் அளிக்கப்படுகிறது.
10. மாணவர்களின் முயற்சிக்கும் மற்றும் திறன்களுக்குமே ஆசிரியர்கள் கருத்துக்களை தெரிவிக்கின்றார்கள்.

**பாலின பாகுபாட்டை எதிர்கொள்வதில் ஆசிரியர், பெற்றோரின் பங்கு:**

1. பாலின பாகுபாட்டில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயல்களில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஈடுபடலாம். முதலில் ஒரே மாதிரியான பாலின வெளிப்பாடுகள் அல்லது பாலின அடையாளங்கள் பற்றிய விழிப்புணர்வு தேவை.
2. வகுப்பறையில் பாலின பாகுப்பாடின்மையை வெளிப்படுத்தும் அணுகுமுறைகளையும், நடத்தைகளையும், சூழ்நிலைகளையும் அமைக்க ஆசிரியர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
3. பள்ளி செயல்பாடுகளிலும் விளையாட்டுகளிலும் மாணவ, மாணவியரை பிரிப்பதை தவிர்க்க வேண்டும்.
4. பாட கலைத்திட்டத்திலும் பொருட்களிலும் சிறந்த வெற்றிகரமான பெண்கள் மற்றும் ஆண்களைப் பற்றிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
5. பாடப்புத்தகங்களை சரியான வகையில் தேர்ந்தெடுக்க வேண்டும். பாலின அடையாளங்களை தவிர்க்கும் புத்தகங்களை படிக்க மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
6. பாலினம் பற்றிய கலாச்சார வேறுபாடுகள் கூட குழந்தைகளின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே, இவற்றை தவிர்க்க அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

7. பாரம்பரியம் இல்லாத விருப்பங்களை தேர்வு செய்ய ஊக்கப்படுத்த வேண்டும். குழந்தைகள் வளர வளர அவர்களது தொழில் தேர்வுகளில் சரிசமமான வாய்ப்புகளை அளிக்க வேண்டும். குழந்தைகளின் பாலினம் அவர்களது தொழில் சார்ந்த ஆர்வத்தை பாதிக்கும் என்றகருத்தை எதிர்க்க வேண்டும்.
8. கல்வி சார்ந்த அடைவுகளில் மாணவ மாணவியரின் மீது சரிசமமான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.
9. ஆய்வுகளின் முடிவின்படி வினாக்களுக்கு மாணவர்கள் உடனடியாகவும், மாணவியர்கள் சிறிது காலம் தாழ்த்தியும் விடையளிப்பார்கள். ஆகவே, பதிலளிக்க மாணவியர்களுக்கு சிறிது காலம் ஒதுக்கி சமமான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.
10. போட்டி மற்றும் கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய கற்றல் சூழ்நிலைகளை ஏற்படுத்தப்பட வேண்டும்.
11. வகுப்பறையில் தொழில்நுட்பங்களை பயன்படுத்த மாணவர், மாணவியருக்கு சமமான வாய்ப்புகளை அளிக்க வேண்டும். பெற்றோர்களும் தங்களது வீடுகளில் வேலைகளை பகிர்வதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

**மூன்றாம் பாலினத்தவருக்கான கல்வியும் வாழ்க்கைத் திறன்களும்:**

பிறப்பிற்கு பிறகு மாற்றம் அடைந்த ஒரு பாலினத்தை மூன்றாம் பாலினத்தவர் என்பவர். அவர்கள் ஒரு ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ அல்லது இரண்டும் இல்லாத ஒரு நிலையாக தன்னை அடையாளம் காணும் நிலையே மூன்றாம் பாலினத்தவர் ஆவர்.

இவர்கள் பெரும்பாலும் மேல்நிலைக் கல்வியைகூட நிறைவு செய்வது இல்லை. அவர்களின் கல்வியறிவும் மிகவும் குறைவே. அதனால்தான் இவர்களை பணியமர்த்தும் நிறுவனங்கள் குறைவான ஊதியத்தையே வழங்குகிறார்கள். ஒருசிலர் வேறு வழியில்லாத நிலையில் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். அதனால் ஒருசிலர் திரும்பவும் பிச்சை எடுப்பதற்கும், பாலியல் தொழிலுக்கும் செல்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் உள்ள மூன்றாம் பாலினத்தவர் நலம் அமைப்பு கல்லூரிகளிலும்,பல்கலைக்கழகத்திலும் பயிலும் மூன்றாம் பாலினத்தவருக்கு உதவித்தொகை வழங்குகிறது. இது இவர்களின் முன்னேற்றத்திற்கு முதல்படியாக அமைகிறது. மூன்றாம் பாலினத்தவருக்கு அவர்களின் திறன் மேம்பாட்டிற்கான கல்வி கொடுப்பதன் மூலம் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழிவகை செய்யலாம்.

ஆங்கிலம் மற்றும் தாய்மொழியில் வாசித்தல், பேசுதல், எழுதுதல் மற்றும் கணினி திறன் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லலாம்.

மூன்றாம் பாலினத்தவருக்கு இந்த சமுதாயத்தின் பல்வேறு இடங்களிலும், நிலையிலும் ஒதுக்கி வைக்கிறார்கள். அதனால், அவர்கள் இந்த சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் மிகவும்

பின்தங்கிய நிலையிலேயே உள்ளார்கள். ஆகவே, சிறந்த கல்வி கொடுப்பதன் மூலமே அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த முடியும்.

**பாலின சமநிலைக்கான பள்ளி கலைத்திட்டத்தை உருவாக்குதல் :**

வகுப்பறையில் செயல்படுத்தப்படும் குறிப்பிட்ட கற்றல் கற்பித்தல் முறைகளிலிருந்து பாலின சமநிலைக்கான கலைத்திட்டத்தை உருவாக்குவதை தனிமைப்படுத்தக் கூடாது. கலைத்திட்டத்தின் அனைத்து உட்கூறுகளிலும், கருத்துகளிலும் பெண்களை ஆண்களிடமிருந்து பிரித்துக் கூறுதல் கூடாது. கல்வி கூடத்தின் அனைத்து செயல்முறைகளிலும் பாலின பாகுபாட்டை வெளிபடுத்தக் கூடாது. பாலின சமநிலையை பள்ளியின் அனைத்து செயல்முறைகளிலும் ஈடுபடுத்த ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதற்கு நேர்மறையான சூழ்நிலையையும், வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும். ஆசிரியரின் அனுபவத்திற்கும், அவர்களின் வகுப்பறை கலைந்துரையாடலுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அதே மாதிரி ஆசிரியரின் பாலினத்திற்கும், அவர்களின் வகுப்பறை தொடர்புக்கும், கலந்துரையாடலுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அனைத்து நிலை அனுபவங்களும் உள்ள ஆசிரியர்களும் வகுப்பறையில் மாணவிகளைவிட மாணவர்களிடமே உரையாட முன்னுரிமை அளிப்பார்கள்.

வகுப்பில் ஒரு சில மாணவியருக்கு கற்றலில் பிரச்சனை ஏறப்பட ஆசிரியரின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளே காரணமாகிறது. ஏனெனில் அவர்களது அறிவுசார் திறன்கள் பற்றிய ஆசிரியரின் குறைந்த அளவிலான பின்னூட்டங்கள் ஆகும். மேலும், சில ஆசிரியர்கள் மாணவிகளுக்கு கற்பிப்பதை விட மாணவர்களுக்கு கற்பிப்பதே சிறந்தது என்று எண்ணுகிறார்கள்.

வகுப்பறையில் மாணவிகள் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளுடன் இருப்பதற்கு காரணம் கணக்கியலிலும் அறிவியலிலும் பெண்களின் மேன்மையான நிலை பற்றி எந்தவித குறியீடும் இல்லாததே காரணமாகும்.

ஆசிரியரின் கற்பித்தல் வழங்குவதற்கு ஏற்பவே கலைத்திட்டம் சிறப்பானதாக அமையும். பள்ளிக்கு வெளியே எந்தவித பாலின வேறுபாடு இருந்தாலும் ஆசிரியரால் பள்ளிக்கு உள்ளே அதை மாற்றியமைக்க முடியும். ஆசிரியர்கள் வெறும் அறிவு கொடுப்பவராக இல்லாமல் சிறந்த கற்றலை வழங்குபவராகவும் செயல்பட வேண்டும். சரியான திட்டங்களின் மூலமே பாலின சமநிலையை கல்வியில் ஏற்படுத்த முடியும். இதற்கு சரியான கற்றல் கற்பித்தல் முறைகளையும் சூழ்நிலைகளையும் ஏற்படுத்தினால்தான் உயர்ரக கல்வி அடைவு ஏற்படும். இதற்கு ஆசிரியருக்கும், கல்வியாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பயிற்சி அளிக்க வேண்டும். மேலும், சமுதாயமும் தனது முழு ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டும்.

**முடிவுரை :**

பெரியவர்களின் ஆழ்ந்த சுயகருத்தின் சக்தியானது குழந்தைகளிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். குடும்பத்தினரும், ஆசிரியரும் நேர்மறையான கற்றல் சூழ்நிலைகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். இது அவர்களின் அறிவு சார், மனஎழுச்சி, உளசார் திறன், சமுதாய மற்றும் உடல்சார் திறன்களை மேம்படுத்த துணை புரியும். மேலும், இவை உலகளாவிய, பன்னாட்டு கலாச்சாரம், எதிர்ப்பு, சார்பு நிலை போன்றவற்றில் மாணவர்களை பட்டை தீட்ட பயன்படும். பாலின பாகுபாடு இல்லாமல் குழந்கைளிடம் நேர்மறையான எண்ணங்களை விதைப்பதும், சுயகருத்தில் விரிதிறனை வளர்ப்பதற்கும் ஆசிரியர்களும், குடும்பத்தினரும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. பாலின பங்கு என்றால் என்ன?
2. பாலினத்திற்க்கும் கலாச்சாரத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்குக.
3. மூன்றாம் பாலினத்தவருக்கான கல்வி மற்றும் வாழ்க்கை திறன்கள் பற்றி கூறுக.
4. பாலின பாகுபாட்டை எதிர்கொள்வதில் ஆசிரியர், பெற்றோரின் பங்கு பற்றி விளக்குக.
5. பாலின சமநிலைக்கான பள்ளி கலைத்திட்டத்தை உருவாக்குதல் - ஆராய்க.

# அலகு – 4

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் பாதுகாப்பும்

**நோக்கங்கள்:**

1. பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் பாதுகாப்பும் பற்றி அறிதல்
2. பாலியல் குற்றம் மற்றும் வன்முறைபற்றி புரிந்து கொள்ளுதல்
3. பாலின சமமின்மையைப் பற்றி ஆய்வு செய்தல்
4. பெண்களின் பாதுகாப்பிற்கான சில வழிமுறைகள்பற்றி மதிப்பீடு செய்தல்

**முன்னுரை**

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகளவிலும் இன்றும் மறைமுக பிரச்சனையாக இருந்து வருகிறது. நம்முடைய வேலையிடங்கள், வீடுகள், விளம்பரங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி, அன்றாட செய்திகளிலும் ஆண்கள் பெண்களுக்கு வன்முறையிழைப்பதை பார்த்து வருகிறோம். இது வயது, வகுப்பு என இல்லாமல் அனைத்து பெண்களின் வாழ்விலும் ஏற்படுகிறது. பெண்களுக்கு வன்முறை உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மற்றும் அவர்களின் தனிப்பட்ட சுதந்திரத்திலும் ஏற்படுகிறது. மேலும், இவர்கள் சமுதாயத்தால் ஒடுகப்படுகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறை, கருத்தடை குறைப்பாடு, ஆபாசம்,பின்தொடர்தல், கற்பழித்தல் அகியவை நடைபெறுகிறது. இதில் இளம் வயது மற்றும் முதிர் வயது பெண்களுக்கு உடல்ரீதியாகவும், பால்ரீதியாகவும் குற்றம் இழைக்கப்படுகிறது. அனைத்து வகை வன்முறைகளும் பெண்கள் தங்களின் தனிப்பட்ட வாழ்வை தீர்மானிப்பதில் மிரட்டலாகவே அமைகிறது. பாலின வன்முறை நயவஞ்சகமானது. இவை சமுதாயத்திற்கும் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கும் பாலின வன்முறை, பாலின ஆசைக்காகவோ அல்லது வன்முறையாகவோ நடைபெறுகிறது என்ற நோக்கத்தை பாகுப்படுத்த முடிவதில்லை.

**பொருள் :**

பெண்களுக்கு எதிரான வன்முறை என்றால் பெண்களின் மேல் முதன்மையாகவும், பிரத்தியேகமாகவும் ஏற்படுத்துவது என்பதாகும். இவ்வகை வன்முறை ஒரு குறிப்பிட்ட பாலினத்தை குறித்து முதன்மை நோக்கத்தோடு ஏற்படுத்தப்படுகிறது. ஐக்கியநாட்டு குழுபெண்களுக்கு எதிரான வன்முறை, குறிப்பிட்ட பாலினத்தினை குறிவைத்து நடத்தப்படும் வன்முறை என்றும் அதன் விளைவாக பெண்கள் உடல்ரீதியாகவும், பால் அல்லது மனதளவிலும் பாதிக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கு உட்பட்டு அவர்கள் சுதந்திரமும் பாதிக்கப்படுகிறது என்று கூறுகிறது..

**இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறை:**

பெண்களுக்கு ஏற்பட்டுள்ள வன்முறை குறித்து இந்தியாவில் காவல்துறையினர் அதிக நிகழ்வுகளை பதிவு செய்துள்ளனர். தேசிய குற்றவியல் பதிவு G&1998 ஆண்டு 2010 ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கு எதிராக குற்றம் மக்கள்தொகை பெருக்கத்தை விட அதிகரிக்கும் என

தெரிவித்தது. அலுவலக புள்ளி விவரமும் பெண்களுக்கு எதிராக வன்முறை அதிகரித்து வருவதாக தெரியப்படுத்துகிறது. ஆனால், அவை நாடு, பொருளாதார நிலை, காலாச்சாரம், வகுப்பு, குடும்ப பின்னனி ஆகிய காரணிகளால் வேறுபடுகிறது.

**அமில வீச்சு**

தாமஸ் ரீயூடர்ஸ் பவுண்டேஸனின் கணக்கெடுப்பு படி இந்தியாவில் பெண்கள் வாழ்வதற்கு நான்காம் அபாய இடமாக உலகளவில் இருப்பதாக தெரிவிக்கிறது. இதில் எவ்வகை இனம், மொழி, ஜாதி என்றாலும், இவ்வகை கொடுமையான வன்முறையால் பாதிப்படைகிறார்கள். அமிலம் விலை குறைவானதாகவும், எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், வேகமாக பெண்கள் வாழ்வை அழிக்க கூடியதாகவும் அமைகிறது. ஆகவே, அமில வீச்சு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**குழந்தை திருமணம்**

குழந்தை திருமணம் இந்தியாவில் பாரம்பரியமாக அதிகரித்தும் இன்றளவில் தொடர்ந்தும் வருகிறது. வரலாற்றில் மணமகள் பூப்பெய்தும் காலம் வரை தங்கள் பெற்றோருடன் வசிக்கலாம். முற்காலத்தில் இளம் விதவைகள் கடும் துயரத்தோடும், முடி மொட்டையடிக்கப்பட்டும், தனியாகவும் சமுதாயத்தால் தவிர்க்கப்பட்டும் வாழ்ந்து வந்தனர். 1860 ஆம் ஆண்டு குழந்தை திருமணத்திற்கு எதிராக சட்டம் அமைக்கப்பட்டு இன்றும் நடைமுறையில் உள்ளது. UNICEF "2009 உலக குழந்தைகள் நிலை" படி 7% இநதிய பெண்கள் 18 வயதிற்கு முன் திருமணம் செய்கின்றனர் என்றும் இவை 56% கிராமப்புறத்திலும் அதிகரிக்கிறது என்றும் தெரிவிக்கின்றனர். இதில் உலகளவில் 40% குழந்தை திருமணம் இந்தியாவில் நடைபெறுவதாக தெரிவிக்கிறது.

**உள்நாட்டு வன்முறை :**

உள்நாட்டு வன்முறை என்பது ஒன்று அல்லது இரு பாலினத்தவரின் தகாத நடத்தைமூலமும்,குழந்தை திருமணம், குடும்பம், வெளியேசெல்வது (அ)கூட்டுவாழக்கைமூலமும் நடைப்பெறுகிறது. உள்நாட்டு வன்முறை, கணவனின் வன்முறை, அடித்தல், குடும்ப வன்முறை துணை வன்முறையாகவும் உள்ளடங்கிய உள்நாட்டு வன்முறை உலகளவில் பல்வேறு கலாச்சாரத்திலும், சமுதாயத்தின் பல பெண்களையும் பொருளாதார பாரபட்சமின்றி ஏற்படுத்தப்படுகிறது.

**வரதட்சணை**

1961 ஆம் ஆண்டு இந்திய அரசு வரதட்சணை தடுப்பு சட்டத்தை ஏற்படுத்தி திருமணம் பொருட்டு வரதட்சணை கேட்பது சட்டவிரோதமானது என்றது. இருப்பினும், வரதட்சணை சார்ந்த வன்முறை, தற்கொலைகள், கொலைகள் ஆகிய புகார்கள் அதிகம் உள்ளது. 1985-ல் வரதட்சணை தடுப்பு விதிகள் அமைக்கப்பட்டது.

**பெண் குழந்தை மற்றும் பெண் சிசு கொலை :**

இந்தியாவில் ஆண், பெண் இன விகிதம் ஏற்றத்தாழ்வோடு அமைந்து அது ஆண் குழந்தைகள் அதிகமாக உள்ளது இதற்கு முக்கிய காரணம் பெண் குழந்தைகள் பருவமடைவதற்கு முன் இறந்து விடுகின்றன. இதற்கு முக்கிய காரணமாக

அமைவதுபழங்குடியினரின் குறைந்த வருமானம், குறைவான படிப்பு, குறைவான உடல் நல வசதிகளாகும். அதிக நிபுணர்கள் இந்தியாவில் ஆண் குழந்தைகள் அதிகமாக இருப்பதற்கு காரணம் பெண் குழந்தைகளையும், பெண சிசுவையும் அழிப்பதே என தெரிவிக்கின்றனர். ஸ்கேனிங் முறை தாய் மற்றும் குழந்தையை பாதுகாப்பதில் முக்கிய பின்னடைவாக அமைகிறது.

**சமூக கருத்து :**

தில்லியில் ஏற்பட்ட கற்பழிப்பு தாக்குதலுக்கு பின் நடைப்பெற்ற விவாதங்களில் பெண்கள் கவர்ச்சியாக ஆடை அணிவதே கற்பழிப்புக்கு காரணம் என பேசப்பட்டது. பெரும்பாலான கருத்துக்கள் பெண்கள் கற்பழிப்புக்கு தூண்டுவதாகவும் தெரிவித்தனர்.

**உடல் நலம் :**

தற்போது இந்தியாவில் பெண்களின் உடல் நலம் மற்றைய நாட்டைவிட குறைவாக உள்ளது. இருப்பினும் ஆண்டுகள் போக போக இதில் முன்னேற்றம் காணப்படுகிறது. பெரும்பாலான குடும்பங்களிலும், குறிப்பாக கிராமங்களில் பெண்களுக்கு போசாக்கான உணவு கொடுப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இதன் விளைவாக இரத்த சோகை, ஊட்டச்சத்து குறைப்பாட்டிற்கு ஆளாகிறார்கள். குழந்தை பிறப்பின்போது தாய் இறத்தல் என்பது உலகளவில்இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது. 42% குழந்தை பிறப்பு மட்டுமே தகுதியான மருத்துவமனையில் நடைபெறுகிறது.

**பெண்களின் பாதுகாப்பு :**

இன்றையளவில் பெண்களின் பாதுகாப்பு என்பது மிகப்பெரிய தலைப்பாகும். பெண்களுக்கு ஏற்படும் அநீதிகளும், குற்றங்களையும் தேசிய அளவில் நாம் கடந்த சில வருடங்களாக காணும் போது இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக உள்ளனர் என கூறமுடியாது. பொதுவாக பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது சிறிது பயத்தோடு செல்கின்றனர். எப்பொழுதுமே பெண்கள் ஒருவித அச்சத்தோடு வாழ்கின்றனர் என்பது பரிதாபத்திற்குரிய உண்மையாகும். தனிப்பட்ட பாதுகாப்பு பெண்களுக்கு முக்கியமான தேவையாகும். இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பை உயர்த்த கீழ்க்கண்ட சில வழிமுறைகளை கையாள வேண்டும்.

**பெண்களின் பாதுகாப்பிற்கான சில வழிமுறைகள்:**

- முதன்முதலாக அனைத்து பெண்களுக்கும் தற்காப்பு முறையான பயிற்சி மேற்கொள்ள வேண்டும். ஒரு சில தற்காப்பு நடத்தையான இடுப்பில் உதைத்தல், குத்துதல் ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.
- பொதுவாக பெண்களுக்கு ஏதாவது பிரச்சனை ஏற்படுவதாக இருந்தால் அதை அறிந்து கொள்ளும் ஆறாம் அறிவு இயல்பாக அமைந்திருக்கிறது. ஆகவே, அவ்வகை சூழ்நிலை ஏற்படுமாயின் அந்த வகை நிலையை தவிர்க்க வேண்டும்.

- தப்பித்தல், ஓடுதல் ஆகியவையும் பெண்கள் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் பின்பற்றலாம். தெரியாத நபருடன் தெரியாத இடத்திற்கு எங்கும் பெண்கள் செல்லக் கூடாது.
- பெண்கள் தங்களுக்குள்ள உடல் ஆற்றலை புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் ஆண்களை காட்டிலும் தாங்கள் பலவீனமானவர்கள் என்பதை அறிந்து அதற்கான தற்காப்பு நடத்தை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
- மிளகு தெளித்தல் என்னும் முறை மிகச் சிறந்த கருவியாகும். இருப்பினும் முகம் முழுதும் தெளித்தாலும் சிலர் இதனால் பாதிப்படையாமல் இருப்பது இதன் பின்னடைவாகும். ஆகவே, பெண்கள் இதை முழுமையாக நம்பக் கூடாது.
- அவசரகால தொலைப்பேசி எண்கள் அனைத்தையும் பெண்கள் குறித்து வைப்பது மூலம் உடனடியாக பிரச்சனை ஏற்பட்டால் தங்கள் குடும்ப நபர்களுக்கும் காவல் துறைக்கும் தெரியப்படுத்தலாம்.
- பெண்கள் காரில் வெளியே செல்லும் போதும் வெளிப்பயணம் செல்லும் போதும் விழிப்போடு இருக்க வேண்டும். தனியே காரில் பிராயாணம் செல்லும் போது அனைத்து கதவுகளையும் பூட்ட வேண்டும்.
- பெண்களுக்கு பாதுகாப்பு என்பது உடனே சமுதாயத்தால் தீர்க்க வேண்டிய ஒன்றாகும். பெண்கள் பாதுகாப்பாக இல்லாதது நாட்டின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தடுப்பதோடு ஏறக்குறைய பாதி மக்களை (உடல், மனம், சமுதாய) ரீதியாக பாதிப்படைய வைக்கிறது.

பெண்களுக்கு ஏற்படும் வன்முறையை தடுப்பதற்காக இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பு சட்டம் ஒரு பட்டியலே உள்ளது. அவற்றில் சில குழந்தை திருமண கட்டுப்பாடு சட்டம் 1929, இந்து திருமண சட்டம் 1955, இந்து விதவைகள் மறுமணம் சட்டம் 1856, இந்திய பீனல் கோர்ட் 1860, வரதட்சணை தடுப்பு சட்டம் 1955, குழந்தை பேறு நன்மை சட்டம் 1861, அயல்நாட்டு திருமண சட்டம் 1969, இந்திய விவகாரத்து சட்டம் 1969, கர்ப்பகால மருத்துவ பாதுகாப்பு சட்டம் 1971, கிறிஸ்த்துவ திருமண சட்டம் 1872, சொத்துரிமை சட்டம் 1976, திருமண ஆன பெண்களுக்கான சொத்துரிமை சட்டம் 1874, பிறப்பு, இறப்பு, திருமண பதிவு சட்டம் 1976, பெண்களை ஆபாசமாக காட்டுதல் தடுப்பு சட்டம் 1986, முஸ்லீம் பெண்கள் சட்டம் 1986, உடன்கட்டை ஏறுதல் தடுப்பு சட்டம் 1987, பெண்களுக்கு ஏற்படும் வன்முறை தடுப்பு சட்டம் 2005, பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் பாலின குற்றம் சட்டம் 2012, வேலை பார்க்கும் இடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலின தடுப்பு சட்டம் 2013.மற்றும் இளம் சிறார் 2015 என்னும் சட்டம் இளம் சிறார் குற்றம் 2000க்கு பின் அமைக்கப்பட்டது. இந்த சட்டம் லோக் சபாவில் 7 மே 2015 அன்று அமுல்படுத்தப்பட்டது. இது ராஜ்ய சபாவில் 22 டிசம்பர் 2015 அமல்படுத்தப்பட்டது. இந்த சட்டம் இளம் சிறார் வயது 18 முதல் 16 வயது என தீர்மானிக்கப்பட்டது.

**பெண்களுக்கு பள்ளி, வீடு, வேலைப்பார்க்கும் இடத்தில் தேவையான பாதுகாப்பு:**

பள்ளிகளில் பல்வேறு பெண்களின் பாதுகாப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகிறது. இதன் மூலம் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள் வெகுவாரியாக தடுக்கப்படுகிறது. பல உள்ளூர்

நிறுவனங்களும், பாலியல் கொடுமைகளை தடுக்க பல நடவடிக்கைகள் உயர் கல்வி மாணவர்களுக்கு கல்வி புகுத்துவது மூலம் நடத்தப்படுகிறது.

1. **விழிப்புணர்வு** : தற்காப்பின் முதல் படி, அனேக மக்கள் அடி வயிற்றில் உதைத்தலும், குத்துதலும் தன்னை காக்கும் நடத்தை என நினைக்கிறார்கள். ஆனால்,முதலாவதாகவும், முக்கியமானதாகவும் தற்காப்பு நடத்தை என்பது விழிப்புணர்வாகும். தன்னைப் பற்றிய விழிப்புணர்வு, சுற்றுப்புற விழிப்புணர்வு, தன்னை தாக்க இருப்பவர்கள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை இதில் அடங்கும்.

   பொதுவாக பல ஆய்வுகளில் குற்றவாளிகள் தன்னை சுற்றி உள்ளனவனவற்றைப் பற்றிய வழிப்புணர்வு இல்லாமல் யார் இருக்கிறார்களோ அவர்களையே குறி வைக்கின்றனர். தன்னை சுற்றி உள்ளன பற்றிய விழிப்புணர்வு கொள்வது மூலம் பொது இடங்களில் ஏற்படும் தீவிரவாதத்தை தவிர்க்கலாம்.

2. **ஆறாம் அறிவை பயன்படுத்துதல்** :மக்களுக்கு ஆறாம் அறிவு என்னும் உள்ளுணர்வு ஆற்றல் உள்ளது. பெரும்பாலான பெண்களுக்கு ஆறாம் அறிவு அற்புதமான பரிசு எனலாம். இந்த ஆற்றலை பயன்படுத்தி நம் தேவைகளை பூர்த்தி செய்யலாம். சரியானதாக இல்லை என தோன்றும் மனிதர்களிடமிருந்து விலகியிறுத்தல் வேண்டும்.

3. **அ. தற்காப்பு கலை** : பெண்கள் தற்காப்பு நிகழ்ச்சியின் மூலம் பார்த்து கற்றுக் கொள்ளல் என்பது கடினமான ஒன்றாகும்.

   **ஆ.**தற்காப்பு கலை நிகழ்ச்சிகள் உண்மைதன்மை கொண்டதாக அமைத்தல் வேண்டும். தற்காப்பு கலை பயிற்சியாளர்கள் வன்மையான கற்பழிப்பு காட்சிகளை விரட்டும் நிகழ்வுகள் ஏற்படுத்தி பயிற்சி கொடுக்க வேண்டும்.

4. **தப்பித்தல்** : இது ஒரு சிறந்த தேர்ந்தெடுப்பு, வன்முறையாளருடன் காரிலோ அல்லது ஒரு கட்டிடத்திலோ போக நேரிட்டால் அதை ஏற்பது போல புத்திசாலித்தனத்தோடு நடந்து பின் தப்பிக்க வேண்டும். தப்பிக்காவிட்டால் ஒரு வேளை அவன் கொலை செய்தோ அல்லது கடின தாக்குதலோ ஏற்படுத்தலாம். கார் கண்ணாடி மேல் கல் வீசலாம் அதன் மூலம் அவன் கவனத்தை சிதறடிக்கலாம்.

5. **சண்டையிடுதல் உன் உரிமை :**

   நாம் எவ்வளவுதான் விழிப்புணர்வோடும், தவிர்த்தல் முறையை பின்பற்றினாலும் உடலளவில் தவிர்த்தல் முறையை எதிராளியிடம் பயன்படுத்தலாம். வயது எதுவாக இருந்தாலும், தற்காப்பு பயின்று இருக்காவிட்டாலும் முக்கியமாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று முடியும், கட்டாயமாக்கல் என்பதாகும். அப்படி எதிர்க்க சட்டப்படி உரிமையும் உள்ளது. இதில் எதிராளியை தாக்காமல் பயமுறுத்தல் செய்ய உரிமை உள்ளது. பெரும்பாலான பெண்கள் தங்களை தாக்குபவர்களை தற்காப்பு நடவடிக்கை எடுத்தால் அவர்கள் கோபமடைவர் என அச்சப்படுகின்றனர். இருப்பினும் புள்ளி விவரம்

அவர்களை தாக்குவது மூலம் உயிர் தப்ப வழி உள்ளது என தெரிவிக்கிறது. முதலில் கண்களையும், பின் அடிவயிற்றையும் குறி வைக்க வேண்டும்.

**6. மிளகு தெளித்தல்**

மற்ற தற்காப்பு நடத்தை போல் மிளகு தெளித்தலும் முக்கிய கருவியாகும். ஆனால், இதிலும் ஒரு சில பின்னடைவுகள் உள்ளது. எடுத்துக்காட்டாக, இவை எல்லோருக்கும் பயன்படுத்த முடிவதில்லை. 15–20% மக்கள் முகம் முழுதும் தெளித்தாலும் அவர்கள் எந்த பாதிப்பிற்கும் உட்படுத்தப்படுவதில்லை. இதை பையில் எடுத்து சென்று வன்முறையாளர் முன் அதை வெளியே எடுக்க முற்படும் சமயத்தில் அவர்கள் கவனமாகி விடுகின்றனர். ஆகவே, எந்தவித தற்காப்பு கருவியையும் நம்ப கூடாது மாறாக உங்கள் கை உடலை கொண்டு வன்முறையாளரை தாக்க முயற்சி செய்ய வேண்டும்.

**7. வீட்டில் தாக்குதல் :**

வீட்டில் தாக்குதல் ஏற்படுத்துவதை தவிர்க்க அறிமுகம் இல்லாத நபர்கள் வீட்டின் வெளியே இருக்கும்போது கதவை திறக்க கூடாது அல்லது அவர்கள் அங்கு வருவதற்கான காரணம் முதலில் அறிய வேண்டும். (குற்றவாளிகள் பழுது பார்ப்பவர் அல்லது காவலாளி போல் உடை பொதுவாக அணிந்திருக்கலாம்). குற்றவாளி கதவை உடைக்கும் பட்சத்தில் உங்களுக்கு பாதுகாப்பு அறை ஒன்று வீட்டில் அவசியம் இருக்க வேண்டும். அந்த அறை திடமான கதவுகளோடும், அந்த அறையில் தொலைபேசியும் பொருந்தியிருக்க வேண்டும்.

**8.** காரில் பயணிக்கும் போது ஜன்னல் கதவுகளை மூடி வைத்தல். காரில் தாக்குதல் பொதுவாக கார் நிறுத்தப் பட்டிருக்கும் சமயத்தில் நடைபெறுகிறது. $45^{o}$கோணத்தில் உங்களை வெளியே இழுத்தோ அல்லது தாங்கள் உள்ளே ஓட்டுநர் இருக்கைக்கோ செல்வர்.

**9. பாதுகாப்பு குறிப்பு :**

பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றங்கள் முக்கியமாக மிகவும் நல்ல தங்கும் விடுதிகளிலும் மிகவும் மோசமான தங்கும் விடுதிகளிலும் உலகெங்கிலும் நடைப்பெறுகின்றன. வன்முறையாளன் விடுதி பணியாளர் போல் நடித்து தாழ்போடாத அறையின் உள்ளே நுழைகின்றனர். வீடுகளில் பாதுகாப்பாக இருக்க கதவுக்கு வெளியே தெரியாத நபர் இருந்தால் கதவை ஒரு போதும் திறக்க கூடாது.

**10. இணையதள வெளி பாதுகாப்பு :**

இணையத்தளம் கல்வியறிவை கொடுப்பதோடு பொழுது போக்காகவும் விளங்குகிறது என்றாலும் இதன்மூலம் சில ஆபத்துகளும் உண்டு. இணையத்தளம் மூலம் தொடர்பு கொள்ளும் போது பிற பெயர்களை கொண்டும் சுயவிவரம் அதாவது வீட்டு

முகவரி, தொலைபேசி எண்களை பகிரக்கூடாது. குடும்ப நபர்களையும் அவ்வாறு செய்ய சொல்ல வேண்டும்.

**வேலை பார்க்கும் இடத்தில் பெண்களின் பாதுகாப்பு :**

வேலை பார்க்கும் இடத்தில் பெண்களுக்கு பாதுகாப எற்படுத்துதல் - பில் 2012: அனைத்து முதலாளிகளும் கண்டிப்பாக:

a. பாதுகாப்பான வேலை சூழலை வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
b. தொழிலாளர்களுக்கு அடிக்கடி விழிப்புணர்வு முகாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.
c. புகார்கள் ஏதாவது வந்தால், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு மேலும், அவ்வாறு நடக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய நாட்டில் அரசாங்கம் பல சட்டம் இயற்றி, விதிமுறைகள், கட்டுப்பாடுகள் விதித்தாலும் நாளுக்கு நாள் குற்றங்களும் பெருகி கொண்டேதான் இருக்கிறது. சில வருடங்களாக பெண்களின் நிலை வருத்தப்பட கூடியதாகவும், பயங்கரமானதாகவும் உள்ளது. சொந்த நாட்டிலேயே பாதுகாப்பு இல்லாதது, அவர்களின் தன்னம்பிக்கையை பாதித்திருக்கிறது. பெண்கள் வீட்டைவிட்டு வெளியே அலுவலகம், அங்காடிகளுக்கு செல்லும் போது அவர்களின் பாதுகாப்பு சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது. எனவே, நாம் எப்போதும் அரசாங்கத்தை குற்றம் கூற கூடாது. பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமே என கூற இயலாது. மாறாக அவை ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். குறிப்பாக ஆண்கள் பெண்களை குறித்து அவர்களின் மனநிலையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**பாலியல் குற்றமும் வன்முறையும் :**

பல பெண்களுக்கு குற்றமும், பாலியல் ஒடுக்குதலும் அவர்களின் வாழ்வையே பாதிக்கிறது. கட்டாய பாலின உறவு ஒரு பெண்ணின் வாழ்வில் எப்போது வேண்டுமென்றாலும் நடக்கலாம். தவறான நடத்தைகளும் வலுக்கட்டாயமான கற்பித்தலும் இதில் அடங்கும். பெண்கள் அவர்களின் இணங்கல் இல்லாமலேயே அவர்களை வன்முறையாளர்கள் பாலின நடவடிக்கைகளில் ஈடுப்பட செய்கின்றனர். பெண்கள் பாலின செயல்களில் ஈடுபட மறுத்தால் உடலளவில், சமுதாய, பொருளாதார ரீதியில் அவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.

ஆய்வுகளில் பெண்கள் வாழ்வில் அவர்களின் இணக்கம் இல்லாமலேயே அவர்களின் கணவர், குடும்ப உறுப்பினர்கள், துணைகள் ஆகியோர்களால் பாலின தொந்தரவிற்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

பெண்கள் அவர்களுக்கு பாலின செயல்களில் இணக்கம் இல்லை என்றாலும் அவர்களை கட்டாயப்படுத்தி இணங்க செய்வதோடு அவர்களை அவமானப்படுத்துகின்றனர்.

பெரும்பாலான பாலின பலாத்காரம் பெண் குழந்தைகளிடமும், குமர பருவத்தினரோடும் வளர்ந்து வரும் நாடுகளில் நடைபெறுகிறது. மூன்றில் ஒரு பாலின தாக்குதல் 15 வயதும் அதற்கு குறைவானவர்களிடம் நடத்தப்படுவதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

சமுதாயத்தில் பாலின பலாத்காரம் அனைத்து வகை சமுதாயத்திலும் குழந்தைகளிடம் நடத்துவதாக ஆய்வுகள் கூறுகிறது. பாலின குற்றங்கள் வயது வந்தவர்கள், முதிர் குமரபருவத்தினர், குழந்தைகள் ஆகியோரிடம் பாலியல் பலாத்காரம் நடத்தப்படுகிறது. 13,14,15 அல்லது 16 வயதுடையோர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இந்தியாவில் கற்பழித்தல் ஒரு முக்கியமான பெண்களுக்கு எதிரான குற்றம் எனவும், இது ஒரு தேசிய பிரச்சனை எனவும் அகில இந்திய மனித உரிமை கழகம் தெரிவிக்கிறது. 1983-ம் ஆண்டு வரை "மனைவியிடம் கணவன் உடலுறவு கொள்ளுதலும் மனைவி பதினைந்து வயதிற்கு குறைவாக இருக்கும் போது உறவு கொள்ளுதல் கற்பழித்தல் ஆகாது என தெரிவிக்கப்பட்டது" திருமணம் செய்து கொண்ட மனைவியை கணவன் கற்பழித்தால் அது இன்றளவும் குற்றம் என கூறுவதில்லை. இன்று வளர்ந்த நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் இவ்வகை கற்பழிப்பு 20 நிமிடத்திற்கு ஒன்று நடைபெறுகிறது. புதுதில்லியில் அதிக எண்ணிக்கையிலான கற்பழிப்பு நடைபெறுகிறது.

ஈவ் டீசிங் முறையில் ஆண்கள் பெண்களை பாலின வன்முறைக்கு உட்படுத்துவது கசப்பான உண்மையாகும். இவ்வகை பாலின வன்முறை அயல்நாட்டு கலாச்சாரம் என குற்றம் சாட்டுகின்றனர். 1987-ல் பெண்களை தரக் குறைவாக காட்டுதல், விளம்பரங்கள், வெளியீடுகள், எழுதுதல், ஓவியங்கள் ஆகியவைகளில் தடுப்பு சட்டம் இயற்றப்பட்டது.

1990-ல் பெண்களுக்கு எதிரான குற்றங்களிலும், தொந்தரவுகளும் பாதியளவு அவர்கள் வேலை செய்யும் இடங்களில் நடைபெறுவதாக தெரிகிறது.

எவ்வகை வன்முறையாக இருந்தாலும், அது பெண்களின் வாழ்வை பாதிக்கிறது. ஆண்கள் பாலின வன்முறைகளை இன்பமாக கருதுவதால் அது தந்திரமாக பெண்கள் மேல் நடத்துகின்றனர். பல பெண்களுக்கு பாலின வன்முறை அவர்களிடம் நடத்தப்படும் போது அது பாலின தேவைக்கோ அல்லது பிற நோக்கத்தோடு நடைபெறுகிறதா என்பதை அவர்களால் பாகுப்படுத்தி அறிய முடிவதில்லை.

**பாலின குற்றங்கயையும் வன்முறைகளையும் தடுப்பதில் கல்வியின் பங்கு :**

பள்ளியில் வன்முறையை தடுப்பதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஏனென்றால், அவர்களே குழந்தைகளின் இரண்டாம் தாயாக பாவிக்கப்படுகிறார்கள். இந்த வகை பிரச்சனையை தடுப்பதற்கு ஆசிரியர்கள் பல்வேறு படிநிலைகளை பின்பற்ற வேண்டும்.

முற்காலத்தில் பள்ளியை பாதுகாப்பாக மக்கள் கருதினர். ஆனால், தற்போது பள்ளியில் பெருகி வரும் வன்முறைகளை பார்த்தால் பள்ளி பாதுகாப்பாக இல்லை எனத் தோன்றுகிறது. பள்ளிகளில் பெருகிவரும் வன்முறை பயமுறுத்தல்களை பார்த்தால் அவை குழந்தைகளின் கற்றலை வெகுவாக பாதிக்கிறது. வன்முறை குழந்தைகள் தங்கள் எதிர்காலத்தை பாழடைய செய்வதோடு தன்னோடு பயிலும் மற்ற குழந்தைகளையும் பாதிப்புக்கு உட்படுத்துகிறார்கள். கல்வித் துறையின் அறிக்கை படி பள்ளியில் வன்முறைக்கு உட்பட்டு பயமுறுத்தும் குழந்தைகள் 12 வயது முதல் 18 வயதுடையோ ஆவார். இந்த பிரச்சனை உலகெங்கிலும் உள்ள பள்ளிகளில் உள்ளது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், பள்ளிகள் ஆகியோர் பொறுப்பேற்று இவ்வகை வன்முறைகளை பள்ளியில் குறைக்க முற்பட வேண்டும். பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு உத்திகளை கையாண்டு இவ்வகை பிரச்சனைகளை தவிர்க்கலாம்.அவை :

1. **குழந்தைகளுக்கு அன்பு காட்டுதல் :**

வன்முறையில் ஈடுபடும் குழந்தைகளுக்கு அன்பு காட்டுவதன் மூலம் அவற்றை தவிர்க்கலாம். எதிர்காலத்தில் பெரிய பின்விளைவுகள் ஏற்படுவதை தவிர்க்க முதலிலேயே இவற்றை தவிர்க்க வேண்டும்.

2. **அறிவுரை பகர்தல் :**

ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு அறிவுரைகளை பகர வேண்டும். அதனால் அவர்களின் கோபம் குறைய கூடும். மேலும், அவ்வகை குழந்தைகளுக்கு தகுந்த வேலை வாய்ப்பு அறிவுரை வழங்க வேண்டும். அதனால் அவர்கள் மனம் கெட்ட சிந்தனையிலிருந்தே திசை திரும்பி நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்வர்.

3. **கடுமையான நடவடிக்கை :**

வன்முறையில் ஈடுபடும் குழந்தைகளின் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை காணும் மற்ற குழந்தைகளும் பயந்து வன்முறையில் ஈடுபடும் எண்ணத்தை தவிர்ப்பர். ஆகவே, சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

4. **தியானம் :**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தியானம் கற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் அவர்கள் ஆன்மாவும் தளர்ந்து அவர்களின் மனமும் உண்மை நிலைக்கு மாறும்.

5. **ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்தல் :**

குழந்தை உளவியல் குறித்த பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் மட்டுமே குழந்தைகளுக்கு உதவ முடியும்.

**6. ஆசிரியர்கள் மாணவர்களோடு கலந்துரையாடுதல்**

இப்படி செய்வது மூலம் மாணவர்கள் ஆசிரியரின் உறவு மேம்பட்டு மாணவர்கள் ஆசிரியர்களை பெரிதும் நம்புகின்றனர். ஆகவே, எந்த குழந்தை மற்ற குழந்தைகளை துன்புறுத்துகிறது என்ற பிரச்சனையை கண்டுபிடித்து தகுந்த நேரத்தில் மாணவர்களுக்கு உதவ முடியும்.

**7. மாணவர்கள் ஆற்றலை வெளிக் கொண்டு வருதல் :**

தேவைப்படும் மாணவர்களுக்கு ஆசிரியாகள் உதவி செய்து தகுந்த ஆற்றலை வெளிக் கொண்டு வர வேண்டும்.

**8. கோபத்தை கட்டுப்படுத்தும் வகுப்பு :**

கோபத்தை கட்டுப்படுத்தும் வகுப்புகள் மாணவர்களுக்கு நடத்தலாம். ஆகவே, அவர்கள் கோபத்தை கட்டுப்படுத்தி வன்முறையில் ஈடுபடுவதை தவிர்க்கலாம்.

**9. மனப்போராட்டத்தை தீர்க்கும் வழிமுறைகள் :**

மனப்போராட்டத்தை தவிர்க்கும் வகுப்புகளை மாணவர்களுக்கு நடத்துவதன் மூலம் அவர்கள் சமாதானமான சூழலை ஏற்படுத்திக் கொள்வர்.

10. **கண்காணித்தல்** : அடிக்கடி ஆசிரியர்கள் மாணவர்களை கண்காணிக்க வேண்டும். ஏதாவது குறைபாடு இருப்பின் மாணவர்களோடு கலந்துரையாடல் தேவைப்பட்டால் அவர்களின் பெற்றோர்களோடு கலந்துரையாடலாம்.

**உடல் காட்சிபொருளாக்கப்படுதல் - பொருளும் கருத்தும்:**

உடல் காட்சிபொருளாக்கப்படுதல் என்ற பதம் பெண்களைக் குறிக்கிறது. அதாவது ஒருவரை பெரும்பாலும் பெண்களை காட்சிபொருளாகபார்த்தல்(அ) நடத்துவது ஆகும்.

உடல் காட்சிபொருளாக்கப்படுதல் என்பது ஒருவரை எந்தவித எண்ணமும் (அ) உணர்வுகளும் இல்லாமல் பார்த்தல்(அ) நடத்துதல் ஆகும்.பெரும்பாலும் உடல் காட்சிபொருளாக்கப்படுதல் என்ற பதம் பெண்களைக் குறிப்பிட்டு அவர்களை பாலின இன்பத்திற்கும் மனநிறைவுக்கும் ஏற்ற பொருளாக பார்க்கப்படுகிறது. அவர்களின் ஆளுமைத்திறனையோ மரியாதையையோ கருத்தில் கொள்ளாமல் வியாபார நோக்கோடு நடத்துதல் ஆகும்.

எந்த ஒரு தனிநபர் தனது உடலையும் தனது தோற்றத்தையும் பற்றி நல்ல உணர்வுடன் இருக்கிறாரோ அவரிடம் அவரது உடலமைப்பு பற்றிய நேர்மறையான எண்ணம் இருக்கிறது. ஆகவே மாணவர்களுக்கு உடலமைப்பு பற்றிய நேர்மறையான எண்ணங்களையும் கருத்துக்களையும் அறிவுறுத்த வேண்டும்.பள்ளிகளில் ஆண்கள் - பெண்களின் உடலமைப்புகளைப்

பற்றிய நேர்மறையான நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தி ஒரு நேர்மறையான உருவமைப்பை ஒவ்வொருவரும் உணருமாறு செய்தல் அவசியமாகும்.

**முடிவுரை :**

இக்கால இளைஞர்கள், கண்ணிற்கு தெரியாத எதிர்காலத்தை எதிர்நோக்க தேவையான சமூகத்திறனையும், விழுமங்களையும் தேடுகிறார்கள். இச்சமூதாயத்திற்கு விழுமங்களை கொண்டு செல்லக் காரணமாக இருப்பார்கள் தைரியமான மக்கள், புதிய கருத்துக்களையுடைய மக்கள், சிறந்த ஆசிரியர்கள், போன்றவர்கள் தேவைப்படுகிறார்கள். இவற்றை முழுமையாக அமைப்பதற்கு விழுமக்கல்வி மிகவும் அவசியமான ஒன்றாகிறது.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. இந்தியாவில் ஏற்படும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றி கூறுக.
2. பெண்களின் பாதுகாப்பிற்கான சில வழிமுறைகளை ஆராய்க.
3. பெண் குழந்தை மற்றும் பெண் சிசு கொலை எதனால் ஏற்படுகிறது?
4. பாலின குற்றங்கள் மற்றும் வன்முறைகளை தடுப்பதில் கல்வியின் பங்கு பற்றி விளக்குக.
5. உடல் காட்சிபொருளாக்கப்படுதல் என்றால் என்ன?

# அலகு -5

## மக்கள் சாதன ஊடகமும் சமூகப்பாலினமும்

**நோக்கங்கள்:**

1. மக்கள் சாதன ஊடகத்தில் பாலினத்தின் பங்கு பற்றி அறிதல்
2. மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினம் தொடர்பான சார்பெண்ணங்கள் பற்றி புரிந்து கொள்ளுதல்
3. சமூகப்பாலின சமத்துவமும் மொழிப்பயன்பாடும் பற்றி ஆய்வு செய்தல்

**மக்கள் சாதன ஊடகத்தில் பாலினத்தின் பங்கு:**

இத்தலைப்பு ஊடகங்களுக்கும் பாலினங்களுக்கும் இடையே உள்ள உறவு நிலையையும், ஊடகங்களால் உருவாக்கப்பட்ட அல்லது ஊடகங்களுக்காகவே சித்தரிக்கப்பட்ட பாலின இயல்புகள் மற்றும் பங்குப் பணிகள் பற்றி குறிப்பிடுகின்றன. மக்கள் சாதன ஊடகங்கள் தங்களது விளம்பரம், நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் மூலமாக தொடர்ந்து அன்றாடம் நம்மீது தாக்குதல் நடத்திக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு நமது கருத்தையும் கவனத்தையும் தினந்தோறும் கவருகின்ற மக்கள் சாதன ஊடகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் பங்கேற்பு என்பது சமூகப் பாலின சமத்துவமின்மையை நமக்கு தெரிவிக்கிறது. இந்த ஊடகங்களில் குறிப்பாக தொலைக்காட்சிகளில் வரும் காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பெண்களின் பங்கு குறைவாக இருப்பதோடு அவர்களை குடும்பத்தைப் பராமரிப்பவர், உணர்ச்சி வசப்படுபவர் மற்றும் ஆணாதிக்கத்தை ஏற்றுக்கொள்பவர் என்கின்ற அடிப்படையிலான நிகழ்ச்சியில் காட்டப்படுகின்றனர். இதுபோல் இளைய சமுதாயத்தினருக்கு ஆண் என்பவர் வலிமைமிக்கவராகவும், சுதந்திரமாக தனது வலிமையை வெளிப்படுத்துபவராகவும் அவர்களிடம் பெண்தன்மை இல்லை என்கின்ற அடிப்படையில் காட்டப்படுகிறது. ஒரு பெண்ணுக்கு எது தேவை அல்லது தேவையில்லை என்பதை ஆண்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்ற அடிப்படையிலான நிகழ்ச்சிகள் ஊடகங்களில் வலியுறுத்தப்படுகிறது. சமூகவியலிளர்களின் கருத்துப்படி இதற்கான அடிப்படைக் காரணம் பெரும்பாலான அரசியல்வாதிகள் மற்றும் சட்டமியற்றுபவர்கள் போன்றோர் ஆண்களாக இருப்பது தான் என்று கூறப்படுகிறது. பெரும்பாலான ஊடகங்கள் ஆண்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பெண்களின் பங்கு குறைவாகவும் இருக்கிறது. தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களின் கட்டுரைகள் போன்றவைகளில் ஆண்களின் பங்கு தான் அதிகமாக இருக்கிறது. பெண்ணியக்கவாதிகளின் கூற்றுப்படி,'ஒரு ஆண் என்பவன் ஒரு பெண்ணால் முழுமை பெறுகிறான்'. எனவே ஆண் - பெண் சமத்துவம் கொண்ட சமூகப்பாலின பங்கேற்பு மக்கள்சாதன ஊடகங்களில் இடம் பெற வேண்டும் எனபதை வலியுறுத்த வேண்டும்.

**மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினம் தொடர்பான சார்பெண்ணங்கள்**

**பெண்கள் தொடர்டபான சார்பெண்ணங்கள்:**

- பெண்கள் மென்மையானவர்கள், பயந்த சுபாவம் உடையவர்கள்.

- தமது கருத்துகளை ஆணித்தரமாக முன்வைப்பதில் தயக்கம் காட்டுவர்.
- வன்முறைக்கு எளிதில் ஆளாகக்கூடியவர்கள்.
- வம்பு பேசுவதில் ஆர்வம் காட்டுபவர்.
- பிறர் மீது (குறிப்பாக பெண்கள்) பொறாமை கொள்வர்.
- அதிக பொறுமை கொண்டவர்கள்.
- ஒப்பனை செய்து கொண்டு அழகாகத் தோற்றமளிக்க விரும்புவர்.
- எளிதில் உணர்ச்சிவசப்படுபவர்கள்.
- குடும்ப உறுப்பினர்களிடம் குறிப்பாக குழந்தைகளிடம் பாசம் காட்டுபவர்கள்.
- அதிக பொறுப்புணர்வுடன் திகழ்பவர்.
- எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பவர்கள்.

**ஆண்கள் தொடர்பான சார்பெண்ணங்கள்:**

- உடல் வலிமைமிக்கவர்கள்.
- உரிமையை நிலை நாட்டுவதில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள்.
- தற்பெறுமை மிகுந்தவர்கள்.
- பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புபவர்கள்.
- ஊர் சுற்றுவதில் நாட்டம் கொள்பவர்கள்.
- தமது பாசத்தை வெளிக்காட்டத் தெரியாதவர்கள்.
- பிடிவாதம் அதிகம் உடையவர்கள்.
- உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் மறைத்திடுவர்.
- ஆண்களே சரியான முடிவுகளை எடுக்கக் கூடியவர்.
- ஒப்பனை செய்வதில் ஆர்வம் இல்லாதவர்கள்.

**பாலின தன்அடையாள பணிப்பொறுப்புகளாக உணர்பவை:**

**பெண்கள் தன் அடையாள பணிப்பொறுப்புகளாக உணர்பவை:**

- சமூகத்தில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட உடைகளை அணிதலில் விருப்பம் கொள்ளுதல்.

- குடும்ப நிர்வாகத்தை மேற்கொள்வதில் ஆர்வம்.
- குடும்ப பணிகளை (உணவு தயாரித்தல், வீட்டை சுத்தப் படுத்துதல், உடைகளை துவைத்தல் போன்றவை) மேற்கொள்வதில் ஈடுபாடு காட்டுதல்.
- தன்பாலினத்தவரோடு நெருங்கிப் பழகவும், விளையாடவும், பொழுதுபோக்கவும் விரும்புதல்.
- ஆண்கள்பால் கவர்ச்சி மற்றும் தகுந்த ஆண்மகனை கணவனாக்கிக் கொள்ள ஆசைப்படுதல்.
- பிள்ளைகளைப் பெற்று வளர்த்திடும் பொறுப்பேற்றல்.
- குடும்பம் மற்றும் குல மரபுகளை பின்பற்றுவதில் உறுதியுடன் இருத்தல்.
- குடும்பத்திற்கு முன்னுரிமையளித்து, அதனை மையப்படுத்தியே தனது தொழிற்சார் வேலைகள் மற்றும் இதர பணிகளை அமைத்துக் கொள்ளல்.
- குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தல், மற்றும் நற்பண்புகளை மறைமுகமாக போதித்தல்.
- சமயச்சடங்குகளில் ஈடுபாடு காட்டுதல் மற்றும் அவற்றிற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- குடும்பத்தினரின் உடல்நலம் பேணுதல்.

**ஆண்கள் தன் அடையாள பணிப்பொறுப்புகளாக உணர்பவை:**

- தொழில் கற்றுத் தேர்ச்சியடைவதிலும், வாழ்க்கைத் தொழில் ஒன்றை மேற்கொண்டு குடும்ப வருமானத்தைப் பெருக்குவதிலும் ஈடுபாடு காட்டுதல்.
- குடும்ப உறுப்பினர்களை பாதுகாத்தல் தன் கடமை என உணர்தல்.
- தன் பாலினத்தவரோடு நெருங்கிப் பழகவும், விளையாட்டுத் தோழர்களாகவும் கொள்ள ஆவல் கொள்ளுதல்.
- பெண்களுக்கு கவர்ச்சியாகத் தோன்றுதல். விரும்பும் பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள விருப்பப்படுதல்.
- உடல்பலம் தேவைப்படும் வீட்டுப் பணிகளை மட்டும் மேற்கொள்ள முன்வருதல்.
- துணிவுமிக்க/ சாகச செயல்களில் ஈடுபடுதல், வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடுதல்.
- தனது அதிகாரத்தை பிறரிடம் குறிப்பாக பெண்களிடம் நிலைநிறுத்த முயற்சித்தல்.

**உடலைப் பற்றியும் நமது சுயத்தைப் பற்றியுமான நேர்மறையான கருத்துகள்:**

நமது உடலைப் பற்றிய நமது எண்ணமும் நமது சுயத்தைப் பற்றிய எண்ணமும் நேர்மறையாக இருக்க வேண்டும். உடலைப் பற்றிய நேர்மறையான எண்ணம் என்பது உடல் மற்றும் நமது தோற்றம் பற்றிய எண்ணமும் நம்முள் ஏற்படும் போது மனமகிழ்ச்சியைத் தரவேண்டும் என்பதை குறிக்கிறது. நாம் எல்லோரும் நமது உடல், மனம் மற்றும் சுயம் பற்றிய ஒரு எண்ணத்துடன் இருக்கிறோம். இது மட்டுமல்ல, இதுபோல் நம்மைப்பற்றிய பிறரது எண்ணத்தையும் அறிந்து கொள்ள விரும்புகிறோம். எந்த ஒரு தனிநபர் தனது உடலையும் தனது தோற்றத்தையும் பற்றி நல்ல உணர்வுடன் இருக்கிறாரோ அவரிடம் அவரது உடலமைப்பு பற்றிய நேர்மறையான எண்ணம் இருக்கிறது என்று கருதலாம். பல நேரங்களில் பல மனிதர்கள் தங்களைப் பற்றிய நேர்மறையான கருத்தைக் கொண்டிருக்கின்றனர். பிறா தன்னைப் பற்றியும் தனது உடலமைப்பு பற்றியும் எப்படி நினைத்தாலும் சிலா் தன்னைப் பற்றி உயா்வாகவும் நேர்மறையாகவும் கருதுவர். இது உளவியல்படி சரியான தற்கருத்தாகவும் மனநலத்திற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. நேர்மறையான உடலமைப்பு பற்றிய கருத்தை பின்வருவன மூலம் மேம்படுத்தலாம்:

- ஆரோக்கியமும் புறத்தோற்றமும் வெவ்வேறானவை என்று உணர்தல்.
- நமது குடும்பத்தின் நல்ல விஷயங்களையும் பாரம்பரியத்தையும் நாம் கொண்டிருப்பதாக கருதுதல்.
- நம்மைச் சுற்றி நல்ல நேர்மறையான உடலமைப்பு பற்றிய எண்ணங்கள் உடையவர்களுடன் இருத்தல்.
- நம்முடைய உடலை மரியாதையுடனும் அன்புடனும் நாமே நடத்துதல்.
- நம்மைப் பற்றிய பிறரது கருத்துகளின் உண்மையை உணர்ந்து நமது புறத்தோற்றத்தை முடிந்த அளவு சரிசெய்து கொள்ளுதல்.

**சுயம் பற்றிய நேர்மறையான கருத்து:**

சுயத்தைப் பற்றிய உணர்வு என்பதை சுயஉருவாக்கம், தன்னடையாளம், சுயகண்ணோட்டம் அல்லது சுய அமைப்பு என்று குறிப்பிடலாம். சுயம் என்பது நான் யார்? என்ற கேள்விக்கு விடையளிப்பதாக இருக்கிறது. சுயகருத்து அல்லது தற்கருத்து அல்லது நமது சுயம் பற்றிய நமது கருத்து என்ற அடிப்படையில் உருவாக்கப்படும் மனக்கட்டமைப்பாகும். இந்த கட்டமைப்பு நமது சுயமரியாதையுடன் இடைவினை புரிந்து சுயஅறிவு மற்றும் சமுதாயம் சார்ந்த சுயம் போன்றவைகளை அமைக்கிறது. இது நமது கடந்த கால சுயம், நிகழ்கால மற்றும் எதிர் கால சுயத்தை உள்ளடக்கியதாகும். இவ்வகையாக உருவாக்கப்பட்ட சுயத்தை பற்றி நேர்மறையான எண்ணங்கள் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நமக்கு சுயமரியாதை இருக்கிறது, நம்மால் பிறருக்கும் நமக்கும் நன்மை இருக்கிறது, மற்றும் நம்மால் இதைச் செய்ய முடியும் என்று கருதுவதை நமது சுயம் பற்றிய நேர்மறையான கருத்தாகும். மக்கள் சாதன ஊடகங்களில் பிரதிபலிக்கப்படும் ஒருவரது உடலமைப்பைப் பற்றியும் ஒருவரது சுயத்தைப் பற்றியும் பொதுவான

கருத்துகள் நேர்மறையாக இருக்க வேண்டும். பொதுவாக ஊடகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் உடலமைப்புகளைப் பற்றிய நேர்மறையான நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தி ஒரு நேர்மறையான உருவமைப்பை ஒவ்வொருவரும் உணருமாறு செய்தல் அவசியமாகும். மேலும் கலாச்சார வேறுபாடும் சுயம் பற்றிய கருத்தில் வேறுபாட்டை உருவாக்குகிறது. சமூகத்தில் பெண்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்த கூட்டு சுயத்தை பெற விரும்புகின்றனர். ஆண்களும் தங்களது சுயத்தில் பிறருடன் இணைந்த கூட்டான சுயத்தையே விரும்புகின்றனர்.

**மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினம்:**

மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினம் பல்வேறு வகையாக சித்தரிக்கப்படுகிறது. புத்தகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கார்ட்டூன்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரப்படங்கள், செய்திகளில் சமூகப்பாலினம் பற்றிய கருத்துகள் ஒவ்வொரு நாளும் நம்மீது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இவைகளால் சமூகப்பாலினம் பற்றிய கண்ணோட்டம் பொதுமக்களிடையே உருவாக்கப்படுகின்றன. பின்வருமாறு மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினத்தை விவரிக்கலாம்.

- **புத்தகங்கள் மற்றும் மாத – வார இதழ்களில் சமூகப்பாலினம்:**

அமெரிக்காவின் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் மீது நடந்த ஆய்வில், கடந்த 30 ஆண்டுகளாக சமூகப்பாலினத்தைப் பற்றிய கருத்து எவ்வாறு மாறுதல் அடைந்துள்ளது என்பதை தெரிவிக்கிறது. ஆரம்ப காலத்தில் அமெரிக்காவின் எழுத்தாளர்களின் படைப்புகளில் பெண்கள் குடும்பத்தை பராமரிப்பவர்கள், குழந்தையைப் பெற்றுத் தருபவர்கள் மற்றும் உணவைத் தயாரிப்பவர்கள் என்கின்ற பொதுவான கருத்தும் ஆண்கள் உடல் வலிமை மிக்கவர்கள், குடும்பத்திற்காக வெளியில்சென்று பொருளீட்டுபவர்கள் என்கின்ற கருத்தையும் கொண்டிருந்தது. ஆனால் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு எழுத்தாளர்களின் படைப்புகள் பெண்களுக்கம் ஆண்களுக்கும் உள்ள உயிரியல் சார்ந்த உடல்ரீதியான வேறுபாடுகளைத் தவிர மற்றவைகளில் இருவருக்கும் சமூகப்பாலின சமத்துவத்தை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. மேலும் வார மற்றும் மாத இதழ்களில் பெண்களின் உடல் உறுப்புகளை காட்சிப்படுத்துவதும் செய்தி மூலம் விளம்பரப்படுத்தும் வியாபார உத்திகளும் கடைபிடிக்கப்படுகின்றன. இதனால், பெண்களையும் ஆண்களையும் மனிதர்களாகக் கருதாமல் வியாபாரப் பொருளாகக் கருதும் மனப்போக்கு உருவாகியுள்ளது. பெரும்பாலான ஆண்கள் பெண்களை பாலுணர்ச்சியைத் தூண்டும் பொருளாகப் பார்க்கும் மனவக்கிரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோல், தற்போதுள்ள புத்தகங்களில் வியாபார உத்தியாக ஆண்கள் மற்றும் பெண்களிடையே கலாச்சாரம், பாலுணர்வு அல்லது சமூகப்பாலினத்தில் வேறுபாடுகளை உருவாக்கும் சூழ்ச்சிகள் நடைபெற்றுவருகிறது.

- **தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சமூகப்பாலினம்:**

தொலைக்காட்சிகளிலும் கடந்த 20 வருடங்களாக சமூகப்பாலினம் சார்ந்த காட்சிகளில் பெரும்மாற்றம் ஏற்பட்டுள்ளது. இக்காட்சிகளில் திருமணம், பெற்றோராதல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு போன்றவைகள் ஆண்களைவிட பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காட்டப்பட்டது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மீது நடத்தப்பட்ட ஆய்வின்படி சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்புவரை 74% தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெண்கள் திருமணம், காதல் மற்றும் குடும்பம் சார்ந்த நிகழ்வுகளில் அதிகம் காட்சிப்படுத்தப்பட்டனர் என்று கூறுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளில் ஆண்கள் 18% பேர் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்காவின் தொலைக்காட்சிகளில் பெண்களை தனித்துவமாக ஆண்களைப் போல் சுதந்திரமாக இருப்பதைப் போன்று சித்தரிக்கின்றனர். மேலும் வெற்றிகரமாக வியாபாரம் மற்றும் தொழிலதிபர்களாக ஆணுக்கு நிகராக விளங்கும் பெண்களையும் காட்சிப்படுத்துகின்றனர். தற்காலத்தில் எற்பட்டுள்ள நுகர்வோர் கலாச்சாரம் காரணமாக தொலைக்காட்சிகளில் அதிகமாக விளம்பரங்களிலும், நிகழ்ச்சிகளிலும் பெண்களை பாலுணர்ச்சியைத் தூண்டும் பொருளாகவும் ஆண்களின் கண்ணோட்டத்தில் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு நிகழ்ச்சிகளை அமைத்தும் பொருட்களை சந்தைப்படுத்துகின்றனர்.

- **கார்ட்டூன்களில் சமூகப்பாலினம்**

கார்ட்டூன் படங்களில் பெண்தன்மையை வலிமைமிக்கதாக காட்டப்படுகிறது என்றாலும், ஆண் பாத்திரத்தின் கட்டுப்பாட்டில் தான் கதையமைப்பு இருப்பதுபோல் சித்தரிக்கப்படுகிறது. இந்த மாதிரியான கார்ட்டூன் காட்சிகளில் வலிமைமிக்க ஆண்கள், பலவீனமான ஆண்கள், மென்மையான பெண்கள் மற்றும் நவீன முற்போக்கு பெண்கள் ஆகிய நான்கு பாத்திரங்களே அமைக்கப்படுகிறது. இந்த கார்ட்டூன் காட்சிகளின் கதையமைப்பில் முக்கிய கதாப்பாத்திரங்கள் அனைத்தும் ஆண்களாகவே இருப்பதைக் காணலாம். சில கார்ட்டூன்களில் பெண்களும் வீரம்மிக்க முக்கிய கதாப்பாத்திரங்களில் காட்சியாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வகை வீரம்மிக்க பெண்களின் பாத்திரங்களும் ஆண்களுக்கு துணைபுரியும் வகையில் அமைக்கப்பட்டு சுதந்திரமில்லாமல் இருப்பதையும் காணலாம். இதுபோல் குடும்ப வேலைகளையும் குழந்தைகளைப் பராமரிக்கும் ஆண்களின் பாத்திரங்கள் எதுவும் இல்லை என்றும் ஆண்தன்மை பிரதிபலிக்கும் வலிமை மற்றும் சுதந்திரமாக முடிவெடுக்கும் திறன்களை உடைய பெண்களின் பாத்திரங்கள் கார்ட்டூன்களில் உள்ளன என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் அந்த ஆய்வின்படி பெரும்பாலான கார்ட்டூன் பாத்திரப் படைப்புகள் ஆண்களையும் பெண்களையும் சமூக வார்ப்புகளாகவும் காண்பிக்கின்றன. ஆண்களின் பாத்திரங்கள் பெண்களின் பாத்திரங்களைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காண்பிக்கப்படுகின்றது. ஆனால் சமீபகாலங்களில் கார்ட்டூன்களில் மேலை நாடுகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகள் சமூகப்பாலின சமத்துவத்தை நோக்கி ஓரளவு முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றன.

- **திரைப்படங்களில் சமூகப்பாலினம்**

ஆரம்ப காலத்தில் திரைப்படங்களின் தாக்கம் தொலைக்காட்சிகளை விட மிக அதிகமாக இருந்த காலத்தில் ஆண்களின் கதாப்பாத்திரங்களில் ஆண்கள் மட்டுமே புத்திசாலிகளாகவும், தன்னிறைவு உடையவர்களாகவும் மற்றும் வீரம், விவேகம் உடையவர்களாகவும் காண்பிக்கப்பட்டு முக்கிய கதாபாத்திரமாக சித்தரிக்கப்பட்டது. இப்படங்களில் பெண்களின் கதாபாத்திரங்கள் ஆணுக்கு உதவிபுரிந்து அவரை விரும்புபவர் போலவும் காட்சிகள் இடம்

பெற்றிருந்தன. ஒரு சில படங்களில் பெண்களின் கதாபாத்திரம் முக்கிய கதையம்சத்துடன் படைக்கப்பட்டிருந்தாலும் அப்பெண்கள் ஆண்களை சார்ந்து இருக்கும் நிலைமையும் முடிவெடுக்கும் திறன் இல்லாமலும் காட்சிப்படுத்தப்பட்டது. இடைக்காலத்தில் தொலைக்காட்சியின் அதிக தாக்கத்திற்கு முன் எடுக்கப்பட்ட திரைப்படங்களிலும் ஆண்களின் பாத்திரங்கள் முடிவெடுக்கும் திறன் உடையவர், வலியுறுத்தி பேசுபவர், தன்னம்பிக்கை உள்ளவர் மற்றும் ஆதிக்கம் செலுத்துபவராகவும், பெண்கள் எவ்வளவுதான் அறிவு கூர்மையுடையவராக இருந்தாலும் வீரமில்லாமலும் அடிக்கடி அச்சப்படும் தன்மையைக் கொண்டவராக இருந்து ஆண்களை சார்ந்து இருக்குமாறும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. சமீபகாலத்தில் பெரும்பாலான திரைப்படங்கள் பெண்களின் உடலுக்கும் அவர்களது கவர்ச்சிக்கும் அதிக இடமளித்து பெண்களை காட்சிப்பொருளாக மாற்றியமைத்துள்ள ஆபாச பாடல்கள் நிறைந்த திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மேலும் ஆண் கதாபாத்திரங்கள் வன்முறையும், விரும்பாத செயல்களை செய்பவராகவும், கதாநாயகர்களின் துணிவும், நியாயமான செயல்பாடும் கொண்டதாக திரைப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில கதாபாத்திரங்கள் செயல் துடிப்பு மிக்க வீரத்துடன் செயல்படும் காவல்துறை அதிகாரிகள் போன்ற கதையம்சம் உடைய திரைப்படங்களை கொண்டவைகளாக இருக்கின்றன. மேற்கண்டவாறு திரைப்படங்களில் சமூகப்பாலினம் காண்பிக்கப்படுகிறது.

- **விளம்பரப்படங்களில் சமூகப்பாலினம்**

விளம்பரப்படங்கள் பெரும்பாலும் பெண்களின் அழகுணர்ச்சியை மையமாகக் கொண்டு வியாபார நோக்கத்துடன் எடுக்கப்படுகின்றன. பெரும்பாலான விளம்பரப்படங்களில் பெண்கள் தங்களது பாரம்பரியமான சமூக வார்ப்புகளாகவே காட்சிப்படுத்தப்படுகின்றனர். விளம்பரக்காட்சிகளில் நடத்தப்பட்ட ஆய்வின்படி காட்சிகளில் தோன்றும் ஆண்கள் பெண்களின் வார்த்தைகளிலும் உடல் மொழிகளிலும் சமூகப்பாலின வார்ப்புகள் அதிகமாக பிரதிபலிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்காட்சிகளில் பெரும்பாலானவைகளில் பெண்களை பாலுணர்ச்சி தூண்டும் முதன்மை காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டும் அதன் இணைப்பாக அவர்களை வீட்டுப்பராமரிப்பில் ஈடுபடுத்துவது போல் காண்பித்து சமூக வார்ப்புகளாகவும் காட்டப்படுகிறது. இதனால் பெண்கள் என்றால் அழகுடனும் கவர்ச்சியுடனும் குடும்பத்தை பராமரிப்பவராகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எல்லா விளம்பரப்படங்களிலும் பெண்கள் ஆதிக்கம் செலுத்தப்படுபவராக காட்டாமல், பலவீனமாகவும் ஆண்களை எல்லாவற்றுக்கும் சார்ந்து இருக்குமாறும் காட்டப்படுகிறது. இதுபோல் ஒரு பொருளை சந்தைப்படுத்தும் விளம்பரக்காட்சிகளை நோக்கும் போது ஆண் அப்பொருளை விளம்பரப்படுத்துவது போலவும் பெண்கள் அவைகளை பயன்படுத்துவது போலவும் காட்சிகள் அமைந்துள்ளதைக் காணலாம்.

மேற்கண்டவாறு விளம்பரக்காட்சிகள் வியாபார நோக்கமாக இருப்பதால் பெண்கள் சமூக வார்ப்புகளாகவும் பாலுணர்ச்சியைத் தூண்டுபவராகவும் காண்பிக்கப்படுவதோடு ஆண்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் காண்பிக்கப்படுகிறது.

**சமூகப்பாலின சமத்துவமும் மொழிப்பயன்பாடும்:**

மொழி இலக்கியங்களில் சமூகப்பாலின சமத்துவத்தை மேம்படுத்தும் முகமாக ஆண் - பெண் இருவருக்கும் நடுநிலையான பாலினத்தை குறிக்கும் பொதுவான சொற்களை மக்கள்சாதன ஊடகங்களின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் பயன்படுத்துகின்றனர். இதனால் சமூகப்பாலினத்தில் ஒருதலைபட்சமில்லாத பாரபட்சமின்றி பொதுவான சொற்கள் அன்றாட பேச்சுக்களிலும் தொலைக்காட்சி வசனங்களிலும் மற்றும் புத்தகங்கள், செய்தித்தாள்களிலும் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. பதவிகளை குறிக்கும் சொற்களில் சமூகப்பாலின சமத்துவமின்மை ஆங்கில மொழியில் காணப்பட்டன. இவைகளை பின்வருமாறு மாற்றி அமைத்து சமூகப்பாலின சமத்துவத்தை நிலை நாட்டுகின்றனர்.

| வ.எண் | ஆண்பாலினம் சார்புடையது | சமூகப்பாலின சமத்துவமுடைய சொற்கள் |
|---|---|---|
| 1. | தலைவன் | தலைவர் |
| 2. | மனிதன்<br>மனித இனம் | மக்கள்<br>மனித இனம் |
| 3. | மனிதனின் சாதனை | மக்கள் சாதனை /மனித இனச் சாதனை |
| 4. | ஆசிரியர் தனது கருத்தை சரி என்பது | ஆசிரியர்/ ஆசிரியை தனது கருத்தை சரி என்பது |
| 5. | கண்காணிப்பவன், போலீஸ்காரன், தபால்காரன் | கண்காணிப்பாளர், போலீஸ்அதிகாரி, தபால் எடுத்துச்செல்பவர் |

மேற்கண்டவாறு சமூகப்பாலின சமத்துவத்தை எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் கொண்டுவரலாம்.

சமூகப்பாலின சமத்துவமின்மையைக் கொண்டுவரும் வார்த்தைகளை மாற்றி சமூகப்பாலின பாரபட்சமின்றி அமைக்கும் போது மொழியில் தெளிவான தகவல் தெரிவிப்புகள் இருக்க வேண்டும். சில இடங்களில் சமூகப்பாலினத்திற்கு இணையான சொற்களை பயன்படுத்தும் போது இலக்கணப்பிழை வந்தாலும் கருத்தில் கொள்ளாமல் அமைக்கப்படுகிறது. பின்வரும் ஆங்கில சொற்றொடர் இதை உணர்த்துகிறது.

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| சமூகப்பாலின சமத்துவமின்மை உள்ளது | சமூகப்பாலின சமத்துவம் இருக்கிறது. |
| ஒவ்வொருவரும் அவனது நிலையை உணரவேண்டும் | ஒவ்வொருவரும் அவர்களது நிலையை உணரவேண்டும் |

மேற்கண்டவாறு சமூகப்பாலினத்தில் சமத்துவமுள்ள வார்த்தைகளை அமைக்கும் போது கருத்துத் தெளிவு ஏற்படுமாறு அமைக்க வேண்டும். ஏனெனில் நமது சமூகம் ஆணாதிக்கம் மிக்க சமூகம் என்பதால் பல்வேறு வார்த்தைகள் சமூகப்பாலின சமத்துவமின்றி காணப்படுகிறது. இவைகள் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதால் ஆண்சார்ந்த வார்த்தைகளை பொதுப்பாலினமாக மாற்றும் போது கருத்துத் தெளிவு அதிகப்படும் வார்த்தைகளை அமைத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஆண் என்றால் ‘வலிமை’ என்ற பொருளில் பெரும்பாலான வார்த்தைகள்

இருப்பதால் வலிமையை பெண்ணுக்கும் ஆணுக்கும் பொதுமைப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தலாம். இதுபோல், பெண்கள் என்றால் ‘மென்மை’ என்று கருதுவதால் இதற்குரிய சரியான பொதுவான சமூகப்பாலின சமத்துவம் கொண்ட சொல்லை பயன்படுத்த வேண்டும்.

உலகிலுள்ள மொழிகளில் சிலவற்றில் ஆண் மற்றும் பெண்ணை தனித்தனியாக குறிப்பதற்கு பெயர்சொல் வார்த்தைகள் இல்லாமல் இருப்பதால் அம்மொழிகளில் சமூகப்பாலின சமத்துவம் தென்படுகிறது. உலகிலுள்ள பல மொழிகளில் ஆணகனள் மற்றும் பெண்களைக் குறிக்கின்ற பெயர்சொற்கள் இருப்பதால் அவைகள் சமூகப்பாலினம் சார்ந்த மொழியாக இருக்கிறது. தமிழில் அவன், அவள் மற்றும் அது என்கின்ற மூன்று பெயர்சொற்களில் பொதுவான சொல்லாகிய ‘அது’ என்பதை அஃறிணைக்கு வருவதால் நமது மொழியும் சமூகப்பாலின சமத்தவமில்லாமல் பல இடங்களில் பயன்படுத்தப்படகிறது என்பதை நாம் அறிவோம். உலகிலுள்ள 134 நாடுகளின் 111 மொழிகளில் 26 மொழிகளில் சமூகப்பாலினத்திற்கு பொதுவான சொற்களே உள்ளன.

இந்தியாவில் சில மொழிகளில், பிரகித் மொழியில் ஆண்கள் பெண்களுக்கான தனித்தனியான சொற்கள் இருப்பதால் சமூகப்பாலின சமத்துவம் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான மொழிகளில் ஆணாதிக்கம் காரணமாக பெண்களின் கலாச்சாரம் துணைக்கலாச்சாரமாக இருக்கிறது. இதனால் ஆண்களுக்குள் பெண்களும் உள்ளடக்கப்பட்டுள்ள மொழி வளர்ந்துள்ளது. பல்வேறு கலாச்சாரங்களில் பெண்களின் மொழிநடை பிறரிடம் நல்ல தொடர்பு கொள்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆண்கள் பெரும்பாலும் தகவல்களை மட்டும் சேகரிப்பதற்காக அவர்களது மொழிநடை உள்ளதால் மொழியைக் கையாளுவதில் வேறுபாடு ஏற்பட்டு சமூகப்பாலின சமத்துவமின்மை காணப்படுகிறது. இதுபோல், தொலைக்காட்சிகளில் நடத்தப்பட்ட ஆய்வில் ஆண்களை விட பெண்கள் தங்களது உரையாடலில் பிறரது பேச்சை அதிகமாக செவிமடுத்து பதிலளிக்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு சமூகப்பாலின சமத்துவத்தையும் மொழிப்பயன்பாட்டையும் விவரிக்கலாம்.

**விவாதத்திற்கும் சிந்தனைக்குமான வினாக்கள் :**

1. மக்கள் சாதன ஊடகத்தில் பாலினத்தின் பங்கு பற்றி விளக்குக.
2. மக்கள்சாதன ஊடகங்களில் சமூகப்பாலினம் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது என்பதை ஆராய்க.
3. சமூகப்பாலின சமத்துவமும் மொழிப்பயன்பாடும் பற்றி விவாதிக்க.
4. பாலின தன்அடையாள பணிப்பொறுப்புகளாக உணர்பவை எவை என்பதைக் கூறுக.
5. உடலைப் பற்றியும் நமது சுயத்தைப் பற்றியுமான நேர்மறையான கருத்துகளை விவரி.

&&&&&&&

# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

சென்னை – 600 097

***இளங்கலை கல்வியியல் (பி.எட்.) முதலாம் ஆண்டு***

## பாடம் - 4: கலைத்திட்டத்தில் மொழி

**பாடங்களைத் தயாரித்து வழங்குவோர்**


**அலகு - 1** : **மொழியும் சமூகமும்**

முனைவர்.வை.பாலகிருஷ்ணன், துறைத்தலைவர்

**அலகு - 2** : **வகுப்பறையில் மொழியின் பன்முகத்தன்மை**

*முனைவர்.ஆ.இராஜேஸ்வரி, உதவிப்பேராசிரியா்*

**அலகு - 3** : **வகுப்பறைக் கற்பித்தலில் தாய்மொழியின் இடம்**

திருமதி.க.தேவிஸ்ரீ, உதவிப்பேராசிரியர்

**அலகு - 4** : **கலைத்திட்டத்தில் மொழி**

திரு. இரா. செந்தில்குமார், உதவிப்பேராசிரியர்

**அலகு - 5** : **மொழி தொடர்பான சிக்கல்கள்**

முனைவர். கு. விஜயா, உதவிப்பேராசிரியர்


---


**கலைத்திட்ட வரைவு மற்றும் மதிப்பீட்டுத்துறை**

**தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை**

# அலகு- 1 மொழியும், சமூகமும்

## (Language and Society)

### பாடப்பொருள் நோக்கங்கள் (COURSE OBJECTIVES)

இப்பாடப் பொருளினைக் கற்ற பின்பு ஆசிரிய-மாணவர்கள் கீழ்க்காணும் கற்றல் இலக்குகளை அடைவர்.

- மொழியின் செயல்பாடுகளை அறிதல்
- முகப்பு மொழி மற்றும் பள்ளி மொழியை புரிந்து கொள்ளுதல்
- கற்பவரின் மொழிதிறன் பின்புலத்தை புரிந்து கொள்ளுதல்
- பள்ளியில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழிகளை வளர்த்தல்
- மொழி மற்றும் கலாச்சாரத்தை அறிதல்

### முன்னுரை

மொழி மனித சமூகத்தின் இன்றியமையாத ஆக்கக் கூறாகும். மொழி சமூக உறுப்பினர்களிடையே தகவல் தொடர்புக்கான ஒரு வழிமுறையாகும். ஒரு குழுவின் தனித்தன்மைக்கு தொடர்புடைய மரபுகளையும் விழுமங்களையும் வெளிப்படுத்தும் கருவியாகும். மொழிப்பண்பாட்டின் உட்கூறாகும். மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்தும் சிறப்பம்சம் மொழித்திறன் ஆகும். சமுதாய பண்பாடு உயர்ந்தநிலையை எட்டிடுவதற்கு மொழியே காரணமாகும். நமது சிந்தனை, கனவு, பிரார்த்தனை, தியானம், பிறரோடு உள்ள உறவுகள், தகவல் தொடர்பு என அனைத்திலும் மொழி இடம் பெறுகிறது. மனிதர்களுக்கு இடையேயான தகவல் தொடர்பில மொழியே சிறப்பிடம் பெறுகிறது. மனித தகவல் தொடர்பில் அபிநயங்கள், தலையசைத்தல், கண்சிமிட்டுதல், பிரெயில் எழுத்துக்கள், மோர்ஸ் குறியீட்டு முறை, நடித்துக்காட்டுதல், உடலசைவுகள் மூலம் கருத்தை வெளிப்படுத்துதல் போன்ற வேறு பல வழிமுறைகள் இருந்த போதிலும் அவற்றின் மிகக்குறைவு என்பதோடு, அவையும்கூட மொழியை சார்ந்தே அமைந்தவை என்பது குறிப்பிடத் தக்கதாகும். மொழியே மனிதனின் சிந்தனைக்கு வடிவம் கொடுத்து, அவனது அனைத்து செயல்பாடுகளையும் கட்டுப்படுத்தி வழிநடத்துகின்றது. பாடப்பொருள் மற்றும் உயிர்ப்பொருள் பண்பாட்டை ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்தத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் கருவியாக மொழி விளங்குகிறது. மானிட அறிவு சேமித்து வைக்கப்பட்டு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுவதற்கான சாதனமாக மொழியே விளங்குகிறது. மொழி மனிதனின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றினையும் ஒருங்கிணைக்கும் வல்லமை பெற்று விளங்குகிறது. மனிதர்கள் வாழும் இடங்களில் எல்லாம் மொழி வியாபித்துக் காணப்படுகிறது. ‘மொழி’ என்பதன் பொருள், வரையறை,

மொழிபற்றிய பொதுமைக்கருத்துகள், மொழியின் பணிகள், வீட்டுமொழி , பள்ளியில் பயன்படுத்தப்படும் மொழி, பேச்சு மொழி, எழுத்து மொழி, கற்போரின் பின்புலத்தைப் புரிந்துகொள்ளுதல், வகுப்பறையில் வாய்மொழி மற்றும் எழுத்து மொழியினை வளர்த்தல், மொழியும் பண்பாடும் ஆகியவைக் குறித்து இவ்வலகில் விளக்கப்படவுள்ளன.

**மொழியின் பொருள் விளக்கம்**

மனிதனின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும், விருப்பங்களையும் பிறருக்குத் தெரியப்படுத்த மனிதனால் உருவாக்கப்பட்ட குறியீட்டு முறையே மொழியாகும்.

ஒவ்வொரு மனிதனின் இனப்பிரிவும், மனித வாழ்க்கையில் இடம் பெறும் பொருட்கள், நிகழ்ச்சிகள், செயல்முறைகள் ஆகியவற்றைக் குறித்திடுவதற்கான ஒலித்தொகுப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இத்தகைய ஒலித்தொகுப்புகள் ''சொற்கள்'' எனப்படும். சொற்களை குறிப்பிட்ட வகையில் இணைத்து சொற்றொடர்கள் உருவாக்கப்படுகின்றன.

**நோம் சோம்ஸ்கி** என்பார், '' மொழி என்பது எண்ணற்ற சொற்றொடர்களின் தொகுப்பு எனவும், ஒவ்வொரு சொற்றொடரும் அளவிடக் கூடிய நீளம் கொண்டதாகவும், பல்வேறு ஒலித்தொகுப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்டு, குறிப்பிட்ட வகையில் ஒருங்கிணைக்கபட்டதாகவும் இருக்கும்'' என்கிறார்.

மொழியிலுள்ள ஒலிக்குறிகள் வாய்மொழிக் குறிகளாகவோ, எழுத்து வடிவிலான குறிகளாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையில் அமைந்த ஒலிக் குறியீடுகளைக் கொண்டு எண்ணற்ற ஒலித் தொகுப்புகளை உருவாக்கும் திறனை மனித மனம் படைத்துள்ளது என்கிறார் சோம்ஸ்கி.

ஒவ்வொரு மனித இனப் பிரிவும், தமக்கென ஒலிக் குறியீட்டு முறையினை உருவாக்கிக் கொண்டுள்ளதால், உலகில் பல்வேறு மொழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மனித இனப்பிரிவும் தத்தம் உறுப்பினர்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்திற்கு என பிரத்தியேகமான குறியீட்டு முறையினை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அதாவது ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் மொழிகளில் பேசி வருகின்றனர். ஒரு மனிதப்பிரிவு, பிறிதொன்றின் மொழியைக் கற்றாலொழியை அப்பிரிவினரோடு இடைவினையாற்றிட முடியாது.

'மொழி' என்பது ஒலிக் குறியீட்டு முறையையும், ஒலித்தொகுப்புகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி முறைப்படி வாக்கியங்களாக அமைத்திடும் முறையையும் கொண்டதாகும். மொழி என்பது முறைப்படுத்தப்பட்ட, தன்னிச்சையாக இயங்குவது சமூகத்தேவைகளை நிறைவு செய்வதாகவும், முழுமை பெற முயல்வதாகவும் உள்ளது.

**மொழியின் வரையறைகள்**

- ‘மொழி என்பது தமது கருத்துகளையும் உணர்வுகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்கு மனிதர்கள் மட்டுமே பயன்படுத்தும் வழிமுறையாகும் : இது மனித இயல்பூக்கத்தில் இருந்து எழுந்தது அல்ல. இது குறியீட்டுக் கட்டமைப்புமுறையை பயன்படுத்துகிறது’. - **ஸ்பேர்.**
- ‘மொழி என்பது சமூகக் குழு இடைவினையாற்றிடுவதற்கு பயன்படும் , ஒழுங்கு நியதிகளற்ற ஒலிகளின் குறியீட்டு அமைப்பு ஆகும்’. **– ப்ளாக் மற்றும் ட்ராகர்.**
- ‘மனிதர்கள் தமக்குள் இடைவினையாற்றிடவும், தகவல் பரிமாறிக் கொள்ளவும் பயன்படுத்தும், மரபு ரீதியிலான மற்றும் தன்னிச்சையுடன் இயங்கும், வாய் மற்றும் செவிசார் ஒலிக்குறியீடுகளின் தொகுப்பே மொழியாகும்’. **– ஹல்**

மேற்கண்டவற்றில் முதல் வரையறை, மொழி என்பது உளரீதியாக மனிதனால் மேற்கொள்ளப்படும் மொழிசார் நடத்தை, அதாவது மொழிகளைக் கற்றுக்கொண்டு, அவற்றின் மூலம் தமது எண்ணங்களையும், கருத்துகளையும் வெளிப்படுத்திடல் மற்றும் கூறுபவற்றை பொருளுணர்ந்து அறிதல் என்னும் நடத்தை என உரைக்கிறது. இவ்வரையறை மொழிகளின் பொதுத்தன்மையையும் மொழிகளைக் கற்பதற்கான மனித ஆற்றலின் உயிரியல் அடிப்படையையும் வலியுறுத்துகிறது.

மற்றொரு வரையறை, மொழி என்பது, ஒலிக் குறியீடுகளை இணைத்துக் கட்டமைத்திடவும், அதற்கு பொருள் கொள்ளவும் உரிய விதிமுறைகளைக் கொண்ட அமைப்பு என்பதை முதன்மைப்படுத்துகிறது. அதாவது சொற்களை உருவாக்கவும், அவற்றிற்கு பொருள் அளித்திடுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

மூன்றாவது வரையறை , மொழி என்பது மனிதத் தகவல் தொடர்பு மற்றும் இடைவினைகள் ஆற்றிடலுக்குப் பயன்படும் ஒலிகளின் கட்டமைப்பு என உரைக்கிறது. இவ்வரையறை மொழியின் சமூகப் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

மொழி என்பதற்கு அளிக்கப்படும் வரையறைகளிலிருந்து அதன் இயல்புகளாக முறையான அமைப்பு கொண்டிருத்தல், தன்னிச்சைத் தன்மை, சமூகவியல்பு பெற்றிருத்தல் மற்றும் முழுமை பெற்று விளங்குதல் போன்றவற்றை அறிந்துணரலாம்.

**மொழியின் பொதுமைக் கருத்து**

மொழி என்பது ஆழ்ந்த, சிறப்பான வகையில் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாகும். இது மனித மதிநுட்பத்தின் படைப்பாகும். இதை ஒவ்வொரு மனிதரும் தன்னளவில் புதுப்பித்துக் கொள்கிறார்: அது அவரது சொந்த விருப்பு அல்லது உள்ள உணர்விற்கு அப்பாற்பட்டது.

மனித சமூகத்தின் பிரிக்க முடியாத பகுதியாக மொழி விளங்குகிறது. தீவுகள், காடுகள் போன்ற குறுகிய, புற உலகத் தொடர்பு குறைந்த பகுதிகளில் வாழும் மக்களும் தங்களுக்கென மொழிகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

மொழி வாயிலாகவே அறிவியல், தொழில்நுடபம், இலக்கியம், மானிடவியல் போன்றவை பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளன. தகவல் பரிமாற்றத்திற்கும் மொழி இன்றியமையாதது. சொல்லுக்குப் பிறகு எழுத்தும் அதன்பின் இலக்கணமும் தோன்றி வளர்ந்துள்ளன.

மனித மொழி விலங்குகளின் ஒலிச் சைகைகளிலிருந்து வேறுபட்டதாகும். மொழியின் சிறப்பியல்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

**தன்னிச்சைத்தன்மையுடையது மொழி**

ஒரு மொழியில் மொழியில் உள்ள சொற்களுக்கும் அவற்றால் அறிந்து கொள்ளப்படும் பொருளுக்கும் இடையே இயல்பான தொடர்பு ஏதும் இருப்பதில்லை. (உ.ம்.) கல், மரம், விலங்கு, பெண் போன்ற சொற்கள் அவை சுட்டிக்காட்டும் பொருளுக்கு ஏன் இடப்பட்டது என்பதற்கான காரணம் ஏதுமில்லை. இது போன்றே திருமணமான பெண்ணை, திருமதி, ஸ்ரீமதி, மிஸஸ் போன்ற வெவ்வேறு சொற்களால் பல்வேறு மொழிகளில் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு தன்னிச்சையாக வெவ்வேறு சமூகக் குழுவினர் சொற்களை உருவாக்கிக் கொண்டதாலேயே பல்வேறு மொழிகள் தோன்றின.

**சமுதாயத்திற்குரியது மொழி**

பொருள்களையும் அவற்றிற்கு இடையேயுள்ள உறவுகள், நிகழும் இடைவினைகள் போன்றவற்றைச் சுட்டிக் காட்டுவதற்கு என மரபுரீதியாக பின்பற்றப்படும் சொற்கள் மொழியில் அமைந்து காணப்படுகின்றன. சமூகநிலைக்கேற்ப, ஒருவர் பேசும் மொழிச் சொற்களும் வேறுபடும்.(உ.ம்)நான், அடியேன்,நீ, நீங்கள், தாங்கள், அவன், அவள், அவர் ,அவர்கள், உன்னுடையது, அவனுடையது, அவர்களுடையது, தங்களுடையது, என்னுடையது போன்ற சொற்கள் உறவு நிலையை ஒட்டி எழும் விளிச் சொற்கள் ஆகும். மொழியால் சமூக உறவுகளும் பண்பாடும் வளரும். மொழியின்றி, சமூக இணக்கம் , நல்லுறவு , சமூகத்தொடர்பு, சமூக நிறுவனங்கள் ஆகியவை ஏற்பட வழியில்லை.

**குறியீடாகமைந்தது மொழி**

மொழி என்பது ஒலிகளுக்கான குறியீடுகளால் ஆனது. மொழிகள், ஒலிக் குறியீடுகளை அமைத்திட வெவ்வேறு முறைகளைக் கொண்டு விளங்குவதால், அவை வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும், ஒலிக் குறியீடுகளை தன்னிச்சையாகத் தேர்வு செய்கின்றன: ஆனால் தேர்வு செய்தபின் அவை மரபு

ரீதியில் பயன்படுத்தப்பட்டு வரும். மொழியில் உள்ள சொற்கள் வெறும் குறியீடுகள் மட்டுமல்ல: அவை பொருளை உணர்த்துபவையாகவும் விளங்குகின்றன. உதாரணமாக 'மகளிர்' என்ற சொல் வயது வந்த பெண்களையும், 'ஆடவர்' என்ற சொல் வயது வந்த ஆண்களையும் குறிப்பிடும்.

**முறைப்படுத்தப்பட்ட அமைப்புடையது மொழி**

மொழி என்பது தன்னிச்சையான ஒலிக்குறியீடுகளைக் கொண்டது என்றாலும் அவை ஒரு குறிப்பிட்ட வழிமுறைப்படி வரிசைப்படுத்தப்பட்டு சொற்களாகவும், சொற்கள் குறிப்பிட்ட விதத்தில் கட்டமைக்கப்பட்டு சொற்றொடராகவும் விளங்குகின்றன. ஒலிக்குறியீடுகளை முறைப்படுத்தி வரிசைப்படுத்திட ஒவ்வொரு மொழிக்கும் தனியொரு அமைப்புமுறை உள்ளது. ஒலிகளை உச்சரித்தலுக்கும், சொற்களை இணைத்து சொற்றொடராக அமைத்திடுவதற்கும் ஒவ்வொரு மொழியிலும் விதிமுறைகள் உள்ளன. மொழி அமைப்பில், உச்சரிக்கும் முறை, வாக்கிய அமைப்புமுறை, ஒலிக்குறியீடுகளாக இணைத்து சொற்களாக மாற்றிடும் முறை என பல உள்ளமைப்புகள் உள்ளன. மொழி அமைப்பில் ஒருமை-பன்மை, நிகழ்காலம்-இறந்த காலம்-எதிர்காலம் போன்றவற்றை சுட்டிக்காட்டுவதற்கான வினைச் சொல் வடிவமைப்பு, உணர்வுகளை வெளிப்படுத்தும் சொல் அமைப்பு, பொருட்களின் பண்புகளைத் தெரிவிக்கும் சொற்கள் என பல உள்ளமைப்புகளும் உள்ளன.

**குரல்வளை அதிர்வுநாளங்கள் எழுப்பும் குரலொலி சார்ந்தது மொழி**

மொழி என்பது அடிப்படையில் ஒலிக்குறியீடுகளால் ஆனது. மனித உறுப்புகள் ஒலியை எழுப்பி கட்டுப்படுத்தும் முறையினால், ஒலிக் குறிகளுக்கான உச்சரிப்புத் தோன்றுகிறது. பேச்சு தோன்றிய பின்பு, எழுத்து வடிவில் ஒலிக் குறியீடுகள் உருவாக்கப்பட்டன. எழுத்து என்பது ஒலிகளுக்கான சித்திர வடிவம் ஆகும். எனவே மொழியில் 'பேச்சு' என்பது முதன்மை இடம் பெறுகிறது. பேச்சு வழக்கு ஒழிந்த மொழிகள், மெல்ல மெல்ல மறைந்துபோகும்.

**இயல்பூக்கம் சாராத மரபு முறை சார்ந்தது மொழி**

எந்த ஒரு மொழியும் மனிதர்கள் தமக்கிடையே ஒப்புதல் அளித்து, குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி ஒரே நாளில் தோற்றுவிக்கப்பட்டதல்ல. மொழி என்பது சிறுக சிறுக வளர்ச்சி பெற்று, மரபுரீதியாக வழக்கத்தில் இருந்து வருவது ஆகும். ஒவ்வொரு தலைமுறையும் மொழிசார்ந்த மரபினை தனக்கு அடுத்த தலைமுறையிடம் சேர்ப்பிக்கிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களைப் போன்றே, மொழியும் மாற்றங்களுக்கு உட்படக் கூடியது, அழியக்கூடியது, வளர்ச்சிப் பெறக்கூடியது, அகன்று விரியக்கூடியது. பேச்சு என்பது மனித குழந்தைக்கு இயல்பிலேயே வருவது அல்ல. குழந்தை, மொழியை முயன்று கற்றுக்கொள்கிறது. அதாவது 'பேச்சு' மனித குழந்தைக்கு பிறப்பின்போதே மரபு ரீதியாக

கடத்தப்படுவது அல்ல. ஆனால் பேசுந்திறன் அல்லது பேச்சினைக் கற்கும் திறன் குழந்தையிடம் இயல்பாக அமைந்து காணப்படுகிறது.

